# தமிழ் இலக்கியக் கொள்கை-9

*பதிப்பாசிரியர்*

**ச. வே. சுப்பிரமணியன்**

**ச. சிவகாமி**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

**தரமணி, சென்னை-600 113.**

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | — | Tamil Ilakkiyakkolkai Vol. 9 |
| Editors | — | Dr. S. V. Subramanian<br>Dr. S. Sivakami<br>I.I.T.S. Madras-600 113. |
| Publisher and copy right | — | International Institute of Tamil Studies, Madras-600 113 |
| Publication Number | — | 98 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | 3-9-84 |
| Paper used | — | White Printing |
| Size of the book | — | 21×18 cms |
| Printing types used | — | 10 point |
| Number of copies | — | 2200 |
| Number of pages | — | xvi+336=352 |
| Price | — | Rs. 20/- |
| Printer | — | Novel Art Printers<br>Madras-600014. Phone : 82731 |
| Binding | — | Card Board |
| Artist | — | Pedro |
| Subject | — | Tamil Literary Theories |

# முன்னுரை

நாளும் தன் உழைப்பால் தமிழ் பரப்பும் உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்தின் நிலைத்த பணிகளுள் ஒன்று 'தமிழ் இலக்கியக் கொள்கை'களைக் கண்டுணர்த்துதல். அவ்வகையில் இது ஒன்பதாம் தொகுதியாக வெளிவருகிறது. இருபது நூற்றாண்டுகட்கு மேலாக இலக்கிய வளம் கொண்ட தமிழ் மொழிக்கு, அதன் இலக்கியக் கொள்கைகளைக் காணும் முயற்சி யில் நிறுவனம் 1974-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் அடி யெடுத்து வைத்தது. அன்றிலிருந்து இன்றுவரை விடாது ஒவ்வொரு திங்களிலும் தமிழ் இலக்கியக் கொள்கைக் கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 1984-ஆகஸ்ட் வரை 119 கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

இவ்விலக்கியக் கொள்கைக் கருத்தரங்குகளில் பல படிநிலை வளர்ச்சிகளை நிறுவனம் கண்டுள்ளது. குறிப்பிட்ட காலம், குறிப் பிட்ட பொருள் இவற்றில் இலக்கியக் கொள்கை காணும் முயற்சி முதனிலையில் அமைந்தது. பின் ஒவ்வொரு புலவருக்கும் என்று தனித்த கொள்கைகள் உண்டு என்று அவற்றை இனங்கண்டு சுட்டியது. உரையாசிரியரிலும் இந்நூற்றாண்டின் உரைநடைப் புலவரிலும் அவர்தம் இலக்கியக் கொள்கைகள் வரையறுக்கப் பட்டன. தமிழ் இலக்கியப் பரப்பில் ஆழ்ந்து, அகன்று கிடக்கும் இலக்கியவகைகள் தமக்கென்று கொண்டுள்ள இலக்கியக் கொள்கை களும் திறம்பட ஆய்ந்து தரப்பட்டுள்ளன. இந்நூற்றாண்டின் இலக்கியப் பரப்பினை ஆட்சி செய்யும் உரைநடை இலக்கியங்கள் பற்றிய ஆய்வு சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு காலம், பொருள், வகை, புலவர், உரையாசிரியர், இலக்கணம் மற்றும் நிகண்டு எனத் தமிழ் இலக்கியப் பரப்பினை முறைப்பட ஆய்ந்து, ஓரளவு தமிழரின் இலக்கியம் பற்றிய எண்ணங்களை, கொள்கைகளை முழுமையாகத் தமிழுலகிற்கு அளித்து விட்டோம் என்ற நிறைவினை நிறுவனத்தார் பெற்றுள்ளனர். இன்னும் ஆய்வு எப்பாதையில் எல்லாம் இதன் தொடர்பாகச் செயல்படலாம் எனச் சிந்திக்கப்பட்டது. அதன்படி இவ்வாண்டு இலக்கியங்களின் நோக்கமும் பயனும் ஆய்வு நெறியாக அமைகிறது,

சென்ற ஆண்டு நிகழ்ந்த உரைநடையிலக்கியங்களின் இலக்கியக் கொள்கைக் கட்டுரைகள் இத்தொகுதியுள் இடம் பெற்றுள்ளன. உரைநடையிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு நூற்றாண்டளவினதாக உள்ள பொழுதிலும் தமிழ் இலக்கியப் பரப்பில் அவையும் பெரும்பங்கேற்கின்றன. அச்சுக்கலை, கல்வி முன்னேற்றம், மேனாட்டார் இலக்கியங்களின் தாக்கம் என்பன போன்றவற்றால் மிக விரைவாக முன்னேற்றம் கண்டுள்ளன. அவை பற்றிய ஆய்வுகள் பல எழுந்துள்ள போதிலும் இன்னும் பன்முக ஆய்வுகள் வேண்டப்படுகின்றன. அவற்றுள்ளும் புதினம், சிறுகதை, நாடகம் ஆகியனவே ஆய்விற்கு ஓரளவு உட்படுத்தப் பட்டுள்ளன. வாழ்க்கை வரலாறு, பயண இலக்கியம், இதழ்கள் போன்றவற்றில் ஒருசில முயற்சிகள் நடந்துள்ளன. கட்டுரை, கடிதம், சொற்பொழிவு போன்ற துறைகள் ஆய்வாளரை எதிர் நோக்கியுள்ளன. செய்யுள் இலக்கியங்கள் போன்று உரைநடை யிலக்கிய வகைகளும் தமக்கென்று தனித்த கொள்கைகளைக் கொண்டுள்ளன. அவற்றை ஆய்வாளர் தம் கட்டுரைகளில் முன்னிறுத்தியுள்ளனர்.

உரைநடையிலக்கியங்கள் யாவை; அவற்றை எவ்வாறு வகைப் படுத்தலாம்; உரைநடையிலக்கியங்களின் இலக்கியக் கொள் கைகளை எவ்வெக்கோணங்களினின்று உணரலாம். ஒவ்வொரு வகைக்குமுள்ள தனித்த சிறப்புகளாக அமைவன யாவை என்ற வினாக்களுக்கு விளக்கமளிக்கு முகமாக ‘உரைநடை இலக்கியம்’ கட்டுரை அமைகிறது. உரைநடை யிலக்கியங்களுக்கு இடையே அமையும் பொதுக்கூறுகளை அளவிட்டுரைக்கிறது. ஏனைய கட்டுரைகள் தனித்தனி வகைகளிின் மீது தனிப்பார்வை செலுத்த, உரைநடை இலக்கியங்கள் அனைத்தினையும் உட் கொண்ட ஒரு பொதுக் கண்ணோட்டத்தினை, ஆய்வுகள் எவ்வாறு நிகழ வேண்டும் என்பதை இனஞ்சுட்டுவதாக இக் கட்டுரை அமைகிறது. செய்யுள் இலக்கியங்களிலிருந்து உரைநடை யிலக்கியங்கள் வேறுபடுமாறும் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. இவற்றின் ஊடே உரைநடையின் வரலாறும், வளர்ச்சியும் சுட்டப் படுகின்றன.

உரைநடை இலக்கியங்களை காற்றோடு கலந்தவை, காகிதத் தில் இயன்றவை என இரண்டாகப்பகுக்கலாம். காகிதத்தில் இயன்றவை மட்டுமே இத்தொகுதியுள் இடம் பெற்றுள்ளன. இது மீண்டும் புனைவிலி, புனைவு எனும் பகுப்பிற் உட்படுகின்றது.

படைப்பாளரின் அனுபவம் புனைவிலியாகவும், கற்பனை புனைவாகவும் அமைகின்றன. வாழ்க்கை வரலாறு, பயண இலக்கியம் என்பன புனைவிலியின் பாற்படுகின்றன. இவற்றுள்ளும் பயண இலக்கியம் முழுவதும் படைப்பாளரின் தன் அனுபவமாக அமைந்து சிறக்கிறது. குறிப்பிட்ட ஓரிடத்திற்குச் செல்ல இருப்போர்க்கு வழி காட்டியாகவும், செல்ல இயலாதோர்க்குச் சிறந்த அறிமுகமாகவும் நூலைப் படிக்கும் பொழுது தானே சென்று வந்தது போன்ற அனுபவத்தைப் பெறவைப்பதாகவும் இப்பயண இலக்கியம் அமைந்து அவற்றையே தன் நோக்கமாகவும் கொள்கிறது. கல்விக்காக, தொழில் புரிவதற்காக, உல்லாசமாகக் கண்டு களிப்பதற்காக, தங்கள் தொழிலின் முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை ஆராய, பிறர் அழைப்பின் பேரில், நட்புறவு நிமித்தமாக எனப்பல சூழல்களின் பயணம் அமைகிறது. பயணம் எச்சூழலில் அமைகிறதோ, அதுவே பொதுவாகப் பயண நூலில் சிறப்பான இடம் பெறுகிறது. வழிநடைச்சிந்து, வழிநடைப்பதம், வழிநடைக் கும்மி யாத்திரைச் சிந்து, யாத்திரைக்கும்மி போன்ற நாட்டுப்புற இலக்கியங்கள் பயணஇலக்கியச் சார்பு காட்டுகின்றன.

பொழுதுபோக்கு, படிப்பினை எனும் இவை மட்டுமின்றி பொது அறிவினையும் இலக்கியங்கள் நல்க முடியுமென்பதைப் பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், கடிதவிலக்கியம் கட்டுரையிலக்கியம், சொற்பொழிவிலக்கியம் என்பன உணர்த்துகின்றன. உரைநடையிலக்கிய வரலாற்றில் புதினம், சிறுகதை இவற்றோடு வாழ்க்கை லரலாறும் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளது. தன் வரலாறு, பிறர் வரலாறு என இருவகைப்படும் இவ்விலக்கியம் படைப்பாளர் நிலையில் இவ்வேறுபாட்டைக் கொள்கிறது. தன் வரலாறு தன்னனுபவமாகவும் பிறர் வரலாறு பிறர் அனுபவமாகவும் அமைகின்றன. எனினும் இலக்கியக் கொள்கையில் இரண்டும் ஒன்றுபட்டே அமைகின்றன. வரலாறு நடந்த காலத்திற்குச் சிறப்பளிக்கும் இவ்விலக்கியம் இனம், மொழி, நாடு இவை கடந்த நிலையில் வரலாற்றுத் தலைவரைக் கொள்கிறது. ஆண்டு, நாள் போன்ற காலக் குறிப்புகளுக்குச் சிறப்பளித்தல்; மிகத்தெளிவாகத் தலைவரின் பண்பு, செயல், படைப்பு முதலானவற்றை வெளியிடல்; கற்பாருக்குச் சலிப்பு ஏற்படாவகையில் சுவை பொருந்த அமைத்தல்; தன் விருப்பு வெறுப்பிற்கு இடமளிக்காது நடுநிலை நிற்றல்; வெறும் புகழுரையாக அமைக்காது உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தல் முதலிய கூறுகளடங்கும் வாழ்க்கை வரலாறுகள் மிகச் சிறந்தனவாகும்.

புனைவிலி, புனைவு எனும் இரண்டனுள்ளும் அடங்கும் வகையாகக் கடித விலக்கியம் (உண்மைக் கடிதங்கள், புனைவுக் கடிதங்கள்) அமைகிறது. தூது இலக்கியச் சார்பு காட்டி, இலக்கிய உத்தியாகவும் விளங்கி, பின் தனித்த இலக்கிய வகையாகத் தமிழில் மலர்ந்துள்ளது. கொள்கை, கருத்து விளக்கம், இவற்றிற்குச் சிறந்த உத்தியாக விளங்கும் இவ்வகை, தோன்றிய காலச் சூழல், நாட்டுணர்வு, மொழியுணர்வு ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவமளிக்கிறது. கவிதை உலகில் தனிப்பாடலாக, சீட்டுக்கவியாக விளங்கிய இவ்வகை உரைநடையில் தனிநிலையாகவும், தொடர்நிலையாகவும் அமைந்து வளர்ச்சி காட்டுகிறது. செய்தி உணர்த்த மட்டும் பயன்பட்ட கடிதம், பின்பு, இடத்தால் அகன்று உறைந்த இருவர்க்கிடையே கருத்துப் பரிமாற்றம், அறிவுரை கூறல் ஆகியவற்றிற்குப் பயன்பட்டபோது, தனியொருவருக்குப் பயன்படும் நிலையிலிருந்து வளர்ந்து பொது இலக்கியமாகின்றது.

புதினம், சிறுகதை, நாடகம் என்பன புனைவின் பாற்பட்டுப் பொருட் தொடர்பாலும் தம்முள் ஒன்றுபடுகின்றன. வடிவம் இவற்றை வேறுபடுத்தி தனித்த இலக்கிய வகைகளாகச் சிறப்பிக்கின்றது. தன்னேரில்லாத் தலைவன் படைக்கப்படவேண்டும் என்றிருந்த இலக்கிய மரபு இங்கு மாற்றம் கொள்கிறது. 'பண்டித நடை புரியும் நடையாகியுள்ளது. சொல்விளையாட்டு இன்று சொற்சுருக்கத்திற்கு இடம் விட்டுள்ளது. உணர்ச்சிகளைத் தணித்து-உணர்வுகட்கு அமைதி நல்கும் நிலைக்கு வேறாக, உணர்ச்சிகளைத் தூண்டி-தட்டியெழுப்பி விகாரப்பட்டு நிற்கும் பாங்கு இங்கு இன்று உண்டு. நல்லதை, வல்லதை முதன்மைப் படுத்திக்காட்டும் நிலைக்கு மாறாக இன்று எதையும்-இழிந்ததை, கீழானதை - வேண்டாததை - வெறுக்கத்தக்கதை - புன்மையானதை - புதைந்து கிடப்பதை - இருட்டுகளை - அழுகல்களை வெளிச்சப்படுத்தல் இங்குள்ளது'' எனும் உரைநடை இலக்கியம் பற்றிய பொதுக்கருத்து இவ்வகைகளுக்கு முழுமையாகப் பொருந்துகின்றது. அறிவியலும் இலக்கியப் பொருண்மை ஆவதை இவ்விலக்கிய வகைகள் காட்டுவது குறிப்பிடற்பாலது. சிறுகதை தொடர்ந்து புதினமாக வளர்வதும், புதினம் நாடகமாக மாற்று வடிவம் பெறுதலும் இவற்றின் நெருங்கிய தொடர்பினை உணர்த்துகின்றது.

கதை என்ற பெயரில் கற்பனை உலகிலேயே நடமாடிய நிலை மாறி எதனையும் யதார்த்த நோக்கில், இயற்கையோடு இணைந்து

நோக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியபோது சிறுகதைகள் புதினங்கள் பிறந்தன. கதையின் பொருளுக்கும், நோக்கத்திற்கும் தகக் கதை அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது. ஓரிரு நிகழ்ச்சிகள் அல்லது பல்வேறு நிகழ்ச்சிகள் சிக்கல்கள் இவற்றில் இடம் பெற்று கதாசிரியர்களால் முழு வடிவம் கொடுக்கப்பட்டன. முன்னது சிறுகதையாகவும், பின்னது புதினமாகவும் மலர்ந்தன. அங்கம், காட்சிப்பாகுபாடுகளுடன் ஆசிரியர் கதாபாத்திரங்களின் உரையாடல் வழி கதையை நடத்திச் செல்லும் பொழுது அது நாடகமாகிறது. நடிக்கப்படுவது நாடகம் என்பதும் இணைத்து நோக்கற்பாலது.

குறும்புதினம், குட்டிக்கதை, ஓரங்க நாடகம் போன்றனவும் இங்கு எண்ணற்பாலன. புதினத்தின் பண்புகளையும், இயல்புகளையும் கொண்டிலங்கும் குறும்புதினம், சிக்கல்களை மிகுதியாகக் கொள்ளாது, விரைவில் ஒரு முடிவிற்குக் கொண்டு வருகின்றது. புதினங்களைப் போன்று கிளைக் கதைகளை உருவாக்காது முதன்மைப் பொருளிலேயே முழுக்கவனம் செலுத்துகின்றது எனக் கூறலாம். சிறுகதைகளினும் மிக்க குறுகிய வடிவில் குட்டிக்கதை அமைகிறது. பொருளுத்திகளன்றி வெளியீட்டு உத்திகள் மிகுதியாக வரல் இதில் இல்லை. ஓரங்க நாடகங்கள் மற்றும் சிறு நாடகங்கள் முழுநாடகங்கள் போன்று விரிந்த அளவில் அமையாது எடுத்துக்கொண்ட கருப்பொருளைத் துணைநிகழ்வுகள் இன்றி அமைக்கின்றன. வடிவ நிலையில் இவை தம்முள் வேறுபடினும் இலக்கியக் கொள்கை நிலையில் முன்சுட்டியவற்றுடன் பெரிதும் ஒன்றுபடுகின்றன.

திறனாய்வாளர் ஒவ்வொருவருக்கும் இலக்கியம் பற்றிய தனித்த எண்ணங்கள் உண்டு. அவற்றைக் கொண்டுதான் இலக்கியங்களை அளவிடுகின்றனர். அவர்தம் நூல்களில் இவை குறிப்பாக அல்லது வெளிப்படையாகக் காணக்கிடக்கின்றன. இலக்கியத்தை அளவிடற்கு அவர் கொள்ளும் அளவுகோல்களும் அவர் தம் இலக்கியக் கொள்கைகளை இனங் காட்டுகின்றன. படைப்பாளர் தம் கொள்கைளுடன் திறனாய்வாளர் எந்த அளவிற்கு உடன்படுகின்றார் அல்லது முரண்படுகின்றார் என்பதனை அறிதற்கும் இவை துணை நிற்கின்றன. இருவரிடையே எழும் வேறுபாடுகளுக்கு, இருவர்தம் காலச் சூழல்களும் வேறுபட்டு நிற்றல் முதனிலைக் காரணமாகும். மார்க்சியத் தத்துவ நோக்கிலேயே கைலாசபதியின் பார்வை அமைகிறது. இலக்கியத்திற்கும் சமூகத்

திற்கும் இடையில் உள்ள உறவுகளைத் தெளிவாக விளக்கிய கைலாசபதியின் கொள்கைகளுள் ஒன்று "பல்வேறு காலங்களின் சமுதாயத் தேவைகளையும் உந்தல்களையும் ஒட்டி புதிய பொருள் பழைய வடிவங்களிலும் பழைய பொருள் புதிய வடிவங்களிலும் அமைந்து விடுதலைப் பார்க்க முடிகிறது. அறநூல்களில் அமுக்கப்பட்டிருந்த அகப்பொருள் உலாவில் மீண்டும் வெளிவருகிறது'' என்பதாம். வடிவம், வெளியீடு, பொருள், உத்தி எனும் பல நிலைகளில் அவர் கொள்கைகளைக் காண முடிகிறது.

கொள்கைகள் ஆய்வு இலக்கிய அளவில் நின்றுவிடாது அதோடு தொடர்புடைய பிற துறைகளிலும் தொடரக்கூடும் என்பதை இதழ்கள் பற்றிய இலக்கியக் கொள்கையில் காணலாம் இந்தியருக்கு அச்சிடும் உரிமை விலக்கப்பட்ட காலத்தில் தமிழில் முதல் இதழ் (1831) தோன்றியது. எனவே அது கிறித்தவ சமயப் பிரச்சார ஏடாக அமைந்ததில் வியப்பில்லை. இதனைத் தொடர்ந்து இதன் தாக்கத்தின் காரணமாகப் பின் எழுந்த இதழ்களும் சமயப் பிரச்சார நோக்கிலேயே அமைந்தன. 1500 இற்கு மேற்பட்ட இதழ்கள் இதுவரை எழுந்துள்ளன. அவை பலதரப்பட்டனவாக அமைகின்றன. இதழ்களின் கொள்கைகள் எனும் நிலையில் அவை தம்முள் ஒன்றுபட்டு தம் இயல்பிற்கு ஏற்ப வேறுபட்ட தனித்த கொள்கைகளும் கொண்டுள்ளன. இலக்கண இலக்கிய ஆராய்ச்சி, திறனாய்வு, தகுதியுடைய கவிதை, கதைகளை வெளியிடல்; இவற்றால் தமிழை வளப்படுத்துதல் இலக்கிய இதழ்களின் கொள்கைகளுள் ஒன்றாக அமைகிறது. தம் கொள்கைகளுக்கேற்ப உள்ளடக்கத்தை இதழ்கள் பெறுகின்றன.

உலகில் எல்லா மொழிகளும் மொழிபெயர்ப்புத் துறையில் நாட்டம் கொண்டுள்ளன. மொழிபெயர்ப்புகளும் மொழியை வளப் படுத்துகின்றன. மொழி பெயர்ப்பு பற்றி அறிஞர் தரும் விளக்கங்களும், கருத்துகளும், மொழி பெயர்ப்பாளரின் கருத்துகளும், மொழி பெயர்ப்பு நூல்களும் மொழிபெயர்ப்புக் கொள்கைகளை உருவாக்குகின்றன. மொழிபெயர்ப்புகள் பல்வேறுதுறைகளிலும் அமைந்து அதற்கேற்ப இயல்பு கொள்கின்றன. பிற இலக்கியங்களின் நோக்கத்திலிருந்து மொழி பெயர்ப்பு இலக்கியங்களின் நோக்கம் வேறுபட்டமைதலின் அவற்றின் கொள்கைகளும் வேறுபடுகின்றன. மற்றும் அறிஞர் தம் எண்ணங்களிடையே அமையும் முரண்பாடும், மொழி பெயர்ப்பு கொள்கைகளிடையே

கருத்து வேறுபாட்டைத் தருகிறது. சான்றாக மொழிக்குச் சிறப்பு செய்வதாக அமையும் குறிப்பிட்ட பெயர்ச் சொல்லை, மொழி பெயர்ப்பின் போது அவ்வாறே தர வேண்டும் என்பது சிலர் கருத்து. அன்று, அதனையும் மொழிபெயர்த்து மாற்று மொழியின் இயல்பிற்கேற்பத் தரவேண்டும் என்பது வேறுசிலர் கருத்து. இவ்வாறு முரண்பட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் எளிமையும், தெளிவும், மூலத்தை முழுநிலையில் கூட்டவோ குறைக்கவோ செய்யாது மிகச் சரியான மொழி பெயர்ப்புடன் தருதல் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கொள்கையாக அமைகிறது.

மனதிற்கு மனம் வேறுபடுவது போன்று படைப்பாளர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், இவர்களிடையே இலக்கிய கொள்கை பற்றிய எண்ணங்கள் ஒன்றுபட்டும், முரண் பட்டும் அமைதலை இத்தொகுதியுள் அமைந்துள்ள கட்டுரைகள் நிறுவுகின்றன. இவற்றை நோக்கும் பொழுது ஒப்பியல் நோக்கி லும் இலக்கிய கொள்கையை அணுகவியலும் எனத் தெரிகின்றது. இத்தொகுதியுள் உரைநடை இலக்கியங்கள், வாழ்க்கை வரலாறு, நாவல், உரைநடை நாடகங்கள், பயண இலக்கியம், கடித இலக்கியம், சிறுகதை, கைலாசபதி, இதழ்கள், மொழி பெயர்ப்பு முதலான கட்டுரைகள் உள்ளன.

இந்நிறுவனத்தின் பணிகள் அனைத்திற்கும் முழுநிலையில் ஆக்கமும் ஊக்கமும் தரும் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரிய தாகும். கட்டுரையாளர்களுக்கும், உரிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்துள்ள நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும், அச்சுப்படி திருத்தி யுதவிய புலவர் திரு. சின்னப்பன் அவர்கட்கும் எங்கள் நன்றி.

சென்னை-113 — ச. வே. சுப்பிரமணியன்
ஆக. 1984. — ச. சிவகாமி

# Introduction

Literary theories can be either descriptive or prescriptive Generally, in the field of criticism and the study of literature, the former precedes the latter. Though criticism is considered to be only a 'secondary creation', its endeavour to chart the theories, helps the student or the reader in the complete understanding of an author and his work. With the different literary writings of various authors, times and genres as the basis, theories regarding theme (content) and form (Structure and expression) are evolved. "Because we cannot think at all without some sort of frame work or order, we begin to make rules; These are summaries of facts we have observed and not dogmos to which we must rigidly adhere".

The theories thus formed may be universal or individual. There may be certain common theories for the literature of the whole world. At the same time all may not have an identical mould but may differ in their expression of thoughts execution of ideas and exposition of ideals. The individualities of a people are reflected and retained in their different creations, especially literature. It is the same with their theories also. 'Studying a period or movement or one specific national literature will show individualities with characteristic features and qualities which set it off from other similar groupings'.

So an attempt is being made by the International Institute of Tamil Studies, since 1974, through monthly seminars, to evolve the theories of Tamil literature without depending on a complete Western scale. This is done with the help of competent scholars through their worthy articles. 'By the fundamental methods of induction and deduction we wan tto discover what is peculiarly Tamils', what makes Tamil literature 'Tamil' and thus solve the problem of individuality and value',

The present volume is the nineth one in this series. It deals with contemporary writings in prose. Literary genres, periodicals, criticism and translations are taken up for deriving their individual concepts of theorising. The originality of a period and the voices of an age are easily recognized in these, and found different from the earlier ones. 'Contemporaries speak with voices that we recognize and between which we can easily distinguish'.

The Tamil prose writings, just a century old, show a somewhat complete influence of Western thought in their origin and creation. But even before the advent of the Westerners prose sentences and passages found a place in colophones of ancient poems, in the first epic Cilappatikaram and in many religious writings; the commentaries of grammatical treatises and literature showed an ancient form of criticism; the earliest extant work in Tamil, viz., Tolkappiyam talked about translation; fiction found its place in epic narration and its episodes; epistles were also heard of from the very ancient times. These show that the ground was already prepared in the Tamil literary field for the budding and blooming of the different prose literatures. Along with the Western impact, development in printing facilities, improvement in education, wide spread contact with the world, etc., promoted the rapid growth of this sphere.

Prose works in general may show certain common trends and undercurrents in their subjects and stylistic qualities. But the selections and handling of the theme, the aim and purpose of its composition and such other aspects make them fall apart into different groups and reveal individual modes and exhibit local colour. Not only written, but unwritten prose may also be considered; they may be speeches, orations and even public lectures either broadcast or telecast. In the written variety also, We have groups of fiction and nonfiction; in the former novel, drama and story are discussed in the present volume, while in the latter biography, travalogue and epistle are dealt with, following the introductory one on prose in general,

'Fiction tells us something about life: it reveals our own emotions to us in revealing the emotions of other people. In reading it we actually live another life, gain fresh experience and are enriched'. There is a degradation in the choice of themes for the novel or the story. The dark corners of life are brought to the lime light; unwanted and detested views are projected; unsocial elements are characterised. Because of such aspects, instead of giving peace to the mind, the writing kindle the emotions of the reader. There are certain developments for the better also. The high scholarly style has given way to more common and easily understandable style. Not only the hero, the great and the skilled, but the common natural man also finds representation. There hold good for the Drama also where romanticism has receded to the back ground while naturalism has come to the forefront. The development of a story into a novel or a drama and vice-versa show a connecting link between them.

The purpose of any writing is multi dimensional. While it is informative, it may also be interesting. At one level it is instructive while at another it can be a worthy and pleasure giving pastime. All non-fictional prose literatures can be thought of inthis regard.The biography, the travalogue andthe epistle are in one sense educative and aim at the exposition of one's knowledge and experience, thus introducing the reader to a hitherto unknown or unfamiliar .person, place and idea.

The travalogue, containing the author's own experiences in subjective. But it is so well portrayed that the reader is able to partake in the happenings and experience the thrill and flow of the incidents. One can even use it as a guide for a propossed trip. A travel may be planned and a voyage taken up for various reasons. The purpose of the journey, influences the exposition of the content.

Both biographies and autobiographies have a common vein in their presentation of a personage as a true and ideal model for the readers to study and follow. This genre nears history in its giving primary importance to dates and time. The span of this genre is wide enough to include heroes without any barrier of caste, creed, country and language.

The epistle may generally be a true letter written by one to another; This has its roots in '*tūtu*' where a message is sent between two persons, mostly lovers. It may also be an imaginary one. Adopting the technique of letter writing, the author contacts and corresponds with an imaginary received, expressing his thoughts, explaining his views and ideas on different matters of common interest like, life, education, politics, philosophy, contempoary problems etc. In this state this genre comes very near to the essay which is descriptive, explanatory, emotive on reflective.

One of the many aims of a critic is to evolve the theories of the literature which comes under his perusal. These may be given explicitly in his writings or suggestively. In the field of Tamil criticism Kailasapathy is an outstanding name. Having a marxist view, he approaches a literary creation with an eye on the social environment that produced it. He observes that, according to the needs and wants of a society, certain themes and contents frequent the literature of a period; old themes may reappear in a new form and new themes may take up old forms.

Journals have a relevant part in the history and growth of a literature. They also have certain principles in promoting literary creations and encouraging new genres. The contemporary literary writings would not have flourished so well but for the journals. It is interesting to note that the first journal came out in 1831 when the Indians were refused the right to print. The aim of this first periodical was to propogate christianity; this state later gave way to the advancement of Tamil language and literature through creations and studies published in them serially.

The contemporary Tamil literary field has given much room to translations. Though translations and theories of translations, were known from time immemorial the first attempt to evolve the theories of translated works is done here.

The authors of the different articles have succeded in showing that Tamil has its own individualities in treating the subject and expressing the ideas. Each work of literature has its individual characteristics, but it also shares common properties with other works of art. This truth is well brought out in this volume.

## கருத்தரங்க அட்டவணை

| எண் | நாள் | கட்டுரை | கட்டுரையாளர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 35 | 3-8-77 | சிறுகதை | சோ. சிவபாத சுந்தரம், 29, காமராஜ் அவென்யூ, சென்னை-20. | நாரண துரைக் கண்ணன் |
| 101 | 2-2-83 | பயண இலக்கியங்கள் | கு. பகவதி, முதுநிலை ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. | இரா. ஞானபுட்பம் |
| 102 | 2-3-83 | கடித இலக்கியம் | ந. கடிகாசலம், தமிழ் மொழிபெயர்ப்புத் துறை, பெய்ஜிங் வானொலி நிலையம், சீனா. | கோ.இராமச்சந்திரன் |
| 103 | 6-4-83 | வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ச. சிவகாமி, முதுநிலை ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | மொ. அ. துரை அரங்கசாமி |
| 104 | 4.5-83 | கைலாசபதி | ந. தெய்வசுந்தரம், முதுநிலை ஆய்வாளர், தமிழ்மொழித்துறை, சென்னைப் பல் கலைக் கழகம், சென்னை. | இ. சுந்தரமூர்த்தி |
| 105 | 1-6-83 | இதழ்கள் | மு. இ. அகமது மரைக்காயர், ஆய்வாளர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். | இரா. நாகு |
| 107 | 3-8-83 | மொழிபெயர்ப்பு இலக்கியம் | சு. சண்முக வேலாயுதம், ஆய்வு உதவி யாளர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். | அவ்வை. நடராசன் |
| 108 | 7-9-83 | உரைநடை நாடகங்கள் | ஏ. என். பெருமாள்; பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். | டி.வி. நாராயணசாமி |
| 109 | 5-10-83 | நாவல் | தா. வே. வீராசாமி, பேராசிரியர், தொகுப்பியல்துறை, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை. | இரா. முத்துக்குமார சாமி |
| 114 | 7-3-84 | உரைநடை இலக்கியம் | ச. வே. சுப்பிரமணியன், இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். | ஆர். ஆளவந்தார். |

# உள்ளே

முன்னுரை iii

Introduction ■

1. உரைநடை இலக்கியம் 1

ச. வே. சுப்பிரமணியன்

2. வாழ்க்கை வரலாற்றிலக்கியம் 37

ச. சிவகாமி

3. நாவல் 92

தா. வே. வீராசாமி

4. உரைநடை நாடகங்கள் 102

ஏ. என். பெருமாள்

5. பயண இலக்கியங்கள் 154

கே. பகவதி

6. கடித இலக்கியம் 187

ந. கடிகாசலம்

7. சிறுகதை 208

சோ. சிவபாத சுந்தரம்

8. இதழ்கள்

மு. இ. அகமது மரைக்காயர் 229

9. கைலாசபதி

ந. தெய்வ சுந்தரம் 274

10. மொழி பெயர்ப்பு இலக்கியம்

சு. சண்முக வேலாயுதம் 293

இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகள் 316

சொல்லடைவு 320

# 1

# ''உரைநடை இலக்கியம்''

—ச.வே. சுப்பிரமணியன்

I

உலக இலக்கியங்கள் அனைத்தையும் அமைப்படிப்படையில் இரண்டாகப் பகுக்க முடியும்; ஒன்று செய்யுள், மற்றொன்று உரை நடை.[1] இலக்கிய அமைப்பு என்ற நிலையில் செய்யுளே காலத் தால் முந்தியதெனினும்[2] தற்காலத்தை நோக்க,பயிற்சியும் பரப்பு முடையதாக உரைநடையே அமைகின்றது. எனினும், செய்யு ளுக்கு, அல்லது செய்யுள் இலக்கியத்திற்கு வகுக்கப்பட்டுள்ள இலக் கணங்களும், கோட்பாடுகளும், வரையறைகளும் போல, உரை நடைக்கு, அத்துணையளவு செய்யப்பட்டுள்ளதா என்பது கேள்விக்கும் சிந்தனைக்கும் உரியது. வடிவத்தால், அமைப்பால்

---

1. இரண்டும் கலந்த 'சம்பு' என்பதும் உண்டு.
2. In the history of Literature and the history of individual nations, the development of prose is nearly always slower and more uncertain then that of poetry. When we go back to the obscure beginnings of any national literature, what we usually come upon is some kind of poetry; but we may have to wait several centuries before we get prose, and even a longer time before wefind it fully articulate, and perhaps longer still before we meet with prose that it is a pleaure to read.
—James R. Sutherland, **On English Prose**, Canadian University Paperbooks, Canada, Re, 1965, p.3.

இரண்டும் வேறுபட்டாலும்,இலக்கியம் என்ற நிலையில் இரண்டும் ஒப்புமையுடையனவே; எனினும் கோட்பாட்டுச் சிந்தனையில் இரண்டிற்கும் ஒற்றுமைகள் போன்று வேற்றுமைகளும் காணப்படு கின்றன எனலாம்.

உரைநடை பற்றிச் சிந்திக்கும்போது பல எண்ணங்கள், கேள்விகள் எழுகின்றன. உரைநடை நூல்கள் அனைத்தும் இலக் கியமா? உரைநடைக் கொள்கையும், உரைநடை இலக்கியக் கொள்கையும் ஒன்றா, வேறா? தமிழ் உரைநடை என வரும் போது, மூலம் மட்டுமன்றி மொழிபெயர்ப்பும் கருதப்பட வேண்டுமா? இலக்கியமாக அமையும் உரைநடை நூல்-வகைகள் எவை யெவை?உரைநடை இலக்கிய வகைகள் பலவாயினும் அவை யனைத்திற்கும் பொதுவாகவுள்ள கோட்பாடுகள் எவை, செய் யுளிலக்கியத்திற்குரிய-எவ்வெக் கோட்பாடுகள் உரை நடைக்கும் பொருந்தும்? உரைநடைக்கே யுரிய தனிக் கொள்கைகள் எவை? உரைநடை என்பதை ஒரு 'இலக்கிய வகை' எனக் கருதி ஒரே கோட்பாட்டடிப்படை கொள்வதா அன்றி அதன் பல்வகைகளை நினைந்து தனித்தனி யடிப்படைகள் கொள்வதா? உரைநடை பற்றிய சிந்தனையில் மிகுதியாக நடையியல் கொள்கைகளே (Stylistics) முன்னிற்பதால், உரைக்கொள்கை, நடைக்கொள்கை என இருநிலை கருதப்பட வேண்டுமா?

II

உரை, உரைவகைநடை எனும் கிளவிகள் தொல்காப்பியம் முதலே அமைகின்றன[3] எனினும் 'உரைநடை' எனும் சொல்

---

3. தொல். III, 44.24 உரைத் திற நாட்டங் கிழவோன் மேன
110.3 உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்
145.16எங்கையர்க் குரை யென இரத்தற்கண்ணும்
384.1 பாட் டுரை நூலே வாய்மொழி பிசியே
467.2நூலினான வுரையி னான
468.5உண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
475.5உரை வகை நடையே நான்கென மொழிப
538.2உரையொடுபுணர்ந்த பழைமைமேற்றே
645.1உரையெடுத் ததன் முன்யாப்பினுஞ் சூத்திரம்
646.3 சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
649.3ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே

(உரையென்பதன் வேறுபல் வடிவங்களும் தொல்காப்பிய அதிகாரங்களில் உள). —பழந்தமிழ் இலக்கியச் சொல் லடைவு (Index des mots de la literature tomoule ancienne), French Institute of Indology, Pondicherry, 1967,Vol.I, p. 278.

லமைப்பு, காலத்தால் மிகவும் பிற்பட்ட இந்த இருபதாம் நூற்றாண்டுக் குரியதாகவே தோன்றுகிறது. 1922-இன் நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி யகராதியோ, 1925-இன் க. பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியோ குறிப்பிடாத 'உரைநடை' என்பதை, முதன்முதல் தமிழ் லெக்சிகன் (1924-36) குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. இதற்கு முன், உரைவாசகம் என்பதால் 'Prose Composition' குறிக்கப்பட்டதை வின்ஸ்லோ தமிழ்-ஆங்கில அகராதி (1862) தருகிறது. வசன நடை என சோமசுந்தர பாரதி (1922) பயன்படுத்தியுள்ளார்.[4]

உரை(த்தல்) எனும் சொல், சொல்லுதல்,ஒலித்தல், போன்ற பல பொருண்மையும், நடை எனும் சொல், காலாற் செல்கை, பாஷையின் போக்கு போன்ற பல பொருண்மையும் கொண்டு தமிழ்மொழியில் அமைகின்றன.[5] இவற்றின் இணைவில் உருவான 'உரைநடை' எனும் சொல், வாசக நடை (Prose-style) எனப் பொருள்படுகின்றது[6]; இதனைப் புதுச்சொல்லாக்கம் எனலாமே யன்றி, அது சுட்டும் பொருள் புதியதாகவன்றி ஓரளவேனும் மரபு வழிப்பட்டு அமைந்தது எனலாம்.

---

4. பாரதியார் கவிதைகள், (பதி.) டி.வி.எஸ். மணி, சீனி-விசுவநாதன், வானவில் பிரசுரம், சென்னை, 1980, ப. 598 (1922-இல் செல்லம்மா பாரதி தொடங்கிய பாரதி ஆச்ரமம் வழியாக வந்த பாரதி நூல்கள்—பகுதி—1: சுதேச கீதங்கள் (முதற்பாகம்) என்பதில், நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதிய பாரதியாரின் சரித்திரச் சுருக்கம் என்பதில், இது அமைகின்றது.

5. உரைத்தல் —1. சொல்லுதல், 2. ஒலித்தல்
உரை —1. உரைக்கை 2. சொல் 3. வியாக்கியானம், 4. எழுத்தொலி, 5. புகழ், 6. ஆகமப் பிரமாணம், 7. முழக்கம், 8. பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசகம்.
நடை 1. காலாற் செல்கை 2. கிரகம் முதலியவற்றின் கதி 3. பிரயாணம் 4. அடிவைக்குங்கதி 5. வழி, 6. வாசல் 7. இடைகழி 8. கப்பலேறும்வழி, 9. ஒழுக்கம், 10. வழக்கம் 11. பாஷையின்போக்கு 12. வாசிப்பினோட்டம் 13. இயல்பு 14. அடி 15. கூத்து 16. தொழில் 17. செல்வம், 18. ஒழுக்கநூல் 19. நித்திய பூசை 20. கோயில், 21. தடவை 22. நீண்டநாள்.
—தமிழ் லெக்சிகன், லொகுதி—1, ப.451; தொகுதி—4, ப.2145.

6. மேற்படி, தொகுதி—1, ப. 452.

தொல்காப்பியச் செய்யுளியல், யாப்பின் வகையாகக் கூறு கின்ற 'உரை'யில், உரைநடையின் தொடக்க காலக் கூற்றைப் பலர் கண்டு கணிப்பரெனினும் அவ்வெண்ணம் இன்னும் சிந்தனை குரியது. பாட்டு, புனைந்து எழுதுதல் எனவும், உரை, பேசுவது போல் எழுதுதல் எனவும் கருதுகோளமைத்து, அந்நிலையில் தொல்காப்பியம் கூறும் உரை அணுகி விளக்கப்படல் ஒருவேளை ஏற்புடையதாகலாம்.

சொல்லின்றியும், உரைநடைக்குச் சான்றாகத் தொடர்ந்து வந்த செய்யுளிலக்கியங்கள் சிலவற்றின் ஒருசில பகுதிகளைக் காட்டும் பொதுமை உண்டு. யாப்பு வடிவ முழுமையுடைய பாவாகவும் அமையாது, இன்றைய பேச்சு நடைபோலுமாகாது இடைப்பட்ட தன்மையுடன் இத்தகு பகுதிகள் பதிற்றுப்பத்துப் பதிகத்திலும், சிலம்பின் கட்டுரை, கருப்பம், உரைப்பாட்டுகளிலும் காணப்படுகின்றன. பாவுக்கு முன்னும் பின்னும் இடையிலுமாக அமையும் இவற்றைத் தொடக்க கால உரைநடைக்குச் சான்றாகக் கொள்வதைவிடச் சங்கப்-பாடல்களின் திணை, துறை, கூற்று, பாடினோர், பாடப்பட்டோர் பற்றிய குறிப்புகளைத் தகுந்த சான்றாகக் கொள்ளல் சாலும். ஆயினும், உரைநடையென்பது இங்கு இலக்கிய உருப் பெற்றிலது

ஒருசில தொடர்களாக வன்றிப் பல பத்திகள், பக்கங்களாகத் தொடரும் உரைநடை இறையனார் களவியலுரை தொடங்கிப் பல உரையாசிரியரிடம் தொடர்கின்றது. இங்கும், முன்கண்ட வண்ணம் இலக்கியத் தன்மை, உயர்ச்சி அல்லது முதிர்ச்சி முழுமை யாகப் பெறாத உரைநடையே காணப்படுகின்றது எனலாம், தொடக்ககால உரைநடை பற்றிய இத்தகு கணிப்புப் பிற விடத்தும் காணப்படுகின்றது.[7] சிறிதாக, செய்தி கூறுவதாகத் தொடங்கிய உரைநடை பல்வகைப் படிநிலை கடந்த, ஒரு சிறந்த பரிணாம வளர்ச்சிக்குப் பின்பே இலக்கியமாகும் போலும், எனும் எண்ணம் இங்கு எழுகின்றது.

---

7. When prose begins to make its first tentativd appearance, it is usually in the form of charters, deeds, proclamations, and practical discourses of one sort or another; and though from the first it may be well or badly written, it is hardly likely to be thonght of as literature.
—jam es R. Sutherland, op. cit. p.3.

இலக்கியம் தொடர்பான செய்திக் குறிப்பாகவோ, பேரிலக்கியத்தில் விரவி வரும் செய்திதரும் பகுதியாகவோ இலக்கண இலக்கியங்கட்கு விளக்கமும் தெளிவும் வழங்கும் பகுதிகளாகவோ அமைந்த உரைநடைகள் முழுமையான இலக்கியத் தன்மை பெற்றன வல்ல என்பது வெளிப்படை; இலக்கியம் என்ற சொல் எதைக் குறிக்கும் என வரையறைப் படுத்த முயலும்போது, இலக்கியக் கலை, அதாவது புனைவு (கற்பனை) இலக்கியமே சுட்டப்படும் எனும் பிறிதிடத்தின் எண்ணம்[8] இங்கு ஒத்து வைத்துக் கருதத் தக்கது.

உரைநடை, கற்பனைக் கலவையுடையதாகி, புனைவுப் பாங்குடையதாகி, இலக்கியமாகி உருவாகிய, இயன்ற காலம் எது என்பது சிந்திக்கத் தக்கது. வாய்மொழியின் 'உரை' நிலையில், 'ஓர் யானையுங் குரீஇயுந் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தன வென்று அவற்றுக் கியையாப்பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன'.[9] —என இது காலப் பழமையுடையதாகலாம். தொல்காப்பியம் கருதிய 'உரைவகை நடை' நான்குள் ஒன்றான 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' யிதுவே எனின் இப் பழமையைத் தொல்காப்பியர் காலம் வரை முன்கொண்டு சென்று விடக் கூடும்.

இலக்கிய வடிவங்கள்; தற்காலக் கோட்பாட்டின்படி மூவகை என்றும், அவை நாடகம், உரைநடைப் புனைகதை, கவிதை என்றும் கூறுவதை[10] நோக்க, உரைநடை என்றதுமே கதையிலக்கியம் கருதப்பட்டதோ எனத் தோன்றுகின்றது. இந்நிலையில், மேற்கண்ட 'உரை'யின் 'யானை-குருவி'ச் செய்தியின் கதைத் தன்

---

8. The term 'literature' seems best if we limit it to the art of literature, that is, to imaginative literature. —Rene Wellek and Austin Warren, **Theory of Literature**, Penguin Books Ltd., England, Re, 1978, P. 22.

9. தொல்காப்பியம்—பொருளதிகாரம்-பேராசிரியம், கழகம், 1969, பக். 388—89.

10. Literary Forms: ... In current theory, the three chief divisions of literature are drama, prose Fiction, and poetry...Prose Fiction...is now quantitatively the chief domain of literature.
—Encyclopaedia Americana, Vol. 17, p. 568.

மையும் இணைத்துக் கருதத் தக்கது. அத்துடன், மிக்க கால இடைவெளிக்குப் பின், உரைநடையில், கதையாக உருவாகிய வீர மாமுனிவரின் 'பரமார்த்த குரு கதை'யும் கருதுதற்குரியது. எழுத்துருவின் உரைநடை யிலக்கியத் தோற்றம், தமிழில் இதுவே போலும்,

கற்பனைபுனைவே இலக்கியம் என்ற கோட்பாட்டுக்கு மாறாகத் தத்துவக் கருத்துக் குவையாக இலக்கியம் அமையும் எனும் கொள்கையும் வழங்குகின்றது.[11] இந்நிலையில் உரைநடை இலக்கியத்தைத் தேர்ந்தால், சிவஞான முனிவரின் சிவஞான பாடியம், வெளிநாட்டுப் பாதிரியார், சமயத்தைப் பரப்பும் நோக்கில் மொழிபெயர்த்த விவிலியம் அதனை ஒட்டியியற்றிய நூல்கள் என்பனவற்றைச் சுட்டமுடியும். இவை யனைத்தும் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின் என்பது கருதத் தக்கது.

அன்றியும்,சமயமும் இலக்கியமும் என்ற இணைவில் அமையும் இவைபோன்றே, வரலாறும் இலக்கியமும் என்ற இயைபில் கருதத் தக்கதாக அமையும் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பும் இங்கு எண்ணற்குரியது. இவ்விரு நோக்கங்களும் இன்றியே அவர் உரைநடை யெழுதி யிருக்கக் கூடுமெனினும், இப் பண்புகள் காண பட்டு, கருத்திலக்கியமாக அமைவது வெளிப்படை. இவ்வாறு, பதினெட்டாம் நூற்றாண்டே உரைநடை இலக்கியப் பொருள் எதுவாயிற்று என்பதை விளக்குகின்றது. கதையும், செய்தியும் கருப்பொருளாகின்றன என இதனைத் தெளிவுபடுத்தல் கூடும்.

## III

செய்யுள் இலக்கியம் மிகப்பல வகையாகி உருவாகியது போன்ற நிலை உரைநடையில் காணப்படவில்லை. எனினும், சில வகைமைகள் சுட்டி, வகைப்பாடுகள் புலப்படுத்தப்படக் கூடும். பொருள், வடிவக் கூறுகள், வெளியீட்டுத் தன்மை போன்ற இயல்புகள் காரணமாக வகைகளாகி வேறுபட்டாலும், பலபொது பண்பு நிலைகள் அடிப்படையாகும் என்பதும் கருதத் தக்கது.

செய்யுளிலக்கியத்தை வாய்மொழி யிலக்கியம், ஏட்டிலக்கியம் எனக் கருதுவது போலவே, உரைநடையிலக்கியத்தையும், காற்

11. Frequently literature is thought of as a form of philosophy,as 'ideas' wrapped in form;and it is analysed to yield 'leading ideas'.
—Rene wellek and Austin Warren, Op.cit.p.110

றோடு கலந்தவை, காகிதத்தில் இயன்றவை எனக் கருதலாம் எனத் தோன்றுகின்றது. காற்றோடு கலந்து, அல்லது காற்றில் மிதந்து அமைந்தவை சில, ஒருவேளை, பின்பு எழுத்துருப் பெறினும், தமக்கு எனத் தனித்த இயல்பு சில கொள்வதால், தனியாகக் கருதப்படல் கூடும். மேடைப்பேச்சு, கலந்துரையாடல், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், வானொலி—தொலைக்காட்சி ஆகியன வழங்கும் இலக்கியப் பண்பு சார்ந்த நிகழ்ச்சிகள் என்பன இத்தகையன எனலாம். காகிதத்தில், இயன்றவை எனும் பகுதியின் நூலிலும், பத்திரிகை போன்றவற்றிலும் இடம்பெறக் கூடியவை. முன்னவற்றைச் சூழல், அல்லது ஊடுபொருள் சார்புடன் வகைப்படுத்திய நிலைக்கு மாறாக, இப் பின்னவற்றைப்-பொருள், அமைப்புச் சார்புடன் வகைப்படுத்தக் கூடும். பொதுவாக, புனைவு உரைநடை எனவும் புனைவிலியுரை நடையெனவும் பகுத்துக் கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது.[12] பயண இலக்கியம், வாழ்க்கை வரலாறு, நாட்குறிப்பு என்பனவற்றைப் புனைவிலி எனவும் கதையை, புனைவு எனவும், கட்டுரை, கடிதம் என்பதை இரண்டிலும் அடக்கியும் கூறலாம். கதை, நாடகம், சிறுகதை நாவல் என மீண்டும் வகைப்படக் கூடியது. நகைச் சுவைத் துணுக்குப் போன்றவற்றையும் உரைநடையிலக்கிய வகை பாட்டில் அடக்கல் இயலுமா என்பது ஐயம். புனைவு, புனைவிலி எனப் பிரிப்பினும், ஒன்றன் இயல்பு மற்றதில் முற்றிலும் இல்லை என விலக்கவியலாது. [8-ஆம் பக்கம் காண்க]

---

12. ஐரோப்பியரின் வரவுக்கு முன்பே ஓரளவு பயின்று வளர்ந்து வந்த உரைநடை பலவகைப் புதுமை இலக்கியத்திற்குக் களனாயது பிற்காலத்தில்தான். அதில் இரு நிலைகள் அமைகின்றன. நாவல், சிறுகதை, நாடகம் போன்ற புனைவுகளைப் பொருண்மையாகக் கொண்டு இயன்ற இலக்கியங்கள் முதல் வகை. புனைவாக அன்றி அமைந்தவை பிறிதொரு வகை, இதன்கண், நாட்குறிப்பு பயணநூல், வாழ்க்கை வரலாறு, கடிதம், கட்டுரைஎனப் பலவகைகள் விரிகின்றன.

— ச.வே. சுப்பிரமணியன், திராவிடமொழி இலக்கியங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1933, பக்.304—5.

# உரைநடை இலக்கியவகை



இவையனைத்தையும் பொருள் நிலையில், கருத்தைக் கூறும் பாங்கின, செய்தியைத் தரும் நோக்கின, கதை கூறுவன என அடக்கிவிடக் கூடும். பொதுவாக எல்லா இலக்கிய வகைப்பாட்டிற்கும் இது பொருந்தலாம் என்பதும் எண்ணத் தக்கது. எனினும் வகைகளுக்கேற்ப,கொள்கை மாறுபடலாம் என்ற நோக்கத் தெளிவிற்கு இத்தகு பார்வை இன்றியமையாத தாகின்றது: இலக்கிய வகை (Category) பற்றிய கல்வியும் இலக்கியக் கொள்கையில் உட்படுமாறு[13] இங்குக் கருதத் தக்கது.

IV

உரைநடை என்பது உரைத்தல் எனும் அடிப்படையில் மனித 'உரை'யான பேச்சுடன் தொடர்புடையது எனினும், முற்றிலும் ஒற்றுமையுடையது என்பதற்கில்லை. பேசும் போது சொல் தவிர, ஒலியழுத்தம், சைகை போன்ற பிறவும் பொருளுணர்த்தப் பயன்படுகின்றன. தொடரமைப்போ இலக்கண முறைமையோ முதன்மைப் படுத்தப்படாதே பேச்சு அமையக் கூடும்.[14] ஆயின் இந்நிலை பெரும்பாலும் எழுத்திற்கில்லை.

எனினும், காற்றோடு கலந்த உரைநடையிலக்கிய வகைகளைக் கருதுவதற்கு வாய்ப்பாக, பேச்சு நிலையின் சில பல கூறுகளும் கொள்கைத் தேர்ச்சிக்குப் பயன்படக்கூடும். பேசுபவன்' கேட்போனை அல்லது கேட்கும் அவையொன்றைக் கண்டு அல்லது கருதிப் பேசுகின்றான்.[15] எழுதுபவன், படிப்பவனை- படிப்பவரை மனத்தில் கொண்டு எழுதுகிறான். எனவே உரைநடையிலக்கியத்

13. ...literary theory, the study of the principles of literture, its categories, criteria, and the like...
—Rene wellek and Austin warren, Op. cit. p. 39.

14. ...in speaking we tend to convey much of our meaning by extra literary means,and to pay comparatively little attention to the grammatical structure of our sentences.
—James R. Sutherland, Op. cit. p. 9.

15, கேட்போனொருவன் அல்லது வாசகனொருவன் இருக்கின்றான் எனும் உணர்வுடன் தரப்படும் உரைநடையே சிறக்கும் எனத் தெரிகின்றது—
—'Writers who are almost unconscious of a reader, and still less of a listener, and whose prose is not, therefore, kept alert and lively by a desire to please, or (to put it at tne lowest level) by an unwillingness to·bore'.
என்பது நினைக்கத் தக்கது.

தின் இரு அடிப்படைக்கும், கொடுப்போன், பெறுவோன் என்ப வரின்றியமையாராகி, கொடுக்கப்படும் பொருள் தொடர்பு இழை யாகின்றது. எனவே 'அவை' அல்லது கற்போனுக்கேற்பப் பொழிவை-படைப்பை ஆக்குதல் என்பது இரண்டிற்கும் பொது வெனினும், அவையின் பாதிப்பை உடனுடன் பெற்று, அறிந்து, அதற்கேற்பக் கருத்தொழுக்கை, குரலொழுக்கை, ஆற்றி-மாற்றி, ஏற்றி-யிறக்கி அமைத்தல் முன்னதிலேயே வாய்ப் பாகின்றது. சூழல் தாக்கம், காற்றோடு கலக்கும் உரையிலக் கியத்தைப் பாதிக்கிறது எனும் எண்ணம் இதனால் தெளிகின்றது. அவை வேறுபட, உரையும் வேறுபடுமெனவும் அவையின் தகுதிக் கேற்ப உரையும் மாறுபடலாம் எனவும் கருதலாம். சூழலுடன், பேச்சுப் பொருளும் பாதிப்பை பேசுவோனும் கேட்போனும் நேருக்கு நேர் தொடர்பு கொள்ளும் நிலை பெரும்பான்மையான பேச்சிலக்கியத்திலும் அமையும் எனினும். வானொலி தொலைக் காட்சி போன்ற ஊடுபொருட்கள் இந்நிலையிலுட்படாது விலகு கின்றன. எழுத்துரை, சொற் பெருக்காக (extempore speech) வன்றியமையும் திட்டமிட்ட உரைப்பொழிவு முதலியன, பேச் சிலக்கியத் தன்மை முற்றிலும் பெறாதும் அமைந்து விடக்கூடும். உரைநடையின் பேச்சிலக்கியத்திற்கும் எழுத்திலக்கியத்திற்கும் இடைப்பட்ட நிலையில் இவை அமைகின்றன எனலாம்.

பேசுவது போன்று உரைநடை யமையலாம் எனும் தன்மை யால் பேச்சுக் கூறுகள் பல உரைநடையில் கலக்கின்றன. முன்னிலைப் படுத்துதல், விளித்துக்கூறுதல், தன்னை உட்படுத்தல் (உளப்பாட்டுத் தன்மைப்பன்மை), போன்றனவற்றை நினைக்க லாம். இவை பேச்சிலக்கியத்தில் மட்டுமே அமையும் என்பதற் கில்லை; அங்கு மிகுதியாக அமையலாம். எழுத்திலக்கியத்திலும் கடிதம் போன்றவற்றில் இன்றியமையாததாகின்றது; பொது வாகப் புனைவிலியுரைநடையிலக்கியங்களில் பெரும்பாலும் இடம் பெறக்கூடும் எனலாம். ஆயின், நாட்குறிப்புப் போன்றன மிகவும் அந்தரங்கமானதும் (Private) தனிநபருக்குரியதுமாக (Personal) விருப்பதினால் இந்நிலைகள் பொருந்தாது எனலாம்.

பேசுவதற்கு அடிப்படையாக அமைவது நினைத்தல்; உணர்தல்; எனவே நினைப்பது போலவே, உணர்வது போலவே பேசுதல் அமையலாம்; ஆனால் நினைப்பது போலவே எழுதுதல் பெரும்பான்மையும் இல்லை; நனவோடையுத்திச் சிறுகதை, புதினங்களில் மட்டும் இந்நிலை முதன்மை பெறலாம். உணர்வது போலவே பேசுதல், உரைநடை எழுத்தைவிடக் கவிதையில்

சிறந்து முன்னிற்கின்றது. இதனால், கருத்துகள் முறைப்படுத்தப் பட்டுத் தரப்படுதல், செய்திகளிடையே முன்பின் தொடர்புச் செவ்வி கருதப்படுதல், துணைத் தலைப்புகள் தனிப்பத்திகள் அமைத்துத் தெளிவு வழங்கப்படுதல் என்பன, பேச்சுக்கு வேறாக, எழுத்திலக்கியத்தில் வேண்டப்படுவன அல்லது காணப்படுவனவா கின்றன.

பொருண்மையைப் பற்றிக் கருதும்போது, கவிதையும் உரை நடையும் ஒன்றையொன்று அண்மி அமைகின்றன எனலாம். கவிதையின், பொதுவாகச் செய்யுளின் பொருண்மை உரைநடை யிலும், அவ்வாறே உரைநடையின் பொருண்மை செய்யுளிலும் அமைந்துவிடக் கூடும். ஆயின் தரப்படும் முறையும், பிற வெளி யீட்டு நிலைகளும், வடிவமும் இரண்டையும் விலக்கி-அகற்றி நிறுத்துகின்றன. செய்யுளில், முறைமாறிய தொடரமைப்புக் காணப்பட, உரைநடையில் அது சாதாரணமாகத் தவிர்க்கப்படு கின்றன. கவிதையில் பல் வகைத் தொகைகள் காணப்படு மளவிற்கு உரைநடையில் பயன்படாமல் தொக்கவை பெரும்பாலும் விரிக்கப் படுகின்றன. செய்யுளைவிட, உரைநடையில் உத்திகள் முதன்மை பெறுகின்றவோ எனவும் தோன்றுகின்றது. செய்யுளில் உவமத் தொகைகளும், உருவகங்களும் பயில்கின்றன என்றால், உரை நடையில் விரியுவமையே விரவுகின்றது எனலாம். செய்யுளில் காணப்படும் இப்பல் நிலைகளும் உரைநடையில் வரும் போது, உரைநடை கவிதைத் தன்மை பெற்று வேறுபடுகின்றது; வேகம், உணர்ச்சியழுத்தம் என்பன பெறுகின்றது.

V

உரைநடை, பொருளாலும், தன்மையாலும் பல வகைப்படு மெனினும், அடிப்படையாக அமையும் நடைக்கோணத்தில்மூவகை கள் கணிக்கப்படுகின்றன. அவை வருணனை உரைநடை, விளக்க உரைநடை உணர்வெழுப்பும் உரைநடை என்பன[16] நடையை யடிப்படையாக்கி உரைநடைப் படைப்புகளைப் பகுக்கும் இப் பாங்கை, உரைநடையிலக்கிய வகைக்கும் ஆக்கக்கூடும். ஆயின்

16. Three main kinds of prose may be distinguished: descriptive (of action, people, places or things); expla -natory or expository; and emotive. In any prose work all may be found, thus a narrative may be primarily descriptive, but may include pass ges of explanatroy and emotive prose.
-Encyclopaedia Britannica Vol.18, P. 641.

இவையும், முன் கருதியவண்ணம் ஒன்றிலிருந்து ஒன்று அகன்றமையாது ஒரே, ஆக்கத்தில் மயங்கவும் கூடும். நோக்கம், தன்மை என்பன இத்தகு வகைப்பாட்டுக்குக் காரணமாகின்றன.

வருணனை இலக்கியமாக உரைநடையில் அமைவன மிகப் பலவாகும். எல்லா விதமான கதை கூறுதல், விவரணங்களாதல் என்பன இங்கு அடங்கும். நிகழ்ச்சிகளை, செய்திகளைத் தொடர்ந்து கூறிச் செல்லுதலாக இவை யமையும். புதினம், சிறுகதை போன்ற பல புனைவுரை நடைகளும் இதன்பாற்படும்; தன் வரலாறும் பிறர் வாழ்க்கை வரலாறும் இதில் உட்படும்; கட்டுரையிலக்கியமும், நாட் குறிப்பேடும், இங்கு அமையும், கடிதங்களும், நினைவுக் குறிப்புகளும்கூட இதில் வரும்; பயண இலக்கியமும் இங்குப் பொருந்தும். இவையனைத்தும், செயல், மனிதர், இடங்கள், பொருட்கள் என்பனவற்றை வருணிப்பதாக அமைகின்றன.

செய்தியை, நிகழ்ச்சியை வருணிக்கும் இவ்வகைக்கு வேறாக, கருத்தை விளக்குதல், தெளிவுபடுத்தல் எனும் நோக்கம் இரண்டாம் வகையான உரைநடையில் அடிப்படையாகின்றது. அறம் தத்துவம் போன்றன பற்றியமையும் இத்தகு உரைநடை முன்ன வகையை விட இலக்கிய நயம் இன்றி-குன்றி அமையக்கூடும் எனத் தோன்றுகின்றது. 'நாவிற்கு நயம், செவிக்கு இன்பம், மனத்துக்கு மகிழ்ச்சி, அறிவுக்கு வளர்ச்சி, பொழுதுபோக்கிற்கு உல்லாசம் என்னும் அய்ந்தையும் தருவதே எந்த இலக்கியத்துக்கும் உள்ள சிறப்பு'[17] எனும் எண்ணம், இங்கு முழுமையாகப் பொருந்தாமை இச்சிந்தனையை அளிக்கின்றது. இலக்கியத்தைச் சார்ந்தெழும் இலக்கியத் திறனாய்வுகள் இவ்வகைப் பாட்டில் பொருந்துமாறு-சுட்டத் தக்கது. கருத்து விளக்க நோக்கினவான கட்டுரை, கடிதம் என்பனவும் இவண் உட்படல் சாலும்.

இவ்விருவகையிலிருந்தும் வேறுபட்டமைவது உணர்வெழுப்பும் உரைநடை. எண்ணங்களை, அல்லது கருத்துக்களைத் தரும் குறிக்கோளினவாக வன்றி, கேட்போர்-கற்போரின் உணர்ச்சியைத் தூண்டும் நோக்கும் ஆற்றலும் உடையனவாக இவ்வகை அமைகின்றது. அரசியல் தொடர்பான மேடைச்பேச்சு, சமயப்பிரசங்கம்

---

17. சாலை இளந்திரையன், புதுத்தமிழ் முதல்வர்கள், தமிழ் புத்தகாலயம், சென்னை 1972, ப. 47.

போன்ற சொற் பொழிவுகளிலும் தருக்க விவாதங்களிலும் இப் பாங்கு இணைகின்றது. எழுத்திலக்கியத்தை விடப் பேச்சிலக்கியத் திலும், எழுத்திலக்கியத்திலும் சமய, அறச் சார்பினவாக அமை வனவற்றிலும் இந்நிலை பொருந்தும் எனல் தகும். இவற்றிலும் இவற்றிலும் இலக்கியத் தன்மை அத்து ணை இணைவு பெற்றிலது எனலாம்.

இவ்வெண்ணங்களை இணைத்து நோக்க, உரைநடையிலக்கிய வகைகள் பெரும்பாலும் வருணனை உரைநடைப் பாகுப்பாட்டில் அடங்கும் எனவும், அருகியனவே விளக்க, உணர்வெழுப்பு உரை நடை வகைப்பாட்டில் இயலும் எனவும் தெரிகின்றது.

## VI

உரைநடையிலக்கிய வகைகள் அமைக்கப்படும் நிலையும் தரப் படும் முறையும் இணைத்துக் காணின், அவற்றிற்கெனச் சில கோட்பாட்டு வகைமை அமைதல் தெளியும். நிகழ்வுகளை நிரலே கூறும் உரைநடையினவாகப் புதினம், சிறுகதை போன்ற புனைவுக் கதையிலக்கியங்களும், வாழ்க்கை வரலாறெனும் புனைவிலியிலக் கியமும் அமைகின்றன. 'நிரலே கூறல்' என்பதால் இங்கு ஒழுக்கு அல்லது தொடர்நிலையே கரு தப்படுகின்றது. எனவே இவ்விலக் கியங்களை நிகழ்வுத் தொடர்நிலை எனினும் அமையும். எடுத் துரை உரைநடை (Narrative prose)[18] என்பதனை இங்கு எண்ண லாம்.

செய்திகளை வரன்முறையாகக் கூறும் உரைநடையினவாகப் பயணவிலக்கியமும் நாட்குறிப்பும் முன் நிற்கின்றன. இங்கு நிகழ்வுகள் இல் என்பதில்லை; முதன்மை பெறுவது செய்திகள்; எனவே செய்தித் தொடர்நிலையாகின்றன. செய்தியுரைநடை (Informative prose)[19] என்பது ஒத்து நினைக்கக் கூடலாம்.

கருத்துகளை இத்தகு ஒழுக்குடன் தரும் நிலை, சொற் பொழிவு, கட்டுரை, கடிதம் ஆகிய இலக்கிய வகைகளுக்குப்

---

18, கதைப்போக்கு (Narrative) கொள்கை விளக்குமுறை (Argumentative) நாடகம் (Dramatic), செய்தி தரும் முறை (Informative), ஐயமகற்றும் ஆய்வு முறை (Contemplative), என்ற ஐந்து வகையில் அவர்* உரை நடையை அடக்குகிறார்.
—அ. மு. பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 2-ஆம் பதிப்பு, 1967, ப.56.
(*Marjoric Boulton, The Anatomy of prose).

19. மேற்படி

பொருந்தும். சிந்தனை உரைநடை (Contemplative prose)[20] எனும் எண்ணம் ஓரளவு இங்கு இடைபுறுகின்றது எனலாம்.

தருக்கவாதமாகவும், சர்ச்சை செய்தலாகவும் அமையும் பட்டிமன்ற வழக்காடு மன்ற உரைகள், தனித்த கோட்பாட்டின. ஒரு பிரச்சினையை எழுப்பி ஆய்வனவாக இவை உருவாகின்றன. அளவை உரைநடை (Argumentative prose)[21] இங்கு உறுதுணையாகின்றது.

உரையாடலாக அமையும் உரைநடை வகையின எனும் பாகுபாடொன்றமைக்க நாடகம், கலந்துரையாடல் ஆகியன அடிப்படை வழங்குகின்றன. நாடகஉரைநடை (Dramtic prose)[22] என வேறிடத்துக் குறிக்கப்படுவது ஒருவேளை இங்கும் சிறிது பொருந்தலாம்.

செய்யுளிலக்கியங்களைத் தற்சார்பின (Subjective) தற்சார்பற்றன (Objective) எனப் பிரிப்பது போலவே உரைநடையிலக்கிய வகைகளையும் அணுகக் கூடும். நாட்குறிப்பு, தன் வரலாறு, பயணநூல் (புனைவிலிக்) கடிதமும் கட்டுரையும், சொற்பொழிவும் மிகவும் தற்சார்புத் தன்மை புலப்படுத்துவனவாம். இவற்றிலும் கடிதமும் நாட்குறிப்பும் மிகவும் தன்மையமாகவும் (personal) பிற பொதுவாகவும் அமைகின்றன. புதினம். சிறுகதை, நாடகம் போன்றனவும். பிறர் வாழ்வியல் சித்திரமும் மிகுதியும் தற்சாராத் தன்மை கொள்கின்றன. காற்றுடன் கலக்கும் பிறஇலக்கியங்கள் ஆசிரியப் பன்மையால் வேறுபடுகின்றன.

இலக்கியத்தில் ஒலிக்கும் குரல்-கூற்று நிலையின் அடிப்படையில் கணிக்கும் போது, இவை பல்விதமாகப் பாகுபடுகின்றன. இலக்கியம் முழுமையும் ஒரே குரல் ஒலிக்கக் கூடும்; அன்றி, பல குரலும் ஒலிக்க முடியும். ஒரு குரலே ஒலிக்கும்போது, தற்சார்பிலக்கியத்தில் அது படைப்போன்- ஆசிரியன் குரலாகவும், தற்சார்பிலிலக்கியத்தில் பாத்திரக் குரலாகவும் அமைதல் இயல்பு; எனினும் புதினம், சிறுகதை, பிறர் வாழ்க்கை வரலாறு எனும் தற்சாராப் படைப்பும் ஆசிரியனின் ஒரு குரலடிப்படையின ஆகல்

---

20, 21. மா. இராமலிங்கம், புதிய உரைநடை, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1978, பக். 14-15.

22. நாடகத்தில் இடம்பெறும் பாத்திர உரையாடல்கள், இடையிடையே நாடக ஆசிரியர் தரும் மேடை விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றை நாடக உரைநடை எனலாம். —மா. இராமலிங்கம், மேற்படி நூல், ப. 15.

இயலும். ஒரு குரல் என்பதால், கூற்று ஒன்றேயாகிப் பிற-பிறர் கூற்று வராது என்பதல்ல; 'கொண்டெடுத்து மொழியப்படுத[23] லாகப் பலவேறு கூற்றுகளும் இடை விரவலாம்; அன்றியும் அவை நேர் கூற்றாகவும் (Direct speech) மாற்றக் கூற்றாகவும் (Indirect speech) வரல் கூடும் எனவும் தோன்றுகின்றது. பல குரல் இன்றி யமையா இடம்பெற்றமை நாடகம், பட்டி-வழக்கு மன்றக் கலந் துரைகளில் வெளிப்படுகின்றது. இங்கும், நாடகம், ஓராசிரியனின் பல்குரல் வெளிப்பாடாக, பிற பலரின் கருத்து வெளிப்பாடாகி வேறுபடுகின்றன. ஆசிரியர் வெளிப்பட முடியாத பல சூழலிலும் கூட, அவனது 'மறை குரல்' அமைதல் விலக்கவியலாததாம். இந் நிலையில் நோக்க, எல்லா தற்சாராவிலக்கியமும் கூட, ஏதோ ஏதேனும் ஒரு நிலையில் அவன் குரல் தோய்வு பெறுவனவா கின்றன.

மேற்கண்ட உணர்ச்சி, குரல் போன்று கருத்து நிலையிலும் உரைநடை யிலக்கியங்களை அணுகலாம். எவ்விலக்கியமும் ஏதேனும் நோக்கம் பற்றி எழுகின்றது; ஏதேனும் ஒன்றை ஒரு கருத்தைத் கூறும்-காட்டும் குறிக்கோளினது. அக்கருத்து மறைந்தோ வெளிப்பட்டோ அமையலாம். உள்ளதைப் புலப் படுத்துவது என்பதோடு சில அமைந்துவிடலாம்; ஒரு மேற்சென்று அறிவுறுத்துவதாக வேறுபல அமையலாம்; இன்னும் முற்பட்டுக் குறிக்கோளை (Idealism) அமைத்துக் காட்டலாம். இன்னகருத்துப் பயிற்சி இன்ன இலக்கிய வகைக்குத்தான் உரியது என வரையறைப் படுத்தமுடியாத அளவு இவை எல்லா வகையிலும் கூடியும் குறைந் அமையக் கூடும். ஏனெனில் புனைவுப்பண்பில்லாத கடிதம், நாட் குறிப்பு, வாழ்க்கை வரலாறு, பயணம் என்பன உள்ளதையே புலப்படுத்த சில புனைவுகளான புதினம் சில அறிவுரைகளை, அறக்கருத்துகளை, குறிக்கோட் சிந்தனைகளைத் தரவும் வாய்ப் புண்டு. முன்னிற்கும் கருத்து எது என்பது மொத்தத்தில் வகுக்கப் படக் கூடும் என்பதே பொருந்தும்.

---

23. அகப்பாடல்கள் பாத்திரக் கூற்றாக அமைவதைத் தொல் காப்பியம் செய்யுளியலில் குறிக்கும்போது, சிலர் கூற்று அமையா தென்வும் ஆனால் அவை பிறரால் எடுத்து மொழியப்படு மெனவும் கூறுவது இங்கு இணைத்துக் கருதத் தக்கது.
ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்மையுங்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும் (தொல். செய். 191, பேரா).

இலக்கியத் தோற்றத்திற்கு, தூண்டுதல், அல்லது உந்து சக்தி அடிப்படை. உரைநடை யிலக்கிய வகைக்கும் இது பொருந்தும். படைப்போனின் தன்னுந்துதலாகவோ, புறவுந்துதலாகவோ இது அமையலாம். ஆற்றலுடையுணர்வுகள் கட்டற்றுப் பொங்கிவழியும் கவிதை நிலை ஒருவேளை இங்கு இல்லெனினும், மெல்லவே கருவிருந்து, வடிவம் பெற்று, மிதப்படுத்தப்பட்ட வேகத்துடன் வெளிப்படுதல் அமைகின்றது. அமைப்பு-வடிவம்-கருத்தொழுங்கு உரைநடையில் கவிதையிலும் இன்றியமையாமை பெறலின் களன் இங்குப் புலப்படுவதாகக் கொள்ளலாம். மயக்கம் (Ambiguity), மேற்போக்கான பார்வையில் வெளிப்படாத மறை யாழங்கள் எனக் கவிதையில் அமைவன, உரைநடையில் பெரும் பாலும் தெளிவு, எளிமை, புரியும் நிலை என மாறுபடுதலும் இங்குச் சிந்திக்கத்தக்கது. எனினும் புதுக்கவிதையின் 'இருண்மை' போன்ற புரியாத கதைகள், நனவோடை போன்ற உத்திகளால் தெளிவடையாத கதைகள் இருக்கவே செய்கின்றன. நிகழ்வுகள் இன்றியமையா இடம்பெற்ற 'பழைய' கதை நிலைக்கு மாறாக நினைவுகளால் உருவாகிய இத்தகு கதைகள் புள்ளிகளும் இழை களும் வெளிப்படா நீர்க்கோலங்களாகின்றன. உரைநடையிலக்கிய மும் 'அருவ'மாகி வருகின்றதோ எனும் ஐயம் இங்குத் தோன்று கிறது.

உரைநடையில் பழமை-புதுமை கருதப்படுவதுபோல் உரை நடையிலக்கியத்திலும் பழமை-புதுமை புலப்படும் நிலை இங்குச் சுட்டத்தக்கது. வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதையும் வள்ளலாரின் மனுமுறை கண்ட வாசகமும் நிகழ்ச்சிகளைத் தெளி வாகத் தரும் பாங்கின; வருணனைப் பான்மையின தற்காலப் புனைவுகள் சில இந்நிலையினீங்கின. பண்டைய சமய உரைநடை வடமொழி பிறமொழிச் சொற் கலப்பின; தற்காலத்தில் இது ஓரளவு தவிர்க்கப்படுகிறது. பழைய உரைநடையின் பத்தி களாகவும் பக்கங்களாகவும் நீண்ட தொடர்கள் இப்போது சிறு தொடரமைப்புக்கு மாறியுள்ளன. பண்டித நடை, புரியும் நடை யாகியுள்ளது. சொல்விளையாட்டு இன்று சொற் சுருக்கத்துக்கு இடம்விட்டுள்ளது. உணர்ச்சிகளைத் தணித்து - உணர்வுகட்கு அமைதி நல்கும் நிலைக்கு வேறாக, உணர்ச்சிகளைத் தூண்டி- தட்டியெழுப்பி விகாரப்பட்டு நிற்கும் பாங்கு இங்கு இன்று உண்டு. நல்லதை, வல்லதை முதன்மைப்படுத்திக் காட்டும் நிலைக்கு மாறாக இன்று எதையும்-இழிந்ததை-கீழானதை-

வேண்டாததை - வெறுக்கத்தக்கதை - புன்மையானதை-புதைந்து கிடப்பதை-இருட்டுகளை அழுகல்களை-அழுக்குகளை வெளிச்சப் படுத்துதல் உள்ளது.

VIII

எல்லா இலக்கிய வகைக்கும், பொருள், வடிவம்,-வெளியீடு ஆகிய-முக்கூறுகளும் இன்றியமையாத உறுப்பு நிலையின, உயிராகவும், குருதியாகவும் பொருளமைகின்றது என்றால், பொறியாகவும், புலனாகவும், அவற்றின் செயற்பாடாகவும் வெவியீடு இணைகின்றது; இவற்றின் களனான-இடமான உடலாக வடிவம் பொருந்துகின்றது எனலாம்.

இலக்கியப் பொருள் பரப்புடையது; பன்மையுடையது எதுவும் பொருளாகலாம் என ஒரு நிலையிலும், பயனுடையது பொருளாக வேண்டும் எனப்பிறிதொரு கோணத்திலும் கூறலாம். பொருள், உடன்காலத்திலிருந்தும் எடுக்கப்படலாம்; கடந்த காலத்தி லிருந்தும் தேர்ந்து கொள்ளப்படலாம்; வருங்காலக் கனவுகளின் இல்லாததிலும் இயலாததிலுமிருந்தும் மேற்கொள்ளப்படலாம். காலத்தால் மட்டுமன்றி இடத்தாலும் அன்றியும், கடந்தும் நிற்கலாம்.

பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட் குறிப்பிலக்கியம் போன்றன பெயர் நிலையாலே பொருளெதுவென குறிப்பாகச் சுட்டியமைகின்றன. அனுபவம் என்பது இவை யனைத்தின் அடிநாதம். இடம், காட்சி, செய்தி எனப் பயணப் பொருட்கூறு பல்கும். மனிதன், செயல், வாழ்க்கை என வாழ்க்கை வரலாறு விரியும். நனவுகள், நினைவுகள், கனவுகளென நாட்குறிப்பு நகரும், தன்னனுபவங்களைக் கூறும்போதே பிறரனுபவங்களும் பொருட்கூறாக இணையக்கூடும்.

கதை நவில் இலக்கியங்களின் பொருண்மை எளிதாக வரை யறைப்படுவதன்று. படைப்போனின் மனத்தைத் தொட்ட, பாதித்த ஒரு-சில பாத்திரங்கள், நிகழ்வுகள் முதன்மைப்படும் போது, கதை வாழ்க்கை வரலாற்றின் பக்கமாகச் சாய்கின்றது; எனினும் வரலாற்றுத் தன்மை குன்றுவதால் விலகியே அமை கின்றது. அன்றியும், ஒரு முழுமையான சித்திரிப்பு எனும் வாழ்க்கை வரலாற்றின் நோக்கு இங்கு இன்றி, ஒரு சுவையான சித்திரிப்பு, தேர்ந்த பொருளுக்குத் தனி வண்ணம் அழகு-கவர்ச்சி அளிக்கின்றது. மனிதனின் உள, அக, புறவாழ்வு, சமுதாயத்தின்

மேடு பள்ளங்கள், சமயச் சார்பு, வரலாற்றுப் புனைவு எனப் பல கதைக்குக் கருவாகின்றன. கருவின் ஒருகோணப் பார்வை அல்லது அணுகுதலைச் சிறுகதை, ஓரங்கநாடகம் போன்றனவும், பல கோணப் புலப்பாட்டைப் புதினம், முழு நீள நாடகமும் அளிக்கும் எனலாம்.

இலக்கியமாக உருவாகின்ற கடிதமும் கட்டுரையும், விளக்குதல், தெளிவாக்குதல், அறிவுறுத்துதல், உணர்வெழுப்புதல் போன்ற நோக்கச் சார்பினவாகையால், அதற்கேற்ற எண்ணம்-கருத்தைப் பொருளாகக் கொள்கின்றன. வடிவால் இரண்டும் வேறுபடினும், ஓரளவு நோக்கால் ஒருமைப்படுவனவாகையால் பொருட் கொள்கைத் தொடர்பு உடையனவாகின்றன. ஆயினும், 'கண்டதும், கேட்டது'மெல்லாம் கட்டுரைப் பொருளாகத்தக, கருதியதுவே கடிதப்பொருளாகின்றது. உ.வே.சா. தான் கண்டதையும் கேட்டதையும் கட்டுரையாக வடித்தார்[24] பண்டிதமணி இலக்கியம், சமயம் எனக் கட்டுரைகளை உரைநடைக் கோவைகளில் வழங்கினார்,[25] பாரதியாரின் கட்டுரைகள் சமூகம், தத்துவம், கலை, மாதர் எனப் பல்நிலையினவாகின்றன.[26] புலவர் வாழ்க்கையும் கட்டுரை உருப்பெறலை விநோத ரசமஞ்சரி அளிக்கின்றது.[27] அரசியல், மொழி, கல்வி பற்றிய கட்டுரைகள்

---

24. நான் கண்டதும் கேட்டதும், உ.வே.சாமிநாதையர், ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, 7-ஆம், 1959.
25. உரை நடைக் கோவை, முதற்பகுதி, சமயக் கட்டுரைகள் - பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், சன்மார்க்க சபை மேலைச் சிவபுரி, 1941;
உரைநடைக்கோவை, இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள்-பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 8-ஆம், 1965.
26. பாரதி நூல்கள் (கட்டுரைகள்), 1. தத்துவம், 2. மாதர், 3. கலைகள், 4. சமூகம், ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி பிரசுராலயம், சென்னை, 3-ஆம், 1943.
27. விநோதரச மஞ்சரி, வீராசாமி செட்டியார், (பதி.), பி. ஆர். பாலகிருஷ்ணன், (ஸ்ரீ பாரதி ஆச்சகம்), சென்னை, 1969.
(கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி; கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது; ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடியது; ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது; புகழேந்திப் புலவர் நளவெண்பா பாடியது; காளமேகப் புலவர் சரித்திரம்.. )

மு. வரதராசனாரிடம் அமைகின்றன,[28] பண்டைச் சிறப்புகளும் பண்பாடு, நாகரிகம், மரபு, கலை, இலக்கியம், சமயம், அரசு-தற்காலத்தில் வேண்டியன, முன்னேற்றம் பெறவேண்டியனவும்-விடுதலை, தேசியக் கல்வி, பெண் வாழ்க்கை, ஒற்றுமை, ஒருமைப்பாடு-எனப் பொருண்மை மிகுந்த பெருக்குக் காட்டுகின்றது. இவற்றுள் சில எல்லாக் காலத்திற்கும் ஏற்ற பொருண்மையாகவும் அமைதல் உண்டு.

உடன் காலப் பிரச்சினைகள் மிகுதியாக அலசப்படுவது கட்டுரை, கடிதம் போன்றவற்றில் எனலாம். அன்றியும் காற்றுடன் கலக்கும் இலக்கிய வகைகளும் ஒரு பகுதி உடன்காலப் பிரச்சினையை அணுகுவதாகவே அமைகின்றன எனலாம். ஒரு பிரச்சினை, சிக்கல், கேள்வி எனக் கருக்கொண்டு, அப் பொருளையே மையங்கொண்டு மேடைப்பேச்சு, கலந்துரை போன்றன உருவாகின்றன. பட்டி, வழக்கு-மன்றங்கள் ஓரளவு இவ்வாறின்றியும் இலக்கியம், பாத்திரம் என்பனவற்றை அண்டி யுருவாகுதலும் காணப்படுகின்றன. திரு.வி.க. போன்றோரின் உரைகள் தொழில், கூட்டுறவு, தொழிலாளர் பிரச்சினை, தொழிற்சங்கம், பொருளாதாரம் எனப் பல்துறையில் விரிந்து அக் காலச் சூழலுக்கு ஏற்ப, காலப் பொருளுடன் (Topical) உருவாகியமை இங்கு நினைக்கத்தக்கது.[29] அண்ணாத்துரையின் சொற்பொழிவுகளும் உடன்கால நிலையையும், எதிர்பார்க்கும்

---

28. According to Robert Lynd, an essay can be on something, anything and even on nothing. But Dr. Mu-va.'s essays are all close packed with grave subjects, great ideas, didactic material and philosophic matter, The subjects and aspects dealt with by him are various and varied. As we have noted earlier, education, society, philosophy and politics form the basis of these essays.
- Dr. Mu. Va. (Collection of Research Papers on Dr. Mu. Va.), International Institute of Tamil Studies Madras, 1975, p. 81.

29. தமிழ்ச்சோலை, தமிழ்த்தென்றல் போன்றன சொற்பொழிவு நூல் வடிவு பெற்றன எனத் தெரிகின்றது, சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து, உள்ளொளி. சைவத்திறவு போன்றனவும் சொற்பொழிவு நூல்களாம், (பார்க்க. திரு. வி. கலியாணசுந்தரனார், புலவர் அரசு, கழகம், மறு. 1970, பக். 19-116).

ஏற்றத்தையும் முரணிக் காட்டுகின்றன.[30] 'மேடைப்பேச்சு' எனவும் இவர் சொற்பொழி வொன்றமைவது குறிப்பிடத் தக்கது.[31]

கட்டுரையும் சொற்பொழிவும் ஒன்றையொன்று நெருங்கிய மையக்கூடும் என்பது, நூல் வடிவுள்ள சொற்பொழிவுகளைக் கண்டு கணிக்கும்போது புலப்படும் எண்ணமாகும். அழைத்துப் பேசுவது, விளித்துக் கூறுவது எனும் சொற்பொழிவமைப்புடன் கட்டுரை உருவாகியமை ரா. பி. சேதுப்பிள்ளையின் 'கடற்கரை யிலே'[32] என்பதிலமைதல் இங்கு எண்ணத்தக்கது; இங்கு முன்னிலைப்படுத்தப்படுவது மனிதனல்லவென்பது வேறுபாடாம்.

கடிதப் பொருண்மையாகச் சமூக வாழ்வியல், சமயம், காதல் மனிதப் பண்பாடு, உடன்கால நாட்டு, மொழிநிலை, அரசியல், போன்ற பல அமைவதைச் சுட்டுவர்.[33] அன்றியும் கடித வடிவு பயண, அறக்கருத்துகளையும் தாங்கி வருகின்றது. உரைநடை யிலக்கியப் பொருண்மை பல வகை, நிலை, கூறுகளுடையதாகிப் பல பரிணாமங்களைக் காட்டுதல் இங்கு வெளிப்படுகின்றது.

IX

வடிவக் கோட்பாடுகள் உரைநடையில் தேரப்படுதல் சிக்கலானது. செய்யுளிலக்கியத்தில் பாவும், நூல் முழுமையும் தரும் புறவமைப்பும், கருத்துநிலை-முறைவைப்பு-ஒழுக்கு ஆகியன தரும் அகவமைப்பும் கணித்தல் இதனை நோக்க, எளியதாம்.

---

30. பார்க்க: (1) நிலையும் நினைப்பும், அண்ணாதுரை, திராவிடப்பண்ணை, திருச்சி.
(2) ஏ! தாழ்ந்த தமிழகமே, சி. என். அண்ணா துரை, பாரி நிலையம், 12-ஆம், 1971.
(3) அறிஞர் அண்ணா பேசுகிறார் (வானொலிச் சொற்பொழிவு), நால்வர் நூலகம், சென்னை 1978.
(4) மேடைத் தமிழ் வளர்த்த மேதை (இலக்கிய உலகில் அண்ணா, நாகை தருமன், நன் செய்ப் பதிப்பகம், சென்னை, 1971, பக். 15 முதல்.)

31. அறிஞர் அண்ணா பேசுகிறார், முன் சுட்டிய நூல், பக். 27-35.

32. கடற்கரையிலே, ரா. பி, சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

33. கடித இலக்கியம், ந. கடிகாசலம், தமிழ் இலக்கியக் கொள்கை கருத்தரங்கு (வெளியிடப்படாத கட்டுரை).

உரைநடையே அகவடிவமாக, முழுவமைப்பே புறவடிவமாக உரைநடையிலக்கியம் அமைகின்றதோ என்பது ஐயம். அன்றியும் அனைத்து உரையிலக்கியங்கட்கும் உரிய பொது வடிவமொன்று தெளிதலும் அகவமைப்பு நிலையில் ஓரளவு இயலலாமே,யன்றிப் புறவமைப்பு நிலையில் இயல்வதன்று.

உரைநடையிலக்கியத்தின் அகவமைப்பைப் பொதுநிலையில் சொற்றொடர் எனவும், பத்தி எனவும் இருநிலையில் கணிக்கலாம் எனத் தெரிகிறது[34] புறவடிவம் ஓரளவு வகைக்கேற்பமாறுபடுவது எனலாம். நாடகம், கலந்துரை, பட்டி, வழக்கு மன்ற உரைகள் போன்றன 'உரையாடல்' எனும் வடிவ ஒப்புமை காட்டுகின்றன. கடிதம், விளித்துத் தொடங்குதல், கூறி முடித்தல் எனத் தனக் கென வடிவு கொள்கிறது; சொற்பொழிவும், அவையை முன்னிலைப்படுத்தி யாரம்பித்தல், தொகுத்துரையாகி முடிதல் எனும் நிலையில் சிறிது இணைவு புலப்படுத்தலாம். கட்டுரைக்கு இந்த அளவுக்குக்கூட வடிவம் கணித்தல் கடினமாம்.[35] விநோதர சமஞ்சரியின், தெய்வங் கொள்கை, காலபேத வியல்பு போன்ற கட்டுரைகள் உரையாடல் நடையின; 'இது சம்வாதமாகச் செய்யப்பட்டது' என்ற குறிப்பை ஆசிரியர் வழங்குகிறார்; எனவே வினாவிடை நிலையும் கருதப்படலாம். பாரதியின் 'சிட்டுக் குருவி' எனும் கட்டுரை[36] ஒரு நாடகத் தனிமொழி போன்றும், 'ஓநாயும் வீட்டு நாயும்'[37] கதை போன்றும் அமைகின்றன; இவ்வாறு, கட்டுரை, பொருண்மைப் பன்மை போன்று; வடிவப் பன்மையும் காட்டுதல் புலனாகின்றது கதையிலக்கியங்கள், வாழ்வியல், பயண விலக்கியங்களும் இவ்வாறே வடிவம் காணற் கரியனவா கின்றன; வடிவமன்றி வேறு பல அமைப்புக் கூறுகளும் இவற்றின் மொத்தவுருவை நிர்ணயிப்பதே காரணமாகலாம்.

---

34. ...the basic unit of prose structure, the sentence, and ...its only other unit, the paragraph.
-Peter westland, literary Appreciation, the english uuiversities press Ltd., London, 5th, 1966. p. 195.
35. Of all literary forms, the essay is probably the most indefinable, and this for two reasons. one is that no one krows exactiy what it is. The other is that **it has no prescribed or conventional literary form.**
**— Ibid., p 201.**
36. தமிழருக்கு, (பதி.) சீனி, விசுவநாதன், ஸ்ரீபுவனேஸ்வரி பதிப்பகம், சென்னை, 1978, பக். 143-145.
37. கட்டுரைகள் 4. சமூகம், ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி பிரசுராலயம், சென்னை, 1950, பக். 229-33.

செய்யுளிலக்கியங்களைப் பெரும்பாலும் பொருளடிப்படையில் பகுத்துக்-காண்கிறோம்; ஆனால் உரைநடையிலக்கியங்களைப் பெரும்பாலும் வடிவமைப்புக்கு முதன்மையளித்துப் பகுத்துக் கொள்வதாகத் தோன்றுகின்றது. அகம், புறம், அறம், பக்தி என்று-கண்டு, பின் தனிப்பாடல், காப்பியம், பிரபந்தம்... என்றெல்லாம் செய்யுளிலக்கியத்தைக் காண்பது இரண்டாம் பட்சமாகவும், ஆனால் உரைநடையில் இலக்கிய வகைகளை அமைப்படிப்படையில் பகுத்த பின்பே, சமூகம், அரசியல், வரலாறு.. எனப் பொருள் நிலைக்கு உட்சென்று காண்பதாகவும் தெரிகின்றது.

உரைநடையிலக்கியத்தின் அகவமைப்பில் சொற்றொடர் இன்றியமையா அடிப்படைக் கூறாகின்றது. அது எளிய தனிநிலைத் தொடராகவோ (Simple) கூட்டுத்தொடராகவோ (Compound) கலப்புத் தொடராகவோ (Complex) அமையக்கூடும்.[38] சிறு தொடராகவோ, நீண்ட தொடராகவோ வரக்கூடும்; கருத்தை அழுத்தமாக அளிக்கவும், முரண்களால் உரைக்கு ஆற்றலளிக்குமிடத்தும் சிறு தொடரும், மறைநிலை உருவாக்கவும், மொத்த உணர்வு அளிக்கவும் நெடுந்தொடரும் பயன்படலாம்.[39] அன்றியும் இறுக்கமற்ற தொடர், இறுக்கமான தொடர், சமநிலைத்தொடர் எனவும் பொருள் புலப்பாட்டுத் தன்மையடிப்படையில் சொற்றொடர்கள் அமையலாம்.[40]

நேரடியாகப் பொருள் தரும் எளிய தொடரமைப்புகளே தமிழ் உரைநடையிலக்கியங்களில் மிகுதியாக அமைகின்றன. தொடக்க உரையிலக்கியங்கள் நீண்ட தொடர்களை ஆளினும் சிறு தொடர்களும் தற்காலத்தில் பயின்றன. சொல்லுக்குச் சொல் பொருள் தந்து முடிதலும், தொடர்முடிந்த பின்பே முழுப் பொருள் புலப்படுதலும் உண்டு. அன்றியும் அரைகுறைத் தொடர்கள்-விடு தொடர்கள் பாதித் தொடர்களும் கதை, மேடைப் பொழிவு போன்றவற்றில் அமைதல் கூடும்.

---

38. புதிய உரைநடை, முன் சுட்டிய நூல், ப. 31.
39. Literary Appreciation, Op. Cit., p. 193.
40. Ibid. 192. நேர்வாக்கியம் (Loose Sentence), பொருள் மறை வாக்கியம் (Periodic Sentence), சமநிலை வாக்கியம் (Balanced Sentence), என்ற பெயர்ப்பும் அமையும் (உரைநடைத் திறன், முன் சுட்டிய நூல், பக். 116-117).

''ராகு வென்பது ஒரு கிரஹம்; அல்லது ஒரு பாம்பு; அல்லது ஓர் இராட்சதன்; அல்லது ஓர் இராட்சதப் பாம்புக் கிரகம்''

(ஏட்டிக்குப் போட்டி, கல்கி, வானதி, சென்னை, 1978, ப. 95)

இது எளிய, சிறு தனிநிலைத் தொடர் அமைப்பைப் புலப்படுத்து கின்றது.

''ஒரு நாள் ஒரு மணிக்கு மேல் இடைவேளையில் உபாத்தியாயர்கள் தங்கும் அறையில் உட்கார்ந்து மணிமேகலைப் பிரதியை வழக்கம்போல் புரட்டிக்கொண் டிருந்தேன்''

(நினைவு மஞ்சரி, முதற்பாகம் உ. வே. சா. தியாகராஜ விலாசம், சென்னை, 4-ஆம், 1957, ப. 17).

நீண்ட கூட்டுத் தொடராகவும், இறுக்கமான தொடராகவும் இது அமைகின்றது. தொடர் முற்றுப் பெற்ற பின்பே பொருள் முழுமை கிடைக்கின்றது.

''உம்... உம்...பார்ப்போம்...நாளைக்கு காலம்பரெ தானே கணக்கு...நாளைக்கு வாரும்...இந்தப் புஸ்தகம் மட்டும் இங்கே இருக்கட்டும்...மற்றதை யெல்லாம் நான் பார்த்து விட்டேன் நீரு கொண்டு போயிரும்...சரி...நான் வைர வன் பிள்ளைகிட்டெ போனில் பேசிக்கிறேன்...''

(பள்ளிகொண்டபுரம், நீல. பத்மநாபன், வாசகர் வட்டம் சென்னை, 1970, ப.119)

விரைவு பற்றிப் போலும் நிறைவுறாத் தொடர்களும், இடை வெளிகளும், முன் பின் இணைவு முழுமையுறாத தொடர்ச்சிகளும் அமைகின்றன எனலாம்,

''ஒரே ஒருவர்—பெரியவர்—போய்விட்டார்...''

''கொள்கைச் சண்டை— தத்துவத் தகராறு—எங்கள் கட்சியில்...''

(தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், எட்டாம் பகுதி, பாரி நிலையம், சென்னை, 1981, பக். 227,228)

என அண்ணாத்துரையின் கடிதவிலக்கிய உரையாடல் பகுதியும் 'துண்டுத் தொடர்' களைத் தந்து எண்ண வெளிப்பாடு, பேச்சு என்பன இவ்வாறமையும் போலும் எனும் கருத்தைத் தருகின்றன.

உரையிலக்கியத்தின் மற்றொரு உறுப்பான 'பத்தி'யும் சிறி தாகவும், பெரிதாகவும் பாங்கினது. பத்தி மட்டுமன்றிப் பகுதி

களும் (Sections), துணைப் பகுதிகளும், துணைத் தலைப்புப்(Sub-heading) பகுதிகளும், இயல்களும், அதிகாரங்களும், தொகுதிகளும்கூட வடிவ உறுப்புக் கூறுகளாக முடியும் என நினைக்கலாம்.

ஒரு பத்தி, ஒரு கருத்தைப் பற்றி, முதன்மைப்படுத்தி, ஒருமைபாடுடையதாய் அமைதல் வேண்டும்.[41] ஒரு தொடராலும், பல தொடராலும் ஒரு சிறு பத்தி அமையலாம்.

'இது இங்கிலீஷ் வாத்தியம் ஆகையால், இதன் சாரம் எனக்குச் செவ்வையாய்ப் புலப்படாதாயினும், நான் கேட்ட பொழுது என் கருத்திற்குத் தோன்றியபடி ஒருவாறு எழுதத் துணிந்தேன்''.

விநோத ரசமஞ்சரி, (பதி)பி.ஆர். பாலகிருஷ்ணன்,1969(ப. 34)

''வருவது வரட்டும்; பிறகு நடப்பது நடக்கட்டும். இப்போது இந்த ஏணியில் ஏறலாம்; சுவரின் உச்சியை அடைந்த பிறகு மற்ற விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்''.

(பொன்னியின் செல்வன், முதல் பாகம், மங்கள நூலகம், சென்னை, 1971, ப. 232)

ஒரு பத்தியில் முதன்மைபெறும் தொடர், செய்தி, அதன் தொடக்கம், முடிவு, அல்லது இடையில் அமையலாம். சிறு தொடர்களினாலான அல்லது நீண்ட தொடர்களினாலான பத்தியிலும் இது இயல்பாகும்.

''புலிப்பல் கொண்டு வந்து திருமணம் செய்து கொள்வது கூட இலக்கிய வழக்காக இல்லை. வெறும் சமீபகால வாய் வழக்காகவே தான் இருக்கிறது. ஆகவே, தாலி அணிதல் மணமகன் மணமகளுக்குப் புனிதச் சின்னமாக அணிதல் தமிழ்ப் பண்பாட்டில் அறவே இல்லை எனத் துணிந்து கூறலாம். திருமணமான பிறகு, வேட்டைக்குப் போகும் கணவன். புலியைக் கொன்று அதை மாலையாக்கி தன் பெருமையைப் மனைவிக்குக் காட்டி மனைவியின் கழுத்தில் 'ஜம்' மென்று வேடிக்கையாகப் போட்டிருக்கிறான். அதாவது திருமணமெல்லாம் முடிந்து, எல்லாம் ஆன பிறகு!''

(வனவாசம், கண்ணதாசன், வலம்புரி பதிப்பகம், சென்னை, 1965, ப. 232).

---

41. In the paragraph unity requires thet there shall be only one main theme and one main idea.
—Literary Appreciation, op. cit., p.195.

"பாதை மிகவும் செங்குத்தாக இருப்பதுடன் பல பகுதிகளில் உருளைக் கற்கள் நிறைந்திருக்கும் என்று கண்ணன் கூறினார். அவர் முன்பு ஒருமுறை கேதார்நாத்துக்குச் சென்று வந்திருக்கிறார். அந்த அனுபவத்தினால்தான் என்னால் நிச்சயம் நடக்க முடியாது என்று அவர் கூறினார். எனது 'யமுனோத்ரி' 'கோமுக்' அனுபவத்திற்குப் பிறகு, என்னை எங்கும் நடத்தி அழைத்துச் செல்ல அவருக்குத் தைரியம் இல்லை என்று எனக்குப் புரிந்தது. அவரைச் சொல்வானேன்? எனக்கும்தான் நம்பிக்கையில்லை. குதிரை சவாரிதான் செய்து பார்ப்போமே என்று தோன்றியது. ஆனால் உள்ளூர நடுக்கம்தான். வேறு வழியில்லையே! கண்டியிலோ தண்டியிலோ செல்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. எப்படியாவது கேதார் நகரைத் தரிசனம் செய்தாக வேண்டுமே! இத்தனை தூரம் வந்துவிட்ட பிறகு, யோசித்துக் கொண்டிருந்தால் எப்படி?" (புண்ணிய பாரதம், பாகம்—2, பரணீதரன், விகடன் பிரசுரம், சென்னை, 1975, பக் 236 –237)

பத்தியைக் கவர்ச்சியாகத் தொடங்குதல், அதேபோன்று மனத்தில் நிற்கும் வண்ணப் பத்தியை முடித்தல், இரு பத்திகட்கிடையே தொடர் சங்கிலி போன்று இணைவு அமையும் வண்ணம் அவற்றை ஆக்குதல், பத்தி முடிவு. தொடர்ந்து வரும் பத்தியை அலாவி நிற்றல், கருத்தழுத்தம் ஏற்படும் வண்ணம் ஒத்த தொடர்களை இணைமையாக வைத்தல் (parallel construction) தேவையேற்படின் ஒரு தொடரையே பத்தியில் மீண்டும் ஆளுதல், எனப் பத்தியின் தொடரமைப்பு நிலை இன்றியமையாக் கோட்பாடுகளைக் கொள்கின்றது. கதைகூறும் நிகழ்ச்சிக்கோவையிலக்கியங்களில், என்ன வருமோ, நிகழுமோ எனும் எதிர்பார்ப்பு, மறைநிலை, அதிகார முடிவுகளில் மட்டுமன்றி ஒவ்வொரு பத்தியிலும், தொடரிலும் வரும் வண்ணம் அமைதல் சிறக்கும் எனக் கருதலாம், செவ்விய தொடக்கமும் முடிவும் கொண்டு முதல், இறுதிப் பத்திகள் முறையே அமையும் முன்னிலக்கியநிலை, தற்போது, திடீர்த் தொடக்கமும் அத்தகைய (Abrupt) முடிவற்ற முடிவும் பெறல் மிக்கது என எண்ணத் தோன்றுகிறது. வெறும் செய்தித் தொடர்களாகவே (Statements) அமையாது வியப்புத் தொடரும், வினாத் தொடரும் விரவும்போது, பத்தி ஆற்றலுடையதாகின்றது

போலும். தன்னுணர்ச்சித் தன்மையும், வாசகன் அல்லது கேட்போனுடன் நெருக்கமும், நேரடித் தொடர்பும் இதனால் ஏற்படுவதாகக் கொள்ளலாம்.

X

உரைநடையிலக்கியத்திற்கு வடிவமாகவும் வெளியீடாகவும் உரைநடையே அமைகின்றது; எனவே வடிவ வெயீட்டுக் கூறுகள் ஒன்றிலொன்று இன்றியமையாது கலக்கின்றன. பொருண்மை, சொல்—தொடர்—பத்தி...எனவும், உவமை போன்ற அணிகள் பழமொழி போன்ற மேற்கோள்கள் வழியும், மொழியின் பல்வகை நடையுடனும் புலப்படுவதில், முக் கூறுகளும் ஒன்றையொன்றவாவின. எனினும் உரைநடை யிலக்கிய வெளியீட்டையெண்ணும் போது, மொழிக் கூறுகளும் நடைக் கூறுகளும், ஒன்றிலொன்று பின்னிப் பிணைந்து வெளிப்படுதல், கருதப்படவியலும்.

ஒரு பொருண்மைக்கு இலக்கியச் சுவை கொடுப்பதே நடை (Style) எனக் கருதலாம். சரியாகவும் செவ்வையாகவும் மொழியை, உரையை ஆளுவதால், எழுத்து அல்லது மொழிவு கலையாகின்றது.[42] கலைப் படைப்புகளை அவற்றின் முருகியல் பயன்பாடும், பொருண்மையும் பற்றி விளக்குவதாக நடையியல் கல்வியமைகின்றது; இலக்கிய வன்மையை - வண்மையை புலப்படுத்துவதாக முருகியல் நோக்கின் நடையியல் அமைகின்றது; ஒரு இலக்கியத்தின் பண்புகளை விளக்குவதற்கு நடையியல்முறை இன்றியமையாதது எனவும் கூறுவர்.[43]

நடை பலவிதமாக அமையலாம்; பல வகைகளாகக் காணப் படலாம். நடைக்கு மொழி யின்றியமையாததானமையின் மொழி நடை என ஒன்று கருதப்படக்கூடும். இதிலும் பல்வகைகள் அமைகின்றன. எளியநடை, தெளிவான நடை, செறிவான நடை,

42. ...by the principles of prose, mere writing is elevated to an art.
—Ibid., p. 194.

43. A purely literary and aesthetic use of stylistics limits to the study of a work of art or a group of works which are to be described in terms of their aesthetic function and meaning. Only if this aesthetic interest is central will stylistics be a part of literary scholarship; and it will be an important part because only stylistic methods can define the specific characteristics of a literary work.
—Rene wellek & Austin Warren, Op.cit, p.180.

நெகிழ்ச்சியான நடை, கடுநடை, செந்தமிழ்நடை, கொடுந்தமிழ் நடை, தனித்தமிழ் நடை, மணிப்பிரவாள நடை, கொச்சை மொழிநடை, கிளைமொழிநடை என இது விரியும்.

இவ்வாறு பல நடைகளமையப் பல காரணங்கள் அடிப்படையாகின்றன. 'ஆசிரியர் (Author), காலம் (Age), நோக்கம் (purpose), கருத்து (Theme), இடம் (Geography), மக்கள் (Audience), முதலியவற்றால் நடையின் தன்மையும் வேறுபடும் என்பர்.[44] பேச்சுத் தமிழ் நடை யெனும் கொடுந் தமிழ் நடையிலேயே பரமார்த்தகுரு கதையை எழுதியதை வீரமாமுனிவர் குறிக்கின்றார்; ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பும் கொடுந்தமிழ் நடையிலேயே அமையினும், முனிவர் நடையினும் வேறுபட்டது[45] செந்தமிழ் நடையிலெழுதிய சிறந்த சான்றோர் பலரைச்சோமலெ சுட்டுகின்றார்.[46] சூரியநாராயண சாஸ்திரி, வ.உ.சி., திரு.வி.க., சோமசுந்தர பாரதி, டி.கே.சி., ரா.பி. சேதுப்பிள்ளை, கி.வா ஜ., என இப்பட்டியல் விரிகின்றது. தனித்தமிழ் நடைக்குத் தோற்றுவாய் மறைமலையடிகளிடம் அமைந்து, மு.வ. போன்றோரிடம் தொடர்தலும் மறுமலர்ச்சி நடை பாரதி போன்றோரிடம் காணப்படலும் சுட்டப்படுகின்றது.[47] ஒருவரிடமே கால வளர்ச்சிக்கேற்ப மூவகை நடையமைந்தமை திரு.வி க.விடம் வெளிப்படுகிறது.[48] இலக்கிய வகைகளுள் தற்காலக் கதை நவில் நூல்கள் வட்டார மொழிநடை, கொச்சை மொழி நடைக்கு ஓரளவு இடம் கொடுப்பதுண்டு; எனினும், நல்ல இலக்கிய மொழி நடையும், மரபுத் தொடர் (Idiomatic) பயன்படு நடையும் இல்லாமலில்லை.

> "வெங்காயத்தை இத்ற பெரிசாவா நறக்குவா...?
> பொடிப் பொடியா நறக்சணும்... நான் இதைச்
> சரியாக்கறேன்..." என்ற துளசி உட்கார்ந்தாள். பிறகு,
> "நேக்கு எந்துக்கு விருந்து?" என்றாள்.

---

44. இ. சுந்தரமூர்த்தி, நடையியல் அறிமுகம், அன்பு நூலகம் சென்னை, 1978, ப. 27.
(Principles of Literary Criticism, D.N. Gosh, kitab Ghar Gwalior, 1970) எனும் நூலிலிருந்து.
45. சூ. சோசபு சுந்தரராசு, உரைநடைத்திறன், எழிலரசு பதிப்பகம், பாளையங்கோட்டை, 1973, ப. 48
46. சோமலெ.. வளருந் தமிழ், பாரி நிலையம், சென்னை, 3—ஆம், 1968, பக். 46—78.
47. மேற்படி, பக் 79—156,158.
48. சூ. சோசபு சுந்தரராசு, முன் சுட்டிய நூல், ப. 99.

(பி.வி.ஆர்., ஆடாத ஊஞ்சல், 18, ஆனந்த விகடன், 4.3.84, ப. 24)

"பசுமை தவழும் காடும், பாளம் பாளமாக—வெடித்த வெள்ளரிப் பழம் போன்ற உவர் மண் பரப்பும், அருகருகே நேர்மாறான இரு துருவங்களைப் போல் விளங்கின".

(நா. பார்த்தசாரதி, புறநானூற்றுச் சிறுகதைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978, ப.163).

"வந்து இரண்டு தினங்களிலேயே அப்படி இருக்கும், இப்படி இருக்கும் என்றெல்லாம் ஆனந்த வானத்திலே சஞ்சரித்த நான் கனவுகள் கலைந்து உண்மையை நிதரிசனமாகக் கண்டுவிட்டேன்".

(ராஜம் கிருஷ்ணன், பெண்குரல், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 3—ஆம், 1981, ப. 131)

உரைநடையின் இன்றியமையா நடையியல் கூறுகளாகச் சொற்தேர்ச்சி, படிமம், ஒலிநயம் என்பனவற்றைச் சுட்டுவர்.[49] அன்றியும் உரைநடையின் முக்கியப் பண்புகளைக் கூறும்போது, ஒலிநயத்துடன், தெளிவு, உணர்ச்சி போன்றவற்றையும் சுட்டுவது[50] இங்கு இணைத்து நினைக்கத் தக்கது. சரியான சொற்தேர்ச்சி தெளிவான உரைநடையை அளிப்பதுடன் வேகமும், உணர்ச்சியும் நிறைந்த தன்மையையும் அதற்கு அளிக்கின்றது. உயிர்த் துடிப்புடைய சொற்கள் கற்போரை—கேட்போரைத் தூண்டி யெழுப்புவதுடன் உரைநடைக்கு நிலை, பேறும் அளிக்கின்றன. எனவே தெளிவும் உணர்ச்சியும், சொற்தேர்ச்சியுடன் இணைந்து செல்கின்றன என்பது புலப்படும். உரைநடையின் தன்மையே இதுதான் எனவும் கூறக்கூடும்.

---

49. The Chief elements of Style are diction, imagery and rhythm.
—S H. Burton, The Criticism of Prose, Longmen, London, 3rd., 1976, p.17.

50. உரைநடையின் பல்வேறு வகைகளையும் ஆராய்ந்து முடிவு காணும் திறனாய்வாளர்கள் உரைநடைக்கு (1) தருங்கருத்து (Enota), (2) தெளிவு (Lucidity of Style), (3) சந்தம் (Rhythm), (4) உணர்ச்சி (Emotion) ஆகிய முக்கியப் பண்புகள் தேவை என்று குறிப்பிடுகின்றனர்.
—சு. சோசபு சுந்தரராசு, முன் சுட்டிய நூல், ப 8.

வெளியீட்டுக் கூறுகள், அல்லது நடையியல் கூறுகளில் பல செய்யுளில் உரைநடையிலும் கருதப்படல் கூடும். படிமம், ஒலி நயம் போன்றன அத்தகையன. அன்றியும், உவமை, உருவகம், கற்பனை, உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் போன்ற பல அணிகள் உத்திகள் செய்யுளிலக்கியத்தில் போன்றே உரைநடை வெளியீட்டிலும் இடம்பெறக் கூடும். எனினும் செய்யுளிலும் உள்ள குறிப்பு உள்ளுறை போன்றன இன்றி நேரடிப் பொருள் நிலை மிகும் எனலாம்; மறைபொருள் பெரும்பாலும் இல்லெனினும் மறை நிலை, கதை நவில் இலக்கியத்தில் இன்றியமையா இடம்பெறக் கூடும். அன்றியும் இத்தகு இலக்கியக் கூறுகளை வெளியீட்டு நிலையில் பெற்றும் முழுமை யான இலக்கியத் தன்மை பெறாத உரைநடைகளும் இருக்கலாம்.

அணி நலன்களும், ஒலி நயங்களுமே உரைநடை ஆகிவிடக் கூடாது; பொருளின் சிறந்த புலப்பாட்டிற்கு இவை துணையாக அமைய வேண்டுவதே இன்றியமையாதது. இவற்றைச் சரியாகக் கையாள்வதால் சொற்பொழிவு நடை (Oratorial prose) வெற்றி பெறுகின்றது. கேட்போனின், கற்போனின் மனத்தை மட்டுமன்றி செவி-கட் புலனையும் கவர்ந்து எளிதில் பதிகின்றது; பாதிப் பேற்படுத்துகின்றது. கவியரங்கத்தில் சிலேடை எடுப்பளிப்பது போல, மேடைப் பேச்சில் இரட்டுற மொழிதல், அங்கத முறை, 'பொடி வைத்துப் பேசுதல்', நகைகிண்டல்—கேலி இணைத்தல், ஒப்பிட்டுப் பேசுதல், கடிதல், சுண்டித்தல், வினாவெழுப்பி விடை கூறும் முறை பின்பற்றுதல் போன்றன கூற்றுமுறை உத்தியாகிப் பயன்படுகின்றன.

கட்டுரைரையினிடையே குட்டிக்கதைகம் (Episode), செய்யுட்கள், நிகழ்ச்சிகள் (Anecdote) போன்றன மேற்கோளாவதுண்டு. பெரும்பாலும் கதை நவிலிலக்கியத்தில் இவை இடம் பெறலருமையெனினும் கடிதம், சொற்பொழிவு போன்றவற்றில் கருத்தழுத்தத்திற்காகவும், கருத்து விளக்கத்திற்காகவும் இடம்பெறக் காணலாம். மேலும், இணை ஒப்பு, இலக்கணைா மோனையும் எதுகையும் மங்கல வழக்கு, ஆகுபெயர், குறிப்புமுரண், ஒலி அனுகரணம் போன்று இன்னும் பலவும் உரைநடைக்கு அணியும் அழகும் நல்குதலைச் சுட்டுவது[51] இங்கும் எண்ணக் கூடியதாகும்.

---

51. மா. இராமலிங்கம், முன் சுட்டிய நூல், பக். 90-108(உரை நடையின் அணி நலன்கள்).

செய்யுள் போலவே உரைநடையிலும் ஒலிநயம் அமையும் எனும் கருத்து[52] சிந்திக்கத் தக்கது. சில உரைநடைகளில் இந்த ஒலி நயம் பொருந்தாமையுண்டு எனவும், வருணனை உரைநடை இந் நிலையினது எனவும் வேறுபட்ட எண்ணமும் உள.[53] சிறந்த உயர்ந்த உரைநடை ஒலிநயமுடையது எனவும் சாதாரண உரை நடையில் இத்தன்மை அருமை எனவும் கருதலாம். சொற்பொழி வின் ஒலிநயமும்[54] எழுத்திலக்கிய ஒலிநயமும் வேறுபடக் கூடும். ஒலிநயம் பல்வகை ஆற்றலினதாகக் குறிக்கப்படுகின்றது.[55]

> "இவ்வுலகில் வழங்கும் செம்மை சான்ற தென்மொழி களுள் தமிழ் மொழியும் ஒன்றென்று மொழித்திற மறிந் தோர் கூறுவர்"
>
> (அலையும் கலையும். ரா. பி. சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 6-ஆம், 1972, ப. 122)
>
> "மொழியைப் பழித்தாரை வெகுளுதலைப் போலவே புகழ்ந்தாரை மக்கள் பாராட்டுவது இயல்பே"
> (முன்பனிக் காலம், அ. சிதம்பரநாதன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 3-ஆம். 1955, ப. 118).

---

52. It can be easily shown that all prose has some kind of rhythm, that even most Prosaic sentence can be scanned,
— Rene Wellek & Austin Warren, Op. cit., p. 163.

53. There are all kinds of gradations form almos non -rhythmical prose; from chopped sentenced full of accumulated stress to rhythmical prose approaching the regularity of verse.
— Ibid. p. 165;
prose is generally innocent of the devices which mold words into verse. indeed, descriptive prose may be spoken or written with out any regard for rhythm,
— EncycoPaedia Americana, Vol, 23, p. 480.

54. Other investigtaors of prose rhythm study only one rather distinct aspect, cadence, the concluding rhythm of sentences in the tradition of latin oratorial prose, for which latin had exact patterns with specific name.
— Rene wellek & Austin warren, Op. cit., p. 164.

55. Used well it (rhythmic prose) forces us into a fuller awareness of the text; it underscores; it ties together; it builds up gradations; suggests parallelisms; it organizes speach; and organization is art.
— Ibid. p. 165.

கூறப்படும் பொருளை முழு அழுத்தத்துடன் தரவும், கருத்துக் களைக் கோவையாக்கவும்; ஏற்ற இறக்கங்களைப் புலப்படுத்தவும், கூற்றை ஒழுங்குபடுத்தவும் ஒலிநயம் உதவுகின்றது.

> "கவிதை மனிதனின் உணர்ச்சியில் பிறந்த உண்மை; உள்ளப் பாற்கடலில் பிறந்த அமிர்த கலசம், மனித உள்ளம் யதார்த்த (Realistic) உலகத்துடன் ஒன்று பட்டோ, பிரிந்தோ கண்ட கனவு. அது உள்ள நெகிழ்ச்சி யிலே, உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படு கிறது. அதுதான் கவிதை"
>
> (புதுமைப்பித்தன் கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலை யம், மதுரை, 4-ஆம், 1978, ப. 65).
>
> "இன்னும் அது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்போது அவர் என்னைப் பார்க்க வந்ததும் நான் அவர் கரத்தைப் பிடித்து நெருக்கியபோதும் ஞாபகம் வந்தது"
>
> (சத்யாக்ரகி, சி. சு செல்லப்பா, எழுத்து பிரசுரம், சென்னை, 1964, ப. 111)

பொருளுக்குத் துணைபோகி ஒலிநயம் அமையும்போது, உயிர்த் துடிப்புள்ள குரலின் தன்மையும் ஒரு மக்கட் சமுதாயத்தின் மன நிலைப் புலப்பாடும் கொள்ளும் [56] என்பது இங்குச் சுட்டத்தக்கது. அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி, ஒத்த ஒலியின் சொற்கள் தொடர்ந்து வரல், போன்று பல கூறுகள் ஒலிநயத்துக்குத் துணை போகலாம்.

> "நான் ஏழை ஆக ஆக, கடன் படப்பட, கொஞ்சம் வரு வாய் உள்ளவர்கள் நண்பர்களைப்போல் இருந்தவர்கள் எல்லாம் மெல்ல மெல்ல என்னை விட்டு விலகு கின்றார்கள்"
>
> (கி.பி. 2000, மு. வரதராசன், தாயக வெளியீடு, சென்னை 7-ஆம், 1973, ப. 20)

பொருளும் வடிவமும் போலவே வெளியீடும் உரைநடையில் பன்மை காட்டுகின்றது. இப் பொது நடைக்கூறுகள் போலவே,

56. Rhythm becomes an adjunct to meaning when prose conveys the mood of a people or the quality of a living voice.
—Encyclopaedia Americana, Vol. 23, P. 480

வகைக்கேற்ற தனி நடைப் பான்மைகளும், ஆசிரியருக்கேற்ற நடைத் தன்மைகளும் புலப்பட வாய்ப்புண்டு. ஒரு காலத்தில் கொடுந் தமிழ்நடை, பிறிதொரு காலத்தில் தனித்தமிழ் நடை எனக் காலக் கோட்பாடும் தேரலாம். சமயம் பொருளாகிய போதுள்ள நடை, புனைகதை பொருளான போதைய நடை எனப் பொருண்மையடிப் படையிலும் காணலாம். இவ் வாறே முன்சுட்டிய பிற கூறுகளிலும் அணுகலாம்.

அன்றியும், மொழிபெயர்ப்பு வாயிலாகத் தமிழுக்கு வந்த இலக்கியங்களின் நடையும் சிந்திக்கப்படக் கூடும். மொழிபெயர்ப் பில் கருத்துத் தெளிவு முதன்மை பெறுவதால், பெரும்பாலும், பெயர்ப்புகள் தெளிவான எளிய நடை கொள்கின்றன. வடமொழி யினின்று பண்டிதமணி தந்த சுக்ர நீதி, பொருள்நூல் போன்றன இங்குச் சுட்டத் தக்கன. முதனூல் நடைபோன்றே பெயர்ப்பு தென்படுவது குறிக்கத் தக்கது.

> "வினை முடிவிற் றுன்பம் விளைவிப்பனவும், தோற்ற மாத்திரத்திற் மனத்தைக் கவர்வனவுமாகிய புலன்களின் வயப்பட்ட மனத்தையுடைய அரசன் (புலன்களின வயப் பட்டுக் கட்டுண்ணும்) யானையைப் போற் பிறரால் அகப் படுத்தப் படுவான்"
>
> (சுக்ர நீதி, சன்மார்க்க சபை, மேலை சிவபுரி, 2-ஆம்,1982 ப. கசு.)
>
> "இவ் வினையாளருள் எவன் ஓர் அரசியற் காரியத்தை அரசன் கட்டளை யிட்டவாறாதல் அதனின்றும் சிறப் பாகவாதல் செய்து முடிக்கிறானோ அவன் மேற் பதவி யையும் சிறப்பையும் பெறுவான்"
>
> (கௌடலீயம் பொருணூல், முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1977, ப. 191)

விவிலிய மொழிபெயர்ப்பின் உரைநடையும் இங்கு எண்ணத் தக்கது. கவிதைத் தன்மை இதன் வசன நடையில் உண்டு.

> "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்து கிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழி கிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது"
> (சங்கீதம், 19.1-2)

தமிழின் அமைப்புக்கு வேறுபட்ட மொழிநடை வட சொற் கலப்பு என்பன உள. காலப் பழமையுடைய உரைநடைக்கும், தற்கால நடைக்குமுள்ள இடைவெளியும் இங்கு எண்ணத்தக்கது. கருத்தை வெளிப்படுத்த வேண்டிய மொழியே, மொழி நடையே தடையாக அமைந்தது சில பண்டையுரை நடையின் தன்மையெனின், எத் தடங்கலுமின்றிப் படிப்பதை. கேட்பதை உணர முடிவதாகத் தற் கால உரைநடை அமைகின்றது.

தற்காலத் தமிழ் உரைநடையின் நிலை பற்றி ஆயும்போது, அது எத்தகு பொருளையும் சிறக்க வெளியிடும் ஆற்றலினதாகக் காட்டுவர்[57] அனைவரையும் கவரக் கூடிய மேலான (Elegant) உரைநடை தமிழிலக்கியத்தில் பயில்கின்றது. தமிழில் வேர் கொண்ட உரை, மேல் நாட்டினர் தொடர்பால் உரைநடையாகி, இன்று உரையிலக்கியமாக உயர்ந்துள்ளதால் இரு நிலையின் கோட் பாடுகளையும் இன்றியமையாது பெற்றமைகின்றது. உரைநடை யும் கவிதையும் நெருங்குவது பாரதி, லா. ச. ரா.[58] போன்ற வரிடம் அமைந்து கொள்கை வேறுபாடு கொள்வதுண்டு.

உரைநடையிலக்கிய வகைகள் சிலவாயினும் அவற்றைப் பற்றிய கல்வி இன்னும் வளர வேண்டியுள்ளது. புனைவு இலக்கியங் கள் (Fiction) பற்றிய கல்வி ஓரளவு பரந்து வளர்ந்துள்ளதே யன்றிப் பிற இன்னும் விரிவுபட்டிலது. புனைவிலி இலக்கியங் களிலும் ஒருசிலவகைகள்கோட்பாட்டாய்வுக்கு உட்பட்டுள்ளன[59] வெனினும், கட்டுரை போன்றனவும், சொற்பொழிவு போன்று காற்றுடன் கலந்தனவும் இலக்கியத் தன்மை புலப்படவும் இலக் கியமாகுமாறும் ஆயப்பட வேண்டியனவாம். அந்நிலையில், 'கற்போனுக்கு, நிலைத்த சுவை பயப்பதாயும், கால, இட, மொழி எல்லைகளைக் கடந்து நிலைபேறுடையதாயும் அமைவது இலக்கியம்[60] எனும் கோட்பாடு தெளிவுற முடியும்.

---

57. Tamil Prose is an adequately powerful tool for any work that may be asked for.
—Some landmaks in the history of Tamil prose, R. E. Asher University of Madras, 1973. P. 48.
58. லா. ச. ராமாமிருதம், புத்ர, சென்னை 1975.
59. கே. பகவதி அம்மாள், பயண இலக்கியம், தமிழ் இலக்கியக்கொள்கை கருத்தரங்கு-101.
ச. சிவகாமி வாழ்க்கை வரலாற்றிலக்கியம்,—,,—103
ந. கடிகாசலம், கடிதவிலக்கியம், ,—,,—102.
60. தமிழ் இலக்கியக் கொள்கை,—8, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983, ப. 1.

# நூற்றொகை

## 1. தமிழ்


1. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, மா. இராசமாணிக்கனார், பாரிநிலையம், சென்னை, 1978.
2. உரைநடைத்திறன், சூ. சோசபு சுந்தரராசு, எழிலரசுப் பதிப்பகம், பாளையங்கோட்டை, 1973.
3. உரையாசிரியர்கள், மு. வை. அரவிந்தன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968.
4. தமிழ் உரைநடை, அ. மு. பரமசிவானந்தம், தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 1959.
5. நடையியல், ஜெ. நீதிவாணன், முல்லை வெளியீடு, மதுரை, 1979.
6. நடையியல், அறிமுகம், இ. சுந்தரமூர்த்தி, அன்பு நூலகம் சென்னை, 1978.
7. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி, அ. மு. பரமசிவானந்தம், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், சென்னை, 1966.
8. புதிய உரைநடை, பண்பும் பயனும், மா. இராமலிங்கம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.
9. முஸ்லீம்களின் தற்காலத் தமிழ் உரைநடை, செ. பசுலு முகியிதீன், பசுமை பதிப்பகம், நாகர்கோயில், 1977.
10. வளரும் தமிழ், சோமலெ, பாரிநிலையம், சென்னை, 3-ஆம் ப. 1968.


## 2. ஆங்கிலம்


1. Essays in Stylistic Analysis,
   (ed) Howards Baff, Harcourt Brace Jovanovich Inc., New York, 1972.
2. Literary Appreciation
   Peter Westland, Teach Yourself books, The English Universities Press Ltd., London, 5th, 1966.
3. Modern Essays on Writing and Style,
   Paul C. Wermuth, Holt Rinehart and Winston INC, New York, 2nd, 1969.

4. Modern Prose Style,
Bonamy Dobree, Oxford, 2nd, 1964.

5. On English Prose.
James R. Sutherland, Canadian Uuiversity Papar books, Canada. Re, 1965.

6. Some Landmarks in the history of Tamli Prose,
R. E. Asher, University of Madras, 1973.

7. The Criticism of Prose,
S. H. Burton, Longman, London, 3rd, 1976.

## கட்டுரை

### 1. தமிழ்

1. உரைநடை நாடக உரையாடல் திறன், இலக்கிய உணர்வுகள், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978, பக். 119-148.

2. கட்டுரைக் கலை
புதுத் தமிழ் முதல்வர்கள், சாலை இளந்திரையன், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972, பக். 9-47.

3. தமிழ் உரைநடை வளர்ச்சி,
தற்காலத் தமிழ்இலக்கியம், இரா. தண்டாயுதம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973, பக்.1-29.

4. புனைவிலியுரை நடை,
திராவிட மொழியிலக்கியங்கள், ச. வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

5. வசன நூல்களும் உரையும் (செ. வைத்தியலிங்கன்)
என்பதில் தமிழ், (பதி) ச. வே. சுப்பிரமணியன், ர. விஜயலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1982, பக். 156-183.

### 2. ஆங்கிலம்

1. Dr. MU. VA as a letter writer
Dr. MU. VA., (ed) S. V. Subramanian, A. A. Manavalan, International Institute of Tamil Studies, 1975. PP. 101-116

2. Dr. MU. VA as an Essayist
Ibid, pp. 179-188.

3. Dr. MU. VA's Biographical Writings,
Ibid, pp. 137-142.

4. Prose
The Contribution of European Scholars to Tamil, K. Meenakshisundaram, University of Madras 1974, pp. 278-316.

5. The Study of the Essay
An Introduction to the study of Literature, W. H. Hudson, George G. Harrap & Co. Ltd., London, Re, 1970.

# 2

# வாழ்க்கை வரலாற்றிலக்கியம்

டாக்டர். ச. சிவகாமி

## முன்னுரை

*'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'* (புறம்:165)

என்பது பண்டைத் தமிழ்ச் சான்றோர் கூற்று. நிலையாமையைத் தன் இயல்பாகக் கொண்ட இவ்வுலகில், நிலைபேற்றை விரும்பிய ஆன்றோர் அதற்காகத் தம் புகழை நிலைநிறுத்தித் தாம் மறைந்தனர். இது வழி வழி வரும் உண்மையாகும். அவர்கள் இலக்கியங்களில் ஏற்றம் பெற்றும் வாய்மொழிக் கதைகளில் இடம் கொண்டும், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் காட்சியளித்தும் தமது அரிய பெரிய கண்டுபிடிப்புகளின் வழித் தம்மை நினைவூட்டிக் கொண்டும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்றனர். இவை அனைத்தினையும்விட 'வாழ்க்கை வரலாறு' சற்று விரிந்த அல்லது முழுமை நிலையில் இவர்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பொழுதுபோக்கு இலக்கியமாக மட்டுமே அமைந்து விடாது, கற்பாருக்கு ஏதேனும் ஒரு விதத்திலாவது பயன்படுவது இதன் சிறப்பு. எழுதப் படிக்க மட்டுமே அறிந்த எளிய கல்வியறிவுடைய பாமரர் முதல், சிறுவர், இளைஞர், மாணாக்கர், பெரியோர் என எத்திறத்தோர்க்கும் ஏற்புடையதாக அமையும் பெருமையும் கொண்டது இவ்விலக்கியம். நோக்க நிலையில் அறவிலக்கியத்துடன் தொடர்பு கொள்ளும் புகழும் படைத்தது.

இத்தகு மேன்மை கொண்ட இவ்விலக்கிய வகையின் இயல்பு, சிறப்பு போன்றவற்றை விளக்க முயல்கின்றது இக்கட்டுரை.

## வாழ்க்கை வரலாறு-சொற்பொருளாய்வு

இருத்தல், முறைமை எனும் பொருள்களையுடைய வாழ்[1] எனும் சொல்லினைப் பகுதி (வேர்ச் சொல்)யாகக் கொண்டது வாழ்க்கை. இது வாணாளைக்[2] குறிக்கிறது. இதனுடன் தொடர்புடைய வாழ்வு எனும் சொல் நல்வாழ்க்கை, உயர்ந்த பதவி, செல்வம், முறைமை போன்ற பொருள்களைக் கொண்டமைகிறது.[3] வரலாறு என்பது நிகழ்ச்சி முறை, பூர்வ சரித்திரம், விவரம், உதாரணம் எனப் பொருள்படுகிறது[4] இவற்றை நினைவிற் கொண்டு வாழ்க்கை, வரலாறு எனும் சொற்களின் இணைவில் தோன்றியுள்ள வாழ்க்கை வரலாறு எனும் தொடருக்குப் பொருள் காணின், பிறருக்கு எடுத்துக் காட்டாக அமையும், வாணாளை முறைமையாகக் கழித்த ஓர் நல்வாழ்க்கையின் கடந்தகால சரித்திரத்தினை முறைப்படுத்தியுரைத்தல் எனக் கொள்ளலாம். சமுதாய முன்னேற்றத்தினைத் தம் உணர்வில், செயலில் கொண்டு பிறருக்கு எவ்வகையிலேனும் உதவியாக அமையும் வாழ்க்கையினை நல்வாழ்க்கை எனலாம். இத்தகைய வாழ்க்கைகளே வரலாறு படைக்கின்றன என்பதில் தவறில்லை. ஆங்கிலச் சொல்லான 'Biography' என்பதன் நேர்பொருளைக் கொண்டதாக 'வாழ்க்கை வரலாறு' என்பது அமைகிறது.[5] எனினும் இவ்வகை இலக்கியங்கள், வாழ்க்கை வரலாறு என்பதனுடன் வரலாறு, சரிதை, சரிதம், சரித்திரம், வாழ்வு, வாழ்க்கை, வாழ்க்கைக் குறிப்புகள், வாழ்க்கைக்காவியம், விளக்கம், வைபவம் கதை, அனுபவங்கள், விஜயம், சிந்தாமணி, ஜீவியம், லீலை

---

1. Tamil Lexicon Vol. VI. University of Madras.
2. ,, ,,
3. ,, ,,
4. ,, ,,
5. 'Bio' is a prefix from the Greek word 'Bios' which means life, and graphein means 'to write And therefore Biography is a written record of the life of an individual.
   Grace Selvaraj Literary Heritage of the Tamils; S. V. Subramanian, N. Chadigachalam (ed); 1981; International Institute of Tamil Studies; Madras; p.760.

தரிசனம், நினைவுகள், நிகழ்ச்சிகள், புராணம் போன்ற சொற்களாலும், தொடர்களாலும்[6] குறிப்பிடப்படுகின்றன.

வாழ்க்கை எனும் சொல்லை நாம் தொல்காப்பியத்திலேயே காண்கின்றோமாயினும்[7] தொடக்க காலத்தில் சரிதை, சரித்திரம் எனும் சொற்களாலேயே மிகுதியாக இவ்விலக்கியம் குறிக்கப்பட்டுள்ளது. மொழிப்பற்றின் விளைவாக வாழ்க்கை வரலாறு என மாற்றம் கொண்டது எனலாம். எனினும் அவற்றின் பயிற்சி குன்றியுள்ளதே தவிர முற்றிலுமாக மறைந்து விடவில்லை. கிடைக்கும் நூல்களைக் கருத்துட்கொண்டு நோக்குகையில் பக்கீர் மொஹிதீன் என்பார் 1875இல் எழுதி வெளியிட்டுள்ள 'நபிகள் வரலாறு' எனும் நூலுள் வரலாற்றினையும், 1893இல் எழுதி வெளியிட்டுள்ள 'முகமதின் வாழ்க்கைச் சுருக்கம்' என்பதனுள் வாழ்க்கையையும் முதலாவதாகக் காண்கின்றோம். இவற்றின்

---

6. பங்கிம் சந்திரர் வாழ்க்கை வரலாறு-கோ நண்டராமன்.
சுப்பிரமணிய பிள்ளை வரலாறு-ஈசுவர மூர்த்தியா பிள்ளை.
தமிழ் நாவலர் சரிதை-
அய்யாப்பிள்ளையின்மெய்யானசரிதம்-சாமிதாஸ்பிள்ளை.
கிளைவ் சரித்திரம்-கதிர்வேலுப்பிள்ளை
மேதைகள் வாழ்விலே-ஆர். சண்முகம்
ரவீந்திர நாத டாகுர் வாழ்க்கையும் கவிதையும் - கி. சந்திரசேகரன்
திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள்-திரு.வி.க.
அம்மா (அன்னை சாரதா தேவி (வாழ்க்கைக் காவியம்) ரா கணபதி
இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி—வாழ்க்கை விளக்கம்) —புரவலன்
ஸ்ரீராமாநுஜ வைபவம் - கே. எஸ். நாராயண ஐயங்கார்
பன்னிரண்டு உத்தமிகள் கதை-வி. கிருஷ்ணமாச்சாரியார்
வாழ்க்கை அனுபவங்கள்-ரா. பாலகிருஷ்ணன்
சங்கர விஜயம்-தொ. வேலாயுத முதலியார்
உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி-இ. மு சுப்பிரமணிய பிள்ளை
சண்முகநாத கவிராயர் ஜீவிய விருத்தாந்தம் - எஸ். டி. இரத்தினம்
பாரதி லீலை-க. சக்திதாசன் சுப்பிரமணியன்
தாகூர் தரிசனம்-கல்கி
இளமையின் நினைவுகள்-அ. மு பரமசிவானந்தம்
சுவையான நிகழ்ச்சிகள்-அன்புப்பழம் நீ
புலவர் புராணம்-தண்டபாணி சுவாமிகள்

7. வருத்தமிகுதி சுட்டுங்காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம் (1172)

மூலமாக இவரால் 'வாழ்க்கை வரலாறு' என்பது கருத்தளவில் தோற்றுவிக்கப்பட்டதாக ஊகிக்கலாம். 1951-இல் வெளிவந்துள்ள கோதண்டராமனின் 'பங்கிம்சந்திரர் வாழ்க்கை வரலாறு' எனும் நூலே முதலில் இவ்விரு சொற்களும் இணைந்த நிலையில் தன் தலைப்பினைக் கொண்டுள்ளது. ஆயினும் இத்தொடராட்சி வழக்கில் இதற்குப் பல ஆண்டுகட்கு முன்பே வந்துவிட்டது என்பதனை உ.வே சா. கூற்றால் அறியலாம்.[8]

## வாழ்க்கை வரலாறு-விளக்கம்

வாழ்க்கை வரலாற்றிலக்கியம் இருநூற்றாண்டுகளில் நன்கு வளம் கொண்டுள்ள போதும், அது பற்றிய ஆய்வு மிக அருகியே காணப்படுகிறது. எனவே வாழ்க்கை வரலாறு என்றால் என்ன என்பதற்குரிய விளக்கமும் ஒரு சிலரிடம் மட்டுமே அமைகிறது. 'ஜாதகம் முதல் இரங்கற்பாட்டு வரையில் ஒன்றுவிடாமல் எழுதுவது தான் சரித்திரம் என்ற நினைப்பு மாறிவரும் காலம் இது. ரஸமான சம்பவங்களைக் கோவைப்படுத்தி, அச்சம்பவங் களினூடே சரித்திர நாயகரின் இயல்பு கரந்து நிற்கும்படியாக எழுதுவதைச் சிறந்த சிருஷ்டியென்று மதிக்கும்காலம் இது' எனும் கி. வா. ஜகந்நாதனின் கூற்றில்[9] இவ்விலக்கியத்திற்கு விளக்கம் அளிக்கும் நிலை தெரிகிறது. 'நாட்குறிப்பும் பிறவும் ஒழுங்கு முறையில் அமையாத ஒன்றை வரலாறு அல்லது சரிதம் என்று எப்படிக் கூறுதல் கூடும்?[10] எனும் வினாவிலும் வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனை அமைகிறது.

'உண்மை நிகழ்ச்சிகளையும் அவைகளின் புதிய வடிவங்களை யும் கொண்டு மனிதாபிமான நோக்கோடு கோத்து அமைக்கப் படும் ஒரு தனிமனிதக் கதையே வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது' என்பது ஆய்வாளர் ஒருவரின் கருத்து.[11] செய்திகளை முழுமையாகவும் சரியாகவும் நுணுக்கமாகவும் சுவைபடவும் சொல்வதே சரியான வாழ்க்கை

8. 'இவர் புகழ் பரவியுள்ள இத்தமிழ் நாட்டில் இவர் வாழ்க்கை வரலாறு விரிவாக வழங்க வேண்டுமென்பது என் அவா.' உ. வே. சாமிநாதையர், வித்துவான் தியாகராச செட்டியார்; பக். 3 பதி. 1942.
9. முன்னுரை; வ. வே. ஸு. ஐயர்; தி. சே. சௌ. ராஜன்.
10. திரு வி.க; திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் 1969; கழகம்; முன்னுரை
11. சாலினிஇளந்திரையன்; வாழ்க்கை வரலாற்றுஇலக்கியம்; சூலை 1974, சென்னை: தமிழ்ப்புத்தகாலயம்; ப. 62

வரலாற்று நூலாகும். என்பது மற்றொருவரின் மதிப்பாகும்.[12] ஆயின் தனித்த முழுநிலை விளக்கத்தை இவற்றில் காண இயல வில்லை.

இக்கருத்துகள் அனைத்தினையும் ஒருங்கிணைத்துப் பார்க்குங் கால், வாழ்க்கை வரலாறு என்றால் என்ன என்பதற்கு ஒரு முழுமையான விளக்கம் பெறமுடிகிறது ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தினையும் அவற்றின் சிறப்புத் தெளி வாகப் புலப்படும்படியும் காலக்குறிப்புகளுக்குப் பெருமை யளித்தும் உண்மைக்கு முதன்மையளித்தும், கோவைப்படுத்தி இலக்கிய நயம்படும்படி உரைக்க வேண்டும். அக்காலை அவற்றினூடே வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பண்பு மிளிரும் படியும் செயல்கள் விளக்கம் பெறும்படியும் படைக்கும் பொழுது வாழ்க்கை வரலாற்றிலக்கியம் மலர்கிறது எனலாம்.

## வாழ்க்கை வரலாறும் பிற துறைகளும்

தன் பண்பாலும், பொருளாலும் வாழ்க்கை வரலாறு, வரலாறு, அறவிலக்கியம் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண் டமைகிறது. அவற்றினின்றும் வாழ்க்கை வரலாறு தனித்து வேறு பட்டு நிற்குமாறு இங்கு விளக்கப்படுகிறது. உண்மை நிகழ்வுகளின் விளக்கமாகவும், காலக்குறிப்புடனும், குறிப்பிட்ட ஒருவரின் செயல்களை உள்ளடக்கியதாகவும் மிளிர்வது வரலாறு-எனும் நிலையில் இரு வரலாறுகளும் ஒன்றுபடுகின்றன. வரலாற்றில் அரசியற் பணியில் ஈடுபட்டோர் வரலாறுகள் மட்டுமே இடம் பெறுகின்றன. வாழ்க்கை வரலாற்றில் எத்துறையைச் சார்ந்த வரும் தலைவராகலாம். அங்குத் தனிப்பட்ட மனிதன் செய்த போர்ச் செயல்கள், அறச்செயல்கள், நாட்டு முன்னேற்றத்திற்குரிய அவன் பணி போன்றன மட்டுமே இன்றியமையாத இடம் பெறு கின்றன. அவனது அரசியல் எனும் பொது வாழ்வுடன் அவனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக்கொண்டதாக அமையும் தனி மனித வாழ்க்கை, வாழ்க்கை வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. வரலூற்றில அவனுடன் பொது வாழ்வில் துணைகொண்டோர் பற்றிய குறிப்புகள் காணப்படலாம். ஆயின் வாழ்க்கை வரலாற்றில் அவனின் ஒவ்வொரு செயலிலும் துணை நின்றோர், தொடர்புடையோர் பற்றிய குறிப்புகள் பரவலாக இடம் பெறு கின்றன. நிலையான சின்னங்கள், உண்மைக் குறிப்புகளாக

12. சி. சு. செல்லப்பன் (அணிந்துரை) இலக்கிய ஜோதி; மது. சு. விமலானந்தம்;

அமையும் ஆவணங்கள் போன்றவற்றிலிருந்து வரலாறு வடிக்கப் பெறுகிறது. தலைவனின் நாட்குறிப்புகள், உடன் உறைந்தோர் தரும் எண்ணங்கள், தகவல்கள், அவனைப் பற்றிப் பிறர் எழுதி வைத்துள்ள கருத்துகள், அல்லது தானே உடன் பழகி அவனது பெருமை, சிறுமைகள் உணர்ந்தது போன்ற பலவற்றின் துணையுடன் வாழ்க்கை வரலாறு உருவாகின்றது. வரலாற்றாசிரியனுக்கு நிகழ்ச்சிகளைக் காலக் குறிப்புக்கு ஏற்ப வரிசைப்படுத்தி, அவற்றில் குழப்பமின்றி தருதலே வேலை. வாழ்க்கை வரலாற்று ஆசிரியனோ அவற்றைச் சிறப்புறத் தருவதிலும், சுவைபடத்தருவதிலும் தன் புலமையை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

ஒருவரின் வாழ்க்கை செம்மையுறுவதற்கான வழிமுறைகளைத் தந்து எப்படி வாழ்க்கை அமையவேண்டும் எனப் போதிப்பதைத் தன் பெருமையாகக் கொண்டது அறவிலக்கியம். இதனைத் தன் நோக்கங்களுள் ஒன்றாக வாழ்க்கை வரலாறும் கொண்டுள்ளது.[13] அறவிலக்கியம் தன் கூற்றை,

'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த பின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்,

என்பது போன்று வற்புறுத்தலாக அமைக்கின்றது.[14] வாழ்க்கை வரலாறு பெரும்பாலும் கூறிச் செல்லும் விதத்தில் அவ்வுணர்வினைக் கற்பார் பெறும்படிச் செய்கின்றது. அங்கே வாழ்நெறி நேரிடையாக அறிவுறுத்தப்படுகிறது. இங்கே வாழ்க்கை வரலாற்றுத் தலைவனின் வாழ்க்கையின் சிறப்பு கொண்டு உணர்த்தப்படுகிறது. அங்கு அறிவுறுத்தலே இயல்பாக அமைய இங்கு அது ஒரு கூறாக மட்டுமே அமைகிறது. பல் சுவைகளும் இணைந்ததாக வாழ்க்கை வரலாறு அமைவதினால் கற்பாரின் சிந்தனையைத் தம்பால் ஈர்ப்பதில் அறவிலக்கியத்தைவிட இது முன்னிற்கிறது.

---

13. எனது வாழ்க்கை பல இயக்கங்களிலும் தொண்டுகளிலும் ஈடுபட்டது. அவைகளில் நல்ல நிகழ்ச்சிகளும் இருக்கும், தீய நிகழ்ச்சிகளும் இருக்கும். நல்லன கொண்டும் தீயன விலக்கியும் மற்றவர் வாழ்தற்கு என் வாழ்க்கைக் குறிப்புக்கள் ஓரளவிலாதல் துணை புரியும் நம்பிக்கை இதை எழுதுமாறு என்னை உந்தியது. மற்றவர் வாழ்க்கைக்குத் துணை போகும் நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில் நல்ல வழியிலோ தீய வழியிலோ உறாதிருப்பின், இந்நூலை எழுதும் முயற்சியில் யான் தலைப்பட்டிரேன்.
திரு.வி.க. மேற்படி' நூல்; பக். 7
14. குறள். 303

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தைப் புதினத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கும் காணப்படுகிறது.[15] எந்த ஒரு இலக்கிய வகையினை எடுத்துக் கொண்டாலும் அங்கு வாழ்க்கை நிகழ்வுகள் இடம் பெறுதலானும் புதினம் முற்றிலும் கற்பனைக்கே சிறப்பிடம் அளித்தலானும் இவ்வொப்பாய்வின் தேவை வினாவிற்குரியது.

## வாழ்க்கை வரலாறு இலக்கியமாதல்

இலக்கியம் படைப்பாளரின் கற்பனைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொழுது, உண்மைக்கே சிறப்பளிக்கும் வாழ்க்கை வரலாறு இலக்கியம் ஆகுமா என்ற ஐயம் எழலாம். 'இலக்கியமே வாழ்க்கை ஆராய்ச்சி, 'literature in the criticiam of life' என்னும்போது வாழ்க்கை ஆராய்ச்சியும் இலக்கியம் ஆகும். என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமின்று'[16] எனும், வாழ்க்கை வரலாறு படைப்பாளர் கருத்து இவ்வையத்தைத்தடைசெய்கிறது.

ஆய்வு முறையிலும் இவ்வையத்தை மறுத்துரைக்க வியலும் இலக்கியத்தினைக் கூறப்புகுமுன் இலக்கியப் புலவர்கள் காப்பு, கடவுள் வணக்கம், ஆசிரிய வணக்கம் முதலானவற்றை நவில்வது போன்று இவ்வகையிலும் அமைதல் உண்டு. இதனை உ. வே. சாமிநாதையரின் கோபாலகிருஷ்ண பாரதியார், தி. ஏ. ராஜரத்னம் பிள்ளை படைத்த சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்போன்ற ஒருசில நூல்கள் தருகின்றன நாடு, நகர் வளம் காணல்,[17] வருணனை,[18] எண் சுவைகள்[19]

---

15. மது. ச. விமலானந்தம்; வாழ்க்கை இலக்கியம்-ஒரு வளர் கலை; மு. ப. 1981, தஞ்சாவூர்; விஜய் வெளியீட்டகம், பக். 10-11.
16. சி. இலக்குவனார். என் வாழ்க்கைப் போர்.
17. 'பாரதத்தின் தென்கோடியில் இருக்கும் கன்னியாகுமரி, பண்டைக்காலம் தொட்டு ஒரு புகழ் பெற்ற புனிதஸ் தலமாகும். இமவான் பெற்ற மகள் பார்வதிதேவி, கன்னிப்பெண் கோலத்தில் தவமிருக்கும் இடமாதலால், அதற்குக் கன்னியாகுமரி என்று பெயர் வழங்கலாயிற்று. எல்லாவற்றிற்கும் மேலாக, இயல்பிலேயே அமைந்துள்ள இயற்கைக் காட்சி ஒன்றை, கன்னியாகுமரியைத் தவிர இப்பூமண்டலத்தில் மற்றெங்கும் காண்பதரிது, கதிரவனின் உதயக்காட்சி காலையில் கண்கொள்ளாக் காட்சி, அதன் வர்ண ஜாலங்களைக் கண்டு களிக்கக் கண் கோடி வேண்டும். இந்த உதயசூரியனின் அழகைக் கண்டு ரசித்துவிட்டு, அதே இடத்தில் நின்றபடி மாலைச் சூரியன் மேல்திசைக் கடலிலே போய் மறையும் காட்சியைக் காலமெல்லாம்கண்டு இயற்கையழகைப்பருகிக்கொண்டே இருக்கலாம்'' அம்புஜம்மாள், நான் கண்ட பாரதம்; மு. ப ஆக. 1973; சென்னை, ஸ்ரீனிவாஸ காந்திநிலையம்; ப. 1,

படைப்பாளர் இடையீடு[20] என்பன போன்ற பல இலக்கிய நயம் தரும் கூறுகள் இதனுள்ளும் பரந்திருக்கக் காணலாம். மற்றும் நூலின் தொடக்கம், வெளியீடு, போன்றவற்றிலும் இலக்கிய உத்திகள் பலவற்றைக் காணலாம். இவற்றால் வாழ்க்கை வரலாற்றினை ஓர் இலக்கியமாகக் கொள்வதில் இடர்ப்பாடில்லை.

---

18. ''அங்கே மின்மினி போன்ற விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் கிழவருடைய முகமும் அவர் நெற்றியில் அணிந்திருந்த விபூதியும் பளிச்சென்று தெரிந்தன. அவர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். அந்தக் கண்ணாடியும் கிழவரைப் போலவே பருவம் முதிர்ந்து பல வருஷங்களாக உபயோகப்பட்டு வந்தது. அக்கண்ணாடியின் இரண்டு பக்கங்களிலும் கயிறுகளைக் கோத்து அவற்றைப் பின்புறத்தில் குடுமியிலே அவர் கட்டியிருந்தார். அவர் குனிந்து குனிந்து சுவடியைப் பார்ப்பதும் பிறகு நிமிர்ந்து நிமிர்ந்து பிரசங்கம் செய்வதுமாக இருந்தார். அப்படி நிமிர்ந்து வாயைத் திறந்த போது அதில் இருந்த பற்களிற் பல முன்பே விடைபெற்றுக்கொண்டனவென்று தெரிந்தது''
உ. வே. சாமிநாதையர்; வித்துவான் தியாகராச செட்டியார்; மு. ப. சூலை 1951; சென்னை கலைமகள் காரியாலயம்; ப 47.

19. ''பிரிட்டிஷ் மக்கள் நல்கும் ஆதரவு மூலம் இடுக்கண் எதுவும் இன்றி வாழலாம் என்னும் கருத்தில் அவர்களிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். சர்வதேச சட்ட திட்டங்களை மதியாது அவர்கள் என்னைக் கைதியாக்கி விட்டார்கள். நான்கு வல்லரசுகள் தனி ஒரு மனிதன் மீது தங்கள் வல்லமையைக் காட்டுகின்றன. இந்தப் பாறையில் என்னை அவர்கள் சிறை வைத்தது எவ்வளவு நாணப்படத்தக்க செயல்! எந்தெந்த வகையில் எல்லாம் என்னைச் சித்திரவதைக்கு உள்ளாக்கவேண்டுமோ அந்த வகையில் உள்ளாக்கி விட்டார்கள். திட்டம் போட்டு மெல்ல மெல்லச் சித்திரவதை செய்து என்னைக்கொன்று விட்டார்கள்! கொலைகாரக் கவர்னர் ஒருவனை என்னைக் கொல்லும் பொருட்டு உங்கள் அமைச்சர்கள் நியமித்து விட்டார்கள் —ஆ. லெ. நடராஜன், மாவீரன் நெப்போலியன்; மு. ப. நவ. 1978; சிதம்பரம்; மணிவாசகர் நூலகம்; பக் 321-322.

20. 'அண்ணன் தம்பிகள் ஏழுபேர் இருந்தாலும் எழுவரையும் தாய் நாடே, உன் பலி பீடத்தில் ஏற்ற நான் தயார்! என்று சாவர்கர் பாடினார் அல்லவா? தாய் நாட்டுக்காக அண்ணனையும் தம்பியையும் சிறைக்கு அனுப்பிவிட்டு அவரும் சிறை புகுந்துவிட்டார். அத்தாய் நாடு அப்போது அவருடைய குடும்பத்தைக் கவனித்த அழகைப் பார்ப்போமா;—எம். வி. வெங்கட்ராம்; நாட்டுக்கு உழைத்த நல்லவர்-வீரசாவர்கர். மு. ப. 1970; சென்னை; பழனியப்பா பிரதர்ஸ், ப. 53.

தக்கான் ஒருவனின் வாழ்க்கையானது நடுநிலை நோக்குடைய எழுத்துக் கலைஞன் ஒருவனின் கவனத்துக்கு உள்ளாகும்போது வாழ்க்கை வரலாறு என்னும் இலக்கியப் படைப்பு உருவாகிறது.[21] எனும் கூற்றும் இவண் சுட்டற்பாலது.

## வாழ்க்கை வரலாற்றின் வரலாறு

குறிப்பிட்ட ஒருவரின் வாழ்க்கை நிகழ்வுகளை வெளியிடுதல் என்பது தொன்று தொட்டு வரும் மரபாகும். இன்று மிகப்பெரிய ஆலமரமாகச் செழித்தோங்கி நிற்கும் வாழ்க்கை வரலாற்றின் வித்தினைத் தொல்காப்பியத்துள் காணமுடிகிறது. பொருளதிகாரத்துள்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று வகையில் கல்லொடு புணர (60)

எனச் சொல்லப்பட்ட நடுகல்லானது நமக்குக் கிடைக்கும் முதல் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு பற்றிய செய்தியாகும். இதனுள் மறைந்த வீரனது பெயரும் செயலும் பொறிக்கப்படுதலை,

நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி, அதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம்: 67)

என்பதால் பெறலாம். இவ் உண்மையை நமக்குக் கிடைக்கும் நடுகல்கள் உணர்த்தி நிற்கின்றன.[22]

---

21. சாலினி இளந்திரையன்; மேற்படி நூல்; பக். 23-24
22. அரிமிதைய மாவலி வாணராயரின் தகடூர் நடுகல்
ஸ்வஸ்திஸ்ரீ அரிமிதைய மாவலி வாணராயர்
கங்கநாடும் புறமலை நாடும் கோயினூர் நாடும் கோவூர்
நாடும் தாயனூர் நாடும் பற்றநாடும்...
அவர்க்குத் தாநாகிப் பிள்ளை கொண்டுள் புகுந்து
வஞ்சித்து நாடு கொண்டா னுலிம்பன்
அவர் போரிற் றுஞ்சின பின்லைத்
தேவிமார் கருப்பிணி யருளராக
அவளைக் காத்திருந்தான் பிள்ளைப் பெறுவதுந்
தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து
நாடு பாவிநார் சங்கர குட்டியார்
அவரோடுடன் புகுந்து
தகடூரில் பட்டார்
நாகந்ஊத சிறு குட்டியார்
கல் நாடு.
கல்வெட்டு (ஓர் அறிமுகம்); நடன காசிநாதன், கு. தாமோதரன் (தொகு); மு.ப. 1973; சென்னை, தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

சங்கத் தமிழில் புறப்பாடல்கள் பரவலாகத் தன் வரலாற்றுக் குறிப்புகளையும்[23], பிறர் வரலாற்றுக் குறிப்புகளையும்[24] தருகின்றன. இயன்மொழி, அரசவாகை, செவியறிவுறூஉ ஆகிய மூன்று துறைகளிலும் சொல்லப்படும் செய்திகள் தனிமனிதர்களின் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் புகழ்ந்தோ கடிந்தோ விமர்சனம் செய்வதால் இந்தப் பாடல்களிலேயே வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கான மங்கலான ஓர்மை ஒன்று சிறிது சிறிதாக இதழவிழ்ந்துள்ளது. தெளிவாக விளங்குகிறது என்றும் கருதுவர்.[25] சங்கப்பாடல்களில் கிடைக்கும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைக்கொண்டு பிற்காலத்தில் முழுமையான வாழ்க்கை வரலாற்றிலக்கியம் படைக்க முயன்றுள்ளமையும் இங்கு இணைத்து நோக்கலாம்.[26]

தொடர்ந்து சிலம்பிலும் நாயன்மார், ஆழ்வார் பாடல்களிலும் தன் வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. பொதுவாகப் பக்திப் பாடல்களில் தன் அனுபவத்தை, இறைவன் தனக்கு அருளியதைக் காட்டும்பொழுது தன் வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற வழியேற்படுகிறது. இதுபோன்றே பிரபந்தங்கள், வள்ளல்கள், அரசர்கள்மீது எழும்போது அவர்களைப் புகழ்தலின் வழி அவர்களின் அருஞ்செயல்கள் குறிக்கப்படுகின்றன. அப்போதைய சூழல்,

---

23. யாண்டுபல ஆக, நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே.
—பிசிராந்தையார்; புறம் 191.

24. வென்வேல்
உருவப்பல்தேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழுகுருசில்
தாய்வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப
....................
இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித்தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ஆர் கண்ணி, கரிகால் வளவன்.
—பொருநராற்றுப்படை; 129-145

25. சாலினி இளந்திரையன்; மேற்படி; ப. 98.

26. பி.ஸ்ரீ. ஔவையார்; மு.ப. மார்ச் 1976
சென்னை; அல்லயன்ஸ் கம்பெனி.

மனநிலை கொண்டு புலவர்கள் பாடிய தனிப்பாடல்களிலும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெறுகின்றன. இடைக் காலத்தில் எழுந்த மெய்க்கீர்த்திகள் அரசனின் பிறப்பு, அவன் தேவியர் செய்த அறச்செயல்கள், பெற்ற வெற்றிகள் போன்ற வற்றைத் தருதல் முன்னவற்றினின்றும் சற்று விரிந்த நிலையில் அமைதலைக் காணலாம். பன்னிரு பாட்டியல் இதற்கு,

சீர்நான்கு ஆகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன் வரலாறு சொல்லியும்
அவளுடன் வாழ்க எனச் சொல்லியும் மற்று அவன்
இயற் பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டு எனத்
திறப்பட உரைப்பது சீர் மெய்க்கீர்த்தி (இ. 114)

என இலக்கணம் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னைப் பற்றிப் பிறர் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கிலும், மெய்க்கீர்த்திகளும், கல்வெட்டுகளும் எழுந்தமை நோக்கற் பாலது.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியாக விரித்தார். இவ்விரிவு சேக்கிழாரின் சிந்தனையைத் தூண்டிச் சிவனடியார்களின் வாழ்க்கையைப் பாடவேண்டுமென்ற ஆவலை உண்டாக்கியது. சிவபக்தியைப் பரப்புதற்கு அடியவர்களின் வாழ்க்கையை ஒரு உத்தியாகக் கையாண்டுள்ளார். அடியவர்களின் பக்தி வாழ்க்கை எனும் ஒருமுக வாழ்க்கையை இதனுள் காணலாம். இதனை வாழ்க்கை வரலாற்றிலக்கியமாகக் கொள்வதில் கருத்து வேறுபாடு களிருப்பினும்[27] ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இவ்விலக்கியத்தால் செயலாக்கப் பட்டது என்பதில் தடையில்லை. இன்னும் ஒருவரின் உண்மை வாழ்க்கையின் துணைகொண்டுப் படைப்பாளர் தம் கற்பனையை யும் இணைத்துப் படைக்கும் புனைவு வாழ்க்கை வரலாற்றிற்கு இது முன்னோடி எனலாம்.

தெளிவான காலவரையறைக்கு இயலாத பிற்காலத்தில் தோன்றிய தமிழ் நாவலர் சரிதை முழுக்க முழுக்கத் தமிழ்ப்புலவர் களின் வரலாற்றினை உலகிற்கு அளிக்கவேண்டும் என்ற நினைவில்

27. சாலினி இளந்திரையன்; மேற்படி; பக். 141-144

எழுந்தது. தனக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புலவர்களின் வரலாற்றினை அவர்களின் படைப்புகளின் துணைகொண்டும், செவிவழிச் செய்திகளைக் கொண்டும் வறையறுக்க வேண்டி யிருந்தமையால் தெளிவான காலக்குறிப்பின்மை, முழுமை யின்மை, கற்பனையின் தோற்றம் போன்ற குறைபாடு களிருப்பினும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் கன்னிமுயற்சி யாக இதனைக் கொள்வதில் தவறில்லை 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு 1736-ஆம் ஆண்டு முதல் 1760-ஆம் ஆண்டு வரையிலான செய்திகள் பலவற்றைத் தருகிறது. பலரைப் பற்றிய அறிமுகங்களையும் காணமுடிகிறது. வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலையில் இந்நூல் மிகச் சிறந்ததொரு இடத்தைப் பெறுகிறது.

இலக்கியங்களில் மட்டுமின்றி இலக்கண நூல்களில் வாழ்க்கை வரலாறு பற்றிய சிந்தனை இருந்தமையை அறிய முடிகிறது. பாட்டியல் நூல்களால் பிரபந்தங்களுள் ஒன்றாக 'வரலாற்று வஞ்சி' குறிக்கப்படுகிறது. அரசனின் வழிமரபு வரலாற்றை உரைத் தலை வஞ்சிவரலாறு என வெண்பாப்பாட்டியல் (செ. 37) கூற அதனை வரலாற்று வஞ்சியெனப் பிரபந்த மரபியலும் (18) சிதம் பரப் பாட்டியலும் (ம. 13) தருகின்றன. முத்துவீரியமும் (யா. ஒ. 111), பிரபந்த தீபிகையும் (12) இதனைச் சற்று விரித்து குலமர புடன் தலைவனின் பிறப்பு, சிறப்பு, புகழ் போன்றவற்றை வஞ்சிப்பாவில் கூறுதல் முறை என நவில்கின்றன. பிரபந்ததீபம் இதனையும் விரித்து,

> வரலாற்று, வஞ்சியே வனப்பு ஆற்றல் கல்வி
> மரபு, குலம், குடி, வஞ்சியால் வழுத்தலே(44)

எனக் காட்டுகிறது. இவ்வகையில் எந்தஇலக்கியமும் நமக்கு இன்று கிடைக்கா விடினும், இன்றைய வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் முன்னுருவமாக இஃது அமைந்திருத்தல் வேண்டும் என்பது துணிபு. வாழ்க்கை வரலாற்றில் தலைவனின் பெருமையும்- சிறு மையும் ஒருங்கே காண்டல் வேண்டப்படுகிறது. ஆயின் இங்குத் தலைவனின் புகழும், பெருமையும் மட்டுமே சிறப்பித்தல் தேவை என்பது வேறுபாடாகிறது. புலவர்கள் பெரும்பாலும் தன் காலத்தில் உறைகின்ற வள்ளலையே பாட்டுடைத் தலைவனாகக் கொள்வதாலும், அவன் முன் நூலரங்கேறுதல் வழக்காதலானும்,

புலவர் அவனிடம் பெரும்பாலும் உதவி எதிர்பார்த்து இத்தகு இலக்கியங்கியங்களைப் படைத்தலானும் இங்குச் சிறப்பு மட்டுமே சுட்டபடுகிறது எனலாம்.

இவ் வெண்ணங்களைத் தொகுத்து நோக்குழி, தமிழருக்கு வாழ்க்கை வாலாறு பற்றிய சிந்தனை தொல்காப்பியர் தாலமுதல் இருந்தது. மெய்க் கீர்த்தியில் முகம் காட்டிக் குறிப்பிடத்தக்க வகையில் அது பெரியபுராணத்தால் வளர்ந்தது. தமிழ் நாவலர் சரிதையும் ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பும் வாழ்க்கை வரலாற்றின் வளர்ச்சி நிலையின் அடுத்த நிலையில் தம்மைக் காட்டிப் பெருமை கொண்டுள்ளன எனும் இவை பெறப்படுகின்றன. இவற்றின் பின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மணம் கமழ ஆரம்பித்த வாழ்க்கை வரலாற்றிலக்கியம் இந்நூற்றாண்டில் நன்கு வளர்ச்சி பெற்று வீறுடன் திகழ்கிறது.

## முதல் இலக்கியங்கள்:

வாழ்க்கை வாறுலாறுகள் எழுதுவோர் அடிப்படையில் இரு வகைப்படுகின்றன. பிறரின் வாழ்க்கையை ஒருவர் எழுதும்போது அது (பிறர்) வாழ்க்கை வரலாறு என்றும், தன் வாழ்க்கையைத் தானேஎழுதும் போது தன்வரலாறு என்றும் அவைவழங்குகின்றன, இவ்விரண்டினையும் அடிப்படையில் இவ்வேற்றுமையே பிரித்துநிற்கின்றது. எனவே இக்கட்டுரையில் இவ்விரண்டும் இணைத்தே நோக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்கப்பிற மாற்றங்கள் தேவையான இடங்களில் ஆங்காங்கே சுட்டப்படுகின்றன.

பிறர்வரலாறு காட்டும் நூல்களுள், அறிந்த வரையில் 1871 இல் வெளிவந்துள்ள கதிர்வேலுப்பிள்ளையின் கிளைவ் சரித்திரமும், உவின்பிரெட்! ஜயரின் 'கொலம்பசுசரித்திரமும், முதலாவதாகத் தெரிகின்றன. இவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் 75 நூல்கள் வரைத் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடற்பாலது. தன் வரலாறுகள் 3 எழுந்துள்ளமையும் குறிப்பிடற்பாலது.

முதல் தன் வரலாறான குருபரதத்துவ நூல்செய்யுள் வடிவம் கொண்டது. வரலாற்றுச் சுருக்கம் முதல் சமயாதீதச் சுருக்கம் ஈறாக 29 சுருக்கங்களில் 1240 பாடல்கள் உள. பாயிரத்துடன் துவங்கி வாழ்த்துடன் முடிந்துள்ளது. கிறித்தவக் கம்பர் கிருஷ்ண பிள்ளை 1893இல் எழுதிய பாளையங் கோட்டை எச். ஏ. கிருஷ்ண

பிள்ளை கிறிஸ்துவனான வரலாறு' எனும்நூல் தன்வரலாற்றுநூல் களில் முதன்மையானது என்றும் 19- அம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய ஒரேதன் வரலாற்று நூல் இஃது என்று கருதலாம் என்றும் நுவல்வர் அதன் பதிப்பாசிரியர்.[28]

ஆயின் குருபரதத்துவ நூல் 1882இல் இயற்றப்பட்டமைநூலா சிரியரால்,

நாவில் கலியுகத்து ஆண்டு ஐயாயிரத்துட்
பதினேழு தள்ளித்தோன்றும்
மாவிசுவிற் புரட்டாசித் திங்கள் பத்தாம்
தேதி, திரவாரத் (து)அத்தம்
மேவிய நாள், வேதாந்த- சித்தாந்த
சமரசமே விளக்கும் மார்க்கம்
மூவிரண்டும் களிகூரும் குருபரதத்துவம்
திருநூல் முடித்திட்டேனே.

எனக் குறிக்கப்பட்டிருப்பதால் இதுவே முதல் நூல் என்பது வெளிப்படை. உரைநடை அமைப்பிலேயே அந்நூல் முதலில் தோன்றியுள்ளது எனலாம். மற்றும் தன் வாழ்வின் ஒரு நிகழ்ச் சியை அது முதன்மைப்படுத்தி மொழிந்து முழுமைபெறாமையும் நோக்கத்தக்கது.

இதுவரை தோன்றியுள்ள வாழ்க்கை வரலாற்று நூல்களாக 1463 எனக் குறிப்பர். அவற்றுள் பிறர் வரலாறு1436, தன் வரலாறு 27 என்றும்பிரித்துரைத்துள்ளனர்.[29] ஆயின் வரலாற்றுப் புனைவுகள், மாற்றுப்பதிப்புகள் புராண, காப்பியப்பாத்திரங் களின் வரலாறுகள் முதலானவை நீங்கிய நிலையில் தொகுக்குங் கால் ஆய்வாளருக்குப் பிறன் வரலாறுகள் மட்டும்- ஏறக்குறைய 1470 நூல்கள் கிடைக்கின்றன. அவற்றுள் மொழி பெயர்ப்புகள் 244 ஆகும் தன் வரலாறுகளின் தொகை 65 ஆகும். இவற்றுள் 33 நூல்கள் மொழி பெயர்ப்பாக அமைகின்றன. பிறர் வாழ்க்கை வரலாற்று நூல்கள் வளர்ந்துள்ளவேகம் தன் வரலாற்றில்இல்லை. சிறுகதை, புதினம் போன்று வாழ்க்கை வரலாற்று நூல்களும் நாளும் பெருகிக் கொண்டிருப்பதால் இவ்வெண்ணிக்கையும் முடிந்த முடிபாகாது.

---

28. வீ. ஞானசிகாமணி; 1978; ப.2
29. மது. ச. விமலானந்தம்; மேற்படி பக். 54-55

## வாழ்க்கை வரலாற்றின் நோக்கம்.

'அடிப்படையில் வாழ்க்கைவரலாறுகள் எழுதுவதன் உண்மையான கரணியமே மறைந்த சிறந்தோரை நினைவு கூர்தலே, நன்றி பாராட்டு முறையில் நலம் பாராட்டுதலே[30] என்ற கருத்துகளிருப்பினும் வாழ்க்கை வரலாற்றாசிரியர் தங்களின் நோக்கமாக மற்றும் பலவற்றைத் தருகின்றனர்.

1. ஒருவரை உலகிற்கு அறிமுகப்படுத்துதலும் நோக்கமாக விளங்க முடியுமென்பதைத் "தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பல வழிகளில் பாடுபடுவர்களின் பெருமையை நாடறியச் செய்ய வேண்டும் என்பது எனது நெடுநாளையை அவர், கனவுகூட; இதன் ஒரு கூறே இவ்வரலாறு எழுத எனக்கு ஆர்வம் ஊட்டியது" என்பது[31] போன்ற கூற்றுகளால் அறியலாம்.

2. கற்பாரின் ஆவலை நிறைவு செய்வதும் நோக்கமாக அமைகிறது என்பதற்கு "ஏதேனும் ஒரு துறையில் ஒருவர் புகழ்பெற்று நாலு பேருக்குத் தெரிந்தவராக இருந்தால் அவரைப்பற்றி மிகுதியாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டாவது இயல்பு. அத்தகையர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவருடைய அனுபவங்கள், அவர்களுக்குப்பிடிக்கும் விஷயங்கள், பிடிக்காதவை முதலிய செய்திகளை அறிந்துகொள்ளும் ஆவல் இப்போது பின்னும் வளர்ந்து வருகிறது. அதற்கு ஏற்றபடி பத்திரிகைகளும் கட்டுரைகளாகவும் துணுக்குகளாகவும் பெரிய மனிதர்களைப்பற்றிய சுவையான செய்திகளை வெளியிட்டு வருகின்றன". என்பது[32] சான்று.

3. வாழ்க்கை வாலாற்றுத் தலைவரைப்பற்றிய ஆராய்ச்சியும் ஒரு நோக்கமாகும் என்பதனை, "இன்றைய காமராஜ் உருவான விதத்தை ஆராய்ந்தறிய முயற்சிப்பதே இந்தவாழ்க்கை வரலாறு எழுதுவதன் அடிப்படை நோக்கம்' என்பதால்[33] பெறலாம்.

4. வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கவேண்டும் என்ற நோக்கினை,

---

30. மது. சு. விமலானந்தம்; மேற்படி, ப. 12
31. மா. சு. சம்பந்தன், திருச்சி விசுவநாதன்; முன்னுரை
32. கி. வா. ஜ. தமிழக அமைச்சர்கள்; பாணன்; சிறப்புரை
33. மு. தமிழ்வீரயுத்; காமராஜ் வரலாறு முன்னுரை

பெரியவர் சரிதை நம்மைப்
பெரியவ ராக்கி நாமே
அரியவாழ்நாளாம் பாலை
வனத்திடை யலைவோருக்குத்
துரிசற வழியைக் காட்டுஞ்
சுவடுறச் செய்யும் வன்மை
மருவிலா மென்னு மெண்ணை
மனங்கொளச் செய்யு மன்னோ

என்பது தருகின்றது[34] வழிகாட்டுதல் எதிர்மறையில் அதாவது எவ்வாறு வாழ்தல் கூடாது என்பதாகவும் அமையலாம், இதனைக் கவிஞர் கண்ணதாசன் தன் வரலாற்று நூலாகிய வனவாசத்தின் முன்னுரையில் 'எப்படி வாழவேண்டும் என்பதற்கு இது நூலல்ல; எப்படி வாழகூடாது என்பதற்கு இதுவே வழிகாட்டி' என்று நவின்றுள்ளமை கருதற்பாலது.

5. போற்றுதலும் ஒரு நோக்காக அமையலாம் என்பதனை, 'எங்கோன் வளவன் வாழ்க என்று பீடுகெழு நோன்தாள் பாடேனாயின் படுகதிர்ச் செல்வனும் தோன்றாதொழிவான்' என்று கிள்ளி வளவனைப்பற்றி ஆலத்தூர்கிழார் கூறுவது போல், தமிழர் தலைவர்-தமிழவேள்-செந்தமிழ்ப் புலவர் த. வே. உமா மகேசுவரனாரைத் தமிழராகிய யாம்போற்றா தொழிந்தால் உய்வே இல்லை, எனவே உமாமகேசுவரனாரின் வாழ்க்கை வரலாற்றைக் காண்போம், என்பது[35] உணர்த்துகிறது.

6. ஒரு குறிப்பிட்ட கொள்கையினை விளக்கும் நெறியிலும் எழலாம். இதற்கு 'ஒரு குடும்பத்தின் பெருமைக்கு, அக்குடும்பத்தாரின் ஒழுக்கமும் உழைப்புமே அளவு கோலாக அமையும். இதுவே என் தாயின் தத்துவம். இதை விளக்குவதே இக்குறிப்பின் நோக்கம்' எனும்[36] கூற்றுப் புலப்படுத்துகிறது.

7. அறமுரைத்தலும் முக்கிய நோக்கமாக அமைகிறது. 'எண்ணத்திற்குச் சக்தி அதிகம். நல்ல எண்ணங்கள் மனிதர்களை நல்லவர்களாக மாற்றுகின்றன. இத்தகைய எண்ணங்களைத் தூண்டிவிடும் கருவிகள் வாழ்க்கை வரலாறுகள். 'உயரவேண்டும் என்ற குறிக்கோள்' சிறுவர்களிடம் வளரவேண்டும். வெறும்

34. லே. ரா. சுந்தரராமன்; புகழ்பூத்த தமிழர்
35. ச. சாம்பசிவன்; தமிழவேள் உமாமகேசுவரனார், தோற்றுவாய்
36. சீ. தங்கையன், தியாகச்சுடர்-ஒரு குறிப்பு; முன்னுரை

நீதிகளைத் தொகுத்துக் கூறுவது பிஞ்சுமனங்களில் நிலைத்து நிற்பதில்லை. அதே நீதிகள் மற்றவர்களின் வாழ்க்கையில் கலந்து நிற்பதை அறிந்து, உணரும் பொழுது அவற்றால் சிறந்த பலன்கள் விளையும் எனும் இவ்வுணர்வு[37] பரவலாகக் காணப்படுகிறது.

8. ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமுதாய நிலையைக் காட்டுதலும் நோக்கமாகும் என்பதனை 'என் வாழ் நாளில் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை, குறிப்பாக மாதர் சமூகத்தில் விளைந்துள்ள மாறுதல்களை அவை நேர்ந்தவிதத்தைக் குறிப்பிட வேண்டுமென்பதே என் முக்கிய நோக்கம்' என்பது[38] புலப்படுத்துகிறது.

9. பிறர் தூண்டல் வாழ்க்கை வரலாற்றெழுச்சிக்கு நோக்கக் காரணமாவதை அகிலன், "ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னால் தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி அவர்களும் என் பதிப்பாள நண்பர் கண. முத்தையா அவர்களும் என்னிடம் தந்இ ஆலோசனையை (தன் வரலாறு படைத்தல்) வெளியிட்டார்கள் எழுதும்படி என்னை வற்புறுத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பமுடியவில்லை. அவ்வப்போது நினைவுக்கு வருவதை எழுதுவதாக ஒப்புக் கொண்டேன்' எனத் தன் 'எழுத்தும் வாழ்க்கையும்' நூலுக்குத் தரும் முகவுரையில் பகருகின்றார்.

10. இவை போன்ற எந்தக் குறிப்பிட்ட நோக்கமுமன்றி, வாழ்க்கை வரலாற்றினைச் சுவை மிகுந்த பொழுது போக்காகவும் அமைக்கலாம் என்பதை அதனையே நோக்கமாகக் கொண்டு 'என் கதை' படைத்த நாமக்கல் கவிஞர் கூற்றால் உணரலாம்'' பிறருக்கு வழி காட்டக் கூடிய முயற்சிகள் எல்லா சரித்திரங்களிலும் இருக்கமுடியாது. என்றாலும், படிப்பதற்கும் கேட்பதற்கும் ருசிகரமாகிய சம்பவங்கள் பல சரித்திரங்களில் இருக்கவே இருக்கும் அந்தச் சம்பவங்களில் அநேகம் இதுவரைக்கும் எழுதப்பட்ட சரித்திரங்கள் எதிலுமே இல்லாத அபூர்வ நிகழ்ச்சிகளாக அமைதலும் கூடும். ஆகையினால் எல்லா மனிதர்களும் அவரவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சிற்சில குறிப்பிடத் தகுந்த சந்தர்ப்பங்களையாவது எழுதி வைக்கமுடியுமானால் பொழுது போக்காகப் படிப்பதற்கேனும் எத்தனையோ இனிய "கதைகள் கிடைக்கும்" என்பதே அவர் தம் வாய்மொழி.

---

37. மா. பா. குருசாமி; செயற்கரிய செய்தோர்; முன்னுரை
38. எஸ். அம்புஜம்மாள்; நான்கண்ட பாரதம் முன்னுரை

இவற்றுள் ஏதேனும் ஒன்றினைத் தம் நோக்கமாகக் கொண்டே வாழ்க்கை வரலாற்றிலக்கியங்கள் எழுகின்றன. இவ்விலக்கியம் இன்னும் பலவாகப் பெருகி நிற்பதற்கு இவ்வடிப் படை நோக்கங்களும் ஒரு காரணமாக அமைகின்றன.

## வாழ்க்கை வரலாற்றுத் தலைவர்

இவ்வுலகில் வாழ்ந்த, வாழ்கின்ற மனிதர்களே இவ்விலக்கியத்துள் தலைவராதலின் அவர் தம் பொது இயல்பு யாது என்பது பற்றிய வினா எழுகிறது.

புகழ்பெற்றோர் (ஆறுமுக நாவலர் சரித்திரம்-த. கைலாசபிள்ளை) மட்டுமின்றிப் புகழுக்கு உரியோரும் தலைவராகின்றனர் (திருப்பத்தூர் திரு கா. அ. ஷண்முக முதலியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு-கா. அ.ஷ. பத்மனாபன் கா.அ.ஷ. ரகுநாயகன்) குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மட்டுமே அறிந்த இவர்களைப் பிறரும் அவர் தம், பண்பு முதலியன குறித்து அறியவேண்டும் என்ற நினைவில் இவ்வாழ்க்கை வரலாறுகள் எழுகின்றன.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் மறைந்தபின் எழுதுதல் (புதுமைப்பித்தன் வரலாறு-ரகுநாதன்) வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே எழுதுதல் (அன்புப் பணிக்கு ஓர் அன்னை - தெரசா கே. பி. நீலமணி) எனும் இருநிலைகளையும் காணலாம். தம் செயற்கரிய செயல்களால் மக்களின் சிந்தை கவரும் பொழுதும்; சாதனைகள் பாராட்டுப்பெறும் பொழுதும் அவர் தம் வாழ் நாளிலேயே வரலாறுகள் எழுந்து விடுகின்றன.

எத்துறையைச் சார்ந்தவர்களாயினும் அவர்கள் தலைவர் ஆகின்றனர். சான்றாக,

1. அரசியல்-அமரர் சத்தியமூர்த்தி (வாழ்க்கைக் குறிப்புகள்) டி. பார்த்தசாரதி,
2. சமயம்-தவத்திரு ஞானியார் அடிகள்-வெள்ளையாம்பட்டு சுந்தரம்
3. புலவர்-பாவலர் சரித்திர தீபகம்-அ. சதாசிவம்பிள்ளை
4. அறிவியல்-தமிழ் நாட்டு விஞ்ஞானிகள்-எம். எஸ். உதய மூர்த்தி
5. சமூகத்தொண்டு-நான்கண்டபாரதம்-எஸ். அம்புஜம்மாள்
6. கலை-இரவிவர்மா-வித்தகன்
7. மருத்துவம் - டாக்டர் ரங்காசாரி வரலாறு - ராஜம் கிருஷ்ணன்

8. தொழில்-தொழில் மேதை ஜி. டி. நாயுடுவின் கதை
9. விளையாட்டு—கால்பந்து மன்னன்பிலே-ஜே. எம். சாலி
10 சாதனை புரிந்தோர் - கடல் வீரன் கொலம்பஸ் - நாரா. நாச்சியப்பன்]

எனப் பலதுறைகளைக் காட்டலாம்.

ஒருமொழியில் எழும் வாழ்க்கை வரலாற்றிற்குத் தலைவர் அம்மொழியைச் சார்ந்தவராகத்தான் இருக்கவேண்டும் என்பது தேவையில்லை. அவர் எந்நாட்டவரைச்சார்ந்தவராகவும் (அற நெறிபாடிய வீரகாவியம்-டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்" திலகவதிபால்) எம் மொழியினராகவும் (தாகூர்-மெய்யப்பன்); எம் மதத்தினராகவும் (காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற்றுப் பேழை—காரை. இறையடியான், மு சாயபு மரைக் காயர்) எந்த இனத்தின் பாற்பட்டவராகவும் (டாக்டர். சண்முகம் செட்டியார்-சங்கரன்) இருக்கலாம். இவ்வேறுபாடுகள் கடந்த நிலையில் அவர்களின் பண்பும், திறமையும். பெருமையுமே இவ்விலக்கிய வகைக்குத் தலைவராகும் பெருமையை நல்கு கின்றன.

இத்துறைகளில் அரசியல், சமயம்,புலமை ஆகிய துறைகளைச் சார்ந்த அறிஞர்களே மிக அதிகமாக நூல்களில் தலைவராகும் பெருமை பெற்றுள்ளனர். ஒருவரைப்பற்றிப் பலர் எழுதுவதற்கும் இத்துறைகளைச் சார்ந்தோர் அதிகமாக இடம் அளிக்கின்றனர் சான்றாகப் புலமைத்துறையை எடுத்துக்கொண்டால் பாரதியார் வரலாற்றை, ச. சோமசுந்தரபாரதி (பாரதியார் சரித்திரம்-28) ஆக்கூர் அனந்தாச்சாரி (சுப்பிரமணிய பாரதி சரித்திரம் 1935) சுத்தானந்தபாரதி (பாரதி விளக்கம் 1937); சக்திதாசன் சுப்பிரமணியன் (பாரதி லீலை-1937); தி. ஜ. ர. (புதுமைக்கவி பாரதியார் 1940) செல்லம்மா பாரதி (பாரதியார் சரித்திரம் 1941) வ. ரா. (மகாகவி பாரதியார்-1944) ரா. கனகலிங்கம் (என் குரு நாதர் பாரதியார்-1947): தி. இராமானுசன் (வரகவிபாரதியார்-1950) ரா. அ. பத்மநாபன் (சித்திரபாரதி-1954) யதுகிரி அம்மாள் (பாரதி நினைவுகள்-1951);கல்கி (பாரதி பிறந்தார்-1954) எனப் பலர் எழுதியுள்ளனர். இவர்களைத் தவிர இன்றும் பலர் பாரதி வரலாற்றைஎழுதியுள்ளனர். காந்தி, காமராஜ் அண்ணா போன் றோர் அரசியல் துறையிலும், விவேகானந்தர் போன்றோர் சமயத் துறையிலும் பலரால் வரலாறு படைக்கப்படும் பெருமை கொண்டுள்ளனர்.

ஒரு நூலுக்கு ஒருவர் தான் தலைவர் (புரட்சி வீரர் நீலகண்ட பிரம்மச்சரி-ரா. அ. பத்மநாபன்) எனும் பொது நிலை மட்டு மன்றிப் பலர் தலைவராக அமைதலும் உண்டு. (எண்பெருந்தலை வர்களின் இளமை வரலாறுகள்-பூவை அமுதன்) இவ்வாறு பலர் இணைந்த நிலையில் வரும்பொழுது அவர்களுக்குள்ள ஒரு பொதுத்தன்மை அதாவது அவர்கள் சிறப்புப்பெற்ற துறை (உலகக் குத்துச்சண்டை வீரர்கள்-கே. எம். சாலி) செயல் (புதுமை கண்டவர்-ஜெயா அருணாசலம்) போன்றன அமைந்து நூலை ஒரு வழி இட்டுச் செல்கின்றன. இவையின்றி வெவ்வேறு துறையினைச் சார்ந்தோரும் ஒரே நூலில் இடங்கொண்டு தனித்தனியே நிற்றலும் உண்டு (மேதைகள் வாழ்விலே-ர. சண்முகம்).

## வாழ்க்கை வரலாற்றாசிரியர்

இலக்கியத் தலைவருடன் எவ்வகையிலேனும் தொடர்புகொண் டோர் நூலின் ஆசிரியராகும் சிறப்பினை இவ்விலக்கியம் கொண் டுள்ளது. தொடர்பு என்பது வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் சுற்றமாக, நட்பாக அல்லது வேறு ஏதேனும் ஒரு வகையில் உறவு கொண்டதாக அமைகிறது. சான்றாக, செல்லம்மாபாரதி (பாரதி சரித்திரம்) சீதாலட்சுமி குமாரசாமி (யோகாசன பேராசிரியர் வி. என். குமாரசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு) போன்றோர் தம் துணைவரின் வரலாற்றினைப் படைத்துள்ளனர். மறைமலை யடிகளின் வரலாற்றை அவர் மகன் மறை. திருநாவுக்கரசு (மறை மலையடிகள் வரலாறு) எழுதியுள்ளமை குறிப்பிடற்பாலது. இது போன்றே தன் தந்தையார் வரலாற்றை 'என் தந்தையார்' எனும் பெயரில் எஸ். அம்புஜம்மாள் எழுதியுள்ளார். தமையனாரைப் பற்றித் தம்பி எழுதுவதை மணி. திருஞான சம்பந்த முதலியாரின் வித்துவான் மணி திருநாவுக்கரசு முதலியார் சரித்திரச் சுருக்கத் துள் காணலாம். தமிழிசைச்செல்வம் தந்த தமிழன்பன் ஆபிரகாம் எனும் நூல் அவர் பேரன் ஆபிரகாம் தவப்பாண்டியனாலும் 'குணங்குடி மஸ்தான் வரலாறு' அவருடைய கொள்ளுப்பேரன் குணங்குடி தாசனாலும் வரையப்பட்டுள்ளன. சங்கரதாஸ் சுவாமி களின் வரலாற்றை அவர் மாணவர் டி, கே. சண்முகம் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர் 'எனும் பெயரில் இயற்றியுள்ளார். தன் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பற்றி உ.வே. சா. எழுதி யுள்ளமை இவ்வகையில் புகழ் பெற்ற நூலாகும். இளமைமுதல் இறுதிவரை நட்புடன் பழகிய முருக. தனுஷ்கோடி தன் நண்பர்

காமராசருக்குக் காமராஜ் சரித்திரம் வரைந்து சிறப்பளித்துள்ளார், பண்டித மணியின் வரலாற்றை எழுதிய சோமலே அவருடன் பழகியவர்களில் ஒருவராவார்.

''நெருங்கிப் பழகியவர்கள் ஒரு நூலை எழுதும்போது அது சந்தேகத்துக்கு இடமில்லாததாக இருக்கும். சரியான சாட்சியங்களோடு இருக்கும். அதில் மிகைப்படுத்தப்பட்ட கற்பனைகள் இருக்க மாட்டா'' எனும் கூற்றில்[39] ஓரளவு உண்மை இருப்பினும் அவர்கள் பாலுள்ள பற்றின் காரணமாக மிகைப்படுத்திப் புகழ்தற்கும் வழியேற்படுகிறது என்பதையும் சுட்ட வேண்டியதாகிறது. குறைபாடுகளுக்குச் சமாதானம் கூறும் பாங்கும் இவற்றில் அமைகின்றன. ரகுநாதன் தன் நண்பர் புதுமைப் பித்தனைப்பற்றி, புதுமைப்பித்தன் வரலாறு' நூலில் 'தமிழில் புதுமைப்பித்தன் மட்டும் கதைகள் எழுதவில்லை. எத்தனையோ பேர்கள் எழுதித் தான் வருகிறார்கள். ஆனால் மற்றவர்களின் கதைகளில் பெரும் பாலானவை இல்லாத ஊரின் இலுப்பைப்பூச்சரக்குகள் தாம் புதுமைப்பித்தனோ அப்படியில்லை. அவரது கதைகளோ பிறர் எழுதிய கதைகளை விடப்பன்மடங்கு உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் போல் நிமிர்ந்து நிற்கின்றன. (ப:191) நானறிந்த வரையில், தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல; ஆசியாக்கண்டத்திலேயே புதுமைப் பித்தனுக்கு ஈடான எந்தச் சிறுகதை ஆசிரியனும் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது (ப 192), என்று கணித்திருப்பது மிகைப்படுத்தப்பட்ட புகழுக்குச் சான்றாம். இது மட்டுமின்றி அவரைப்புகழ வேண்டும் என்பதற்காகப் பிறரைத் தாழ்த்தியுள்ளமையும் சுட்டத்தக்கது. இதுபோன்றே காணும் குறைபாட்டிற்குச் சமாதானம் கூறுவதையும் இவரிடம் காண்கின்றோம். ஒருபொழுது அன்பர் ஒருவர் புதுமைப் பித்தனிடம் தமிழ் நாட்டின் சிறந்த பன்னிரெண்டு சிறுகதைகளை, ஆங்கிலம், ஹிந்தி போன்ற மொழிகளில் மொழிபெயர்ப்பதற்காகத் தேர்ந்தெடுத்து தரும்படி வேண்டினார். அதற்குப் புதுமைப்பித்தன் 'சிறந்த சிறுகதைகளைப் பொறுக்கி எடுக்கவா? என்னுடைய கதைகள் பன்னிரண்டைத்தான் பொறுக்க வேண்டும். என்று பதலளித்தார் என்று கூறியபின் ஆசிரியர் 'புதுமைப்பித்தனின் இந்தப்பதில் அவரை மட்டும் திடுக்கிட வைக்காது பல எழுத்தாளர்களையும் உங்களையுமே திடுக்கிட வைக்கலாம். ஆனால் தம்மிடமுள்ள நேர்மையான

39. கண்ணதாசன், காமராஜ் சரித்திரம்; முருகதனுஷ்கோடி; முகப்புத் தோரணம்-ப.9)

திறமையை நேரடியாகச் சொல்வதற்குப் புதுமைப்பித்தன் எப்போதும் கூச மாட்டார் என்று (பக். 188-189) சமாதானம் தருகிறார். இத்தகைய போக்குகள் வாழ்க்கை வரலாற்றினின்றும் நீக்கப்பட வேண்டியனவாகும்.

முன்பின் அறியாதவரைத் தலைவராகக் கொண்டு நூல் படைத்தலும் பரவலாகக் காணப்படுகிறது. (கௌதம புத்தர் அ. லெ. நடராஜன்) இவ்வகையில் நூல்கள் எழும்பொழுது பரந்த ஆய்வின் பயனாகக் கற்பனை எது, உண்மையெது எனப் பிரித்தறிய வாய்ப்பு உண்டு. செவிவழிச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொழுது கற்பனை கலக்கவும் வாய்ப்பேற்படுகிறது. புலவர் புராணம் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் அன்று கற்பனைப்படைப்பே என ஒதுக்கும் பாங்கிருப்பினும் அதன் ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள்

'இன்னம் வெகுவாய் அவர்தம் பெருமை சொல்ல
எனக்காசை விவர மொன்றும் எய்தவில்லை
என்னது கற்பனையாச் சிலபுலவரே போன்று
இயம்பிடுதல் என் தகுதிக்கு ஏற்றதன்றே'

(புலவர் புராணம் 23-11)

என உண்மைக்கு இடம் வேண்டுதல் இவண் நினைத்தற்பாலது. பொது நிலையில் வாழ்க்கை வரலாற்றாசிரியர், தலைவனை நேரே அறிந்திருப்பினும் அல்லது பிறவழிகளிலறிந்திருப்பினும் காய்தல் உவத்தலின்றி உண்மையை உரைத்தல் வேண்டற்பாலதாம்.

இது போன்றே தன் வரலாறு எழுதுவோரும் தம் நோக்கில் தமக்கு விருப்பமற்ற அல்லது வெறுப்பு தருகின்ற நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிடுதல் கூடும். ''சில படங்களைப் பாதியில் நிறுத்தி, சில படங்களில் அதிகம் செலவழித்து, நான் பட்ட தொல்லைகள் ஒரே அனுபவத்தின் இரண்டாம் பதிப்பு. ஆகவே மீண்டும் அந்த அனுபவங்களை விவரிப்பதில் அர்த்தமில்லை'' என்று கண்ணதாசன் தனது 'எனது சுய சரிதம்' எனும் நூலில் கூறியிருப்பதைச் சான்றாக்கலாம். இந்நூல் முழுமையும் அவரது முதல் தன் வரலாறான 'வன வாசத்தில் விட்டுப்போன பகுதிகள்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

''பெயர்தான் சுயசரிதமே தவிர அப்பெரியவர்களுடைய வாழ்க்கைப் பொது நலப்பணியிலே தன்னை மறந்து உலகத்துக்கு எப்பவும் பாடுபடுவதிலே இன்பத்தைக் காணும் மனப்பாங்குப்

பெற்றுள்ளனர் மிகச் சில பேர்தான் சுயசரிதம் எழுதத் தகுதி பெற்றவர்கள் என்ற கருத்து [40] தன் வரலாற்றாசிரியரின் இயல்பு குறிக்கிறது.

இந்த சென்றகால நினைவுகளைச் சீர்படுத்தி, ஒளிவு மறைவும், அச்சமும் அவாவும், பட்சபாதமும், அழுக்காறும் பொய்மையும் இன்ற வாய்மை குன்றாது, குறைத்தும் மிகைப் படுத்தியும் கூறாது, உள்ளது உள்ளபடியே எழுதுவதென்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதறிந்து மலைப்பெய்தினேன். எதைக் கூறுவது எதைக் கூறாமல் விடுவது என்று யோசித்து யோசித்து என் மண்டை புண்ணாகி விட்டது'' என்று தன் வரலாற்றாசிரியர் கோவை. அ. அய்யாமுத்து (எனது நினைவுகள் ப. VII) கூறியிருப்பது தன் வரலாறு எழுதுவதில் ஆசிரியருக்குள்ள இடர்ப்பாட்டைத் தெளிவாக்குகிறது.

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் சார்ந்த துறையில் உள்ள வரே அவரது வரலாற்றினைப் படைக்கும்பொழுது அத்துறை பற்றிய விரிந்த விளக்கங்கள் பெறல் ஏதுவாகிறது. ஓவியக் கலைஞ ரான இரவிவர்மாவைப் பற்றி ஓவியர் வித்தகன் எழுதியுள்ளமை இதற்குச் சான்றாகும். அரசியலில் ஈடுபாடு கொண்டோர் அரசியல் தலைவர் பற்றியும் இலக்கியத்துறை சார்ந்தோர் புலவர் பற்றியும் சமயநாட்டம் கொண்டோர் சமயத் தலைவர் பற்றியும் நூல் படைத்தல் ஓரளவுகுறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகிறது.

## வாழ்க்கை வரலாற்று மூலங்கள்

தன்னுணர்வின் வடிகாலாக, புலமையின் வெளியீடாக, கற் பனையின் கருவூலமாக அமையும் இலக்கியங்களின்றும் வாழ்க்கை வரலாறு மிகுதியும் வேறுபடுகிறது. வாழ்க்கை வரலாற்றைச் சுவைப்பட அமைப்பதிலும் நிகழ்ச்சிகளை முரணின்றித் தெளி வாகத் தருவதிலும், தலைவரின் பண்பினை இயல்பாக உணர்த்து வதிலுமே வாழ்க்கை வரலாற்றாசிரியர் தன் திறமையைக் காட்ட வேண்டியுள்ளது. இதற்காக வாழ்க்கை வரலாற்றாசிரியருக்கு வாழ்க்கை வரலாறுத் தலைவர் பற்றிய ஒரு முழுமையான அறி வினைப்பெற வேண்டியுள்ளது. அதற்குத் துணை நிற்பன வாழ்க்கை வரலாற்று மூலங்களாகும். எவையெவை தமக்கு இந் நிலையில் துணை நின்றன என்பதனை அவ்வாசிரியர் வழியாகவே அறிய முடிகிறது.

40. வசுமதி ராமசுவாமி; நான் கண்டபாரதம் எஸ். அம்புஜம் மாள் அணிந்துரை.

1. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் தரும் குறிப்புகளும் நாட்குறிப்புகளும் இதில் முக்கிய இடம் பெறுகின்றன. 'நெருங்கிப் பழகிய நிலையில் எனது எண்ணத்தையுணர்ந்த பண்டித மணியவர்கள் தாம் வைத்திருந்த குறிப்புகளையெல்லாம் அன்புடன் என்னிடம் கொடுத்தார்கள்.''[41] என்பது இதற்கு ஓர் சான்றாம்.

2. உடன் உறைந்தோர் தரும் கருத்துகள், குறிப்புகள் போன்றன வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் உண்மை நிலையினை ஆராய்ந்துணரப் பெருமளவு இடமளிக்கிறது. ''இந்த நூலை எழுதுவதற்காக திரு. சோமலெ பத்து மாத காலம் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். ஓ.பி.ஆர் உடன்பழகிய முன்னூறுக்கு மேற்பட்ட வயது முதிர்ந்த பெரியோர்களைச் சந்தித்து விஷயங்களைச் சேகரித்தார்'' என்பதனின்றும் இதன் தேவை புலனாகிறது.

3. கல்வெட்டுகள் நம்பிக்கையான கருவிகளாக இலங்குவதைக் கா.ம. வேங்கடராமையா அமைத்துள்ள 'சோழர் கால அரசியல் தலைவர்கள்' நூல் மூலம் அறியலாம். மிக முற்பட்ட காலத்தவர் பற்றிய வரலாற்றினை அமைக்கும்போது இத்தகையன ஐயத்திற்கு இடமின்றி எழுதத்துணை நிற்கின்றன. ஆயின் இவற்றினின்றும் முழுமையான வாழ்க்கை வரலாற்றினை படைத்தல் இயலுமா என்பது ஆய்விற்குரியது.

4. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் கடிதங்களும் இவண் குறிப்பிடத் தக்கன. ''மற்றவை பலசமயங்களில் அவரும் அவருடைய சிநேகிதரும் எழுதிய புத்தகங்களிலிருந்தும் கடிதங்களிலிருந்தும் திரட்டப்பட்டன'' எனும் குறிப்பு[43] இதற்குக்காட்டாம்

5. வாழ்கை வரலாற்றுத் தலைவர் பற்றி மற்றோர் எழுதி வைத்த நூல்களும் சிறந்த மூலமாக விளங்குவதை ''ஐந்து ஆண்டு

---

41. சோமலே; பண்டிதமணி; முன்னுரை
42. நா. மகாலிங்கம், விவசாய முதலமைச்சர்; சோமலே; அணிந்துரை உடன் பழகியோராக இந்நூல் அறிவிப்பவர்கள் பதவியிலிருந்த போது உயர் பதவிகளில் இருந்தவர்கள், முதலமைச்சரின் அலுவலகத்தில் பணிபுரிந்தவர்கள், அவர் நியமித்த அமைச்சர்கள், அவருடைய அரசியல் கட்சியினர்,மாற்றுக்கட்சியினர், அவருடைய உடல் நலத்தைப் பேணியவர், மருத்துவர்கள், விமானம் ஓட்டியவர்கள், முடிவெட்டியவர்கள் ஆகியோர்
43. எலிசபெத் சொர்ணம் அப்பாசாமி, பண்டிதை ராமாபாய் முன்னுரை

களுக்கு மேலாக சுமார் 300 புத்தகங்களுக்கு மேல் ஆராய்ந்து பல மதப்பெரியோர்களை நேரில் கண்டு விஷயங்களைச் சேகரித்திருக்கிறார்" என்பதால்[44] பெறலாம்.

6. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் படைப்புகளும் உதவ முடியும் என்பது 'நூல்களை ஆராயும் பொழுதெல்லாம் ஆசிரியர்கள் வரலாற்றைப் பற்றித் தெரிய வந்தனவற்றை யெல்லாம் குறித்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டேன்' என்னும்[45] உ.வே சா. கூற்றால் உணரலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் அளித்த பேட்டிகள், சொற்பொழிவுகள் போன்றனவும் இதனுள் இணைத்து எண்ணத்தக்கன. பாணனின் 'தமிழக அமைச்சர்கள்' எனும் நூல் அமைச்சர்களை நேரடியாகப் பேட்டி கண்டு அதன் மூலம் உருவாக்கப்பட்டது என்பதும் நவிலத்தக்கது,

7. வாய்மொழியிலக்கியமும் வாழ்க்கை வரலாற்றிலக்கியப் படைப்புக்கு உதவ இயலும் என்பதனை, வரலாறுகள், நாடோடிப் பாடல்கள், தொன்னாட்டுச் சீமையிலே ஆங்காங்கே வாய்மொழியாக வழங்கும் கதைகள் முதலிய பலவற்றையும் உள்ளத்தில் கொண்டு அழகு தரும் வீரஞ் சொறிந்த வரலாறாக இதனை அமைத்தனர் ஆசிரியர்' எனும்[46] உரையால் காணலாம்.

8. செய்தி ஒலிபரப்புக் கருவிகளின் துணைகொண்டும் வாழ்க்கை வரலாறு வடிக்க இயலும் என்பதனைச் ஜே.எம். சாலியின் 'உலக குத்துச் சண்டை வீரர்கள்' நூல் அறிவிக்கிறது. '1964 முதல் 1971 வரை நடைபெற்ற பிரபலமான குத்துச் சண்டைகளைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நேர்முகமாக அல்ல. டெலிவிஷனில் சிங்கப்பூரில் பத்திரிகையாளனாக நான் பணியாற்றிவந்த அந்த ஆண்டுகளில் குத்துச் சண்டைகளை ஒன்றுவிடாமல் பார்த்து வந்ததுடன் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளையும் வருணனைகளையும் தொகுத்து வைக்கவும் தொடங்கினேன். விளையாட்டு வீரர்களைப் பற்றிய 'சில நூல்களை அந்த அடிப்படைகளைக் கொண்டுதான் எழுதி வந்திருக்கின்றேன். உலக குத்துச் சண்டை வீரர்கள் என்ற இந்நூலும் அப்படித்தான்'' எனும் ஆசிரியர் கூற்று இதனை விளக்குகிறது.

---

44. பதிப்பாளர்; உலக மகாபுருஷர்கள், நஜன்; பதிப்புரை
45. உ. வே. சா. ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முகவுரை
46. பகதூர் வெள்ளை; கோ. நீ. அண்ணாமலை

தங்களின், நாட்குறிப்பிலும், பெரும்பாலும் தங்கள் சிந்தையில் ஒதுங்கியிருந்த குறிப்புகளை நினைவிற்குக் கொண்டுவருவதன் மூலமும் தன் வரலாறுகள் எழுகின்றன. மேற்கூறிப்பிடப்பட்டுள்ள கூறுகளில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டன இணைந்து இவ்விலக்கியத்தை உருவாக்குகின்றன. பெரும் பான்மையானவை ஒன்றிற்கு மேற்பட்ட மூலங்களின் இணைவில்தான் எழுந்துள்ளன.

ஒரு சிறந்த வாழ்க்கை வரலாற்றிலக்கியம் உருவாவதற்கு ஆசிரியர் மேற்கொள்ளும் முன்னேற்பாடுகள் அதன் படைப் பருமையை உணர்த்துகின்றன. பொன்னியின் செல்வனைப் படைத்த சுந்தா பற்றி, கி. ராஜேந்திரன் 'அடுத்தபடியாக சுந்தா கல்கியின் நூல்களையெல்லாம் படித்தார். ஏற்கனவே படித்திருந்தவற்றை மீண்டும் புதுக்கண்ணோட்டத்தில் படித்தார். புத்தகங்களாக வெளிவராத கதைகட்டுரைகளையும் தேடிக்கண்டு பிடித்து ஆராய்ந்தார். அப்புறம் கல்கியின் பல்வேறு பணிகளுக்கும் தனித்தனி நோட்டுப் புத்தகங்கள் போட்டுக்கொண்டு குறிப்பெடுக்கத் தொடங்கினார். பிறகு கல்கியின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் சந்தித்துப் பேசித் தகவல்கள் சேர்த்தார். இவ்வளவும் செய்த பிறகு நோட்டுப் புத்தகங்களில் குறிக்கப்பட்டுள்ள வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைக் கல்கி தமது இலக்கிய படைப்புகளில் எவ்வாறு கையாண்டிருக்கிறார் என்று ஆராயத் தொடங்கினார். அதற்குக் குறிப்பு எடுத்தார். இதன் பிறகு தான் எழுதத் தொடங்கினார், என்று கூறியிருப்பது வாழ்க்கை வரலாறு எப்படி எழுத வேண்டும் என்பதற்கு ஓர் வழிகாட்டியாக அமைகிறது.

மிகச்சிறந்த வாழ்க்கை வரலாறுகள் பல படைத்துள்ள அ.லெ. நடராஜன் ஒவ்வொரு நூலும் முடிந்தவுடன் அவற்றை அவ்வவ் துறையைச் சார்ந்தோரால் அல்லது வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய தெளிந்த அறிவுடையோரால் சரிபார்க்கப்பட்டுப்பின் வெளியிடுதல் குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் வாய்மையே நிலவ வேண்டும் என்பதில் உள்ள அவரின் ஆழ்ந்தபிடிப்பு போற்றத் தக்கது.

## வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகள்.

படைக்கும் ஆசிரியர் தன்மை குறித்து (பிறர்) வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு என்று பிரிக்கப்படும். இவ்வகை, பொருள் அமைப்பு, இவற்றாலும் பலவகைகளாகப் பகுக்கப்படுகிறது.

வாழ்க்கை வரலாற்றாய்வாளர் மூவர்[47] இவ்வகைப்பாட்டினை அளித்திருப்பினும் அவற்றுள் முழுமையின்மையாலும், வகைப் பாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைத்தாக அமைதலானும் இங்குத் தனித்து, வகைப்படுத்தித் தரும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

1. வாழ்க்கை துணுக்குகள் : வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய அடிப்படைச் செய்திகள் (பிறப்பு, பெற்றோர், ஊர் போல் வன) யாதும் இருக்காது. அவரின் வாழ்வில் நடந்த குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி மட்டும் இடம் பெறும். இத்தகையன தொகுப்பு

---

47. 1. சுருக்கவரலாறு, ஆய்வு முறை வரலாறு, ஒருதலைச் சார்பான வாழ்க்கை வரலாறு, வரலாற்றுக்கற்பனை' சுவைமலி (PoPular) வாழ்க்கை வரலாறு -சாலினி இளந் திரையன், மேற்படி, ப. 56'60.

2. சிறுவரலாறுகள், சிற்றாய்வுகள், ஒருமுக வாழ்வுகள், கற்பனை வகையின், இனிய வகையின.
-மது. சி. விமலானந்தம்; மேற்படி பக். 35-39

3. யார் எவர் என்னும் தலைப்பில் எழுதப்படும் நூல்களை வாழ்க்கை வரலாற்றுத் துணுக்குகள் (Biograbhicalpits) எனலாம். ஒருவருடைய வாழ்வில் நிகழ்ந்த அடிப்படை விவரங்களை மட்டும்சுருங்கச் சொல்வது வரலாற்றுச் சுருக்கம் (Simple Biograbhy) எனப்படும், ஒருவரின் பன் முக வாழ்வில் ஏதாவது ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டு வது ஒரு முகவாழ்க்கை வரலாறு (One sided piograbhy) எனப்படுகிறது ஒருவரின் வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டு ஒரு புதினமோ அல்லது நாடகமோ எழுதலாம். அதில் செய்திகள் உண்மையாக நடந்தவைகளாக இல் லாமல் புனைவுகளாக அமைந்திட இடமுண்டு. அத் தகையவற்றை வாழ்க்கைக் கதைகள் (Biographical fictions) எனலாம். படிப்போருக்கு உவகையூட்டும் முறையில் பகட்டான நடையில் எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகளும் உண்டு. இவற்றில் செய்திகளைச் சுவை படக் கூறுவதே முதன்மையான நோக்கமாக இருக்கும். இவ்வாறானவற்றை மக்கள் சுவைக்கேற்பச் செய்ய படும் சுவைதரா வாழ்க்கை வரலாறுகள் (Popular Bigra-phies) எனலாம். செய்திகளைவிட எழுதுவோரின் இலக்கியப் புலமை வெளிப்படும்படி எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகளும் உண்டு. அவை புலமை நலஞ் சான்ற வாழ்க்கை வரலாறுகள் (Scholarity Biography) எனப்படும். செய்திகளை முழுமையாகவும் சரியாகவும் நுணுக்கமாகவும் சுவைபடவும் சொல்வதே சரியான வாழ்க்கை வரலாற்று நூலாகும் (Complete Biography) சி. சு. செல்லப்பன், இலக்கிய ஜோதி; மது. சு விமலானந்தம்; அணிந்துரை, பக். 3-4.

பெரும்பாலும் இம் மூவரின் விளக்கங்களும் ஒன்றுபட்டமை கின்றன.

நூலாகவே அமையும். இவை வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துள் மிகச் சிறுபான்மையாகவே உள்ளன. மெர்வின் எழுதிய 'மேதைகள் வாழ்விலே' எனும் நூல் இதற்குச் சான்றாம். வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் நோக்கம் இங்கு நிறைவு பெறாவிடினும், ஒருவரைப் பற்றி அவரின் வாழ்வில் நடந்த ஒன்றைக் கற்பாருக்கு அறிவித்தல் என்ற நிலையில் தொடர்புடையதாகிறது. இதழ்களில் இத்தகையன அதிகமாக இடம் பெறுகின்றன. இதன் முன்பே கற்பார் அறிந்திருப்பர் அல்லது அறிந்திருக்கின்றனர் என்ற நோக்கில் இவை எழுகின்றன. அறிந்தவர் பற்றிய கூடுதல்-அறிவினைப்பெற இவை உதவுகின்றன எனலாம். தற்பொழுது மக்களிடையே புகழ்பெற்று விளங்குபவர் பற்றிய செய்திகளே அதிகமாகக் காணப்படினும், மறைந்தவர் பற்றிய செய்திகளும் காணப்படுவதுண்டு.

'ஜி டி. நாயுடுவுக்கு நிறையப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் இருந்தது. படிக்க வேண்டிய புத்தகங்கள் அதிகமாகி விட்டால் அவைகளைப் படித்து முடிப்பதற்கென்றே ரயில் பிரயாணம் செய்வார். முதல் வகுப்பில் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டால் அந்த ரயில் வண்டி போகும் கடைசி ஸ்டேசன் வரை பிரயாணம் செய்வார். 'ரயில் பிரயாணத்தினால் பிறருடைய தொல்லைகளின்றி நிறையப் புத்தகங்களைப் படிக்க முடிகிறது' என்றார். படிப்பில் ஆர்வம்கொண்ட ஜி டி. நாயுடு விஞ்ஞானம் பொறியியல் துறைகளைப் பற்றிய 12000 புத்தகங்களும், உள நூல் தொடர்புடைய 3000 நூல்களும் படித்து முடித்துவிட்டு நூலகத்தில் வைத்திருக்கிறார்' என்பது போன்று[48] இஃது அமைகிறது.

2. வாழ்க்கை அறிமுகம் : இத்தகையனவற்றிலும் ஒருவர் வாழ்வின் முழுமையை அறியமுடியாது. ஆயின் அவர் பற்றிய அடிப்படைச் செய்திகளுடன் அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒரு சிலவற்றைக்கொண்டு, அவர் பண்பினை, மேன்மையினைச் சுட்ட முயல்வன இதன் பாற்படும். இவ்வகையில் ஓரளவு குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. சான்றாகச் சி.பி. சிற்றரசுவின் மாபெரும் வீரர்கள், மு. உலகநாதனின் தமிழ் நாட்டின் தவப்புதல்வர்கள் போன்றவற்றைச் சுட்டலாம். இவ்வகையினவும் பல தலைவர் பற்றிய தொகுப்பு நூலாக அமைகின்றன.

---

48. மெர்வின்; மேதைகள் வாழ்விலே பக். 80

3. வாழ்க்கைக் குறிப்புகள் : இதனுள் வாழ்க்கை வரலாற்று தலைவரின் பிறப்பு முதல் நூல் எழுதுங் கால வரையிலான முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் பெரும்பாலும் இடம் பெற்றிருக்கும். அவை விரிவான விளக்கங்கள் இன்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கும். அதனுள்ளும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் சிறப்பு பண்பு போன்றவற்றில் குறையேதுமின்றிக் காட்டப்படுதல் தேவையாகிறது. இவற்றை வாழ்க்கைச் சுருக்கங்கள் என்றும் கூறலாம். குறிப்பான வாழ்க்கை நிகழ்வுகள், அதிக விளக்கமின்றிக் குறிப்பாகச் சுட்டப்படுதலின் வாழ்க்கைக் குறிப்புகள் என இவண் நவிலப்பட்டுள்ளது. இவ்வகையின் தனி நூலாகவும், பலரின் வாழ்க்கையைத் தொகுத்துத் தரும் நூலாகவும் அமைகின்றன. பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம் வெளியிடும் நாட்டுக்கு உழைத்த நல்லவர் வரிசை, அறிவியல் அறிஞர் வரிசை நூல்களையும், சாகித்தியஅக்காதெமி வெளியிடும் இந்திய இலக்கியச் சிற்பிகள் நூல் வரிசை போன்றனவற்றையும் தனி நூலுக்குச் சான்றாக் கலாம். புரவலனின்பேராற்றல் பெற்ற பெண்கள், அ. குப்புஸ்வாமியின் தென்னிந்திய மஹாமஹோபாத்யாயர்கள் வரலாறு போன்றன தொகுப்பு நூல்களுக்குக் காட்டாகும். விரிந்து வரலாற்றினின்றும் எழும் சுருக்க வரலாறுகளையும் இவண் இணைத்து நோக்கலாம். மறை திருநாவுக்கரசின் மறைமலையடிகள் வரலாறு, விரிந்த நிலையிலும், சுருக்கமாகவும் வெளிவந்துள்ளது சான்றாகும். இவ்வகையின, வாழ்க்கை வரலாற்றிலக்கியத் தொகையுள் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றுள்ளன.

4. ஒருமுக வரலாறு : எந்த ஒரு மனிதருக்கும் பலவகை வாழ்க்கை நிலைகள் அமைகின்றன. அவை பருவ நிலைகளின் அடிப்படையில் அதாவது, ஏதாவது குறிப்பிட்ட கால கட்டத்தினை மட்டும் சிறப்பிக்கும் நிலையிலும் தோன்றலாம். எல்.எஸ். கரையாளரின் 'திருச்சி ஜெயில்' எனும் நூல் அவர் வாழ்வில் '1940 டிஸம்பர் 12 முதல் 1941-மே மாதம் 23 வரை நிகழ்ந்த சிறை வாழ்க்கையை மட்டும் நவில்கிறது. பூவை அமுதனின் 'என் பெருந்தலைவரின் இளமை வரலாறுகள்' நூலையும் இதற்குச் சான்றாக்கலாம்.

சிலர் வாழ்வினைப் பல நிலைகளில் நோக்கி ஆராய்தற்கு இடம் இருக்கையில் அவற்றுள் ஒன்றினை முதன்மைப் படுத்தி, அதனை நோக்கித் தன் நூலைச் செலுத்தலும் உண்டு. இவை

தலைவரின் இயல்பினை முழுமையாக அல்லாது குறிப்பிட்ட ஒரு நிலையில் மட்டுமே தருதலால் ஒருமுக வரலாறு ஆகின்றன. மணி மொழியின் கருணைத் தேவன் காந்தி மகான்[49] சி. ஞானமணியின் எழுத்தாளர் ம.பொ.சி. போன்றன[50] இவ்வகையின் இந்நிலை நூல்கள் சிறுபான்மையே எழுந்துள்ளன.

5. முழுமை வரலாறு; வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகையுள் இதுவே சிறப்பிடம் பெறுகிறது ஒருவரைப் பற்றிய முழுமையான கண்ணோட்டத்தினை, அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் எவையும் விடுபடாமல், அவரின் பண்புகள், வெற்றிகள் தோல்விகள், சாதனைகள் என எவையும் விடுபடாமல் கற்பாருக்கு அவர் பற்றிய முழுமையான ஓவியத்தை நல்குவன. இதன் பாற்படும் இவர் பற்றிய பிறரின் கருத்துரைகளும் இடம்பெறுதலுண்டு. வாழ்க்கைத் துணுக்குகள், வாழ்க்கை அறிமுகம் போன்றவற்றைத் தனிப்பாடல்கள் என்றால் இதனைக் காப்பியங்களுடன் ஒப்பிடலாம். இவ்வகை நூல்கள் வாழ்க்கை வரலாற்றிலக்கிய உலகில் தமிழர் பெருமை கொள்ளும் அளவிற்குச் சிறப்பாகவும் மிகுதியாகவும் அமைந்துள்ளன. ரா. கணபதியின் சுவாமி விவேகானந்தர்; அ.லெ. நடராஜனின் நெப்போலியன்; சுந்தாவின் பொன்னியின் செல்வன்; உ.வே. சாமிநாதையரின் என் சரித்திரம்; பரணீதரனின் கஸ்தூரி திலகம்; சோமலெயின் பண்டிதமணி; கௌசிகனின் ராஜாஜி போன்ற பலவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாக் கலாம்.

ஒருவரின் இறப்புப் பற்றி நவிலாதபோது, ஏனையன அனைத்தும் குறைவின்றி நிறைந்திருப்பினும் அவை முழுமையான வர

49. ''அத்தகு பெருமை பெற்ற பெரியோரின் வாழ்வில் அவர் அகிம்சையைப் போற்றி அதன்படி நடந்து காட்டிய சுவையான நிகழ்ச்சிகளை உள்ளத்தைக் கவரக்கூடிய சோகமயமான சம்பவங்களை, இந்த நூலில் தொகுத்துக் கூறியிருக்கிறேன்.''
மணிமொழி, கருணைத்தேவன் காந்திமகான்; முன்னுரை

50. ''எழுத்துலகில் நாற்பதாண்டுக் காலமாகப் பல்வேறு ஏடுகளுடன் தொடர்பு கொண்டு நடத்தி, இதுவரை ஏறத்தாழ எண்பது நூல்கள் வரை எழுதிக் குவித்துள்ள எழுத்தாளர் ம. பொ. சியை ஓரளவு ஆய்வு செய்கிறது இந்நூல். எழுத்தாளர் என்ற நோக்கில் அவரைப் பற்றியும் அவர் ஆற்றியுள்ள தொண்டையும் அவரிடத்து அமைந்துள்ள பல்வேறு சிறப்பு ஆற்றல்களையும் இயன்ற வரை படம் பிடித்துக் காட்டியுள்ளேன். ''சி. ஞானமணி எழுத்தாளர் ம. பொசி. முன்னுரை.

லாறு ஆகுமா என்ற வினா எழலாம். ஒருவரின் வாழ்வின் முடிவில் அவர் உடல் இவ்வுலகை விட்டு மறைகிறது என்பது உண்மை ஆயின் தம் பூதவுடல் மறைந்த பின்னும் வரலாறு அறியும் காலம் தொட்டுப் பலர் இன்றும் தம் புகழால் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் எனும்பொழுது 'மரணம்' என்பது அத்தகையவரின் வாழ்வில் மிகச் சாதாரணமான ஒரு நிகழ்வாகும். ஒருவர் தம் வாழ்நாளிலேயே தம் செயல்களால் மக்களிடையே நிரந்தரமான ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுவிடுகின்றார். மற்றும் மிக உயர்ந்த குறிக்கோளுடன் நீண்ட வாழ்க்கைப் பயணம் செய்து அதில் வெற்றி பெற்றவுடன் அவரது வாழ்வும் நிறைவுடையதாகிறது. இத்தகையவர்களின் மரணம் என்பது மக்களால் விரும்பப்படாத ஒன்றாகவும் அமைகிறது. நூல் எழுந்ததன் நோக்கம் இங்கு நிறைவேறியுள்ளதா என்பதே இவண் வேண்டற்பாலது. சிலர் தம் வாழ்வின் இறுதிவரை தம் குறிக்கோள் நிறைவேற்றத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கலாம். சிலர் அதனை நிறைவேற்றிய மகிழ்வில் அல்லது திருப்தியில் தம் எஞ்சிய நாட்களை ஒய்வுடன் கழிக்கலாம். எனவே வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்க்கை இறுதி வரை நூல் அமைந்தால் தான் முழுமை வரலாறு என்பது தேவையில்லை. தன் வரலாறுகளில் இது இடம்பெற இயலாது என்பதுடன் திரு.வி.காவின் திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புகள், ம.பொ.சியின் எனது போராட்டம் போன்றன மிகச் சிறந்த முழுமையான வாழ்க்கைவரலாற்று நூல்களாக அமைந்திருத்தலும் சுட்டற்பாலது. புதுமை படைக்க விரும்பும் புதின ஆசிரியர்கள் தம் புதின முடிவில் தலைவன், தலைவியரின் நிலை இறுதியில் என்ன என்பதைச் சுட்டாது கற்பாரின் ஊகத்திற்கு இடனளித்து நிறைவு செய்வதை இவண் இணைத்து நோக்கலாம்.[51] அவற்றை நாம் குறையுடைய புதினங்கள் என ஒதுக்கிவிடுவதில்லையாதலின் இவற்றையும் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

6. வாழ்க்கை ஆய்வுகள் : ஒருவரின் வாழ்க்கை நிகழ்வுகளைத் தரவேண்டும் என்பதுடன் அவர் பற்றிய உண்மையினை ஆய்தலை நோக்கமாகக் கொள்வதும் இதன்பாற்படும். ம.பொ.சியின் ஒளவை-யார்? சோவின் காமராஜை சந்தித்தேன் போன்ற ஒரு சில நூல்கள் இவ்வாறு அமைகின்றன. ஒருவரைப் பற்றிப்பல வித எண்ணங்கள் நிலவுங்கால் அவற்றின் உண்மை நிலை அறிய

51. இந்துமதி, பைசா நகரத்துக் கோபுரங்கள்; 1982; திருமகள் நிலையம், சென்னை.

வேண்டும் என்ற எண்ணம் எழும்போதும், தன்னுடைய நோக்கில் ஒருவர் எவ்வாறு அமைகிறார் என்பதனை உணர்த்த விரும்பி வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் ஆசிரியர் தன்னையும் நூலுள் உட்படுத்தும்போதும் இவை எழுகின்றன. வாழ்க்கைவரலாற்றிலக்கியத்தில் இஃது ஓர் வரவேற்கத் தக்க முயற்சி எனலாம்.

7. **வாழ்க்கை ஒப்பாய்வுகள்** : ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு நிலையில் வாழ்க்கை அமையினும், ஏதேனும் ஒரு சில கூறுகளில் ஒன்றுபடுகின்றனர். அல்லது ஒரே நோக்கில் இருவேறு பாதைகளை மேற்கொள்கின்றனர். இவற்றினை ஒப்புநோக்கி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒருங்கே பிணைத்துத் தருதல் இவ்வகையைச் சாரும். 'காந்தியும் விவேகானந்தரும்' (ஒரு பரிசீலனை)' என்று வெ. சாமிநாத சர்மாவால் இயற்றப்பட்ட நூல் இதற்குச் சான்றாகும். இவ்வகை மிக அருகியே காணப்படும் ஒன்று எனினும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலையில் இதனையும் உட்படுத்தலாம். இவை ஏனைய நூல்களைவிட மிகுந்த சுவையை, வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினைக் கற்பாருக்கு அளிக்கின்றன எனில் மிகையாகாது.

8. **வாழ்க்கைப் புனைவுகள்** : வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளின் துணை கொண்டு, படைப்பாளர் தம் புலமைத் திறனையும் இணைத்து, கற்பனைப் பாத்திரங்கள், சூழல்கள், நிகழ்வுகள் போன்றவற்றைப் படைத்துப் படைப்பிலக்கியங்களுடன் ஒத்துத் திகழ்வன இதனுட்படுகின்றன. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் உண்மைச் சித்திரத்துடன் ஆசிரியர் தம் கற்பனையையும் இணைத்துத் தருவதனால் இவை வாழ்க்கைப் புனைவுகளாகின்றன. இரா. பழநிச்சாமியின் கவிச் சக்கரவர்த்தி கம்பன் போன்றன இதனுள் அடங்குகின்றன. இலக்கியத் தலைவர் ஒரு காலத்தில் உயிருடன் இவ்வுலகில் உலவியவர்; இலக்கியத்தில் இடம் பெறும் நிகழ்ச்சிகளில் சில உண்மையின் பாற்படும் என்ற நிலையில் மட்டுமே இவை வாழ்க்கை வரலாற்றிலக்கியத்துடன் தொடர்பு கொள்கின்றன. நடந்த நிகழ்வுகளையே உயிர்நாடியாகக் கொண்டதும் கற்பனைக்கு இடம் மறுப்பதைக் கொள்கையாகக் கொண்டதுமாகிய வாழ்க்கை வரலாற்றிலக்கியங்களோடு இவற்றை ஒப்புக்காண்டல் பொருந்துமா என்பது மேலும் ஆய்விற்குரியது. இத்தகையனவற்றை ஒதுக்கி விடுதலால் தவறில்லை எனத் தோன்றுகிறது.

## வாழ்க்கை வரலாற்றுத் தலைப்புகள்

வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் தம் நூலுக்குப் பெயரிடும் நிலையில் பல வேறுபாடுகளை நல்குகின்றனர். ஓரிலக்கியத்திற்கு அதன் தலைப்பும் சிறப்புத் தருகின்றது. கற்பாரைப் படிக்க, படித்தபின் அது பற்றிச் சிந்திக்கத் தூண்டுதலாலும் இவண் தனித்து நோக்கப்படுகிறது. இதில் காணும் வேறுபாடுகள்,

1. தலைவன் பெயர் மட்டும் சுட்டல் (தேசிகவிநாயகம் பிள்ளை - சுத்தானந்த பாரதியார்) 2. தலைவனின் சிறப்புப் பெயர் மட்டும் தரல் (பண்டிதமணி - திருநாவுக்கரசு); 3. தலைவனின் இயற்பெயரைச் சுருக்கித்தரல் (வ. வே. ஸு. ஐயர் - தி.சே. சௌ. ராஜன்) 4. சிறப்புப் பெயருடன் இயல்புப் பெயரையும் இணைத்துக் காட்டல் (கலைவாணர் என். எஸ். கே - சுப்பு ஆறுமுகம்); 5. தலைவன் பெயரின்றி சார்ந்த துறையை மட்டும் குறித்தல் (தேசபக்தர் மூவர் - நாமக்கல் கவிஞர்); 6. தலைவனின் பெயருடன் பதவியையும் இணைத்து நிறுத்தல் (யோகாசனப் பேராசிரியர் - சீதாலட்சுமி குமாரசாமி) 7. தலைவன் பெயருடன் நூலில் முக்கியமாக வெளிப்படும் கருப்பொருளையும் இணைத்தல் (ஆடொல்ப் ஹிட்லர் அல்லது திறமையின் வெற்றி - ஹ. பைதான் சாஸ்திரியார்) 8. தலைப்பிலேயே தலைவன் யார் என்பதனை அறிமுகப்படுத்தல் (இராமநாடகக் கீர்த்தனை இயற்றிய அருணாசலக் கவிராயர் சரித்திரம்) 9. நூலின் காலவரையறையைப் புலப்படுத்தல் (அண்ணாவின் கடைசி நாட்கள் - நாகை தருமன்) 10. தலைவர் பெயருடன் அவர் சார்ந்த துறை குறித்தல் (இசை யுலகில் மகாவைத்தியநாத சிவன் - வி. எஸ். கோமதி சங்கர ஐயர்), 11. நூலின் இயல்பு தெரிவித்தல் (அன்னிபெஸண்ட் அம்மையார் சரித்திரச் சுருக்கம் - ப. நாராயண ஐயர்; இளமையின் நினைவுகள் அ. மு. பரமசிவானந்தம்); 12. குறியீடாக வைத்தல் (சரவிளக்கு - அப்துற்றஹீம்); 13. தலைவனுடன் தொடர்புடைய ஊர்ப்பெய ரால் சுட்டுதல் (காசி முதல் தாஷ்கண்ட் வரை-மு. நமசிவாயம்) 14. யாருக்காக எழுதப்பட்டது என்பதை உணர்த்தல் (சிறுவர்களுக்கு விவேகானந்தர் - வெ. பார்த்திபன்); 15. தலைவருக்கும் ஆசிரி யருக்கும் இடையே உள்ள உறவைக் காட்டல் (என் தந்தையார் - எஸ். அம்புஜம்மாள்); 16. வாழ்க்கை வரலாற்றுடன் தொடர் புடைச் சொற்களை இணைத்தல் (அடிக்குறிப்பு - 6 காண்க) எனப் பலவாக அமைகின்றன.

## பொருள்

பொருளால் பெயர் பெறும் இலக்கிய வகைகளுள் வாழ்க்கை வரலாறும் ஒன்றாகும். இலக்கிய உருவாக்கத்தில் அதன் உள்ளடக்கம் சிறப்புப் பெறுகிறது. அவ்வகையில் இவ்விலக்கியத் திற்கென்று சில தனித்த பொருட்கூறுகள் உள. அவை பற்றிய சிந்தனை இங்கமைகின்றது நூலுக்கு இன்றியமையாததாகத் தேவைப்படும் பொருட் கூறுகளை முதன்மை பொருட்கூறு களாகவும், நூலின் சிறப்பினை மேம்படுத்தற்காக அமையும் ஏனை யவற்றைத் துணைப் பொருட்கூறுகள் என்றும் கொள்ளலாம். முதன்மைப் பொருட் கூறுகளாவன;

1. நாயகன் பற்றிய அடிப்படைச் செய்திகளாகிய பிறப்பு, ஊர், பெற்றோர், பெயர் முதலியன கூறல் இவை நூலின் தோற்றுவாயாக அமைகின்றன எனவும் கொள்ளலாம். இவை நூலின் இயல்பிற்கேற்ப விரிந்த அளவிலோ[52] அன்றி ''இரவிவர்மா இந்த வீரகிளிமானூர் மரபில் 1848 ஏப்ரல் மாதம் 29-ஆம் நாளன்று புகழ் பெற்ற அரண்மனையில் பிறந்தார். தாயார் பெயர் உமா அம்பாபாய். தந்தை பெயர் பட்டாதிரி'' எனச் சுருக்கமாகவோ[53] அமைதல் உண்டு.

2. வாழ்க்கை வரலாற்றுத் தலைவனின் அறிமுகம் இன்றி யமையாததாம். பொதுநிலையில் அவர் வாழ்வில் நடந்த மிகச் சிறப்பான நிகழ்வு ஒன்றினைக்கூறி அதன் மூலம் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரை அவர் பெருமை துலங்குமாறு அறிமுகப் படுத்தும் போக்குப் பரவலாக அமைகிறது.[54] ''அப்போதே அவருக்குத் தலையில் நரைபுரை யோடியிருந்தது. வாழ்க்கை நெருப்பில் அடிபட்டுக் காய்ந்த முகம், வயதுக்கு மீறிய முதுமை, நோஞ்சான் உடம்பு, தொள தொளத்துத் தொங்கும் வெள்ளைக் கதர் ஜிப்பாதான் உடம்பின் சோனித் தன்மையை மூடி மறைத் திருந்தது. அவரது தோற்றம் பற்றிக் குறிப்பிடும்போது கண் களைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் கண்கள் ஓர் அசாதாரணமான ஒளி நிறைந்த கண்கள். தீராத ஏக்கமும் பித்தமும் ஒளியும் தீட்சண்யமும் தென்படும் கண்கள். அந்தக் கண்களை வெகுநேரம் பார்க்க முடியாது பார்க்கிறவர்களின்

---

52. உ வே. சா. வித்துவான் தியாகராச செட்டியார்; பக். 3-8
53. வித்தகன், இரவிவர்மா ப. 28.
54. ரகுநாதன்; புதுமைப்பித்தன் வரலாறு பக். 9-10

கண்களைச் சீக்கிரம் உறுத்திவிடும் கண்கள் அவை. ஆழக்குழிக்குள் அமிழ்ந்து கிடந்தாலும் தெறித்துச் சிதறும் ஒளியும் வேகமும் கொண்ட கண்கள் அவை. அவரை அறியாதவர்கள் முதலில் அவர் கண்களைச் சந்தித்தால், அது அவர்களுக்கு ஏதோ ஓர் இனந் தெரியாத அச்சத்தை எழுப்பி விடும் என்று கூடச் சொல்லலாம்''[55] என்பது போன்று உருவ வருணனைகளும் இடம் பெறல் உண்டு.

3. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் சாதனைகளைப் படிப்படியாகக் கூறிக் கொண்டே செல்லுதல் இலக்கியத்தின் உயிர் நாடியாக அமைகிறது. நூலின் பெரும்பகுதியைத் தன்னுட் கொண்டதாக இது அமைகின்றது. வரலாற்றுத் தலைவர் எத் துறையில் சாதனை புரிந்தாரோ அத்துறை இதனால் விளக்கம் பெறுகிறது. அவ்வவ் துறை பற்றிய செய்திகள் இதனுள் கிடைக் கின்றன. சான்றாகக் காவல் துறையைச் சார்ந்த ஒருவர் வரலாறு எழுதும் பொழுது அதனுள்,

''மலபார் விசேஷ போலீஸ் படை பிறந்த வரலாறே ஒரு தனிக்கதை. ஏர்காடு தாலுகாவில் மாப்பிளாக்கள் என்ற பிரிவினர் அதிகமாக வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் கலவரங்கள் நடந்த வாறு இருந்தன. 1821 முதல் 1921 வரை ஒரு நூறு ஆண்டுகட்குக் கணக்கு எடுத்தால் கிட்டத்தட்ட முப்பத்தாறு பெருங் கலவரங்கள் அந்தப் பகுதியில் நடந்திருக்கின்றன. 1921 இல் மிகப் பெரிய அளவில் நடந்த கலவரத்தையொட்டித்தான் மலபார் விசேஷப் போலீஸ் படையை பிரிட்டிஷ் அரசு அமைத்தது'' என்பது போன்று[56] காவல்துறை சார்ந்த செய்திகள் அமைகின்றன.

இலக்கியப் புலவராயின் அவரது இலக்கியத்திறனாய்வுகள் இடம் பெறல் சிறப்புப் பெறுகிறது. ''மாந்தர் வாணாளின் ஆதி மத்தியாந்த நிலைமையை உணர்த்தும் உடற்கூற்று வண்ணமும் ஒன்றை இவர் பாடினார். அதன் அலங்காரம் செம்பாகம், பொருளாதிய எவரையும் வசியம் பண்ணாமல் இரா. அதன் பொருணயம் விளங்கிய ரொபேட் தேசிகர் (Rev. Mr. Robert) அதனை இங்கிலிஷ் பாஷையில் மொழி பெயர்த்திருக்கிறார்'' எனும் பகுதியைச் சான்றாகக் காட்டலாம்.[57]

---

55. மேற்படி பக். 199-200
56. ஒரு போலீஸ்காரரின் டைரி, எப். வி. அருள்
57. அ சதாசிவம்பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம்; ப. 105

சமயம் சார்ந்தவராயின் அவர் செய்த அற்புதச் செயல்கள் முக்கியத்துவம் பெறுதலை. ஊமைப்பிள்ளையைப் பேச வைத்தது. மீனவப் பெண்ணின் நலிந்த கை நலம் பெறச் செய்தது, சிறைக் காவல் கடந்தது போன்றவற்றை உள்ளடக்கிய காரைக்கால் மஸ்தான் சாஹிப் வரலாற்றின் மூலம்[58] உணர்த்தலாம். இவ்வாறே ஒவ்வொரு துறைக்கும் சான்றுகள் தரவியலும்.

4. வரலாற்றுத் தலைவரின் பண்பு விளக்கம் பெறுதற் பொருட்டும், பெருமையை நிலை நாட்டுதல் அல்லது கொள்கை வலியுறுத்தல் பொருட்டும் அவரது வாய் மொழிகளையே நூலுள் எடுத்தாளுதலும் குறிப்பிடத்தக்கது. பாரதியின் தமிழருக்கு உணர்த்திய அறிவுரையை, ''தமிழா எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர்நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. ''முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய் என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது'' என்று அவரது குரலிலேயே தந்திருப்பதன்[59] மூலம் இதனை உணரலாம் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எழுதிய கடிதங்கள் இதனுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.[60] இவற்றால் வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய சுயமான எண்ணத்தைக் கற்பாரும் உண்டு பண்ணிக்கொள்ள இயலும். உண்மை விளக்கத்திற்கு இவை உற்ற துணையாகின்றன.

பெற்றாரு னின்னைப் பெற் றார்போற்பெற்
    றார்களும் பேண்பிறப்பை
உற்றாரு னின்னைப் போலவுற்
    றார்களு முன்னருளை
நற்றா ரணியு ளெனைப் போற் பெற்
    றார்களு நாடுறினும்
மற்றார்முற் றோர்தரு மீனாட்சி
    சுந்தர மாமணியே

58. காரை. இறையடியான் மு. சாயபுமரைக்காயர், காரைக்கால், மஸ்தான் சாஹிப் வலியுள்ளாஹ் வரலாற்றுப் பேழை காரைக்காண்டம்
59. பி. எல். ராஜேந்திரன், தேசியக்கவி; பக். 42
60. சு ர. சண்முகம்; மேதைகள் வாழ்விலே; பக். 70

என்பது[61] போன்று புலவராயின் அவர் தம் பாடல்கள் இடம் பெறுதல் தவிர்க்க இயலாததாகிறது.

5. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய பிறர் மதிப்புரைகள் உண்மைத் தெளிவிற்கு மிக இன்றியமையாததுடன் அவர் தம் சிறப்பிற்கும் காரணமாக அமைகின்றன. எனவே வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் இதற்கும் சிறந்த முக்கியத்துவம் அளிக்கின்றனர். 'இந்திய தேசீய ராணுவத்தை அமைத்த மற்றொரு மாவீரர் நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸ், ''சாவர்கரின் தீர்க்க தரிசனத்தினால்தான், தேசபக்தி வீறுகொண்ட ஆண் பெண்களுக்குள்ள இந்திய தேசீய ராணுவத்தை நிறுவ முடிந்தது'' என்று சாவர்கரைப் போற்றினார் என்பது[62] இதற்குக் காட்டாகும். இத்தகையன ஒருவர் பற்றிய முழுமை அறிவினைப் பெற, வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் நோக்க நிறைவேற்றத்தினைப் பெற மிகச்சிறந்த கருவிகளாகின்றன.

6. வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே வரலாற்றாசிரியர் இடை புகுதல், சூழ்நிலையைத் தெளிவுறுத்தல் பின்பு விளக்கம் செய்தல், நிகழ்ச்சியின் இயல்பினை உள்ளவாறு உணர்த்தல் போன்ற பயன்பாடுகளை உடையனவாகி வேண்டப் படுகின்றது. ''நெப்போலியனைப் போல நெஞ்சுரம் படைத்த ஒரு சக்கரவர்த்தியை சரித்திரத்தில் காண்பது அருமை; எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்; எண்ணியர் திண்ணியர் ஆகப்பெறின் என்னும் குறள் நெப்போலியன் வாழ்க்கையில் முழுக்க முழுக்கப் பொய்த்து விட்டது. அடல் வீரனையும் விஞ்சிய முழு ஆற்றல் ஒன்று இருக்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. இத்தகைய நிலையையே நம் நாட்டுப் பெரியவர்கள் விதியென்று குறிப்பிடுகிறார்கள், ஊழில் பெருவலியாவுள என்பது நெப்போலியன் வாழ்வில் முழுவதும் மெய்யாகி விட்டது''[63] எனும் குறிப்பு நெப்போலியனைப் பற்றிய ஒரு பரிதாப உணர்வை உண்டு பண்ணுவதாக அமையக் காணலாம். சில வேளைகளில் இத்தகைய குறிப்புகள் சுவையுடையதாகி நூலின் ஒட்டத்தினை மிகுவிப்பதாகவும் அமைகின்றன. ஆசிரியர் எவ்வளவு தூரம் இவ்வாழ்க்கை வரலாற்றில் ஈடுபட்டிருக்கிறார் என்பதனை அறுதியிடவும் இவை பயன்படுகின்றன.

---

61. உ. வே. சா. மேற்படி ப. 17
62. எம். வி. வெங்கட்ராம்; நாட்டுக்கு உழைத்த நல்லவர் வீர சாவர்கர், ப. 63
63. அ. லெ. நடராஜன்; நெப்போலியன்; ப. 320

7. நூலின் முன் அல்லது பின் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் தோற்றம் முதல் இறுதி வரை கால வரிசையில் தொகுத்தளிக்கப்படுகின்றன.[64] வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்தினை இவை நல்குகின்றன. வரலாற்றாசிரியர்கள் தங்கள் எண்ணத்திற்கு ஏற்ப நிகழ்ச்சிகளை முன்பின் அமைத்துக் கூறும்பொழுது இக் குறிப்பு வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை வரிசைக்கிரமமாக அறிய பெரிதும் துணை நிற்கின்றது.

8. தெளிவில்லாத வரலாற்றுச் செய்திகளையே துணையாகக் கொண்டு ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் படைக்கும் பொழுது அவருடன் தொடர்புடையதாக விளங்கும் கதைகளையும் சுட்டுதல் கற்பாரும் அவர் பற்றிய உண்மை நிலையைப் புரிந்து கொள்ளத் தேவையாகிறது.[65]

9. ஒருவருடைய வாழ்க்கை வரலாறு கற்பாருக்கு வழிகாட்டியாக அமைதல் தேவை எனும் நோக்கில் வாழ்க்கை வரலாறு படைக்கும்போதும் இலக்கியப் புலவர்களைப் பற்றிய வரலாறு படைக்கும் பொழுதும் அவர்கள் அருளிய மணிமொழிகள் சிறப்புப் பெறுகின்றன. ''அவர்களுடன் நீண்ட நேரம் விவாதித்தபின் சுவாமிஜி பின்வருமாறு கூறினார்; ஏழைகளுக்குச் சேவை செய்வது பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பது, துக்கப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது, தவறி விழுந்தவர்களுக்கும் நண்பர்களற்றவர்களுக்கும் உதவி புரிவது ஆகியவை தாம் கடவுளை அறிவதற்குச் சிறந்த வழி''[66] என்பது போல அவை நூலின் இடை இடையே விரவியும் வரலாம் அல்லது நூலின் முடிவில் தொகுப்பாகவும் இருக்கலாம்.[67] அமைப்பு நிலையில் முன்னதே வேண்டப்படினும், ஒருவர் உலகிற்கு அளித்த செய்திகள் யாவை எனும் நிலையில் இரண்டாம் நிலை பயனுடையதாகிறது.

10. வாழ்க்கை வரலாறு எனும் பொழுது மிக முக்கியமாகத் தேவைப்படும் கூறுகளுள் காலக் குறிப்பு தலையாயது. ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் இது குறிக்கப்படும்பொழுது வரலாற்றில் ஒரு தெளிந்த கண்ணோட்டம் ஏற்படுகிறது. தமிழில் வாழ்க்கை

64. வித்தகன், மேற்படி வருடமும் வரலாற்றுக்குறிப்பும்
65. பி ஸ்ரீ. ஔவையார்; ப. 18-19
66. வெ. பார்த்திபன் (பதி) சிறுவர்களுக்கு விவேகானந்தர்; பக். 46
67. அ. லெ. நடராஜன்; குருநானக் தேவர் வரலாறு

வரலாற்று நூல்கள் இதற்கு அளிக்கும் முக்கியத்துவம் குறைவே. ஆங்காங்கே இக் குறிப்புகள் காணப்படினும் முழுமையான நிலையில் அமைந்துள்ளதாகக் கூற இயலாது. தன் வரலாறுகளில் கூட இக்குறைபாடு இருப்பது சுட்டத்தக்கது.[68] நாட்குறிப்புகளின்றி தன் நினைவுகளை மட்டுமே கொண்டு எழுதுகையில் இக் குறைபாடு எழுகிறது எனலாம்.

துணைப்பொருட் கூறுகளாவன:

11. பழைய இலக்கிய மரபினை ஒட்டி ஆசிரியர் நூலின் முன் காப்பு, கடவுள் வாழ்த்து, ஆசிரியர் வணக்கம் முதலியவற்றைச் சுட்டுதல் அமைகிறது. ராம. உ. ராமசாமி செட்டியாரின் ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம், தி. ஏ. ராஜரத்னம் பிள்ளையின் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம் முதலான நூல்களில் இவற்றைக் காணலாம்.

12. "இச்சரித்திரத்தைப் படிப்பவர்கட்கும் படித்துக் கேட்பவர்கட்கும் சமஸ்பொக்கியமும் நித்தியா நித்திய விஸ்து விவேகமும் சிவஞான சித்தியும் கிடைக்கின்றன" என்று[69] வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார் தன்னுடைய 'ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்' நூலுள் நூற்பயனைத் தனித்து ஓதியிருப்பது பழைய மரபின் பாற்பட்டதே.

13. நூலாசிரியர், வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் தொடர்புடையவராக இருக்கையில் இருவருக்கும் இடையே உள்ள தொடர்பு இடம் பெறும் நிகழ்ச்சிகளால் விளக்கம் பெறல் இயல்பு[70] ஆயின் நூலின் தொடக்கத்தின் முன் தனக்கும் வாழ்க்கை வரலாற்றுத்தலைவருக்கும் இடையிலுள்ள தொடர்பினை விளக்கிச் செல்லுதல்.[71] வாழ்க்கை வரலாற்றுத் தலைவருக்கு அமையும் மற்றொரு அறிமுகமாகவும், அவர்பால் ஆசிரியருக்குள்ள ஆழ்ந்த பற்றினை விளக்குவதாகவும் அமைகிறது. வாழ்க்கை வரலாற்று நூலில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதனைக் கற்பார் ஊகிக்க இது உதவுகிறது எனலாம்.

14. தமிழர் தன் பழக்கத்தினை எடுத்துக்காட்டும் சாதகக் குறிப்புகளும் சிலரின் வரலாற்று நூல்களில் இடம் பெறுகின்றன. இவற்கு 'தணிகை மணி, டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் வரலாறு' எனும் நூலைச் சான்றாக்கலாம்.

---

68. கண்ணதாசன், எனது சுயசரிதம்
69. பக். 60
70. உ வே சா. மேற்படி ப. 86-88
71. மு. நமசிவாயம்; காமராஜ் வரலாறு, என்னைக் கவர்ந்தவர்,

15. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் மரபு வழிப்பட்டியல் அமைக்கும் இயல்பினையும் அளிக்கும் பாங்கினையும் பாகூர் சு. குப்புசாமி முதலியாரின் வரலாற்றுக் களஞ்சியம் முதலான நூல்களில் காணலாம். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் முன்னோர் பற்றிய அறிவினைப் பெற இஃது துணை நிற்கின்றது.

16. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் உடன் வாழ்ந்தோர் அல்லது தொடர்பு கொண்டோர் பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன. "இராசராச வர்மாவை நினைக்கும்போது என்னுடைய கண்களில் என்னையறியாமல் கண்ணீர் வந்து விடுவதுண்டு. அவர் ஒரு சிறந்த எழுத்தாளராக ஆகும் திறன் இருந்தது. அதற்குச் சான்று அவர் எழுதிய அந்தப் பிராயணப் புத்தகம். அதுவும் அல்லாமல் அவர் அவ்வப்போது தன்னுடைய நாட்குறிப்புப் புத்தகத்தில் பல நினைவுகளைக் குறித்து வைத்திருக்கிறார்" என்பது போன்ற பகுதிகள்[72] ஆசிரியர் வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் தொடர்புடையவர்களையும் நன்கு அறிந்து வைத்திருக்கிறார் என்பதனை உணர்த்துவதாக அமைதலும் உண்டு. இது போன்ற குறிப்புகளின் ஒருநிலை. இது இஃதன்றி வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வாழ்வுடன் தொடர்புடையதாக, இன்றியமையாததாக, "பல துறைகளில் இரவிவர்மாவுக்கு உதவியாக இருந்தார். அவருடன் கடைசிவரை இருந்தவர்; சிறப்பாக ஓவியம் வரையத் தெரியுமாதலால் இரவிவர்மாவுக்கு வலது கரம் போல் உதவினர்; பல ஓவியங்களை வரையும்போது ஒன்றாக இருந்து பணி புரிந்தவர். அதுவும் அல்லாமல் தன்னுடைய சகோதரருக்குச் செயலாளர் போல் இறுதிவரை இயங்கினார். இரவிவர்மாவுக்கு ஆங்கிலம் தெரியாது ஓய்வு நேரத்தில் அவர் அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். கடைசி காலத்தில் ஆங்கிலத்தைச் சொல்லிக்கொடுக்க மிகவும் உதவினார்.[73] என அமைதலும் உண்டு. இந்நிலையில் இவை வேண்டற்பாலனவாம்.

19. நூலின் இறுதியில் பிற்சேர்க்கைகளாக வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றிய இலக்கியக் குறிப்புகள், அவர் மீது எழுந்துள்ள இரங்கற்பாக்கள்[74] பலரின் கருத்துரைகள்[75] ஆகிய

---

72. வித்தகன், மேற்படி, ப 95
73. மேற்படி பக். 95-96
74. அரு. சோமசுந்தரம்; வள்ளல் அழகப்பர்
கா. மு. ஷெரீப்; வள்ளல் சீதக்காதி வரலாறு
75. பாகூர். சு. குப்புசாமி, வரலாற்றுக் களஞ்சியம்

வற்றை இணைத்திருப்பது, வரலாற்றுத் தலைவர் பற்றிய முழு நோக்கினை அல்லது மேன்மையைத் தெளிவாக உறுதியான நிலையில் உணர்த்த வேண்டும் எனும் ஆசிரியர் நோக்கினைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

நூலின் முடிவு, வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவராயின் அவரை மேலும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி அமைகிறது. 'கழகத் தலைவர் கலைஞருக்கு 50ஆவது பிறந்தநாள் விழா பொன்னாள் இந்த நன்னாள் நாம் நமது நல் வாழ்த்துகளை அவர்பால் குவிப்போம், என்று பி. எல். ராஜேந்திரன் தன் தொகுப்பு நூலாகிய பொன்னாரத்துள் குறிப்பிட்டுள்ளமை சான்றாகும்.

மறைந்தவர்களாயின் நூலின் முடிவு, அவர்களின் பெருமையை, தமிழுலகம் இவ்வகையான மனிதர்களைப் பெறுவது அருமை, என்பது போன்று அமைத்தல்[76] அல்லது அவரது மேன்மை குறித்து, 'ஆம் வீரரை வீரர் வணங்குவர் நாம் அவர்களை வணங்குவோமாக என வழுத்தி நிற்றல்[77] அல்லது வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பற்றியசுருக்கக் கருத்தாக 'உள்ளுவது எல்லாம் உயர்வு உளளல் என்னும் திருக்குறள் கருத்துக்கு, சிறந்த எடுத்துக் காட்டாக வாழ்ந்தவன் சக்கரவர்த்தி நெப்போலியன்' என்பது போன்ற[78] விமர்சனங்கள் செய்தல்; அல்லது ஒருவர் தம்மையே நன்றாக அறிந்து கொள்வதற்கும் விவேகானந்தரின் போதனைகளைப் படிக்க வேண்டும் என அறிவுறுத்தல்[79] எனப்பல நிலைகளில் அமைகிறது. கல்கத்தாவிலுள்ள வரலாற்றுஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள தேசீய வாழ்க்கை வரலாற்று அகராதியுள் வாழ்க்கை வரலாற்றுள் இடம் பெற வேண்டிய பொருட்கூறுகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.[80]

---

76. உ. வே. சா. மேற்படி பக். 181
77. எம். வி. வெங்கட்ராம்; மேற்படி. பக். 63
78. அ. லெ. நடராஜன்; மேற்படி ப. 331
79. வெ. பார்த்திபன் (பதி) மேற்படி; ப. 58
80. 1. Personal and Family Details - Date and Place of birth, parents, relatives, family background, social status, religion, caste etc. crown economic status. marriage, date name of wife, family background of wife.
    2. Early Life;. Education-travels-influences on mind and charactor (men, books, association etc).
    3. Career History;. History of the entire career from the time of reaching adulthood till death (or till

## வெளியீடு

'வாழ்க்கை வரலாறு எழுதுவது ஒரு கடினமான கலை. சுவை பொருந்த எழுத முயன்றால் கற்பனை மிகுந்துவிடும் கதை யாகிவிடும். மிகவும் வரலாற்று நினைவோடேயே எழுதினால் ஒரே அறுவையாகிவிடும்' என்பதினின்றும் வாழ்க்கை வரலாறு எழுதுவதன் கடினம் புலப்படும்[81]. நன்கு திறமை பெற்ற ஒரு வராலேயே சிறந்த வாழ்க்கை வரலாறுகள் படைக்க இயலும் என்பது உறுதி.

காப்பிய மரபினைப் பின்பற்றி விரிவான நிலையில் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் நாடு, நகர், வளம் காட்டல் 'வாரியார் வாழ்க்கை வரலாறு' போன்ற சில நூல்களில் இடம் பெறுகிறது. ஒரு நூலின் தொடக்கம், கற்பாரை ஈர்க்கும்படியாக அமைதல் தேவையாதலின் அதனுள் சில வெளியீட்டு உத்திகளை ஆசிரியர் கடைபிடிப்பது காணப்படுகிறது. சி. வை. தாமோரம் பிள்ளை, புராணங்களில் காணப்படும் மரபினைப் பின்பற்றித் தம் 'ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்' நூலினைத் தொடங்குகிறார். சிதாநந்தர், என்னும்மாணவர் தம் குரு 'சிதாநந்த வல்லிஸ்வருபரிடம் ஸ்ரீவித்திய விருத்திக்கிரந்த மெழுதிய ஸ்ரீமணிய சிவனாரின் வரலாற்றைக் கூறுமாறு கேட்க அவர் கூறுவதாக அமைக்கிறார்.

---

the present time for persons still alive), to be given in a narrative and chronological form, including positions held and honours received. Controversises, however unplesant to some, need not be avoided.

In the case of a writer or a poet, an account of his principal works should be given as in a standard history of literature.

4. Personality: Ideas and attitude towards different issues-social raforms, religion, education, nationalism economic problems, regionalisms etc.

Appearance, dress.manners and mode of life (austere, Ostentations, quiet, heroic, pohemion, etc)

5. General Estimate: An assessment of his position, views and contripution society, with particular reference to the promotion o; national conciousness. S.P, Sen (Ed) Dictionary of National Biography Vol. 1, P. XXXVI

81. இராம. பெரிய கருப்பன்; கலைத்தந்தை கருமுதியாகத்து ராசர்; சு. குழநதைநாதன், அணிந்துரை.

இரவிவர்மாவின் வரலாற்றைப் படைத்த வித்தகன் தம்முடன் பயணம் செய்தவர்களுடன் ஏற்பட்ட உரையாடலில் அவரது வாழ்க்கை வரலாறு கூறுவதாக அமைகின்றார். கண்ணதாசன் தன் வரலாற்றைப் (வனவாசம்) படர்க்கை நிலையில் நின்று கூறுதல் புதுமையாம்.

நூலின் இனிமையை மிகுவிக்கவும், கூற வரும் செய்தியினை அல்லது நிகழ்ச்சினை விளக்கவும் கதைகளை இணைக்கும் பாங்கும் குறிப்பிடற்பாலது.[82] சமய வரலாறு பேசும் நூல்களில் இது மிகுந்த சிறப்புப் பெறுகிறது.[83] நூலினை எளிமையாக்கித் தரல் காரணமாக உட்தலைப்புகள் இட்டுத் தரல் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இவ்வுட்தலைப்புகளைக் கொண்டே ஓரளவு வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வரலாற்றினைப் புரிந்து கொள்ளவும் இயலும்.[84]

இவ்விலக்கிய வகையுள் பிறமொழிச் சொற்களை அவ்வாறே கையாளுதல் ஓரளவு அதிகமாகக் காணப்படுகிறது. எப்.வி. அருள் தன் வரலாற்று நூலான, 'ஒரு போலீஸ்காரரின் டைரி'யில் ''அப்போதெல்லாம் சீனியர் போலீஸ் அதிகாரிகளுக்கு 'சில்வர் பாஸ்' ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. இதனால் ரயிலில் இலவசமாக உயர் வகுப்பில் பயணம் செய்யலாம். சில்வர் பாஸ் வைத்திருந்த வெள்ளைக்கார சீனியர் போலீஸ் அதிகாரி ஒருவர், ரயில் பயணம் சென்றதற்கு டி. ஏ. பில் போட்டு அரசாங்கத்தில் பணம் பெற்று வந்ததைக் கண்டுபிடித்து விட்டார் ராஜாஜி'' (ப. 38)என்று நவின்றிருப்பதைச் சான்றாகச் சுட்டலாம். நூலின் இடையிடையே வரலாற்றுத் தலைவரின் பல்வகைத் தோற்றங்களைக் காட்டும் புகைப்படங்களையும், அவரோடு தொடர்புடையோரின் புகைப் படங்களையும் தொடர்புடைய இடங்களின் புகைப்படங்களையும் இணைத்தல் நூலுக்கு ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துகிறது.[85]

## அமைப்பு

பொது நிலையில் இரு பெரும் பிரிவுகளில் இவ்வரலாற்று நூல்கள் அமைகின்றன. தலைவரின் பிறப்பு முதல் நூல் எழுதும்

---

82. உ. வே. சாமிநாதையர்; என் சரித்திரம்; பக். 21-
83. ரா. கணபதி; ஸ்வாமி
84. திரு. வி. கலியாணசுந்தரனார்; திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்
85. உலகப்பேரொளி-ஜவஹர்லால் நேருவின் பிரிவு; கழக வெளியீடு.

காலம் வரை அவரது வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கால வரிசையில் தொடர்ச்சியாக அமைத்துச் செல்லல் ஒருவகை. டெய்சி இராசையாவின் ஹெலன்கெல்லர், காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற்றுப் பேழை போன்றன இதன் பாற் படுகின்றன. காலத்திற்குச் சிறப்பிடம் நல்காது வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பல்வித பண்புகள் அல்லது பணிகள் என்பனவற்றை முதன்மைப்படுத்தி ஒவ்வொன்றாக அவற்றை விளக்கிக் கொண்டு வரல் மற்றொருவகையாகும். ஆறு. அழகப் பனின் டாக்டர் ராஜாசர் முத்தைய செட்டியார்; சுந்தாவின் பொன்னியின் செல்வன்[86] போன்றன இதனுள் குறிப்பிடத் தக்கன.

நூல் யாருக்காக எழுதப்படுகிறது என்ற நோக்கிலும் அமைப் பிலும் வேறுபாடு காணப்படுகிறது. சிறுவர்களுக்கு என்று எழுதும் பொழுது அவர்களுக்குத் தேவையானதும், அவர்களால் புரிந்து கொள்ளக்கூடியதுமான நிகழ்வுகள் மட்டுமே இடம் பெறுகின்றன. (குறள்வழி நடந்த பெரியோர்கள்-தமிழ்முடி).

கவிதை நூல்கள் காண்டம், படலம் முதலிய பிரிவுகளாக (இராம சுப்பிரமணிய நாவலர்-ஸ்ரீராமகிழிஷ்ண தேவரின் திவ்விய சரிதப்பாடல்) அமைதல் போன்று சில உரைநடை நூல்களும் அவ்வாறு அமைகின்றன. சுத்தானந்த பாரதியாரின் ஸ்ரீரமண விஜயம், பாலகாண்டம், பக்குவக் காண்டம், யோகஸ்வராஜ்ய காண்டம், யோக ஸாம்ராஜ்யக் காண்டம், ரமணாசிரமக்காண்டம் எனப் பகுக்கப்பட்டுள்ளமையை இதற்குச் சுட்டலாம்.

---

86. ''காலப்பிணைப்பு அல்லாமல் கருத்துப்பிணைப்பைக் குறியாகக் கொண்டு இந்த வரலாற்றை அமைத்திருக்கின்றேன். நிகழ்ச்சிகளையும் செயல்களையும் அவற்றின் காரணங்களுடன் பலன்களுடனும் இணைத்து வர்ணித்திருக்கிறேன். இப்படி வர்ணிப்பதற்கு, முன்னிருந்து பின்னும், பின்னிருந்து முன்னும் மையத்திலிருந்து இருகாலமும் நோக்குவது அவசியமாகும். ஒரே நாடகத்தில் வெவ்வேறு பாகங்களை ஏற்கும் ஒரு நடிகரைப் போல் கல்கி வாழ்ந்ததால்' அவருடைய விதவித வடிவங்களையும், வண்ணங்களையும், குணக்கூறுகளையும், பண்புகளையும், தக்கபடி, பகுத்தோ, தொகுத்தோ காட்டுவதற்காக இத்தகைய முறையைக் கையாண்டுள்ளேன். ஒவ்வோர் அத்தியாயத்தையும், அதன் தலைப்பு குறிப்பிடும் பொருளை 'ஆலாபனை' செய்யும் தனிக்கட்டுரையாகக் கருத வேண்டும்''-முன்னுரை-ப. 14

## வடிவம்

உரைநடை (வெ. இராமலிங்கம் பிள்ளை-என் கதை) கவிதை (தவச் செல்வர் விவேகானந்தர்); காப்பியம் (அரங்க சீனிவாசன் மனித தெய்வம் காந்திகாதை) நாடகம் (குணங்குடிதாசன்-குணங்குடி மஸ்தான் வரலாறு) முதலான வடிவங்களில் வாழ்க்கை வரலாறுகள் அமைந்துள்ளன. வைர முத்துவின் 'கவிராஜன் கதை' புதுக்கவிதை வடிவினைக் கொண்டுள்ளமை குறிப்பிடற்பாலது. இலக்கிய நயம் சிறக்கப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் கவிதை வடிவங்களுக்குக் காரணம் எனலாம்.

## பயன்

வாழ்க்கை வரலாறுகள் விரிந்த நிலையில் அமையும் பொழுது வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் நெருங்கிய தொடர்புடைய மற்றவர்கள் பற்றியும் குறிப்பிடத்தக்க அளவில் அறிய முடிகிறது. சான்றாக ரா. கணபதியின் 'சுவாமி விவேகானந்தர் நூலில்' அவரது குருராமகிருஷ்ணர் பற்றியும் அறிய முடிகிறது.

2. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எத்துறையைச் சார்ந்தவரோ அத்துறை பற்றிய பொது அறிவினைப் பெறுதற்கும் வழியேற்படுகிறது. எப். வி. அருளின் 'ஒரு போலிஸ்காரரின் டைரி'யை இதற்குச் சான்றாக்கலாம். பதிப்புக்கலை பற்றி அதனை ஆய்வு முறையில் விளக்கும் நூலை விட உ. வே. சாமிநாதையரின் 'என் சரித்திரத்தின்' மூலம் அதிகமாக அறியமுடியும்

3. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் எந்த கால கட்டத்தைச் சார்ந்தவரோ அக்காலம் பற்றிய அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள வழியேற்படுகிறது.

4. பிற நாட்டினர் அல்லது பிற மொழியினர் வாழ்க்கை வரலாற்றுத் தலைவராகும் பொழுது அவர்களது நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் உணரலாம்.

5. ''கண், காது, வாய்— ஆகிய முப்புலன்களில் ஊனமுற்றிருந்தும் தொடு உணர்ச்சியினையும், மோப்ப சக்தியினையும் பெரிதும் பயன்படுத்தி யாவரும் வியக்கும் வண்ணம் வளமான வாழ்வு பெற்ற பண்பாளர் அவர். தான் மட்டுமல்ல தன்னைப் போன்ற ஊனமுற்றோரும் பயன்பெறப் பெரிதும் உழைத்த சான்றோர் அவர். குறைவாலும் நிறைவு பெற்ற இத்தகைய

சான்றோர் ஒருவரின் வாழ்க்கைக் கதையை இன்றைய மாணவர் கற்றுப் பயனுற வேண்டும் என்ற ஆவலால் இந்நூலை எழுதினேன்'' என்னும் உரையால்[87] வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமைதல் என்னும் பயனும் அமைதல் காணலாம்.

## வளர்ச்சி

1. வாழ்க்கை வரலாற்றிலக்கியம் முழுமை பெறத் தொடங்கிய காலத்தில் புலவர் வரலாறுகளே மிகுதியாக எழுந்தன அந்நூல்களில் உண்மை நிகழ்வுகளுடன் வழக்குக் கதைகளும் இரண்டறக் கலந்த நிலை காணப்பட்டது. தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்தைச் சான்றாக்கலாம். இதற்குரிய காரணத்தை உ. வே. சா. விளக்கியுள்ளார்.[88] இன்று வழக்குக் கதைகளுக்கு முதலிடம் தராமல் உண்மை நிகழ்வுகளை மட்டுமே ஆராய்ந்து அவற்றைத் தரல் சிறப்புப் பெறுகிறது.

2. வாழ்க்கை வரலாற்றுத்தலைவருடன் தொடர்புடைய ஊர்களுக்கு அவர்கள் சென்ற கால வரிசையிலேயே சென்று தம்முடைய பயண நிகழ்வுகளும் குறிப்புகளும் தொடர்ந்து வருவதுடன், நாயகரின் வரலாற்றினையும் இணைத்துத் தரும் 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' (சோ. சிவபாத சுந்தரம்) போன்ற நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும். இதனால் கற்பார் இரு நிலைகளில் பயன்பெறுகின்றனர். வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் வரலாறு காணல், வரலாற்றாசிரியரின் பயண அனுபவங்களைப் பெறல் என்பன அவை. இவை மிக்கச் சுவை பொருந்தியமைகின்றன என்பதும் சுட்டத்தக்கது.

3. ஒருவர் பற்றி பலர் தம்முடைய அனுபவங்களைத் தொகுத்துத் தரும் நிலையும், நாகை தருமன் படைத்த

---

87. டெய்சி இராமையா; ஹெலன் கெல்லர், முன்னுரை
88. ''பண்டைக் காலத்தில் முறையாகப் பாடஞ் சொல்லி வந்த வித்துவான்கள், நூலாசிரிகளுடைய வரலாற்றை மாணாக்கர்களுக்கு முதலிற் சொல்லிவிட்டு அப்பால் நூலை அறிவுறுத்தி வந்தனர். அதனாலேதான் புலவர்களுடைய சரித்திரத்தை எழுதி வைக்கும் வழக்கம் இலதாயிற்றென்று தோன்றுகின்றது. இங்ஙனம் அவ்வரலாறுகள் வழிவழியே வழங்கிவந்தன. முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலும் தவறிய பிற்காலத்தில் ஆசிரியர் வரலாறுகள் பலபடியாக வழங்கத்தலைப்பட்டன.

அண்ணாவின் கடைசி நாட்கள் போன்ற நூல்களில் காணப்படு கிறது. இதனால் பலருடைய கண்ணோட்டத்தில் வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் பண்புகளை அறிய முடிகிறது. இத்தகைய தொகுப்பு நூல்கள் ஒருவர் பற்றிய புகழாரமாகவே அமைகின்றன என்பதும் உணரத்தக்கது. தலைவர் பற்றித் தன்னுடன் ஒன்றிய நினைவுகள் அல்லது நிகழ்ச்சிக் குறிப்புகள் இவற்றில் இடம் பெறு கின்றன.

4. பரணீதரன் தான் கஸ்தூரி திலகம் படைத்தது பற்றி நவிலும் பொழுது 'இதில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் உண்மை யாக நடந்தவையேயாயினும் சிற்சில இடங்களில் தேவையான அளவிற்குக் கற்பனையையும் புகுத்தியிருக்கின்றேன். சில இடங் களில் உண்மை நிகழ்வுகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு கற் பனை உரையாடல்களை சேர்த்திருக்கிறேன். ஆனால், பாத்திரங் களின் தன்மைக்கும் குணம் பண்புக்கும் மாசு ஏற்படாத வகையில் அவற்றைக் கையாண்டிருக்கிறேனா, இல்லையா என்பதை வாசகர் களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்' என்று கூறுகிறார். பாத்திரத் தின் உண்மையியல்புக்கு முரணாத வகையில் கற்பனைக்கு இடந் தருதலை ஒரு வளர்ச்சி நிலையாகக் கொள்ளலாம் எனினும் இந் நிலையின் அதிக அளவில் கற்பனையைப் புகுத்திப் பாத்திரத்தின் உண்மை நிலையை மறைத்தற்கு வாய்ப்பிருத்தலின் இதன் தேவை ஆய்விற்குரியது. இலக்கியச் சுவையை மிகுவிக்கவே இந்நிலை அமைகிறது.

5. பிரபந்தங்களின் வடிவிலும் வாழ்க்கை வரலாற்றை அமைத்தல் ஒரு வளர்ச்சி நிலை. த. அமிர்தலிங்கத்தின் தலைவர் ம. பொ. சி. ஆற்றுப்படை போன்றன இதனை உணர்த்துகின்றன. பாரதி நூற்றாண்டுச் சொற்பொழிவுக் கூட்டத்தில் ம. பொ. சி. உரை கேட்க வந்த தம்பிக்கு அருகிலிருந்த ஒருவர், ம. பொ. சியின் வரலாறு கூறி, அவரை 'ஐயன்' ஆள்வினை ஆற்ற தம்பி அழைத் திருக்கின்றார் அண்ணல் தாள் இணை சேருவாயே' என்று ஆற்றுப் படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி வரவேற்கத்தக்கதாகும்.

6. தம் அவல நிலையால் அனுதாபத்திற்குரியோராக விளங்கும் பலர் பற்றிய வரலாறுகள் 'உண்மைக்கதைகள்' எனும் பெயரில் மிகுதியாக எழுகின்றன.[89] இவற்றில் வாழ்க்கை

89. சிவசங்கரி; உண்மைக்கதைகள். இ.ப.மே. 1982. சென்னை திருமகள் நிலையம்.

வரலாற்றுத் தலைவர் மற்றும் தொடர்புடையோரின் இயற் பெயரும், ஊர்பெயரும் மாற்றம் பெற்றுக் கற்பனைப் பெயர் பெறுகின்றன. அவல நிலைக்கு ஆளாகிய சூழல், நிகழ்ச்சிகள், அனுபவித்த இன்னல்கள், தற்பொழுதைய நிலை போன்றன இதனுள் இடம் பெறுகின்றன. இகழுக்குரியோரைக் கண்டால் ஒதுங்கி நிற்பதுடன் அவர்களுடைய செயலால் அல்லது நிலையால் அருவருப்புக் கொள்ளுதலும் மனித இயல்பாதலின் அவர்களின் உண்மைப் பெயர்கள் மறைக்கப்படுகின்றன. தம்மைப் பற்றிய இழிந்த நிலை உலகிற்கு நேரிடையாக வருதலை விரும்பாததும் இம்மறைமுக அமைப்பிற்குக் காரணமாகலாம். எனினும் இவையும் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் ஓர் வளர்ச்சி நிலை எனக் கொள்வதில் தவறில்லை.

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தில் மாத, வார, நாளிதழ்களின் பணி குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புடைத்து. அன்று முதல் இன்று வரை அவை பல இனிய வாழ்க்கை வரலாறுகளை உலகிற்கு அளித்துள்ளன. உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரம் உட்பட அவரின் பிற வாழ்க்கை வரலாற்று நூல்கள் பல முதலில் கலை மகள், ஆனந்த விகடன் முதலான இதழ்களில் வெளிவந்த பின்பே நூலாக்கம் கொண்டன.[90] இன்றும் இந்நிலை தொடர்வதைச் சுந்தாவின் பொன்னியின் செல்வன்[91] போன்றவற்றால் அறியலாம் பல இனிய வாழ்க்கை வரலாறுகள் இவற்றின் மூலமே இலக்கிய உலகில் புகுந்துள்ளன.

நாட்டைத் தம் செயலால் பெருமைப் படுத்திய நல்லோர் தம் வாழ்வினை முறையாக வெளியிடுவதில் பழனியப்பா பிரதர்ஸ், வானதிப்பதிப்பகம் போன்ற பதிப்பகங்களும், சாகித்திய அக்கா தெமி, தேசியப் புத்தக நிறுவனம் முதலிய நிறுவனங்களும் ஆற்றும் பணி பாராட்டற்குரியது. இந்நிறுவனங்களின் வழிப்பல சிறந்த வாழ்க்கை வரலாறுகள் மொழி பெயர்ப்புகளாகக் கிடைத்துள்ளன.

## வாழ்க்கை வரலாற்றிலக்கியக் கொள்கை

இது காறும் கூறியவற்றைத் தொகுத்து நோக்குங்கால் கீழ்க் கண்ட சில வாழ்க்கை வரலாற்று இலக்கியக் கொள்கைகள் காணக் கிடக்கின்றன.

---

90. மகா வைத்திய நாதையர் வரலாறு முதலியன கலைமகள் இதழில் வெளிவந்தன. என் சரித்திரம் ஆனந்தவிகடனில் 1940 முதல் 42 வரை தொடர்ந்து வெளிவந்தது.
91. 1974 முதல் 1978 வரை தொடராகக் கல்கியில் இடம் பெற்றது.

1. வாழ்க்கை வரலாறு என்பது, 'ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தினையும் அவற்றின் சிறப்பு, உண்மை, காலம் முதலானவற்றிற்கு முதன்மையளித்து, வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பண்பு தெளிவாக அவற்றிடையே புலப் படும்படிக் கோவை செய்து இலக்கிய நயம்பட உரைத்தல்' என்ப தாகும்.

2. பல்வகை நோக்குகளிலிருப்பினும் பிறருக்கு வழிகாட்டுதல் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டியவற்றை அறிவுறுத்தல் என்பவற்றையும் உள்ளடக்கி எழுதல் இலக்கிய பயன் குறித்து வேண்டற்பாலதாகிறது.

"ஆன்மீகத் துறையைச் சேர்ந்த பெரியோர்களின் வரலாற்றைப் படிப்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. சுவாமி விவேகானந் தரின் வரலாறு, சிறுவர்களின் மனோநிலையை வளர்க்கப் பெரிதும் உதவும் விவேகானந்தரின் தீரம், உண்மைக்காக போரிடும் தன்மை, கொள்கைக்காகவே துணிந்து வாழும் திறன் போன்ற பண்புகள், இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளன. மேலும், இளைஞர்களிடையே ஒரு கொள்கைக்காக வாழும் உறுதியையும் ஆன்மீக வாழ்வில் நாட்டத்தையும் ஏற்படுத்தும் சக்தியுடையது இவ்வரலாறு. முதியோர்களாயின் விவேகானந்தரின் தத்துவங்களால் கவரப்பட்டு உள்ளத் தூய்மையும், உயர்ந்த தத்துவ ஞானத்தையும் அடைய முடியும்" என்பது[92] போன்ற கூற்றுகள் ஏதேனும் பயன்பாட்டு அடிப்படையில் வாழ்க்கை வரலாறுகள் தோன்ற வேண்டும் என்பதையும், எத்துறை சார்ந்த தாக அது அமையினும் பயன்தர முடியும் என்பதையும் உணர்த்து கின்றன.

3. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருக்கு நாடு, மொழி போன்ற எந்த வேறுபாடும் இல்லை. எவரேனும் வாழ்க்கை வரலாற்றுத் தலைவராக இயலும்.

4. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் பழகியவராயினும் சரி, பழக்கம் அற்றவராயினும் சரி வாழ்க்கை வரலாறு படைக்கும் பொழுது தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம்

---

92. டி. எம். பி. மஹாதேவன்; சுவாமி விவேகானந்தர் வரலாறு, அ. லெ. நடராசன்

கொடுத்தல் கூடாது, தலைவரின் நல்ல, இயல்புகளைப் பாராட்டி விட்டுக் குறைபாடுகளை ஒளித்தலும் ஆகாது. இதனை ஆய்வாளரும் வலியுறுத்துவர்.[93]

5. ஒருவரின் வாழ்க்கை வரலாறு படைக்கும் பொழுது அவர் வாழ்ந்த காலத்தின் நிலையையும் தெளிவாகக் காட்டல் சிறப்புடையது.

6. பிறப்பு முதல் இறப்பு வரை அமையும் வரலாறுகள் தான் முழுமையான வரலாறுகள் என்பதில்லை. இறப்பின்றியும் சிறந்த வரலாறுகள் படைக்க முடியும்.

7. நிகழ்ச்சிகளை ஆசிரியர் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்துதல் தேவை. முக்கிய நிகழ்வுகள் எதுவும் விடுபடாமலும், அதே வேளையில் தலைவரின் பண்பு அல்லது செயல் முதலானவற்றை நன்கு விளக்குவனவாகவும் அமைதல் தேவை.

8. வாழ்க்கை வரலாற்றுத் தலைவரின் படைப்புகளும் அவர் தம் வாழ்வில் சிறப்பிடம் பெறுதலால் அவற்றிற்கும் உரிய இடம் தேவை. ஒருவர் பற்றிய பலரின் கருத்துரைகள் மேலும் அவர் பற்றிய வாழ்வு விளக்கத்திற்குப் பயன்படுதலின் அவற்றையும் தருதலில் தவறில்லை.

9. உண்மைக் குறிப்புகளுக்கு மட்டுமே இடம் தரல் வேண்டும் கற்பனை கலப்பு கூடாது. ஒன்று பற்றிய பலவிதமான எண்ணங்கள் இருப்பினும் அவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மையானவற்றை அறிதல் ஆசிரியரின் கடமை.

10. வடிவ வரையறை இவ்விலக்கியத்தைக் கட்டுப்படுத்தாது.

11. தலைவர் எத்துறையைச் சார்ந்தவரோ அத்துறையைச் சார்ந்தவரே தலைவரின் வரலாற்றை வரையும் பொழுது மேலும் சிறப்புடன் அஃது அமைய முடியும். சான்றாக உ. வே. சா

---

93. "இறுதியாக வாழ்க்கை வரலாறுகளிலுள்ள ஒரு குறைபாட்டைச் சுட்டிக் காட்டுவோம். பெரும்பாலும் வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் ஒரே உயர்வு நவிற்சியாக-வெறும் பாராட்டாக அமைந்துள்ளன. எந்தப் பெரியவரைப் பற்றியும் கருத்துவேற்றுமைக்கு இடமுண்டு ஆகையால் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்கள் தாம் சிறப்பிக்க எடுத்துக் கொள்ளும் அறிஞரின் குறைபாடுகள் இரண்டொன்றைச் சுட்டிக் காட்டுவது நலம். சோமலே வளருந்தமிழ் ப. 106

படைத்த புலவர்களின் வரலாறுகளும், ரா. கணபதி படைத்த ஆன்மீகப் பெரியோர்களின் வரலாறுகளும் அமைகின்றன.

12. வாழ்க்கை வரலாறு வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக மட்டுமே அமைந்து விடல் கூடாது. இலக்கிய மற்றும் பிற மேற்கோள்கள், கதைகள் போன்ற குறிப்புகளும் தேவையான அளவு இணையப் பெற்று சுவைமிக்கதாக, கற்பாரைக் கவருவதாக அமைய வேண்டும். வாழ்வு நிகழ்வுகள் அவ்வாறே கால வரிசையில் தான் அமைத்தல் வேண்டும் என்பதில்லை. நூல் எழுந்த நோக்கம் நிறைவேறும் வகையில் முன் பின்னாக அமைந்தாலும் ஏற்புடை நிலையில் அமைத்தலும் சிறப்பாகும்.

13. வாழ்க்கை வரலாற்றில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குக் காலக் குறிப்புகள் மிக இன்றியமையாதனவாகும்.

14. வாழ்க்கை வரலாற்றுத் தலைவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டோரால், வரலாறு படைக்கப்படும்பொழுது, தன்னுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளுக்கே முதன்மையளித்து, அதனால் நூலின் தலைவர் யார் எனும் ஐயப்பாடு எழா வகையில் ஆசிரியர் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு படைத்தல் வேண்டற்பாற்று.

## வாழ்க்கை வரலாறு அமைய வேண்டிய துறை

ஆண்டு, நாள் போன்ற காலக் குறிப்புகளுக்குச் சிறப்பளித்தல் மிகத் தெளிவாகத் தலைவரின் பண்புகளையும், செயல், படைப்பு முதலானவற்றை வெளியிடல், கற்பாருக்குச் சலிப்பு ஏற்படா வகையில் சுவை பொருந்த அமைத்தல், தன் விருப்பு வெறுப்பிற்கு இடமளிக்காது நடுநிலை நிற்றல்; வெறும் புகழுரையாக அமைக்காது உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தல் முதலிய கூறுகளடங்கும் வாழ்க்கை வரலாறுகள் மிகச் சிறந்தனவாகும். "இந்த நூலில் என் மதிப்பிற்குரிய தலைவர்களை, கட்சிகளை, சித்தாந்தங்களைத் தேவைப்படுமிடத்து தயவு தாட்சண்யமின்றி விமர்சித்திருக்கிறேன். அவர்களுடைய, அவர்கள் பால் பற்றுக் கொண்டவர்களுடைய மனங்கள் புண்படக்கூடாது என்று எச்சரிக்கையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கையாண்டிருக்கிறேன்" என்னும் கூற்று[94] நூலின் இயல்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த சான்றுஆம்.

---

94. ம. பொ. சி. எனது போராட்டம்; முன்னுரை

## முடிவுரை

தமிழிலக்கியத்துள் வாழ்க்கை வரலாறுகள் இன்று உயர்ந்த இடம் கொண்டுள்ளன. எண்ணற்ற இனிய நூல்கள் இவ்விலக்கிய வகையை இயன்றவரை வளம்படுத்தியுள்ளன. புதிய புதிய உத்தி களால் மேலும் இத்துறையை வளப்படுத்த இயலும் என்பதற்குச் சான்றாகவும் பல நூல்கள் இன்று எழுகின்றன. இலக்கியப் படைப்பாளர்கள் வாழ்க்கை வரலாற்றினைப் படைக்கும்பொழுது வெளியீட்டில் இலக்கியச் சிறப்பு மிகுந்து காணப்படுகிறது. இந் நூற்றாண்டில் எழுந்த இலக்கியங்கள் பலவற்றுள்ளும், இவ்வகை இலக்கியங்கள் பல காலத்தை வென்று நிற்கும் சிறப்புடையன என்பது உறுதி.

## துணை நூற்பட்டியல்

1. அருணாசலக் கவிராயர் சரித்திரம்; 1915; சென்னை லாங் மென்ஸ்கிரின் அன்கோ.
2. இரவிவர்மா; வித்தகன்; மு. ப. 1964; சென்னை வித்தகன் வெளியீடு.
3. இலக்கிய ஜோதி (ஒரு மோகன வாழ்வின் முழுநோக்கு); மது. சு. விமலானந்தம்; மு.ப. 1981; சென்னை;மோகனப் பதிப்பகம்.
4. எண்பதில்தமிழ்; ச.வே. சுப்பிரமணியன் ர. விஜயலட்சுமி (பதி)மு.1982; சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
5. எண்பெருந்தலைவரின் இளமை வரலாறுகள்; பூவை அமுதன்; இ. ப. 1976, சென்னை, முத்தையா நிலையம்.
6. எழுத்தாளர் ம. பொ. சி., சி. ஞானமணி; ஆக. 1975, சென்னை, ஞானம் பதிப்பகம்.
7. எழுத்தும் வாழ்க்கையும்; அகிலன்; மு. ப. நவ. 1978; சென்னை.
8. என் சரித்திரம்; உ. வே. சாமிநாதையர்; இ. ப. 1982: சென்னை சாமிநாதையர் நூல் நிலையம்.
9. எனது சுயசரிதம் (வனவாசத்தில் விட்டுப்போன பகுதி கள்) கண்ணதாசன். மு. ப. ஏப். 1978; சென்னை; பொன்னருவிப் பதிப்பகம்.
10. எனது போராட்டம்; ம. பொ. சி; மு, ப, மே, 1974; சென்னை; இன்ப நிலையம்,

11. ஒரு போலிஸ்காரரின் டைரி; எம். வி. அருள். மு.ப. மார்ச் 1978; சென்னை, பூம்புகார் பிரசுரம்.

12. ஔவையார். பி. ஸ்ரீ. மார்ச் 1976; சென்னை அல்லயன்ஸ் கம்பெனி.

13. காந்தியும் விவேகானந்தரும் (ஒரு பரிசீலனை); வெ. சாமி நாத சர்மா; இ.ப. செ.ப 1957, சென்னை; பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்.

14. காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வர லாற்றுப்பேழை; காரை. இறையடியான் மு. சாயுபு மரைக்காயர்; மு.ப. டிச 1981, காரைக்கால் முஸ்லீம் பஞ்சாயத்துச் சபை.

15. காளிதாச மகாகவியின் சரித்திரம் என்னும் கவிரத்ன சிந்தாமணி; சிதம்பரம். குருநாத கந்தசாமி முதலியார்; மு.ப. 1954, சென்னை பி. இரத்தினநாயகர் அண்டுசன்ஸ்.

16. குருபரதத்துவநூல், தண்டபாணி சுவாமிகள்; 1967, திருவாமாத்தூர் கௌமார மடாலயம்.

17. கௌதம புத்தர் அடிச்சுவட்டில்; சோ. சிவபாதசுந்தரம்; மு.ப.மே 1960; சென்னை; அமுத நிலையம்.

18. சிறுவர்களுக்கு விவேகானந்தர் வெ. பார்த்திபன் (பதி); ஜூன் 1974, சென்னை ராமன் பதிப்பகம்.

19. சுவாமி விவேகானந்தர் வரலாறு, அ. லெ. நடராஜன் மு.ப. 1975, சென்னை பழனியப்பா பிரதர்ஸ்.

20. தமிழக அமைச்சர்கள், பாணன்; மு. ப. 1965; சென்னை கலைவாணி புத்தகாலயம்.

21. தலைவர் ம. பொ.சி. ஆற்றுப்படை; த. அமிர்தலிங்கம் மு. ப. 1981 சென்னை செவ்வேள் பதிப்பகம்,

22. திரு வி, கா, வாழ்க்கைக் குறிப்புக்கள், திரு வி கலியாண சுந்தரனார்; சன. 1969, கழகம், சென்னை.

23. தேசியக்கவி. பி. எல் .ராஜேந்திரன்; மு. ப. மார்ச் 1982 சென்னை; வசந்தா பிரசுரம்.

24. தொல்காப்பியம்; இ. ப. 1981 சென்னை. என். சி பி. எச்

25. நாட்டுக்கு உழைத்த நல்லவர் வீரசாவர்கர்; எம். வி. வெங்கட்ராம்; மு. ப. 1970, சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.

26. நான்கண்ட பாரதம் (சுயசரிதம்) எஸ். அம்புஜம்மாள், மு. ப ஆக. 1973, சென்னை, காந்தி நிலையம்.

27. பாவலர் சரித்திர தீபகம் பகுதி. 1 பொ பூலோகசிங்கம், 1975 கொழும்பு, கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

28. பாளையங்கோட்டை எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவனான வரலாறு (தன் வரலாறு) எ.ஆ கிருஷ்ணபிள்ளை மு.ப. 1977; சென்னை வேதாகம் மாணவர் பதிப்பகம்.

29. புதுமைப்பித்தன் வரலாறு. ரகுநாதன்; மு. ப. நவ. 1980' மதுரை; மீனாட்சி புத்தக நிலையம்.

30. புலவர் புராணம்; தண்டபாணிசுவாமிகள்; 1908,; சென்னை; கலாரத்தினாகரம் அச்சுக்கூடம்.

31. பொன்னியின் புதல்வர் (கல்வியின் வாழ்க்கை வரலாறு) சுந்தா மு. ப. டிச. 1976 சென்னை, வானதி பதிப்பகம்.

32 பொன்னாரம்; பி.எல். ராஜேந்திரன் (தொகு). மு.ப.மே. 1973 சென்னை; பூங்கொடி பதிப்பகம்.

33. மாபெரும் வீரர்கள்; சி. பி. சிற்றரசு; மு.ப. சூலை 1675; சென்னை; பூம்புகார் பிரசுரம்.

34 மாவீரன் நெப்போலியன்; அ. லெ. நடராஜன், மு ப.நவ 1978; சென்னை, மணிவாசகர் நூலகம்.

35. மேதைகள் வாழ்விலே; இ. எஸ். மெர்வின்; மு. ப. ஆக 1976 சென்னை, நர்மதா பதிப்பகம். •

36. மேதைகள் வாழ்விலே; ர. சண்முகம்; மு ப. மே. 1975; சென்னை, அருணோதயம்.

37. வரலாற்றுக் களஞ்சியம்; பாகூர். சு. குப்புசாமி. மு.ப.சன 1980; சென்னை, சேகர் பதிப்பகம்.

38. வனவாசம்; கண்ணதாசன்; ஏப். 1981 சென்னை; வானதி பதிப்பகம்.

39. வாரியார் வாழ்க்கை வரலாறு; திருமுருக கிருபானந்த வாரியார் நவ. 1979; சிதம்பரம்; தில்லைத்திருப்புகழ் சபை-

40. வாழ்க்கை இலக்கியம் ஒரு வளர்கலை; மது.சு. விமலானந்தம்; தஞ்சாவூர் விஜய் வெளியீட்டகம்.

41. வாழ்க்கை வரலாற்று இலக்கியம்; சாலினி இளந்திரையன் மு.ப. சூலை 1974, சென்னை; தமிழ்ப்புத்தகாலயம்.

42. வித்துவான் தியாகராச செட்டியார் உ வே. சாமிநாத ஐயர், மு ப. சூலை 1951; சென்னை; கலைமகள் வெளியீடு.

43. ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்; வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்: 1896. சென்னை; ஸ்ரீலலிதா அச்சியந்திர சாலை.

44. ஹெலன் கெல்லர் டெய்சி இராசையா மே. 1970; சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

45. Literary Heritage of the Tamils: S.V. Subramanian + N. Ghadigachalam (ed); Ied Dec. 1981. Madras, International Institute of Tamil Studies.

46. Tamil Lexicon-Vol VI. University of Madras.

# 3

# நாவல்

—தா. வே. வீராசாமி

I

'நாவல்' என்ற சொல் பதினேழாம் நூற்றாண்டில் 'டெக்க மரான்' என்ற பெயரில் பொக்காசியோ எழுதித் தொகுத்த சிறு கதை போன்றவற்றைக் குறிப்பதாக அமைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீண்ட கதை வடிவம்—பெரிதும் நடப்பியலுக்குட்பட்டது—பொக்காசியோ படைப்புப் போலன்றி மிகுந்த சிக்கலமைப்புக் கொண்டது—போன்ற இயல்புகளைச் சுட்டும் இலக்கிய வடிவம் என்ற நிலையை அடைந்தது. இதில் உலாவும் கதை மாந்தர்களும், அமைந்த நிகழ்ச்சிகளும் உண்மை வாழ்வை வெளிப்படுத்த உதவின. இதனால் படித்தவரில் பெரும் பான்மை மக்கள் நாவல் படிப்பதில் பேரார்வம் காட்டத் தொடங் கினார். நாவல் படித்தல் நாகரிகமாகத் தெரிந்தது. இதன் வயப்பட்டவர் 'உயர்குடி' மகளிர் அவர்கட்குக் கிடைத்த ஓய்வின் மிகுதி இத்தகைய செயலில் ஈடுபடச் செய்தது. காதலும் வீரச் செயலும் மிடைந்த நீண்ட நெடுங்கதைகளின் கற்பனைச் சூழல், தாங்களே அக்கதை மாந்தர் எனக் கருத வழி செய்தது. சில சுற்று நூலகங்களும் இத்தகைய செயலுக்கு உரம் ஊட்டின.

ஆயினும் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நாவல் என்பது மதிக்கத்தக்கது அன்று என்ற கொள்கையை, சர். அந்தோணி, திருமதி மாலபிராப் போன்றவர்கள் பரப்பினர்,

மனவளம் ஊட்டா நூல் இலக்கியம் அன்று என்பது இத்தகையோர் கருத்து. கனவுலகில் இளைஞர்களை மிதக்கச் செய்யும் நாவல் ஒரு சிறந்த இலக்கியம் அன்று என்றும் அதனைப் படித்தல் கூடாது என்றும் கூறினர். அத்தகைய மனப்பாங்குத் தமிழகத்தில் இந்த நூற்றாண்டு இடைப்பகுதி வரை இருந்தது எனலாம். ஒழுக்கக் கேட்டை நாவல் பரப்பும் என்பதே இதன் தலையாய காரணங்களுள் ஒன்று.

'போன்மையின் போன்மை' என்ற கொள்கை பிளேட்டோ (427—348 கி மு.) காலம் முதல் பரவிவந்தது. கற்பனை பரவுவதால் உண்மை அரசியலில் உயர்ந்த அறிவு பரவத் தடை ஆகிறது. ஆதலால் நல்லரசுக்குத் துணைபோகும் உயர்ந்த கற்பனைப் படைப்பையே ஏற்றனர். பெரும்பான்மையான கற்பனைப் படைப்புகள் தகுதியற்றவையாயும் தீமை பயப்பவையாகவும் அமையும் என நம்பியதால் அத்தகையவற்றைத் தடுக்க எண்ணினர். நாவலின் புதுமை நிலையும் அதை மதிப்பிற்குரியதாகக் கருத வழி செய்யவில்லை. சிறுமை, பாலுணர்வு, தீமை என்பவற்றை அன்றாட மக்களின் அன்றாட வாழ்வில் நாம் நாளும் காணும் பற்பல இடங்களைக் களமாக அமைத்து வெளிக்காட்டும் போது அத்தகைய 'பெருமக்கள்' நாவல் படைப்பை இழிந்த இலக்கியமாகக் கருதினர்.

பண்டைய காப்பியம், துன்பியல் போன்ற மரபு வடிவங்களோடு நாவலும் ஒரு வகையில் உறவுடையது எனக் கொள்வர் சிலர். மேனாட்டார் அன்றைய நிலையில் பெரிதும் மதித்த உயர் கல்வியாம் இலத்தீனும் கிரேக்கமும் அறியாத மக்கள், பல்கலைக் கழகங்களில் பயிலாதவர்கள் நாவல்களை எழுதினர். அக்கால மக்களின் மதிப்பு நிலையில் அவர்கள் 'பெரியோர்' அல்லர். எனவே 'உயர் கல்வி' கல்லா மக்களின் படைப்பை உயர்ந்தது எனக் கருதுவதா என்ற சிக்கல் ஏற்பட்டது. தமிழக நாவல்களின் முதற் படைப்பாளிகளில் பெரும் பாலோர் பல்கலைக் கழகங்களில் பயின்று மேனாட்டு இலக்கிய வெளியீட்டு நெறியின் பரப்புவோராக வெளிப்பட்டதால் இங்குப் பெரியோர்' என்ற எண்ணம் தடையாக அமையவில்லை. மாறாகப் பண்பாட்டு எதிர்ப்பு நிலை ஒருவகைத் தடையாக அமைந்தது.

நாவல் எழுதத் தொடங்கிய காலத்திலேயே ஆண்டுக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட நாவல்கள் வெளிவரத் தொடங்

கின. வெளியீட்டாளர்களின் இலாப நோக்கும், அதற்காக அவர்கள் செய்த விளம்பர முயற்சிகளும் நாவல் பெருக்கத்திற்கு எண்ணற்ற வகையில் துணையாயின. உண்மையான நல்ல நாவல்களைவிட இரண்டாந்தர மூன்றாந்தர நாவல்களின் விளம்பரச் செல்வாக்கு முதன்மை பெற்று விற்பனை வெற்றியில் முடிவது நாவல் வரலாற்றில் மற்றொரு வகையில் காணவேண்டிய கருத்தாகும்.

பழங்கால நாவல்களிலிருந்து இக்கால நாவல்கள் பலவகையில் மாற்றமுற்று வளர்ந்து வந்துள்ளன. குறிப்பாகத் தமிழ் நாவல்களின் தொடக்கம் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திர'த்திலிருந்து (1879) தொடங்குகிறது. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியே தமிழ் நாவலின் பிறந்த காலமாக அமைகிறது. தமிழில் நல்ல உரைநடை நூல்கள் இல்லை என்ற குறையைப் போக்க இப்படைப்புத் தோன்றியது. வேதநாயகர் தாம் எழுதிய 'நீதி நூல்', 'பெண்மதி மாலை', 'சமரசக் கீர்த்தனம்' ஆகிய நூல்களில் அமைந்த அற நெறிக் கொள்கைகளுக்கு எடுத்துக் காட்டாக இந்த நாவலை எழுதியதாகக் குறிப்பார். எனவே தமிழ் நாவலின் தொடக்கத்திலே அறநெறிக் கொள்கையை மக்களிடையே பரப்புவது என்ற கொள்கை அரும்பி விடுவதைக் காணலாம். மேனாட்டில், குறிப்பாக இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் நாவல் தோன்றிய காலத்தில் எழுந்த பல்வேறு தோற்றக் கொள்கைகள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இடைமிடைந்த ஒரு நிலையாக வெளிப்படுகின்றன. வேதநாயகர் தம் நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு'எழுதிய முன்னுரையில் தமிழ் நாவலின் தோற்றத்திலேயே சில அடிப்படைக் கொள்கைகள் புலனாகின்றன.

II

மேனாட்டில் நாவலைப் பெருந்தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சாக முதலில் கருதினர். சில நாவல்களின் தன்மையை நாவல் வகைக்கே ஏற்றியதன் விளைவு இது. வாழ்வைக் கீழே தள்ளிவிடும் என ஜான்ரஸ்கின் போன்றவர்கள் தொடர்ந்து கூறிவந்தனர். உணர்வைத் தூண்டி ஒழுக்கத்தைக் கெடுத்து உறுதியைக் குலைக்கும் தன்மை கொண்டதாக வெறுப்பை நாவல்மீது பரப்பிய அதே காலத்தில்தான் அறநெறிக் கொள்கைகளைப் பரப்பும் வாயிலாக வேதநாயகர் நாவலைப் படைத்துள்ள நோக்கு வியத்தற்குரியது.

அறநெறியே வாழ்வு என்பது வாழ்வின் ஒரு மூலை. வாழ்வின் முழுமையைத் தழுவி உயிர்க்கு அமைதி நல்கும் இமயச் சாரலாக நாவலை உருவாக்க முனைந்தனர். ஒழுக்கமென்ற மருந்துக்கு இன்சுவையாகக் கற்பனைப்பாகைத் தடவிய முயற்சி இலக்கிய உலகில் தலை எடுத்தது. நேரிடையான எளிய ஒழுக்கத்தை நாடும் முயற்சி அரும்பியது. தொடக்க காலத்தில் நடப்பியலில் மனிதன் இருக்கக்கூடிய நிலையை எடுத்துக் காட்டிய நிலையி லிருந்து ஓரளவு மாறி அழகு நிலையைவிட அறவியலே அடிப்படை என்பதை நிலைநாட்ட முயன்றனர். அதன் விளைவாகக் கற்பு போற்றப் பெற்றது. வேதநாயகரின் கதாநாயகருடைய தாய் சுந்தரத்தண்ணி, கதாநாயகியாம் ஞானாம்பாள் ஆகிய இருவரும் கற்பின் செவ்வியராகவே வடிக்கப் பெற்றுள்ளனர். பெண் குலத்திற்கு அவர்கள் பேரணிகலன்களாவர். எல்லா நற்பண்புகளின் புகலிடம். தாமுற்ற துன்பங்களை ஏற்றுக்கொண்டு எல்லா நிலையிலும் நீதியையும், மனித அறத்தையும் காத்தனர். மற்ற துணைமாந்தர் நிலையிலும் பெற்றோரைப் பேணல், உடன் பிறந்த பற்று, குடும்ப நலம்காத்தல் நாணயம்—நன்றி ஆகிய நற் பண்புகளை வளர்த்தல் போன்ற இனிய பண்புகளைப் போற்றும் போக்கே பெரிதும் தென்படுகிறது. இத்தகைய அறவாழ்வே உண்மை வாழ்வு என்பதைத் தமிழின் முதல் நாவலில், டாக்டர் ஜான்சனின் அறக்கொள்கையை மேற்கோள்காட்டி அதன் நெறி யில் (தன்னை)மக்களுக்களிக்கும் முதன் முயற்சி வெளிப்படுகிறது.[1] இதனால் தமிழ் நாவலின் தோற்றத்திலேயே அறக்கொள்கையைப் பரப்பும் மனநிலை நன்குத்தென்படுகிறது. அதன்வழியே நற் பண்புடைய மாந்தர்களை, முயற்சியினால் உயரவும் தூய்மையு முள்ள நற்பண்புகளடிப்படையில், சந்தர்ப்பங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதிலும், அவ்வாறு முடியாவிடில் அதை ஏற்பதிலும் சிறப்பாக வாழ்வதாகக் காட்டமுடியும், தீமையைப் புலப்படுத்த நேரின் அதனை அருவருக்கும் மனப்பாங்கு அமைதல் வேண்டும்—இவ்வகையில் நன்மையை நாடவும் தீமையை வெறுக்க வும் உரைநடை வடிவில் சுவையாக அறிவுரை நிறைந்த நாவல் களைப் படைக்கும் கொள்கை முதலில் எழுந்தது.

பண்டித நடேச சாஸ்திரியார் போன்றவர்கள் தத்தம் நாவல் இயல்களின் தலைப்புகளிலே அறநூல்களிலிருந்து சில தொடர்

---

1. பிரதாப முதலியார் சரித்திரம், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சக்தி காரியாலயம், சென்னை, 1957, பக். 10-11.

களை எடுத்தமைத்தனர். அந்த இயலுக்குள் புகுமுன் அறம் தனியே உணர்த்தப் பெறும். வேதநாயகர் தம் நாவல்களின் அகத்தே தனியே எடுத்துரைத்த[2] அறங்களின் வடிவம் இயல்களின் தலைப்பில் தனிநிலை பெற்று விளங்கின. தொடக்க காலத்தமிழ் நாவல்களிலிருந்து தொடர்ந்து வெளிவந்த நாவல்களில் பெரும் பாலானவை தொன்றுதொட்டு வெளிவந்த அறக் கொள்கைகளை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன. அவைகள் வெளியிடும் பாங்கில் சில மாற்றங்கள் இருக்கலாம். எனினும் அறநெறியிலிருந்து வழுவுவதை எவ்வகையிலும் ஒப்பும் நிலை தோன்றவில்லை. எல்லா நாவலாசிரியர்களும் பழைய பழக்க வழக்கங்களின் தீமையைச் சுட்டும்—போதுகூடத் தம் புகழும் வருவாயும் கெடா வகையில் அறநெறிச் சார்பான கருத்துக்களை உடன்பாட்டு முறையிலும் தீமையை எதிர்க்கும் எதிர்மறை முறையிலும் வற்புறுத்தத் தவறவில்லை. பொழுதுபோக்குக்குரியவற்றை ரங்கராஜு, வடுவூரார் போன்றவர்கள் தம் நாவல்களில் விளக்கினும் ஆங்காங்கே அறக்கருத்தை மறவாமல் மொழிந்து சென்றனர். ஆயினும் இந்நெறியில் வள்ளுவர் கொள்கையை விரிந்த அளவில் அறவாழிபோன்ற கதை மாந்தர்களைப் படைத்துத் தொடர்ந்து பல நாவல்களில் பண்டைய தமிழறத்தைப் பரப்பியதில் ஊன்றிய உணர்வுடையவர் மு.வ. அவருடைய நாவல்கள் அறவியல் நாவல்

---

2. சுகுணசுந்தரி பொய்யைப் பற்றிப் பின்வருமாறு உபந்நியாசித்தாள்:
   சகல துர்க்குணங்களுக்கும் பொய்யே அஸ்திவாரமாயிருக்கிறது எப்படியெனில் ஒரு குற்றத்தைப் பொய் சொல்லி மறைத்துவிடலாமென்றும் தைரியத்தாற் செய்கிறபடியால் கொலை, களவு, வஞ்சகம், காமம் முதலிய சகல குற்றங்களுக்கும் பொய்யே பிதுர்ஸ்தானமாயிருக்கின்றது. ஆகையால் ஒருவன் பொய்யை விட்டுவிட்டால் அந்தத் துர்க்குணங்களும் நாளுக்கு நாள் குறைந்துவிடுமென்பதற்குச் சந்தேகமில்லை. நம்முடைய உண்மையான கருத்தை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தி அனுகூலமடையும் பொருட்டே கடவுள் நமக்கு வாக்கைத் தந்தருளினார். நம்முடைய நன்மைக்காகக் கடவுள் தந்த வாக்கை நாம் சத் விஷயத்தில் உபயோகிக்காமல் பொய், மோசம், முதலிய துர் விஷயங்களில் உபயோகிப்பது எவ்வளவு பெரிய அக்கிரமமாயிருக்கிறது?... இப்போது நடக்கிற அக்கிரமங்களுக்குப் பொய்யே முக்கிய காரணமாயிருப்பதால் பொய்யை மனப்பூர்வமாய் வெறுக்க வேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது' என்றாள்.

களாக அமைந்து 'நல்வாழ்வு' பெறவும், 'வாழ்க்கை விளக்கம்' உறவும், வள்ளுவர் ஒளிரவும் இடைவிடாது முயல்கின்றன. இக் கொள்கை தனித்து நிற்கிறது.

III

தொடக்க காலத்தில் நாவலை ஒரு கலைப் படைப்பாகவே மேனாட்டார் ஏற்கவில்லை. ஆயினும் அதை உரைநடைக்—காப்பியம் எனச் சிலர் கொண்டனர். தொழிற்புரட்சிக்கு ஏற்பச் செய்யுளைவிட உரைநடை வடிவம் செல்வாக்குப் பெற்றது என்பர். தமிழ்—முதல் நாவலாசிரியரும் இக்கருத்துக்குத் துணை செய்தார். காலப் போக்கில் புனைகதை, வரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகியவற்றின் கூறுகளிலமைந்த பல பண்புகளை நாவல் படைப்பில் புனைய முற்பட்டனர். வாழ்வில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சிகளின் நிழல் வடிவங்களை நாவலில் கையாண்டனர். வரலாற்று நிகழ்ச்சிகளோடு பேரளவும் ஒன்றுபடுவதாகவும் அவ்வுண்மைகள் கற்பனைப் பான்மையுடன் கலந்திடவும், உண்மை வரலாறு போன்றே அன்றாட வாழ்வில் காணும் மாந்தர் தம் வாழ்வை எடுத்துரைக்கவும் முயன்றனர். படிப்போர் அதனை உண்மை என்று கொள்ளும் வகையில் 'பிரதாப முதலியார் சரித்திரம்' 'கமலாம்பாள் சரித்திரம்', 'பத்மாவதி சரித்திரம்' என்ற தலைப்புகளில் நாவல்களை உண்மை வரலாற்று மணம் கமழ வெளியிட்டனர், ஆயினும் வரலாறு வேறு நாவல் வேறு என்ற எண்ணம் மாறுபடவில்லை. இத்தகைய கலையில் பல்வேறு சோதனை முயற்சிகள் தோன்றின. இதனால் நாவலில் பலவகைகள் எழுந்தன. அவற்றின் வாயிலாக நாவல் கொள்கை நன்கு புலப்படப் பல வாயில்கள் அமைந்தன.

மனித வாழ்வின் ஒரு கூறினை நாவல் வெளிப்படுத்தியது. புறநிலை புலப்பட உண்மைகள் விளங்க நாவல் மலர்ந்தது. இவ் வகையில் மனிதரின் பட்டறிவு அடிப்படையாக எழுந்த நாவலில் நடப்பியல் முதலிடம் பெறுதற்குரிய வாய்ப்பே பெருகியது. வேதநாயகரின் கொள்கைகளில் பழங்கதையைச் சார்ந்து, 'அரசர் கதைகளில் ஆர்வமூட்டி'க் கண்ணைக் கட்டிக் காட்டில் விடுவதில் உற்சாகம் கொள்ளச் செய்து அரண்மனை, பூங்கா போன்ற களங்களில் சுவையைப் பெருக்கி நடப்பியலுக்கு அப்பால் செல்லும் மனப்பாங்கைக் காணலாம். ஆனால் அப்போக்கை விடுத்து மதுரை மாவட்ட மக்களின் சிற்றூர் வாழ்க்கையை நல்லமுறையில் காட்டி

யுள்ளது 'கமலாம்பாள் சரித்திரம்'. பெண்டிர் வாயிலாகவும், கள்ளர்கள் வாயிலாகவும் அக்கால வாழ்வின் நடப்புகள் புலனாகின்றன. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம' தென் பகுதியிலுள்ள சிற்றூர் வாழ்வும் சென்னை நகர வாழ்வும்—குறிப்பாகக் கல்லூரி வாழ்வு, நடுத்தர மக்களின் இல்வாழ்க்கை—பற்றி அறியும் சாளரமாக உள்ளது. கல்விபெற்றுப் புதிய வாழ்வில் மாறும் நடுத்தர மக்களின் மாற்றங்களை, உயர்வை, இழிவை மறைக்காமல் மாற்றாமல் வெளிப்படுத்தும் வரிசையில் முன்னிற்கிறது இது வாழ்வின் கண்ணாடியாக இது விளங்குகிறது. வரம்பற்ற நெறியில் எல்லையற்று எதையும் புகழ்வதில்லை. தொடக்க கால நாவல்களில் மரபு மீறல்கள் காணப் பெறவில்லை. நடப்பியல் எனப் பின்னர் வந்தனவற்றுள் பழமையைச் சாடி புதுமையைப் புகுத்தும் வேகம் மென்மையாகத் தென்படும். தொல்பழங்கால இலக்கிய நெறியினையும் பெருமையினையும் சுட்டத் தவறவில்லை. இதனால் படித்த மக்களிடையே அத்தகைய இலக்கியம் பரவியிருந்ததைக் காட்டும் வகை தெரிகிறது. குறிப்பாகக் கம்பராமாயணம் பெரும்பான்மையான நாவல்களில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தியுள்ளது. தொடக்க கால நாவலில் இராமாயண நாடகத்தையும் அதனைக் காணும் நோக்கத்தையும் 'பிரதாப முதலியார் சரித்திர'த்தில் வெளிப்படுத்த[3] இன்று வெளிவரும் நாவல்களின் தலைப்பே இராமாயணத் தாக்கத்தைச் 'சுந்தர காண்டம்'[4] எனக் காட்டும்.

'தீனதயாளு' போன்ற பண்டித நடேசசாஸ்திரியின் நாவல்கள் எளிய கதையைச் சொல்வதில் நிறைவு பெற்றன. உயர்நிலை என உவப்பு நிலையைக் கூட்டாமல் உள்ளதை உள்ளபடிக்காட்ட முயல்கின்றன. ஆர். சண்முகசுந்தரம், சங்கரராம், சிதம்பர சுப்பிரமணியம், க. நா. சுப்பிரமணியம் போன்றவர்கள் சிற்றூர்ப் பின்னணியில் எளிய மாந்தர்களின் இயற்கைக் கோலங்களை இயல்பு நெறியிலேயே எடுத்துக் காட்டியுள்ளனர். மனித இயற்கையை வெளிப்படுத்தும் ஒளியே இவற்றின் தனி ஆற்றலாக உள்ளது. நாவல்கள் என்பன பொய் என்ற கூற்றை விலக்கி உண்மையாக உள்ளபடி உள்ளதை உரைக்கின்ற பாங்கை நடப்பியல் நெறி நாவலுக்கு வளமூட்டியது. அந்த நாவல்களைப்

---

3. பிரதாப முதலியார் சரித்திரம் (முன் கண்டது), பக். 10-11.
4. சுந்தரகாண்டம், ஜெயகாந்தன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1982.

பயிலும்போது தம்மை ஒத்தமாந்தர்களையே கண்டுணர்ந்தனர். அதுவே உண்மையின் முழுவடிவம் எனக் கொள்ளாவிடினும் உள்ளதை ஒரு நிலையில் நின்று உணர்த்தமுடிந்தது. குறிப்பாக ஆர். சண்முகசுந்தரத்தின் கதை மாந்தர்கள் மண்ணின் மக்களாக உணர்ச்சிக் கொள்கலமாக உயிரோடு உலவினர். மேலே கண்ட படைப்பளார்கள் எழுதிய உரையாடல் இயல்பாக அமைந்துள்ளன. பண்பாட்டு வளர்நிலையின் போக்கினைப் பிணைத்துக் காட்டவும் அவர்களின் படைப்புகள் துணைபுரிகின்றன.

குடும்ப நாவல்களில் அந்தந்த ஆசிரியர்கள் வாழ்ந்த கோயமுத்தூர், திருச்சி, தஞ்சை போன்ற பகுதிகளின் வாழ்வோவியப் பின்னணி நன்கு துலங்குகின்றது. தெருவில் அன்றாடம். பார்த்த மக்களே நாவலில் நடமாடி உரையாடிப் பல செயல் புரிவதைப் படிப்போர் துய்த்தனர். வாழ்க்கைச் சுரங்கத்தில் வெட்டியெடுத்த இயல்புக் கனிமங்களாக விளங்கினர். கலை நுணுக்கம், அவர்களின் இயல்பழகைப் புனையும் வாய்ப்பு மிகக் குறைவே.

## IV

தமிழ் நாவலின் தொடக்க காலமுதல் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும் முயற்சி தென்படுகிறது. சோதிடர் பைத்தியம் என்ற தனி அதிகாரத்தில் மாயூரம் வேதநாயகப் சோதிடம் சொல்லி உலகை ஏமாற்றி வருவதைச் சோதிடர் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய மற்றொரு நாவலாம் 'சுகுணசுந்தரி'யில் குழந்தை மணம் பற்றிக் கண்டித்துள்ளார்.[5] இத்தகைய சீர்திருத்தக் கருத்துக்கள் பகுத்தறிவுப் பாதைக்கு நாவல் வாயிலாக, முதல் விதைகளாக ஆயின.

அறிவைப் பெருக்கவேண்டும், நாம் யார்? உலகம் எப்படி உண்டாயிற்று? மழை, இடி, மின்னல் இவற்றால் நாம் அடையும் இலாப நட்டமென்ன? கடவுளென்று ஒருவரைப் பற்றி எல்லா ஊராரும் பேசுகின்றார்களே, அவரால் நாம் அடையும் நன்மை தீமை யாது? என்று அறிவியல் அடிப்படையில் நியூட்டன் கண்ட உண்மையை ஏற்கும் நெறியில் குருசாமி சர்மாவின் 'பிரேமகலாவத்யம்' (1893) என்ற நாவல் செல்லும்[6] எனவே இத்தகைய

5. சுகுணசுந்தரி, வேதநாயகம்பிள்ளை, சக்தி காரியாலயம், சென்னை, 1957, பக். 56-61.
6. பிரேமகலாவத்யம், குருசாமி சர்மா, பி. டி. பாணி கம்பெனி, சென்னை, 1940, பக். 79-80.

கருத்துக்களைப் படித்தால் பழைய நம்பிக்கைகளைக் கைவிடுவர் எனப் பழமைவாதிகள் புதிய இலக்கியமாம் நாவலைப் படிக்கத் தடைசெய்தது வியப்பன்று. கல்வி கற்று அதனால் அறிவுபெற்றுச் சமூகக் கொடுமைகளை நீக்க அ. மாதவையாவின் 'முத்துமீனாட்சி (1903) முயன்றது. அத்துடன் மனிதனை நல்லவன் கெட்டவன் என்று பார்க்கவேண்டுமே ஒழியச் சூத்திரன். பிராமணன் எனச் சாதி அடிப்படையில் பார்ப்பதில் பொருளில்லை எனவும், விதவையர் மறுமணம் வேண்டற்பாலது என்றும் கூறுகிறது. இந் நிலையில் பாரதியின் 'சந்திரிகையின் கதை'யும் ஒருநெறிப்படும். சாதிக் கொடுமையைக் காட்டிக் கைம்பெண் கொடுமையைக் களைய முற்பட்டது மறைமலையடிகளின் 'கோகிலாம்பாள் கடிதங்கள்'

தமிழகத்தில் அரசியல் மாற்றங்கள் எழவும் அத்துடன் சமூகப் புரட்சியும் தலை எடுத்தது பெரியார் இராமசாமியின் சீர்திருத்தக் கொள்கைகள் படித்த நடுத்தர மக்கள் பகுத்தறிவுப் பார்வை பெறத் துணைபுரிந்தன. வ ரா.வின் சுந்தரி (1917) இப்பாதைக்கு முன்னொளி வீசும் நாவலாக உள்ளது. சமூகக் குறைபாடுகளையும் சமயத்தால் ஏற்படும் தீங்குகளையும் ஒளிவுமறைவின்றித் தம் நாவல்களில் ஜே. ஆர். ரங்கராஜு எடுத்துக் காட்டியுள்ளார் மடாதிபதிகளின் கொடுமைகளை அவருடைய 'சந்திரகாந்தா' (1906) கூறும். ஆண் நாவலாசிரியர்கள் மட்டுமன்றிப் பெண் நாவலாசிரியர்களும் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தம் நாவல் கொள்கையாகக் கொண்டு பெண் விடுதலைக்கு டி. பி. இராஜ லட்சுமியும், சூனியம், மாந்திரீகம் போன்ற மூடநம்பிக்கைகளைக் களைய கிரிஜா தேவியும் நாவல்கள் எழுதினர்.

பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்கும் மாநாடு முத்துலட்சுமி ரெட்டி தலைமையில் நடந்தது. அதன்வழி தேவதாசிகளுக்கு முறையான நல்வாழ்வு கிடைக்கவேண்டும் எனப் பகுத்தறிவு இயக்கம் பாடுபட்டது. பெரியார் இயக்கத்தில் பாடுபட்ட இராமா மிர்த அம்மையார் இந்நிலைக்குதவ நாவல் ஒன்று 1936 —இல் எழுதி வெளியிட்டார்.

இச்சீர்த்திருத்த நெறிமுறைகளைக் காந்திய எழுத்தாளர்களும் ஒப்புக் கொண்டனர். வரதட்சணைக் கொடுமையைக் கல்கியின் 'தியாகபூமி' (1941)எடுத்துரைத்தது. நாரணதுரைக்கண்ணனின்பல நாவல்கள் பெண்படும் பாட்டை விரிவாக மக்கட்கு எடுத்துரைத் தன, இந்நிலையில் பெரியாரின் பின்வந்தோர் உணர்ச்சி பொங்க

கருத்து விளக்கத்திற்கு முதலிடம் தந்து பல நாவல்களைப் படைத்தனர். நாவல் உருவம் பற்றி இவர்கள் பெரிதும் கவலைப்படவில்லை. ஒரு சில முயற்சிகளைச் செய்து பார்த்தனர் எனலாம். நாவல் படைப்பை இவர்கள் கருத்து விளக்கக் கருவியாகக் கொண்ட கொள்கை இதனால் புலனாகும். இதற்குத் தக்கசான்றுகளாக அமைவன அண்ணாவின் படைப்புகள். சமுதாயத்தை எதிர்க்கும் திறம் படைத்த பெண்ணாகத் தம் 'குமஸ்தாவின் பெண்'ணும், பொருந்தா மனத்தைக் கடிவதாக்க 'கபோதிபுரக் காத' லும் சாதி மனித வாழ்வைச் சாய்க்கும் போக்கைக் 'குமரிக் கோட்ட' த்திலும், மூடநம்பிக்கைகள் பெண் குலத்தைச் சாய்ப்பதை 'ரங்கோன் ராதா' விலும் காட்டுவார். அண்ணாவின் அழகுநடை படித்த இளைஞர்களைக் கவர்ந்து அந்நெறியில் பல படைப்புகளைப் படைக்க வழிசெய்தது. மு. கருணாநிதியின் 'சுருளி மலை' சிற்றூர்களில் தேங்கிக் கிடக்கும் மூடநம்பிக்கையைச் சாடும். அதனைப் போக்கும் நெறியில் தொடர்பயணமிடுவன அவருடை ,வெள்ளிக் கிழமை' யும், புதைய' லும். மூடநம்பிக்கையில் மூழ்கிய மனிதர்களை மக்களாக மாற்றும் அறிவுப் பணியின் விளைவு டி. கே சீனிவாசனின் 'ஆடும் மாடும்' ஆசைத்தம்பி, தென்னரசு, இராதாமணாளன், பி. சி. கணேசன், பாண்டுரங்கன். போன்றவர்கள் பகுத்தறிவுப் பாதையில் பல படைப்புகளைத் தந்துள்ளனர்.

பகுத்தறிவுக் கருத்து விளக்கம் இப்படைப்புகளில் முதலிடம் பெறுகின்றன. உணர்ச்சி. எழுச்சி, புதிய கருத்தைப் பரப்பும் ஆர்வம், சமூகக் குறைகளைப் பகுத்தறிவு தீர்க்கும் என்ற நம்பிக்கை ஆகியவை இதன் போக்கில் தனியிடம் பெறுகின்றன. கருத்தை விளக்க அழகுநடை சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்நாவலின் தலையாய இலக்கியக் கொள்கை எண்ணற்ற மக்களைப் பகுத்தறிவுப் பாசறைக்கு ஈர்த்துச் சமூகச்சீர்திருத்தக் கருத்துகளை ஏற்குமாறு செய்வதேயாகும். இப்போக்கில் உருவத்தைவிட உள்ளடக்கம் போற்றப் பெறுகிறது. எல்லா வகையான நாவல் வகையையும் கையாள நினைப்பினும் அதற்கு வேண்டும் சூழல் கருத்து விளக்கமாகவே தனியிடம்பெற்றுவிட்டது.[7]

---

7. சமூக நாவல்களில் பகுத்தறிவுப் போக்கு, தா. வே. வீராசாமி, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு விழா மலர், 1981, பக் 178-182.

V

'பிரதாப முதலியார் சரித்திர' த்தின் தொடக்கத்தைக் காணும் போது, அது ஸ்பெயினில் வளர்ந்த 'போக்கிரிகள் நாவல்' போல அமைகிறது. ஆயினும் அதன் பின் வளர்ச்சி பல கதைகளின் அடுக்காக அமைகிறது. கற்பலங்காரி சரித்திரம், கருணானந்தம் பிள்ளையின் சரித்திரம், ஒன்பதுகரங்களின் கதை . புண்ணியகோடி செட்டி சரித்திரம், குணபூஷனி சரித்திரம் போன்றவற்றைக் காணும்போது அவற்றின் போக்கில் பழைய 'விக்கிரமாதித்தன் கதை' 'பஞ்சதந்திரக் கதை' போன்றவற்றைப் பின்பற்றும் கொள்கை புலனாகிறது. இதன் தொடக்க நிலைஇப்படி அமைகிறது எனினும் பின்னர் வரும் நாவல்களின் வளர்ச்சி நன்மைதரும் வளர்ச்சியாக மலர்கிறது.

கதைப் பின்னலும் கதை மாந்தரும் நாவலில் சிறப்பிடம்பெறுவதைப் பல நாவல்கள் வாயிலாக அறிய முடிகிறது 'கமலாம்பாள் சரித்திரம்' 'பத்மாவதி சரித்திரம்' போன்றவற்றில். மாந்தர் உருவாக்கத்தைவிடக் கதைப்பின்னலில் நிகழ்ச்சிகளே முதலிடம் பெறுகின்றன. பொன்னுசாமி பிள்ளையின் நாவல்களில் கதைப் பின்னல் செவ்வையாகப் பின்னப் பெற்று இறுதியில் நன்கு விவரிக்கப்படும் போக்கை அறியலாம். உரையாடல்களின் செல்வாக்கு இந் நாவல்களில் நாடகப் பாங்கினையும் கலக்கிறது. [8]அதனால் கதைமாந்தரின் தன்மை தனிச் சிறப்புப் பெறவில்லை என்பது உண்மைதான். இப்போக்கில் செல்வதுதான் ஸ்ரீநிவாசப் பிள்ளையின் 'காதற் பெருமையும் கருங்குடிச் சிறுமையும்' (1912). பாரதியின் கதை நாவல்களாக விளங்கும் படைப்புகளிலும் கதைப் பின்னலின் செறிவைவிட நெகிழ்வு நிலையே தலை எடுத்து நிற்கிறது.[9]

துப்பறியும்கதைகளாகத் தமிழில் நடேசசாஸ்திரியார் எழுதிய 'தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்' (1894) முதல் இடைக்காலத்தில் ஆரணி குப்புசாமி முதலியார் போன்றவர்களால் எழுதப்பெற்ற நூல்கள், தமிழ் வாணனின் சங்கர்லால் கதைகள், இன்று வெளிவரும் சுஜாதாவின் பல துப்பறியும்கதைகள் என்பவை கதைப்பின்னலுக்கே முதலிடம்

---

8. விஜயசுந்தரம் (1910), ஞானாம்பிகை (1913) போன்றவை பொன்னுசாமிப்பிள்ளை நாவல்களாம்.
9. 'சுந்திரிகையின் கதை', சின்னச் சங்கரன் கதை' போன்றவை,

கொடுப்பதைக் காண்கிறோம். தமிழ் வரலாற்று நாவல்களாக இன்றுள்ள பெரும்பாலான நாவல்கள் கதைப் பின்னலையே நம்பி வளர்ந்துள்ளன.

நல்ல நாவல்கள் கதை மாந்தர்களின் படைப்பிலேயே தலை சிறந்து நிற்கின்றன. மாதவையாவின் சில கதை மாந்தர்கள் அந் நிலையை மெய்ப்பிக்கின்றன.

## VI

தன் வாழ்வைத் தானே விதியாக மாற்றிக் கொள்பவன் மாந்தன். அத்தகைய மாந்தரின் வார்ப்பே நல்ல நாவலின் வார்ப் பாக அமைகிறது. கதைப்பின்னல் தலைசிறந்து நிற்கும் படைப்புக் களிலோ 'சூழ்நிலை- நிகழ்ச்சிக' ளின் பாவைகளாக மாந்தர் அமைகின்றனர். கா, சி. வேங்கடரமணியின் 'தேசபக்தன்கந்த'னில் (1932) உருவாகியுள்ளகந்தன், ரங்கசாமி, ராஜேஸ்வரி ஆகிய படைப்புக்கள் பின்வந்த பல தமிழ் நாவல்களுக்கு மாந்தரின் வார்ப்புப் பற்றி வழிகாட்டின. தமிழ் நாவல்களில் பிற்கால ஆசிரியர்களில் பலர் கதை மாந்தர்களைச் செவ்விதாகப் படைத் துள்ளனர். கல்கியின் சீதா, அகிலனின் உமா. பார்த்தசாரதியின் பூரணி, ஜெயகாந்தனின்கங்கா போன்றவர்கள் குறிப்பிடத் தக்க பெண்மாந்தர்கள். க. நா. சுப்பிரமணியத்தின் சோமு, ஆர் சண்முக சுந்தரத்தின் சாமிக் கவுண்டர், சிதம்பர சுப்பிரமணியத்தின் கிட்டு. சுந்தரராமசாமியின் ஜே. ஜே. போன்றவர்கள் ஆண் மாந்தர்களில் குறிபிடத் தக்கவர்கள். இவர்களால் கதையின் போக்குத் தனியே உருப்பெறுவதை உணரலாம். மாந்தர்கள் முதன்மை பெறு வதையும் அவர்களின் மன ஓட்டங்கள் வெளிப்படுவதையும் அவர் களின் ஆளுமை மற்றவர்களைப் பிணைப்பதையும் காணும்போது நிகழ்ச்சிகளின்ஓட்டம் மாந்தர்தம் ஆளுகைக்குள் அடங்கவேண்டும் என்ற படைப்புக் கொள்கை தெரிகிறது.

மாந்தரின் அகவாழ்வைப் பகுத்துக் காட்டும் நிலையில் பிரஞ்சு நாவல்களின் தாக்கம் ஏற்பட்டது. இதில் குறிக்கோளை நோக்கிச் செல்லும் மாந்தர் அமைவர். அல்லது சில மாந்தர்களின் உணர்வு அலைகளைத் தனித்தனியே பகுத்துக்காண்பர். அவர்களின் அகப் பகுதியில் காணும் இருண்ட மூலைகளில் பலஒளிக் கதிர்கள் பாய்ந்து உண்மை நிலையை உணர்த்தும். அகிலனின் சில கதை மாந்தர்கள் 'சினேகிதி' யில் இவ்வாறு அமைவர். நீலபத்மநாபனின் 'பள்ளிகொண்ட புரம்', நகுலனின் 'நிழல்கள்', மு. வ. வின்

'நெஞ்சில் ஒரு முள்' போன்றவற்றில் மாந்தரின் அகவாழ்வினைக் காணமுடியும். பொருளாதாரச் சீரழிவுகள் தனிமனிதனைத் தாக்க சமுதாயத்தின் கூட்டுமுயற்சியில் ஈடுபாடின்றித் தன்னையே மையமாகக் கொண்டு சுழலும்போது எழும் கலைப் படைப்பின் கொள்கையாக இவற்றைக் கொள்ளலாம்.

## VII

நாவலில் உரையாடல் பற்றிய கொள்கை, தொடக்கத்திலிருந்து இருபெரும் பிரிவினரால் இருவேறு முனையில் வளர்க்கப் பெற்று வருகிறது. அழகு நடையை மாற்றாமல், இலக்கியச்செவ்வி குலையாமல், சொல்வடிவம் முழுமை சிதையாமல் பண்டைய காப்பியங்களில் காணும் சுவை உருவமாக உரையாடல்களை அமைத்தனர். வேதநாயகரின் பின்வந்தோர். குருசாமி சர்மா. ராஜம் ஐயர் போன்றவர்கள் பேசும்போது உரையாடலில் என்னென்னமாற்றங்கள்ஏற்பட்டனவோ அவற்றை அவ்வவ்வாறே எழுதினர். சிற்சில மக்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்ற மொழியையும் நன்கு சுட்டிக் காட்டியுள்ளனர். மறைமலையடிகள் முழுவதும் தனித்தமிழ் நடையை விரும்பினும் படியாத பெண்கள், கள்வர் வேற்று மொழியினராம் பார்ஸி மக்கள் போன்றவர்கள் பேசும் போது கொச்சை நடையையே பயன்படுத்தியுள்ளார். இதற்கு நேர்மாறாகச் சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் பரிதிமாற் கலைஞர் தம் நாவல்களைக் கடினமான பண்டைய தமிழிலேயே எழுதினார். பாலசுப்பரமணிய பிள்ளை என்பவர் தம் 'விவேகரசவீரன் கதை'யைக் (1904) கவிதை வடிவிலேயே புனைந்துள்ளார். அதில்மொத்தம் 1636 பாடல்கள்உள்ளன. இந்நெறியில் நாமக்கல் கவிஞரின் 'அவனும் அவளும்' வெளிவந்தது. எனினும் பரிதிமாற் கலைஞரின் பண்டைநடையோ, பாலசுப்பிரமணிய பிள்ளையின் கவிதை நடையோ செல்வாக்குப் பெறஇயலவில்லை.

வட்டார மொழியைப் பயன்படுத்தி உண்மைப் பின்னணியை வெளிப்படுத்தத் தஞ்சை (தி. ஜானகிராமன்), திருச்சி (சங்கரராம்) கோவை (ஆர். சண்முகசுந்தரம்), நாஞ்சில்நாடு (ஹெப்சிபா ஜேசுதாசன்), கேரளத் தமிழ்ப்பகுதி (நீல. பத்மநாபன், ஆ. மாதவன்), சென்னை (ஜெயகாந்தன்) போன்ற பகுதியில் வழங்கும் தமிழைக் கையாண்டுள்ளனர். பொதுவாக வரலாற்று நாவலில் இத்தகையப் பிரிவுகளைக் கையாளாமல் பெரிதும் பொது மொழியையே எழுதிச் செல்கின்றனர். மாறாக இன்றைய படித்த இளைஞர்கள் ஆங்கிலக் கலப்பின் தனி ஆர்வம் காட்டிப் புதிய

கலப்பு மொழியாகத் 'தேம்ஸ்–காவிரி' நடையாகக் கையாள்கின்றனர். இதற்கு எதிராகச் சமுதாய கண்ணோட்டத்தோடு எழுதுபவர் அந்தந்த மக்களை வெளிப்படுத்தும் வகையில் மொழியை ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நாவல் நடைக் கொள்கை பலவடிவம் பெற்றுள்ளது.

## VIII

நாவல் கூறும் முறையில் படர்க்கைக் கூற்று முறையே பெரும்பாலான நாவலாசிரியர்களின் நெறியாக விளங்கியது. வேதநாயகரோ தம் கதைத் தலைவனாம் பிரதாபரின் தனிக் கூற்று நிலையிலேயே அதனை வளர்த்துச் சென்றுள்ளார். இது தன் வரலாற்றுணர்வைத் தூண்டுவதாக உள்ளது. இதன் வளர்ச்சி நிலையில் மாதவையா 'முத்து மீனாட்சி' (1903)யின் 'தன் வரலாறா'கப் புனைந்தார். ஆசிரியர் தம் குரலைச் சமூகக் கொடுமைக்கு எதிராக அமைப்பதைவிடத் தம் கதைமாந்தரே துன்புற்று அதிலிருந்து நீங்கக் குரல் கொடுப்பதாக அமைகிறது.

நாவலில் தத்துவ தரிசனத்திற்கு இராஜம் ஐயர் தனியே ஒரு இயல் (25-ஆம் அத்தியாயம்) வகுத்தமைத்தார். அதை ஒட்டியே பொன்னுசாமிப் பிள்ளையும் தம்முடைய ஒவ்வொரு நாவலிலும் 19-ஆம் அத்தியாயத்தைச் சிவஞானபோத விளக்கத்திற்குப் பயன்படுத்திச் சிவ அருணகிரி வள்ளல் வாயிலாகத் தனியிடம் வகுத்தார். பிற்காலத்தில் மு. வ. வின் நாவல்களில் அறவாழி வள்ளுவத்தைப் பல இடங்களிலும், பல நாவல்களிலும் பேசுவார். இவ்வாறு மெய்ப்பொருள் நாவல் கூறும் முறையில் தனியிடம் பெற்றது.

ஒரு மாந்தர் கூற்றை இருமாந்தர், பல மாந்தர் என்ற நிலையில் நோக்கு நிலையை வளர்த்த பாங்கினைத் தமிழ் நாவல் வளர்ச்சியில் காண முடிகிறது. இந்நோக்கு நிலையைப் பல்வேறு வகையில் கையாள்வதைத் தம் நாவல் வடிவக் கொள்கையாகவே பெரும்பாலான நாவல்களில் வெளிப்படுத்தியுள்ளார் மு. வ. 'செந்தாமரை'யில் பல மாந்தர்களும், 'கள்ளோ காவியமோ'வில் இருவரும், 'மலர்விழி'யில் ஒருவரும் கதை கூறிச் செல்லும் பாங்கைக் காணலாம். பன்மையிலிருந்து ஒருமைக் கொள்கையே இங்கும் நிலைபெறுவதை உணரலாம்.

கடித முறையை மறைமலையடிகள் பின்பற்றினார். அண்ணாதுரை நாட்குறிப்பு முறையை மாந்தர் தம் நோக்கு

நிலையை அறியப் பயன்படுத்தினார். இவை காலூன்றி நிற்க வில்லை. ஆசிரியர் மனநிலைப்படி எழுதும் ஆசிரியர் கூற்று முறையே பெரும்பாலான தமிழ் நாவல்களில் அமைந்துள்ளது. இதுவே பெரும்பாலும் பின்பற்றப் பெற்ற நாவல் கொள்கையாக அமைகிறது.

IX

சமூகச் சிக்கலை மையாகக் கொண்ட நாவல்களில் காந்தியத் தாக்கம் வெளிப்படத் தொடங்கியது. நாட்டு விடுதலைப் பேராட்ட எழுச்சியும் இதன் களமாக அமைந்தது. கா. சி. வேங்கட ரமணியின் 'தேசபக்தன் கந்தன்' காதல் பெரிதா தேசபக்தி பெரிதா என்ற கேள்விக்கு விடைதந்து நாட்டுப்பற்றையே மேலாகப் பாராட்டுகிறது. யந்திர நாகரிகம் நாட்டுப்புறத்தில் புகுவதை நன்கு காட்டி அரசியல் உணர்வை அறிவியல் முறைப்படி வளர்க்க முயல்கிறது. இவற்றுடன் அடையாற்றில் படகுகளையும், மரக்கட்டையையும் காட்டி அவ்வுயிரற்ற பொருள்களிலிருந்து. வெள்ளை ஆதிக்க எதிர்ப்பை அணிநயம்படக் குறியீடாக உணர்த்தும் புதுமை வெளிப்படுகிறது. உடல் காதலைவிட உள்ளக் காதலே பெரிதென்ற காந்தி வழி அன்பை வற்புறுத்து கிறது. கந்தனின் குரலில் மத உணர்விலிருந்து அரசியல் உணர்வுக் மாறி சுதந்தர ஊக்கத்தை ஆறாகப் பெருக்கும் உணர்வைக் கேட்க முடிகிறது. கு. இராஜவேலுவின் '1942' விடுதலைப் போராட்ட வடிவம் தாங்கிச் செல்லும் கோவா விடுதலை போராட்டத்தை ராஜம் கிருஷ்ணனின் 'வளைக்கரம்' கூறும்.

'முருகன் ஓர் உழவ'னில் சமுதாயம் அமையவேண்டிய பொருளாதார அடிப்படையைக் கூட்டுறவு மனப்பான்மையுடன் சோசலிசக் கொள்கையை கா-சி வேங்கடரமணி கூறுவார். சோசலிசம் என்பது அகிலனின் எங்கே போகிறோம்?' அறிமுகப் படுத்தும். அழகு வாழ்வு சமுதாயத்தை உயர்த்துவதற்கே என்ற சமுதாய உணர்வை அவரது 'சித்திரப்பாவை' காட்டும். காந்திய இயக்கத்தை வரலாற்றுப் பார்வையுடன் மதுரைப் பின்னணியைக் கொண்டு காட்டுவது நா பாவின் 'ஆத்மாவின் ராகங்கள்'. காந்தியடிகளையே நடமாடும் கதை மாந்தராகத் தந்து உலவ விட்ட பெருமையைச் சிதம்பர சுப்பிரமணியத்தின் 'மண்ணில் தெரியுது வானம்' பெற்றுள்ளது. கல்கியின் 'அலையோசை' காந்தியம் தெய்விகம் என்ற உணர்வை ஊட்டி அவரது இறுதி யாத்திரையைப் படம்பிடித்துத் தரும். காந்தியம் அன்பு நெறியைப்

பரப்பி கொள்ளையர்களியேயும் மனமாற்றத்தை உண்டு பண்ணுவதை ராஜம்கிருஷ்ணனின் 'முள்ளும் மலர்ந்தது' காட்டும். காந்தியம், தமிழ் நாவலில் இன்னும் வளர்ச்சி பெற்ற வடிவம் தாங்கிப் படைக்கப்பெறவில்லை. எனினும் அது தோன்றி வளர்ந்ததைக் காட்ட முயலும் முயற்சி வெளிப்படுகிறது.

அரசியலையும் சமயத்தையும் இணைத்துக் காணும் கொள்கை சில நாவல்களில் நடப்பியல் முறையில் வெளிப்படுகிறது. ஜெய காந்தனின் 'ஜெய ஜெய சங்கர' தமிழக மக்களின் காந்தியப் போராட்ட நெறியிலிருந்து தற்கால நக்சலைட் போன்ற தீவிர அரசியல் இயக்கம் வரை வெளிப்படுத்துகிறது. பழைமை வாதி களிடம்கூட ஸ்ரீராமானுஜர் போன்ற புதிய பிராமணர்களை உருவாக்கும் ஆர்வத்தை இந்நாவல் புலப்படுத்தும். சிங்கராயரின் புதிய ஆசிரமம் சமுதாய வாழ்வில் புதிய அமைப்பை உருவாக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தும்.

தமிழக நாவல்களில் மார்க்சீயக் கொள்கைத் தாக்கத்தால் நடப்பியல் நெறி வலுப்பெற்றது சமுதாயத்தில் காணும் வர்க்க முரண்பாட்டைப் போராடும் இரு அணிகளாகப் பிரிந்துள்ள தொழிலாளி முதலாளிப் பிரிவில் இயக்கவியல் பொருள் முதல் வாதமும், வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் ஒளியூட்டும் வகையில் ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்'[10] காட்டும். ஆயிரக் கணக்கான நெசவாளிகளின் வயிற்றுப் பிரச்சனையைக் காரண காரியத்தொடர்பு சிதையாமல் கட்டுக்கோப்புடன் எடுத்துரைக் கிறது இந்நாவல். இதன் பின்னணியில் திருநெல்வேலியும், மதுரையும் விளங்குகின்றன. ஏழைப் பாட்டாளியின் துயரைத் தொழிற்சங்க இயக்கம் எம்படித் துடைக்க முயல்கிறது என்பதை நடைமுறை வடிவில் அளிக்கிறது.

இந்நெறியில் விவசாயிகளின் மூன்று தலைமுறை வளர்ச்சியில் எழும் போராட்ட இயக்கத்தை உள்ளது உள்ளபடியே காட்டுகிறது செல்வராஜின் 'மலரும் சருகும்'.[11] சின்னப்பாரதியின் 'தாக'மும்[12] பொன்னீலனின் 'கரிச'லும் இந்த இயக்கக் கொள்கையை நாவல்

---

10. 'பஞ்சும் பசியும்', ரகுநாதன், ஸ்டார் பிரசுரம், சென்னை 1970.
11. மலரும் சருகும், செல்வராஜ், கிறிஸ்தவ இலக்கிய சங்கம் சென்னை, 1977.
12. தாகம், சின்னப்ப பாரதி, முற்போக்குச் சிந்தனையாளர் மன்றம், நாமக்கல், 1975.

கொள்கையாகக் கொண்டு வளர்ந்தவை. தஞ்சை விவசாயிகளின் போராட்டத்தை இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' காட்டும்.

ராஜம்கிருஷ்ணனின் நாவல்கள் நடப்பியல் நெறியில் நடுத்தரக் குடும்பத்துன்பம், பெண் படும்பாடு, குழந்தைத் தொழிலாளர் சிக்கல், மீன் பிடிப்பவர் துன்பம், தஞ்சை உழவர் நிலை, பள்ளியில் வேலை பார்க்கும் மக்களின் அவலநிலை பற்றி விரிவாக எடுத்துக் கொண்ட பொருளுக்கு முதலிடம் கொடுத்துப் படைத்துள்ள நிலை வெளிப்படுகிறது.

X

நாவல் என்பது கற்பனை இலக்கிய மாயினும் கற்பனையை உண்மை போலக் காட்டுவதில் தான் அதன் தோற்றம் அமைந்தது. ஆயினும் கற்பனையின் மிகுதி வெள்ளம்போல் பெருக்கெடுத்ததின் விளைவைச் சிலர் ஏற்றுக் கொள்ளத் தயங்குவர். எனினும் புனைவியல் என்ற பெயரே இன்னு பிரியா ஒட்டாக நாவலோடு ஒட்டியுணர்வோர் உளர்.

தாமஸ்மூரின் உடோபியாக் கற்பனைத் தாக்கம் தமிழக நிலைக்கேற்ப பாரதியின் 'ஞானரத' மாய்க் கந்தர்வலோகம் உப சாந்திலோகம், சத்தியலோகம் போன்றவற்றிற்குப் பறந்து செல்லும்.[13] சீர்திருத்தக் கருத்தைத் தூவும் புதிய 'கோதைத் தீ' வாய்[14] வ.ரா.வின் படைப்பு வெளிவந்துள்ளது. புதிய பொருளாதாரச் சமநிலைபெற மு.வ. கி.பி. 2000' மலிந்துள்ளது.[15] சுவை' குத்தல் நடை, புதிய புதிய கற்பனை வண்ணங்கள், பழம்புராணக் கதை மாந்தர்கள் முன்னிரண்டு படைப்புகளில் ஊடாடப் பின்னது புதுப்பயணக்கதை போல சமுதாயத்தில் இதுவரை நடைமுறைக்கு வராத ஆயின் நடைமுறைக்கு வரத்தக்க நிகழ்ச்சிகளைக் கூறுவன.

திகைப்பூட்டும் செயல்களைக் கலப்பதுடன் உருவெளித் தோற்றம் போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றையும் மறைமலையடிகள் தம் கோகிலாம்பாள் கடிதங்களில் பயன்படுத்தியுள்ளார். மு.வ.வின் 'மண் குடிசை' இத்தகைய உருவற்ற மனிதனின் செயல்களை உண்மைபோல் புனைந்துள்ளது.

---

13. ஞானரதம், சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி புத்தக நிலையம், மதுரை, 1955.
14. கோதைத் தீவு, வ. ரா. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.
15. கி. பி. 2000, மு. வரதராசன், பாரி நிலையம், சென்னை, 1973.

கோவை என்ற இலக்கியம் தமிழிலமைந்த அகத்திணைக் கற்பனை ஓவியம். மதுரை அழகிய அம்பலவாணர் எழுதிய 'எயினும் நாகனும் அல்லது இளந் தமிழ்க் காதலா' (1983) என்ற ஏடு கற்பனை உருவாக அமைந்த அகத் திணையை இக்கால நாவல் வடிவில்-புனைந்துரைக்க முயல்கிறது. பெரும்பாலான சீர்திருத்த நாவல்களில் புனைவியல் பாங்கே மிகுதியாக அமைந் துள்ளது. அணி நயமிக்க நடையின் அழகு, கற்பனையின் கவர்ச்சிக்கு மேலும் அழகூட்டும் வகையில் இவை அமைந்துள்ளன. பண்டைய தமிழ்க் காப்பியம் போலவே ந. பா. வின் 'குறிஞ்சி மலர்', 'பொன் விலங்கு' ஆகியவையும், ராஜவேலுவின் 'காதல் தூங்குகிறது' போன்ற நாவல்களும் கற்பனை வானில் சிறகடிப் பன.

வெளியுலக நிலையிலிருந்து அகவுலகில் ஆழநினைக்கும் தனி மனிதர்களின் முயற்சியில் கற்பனை வண்ணம் கொஞ்சக் 'கனவு மாலை'கள் வெளிப்பட்டன. ஆர். சூடாமணியின் படைப்புகள் மன உலகில் புகுந்து அதில் காணும் பல்வேறு வடிவங்களை வெளிக் கொணர முயல்கின்றன.[16] எண்ணச் சூழல்கள், நினைவின் மயக்கம், எது சரி எது பிழை என்று காணமுடியாத நொய்மை நிலை போன்றவைகளை வெளிக் காட்டுவதில் தனி ஆர்வம் காட்டுகின்றன. இத்தகைய உளவியல் நாவல்கள். புறத்தே வலம் வந்த நிலையை மாற்றி மனத்தினகத்தே கொண்டுசென்று எண்ண உலகின் மாறுபட்ட கூறுகளை வெளிப்படுத்தும் கொள்கை இதன், வாயிலாகத் தெரிகிறது. மகரிஷியின் படைப்புகள் பல்வேறு மாந்தரின் பலவகைப்பட்ட உணர்வுகளையும் மனச்சிக்கல்களையும் நன்கு காட்டும்.

நனவோடை உத்தியைப் பயன்படுத்தி தோரதி ரிகார்ட்சன், ஜேம்ஸ், வெர்ஜினியா, உல்ப், பாக்னர் போன்றவர்கள் கதை மாந்தரின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மடைதிறந்துஅவர் களின் மனக்கண் கொண்டு காணச்செய்தனர். நனவோடை உத்தி யில் நடைபழைய கட்டுப்பாடுகளைத் தாண்டியது. பள்ளிகொண்ட புரம் (நீல. பத்மநாபன்) புறச் சூழலை மீறி எண்ண ஒழுக்கில் பல அறுப்புக்களைச் சுட்டி வெட்டுத் தொடர்களால் விளக்கேற்றிப் பகல் வாழ்வைக் காட்டும். ல.சா.ரா. வின் 'புத்ர'வில்[17] இருண்மை

16. மானிட அம்சம், சூடாமணி, இமயப் பதிப்பகம், நாகப் பட்டினம், 1974.
17. புத்ரா, ல. சா. ரா. வாசகர் வட்டம், சென்னை, 1965.

மனநிலை பல கோணங்களில் வெளிப்படும். எழுத்தலங்காரம் நடை அழகில் புதுச் சூட்டை ஏற்படுத்தும். பல்வேறு புலனுணர்வு களுக்கு விருந்தளிக்கும் பாங்கு இத்தகைய நாவல்களில் அடிப் படைப் புனைவுக் கொள்கையாக உள்ளது. தனிமனிதனின் மனமே யாவும் என்ற உணர்வை ஊட்டி அதில் மிதக்கும் மீமனித இயற்கையைச் சுட்டக் கிருத்திகாவின் 'தர்க்ஷமதேத்ரே' (1969) போன்றவை எழ, இருப்பநிலைக் கொள்கையை வெளிச்சமாக்கும் கந்தசாமியின் 'அவன் ஆனது' (1981). இவ்வாறு மறைவியற் கொள்கையும், இருப்புநிலைக் கொள்கையும் புலனாம். தன்னையே அருவெறுக்கும் ஒரு வித வெறுப்புநிலையை நகுலனின் நிழல்கள் (1965) ஊட்டும்.

கற்பனை விருந்தாக நகைச்சுவையை முன்னிறுத்தியவர்கள் எஸ். வி. வி., தேவன், சாவி போன்றவர்கள். சாவியின் 'வாஷிங் டனில் திருமணம்' தமிழகத் திருமணச்சடங்கை ஒட்டி மேனாட்டுப் பின்னணியில் நடந்தால் எப்படியிருக்கும் எனக் கற்பனை செய்து நகைச்சுவை விருந்தளிக்கிறது.[18] நகையை வசையுடன் கலந்து சமு தாயத்தில் காணும் குறைகளைக் குத்திக் காட்டுவதில் இந்திரா பார்த்தசாரதி, சோ ஆகியோரின் நாவல்கள் முன்னிற்கின்றன. இவற்றில் நிகழ்ச்சி, கதை மாந்தர் படைப்பு ஆகியவற்றில் கருத்துச் செலுத்தாது குறைகளைக் குத்திக் காட்டி நகையூட்டும் போக்கே தலைசிறந்து நிற்கும். துப்பறிதலில் அசடு துப்பறியும் நிலையில் நகைச்சுவையைச் சாம்பு என்ற படைப்பின் வாயிலாகத் தேவன் புதுமை செய்தார்.

அறிவியல் வளர வளர அதன் வளர்ச்சியைப் பயன்படுத்தியும், அறிவியல் எந்நெறியில் செல்லக் கூடும் என்பதைக் கற்பனை செய்துப் பார்த்தும் சில நாவல்களைப் படைத்தனர். எச். ஜி. வெல்ஸ், ஜூல் வெர்ன் போன்றவர்கள் பல அரிய அறிவியல் நாவல்களைப் படைத்தனர். எலக்ட்ரானிக்ஸ மனிதனின் அக வாழ்வில் குறுக்கிடுவதுபற்றிய நாவல் சுஜாதவின் சொர்க்கத்தீவு[19] ஒற்றர் வாழ்வில் விஞ்ஞானத் துணையாட்சி பற்றி ராஜேந்திரனின் 'விண்ணும் மண்ணும்' வெளிப்படுத்துகிறது.[20]

---

18. வாஷிங்டனில் திருமணம், சாவி, மோனா பப்ளிகேஷன்ஸ் சென்னை, 1978.
19. சொர்க்கத் தீவு, சுஜாதா, குமரிப்பதிப்பகம், நாகப் பட்டினம், 1975.
20. விண்ணும் மண்ணும், கி. ராஜேந்திரன், தமிழ் எழுத் தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1977.

தமிழில் வரலாற்று நாவல் என்பதே வரலாற்றுப் புனைவு என்ற நிலையிலேயே வளர்ந்து வந்துள்ளது. ஸ்காட்டின் தாக்கம் தமிழில் மிகுதியாக உள்ளது. வரலாற்றுக் கற்பனை எல்லையற்று இன்னும் பெருகி வருகிறது. 1895-இல் சரவணமுத்துப் பிள்ளை 'மோகனாங்கி' வாயிலாக நாயக்கர் கால வரலாற்றை வெளிப் படுத்தினார். அதன்பின் வெளிவந்தவற்றைக் குறிப்பிட்டுச் செல்லும் வகையில் அமையவில்லை. கல்கியின் 'பார்த்திபன் கனவு' சோழ அரசையும் பல்லவ அரசையும் ஒட்டி எழுந்த நாவல் ஆயினும் கல்கி கால விடுதலைப் போராட்டத்தின் எதிரொலியாக அமைந்துள்ளது. அவருடைய 'சிவகாமியின் சபத'மும் 'பொன்னி யின் செல்வ'னும் நாட்டுப் பண்பாட்டு மறுமலர்ச்சியை உண்டாக் கும் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன.

கல்கி விட்ட பகுதியிருந்து விக்கிரமன் போன்றவர்கள் வரலாற்றைப் பயன்படுத்தினர். இவ்வரலாற்றுக் களமாகச் சேரர் புனைவு (வெண்ணிலவுப் பெண்ணரசி-சோமு, இளவெயினி, அய்க்கண், குடவாயிற் கோட்டம்-கோ.வி. மணிசேகரன், சேரமான் காதலி-கண்ணதாசன்).

சோழர் புனைவு (ராஜநங்கை-கபிலன், மணிமண்டபம்-கோ வி. மணிசேகரன், திருச்சிற்றம்பலப்-ஜெகசிற்பியின், ராஜா தித்தன் சபதம்-விக்கிரமன், பொன் மகுடம்-மயில்வாகனன், மணி பல்லவம் நா. பார்த்தசாரதி)

பாண்டியர் புனைவு (கபாடபுரம்-நா. பார்த்தசாரதி, பொன் வேய்ந்த பெருமாள்-கோ.வி. மணிசேகரன், கயல்விழி-அகிலன்).

பல்லவர் புனைவு (பரிவர்த்தனி-விக்கிரமன், ராஜதிலகம்-சாண்டில்யன்.

தொல்பழங்காலப் புனைவு (தென் குமரித் தெய்வம்-வழித் துணைவன்)

இடைக்கால இந்திய நாட்டுப் புனைவு (சோமநாதபுரச் சிலை பி.சி. கணேசன், ஜீவபூமி. சாண்டில்யன், தளவாய் வேலுத்தம்பி-தே.ப. பெருமாள், திப்பு சுல்தான்-லட்சுமி நாராயணன்).

இக்கால வரலாற்றுப் புனைவு (கல்லுக்குள் ஈரம்-ர.சு. நல்ல பெருமாள், சத்திய வெள்ளம்-நா. பார்த்தசாரதி)

அயலகப் புனைவு (யவனராணி-சாண்டில்யன்-ரோமாபுரிப் பாண்டியன் மு. கருணாநிதி, தென்றல் காற்று-கோ.வி. மணி சேகரன்)

போன்ற பல்வேறு வகைகளை வரலாற்றின் தலை மக்களை ஒட்டிப் புனைந்துள்ளனர். திடுக்கிடும் திருப்பங்கள், காதல் நிகழ்ச்சிகள், ஒற்றர் வேலைகள், பயணம், வெள்ளம், கிரகணம், மதமாறுபாடுகள், வேடமாற்றம், அயலார் வரவு போன்றுவற்றை மிகுதியாகக் கற்பனை கலந்து புனைந்துள்ளனர். இவற்றில் ஆர்வ மூட்டித் திகிலூட்டி அழகூட்டும் உணர்வு பெரிதும் காணப்படு கிறது. காலத்தின் வளர்ச்சியைவிடக் கற்பனையின் செறிவையே புனைகலமாக இவற்றில் பயன்படுத்தும் பாங்கை அறியமுடிகிறது.

XI

புதிய பொருளுடைமையின் வளர்ச்சியில் இசைக்குழுவின் பேரமைப்பை (சிம்போனி) உருவானது ஆடல்பாடல் கலவா இசைக்குழுவின் இசை 'நுண் பொரு'ளாக அமைகிறது. இதற்கும் புதினத்திற்கும் வேறுபாடு காணப் பருப் பொருள் நிலையே அடிப் படையாக அமைகிறது. பருப்பொருளின் வெளிப்பாடாம் வாழ்வின் புலப்பாடாகப் புதினம் அமைவதால் இத்தகைய வேறுபாட்டிற்கு இடம் உண்டாகிறது. தொல்பழங்கால 'பாவனை நடனங்களி லிருந்து' உருவெடுத்த இந்த இரண்டு கலைகளும் இரு முனை களாக எதிர்நிற்கின்றன.

கிரேக்க நாடகத்தில் அமைந்த குழு இசையில் தொல்பழங் காலப் பாவனை நடனங்கள் இடம்பெற்றன. இந்நிலையில் தனிக் குழு இசையும் இடம் பெற்றது. இத்துடன் இசைக்கேற்ப ஒரு குழு வினர் ஆடிப்பாடி நிகழ்ச்சியை நடத்தினர். அதிலிருந்து தனியாகப் பிரிந்தது இசைக்குழுவின் பேரமைப்பாம். இது புதினத் தோற்றத் திற்கு மிகப் பழைய நடவடிக்கையின் தொடக்கம் என்பர். நடனமும் உரையாடலும் பிரிந்ததால் ஏற்பட்ட இருவகை வளரச்சியை இதுகாட்டும். குழு இசையிலிருந்து ஆடல் நீங்கத்தனி இசைக் கருவியை வாசிக்கும் தனியொரு மனிதனின் இசை இடம் பெற்று வளர்ந்தது. தனியொருவன் பாடும் பாடல் பிறக்கவும் அதன் வளர்நிலையாகக் காப்பியம், கதைப்பாடல் போன்றவை பிறந்தன. இந்நிகழ்ச்சியில் இசையின் இடம் மறையத் தனி மனிதன் பாடிய தன்னுணர்வுப் பாடல்களின் வகைகள் தோன்றின. மேலும் காப்பியத்திலிருந்து உரைநடை இதிகாசங்களும், உரை நடைப் புனைவுகளும் தோன்றின. அவற்றிலிருந்து புதினம் உரு வாயிற்று என்பர். குழு இசையிலிருந்து உரையாடல் நீக்கப்பெற்று ஆடல் வளர்ச்சி பெற்றதும், அதிலிருந்து ஆடல் நீக்கப் பெற்றுத் தனிப்பெரும் இசை மட்டும் கருவியின் வாயிலாக வெளிப்பட்ட நுண்மை இசையின் பிறப்பு இதன் மற்றொரு வளர்நிலை.

உரையாடலின் உணர்வுக் கூறும் அறிவுக் கூறும் ஏற்ற அளவு கலந்துள்ளன. கவிதையில் முன்னதன் கூறி விஞ்சியுள்ளது. இழு மென் ஓசை இயல்பு, இசைப்பண்பு, எல்லையற்ற கற்பனை என்பவை இத்துடன் இடைமிடைந்து காணப்படுவதுண்மையே. இசையிலிருந்து உரையின் கூறுகளை முழுதும் நீக்கியதின்விளைவு இத்தகைய உணர்ச்சிக்கூறுகள் கவிதையில் தனியிடம் பெறலாயின. இசை பெற்ற இலக்கணத்தையும் மொழி பெற்ற இலக்கணத்தை யும் ஒப்பிட்டு அவற்றிலுள்ள ஒற்றுமைக் கூறுகளைக் காண்பது முண்டு. தாளங்கள் என்பன தொல்பழங்காலப் பாடல் ஆடல்களி லிருந்து நேராகவும், மறைமுகமாகவும் பயன்படுத்திய கால விளைவேயாம். படிமப் பயன்பாட்டையும் தாளப் பயன்பாட்டை யும் இணைந்துக் காணும் முயற்சியும் உளது. பொருளறியா மொழியின் ஓசைப் பெருக்கில் மூழ்கி அதனை ஊன்றிக் காண்பது போன்று இசையையும் நன்கு அறிய முயன்றனர். இன்னும் ஆழ்ந்து காணும்போது தூய்மையான சிந்தனையின் இயக்க இயலை மெய்ம்மையியல் அறிஞர் ஹெகல் அளித்தது போன்றே தூய்மையான உணர்ச்சியின் இயக்க இயலைச் சிறந்த இசை அறிஞர் பிதோவான் அளித்தார். இதன் உண்மையை எதிர்மறை யில் கண்ட ஒற்றுமை அமைவதால் இவை இரண்டும் பிரிக்க முடியாதவையாக உள்ளன என்பர்.

குழுவின் பேரிசைக்கும் புதினத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பர். அவர்கள் கொள்கைப்படி இரண்டும் புதிய முதலாளி களின் பொருள் ஆட்சியின் படைப்பாம். பேரிசையின் உருவாக்கம் நுண்ணரும் இசைக்கருவிகள் வாயிலாக உருவாகின்றது. அந்த நூல் உருவானமையால் புதினம் உருவாகின்றது. மிகச்சிறந்த இசை அறிவு பெற்ற எண்பது இசைக் கலைஞர்கள் நன்றாக இணைந்து நடத்தும் இசை நிகழ்ச்சியில் குழுவின் பேரிசை (சிம்போனி) பிறக்கிறது. புதினம் என்பது எழுத்தாளன், அவன் படைப்பைப் படித்துணரும் பயில்பவன் ஆகிய இருவரும் தனிப் பட்ட வகையில், முறையாக முன்னமைக்கப் பெறாத சந்திப்பாகும். இவர்கள் இருவருக்கும் இடையே அச்சில் வெளிப்பட்டுள்ள மொழிதான் உறவுப் பாலமாக அமைகிறது. வாய்மொழியாகக் கவிதைபாடி அவையின் முன்னர் அரங்கேற்றிக் கவிஞன் என்ற நிலைபேறு பெற்ற நிகழ்ச்சிகள் மறைந்து வரவும் அச்சு வடிவம்

பெற்ற கவிதை ஏடுகள் வெளிவந்து மற்ற உரைநடை நூல்கள் போலவே பயில்பவருடன் உறவு பூண்டுவரும் நிலையை இன்று யாவரும் உணர்வர்.

ஆழ்ந்த மன உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பது மிகவும் கடினமான செயலாகும். தன் சொற்களால் அவற்றை வெளிப்படுத்த இயலாதபோது அவ்வரியவுணர்வுகளைப் புதினத்தில் படைத்துள்ள கதை மாந்தர் வாயிலாக மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவர் படைப்பாளர். இவ்வாறு மிக நுண்ணிய ஆழமான மன உணர்வுகளைக் கதைமாந்தர் வாயிலாக வெளிப்படுத்தும் கலைக் கொள்கலனாகப் புதினத்தைப் படைப்பாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஒருவகையில் படைப்பாளன் தன் கருத்தை மறைமுகமாக இவ்வாறு கதைமாந்தர் நினைப்பதாகவும் சொல்வதாகவும் அமைத்து அவற்றை அச்சு வடிவில் உலவவிடுகின்றான். இந்நிலைக்கும் தூய ஓசை வாயிலாகத் தன் கருத்துக்களை இசைக் கலைஞன் குழுவின் பேரிசையில் புலப்படுத்துவதாகக் காணும்போது குழுப் பேரிசைக்கும் புதினத்திற்கும் படைப்படிப் படையில் காணும் ஒற்றுமை வேற்றுமைக் கொள்கைக்கூறுகளை உணரமுடிகிறது.[21] இப்போக்கில் நம்மவர் முயலின் பல கொள்கைக் கூறுகளைக் காண இயலும்.

இலங்கையில் வாழும் 'பஞ்சமர்'[22] பற்றிய நாவலை நடப்பியல் நெறியில் எழுத முனைந்த கே. டானியல் நாவல் பற்றிய பல கொள்கைகளை வெளிப்படுத்துகின்றார். கண்ணீரும் கம்பலையுமாக வாழும் மக்களுக்காகவும், அவர்களை ஒத்து வாழ்வில் துன்புறும் 'வேறு மக்க'ளுக்காகவும் எழுதுவது கடமை எனக் கூறும்போது மனித அன்பு அதில் இழையோடுவதை உணரமுடிகிறது. நிலவுடைமை ஆதிக்கத்தின் மேல் கட்டப்பட்டுள்ள சாதி முறையை அகற்றவும் அச்சாதியையும் அதன் வாயிலாக நிலவுடைமையையும் பாதுகாத்து நிற்கும் அரசு இயந்திரத்தை மாற்றவும் எல்லா வகையான சரண்டல் சிந்தனைகளை அழிக்கவும் துணை போகும் உலகந் தழுவிய போக்கை ஏற்கவேண்டும் என்ற பார்வை வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இலக்கியத்தை அளக்க இலக்கியம் என்ற அளவுகோலை ஏற்காமை தென்படுகிறது.

---

21. மனித சமூக சாரம், ஜார்ஜ் தாம்சன், (கேசவன் மொழிபெயர்ப்பு) சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1981, பக் 175-180.
22. பஞ்சமர், கே. டானியல், கார்க்கி நூலகம், சென்னை 1982.

துன்பப்படும் மக்களின் துயரத்தைக் கண்டு அதனால் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தன் முழு அனுபவத்தையும் எழுத முடியாவிடிலும் முடிந்த அளவு கொண்டு வரும் முயற்சி வெளிப்படுகின்றது. உலகிலுள்ள கடைசி மனிதனும் விடுதலை பெறும்வரை ஓய்வதில்லை என்ற மன உறுதியுடன் நிலையான உலக அமைதிக்கெனப் போராடி வரும் மக்களுக்கு நாவல் ஒரு கருவியாக அமையவேண்டும் என்ற கொள்கை மலர்கிறது. இதற்காக அமைந்த கதை மாந்தர்கள் வலிந்து தேடியவர் அல்லர். ஆயினும் வாழ்வின் கீழ்நிலையிலிருந்து முன்னேற முயலும் மக்கள் கூட்டத்திலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். அவர்கள் பேசி வரும் மொழியின் வடிவையே பேச்சு மொழியாக நாவலில் பயன்படுத்தப்பெறுகிறது. இத்தகைய படைப்புக்குப் பின்னர் இத்தகைய மக்களும் இவர்களுக்கெனப் போராடிய மற்ற மக்களும் நடத்திய போராட்டங்கள், இழப்புகள், வெற்றிகள் ஆகியவற்றை இலக்கியமாகப் படைக்கும் பல எழுத்தாளர்கள் தோன்றவேண்டும் என்ற நம்பிக்கையும் புலப்படுகிறது. இந்த நம்பிக்கையின் மலர்ச்சியாக நாவல் எழவேண்டும் என்ற கொள்கை மார்க்சீய எழுத்தாளர்களின் நாவல் கொள்கையாக உள்ளது.

## துணை நூல்கள்


அகிலன் — கதைக்கலை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1972.

அப்துல்ரசாக் — இந்திய விடுதலை இயக்கமும் தமிழ் நாவல்களும் (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1981.

அபிபுல்லா — ல. சா. ரா. வின் படைப்புகள் (ஆய்வேடு), மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1982.

அருணாசலம் — தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம் (ஆய்வேடு) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1980.

அறிவழகன் — ஜெயகாந்தன் நாவல்களில் சமுதாயப் பார்வை (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக்கழகம், 1981.

இராசா, கி. — புதுமைப்பித்தன் கதை மாந்தர்கள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1980.

இராதாகிருஷ்ணன் — நா. பா. நாவல்களில் ஒரு பார்வை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

,, — நா. பார்த்தசாரதியின் சமூக நாவல்கள் (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1979.

இராமலிங்கம் — மா., - இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

,, — நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972.

இராஜசேகரன் (பதி.) — தமிழ்நாவல் 50-பார்வை, பத்தினிக் கோட்டப் பதிப்பகம், பூம்புகார், 1978.

கனகசுந்தரம் — ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள் (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக் கழகம் 1983.

குருநாதன் — அகிலனின் நாவல்கள் (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக் கழகம், 1980.

கைலாசபதி — தமிழ் நாவல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை 1968.

,, — இலக்கியமும் திறனாய்வும், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.

,, — திறனாய்வுப் பிரச்சனைகள், சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1980.

,, — நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், மக்கள் வெளியீடு, சென்னை, 1980.

சந்திரசேகரன் — விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள் — ஓர் ஆய்வு (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக்கழகம், 1976.

சம்பத்குமார் — டாக்டர் மு. வ. நாவல்களில் பாத்திரங்கள் (ஒரு திறனாய்வு), (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக் கழகம், 1982.

சிவக்கண்ணன் — மு. வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள் (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980.

சிவத்தம்பி, கா., — இலக்கியமும் கருத்து நிலையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1982.

,, — ஈழத்தில் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

,, — நாவலும் வாழ்க்கையும், தமிழ்ப் புத்தகாலயம் சென்னை, 1978.

சுந்தரராசன், சிவபாதசுந்தரம் — தமிழ் நாவல், கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1977.

சுப்பிரமணியம், க. நா., — முதல் ஐந்து தமிழ் நாவல்கள், அமுத நிலையம், சென்னை, 1957.

சேதுப்பிள்ளை — தமிழ் நாவல் வளர்ச்சி (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980.

தண்டாயுதம் — தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1973.

தண்டாயுதம் — நாவல் வளம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.

திருநாவுக்கரசு, க. த, — பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக்கியம் (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக் கழகம், 1979.

தேவசங்கீதம் — டாக்டர் மு. வரதராசனாரின் புனைகதைகள் (ஆய்வேடு), திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, 1977.

தோத்தாத்ரி — ஜெயகாந்தன் - ஒரு விமர்சனம், அகரம் வெளியீடு சிவகங்கை, 1976.

பாக்கியமுத்து (பதி.) — தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி, சமுதாய மாற்றம், கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1978.

பிச்சமுத்து — டாக்டர் மு. வரதராசனார் புதினங்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம் (ஆய்வேடு), சென்னைப் பல்கலைக் கழகம், 1978.

மறைமலை — இலக்கியத் திறனாய்வு, நீல மலர் வெளியீட்டகம், சென்னை, 1979.

மாணிக்கம் — தி. ஜானகிராமன் நாவல்கள் (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980.

முத்தையா — ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1979.

வரதராசன், மு, — தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுடெல்லி, 1977.

வானமாமலை (பதி.) — தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977.

வானமாமலை (பதி.) மார்க்சீய அழகியல், மக்கள் வெளியீடு, சென்னை, 1978.

விசயலட்சுமி — அகிலன் நாவல் ஒரு திறனாய்வு (ஆய்வேடு), கேரளப் பல்கலைக் கழகம், 1978.

வீராசாமி, தா. வே., — தமிழ்நாவல் முன்னோட்டம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 1979.

,, — தமிழில் சமூக நாவல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

,, — கல்கி, அகிலன் படைப்புக்கலை, தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1977.

,, — தமிழ் நாவல் வகைகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979

வெல்லக், வாரன் — (குளோறியா சுந்தரமதி மொழிபெயர்ப்பு) — இலக்கியக் கொள்கை, பாரி நிலையம், சென்னை, 1966.

வேலுப்பிள்ளை, ஆ — தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1978.

ஜகந்நாதன், கி. வா.,— தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1966.

(இங்குக் குறிப்பிட்ட ஆய்வேடுகள் பிஎச். டி., பட்டத்திற் களிக்கப் பெற்றவை).

Anthony Burgess — The Novel Now, Faber & Faber, London 1971.

Aurom Fleishman — The English Historical Novel, The John Hopkins Press, London, 1972.

Clark, T. N. (Ed.) — The Novel in India, George Allen Unwin Ltd., London, 1970.

Dhandayudham, R. — A Study of the Sociological Novels in Tamil, University of Madras, Madras, 1977.

Edwin Muir — The Structure of the Novel, The Hogarth Press, London, 1946.

Forster E. M. — Aspects of the Novel, Penguin Books, New York, 1978.

George Lukaes — The Historioal Novel, Penguin Books, New York, 1978.

Ian Watt — The Rise of the Novel, Penguin Books, New York 1957.

Ioan Wilham — The Realist Novel in England, Macmillan & Co., London, 1974.

Joseph Warren Beach — The Twentleth Century Novel Studies in Techinque, Lyall Book Depot, Ludhiana, 1969.

John Stephanes — Sevan Approaches to the Novel, Harrap, London, 1972.

Kenneth Graham — English Criticism of the Novel (1865-1900), Oxford (The Clarandon Press), 1965.

Philip Stevick (Ed.) — The Theory of the Novels, The Free Press, New York, 1967.

Srinivasa Iyengar, K. R. (Ed.) — Indian Literature since Independence, Sahitya Akademi, New Delhi, 1973.

Viginia Woolf — Collected Lssays, Chatto & Windus, London, 1968.

Walter Allen — Reading a Novel, J. M. Dent & Sons Ltd. London, 1969.

Wilbur L. Gross — Development of the English Novel, Lyal Book Depot, Ludhiana, 1963.

# 4

# உரைநடை நாடகங்கள்

டாக்டர் ஏ. என். பெருமாள்

நாடகம் என்பது இலக்கியம் என்றும் கலை என்றும் இருவேறு நிலைகளில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இலக்கியக் கொள்கை ஆய்வுக்கு இலக்கியமே அடிப்படை என்பதைக் கருத்தில் கொண்டு உரைநடை நாடகங்களின் கொள்கைகளைக் கண்டுணர அத்தகைய நூல்கள் மட்டுமே துணையாகக் கொள்ளப்பட்டுள்ளன. நாடக இலக்கியம் கவிதை நடை, உரைநடை, பாடலும் உரையும் கலந்த நடை என மூன்று நிலைகளில் காணப்படுகின்றது. பல உரைநடை நாடகங்கள் மேடையேற்றப்படும்போது பாடல்கள் இடையிடையே பாடப் பெறுகின்றன. பெரும்பாலும் உரை நடையில் அமைந்திருக்குமாயின் அவ்வகை நாடகங்கள் உரைநடை நாடகங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

நாடகங்களின் வகை வேறுபாடு, அமைப்புமுறை, கருத்து வெளியீட்டு முறை, உணர்ச்சிப் புலப்பாடு, நடையமைப்பு, கலை யாக்க உத்திகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கொள்கை களைக் காணும் முயற்சி மேற்கொள்ளப் பெறுகிறது. அங்கம், களம் ஆகிய அகப் பிரிவுகள் தெளிவாக அமையாது இசைப் பாடல் களால் ஆக்கப் பெற்ற கூத்து நாடகங்களிலிருந்து தமிழ் நாடகம் தற்கால அமைப்புக்கு மாறிய நிலையை உரைநடை நாடகத்தின் தோற்ற நிலையாகக் கருதலாம்.

மேனாட்டுக்கலை இலக்கியத் தாக்கத்தால் தமிழில் புதுமுறை நாடகங்கள் தோன்றின. கோபாலச்சார் என்பார் 1876-ஆம் ஆண்டு சேக்ஸ்பியரின் ''மெர்ச்செண்ட் ஆஃப் வெனிஸ்'' என்னும் கவிதை நாடகத்தினை 'வெனிஸ் வணிகன்' என்ற பெயரில் தமிழில் உரைநடை நாடகமாக மொழி பெயர்த்துள்ளார்.[1] இந்த மொழி பெயர்ப்பு நாடகமே தற்கால அமைப்பில் எழுதப்பட்ட முதல் நாடகமாகும். இதனை அடுத்து 1877-இல் திண்டிவனம் இராம சாமிராசு 'பிரதாப சந்திர விலாசம்' என்று சமூக நாடகத்தை உரைநடையும் பாடல்களும் கலந்த நடையில் பரத்தையர் உறவைக் கண்டிக்கும் நோக்கத்துடன் சுவையாக எழுதி மேடை யேற்றி உள்ளார்.

அக்காலம் தொட்டு இன்று வரையிலும் தமிழ் உரைநடை நாடகம் ஏற்றமும் மாற்றமும் கொண்டு வளர்ந்து வருகிறது. அதில் முழு நீள நாடகங்கள், குறு நாடகங்கள், ஓரங்க நாடகங்கள் உள்ளன.[2] வானொலி, தொலைக்காட்சி, ஆகியவை சிறிய நாடகங்களுக்கு ஊக்கம் கொடுத்து உறுதுணை புரிகின்றன. மக்களின் வாழ்க்கையில் காணப்படும் விரைவும், காலமின்மையும் இத்தகைய நாடகத் தோற்றத்துக்கு முக்கிய காரணங்களாக அமை கின்றன. முழுமையாகக் காரண காரிய விளக்கத்துடன் பிரச்சனை

---

1. வெனிஸ் வணிகன், கோபாலாச்சார், சென்னை (1867) இந்த நாடகத்தின் ஒரு படி மிகவும் பாதுகாப்புடன் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் (எழும்பூர், சென்னை—8), உள்ளது.
2. முழுநீள நாடகங்கள்:
கருத்துக்கள் விரிந்து கதை நீண்டு பல காட்சிகளாக இவை அமைந்து சுமார் 2½ மணி நேரம் மேடை நடிப்புக்குத் தகுந்ததாக எழுதப்படும் நாடகங்கள். முக்கிய பிரச் சனை ஒன்றாக இருப்பினும் இதில் மிகுதியான பாத் திரங்கள் இடம்பெற்று பலவிதமான துணை நிகழ்ச்சி களை இணைப்பதற்கும் நடுவன் நிகழ்ச்சிக்கு உறுதுணை யாவதற்கும் உதவுவர்.
2. குறுநாடகங்கள்:
பாத்திரங்கள் எண்ணிக்கையில் குறைந்து ஓரங்கத்துக்கு அதிகமான அங்கங்களைக் கொண்டு ஒரு பிரச்சனையைச் சுமார் ஒரு மணிநேர நடிப்புக் கால அளவைக்குள் முழு மையாகப் புலப்படுத்திக் காட்டும் நாடகங்கள்.
3. ஓரங்க நாடகங்கள்:
ஒரு பிரச்சனையை ஒரு அங்கத்துள் சுமார் அரை மணி அல்லது அதற்கும் குறைந்த கால அளவில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய பாத்திரங்களைக் கொண்டு விளக்கி முடிவுகாணும நாடகம்.

களை அணுகித் தெளிவாகப் புலப்படுத்துவதற்கும் கலைநயம் விளங்க நடிப்பதற்கும் முழு நீள நாடகங்களே நல்ல வாய்ப்பாக அமைகின்றன.

தமிழில் நாடக வளர்ச்சி பல படிநிலைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. அவற்றுடன் சில இயக்க உணர்வுகளும் அமைந்துள்ளன. அனைத்தையும் மனத்திற் கொண்டே உரைநடை நாடக அமைப்புக் கூறுகளைக் கண்டறிய வேண்டியிருக்கிறது.

## தொடக்கநிலை

ஆங்கிலக் கல்வியின் விளைவாகவே இத்தகைய புத்தமைப்பு நாடகங்கள் தோன்றத் தலைப்பட்டன. ஆகையினால் பல மொழி பெயர்ப்பு நாடகங்கள் வெளிவரத் தொடங்கின. அவற்றுள் சலசலோசன செட்டியார் எழுதிய சரசாங்கியைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.[3] மேலும் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற நாடக ஆசிரியர்கள் சில நாடகங்களை ஆங்கிலம், பிரஞ்சு, வடமொழி ஆகியவற்றிலிருந்து மொழி மாற்றம் செய்து மேடையேற்றியுள்ளனர்.

ஒரு இலக்கியத்தில் பிறமொழித் தாக்கத்தினால் உருவமைப்பு மாற்றம் ஏற்படுவது இயல்பானாலும் அதன் வாயிலாகத் தரப்படும் கருத்துக்களும் கையாளப்படும் முறைகளும், மக்களின் பொதுவுணர்வுகளுக்கும் மொழி மரபுக்கும் தக்கவாறே அமைந்திருக்கும் என்பது அறியத் தக்க உண்மையாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேனாட்டுக் கல்வியின் தாக்கத்தினால் தமிழ் நாடகம் உருவமைப்பு, கருத்து வெளியீட்டு முறை ஆகியவற்றில் புதுமையும் மாற்றமும் கொண்டு விளங்கியது. ஆனால் நாடகப் பொருள் தமிழரின் பொதுமைப் பண்புக்கு இணங்க வீரத்தையும் காதலையும் சிறப்பித்துக் காட்டும் போக்கில்தான் காணப்படுகிறது.

புராணங்களுக்கும் இதிகாச நிகழ்ச்சிகளுக்கும் நல்ல மதிப்பு இருந்த காலகட்டமாக இருந்ததினால் தொடக்க நிலையில் பல புராண இதிகாச நாடகங்கள் தெருக்கூத்துப் போர்வையை

3. சரசாங்கி, சரசலோசன செட்டியார், சென்னை, (1897) இது சேக்ஸ்பியர் எழுதிய சிம்பலின் நாடகத்தின் மொழி பெயர்ப்பாகத் தரப்பெற்றுள்ளது. இதனைத் தமிழ் மரபுக்கும், பழக்கத்துடன் ஏற்ற முறையில் பல மாற்றங்களுடன் ஆசிரியர் தந்துள்ளார்.

அசற்றிப் புத்தாடைப் பொலிவுகளாக அரங்கமேறின. அமைப்பு மாற்றம் ஆடை மாற்றமாக இருந்ததே தவிர ஆள் மாற்றமாக இல்லை. ஆகையினால் இந்த உருமாற்றம் மக்களுக்கு அன்னிய வுணர்வைக் கொடுக்காது நாடகத்தை இன்னியப் பெருக்காகக் காட்டி மகிழ்வித்தது.

வேற்றுமொழி நாடகங்களைத் தமிழ்நாட்டு முறைகளுக்கும் இயல்புகளுக்கும் தக்கவாறு பாத்திரப் பெயர்கள், இடப்பெயர் களை மாற்றுவதுடன் மக்களுக்கு புரியும் தன்மையில் பண்பாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பழமொழிகள் ஆகியவற்றையும் மிகப் பொருத்தமாக மாற்றித் தரப்பட்டுள்ள போக்கு ஒரு தனிக் கொள்கையாகவே தோன்றுகிறது. இத்தகைய தன்மையைத் தழுவல் என்றோ மொழிபெயர்ப்பு என்றோ கொள் வதற்கு இல்லை. ஆகையினால் இதனை மென்தழுவல் (Tender-Adaptation) என்று கருதுவது பொருத்தமாகப் படுகிறது.

சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், பரிதிமாற் கலைஞர், சுந்தரம்பிள்ளை ஆகிய நால்வரையும் புதுமுறை அமைப்புத் தமிழ் நாடகத்தின் முன்னோடிகளாகக் கருதலாம். சம்பந்த முதலியார் மேனாட்டு நாடக அமைப்பு முறைகளையும் உத்திகளையும் பற்றிப் பிடித்து நாடகங்களை எழுதியுள்ளார். சங்கரதாஸ் சுவாமிகள் பழைய தெருக்கூத்து முறைகளின் பிடிப் புடன் புதிய அமைப்பில் நாடகங்களைப் படைத்து மேடையேற்றி யுள்ளார். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழியில் தேர்ந்த அறிவைப் புலப்படுத்தும் தன்மையில் நாடகங்களைத் தந்துள்ளார். சுந்தரம் பிள்ளை கவிதையாகப் படைத்துள்ளார்.

நால்வருடைய நடையும் மாறுபாடுடையதாகக் காணப் படுகிறது. கற்றோர் நடையில் சம்பந்த முதலியாரும், பாமரர் நடையில் சங்கரதாஸ் சுவாமிகளும், பண்டிதர் நடையில் பரிதிமாற் கலைஞரும், கவிதை நடையில் சுந்தரம்பிள்ளையும் நாடகங்களை எழுதித் தமிழ் நாடகவுலகைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் பல்வகைப் பொலிவுகளுடன் புதுமையுறச் செய் துள்ளனர்.

மோனியர் உல்லியம்ஸ், வில்சன் ஆகிய இருவருடைய ஆங்கில மொழி பெயர்ப்புக்குப் பின்னரே வடமொழி நாடகங்கள் அவர் களுடைய முறையைப் பின்பற்றி முதன்முதலில் தமிழுக்கு அறிமுகம் செய்யப்பெற்றன. மூல மொழியிலிருந்து சிலவற்றை

விடுத்தும், கவிதையாக இருந்தவற்றை உரைநடையிலும் செய்துள்ளனர். பண்பாட்டு அணுக்கமும் பழக்கவழக்க நெருக்கமும் இருந்ததினால் மேனாட்டு நாடக மொழி மாற்றங்களுக்குப் பயன் படுத்தப் பெற்ற உத்திகள் வடமொழி நாடகப் பெயர்ப்புக்குத் தேவைப்படவில்லை என்று கருதலாம்.

தொடக்க காலத்தில் தமிழில் உருவாக்கப்பட்ட பெரும் பான்மையான நாடகங்கள் மேனாட்டு அமைப்பு, தெருக்கூத்து முறை, பார்சி நாடக உத்திகள், சமயவுணர்வு, பழமைச் சிந்தனை, வடமொழிக் கலப்பு ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளன. சம்பந்த முதலியார் ஆங்கிலக் கல்வியாளர்களை மனத்தில் கொண்டு எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. ஆகையினால் தமிழ் நாடக மரபு முறைகளுக்கு அன்னியமான மேனாட்டுத் தன்மைகளும் பார்சி நாடக அமைப்பும் அவருடைய நாடகங்களில் மிகுந்துள்ளன. சங்கரதாஸ் சுவாமிகள் பாமர மக்களை எண்ணி, தெருக்கூத்து மரபுகளில் பலவற்றைப் பின்பற்றி நவீன நாடகக் கட்டுக்கோப்பில் கலைத் தன்மை விளங்க தன்னுடைய நாடகங் களைப் படைத்துள்ளார். தொடக்க காலத்திலேயே தமிழ் நாடகம் கால மாற்றத்துக்குத் தக்கவாறு வளரும் சூழல் ஆசிரியர் களால் அமைக்கப்பட்டு விட்டது.

## தேசிய உணர்வு நாடகங்கள்

ஆங்கில ஆட்சிக்கு அடங்கியிருந்த பாரதநாடு பத்தொன்ப தாம் நூற்றாண்டின் இறுதியில் விடுதலை உணர்வுகொள்ளத் தொடங்கியது. எழுத்தாளர்களும் கலைஞர்களும் அந்த உணர்வில் கலந்து தங்களுடைய பெரும்பங்கை மிகச் சிறப்பாகச் செய்துள்ள னர். தேசிய உணர்வு நாடகங்கள் அணியணியாக மேடையேறின. அரசின் தடையையும் மீறி ஆயிரக்கணக்கான மக்களின் தேசிய உணர்வினைத்தட்டி எழுப்ப, தமிழ்நாடு முழுவதும் நாடகங்கள் அரங்கக் காட்சிகளாகி வளர்ந்தன.

தேசிய உணர்வு நாடகங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் காண்பதே முறையாகும். பாரதநாடு விடுதலை அடைவதற்கு முன்புள்ள தேசிய இயக்க நாடகங்கள் ஒரு பிரிவாகவும் விடுதலை பெற்ற பின்னர் எழுந்த தேசிய முன்னேற்ற நாடகங்கள் இரண்டாவது பிரிவாகவும் விளங்குகின்றன. தேசிய இயக்க நாடகங்களில் தீவிர போக்கும் மிதப்போக்கும் பிரித்துக் காணும் அளவில் தோன்றுகின்றன.

தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், வெ. சாமிநாதசர்மா ஆகிய இருவரையும் சிறப்பான தேசிய இயக்க நாடக ஆசிரியர்களாகக் கருதலாம். கிருஷ்ணசாமிப் பாவலர் 'கதரின் வெற்றி, தேசியக் கொடி, பதிபக்தி, பம்பாய் மெயில், கவர்னர்ஸ் கப்' போன்ற உணர்ச்சி மிக்க தேசிய நாடகங்களை எழுதி மக்களிடம் துஞ்சிக்கிடந்த தூய்மையான நாட்டுப்பற்றுணர்வை நல்ல முறையில் தட்டி எழுப்பினார். கதர் கட்டாவிட்டால் கனிந்து முதிர்ந்த காதலையும் துறந்துவிடும் உறுதியை உணர்ச்சிப் பிழம்பாகக் கதரின் வெற்றியில் காட்டும் ஆசிரியர் தேசியக் கொடியில் 1930ஆம் ஆண்டு நடந்த நாகபுரிக் கொடிச் சத்தியாகிரகத்தை விளக்கும் போது மக்களின் இதயங்களை எரிமலையாக்கி இயங்கச் செய்து விடுகிறார்.

சாமிநாதசர்மாவின் 'பாணபுரத்து வீரன்' (1931) என்ற நாடகம் நாட்டு விடுதலை உணர்வுக்கு மிகுந்த வேகத்தைக் கொடுத்ததினால் அன்றைய ஆங்கில அரசு அதனைத் தடை செய்தது. இவருடைய புராண நாடகங்களிலும் தேசிய உணர்ச்சி கட்டுடைந்து பீறிடுவதைப் பார்க்கலாம். அபிமன்யு, வீரவுரை பகரும்போதும் துரோணர் மானவுரை ஆற்றும்போதும் பாரத தேச வீரர்களின் அறவுணர்வும் அஞ்சாநெஞ்சமும் அழுத்தத்துடன் சுட்டப்பட்டுள்ளதை அவருடைய 'அபிமன்யு' நாடகத்தில் காணலாம்[4] இவருடைய நாடகங்கள் தீவிரமான தேசிய உணர்வைக் காட்டும் தன்மையுடையன.

விடுதலைப் போராட்ட காலத்தில் தீவிரமாகவும் வீராவேசத்துடனும் எழுதிய இந்த நாடக ஆசிரியரின் பிற்கால நாடகங்களில் இவ்வளவு வேகமான எத்தகைய உணர்ச்சிகளையும் காணமுடியவில்லை. இதிலிருந்து ஓர் உண்மையைக் காணமுடிகிறது. காலத்தின் தேவையும் சூழ்நிலையின் தாக்கமும் எழுத்தாளர்களை உந்தித் தள்ளி உணர்ச்சியை உடைத்துக் காட்டும் விறுவிறுப்பை

4. அபிமன்யு, வெ. சாமிநாத சர்மா, சென்னை, (1933)
   1. அபிமன்யு : என்னுடைய வீரத்திலே, என் தேகத்தினின்று வழிந்தோடும் இரத்தப் பெருக்கில் ஜ்வலிக்கும் கீர்த்தியிலே, பாரத தேசத்து நாரீகணிகள் வாசிக்கும் யாழிலே நான் வாழ விரும்புகிறேன். (பக். 12—13)
   2. துரோணர் : மார்பிலே அடிப்பதற்கும் அடிபடுவதற்கும் தான் பாரத தேச வீரர்களுக்குத் தெரியும் (ப. 33)

மூட்டுகின்றன. தன்மான உணர்வு, தாய்நாட்டுப் பற்று, கொள்கைப் பிடிப்பு, சாவை ஏற்கும் துணிவு, நேர்மை, தியாகம், உண்மையான சேவைபோன்ற பல பண்புகள் தேசிய உணர்வு நாடகங்களில் தழைத்துச் செழித்துள்ளன.

பாரதம் விடுதலை அடைந்த பின்னர் எழுதப்பெற்ற தேசிய உணர்வு நாடகங்களில் முக்கியமானவை எஸ். டி. சுந்தரத்தின் 'கவியின் கனவு, வீர சுதந்திரம்', பி. எஸ். ராமையாவின் 'பூ விலங்கு' செல்வராஜின், 'யுகசங்கமம்', இன்னாசியின் 'தேசத் தியாகி' நாரணதுரைக்கண்ணனின் 'குமரி முதல் காஷ்மீர் வரை' போன்றவை ஆகும். இவற்றில் விடுதலை உணர்ச்சிப் பெருக்கக் கூறுகள் அறிவிக்கப்படுவதுடன் மக்களின் பொறுப்புணர்ச்சி மிகுதியாக ஊட்டப்படுகிறது. விலை மிக்கது நாட்டுரிமை என்பதை உணர்த்தி அதைப் பேணிக் காக்கப்படவேண்டிய மாபெரும் பொறுப்பு வலியுறுத்தப்படுகிறது. கவியின் கனவு பதவி வெறி, சதிச் செயல், கடமையுணர்வு இன்மை, ஆகியவற்றைக் கண்டித்து உண்மையான சேவை, தியாக உணர்வு, நேர்மையான செயல்பாடு, ஒழுக்கக் கட்டுப்பாடு, கலை முகிழ்ப்பு போன்றவற்றை ஆதரிக்கிறது. நாட்டு விடுதலை தன்னலமற்ற பல தியாகிகளின் அருள் கொடை என்பதை, 'வீர சுதந்திரம்' மக்களுக்கு அறிவுறுத்தி, பெற்ற சுதந்திரத்தை அருஞ்சேவையால் அயராது காக்கவேண்டிய பெரும் பொறுப்பை நினைவு படுத்துகிறது.

'குமரி முதல் காஷ்மீர் வரை' என்ற நாடகத்தில் தேசபக்தி, தேசிய ஒருமைப்பாடு ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. இளைஞர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் வலியுறுத்தப்படுகின்றன. நாட்டு நடப்புக்களும் நல்ல சீர்திருத்தக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

'யுக சங்கமம்' தேசிய உணர்வுடன் சமூகச் சிந்தனைகளைக் கலந்து புத்துயிரும் புதுமைப் பொலிவும் பெற்று வளரவேண்டிய உரிமை இந்தியாவின் வளர்ச்சிப் பாதை காட்டும் வாயிலாக உள்ளது. பிரச்சனைகளுடன் உறவாடும் அரசியல் கட்சிகள், சமூக வேறுபாடுகள் ஆகியவற்றை அலசி ஆராயும் இந்த நாடகம் ஓர் அமைதியான தன்னாட்சி நாட்டைத் தலைநிமிர்ந்த நிலையில் காணவிரும்புகிறது. 'பூ விலங்கு' நாட்டு விடுதலைக்கு முன்பு கையாளப்பட்டால் ஏற்படும் விளைவுகளை விளக்குவதுடன் மக்களின் பொறுப்பு உணர்வுக்கு வித்திடுவதாகவும் காணப்படு

கிறது. காலத்துக்குத் தேவையான கருத்துக்களை மக்களிடம் விதைக்கவேண்டிய கடமைப்பாடு எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் உண்டு என்பதை இந்த நாடகங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

தேசிய உணர்வுக்கு மாறுபாடாக ஆங்கில ஆட்சியை ஆதரித்த நாடகங்களும் நடிக்கப்பட்டுள்ளன. டி. சே. ஸ்ரீனிவாச ஐயங்கார் 1913-ஆம் ஆண்டு 'ஆங்கில அரசாட்சி' என்ற நாடகத்தை எழுதிக் குழந்தைகளைக் கொண்டு நடித்துக் காட்டி ஆங்கில ஆட்சியாளரின் ஆதரவைப் பெற்றுள்ளார். 'அவர் (இங்கிலாந்து மன்னர்) தமது பிரஜைகளாகிய இந்தியர்களின்மீது என்றும் அன்னையைப் போல் அன்பு பாராட்டும் இயல்பினர்'[5] என்ற நாடக உரையாடல் பிஞ்சு மனங்களில் எவ்வாறு ஊடுருவி உறவாடும் என்பதைச் சிந்தித்து உணரலாம். எழுச்சிக்கு எதிராற்றல் இலக்கியத்திலும் கலையிலும் உண்டு என்பதற்குச் சான்றாக இந்த நாடகம் விளங்குகிறது.

## திராவிட இயக்க நாடகங்கள்

சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவுப்போக்கு, மரபுவழிச் சிந்தனை மீறல், தமிழ்ப் பண்பாடு பேணல், தமிழ்மொழி வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு போன்ற பல கொள்கை முகிழ்ப்புடன் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் பரவியபோது இத்தகைய சிந்தனைகளைப் பரப்பும் நோக்கத்தில் பல நாடகங்கள் மக்களின் முன்னால் நடித்துக் காட்டப்பட்டன. சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, திருவாரூர் தங்கராசு, ஆசைத்தம்பி போன்ற பலர் பகுத்தறிவுக் கொள்கை பரப்பு நாடகங்கள் பலவற்றை எழுதினர். எம். ஆர். ராதா, டி. வி. நாராயணசாமி, கே. ஆர். ராமசாமி போன்ற உணர்ச்சி மிக்க கலைஞர்கள் அவற்றை உணர்ச்சியுடன் நடித்துக் காட்டினர்.

அண்ணாதுரையின் சந்திரோதயம், வேலைக்காரி, நல்லதம்பி, காதல் ஜோதி, எதையும் தாங்கும் இதயம், நீதி தேவனின் மயக்கம், கருணாநிதியின் நச்சுக்கோப்பை, வெள்ளிக்கிழமை, போர்வாள், தூக்குமேடை, காகிதப்பூ, சிற்றரசின் தங்க விளக்கு, மதி போன்ற நாடகங்கள் சிறப்பாக மக்களுக்குப் பகுத்தறிவு இயக்கக் கருத்துக்களை விளக்கிக் காட்டியவை.

---

5. ஆங்கில அரசாட்சி, டி.கே.ஸ்ரீநிவாச ஐயங்கார், சென்னை (1913), ப.9.

அண்ணாத்துரையின் 'ஓர் இரவு' நாடகம் சுசீலா என்ற பாத்திரத்தின் தனி மொழியின் வாயிலாகப் 'பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகக் கலியாணத்தை நடத்துபவர்கள் அறிவிலிகள் ஆணவக்காரர்கள், பித்தர்கள், என்று அழுத்தமாகக் கூறுகிறது.[6] 'மணிமகுடம்' என்ற நாடகத்தில் கருணாநிதி தமது கொள்கை, நோக்கம், கோட்பாடு, இலட்சியம் ஆகியவற்றைப் புலப்படுத்துகிறார். அதில் சமயம், ஆட்சி, பிரச்சாரம் ஆகிய மூன்றுக்கும் மக்களுக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தை நன்கு காட்டியுள்ளார். 'இளங்கோ துறவு' என்ற ஓரங்க நாடகத்தில் அனைவரும் மதிக்கும் இளங்கோவடிகள் வாய்மொழியாக, 'விதியை வெல்வதற்கு நான் தேர்ந்தெடுத்த முடிவு இது! விதிவிட்ட வழியில் நடப்போம் என்று இருந்தால் வேதனைக் களமாகிவிடும் தமிழ்நாடு!' என்று கூறுவது அனைவரையும் சிந்திக்கவைக்கும் சிறந்த இடமாகும்.[7]

சந்திரோதயத்தில் துரைராஜ், வேலைக்காரியில் ஆனந்தன் ஆகிய பாத்திரங்கள் ஆசிரியரின் கொள்கை பரப்புக்குப் பெரிதும் உதவியுள்ளனர். துரைராஜின் செயல்பாடுகள் கோயில்கள் மடங்கள் ஆகியவற்றின் குறைபாடுகளை அம்பலப்படுத்தும் இறை நம்பிக்கையையும் எதிர்க்கும் அறிவாக்கங்களாகவும் அமைந்து நாடக நோக்கங்களைப் புலப்படுத்துகின்றன.

சமூகத்தைச் சிந்திக்கச் செய்து தெளிவான மாற்றம் காணவும் அரசியலில்-இயக்கவுணர்வை மேலோங்கச் செய்து எதிர்பாராத திருப்பத்தைக் கொடுக்கவும் திராவிட இயக்க நாடகங்கள் பெரிதும் துணைபுரிந்தன என்று உறுதியாகக் கூறலாம். மாற்றக் கருத்துக்களை உடைய நாடகங்களை நாவன்மை மிக்க கலைஞர்கள் திறமையுடன் நடித்துக் காட்டினால் அவை மக்களை மகிழ்விப்பதுடன் மனம் மாறச் செய்யும் வலிமையும் பெற்றுவிடுகின்றன. நாடகமேடை ஆற்றல் வாய்ந்த கொள்கை பரப்புச் சாதனம் என்பதை திராவிட இயக்க நாடகங்கள் ஐயமற நிரூபித்துக் காட்டியுள்ளன.

---

6. ஓர் இரவு, அண்ணாவின் நாடகங்கள், பரிமளம் பதிப்பகம், சென்னை, (1971), ப.27.
7. இளங்கோ துறவு, மு. கருணாநிதி, புதுமுகம் (தொகுப்பு) டி.என். சுகி சுப்பிரமணியன், நேஷனல் புக் டிரஸ்ட், புது டெல்லி, (1979), பா. 4, ப. 31.

## சமுதாயச் சிந்தனை நாடகங்கள்

கூடி வாழும் இயல்புடைய மனித இனத்தின் பட்டறிவின் தன்மைக்குத் தக்கவாறு சமுதாய அமைப்பு உருவாகிறது. அது இடத்துக்கு இடமும் காலத்துக்குக் காலமும் மாறும் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. அமைதிக்கும் அமைதி இழப்புக்கும் சமுதாயமே பாசறையாக அமைகிறது. பிரச்சனைகள் உருவாவதற்கும் அவற்றிற்குத் தீர்வு காணுவதற்கும் சமுதாய அமைப்பு காரணமாக இருப்பதை நடைமுறை வாழ்க்கை நன்கு காட்டுகிறது. குறையும் நிறையும் உடையது மக்கள் வாழ்க்கை. சிக்கலும் சீர்கேடுகளும் அதில் தோன்றுவது இயல்பு. அறிவுத் திறனால் திருத்தமும் உயர்வும் காண வேண்டியது மனிதத் தன்மை. சமுதாய மேம்பாடு காணும் கடமை அனைவருக்கும் கலைஞர்களுக்கும் உரியது.

தமிழ் உரைநடை நாடகங்கள் சமுதாயச் சிந்தனை முகிழ்ப்புடன் பல அரிய சீர்திருத்தங்களைச் செய்ய அயராது முயன்று வருகின்றன. குறைகளைக் குறிப்பிட்டுக் காட்டிப்பல வழிகளில் நிறை காண வழிவகைகளை வகுத்துக் காட்டுகின்றன. சில நாடகங்கள் குடும்ப வாழ்க்கைப் பிரச்சனைகளைச் சிறப்பாகக்கருதி அவற்றுக்குத் தீர்வு காண முயல்கின்றன. பல நாடகங்கள் குறிப்பிட்ட சமுதாயத்தின் நல்வாழ்க்கைக்காகப் பாடுபடுகின்றன. மிகச் சில நாடகங்கள் மனித இனப் பிரச்சனைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளன.

மாமியார், கால்கட்டு சம்பந்த முதலியாரின் பொன் விலங்கு, விஜயரங்கம் போன்றுள்ள நாடகங்கள் மெரீனாவின் தனிக்குடித்தனம், ஸ்கைலாப் சம்பந்தி சாமியாரின் குடும்பப் பிரச்சனை தொடர்பானவை. ஒரு குடும்ப வாழ்வைக் காட்டிப் பல குடும்பங்களின் அவல நிலையை அவை அறியச் செய்கின்றன. ஆகையினால் சமுதாயச் சிறப்பு அவைகளுக்குக் கிடைக்கின்றன.

சி. சு. செல்லாப்பாவின் 'முறைப்பெண்' தேவர் வகுப்பு வாழ்வினையும் ஆறு அழகப்பனின் 'கறிவேப்பிலை' நாட்டுக்கோட்டை செட்டியார் வாழ்வியல்புகளையும், பூவை ஆறுமுகத்தின் 'கஞ்சிக் கலையம்' விவசாய மக்களின் இயல்புகளையும், அருள்சாமியின், 'சேரிப்பெண்' மெரீனாவின், 'அடாவடி அம்மாக்கண்ணு' போன்ற நாடகங்கள் அடித்தள மக்களின் வாழ்வுத் தன்மைகளையும்

விளக்கிக் காட்டுகின்றன. இப்படித் தனித்தனிச் சமுதாய வகுப்பு நாடகங்கள் குறிப்பிட்ட வட்டத்தின் பிரச்சனைகளை மட்டும் பேசுகின்றன.

காவிரிநாடனின் 'அக்கினி சாட்சி' ஆடம்பர வாழ்க்கையை நினைத்து மனிதன் பணம் சேர்க்கக் கயமையான வழிகளைப் பின்பற்றுவதைக் கண்டிக்கிறது. ஆர். வி. எழுதிய 'போலி' நாகரிகம் பெயரில் சமூக அரங்கிலும் வீட்டுக் கூடத்திலும் மக்கள் போலியாக வாழ்வதை நகைப்புக்கு இடமாக்குகிறது. ஆறு.அழகப்பனின் 'முத்துச் சிப்பி' அலுவலகங்களில் நடக்கும் அருவருப்புக்களை அம்பலப்படுத்துகிறது. அரு. இராமநாதனின், 'வானவில்' சாதி சமயப் பாகுபாட்டுத் தீமைகளை வன்மையாகத் தாக்குகிறது. தா. ஏ. ஞானமூர்த்தியின் 'பொன்மலர்' செல்வநிலையில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளைச் சாடுவதுடன் சாதி வழக்குகளையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசியலாரின் உதவியின்றி அன்றாடப் பிரச்சனைகளைக் கூடத் தீர்க்க இயலாது வருந்தும் நாட்டுப்புறச் சிற்றூர்களின் முன்னேற்றத்துக்காக கோமல் சுவாமிநாதனுடைய 'தண்ணீர்' என்ற நாடகம் உணர்ச்சிகரமாக வாதிடுகிறது. சமுதாயக் கொடுமைகளில் ஒன்றான வரதட்சணை ஒழிப்புக்காகப் ப. நீலகண்டனின் 'மணமகள் வந்தாள்' பாடுபடுகிறது.

'வினை விதைத்தவர்' என்ற பெயரில் இரு தொகுதிகளாகப் பல ஓரங்க நாடகங்களை வானொலி வாயிலாக ஒலிபரப்பிய பொன் பரமகுரு வாழ்வில் தினம் தினம் பலவகையாக நடைபெறும் குற்றங்களைக் காரண காரியங்களுடன் விளக்கித் தவறுக்குப் பலியாகாமல் மக்களைக் காக்கவும் தவறு செய்யாதிருக்கக் குற்றவாளிகளை அறிவுறுத்தியும் சமுதாயச் சேவை செய்ய முயன்றுள்ளார்.

சமூக விரோத சக்திகளை விசைகொண்டு தாக்கும் ஆற்றல் மிக்க நாடகங்கள் பல அரங்கேறி உள்ளன. சமுதாயத்தின் அடித் தளத்தையே அசைத்துப் புரட்சிகரமான மாற்றத்தைக் காணவும் ஒரு சில நாடகங்கள் விரும்பியுள்ளன. அண்மைக் காலச் சிக்கல்களான வேலையின்மை, கொள்ளை லாபம், பண வீக்கம், பதவி மோகம், பதவியிலிருப்போர் பொறுப்பின்றி இருத்தல் போன்ற பலவற்றைக் கருவாகக் கொண்டு நாடகங்கள் உருவாகியுள்ளன.

உரைநடை நாடகங்களில் மிகுதியானவை சமூக நாடகங்களாகவே உள்ளன. அவற்றில் மக்கள் தங்களுடைய வாழ்வினை

யும், பிரச்சனைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் காண் பதினால் அவற்றைப் பெரிதும் விரும்புகிறார்கள். தங்களைத் தாங்களே அடையாளம் கண்டு கொள்ள உதவும் அரிய கலையாக் கங்களாகச் சமூக நாடகங்களைக் கருதுகின்றனர். காதல் தொடர் புடைய உறவு, எதிர்ப்பு, முறிவு, பொருத்தமின்மை, ஏமாற்றம், உண்மை இன்மை போன்ற நாடகங்களே மிகப் பலவாகச் சமூக நாடக அரங்கில் தோன்றியுள்ளன. இவற்றில் சமுதாய நடப்புக்கு மீறிய மிகைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. சமுதாய ஒழுக்க அமைப்பைச் சிதறடிக்கும்படியான காமக் களியாட்டம் விரும்பத் தகாதவாறு ஒட்டிக் கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். சமுதாயத்தை நாடகம் முன்னேற்ற வேண்டுமேயன்றிச் சீர்குலைத்து விடக்கூடாது. கலையின் உயர்வைப் பேணிக்காப்பது அனைத்து நாடக ஆசிரியர்களின் கடமையாகும.

## சமய விளக்க நாடகங்கள்

சமயச் சார்புடைய நாடகங்கள் பலவாக உள்ளன. புராண நாடகங்கள் இப்பிரிவுள் அடங்கும். சைவ விளக்க நாடகங்களான அப்பூதியடிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞான சம்பந்தர், காரைக்கால் அம்மையார், சிறுத்தொண்டர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆண்டாள் திருமணம் அல்லது மார்கழி நோன்பு, திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப் பொடிஆழ்வார் முதலியவை வைணவ நாடகங்களாக உள்ளன. கே. ராஜகோபாலாச்சாரியாரின் 'கடவுள் சித்தம்' என்னும் நாடகம் இறை விளக்கத் தத்துவமாகக் காணப்படுகிறது. 'மெய்நெறி நன்மையில் அமைவது இறைவனின் காரிய காரணங்கள்'[8] என்ற கருத்தை உறுதிப்படுத்துவதுடன் நாடகம் முடிகிறது.

---

8. கடவுள் சித்தம், கே. ராஜகோபாலாச்சாரியார், சென்னை இந்த நாடகம் விளக்கும் கருத்துக்கள் பல: (1947), ப.102.
   1. விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்தி உயர்வாகக் காட்டும் ஆற்றல் அவனுடைய உள்ளத்தில் என்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.
   2. மனித மனம் அவசியம் கடந்த ஒரு தத்துவத்துடன் உறவுகொள்ள விரும்புகிறது. அதை எட்டும் அரிய முயற்சியாக இந்த நாடகம் படைக்கப் பெற்றுள்ளது
   3. பெரியதும் நல்லதுமான எதுவும் விளக்கத்தில் அடங் குவது இல்லை. விளக்கத்தின் முடிவு விளங்காமை யிலேதான். (கண்ணன் நாரதரிடம் கூறல், ப.11)
   4. சான்றவர் ஒருவர் இருவர் இருக்கையால் அன்றோ இவ்வுலகம் இன்னும் அழிந்து படாமல் இருக்கிறது. (நாரதர் கூற்று, ப. 53)

நாரண துரைக்கண்ணனின் 'வள்ளலார்' சமரச சன்மார்க்க நெறியையும் ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் விளக்கிக் காட்டுகிறது. சம்பந்தமுதலியாரின் 'இல்லறமும் துறவறமும்' என்ற நாடகம் ஈரற ஒப்பீடாக அமைந்து தத்துவ விளக்கமாக மலர்ந்துள்ளது. சுத்தானந்த பாரதியார் பல நாடகங்களைச் சைவ தத்துவ விளக்கங்களாகவும் சிலவற்றைச் சமரச நெறிமுறைகளாகவும் எழுதியுள்ளார்.

கிருஸ்தவ சமயக் கொள்கைகளை விளக்கும் நாடகங்கள் ஒரு சிலவாக உள்ளன. சங்கரதாஸ் சுவாமிகளின் ஞானசௌந்தரி இராஜேந்திரன் பிள்ளையின் ஆதாம் ஏவாள் விலாசம் (1910) பி. எஸ். பீற்றர் ஐயரின், 'நல்ல சாமரித்தன் உவமை' (1910) மரிய தாசனின் ஊதாரிப் பிள்ளை விலாசம் (1898 )அந்தோணி முத்துவின் ஞான சவுந்தரி அம்மாள் நாடகம்(1909), எஸ். பொன்ரத்னத்தின் இதோ நமக்கு ஒருவர் (197?)போன்றவை கிறிஸ்தவக் கருத்துக்களை வாரிவழங்கும் நாடகங்களாகும். நீதியைச் சரிக்கட்டுகிற கடவுள் மிகுந்த அன்புள்ளவர். நிறைந்த கிருபையும் தயவுமுள்ளவர்'[9] என்று இயேசு யோவானிடம் கூறும் இடம் கருத்து விளக்கமாக அமைவதைக் காணலாம்.

இசுலாமிய நாடகங்களாக அலிபாதுஷா நாடகம் (1887)தையார் சுல்தான் நாடகம் (1879), லால் ஹௌகர் நாடகம், அப்பாசு நாடகம் போன்ற சில தமிழில் உள்ளன. ஆனால் இவை அனைத்தும் இசுலாமியச் சமயக் கருத்துக்களை விளக்கும் பாடலமைப்புடைய தெருக்கூத்து நாடகங்களாக உள்ளன. உரைநடை அமைப்பில் இதுவரை ஒன்றுகூட கிடைக்கவில்லை. காரணம் நாட்டியம், நாடகம் போன்ற கலைகள் இசுலாமிய சமயத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவை அல்ல. ஆணோ, பெண்ணோ உடலை வளைத்து வளைத்து நடனம் ஆடுவது 'ஹராம்' ஆகும் என்று சமயக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[10]

---

9 இதோ நமக்கு ஒருவர், எஸ். பொன்ரத்னம், பொன் ரத்னம் பப்ளிகேஷன்ஸ், சாயர்புரம்,நெல்லை மாவட்டம் (2979), (அங். 1, கா. ., ப. 8)

10. இஸ்லாமியத் தமிழ்க் கலைக் களஞ்சியம், பாகம்-3 அப்துற்றஹீம், (19?8), ப. 402.
'இப்து ஹஜர் (ரஹ்) அவர்கள் தம்மிடைய பத்ஹுல் ஜவாத் எனனும் நூலில் இவ்வாறு கூறியுள்ளதாகக் கலைக்-களஞ்சியம் கருத்துதெரிவிக்கிறது'.

சமயக் கருத்துக்களுக்கு உட்பட்டே சமயச் சார்பு நாடகங் களில் அறிவு விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் சமயக் கட்டுப்பாட்டுடன் தங்கள் பணியைச் செய்துள்ளதாகத் தோன்று கிறது. தத்துவ விளக்கம், சமரச சன்மார்க்க விளக்கம் ஆகிய வற்றைக் கொண்ட நாடகப் படைப்பாளர்கள் சிந்தனைச் செறி வுடன் கருத்துக்களைத் தெளித்துள்ளனர். அறிவாற்றலைப் பயன் படுத்தி விளக்கம் தர முயன்றுள்ளமை நன்கு தெரிகிறது. இறுக்க மான கட்டுபாடுகள் மீறுணர்வுக்கு வழிவகுக்கும் என்ற உண்மை யும் புலப்படுகிறது.

## சோதனை நாடகங்கள்

அரங்கக் காட்சிகள் இல்லாமல் கலை ஒப்பனை கொள்ளாமல் கருத்துக்குச் சிறப்பிடம் கொடுத்து சில நாடகங்கள் நடிக்கப்படு கின்றன. பரிக்ஷா, நிஜம், வீதி, கூத்துப்பட்டறை போன்ற நாடக அமைப்புக்கள் இவற்றை நடத்துகின்றன. நடைமுறை வாழ்க்கை யிலுள்ள சிக்கல்களையும் பிரச்சனைகளையும் ஓரளவு எள்ளல் அமைப்பில் மக்கள் முன் நடித்துக் காட்ட இத்தகைய நாடகங்கள் முயல்கின்றன. சமூக மாற்றவுணர்வைச் சாதாரண மக்களுக்கும் ஊட்ட வேண்டும் என்று விரும்புகின்றன.

இவ்வாறு நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற முறையில் சில உரை நடை நாடகங்கள் எழுதப்பெற்றுள்ளன. நா. முத்துசாமியின் நாற் காலிக்காரர், இந்திரா பார்த்தசாரதியின் போர்வை போர்த்திய உடல்கள், அஷ்வகோஷின் வட்டங்கள், பிரபஞ்சனின் முட்டை, பறம்பைச் செல்வனின் புல்லுருவிகள், ஞான இராஜசேகரனின் வயிறு, மரபு முதலிய நாடகங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை.

கலை வாழ்க்கைக்காகவே என்ற கொள்கையுடன் இந்தகைய நாடகங்கள் படைக்கப்படுகின்றன. மரபைப் பற்றிச் சற்றும் கவலைப் படாமல் இவை நடிக்கப் படுகின்றன. இம்முறை நாடகங் களின் நடப்பு முறையும் அதைப் பற்றிய பிறருடைய மாறுபட்ட கருத்தும் 'மரபு' என்ற நாடக உரையாடலில் இடம் பெற் றுள்ளதைக் காணலாம். ஒரு மனிதன் இன்னொருவனிடம் கேட்பு தாக இக்கூற்று அமைகிறது.

"அலங்காரமானமேடையில்லை. அலறுகின்ற ஒலிபெருக்கி இல்லை. இந்த வெறுமையில் நாடகம் வேறு இங்கே நடக்கப் போகிறதா? என்ன உளறுகிறாய் நீ?"[11]

இம்மாதிரி நாடகங்கள் திடீரென்று தொடங்கித் திடீரென்று முடிவது போன்று தோன்றும். பிரச்சனையும் தீர்வும் உய்த்தறிய வேண்டிய போக்கில் அமைவதை மிகுதியான நாடகங்களில் காண லாம். இவை இன்னும் சோதனை முறையாகவே இருப்பதை உணரமுடிகிறது. வங்காள அறிஞர் பாதல் சர்க்காரின் நாடக நடைமுறையின் எதிரொலியாகவே சோதனை நாடகங்கள் காணப்படுகின்றன.

## சிறுவர் நாடகங்கள்

நலம் பேணல், பண்புடைமை, வாழ்க்கைச் சிறப்பு, நாட்டுக்கு உதவல் முதலிய உயர்வுகளைக் குழந்தைகளுக்கு வழங்கும் நோக் கத்துடன் சிறுவர் நாடகங்கள் எழுதப்பெற்றுள்ளன. சிறுவர் நாடக இயக்கம் ஓர் அமைப்பாக வளர்ந்துள்ளது அதன் வாயி லாகப் பல நாடகங்கள் அரங்கேறி பல்லாயிரக் கணக்கான குழந்தைகளைக் கவர்ந்துள்ளன.

சிறுவர் நாடகங்கள் முழு நீளமாகவும் ஓரங்கமாகவும் எழுந் துள்ளன. அறிவுறுத்தல், வாழ்வுக்கு வழிகாட்டல், இன்பம் பெருக்கல், கலையார்வம் ஊட்டல் போன்ற பல சிறப்பு நோக்கங் களும் அவற்றுள் அடங்கியுள்ளன.

அழ. வள்ளியப்பா, கூத்தபிரான், தணிகை உலகநாதன் ஆலந் தூர் மோகனரங்கம், கி. மா. பக்தவத்சலம், பூவண்ணன் போன் றோர் சிறுவர் நாடகங்களைச் சிறப்பாக எழுதியுள்ளனர். 'குண சேகரன்' போன்ற நாடகங்கள் நாட்டுப்புறச் சிறுவர்களின் நன்மையைக் கருதிப் பள்ளி நாடக மேடைக்காகப் படைக்கப் பட்டன.

## மொழிபெயர்ப்பு நாடகங்கள்

நவீன நாடகங்கள் தொடங்கியதிலிருந்து இன்றுவரை பல மொழி நாடகங்கள் அறிஞர்களால் தொடர்ந்து மொழிபெயர்க்கப் பட்டு வருகின்றன. அவற்றை இந்திய மொழி நாடகங்கள் என்றும் பிறநாட்டு மொழி நாடகங்கள் என்றும் இருவகையாகப் பிரித்துக்

11. மரபு, ஞான இரசேகரன், 'வயிறு' நாடகத் தொகுதி, அகரம், சிவன்கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம், (1980), ப. 41.

கொள்வது சிறப்பாக அமையும். இந்திய மொழி இலக்கியங்கள் பல நிலைகளில் ஒன்றுபடும் இயல்புகளை உடையதாக உள்ளன. ஏனைய மொழி இலக்கியங்கள் பலவித வேறுபாடுகளுடன் காணப் படுகின்றன. பண்பாடு, கலைத் தன்மை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைப் போக்கு ஆகியவை நாட்டுக்கு நாடு வேறுபட்டு இலக்கியத் தன்மைகளை மாற்றி அமைக்கின்றன.

மொழிபெயர்ப்பு செய்யும் போது மூல மொழி தோன்றிய இடத்தின் கருத்தோட்டத்தை நன்கு அறிய வேண்டியது தேவை யும் முறையும் ஆகும். தமிழில் பிற மொழி நாடகங்கள் பல மொழிபெயர்ப்புக்களாகத் தரப் பெற்றுள்ளன. அவற்றுள் வட மொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, கிரேக்கம் ஆகிய மொழிகளின் நாடகங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்கள் அதிக அளவில் பலரால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

காளிதாசன், ஹர்ஷன், விசாகதத்தன் முதலியோரின் வட மொழி நாடகங்கள், மோலியர், ரொத்துரு போன்றோரின் பிரஞ்சு நாடகங்கள், ஈஸ்கைலஸ், யூரிபிடீஸ், சோபோகிளிஸ், அரிஸ்டோபர்னஸ் ஆகியோரின் கிரேக்க நாடகங்கள் இப்சனின் நார்வே நாடகங்கள், கதேயின் ஜெர்மன் நாடகங்கள், செகோவின் ரஷிய நாடகங்கள் தாகூரின் வங்காள நாடகங்கள், ஆகியனவும் மிகுதியான அளவில் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. குஜராத்தி, இந்தி, தெலுங்கு, மலையாளம், ருமேனியா ஆகிய மொழி நாடகங் களும் தமிழில் காணக்கிடைக்கின்றன. ஒரே நாடகம் பலரால் பல வகை மாற்றங்களுடன் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதையும் காண முடிகிறது. காளிதாசனின் சாகுந்தலம் சுமார் பதினைந்து பேருடைய மொழிபெயர்ப்பில் கிடைக்கிறது. இதுபோன்று சேக்ஸ் பிறருடைய ஜூலியஸ்சீசர், மெர்ச்செண்ட் ஆஃப் வெனிஸ், சிம்பலின், மக்பத், கிளியோபாத்ரா முதலிய நாடகங்களும் பலரால் முயலப்பட்டுள்ளன.

நல்ல இலக்கிய நூல்களை மொழிபெயர்ப்பது இயல்பு. அத் தகைய இலக்கியங்களைப் பலர் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்குத் தக்கவாறு மொழிபெயர்ப்புப் பணியைச் செய்துள்ளனர். சாகுந்தலம் நாடகத்தின் கவிதை நடை உரை யாடல் ஒன்றை மூன்று ஆசிரியர்கள் எவ்வாறு மொழிமாற்றித் தந்துள்ளனர் என்று காணலாம்.

(1) அ. கு. ஆதித்தரின் மொழிபெயர்ப்பு:
வில்லேந்தி மானை நோக்கி நிற்கும் தங்களின் இந்நிலை பினாகம் ஏந்திய சாஷாத் சிவபெருமானையே என் கண் முன்காட்டுகிறது.[12]

(2) 'என். சாமிநாத சாஸ்திரியின் தமிழாக்கம்:
'மஹாராஜாவே, புள்ளிகளோடு கூடிய இந்த மானையும் நாணேற்றி வில்லோடு அதைத் துரத்துகிற உம்மையும் பார்த்தால் பினாகம் என்னும் வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு (பிரம்மாவாகிய) மானைப் பின் தொடர்ந்து போன சாக்ஷாத் சிவபெருமானைக் காண்பது போலிருக்கிறது.[13]

(3) ரா. இராகவையங்காரின் மொழிமாற்றம்:
'கருமான் கலையுங் கவிகார் மூகனிற்
கடுநாண் தொடுமுந் தமையும் விழிவைத்
தொருமான் றொடர்தந் துபிநா மென்கண்
ணுறநன் கெதிர்த்த தெனநோக் குவல்யான்[14]

இம்மூன்று மொழிபெயர்ப்புக்களில் ஒன்று தருமொழி போன்று கவிதையிலும் மற்ற இரண்டும் பெறுமொழியினர் எளிதாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் உரைநடையாகவும் உள்ளன. இவற்றுள் ஒன்று தருமொழியில் இருப்பது போன்று சுருக்கமாகவும் அடுத்தது மொழிபெயர்ப்பாளரின் விளக்கங்களுடன் விரிந்தும் காணப்படுகிறது இவ்வாறு மூலமொழிக்கு மிஞ்சிய விளக்கங்கள் கொடுத்து மொழிபெயர்ப்பது முறையா என்பது சிந்தனைக்கு உரியதாக உள்ளது. இத்தகைய மொழிபெயர்ப்பு உரிமை, வரம்பு கடப்பதற்கு ஏதுவாகி விடலாம். தருமொழிக்கு இணங்க பெறுமொழிக்குத் தக்கவாறு கூடியவரைக் குறைவான மாற்றங்களுடன் மொழிபெயர்ப்பதையே முறையாகக் கருதவேண்டும். கவிதையாக இருப்பதைக் கருத்துச் சிதையாது உரைநடையாக மாற்றித் தருவதைத் தவறான மொழிபெயர்ப்பாகக் கருதமுடியாது.

---

12. சாகுந்தல நாடகம், அ கு ஆதித்தர், சென்னை, (1938), ப. 1.
1. சாகுந்தலம், என். சாமிநாத சாஸ்திரி, சென்னை (1902) ப 4.
14. அபிஞ்ஞான சாகுந்தலம், ரா. இராகவையங்கார், சென்னை, (1936), ப.4.

தருமொழியின் செய்திகள், கருத்துரைகள், உணர்வுகள், நோக்கங்கள் ஆகியவை சிதையாதவாறு பெறுமொழியின் நடை நயங்களுக்குத் தக்கவாறு மக்கள் நன்கு புரியும் வகையில் செய்து தரப்படும் மொழிபெயர்ப்பைச் சிறப்புடையதாகக் கருதலாம். பெரும்பாலும் பாரத நாட்டு நாடகங்களை நேரடி மொழிபெயர்ப் பாகவும் வேற்று நாட்டு நாடகங்களை மென்தழுவலாகவும் அறிஞர்கள் தந்துள்ளனர். வேற்று நாட்டு இலக்கியங்களின் நேரடிப் பெயர்ப்புக்கள் எளிமையாகப் பிரிந்துகொள்ளும் இயல்பை இழந்தே காணப்படுகின்றன. மென்தழுவல் சில வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் மூலநூல் ஆசிரியரின் கருத்துக்களை நெருக்க உறவுக்கு இழுத்து வருவதினால் அதனைத் தேவையான நல்ல உத்தியாகக் கருதுவதில் தவறில்லை.

## தழுவல் நாடகங்கள்

முன் இலக்கியங்களைத் தழுவிப் பல நாடகங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழிலக்கியத் தழுவல், வேற்று இலக்கியத் தழுவல் என இரண்டாகப் பிரிக்கலாம். தழுவலில் இலக்கிய உருவமைப்பு மாற்றத்துக்கும் கற்பனை வளப் பெருக் கத்துக்கும் இடமுள்ளது. 'வள்ளல் பாரி, பேகன், அதிகைமான், பிசிராந்தையார், வெற்றிக்குப்பலி' முதலியவை சங்க இலக்கியத்தி லிருந்தும், 'பீலிவளை, ஆபுத்திரன்' போன்றவை மணிமேகலையி லிருந்தும், 'இமயத்தில் நாம், நாடகச் சிலம்பு, இளங்கோவின் துறவு' ஆகியவை சிலப்பதிகாரத்திலிருந்தும், 'மானனீகை, நரவாண தத்தன்' போன்றவை பெருங்கதையிலிருந்தும் தழுவல் நாடகங்களாக எழுதப்பட்டுள்ளன.

பாத்திரங்கள், கதைக்கரு முதலியவற்றை மூல இலக்கியத்திலி ருந்து பெற்று நாடக அமைப்புள் கற்பனைக் கலையுடன் கலை யாக்கங்களாக இத்தகைய தழுவல்கள் அமைகின்றன. சுவை பெருக்குவதற்கும் கலைநயம் கூட்டுவதற்கும் தழுவல்களில் ஆசிரியர்களுக்கு முழு உரிமை உள்ளது. சங்க கால இலக்கியத் தழுவல்களில்கூட நடப்புக்கால உண்மைகளைப் பொருத்தமாக நாடக ஆசிரியர்கள் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற விருப்பில் சேர்த்துள்ளது தேவையினைப்பாகவே தோன்றுகிறது. இலக்கியச் செய்திகளை இனிதாகவும் சுவையாகவும் மக்கள் புரிந்து பயனடைவதற்குத் தழுவல் நாடகங்கள் நன்கு துணை செய்கின்றன.

## நாடக வகைகள்

தேசிய இயக்கம், திராவிட இயக்கம், சமயம், சமூகம் போன்றவை சமுதாயப் பொது நோக்கமுடையவை. மொழி பெயர்ப்பு, தழுவல் போன்ற நாடகங்கள் சிறப்புத் தன்மை யுடையன. இத்தகைய வகைக்குள் அடங்கும் நாடகங்களின் பொருட்கூறிலுள்ள வேறுபாடுகளைக் கருதி அவற்றை வேறு வேறு வகைசளாகப் பிரித்துக் காண்பது பயனுடையதாக அமையும்.

பொதுவாக இன்ப முடிவுள்ளதை இன்பியல் என்றும் துன்ப முடிவுள்ளதைத் துன்பியல் என்று கூறுவது வழக்கம். வாழ்க்கை யானது இன்பமும் துன்பமும் கலந்தது. ஆகையினால் நாடகங் களில் இவ்விரண்டு வகை உணர்ச்சிகளும் விரவி வருவதைக் காணலாம். நாடகத் தேவைக்குத் தகுந்தவாறு அவை கூடியும் குறைந்தும் வரலாம். தொடக்கத்தில் இலக்கியப் படைப்பின் மரபு விதியை ஒட்டி நாடகங்கள் இன்பியலகாவே எழுதப்பட்டு வந்தன. ஆனால் அந்த மரபை மீறிச் சம்பந்தமுதலியார் 1891-ஆம் ஆண்டு 'கள்வர் தலைவன்' என்ற துன்பியல் நாடகத்தை முதலாவதாகத் தமிழ் உலகுக்குத் தந்தார். அதிலி ருந்து பல துன்பியல் நாடகங்கள் மேடையேறி மக்களைக் கவர்ந் தன. அத்துமீறிய அவலச் சுவை காரணமாகக் 'கள்வர் தலைவன்' போன்றவை மெய்ம்மை வாழ்வுக்குப் புறம்பாகத் தோன்றின.

'கள்ளத் தோணி' (1953) என்ற துன்பியல் நாடகம் அவலக் கழனியாக இருப்பினும் வரலாற்று உண்மைகளின் வெடிப்புக்களி லிருநது ஊறி வழியும் குருதிப்-பெருக்காக விளங்குவதால் உணர் வையும் இரக்கத்தையும் ஊட்டும் தன்மையுடன் சிறப்புப் பெறு கிறது. இலங்கை இந்திய நட்புறவு நிலைநிறுத்தப்படவேண்டும் என்றும் கடல் கடந்து வாழும் தமிழனின் கண்ணீர் வலிமை யுடையது என்றும் விளக்குகிறது.

நீதிமன்றத்தில் சந்திரன் என்ற இளைஞனிடம் அவன் இலங்கைக்கு வந்தது குற்றம் என்று கூறிய நீதிபதிக்குப் பதிலாக அவன் சொல்லிய உரை அனலையும் அறிவையும் கக்குவதாக அமைந்துள்ளது. அதை அவனுரையாகக் கேட்பது நன்று.

சந்திரன்: ஆம்! பெருங்குற்றம் மன்னிக்க முடியாத குற்றம்! நான் வந்தது அல்ல—என் முன்னோர்கள் வந்தது... உறட்டன் காடுகளுக்குப் பதிலாக அவர்கள் உதக மண்டலக் காடுகளை வெட்டித் திருத்தியிருக்க

> வேண்டும். நீலகிரிச் சோலை அமைத்திருக்கவேண்டும். இலங்கையின் மலைக் காடுகளுக்குச் சிந்திய ரத்தத்துக்குப் பதிலாக மைசூர் சந்தனக் காடுகளுக்குத் தண்ணீர் சிந்தி இருந்தால் இன்று கண்டிப் பகுதியை அண்டிப் பிழைக்க, நாவலப்பிட்டியில் கேவலப்பட சந்தர்ப்பமே வாய்த்திருக்காது![15]

இந்த நாடகம் சரியான துன்பியலுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக உள்ளது. அதன் உள்ளீட்டை மணிமாறன் என்ற பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துவது சிறப்பாகக் காணப்படுகிறது.

> '(இந்த நாடகம்) இன்றைய தமிழகத்தின் சரியான சரித்திரக் குறிப்பு! கடல்கடந்த தமிழகத்தின் கண்கள் வடிக்கும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் சொல்லும் காவியம்!... தன்மானம் இழந்து கிடக்கும் தமிழனின் இனவுணர்ச்சிக்குச் சரித்திரம் கொடுக்கும் சவுக்கடி'[16]

துன்பியல்கள் இவ்வாறு அமைய இன்பியல்கள் வாழ்க்கையின் இன்பங்களை இயல்பாகக் காட்டித் திருமணம். பிரிந்தவர் கூடல், பதவி பெறுதல், முதலிய இன்ப முடிவுகளை எட்டுவன.

நடப்பு உண்மைகளை நகைச்சுவையுடன் புலப்படுத்தித் தவறுகளைச் சுவையுடன் எடுத்துக் காட்டித் திருத்தமுயலும் நாடகப் படைப்புக்கள் அங்கதம் (Satire) என அழைக்கப்படுகின்றன. குறை உணர்த்தல் கடுமையாக அமையுமாயின் அது கூரம்புகளாக தவறு செய்வோரின் உள்ளத்தில் பாய்ந்து நோவைக் கொடுத்து விடும். அத்தகைய போக்கு அங்கதச் சுவைக்கு ஊறாகிச் சீற்றத்துக்கு இடமாகி விடுவதுண்டு. சம்பந்த முதலியாரின் சபாபதி வரிசை நாடகங்கள். நல்ல சமூக அங்கதங்களாகவும் சோவின் நாடகங்கள் பெரும்பாலும் அரசியல் அங்கதப் படைப்புக்களாகவும் கோராவின் நாடகங்கள் கூரம்பு அங்கதக் காட்சிகளாகவும் அமைந்துள்ளன. பல சமூக நாடகங்கள் அங்கத இடைக் காட்சிகளுடன் உள்ளன.

---

15. கள்ளத்தோணி, எம் ஏ. அப்பாஸ், கலைவாணி புத்தகாலயம், கே.கே. நகர், சென்னை—78, (ஜூன் 1953), கா. 29, ப. 113.
16. மேற்படி, கா. 60, ப. 214

மக்களை மனம் மகிழச்செய்து நகையூட்டும் நோக்கத்தைக் கொண்டவற்றை நகைச்சுவை அல்லது கேளிக்கை நாடகம்(Farce) என்று கூறலாம். பண்புக்கும் ஒழுக்கத்துக்கும் ஊறு விளைவிக்கும் நகைச்சுவைகள் இருப்பதைச் சிறப்பாகக் கருதமுடியாது. உரைகள், தனிச்சொற்கள், செயல்கள், ஒலி முறைகள், முதலியவற்றைக் கொண்டு நகையாடுவதைக் காணலாம். சொல்லாடலைவிட கருத்தாடலைக் கொண்டு எழுப்பும் நகை சிறப்பாக அமையும்' எள்ளலும் இடம்பெறும். கேலிக் கூத்துக்களும் நகைக்குப் பயன் படும். அங்கதத்துக்கும் கேளிக்கைக்கும் வேறுபாடு கருத்திலும் நோக்கத்திலும் உண்டு என்பதை அறியவேண்டும். சம்பந்த முதலியாரின் 'சதி சக்தி' சிறந்த கேளிக்கை நாடகமாகும். இது தவிர 'ஸ்திரிராஜ்யம், வைகுண்ட வைத்தியர்,சங்கீதப் பைத்தியம்' போன்றவை இப்பிரிவுள் அடங்கும்.

ஒரு நாடகத்தைப் பெயர், பொருள், சொல் முதலியவற்றால் நேர்மாறாக மாற்றி எதிர்நாடகமாக நகைச்சுவை மலியப் புனைவது நாடக நையாண்டி (Burlesque) ஆகும். இதில் எள்ளல் குறிப்பும் உண்டு. நன்கறிந்ததைத் தலைகீழ் மாற்றமாகக் கொடுப்பதினால் ஏற்படும் நகையுணர்ச்சியே நாடக நையாண்டிக் குச்சிறப்புக் கூறாக அமையும். சம்பந்த முதலியார் 'சந்திரகரி' என்பதை அரிச்சந்திரன் நாடகத்தின் நையாண்டியாகப் படைத் துள்ளார். உண்மையே பேசும் அரிச்சந்திரனுக்கு மாற்றாகப் பொய்யே பேசும் சந்திரகரி நாடக நையாண்டியின் தலைவனாக வந்து தன்னை ஒரு பொய்யாவது பேசவைக்க வேண்டும் என்ற உறுதியுடன் முயலும் மித்ரவசு முனிவரின் தலையை வெட்ட வாளோங்கும் அளவுக்குத் தந்திரமாகவும் கபடமாகவும் செய லாற்றுகிறான். பாத்திரப் பெயர்கள் முற்பகுதி பிற்பகுதியாக மாற்றப்பட்டுள்ளன தமிழில் மிகச் சிறந்த நாடக நையாண்டி யாகச் 'சந்திரகரி' விளங்குகிறது.

துப்பறியும் போக்கைப் பொருளாகக் கொண்ட 'இன்ஸ் பெக்டர், சதுரங்கம், கொலை' போன்ற சில துப்பறியும் நாடகங் கள் உள்ளன. உளவியல் போக்கை விளக்கும் தன்மையுடைய நாடகங்களை உளவியல் நாடகங்கள் என அழைப்பது முறை. கறுப்பு நிறத்தைக் கண்டால் மிக வெறுத்து மாறுபாடாகச் செயல் படும் ஒரு மனித மனப்போக்கைப் பெ. தூரனின், 'மனக்குகை' நாடகம் விளக்குகிறது. வ. சுப. மாணிக்கத்தின் 'நெல்லிக்கனி' நாடகத் தலைவியின் மன அதிர்ச்சியின் விளைவைக் கொண்டே

பின்னப்பட்டுள்ளது. உளவியல் நாடகங்கள் மனித மனத்தை அகழ்வாராய்ச்சி செய்வதைக் கொண்டே வளர்க்கப்படுகின்றன.

மணநாளில் நடிப்பதற்கு ஏற்றதாக மணமக்களுக்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் எழுதப்படுவதை மணவினை நாடகங்கள் (Wedding Masques) என்று கூறுவது பொருந்தும். அகிலனின் 'இன்ப மணம்' அத்தகையது. உணர்ச்சி வேகம் தரக்கூடிய பொருளமைப்புடன் அடிபிடி சண்டை, கொலை போன்ற நிகழ்ச்சிகளால் சில உணர்ச்சி வேக நாடகங்கள் (Melodrama) எழுதப் பட்டுள்ளன. பி. எஸ். இராமையாவின் 'போலீஸ்காரன் மகள்' அவற்றுள் ஒன்று.

வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளாகவும் வாழ்க்கை வரலாறாகவும் காணப்படுகின்றன. சில வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் பொருளாகக் கொண்டு அவற்றுள் கலைச் சிறப்புக்காகவும் எளிதான கருத்து விளக்கத்துக்காகவும் சில கற்பனைப் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் இணைத்து எழுதுவதை வரலாற்று நாடகங்களில் பார்க்கலாம். தாமரைக் கண்ணன் 'சாணக்கிய சாம்ராஜ்யம்' என்னும் வரலாற்று நாடகத்தில் ஊர்மிளை என்ற பெண்ணைப் படைத்து யாருக்கும் பணியாத சாணக்கியனை அவளிடம் மன்னிப்பு கேட்க வைத்துள்ளார். ஆறு. அழகப்பனின் 'திருமலை நாயக்கர்' பி. கே. சுப்பராஜின் 'கட்டப்பொம்மன்' ஆகிய நாடகங்கள் கலை நயத்துடனும் கற்பனைச் சிறப்புடனும் கூடிய வரலாறாகப் படைக்கப்பட்டுள்ளன. அரு. இராமநாதனின், 'இராஜ ராஜ சோழனில்' வரலாறு போற்றும் வீர மன்னன் மறதிக்குப் பேர்போனவனாகக் காணப்படுகிறான்.

ஒருவருடைய வரலாற்றைப் பிறப்பு முதல் இறப்புவரைத் நாடகமாக்கிக் காட்டுவதை வாழ்க்கை வரலாற்று நாடகமாக, கொள்ளலாம். சம்பந்த முதலியாரின் 'புத்த அவதாரம்', மு. வரதராசனின் 'பச்சையப்பர்' வழித்துவணவனின் திருவள்ளுவர்' போன்றவை இத்தகைய நாடகப் பகுப்புக்குப் பொருந்தும் படியாகக் காணப்படுகின்றன. வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவை கருதி கூட்டிக் குறைத்துத் கூற ஆசிரியர்கள் உரிமை எடுத்துக் கொள்கின்றனர்.

பலவகைகளில் இதுவரைத் தமிழில் சுமார் 1300 உரைநடை நாடகங்கள் அச்சேறியுள்ளதாகத் தெரிகிறது. மேனாட்டு நாடகங்களைப் போன்று பல வகைகளில் தமிழில் சம்பந்தமுதலியார்தான்

முதன் முதலில் எழுதியுள்ளார். இன்னும் நுணுக்கமாக மேலும் சில வகைகளைப் பிரித்துக் காண இடம் கிடைக்கலாம்.

## நாடகக் கட்டுக்கோப்பு

நாடகக் கட்டுக்கோப்பு அல்லது கதைப் பின்னல் நாடக ஆக்கத்தில் மிக முக்கியமானதாகும். அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து நாடகக் கட்டுக்கோப்பு முகம், பிரதி முகம், கருப்பும், விளைவு, துய்த்தல் என ஐந்து நிலைகளாக அமையும் என்பதை அறியலாம்[17] அதனை அறிமுகம், சிக்கல், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு ஆகிய நிலைகளுடன் பொருத்தி விளக்கம் காணலாம். வீழ்ச்சிப்படியில் சிக்கல் அவிழும் நிலையைத் தெரியலாம். இவற்றை நாடகக் கட்டுக்கோப்பின் ஐந்து கட்ட பகுப்புக்கள் (Five-Fold Divisions) என்று கூறலாம். ஒரு சிக்கலைக் கருத்தில் கொண்டு முதலில் பாத்திரங்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்திப் பின்னர் சிக்கலை வளர்த்து உச்சநிலை அடைவதைக் காட்டியதும் சிக்கல் நீங்கும் பகுதி விளக்கப்படும். இறுதியில் சிக்கலுக்குத் தீர்வுகள் கண்டு நாடகம் முடிவுறும்.

இவ்வாறு அமையும் ஐந்து கட்டக் கட்டுக்கோப்பு தமிழிலுள்ள பெரும்பான்மை நாடகங்களில் அமைந்துள்ளது, ஓரங்க நாடகங்களிலும் இத்தகைய அமைப்பு உண்டு. பொதுவாக முதல் இரண்டு பிரிவுகளும் நீண்டு இறுதி இரு பிரிவுகளும் அளவில் (நாடகக் கலை ஓட்டத்தில்) குறுகிக் காணப்படும். இறுதிப் பிரிவுகள் நீண்டுவிடுமானால் நாடக விறுவிறுப்பு குன்றிவிடுவதற்கு ஏதுவாகிவிடும்.

அண்மைக் காலத்துச் சோதனை நாடகங்கள் போன்றவற்றில் அறிமுகப்பகுதி இல்லையோ என்று கருதும் அளவுக்குத்தான் உள்ளது. எடுத்த எடுப்பில் சிக்கலைக் காட்டி அதை வளர்க்கும் போக்கில் அறிமுகம் கலைத் திறமுடன் நடைபெறுகிறது, இதனை நாடகப் படைப்பில் ஒரு மாற்றமாக ஏற்றுக்கொள்ளலாம். திடீரெனத் தொடங்கித் திடீரென முடியும் உணர்வை நாடக ஆசிரியர் கொடுத்து விறுவிறுப்பைப் பெருக்குவது வளர்ச்சித் தன்மையைக் காட்டுகிறது. நன்கு உணரத்தக்கச் சமூகச் சிக்கலுடைய நாடகங்களில்தான் இத்தகைய போக்கு காணப்படுகிறது அவற்றுள் கதைப் போக்கு குறைந்து நிகழ்ச்சி விளக்கத் தன்மையே அமைந்துள்ளது.

---

17. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, காதை 3, அடி. 12-13.

தொடக்கக்கால நாடகங்களில் உரையாடல் மிகுந்து அதன் வழியாகக் கதையின் வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. ஆனால் அண்மைக் காலத்தில் வளர்ச்சி நிலை உரையாடல், நடிப்பு இணைய விளக்கப்படுகிறது. இரண்டையும் இணைய உணராமல் நிகழ்ச்சிகளின் தன்மையைச் சரியாகப் புரியமுடியாது. நடிப்பின் வாயிலாக உணர்ச்சிகளையும் உண்மைகளையும் வடித்துக்காட்டும் போக்கு வளர்ந்துள்ளதையே இது காட்டுகிறது. இத்தகைய நிலை நாடகப் படைப்புத் திறனுக்கு ஓர் உரைகல்லாகவே உள்ளது. கதைப்போக்கு, வரலாற்று அமைப்பு கொண்ட நாடகங்கள் மிகுதியான உரையாடலைக் கொண்டுள்ளன. குறிப்பிட்ட பிரச்சனைகளைக் கொண்டு அவற்றுக்குத் தீர்வுகாண விரும்பும் சமூக நாடகங்கள் பாத்திரச் செயல்பாடுகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கின்றன.

சீராகவும் சிறப்பாகவும் கட்டுக்கோப்பு அமைவதற்கு நாடக ஆசிரியர்கள் பல உத்திகளைக் கையாண்டுள்ளனர். அவை நாடக நிகழ்ச்சியின் காலகட்ட நடைமுறை வழக்கத்திக்கு ஒத்து இருப்பதே முறை. கனவு, சகுனம், நிமித்தம், குறி, அசரீரி, கடிதம், தனிமொழி, விரதம், இயற்கை இறந்த நிகழ்ச்சி, மந்திரம், கதைகள், துணை நிகழ்ச்சிகள், தொலைபேசி உரைகள், வழிப்போக்கர் உரை, பொதுமக்கள் உரைபோன்று பல கட்டுக்கோப்பு உத்திகளாக அமையும். பழைய கதைகளுக்கும் வரலாற்றுக்கும் பொருந்தும் ஓலை அனுப்பும் முறை தற்கால நாடகங்களில்தபால் தந்தியாக மாறி இருப்பது பொருத்தம். புராண நாடகங்களில் இடம்பெறும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைச் சமூக நாடகங்களில் காண முடியாது. முன்னாள் நாடகங்களில் மிகுதியாக இடம் பெற்ற தனிமொழிக் கூற்றுக்கள் இக்காலத்தில் அருகிவிட்டன.

காலவுணர்வு ஆசிரியர்களைத் தொற்றிக் கொண்டு அவர்கள் எழுதும் நாடகங்களில் புகுந்து பிடிப்பின்றி நகைப்புக்கு இடமளிக்கும். பகுதிகளையும் காணமுடிகிறது. 'ஆண்டாள் திருமணம்' நாடகத்தில் திருவரங்கநாதன் கருடன் வழியாக ஆண்டாளின் தந்தைக்குக் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பும் காட்சி வருகிறது.[18]

---

18. மார்கழி நோன்பு அல்லது ஆண்டாள் திருமணம், திருமலை நல்லான், சென்னை, (பதி. 1968) ப. 117.
திருவரங்க நாதன் எழுதிய கடிதத்தைக் கருடன்படித்துக் காட்டுகிறான். தற்கால கடித அமைப்பில் உள்ளது .

ஆசிரியரின் காலத்து உணர்வுக்கும் செயலுக்கும் தக்கவாறு புராணப் பாத்திரங்கள் மாற்றப்படுவதையே இவ்வமைப்பு உணர்த்துகிறது. மக்களுக்காக நாடகமா அல்லது நாடகத்துக்காக மக்களா என்ற ஐய வினாவுக்கு இங்குக் குறிப்பான விடை இருப்பதாகவும் கருதலாம்.

நாடகத்தின் தொடக்க முடிவுகள் கட்டுக்கோப்பின் சிறப்பை எடுத்துக் காட்டும் பகுதிகளாகும். சில தொடக்கங்கள் நாடங்களின் போக்கைக் குறிப்பாகக் காட்டிவிடும். சம்பந்த முதலியாரின் 'விஜயரங்கம்' ஓர் இயற்கைச் சீற்ற நிகழ்வைக் கூறிக் கதையின் வளர்ச்சிப் போக்கைக் குறிப்பாக விளக்கிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. ஞான இராசசேகரனின் 'வயிறு' என்ற நாடகம் பிரச்சனையைச் சுட்டித் தொடங்குகிறது. 'கள்வர் தலைவன்' ஒரு குருதி சக்கும் துன்பியல் என்பதை முதல் உரையாடலிலேயே அறிவித்து-விடுகிறது.[19] இத்தகைய குறிப்புடைய தொடக்கம் நல்ல கட்டுக்கோப்புக்கு முன் அறிவிப்பாக அமைந்து விடுகிறது.

நாடக முடிவுகள் நல்லதையும் தீயதையும் விளக்கிக் காட்டுவதுடன் நாடக நோக்கத்தை உறுதிப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். தாய்ப் பற்றைக் காட்டும் கே. குப்புசாமியின் 'ராவண மஹிமா அல்லது மாத்ரு பக்தி' அந்த நோக்கத்தைத் திறம்பட

---

ரங்கராஜன்,
திருவரங்கம்.

அன்புமிகுந்த பட்டர்பிரானுக்கு,

நாம் தங்கள் புதல்வியின் காதற் பக்தியில் கட்டுண்டோம். திருமகளும் இசைந்தனள். நிகழும் பங்குனியில் உத்திரநாள் பௌர்ணமி திதி-வெள்ளிக் கிழமை அன்பு மிக்காளை அழைத்து அவைக்கண் வரவும். நாம் மனமுவந்து ஏற்றுக் கொள்வோம்.

இங்ஙனம்,
தங்கள்,
அழகிய மணவாளன்.

19. கள்வர் தலைவன். சம்பந்த முதலியார், அருட்பெருஞ் சோதி அச்சகம், சென்னை, 4 பதிப்பு, (1955), 1,1, ப.1. ஏமாங்கதன் (நாடகத் தலைவன்):

ஐயோ! இப்பாதகர்கள் சீக்கிரம் வந்து என்னைக் கொன்று விடமாட்டார்களா? எத்தனை நேரம் நானிவ் வேதனையில் இருப்பேன்? என் ஐம்பொறிகளும் கலங்குகின்றனவே! என் மனமும் ஒரு வழியில் நில்லாது பெருஞ்சுழல் மத்தியில் அகப்பட்ட துரும்பைப்போல் தத்தளிக்கிறதே!

விளக்கும் முடிவைக் கொண்டுள்ளது,[20] பரிதிமால் கலைஞரின் 'ரூபாவதி' கதைக்கு அப்பால் சென்று சிவபக்தியை விரும்பி முடிவது நாடக நோக்கத்தைவிடவும் ஆசிரியன் விருப்பத்தை மிகையாகக் காட்டுவது போன்றுள்ளது. நாரண துரைக் கண்ணனின், 'திருவருள் பிரகாச வள்ளலார்' நாடக நோக்கத்தை மிகச் சிறப்பாக இறுதி உரையில் விளக்குவது இலக்கியப் பயனாக அமைகிறது.[21] பல விதமான சிறப்புக் கொள்கைகளுடன் நாடகக் கட்டுக்கோப்பு அமைந்துள்ளதை அறியலாம்.

## பாத்திரப் படைப்பு (Characterisation

பாத்திரங்களின் சொல், செயல், சிந்தனைகளைக் கொண்டு நாடகங்கள் உருப்பெறுகின்றன, உரையாடல், செயல்பாடு ஆகிய வற்றால் பாத்திரங்களின் பண்பு புலப்படுத்தப்படுகின்றது. நாடக இலக்கியங்களைப் படித்துக் காணும் போது கற்பனை வாயிலாக மேடைக் காட்சிகளை மனத்திரையில் அமைத்து உணர்வின்வழி அனுபவித்தால் மட்டுமே பாத்திரப் படைப்பின் திறனை நன்கு அறிய முடியும்.

பாத்திரப் பெயர்கள் புராணங்கள், மரபுவழிக் கதைகள், சமூகத்தில் உள்ளவை போன்று மிகுதியான நாடகங்களில் இருந் தாலும் சிலவற்றில் காரணத்துடன் அவர்களுடைய பண்புகளுக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. பிரதாபச் சந்திர விலாசத்தில் (1877) விசுவாசகர்தகன், பாவாடைச் சித்தர், சட்பட், படீல், இடிமுழுங்கி, நிபுணர், குணாலயர் முதலிய பெயர்கள் சிந்தனைக்கு உரியவை.

---

20. ராவண மஹிமா அல்லது மாத்ருபக்தி, கே. குப்புசுவாமி, சென்னை, (1938), ப. 68.
பரமசிவன் : 'மாதிரு தேவோ பல' என்பதை நீயே (ராவணன்) நிலை நாட்டியவன். உன் தாய்க்காக அரும் பாடுபட்டவன்.

21. திருவருட்பிரகாச வள்ளலார், நாரண துரைக்கண்ணன், வானதி பதிப்பகம், சென்னை—17 (1968), கா. 60, பக். 317-318.
நடராஜன்: ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வீகச் சக் தியை மானிடர்கள் தெரிந்து கொண்டதும் இயற்கைச் சக்தியை மாற்றக் கூடிய அற்புத வல்லமைகளைப் பெறுவார்கள்.

பாத்திரப் பண்புகள் ஒரு பாத்திரத்தின் உரை, செயல் ஆகிய வற்றுடன் அப்பாத்திரத்தைப் பற்றிய பிற பாத்திரங்கள் கூறுவதைக் கொண்டும் விளங்கும். இவற்றை நன்கு மனத்தில் கொண்டு நாடக ஆசிரியர்கள் பாத்திரங்களை உருவாக்கு கின்றார்கள். ஒரு நாடகத்தில் பல பாத்திரங்கள் இடம்பெற்றா லும் அவர்கள் வெவ்வேறு விதமாக நாடகத் தகுதி பெறுவதைக் காணலாம்.

முக்கிய பாத்திரங்களாகத் தலைவன் (Hero) தலைவி (Heroins) முரணன் (Villain) ஆகியோர் கருதப்படுவர். மற்றவர் கள் துணைப்பாத்திரங்கள் பெருவரவினராகவும், சிறுவரவினராக அமைவர். சிறுவரவினர் மரபு முறையினராகவும் தேவை வரவின ராகவும் இருவகையாக இடம்பெறுவர். முக்கிய பாத்திரங்களைத் தவிர சிலர் நாடக ஓட்டத்தின் மிகுதியான இடங்களில் வருவாரா யின் அவர்கள் பெருவரவினராகக் கருதப்படுவர். அவர்களுடைய பங்கு நாடகச் செயலோட்டத்துக்குத் தவிர்க்க முடியாத தேவை யாக அமையும். இராஜராஜன் நாடகத்தில் இராஜேந்திரன் குந்தவை, வந்தியதேவன் போன்றோர் பெருவரவினராகக் கருதப் படுவர்.

நாடகத் தேவை கருதிச் சில இடங்களில் வரும் பாத்திரங்கள் தேவை வரவினராகும். வழக்கை விசாரிக்கும் நீதிபதி, கள்ளனைப் பிடிக்கும் காவலர் தலைவர் போன்றோர் அத்தகைய பாத்திரங் கள், தலைவனுக்குத் தோழன், தலைவிக்குத் தோழி, அலுவலகத்துக்குச் சிற்றாள் போன்றோர் மரபுமுறையினராவர். மரபுமுறையினர் சிலர் பெருவரவினராகிச் சிறப்படையும் நாடகங் களும் உண்டு. நாடகத் தலைவனான மனோகரின் தோழன் இராஜப்பிரியன் இல்லையேல் நாடகம் செயல்பட முடியாமற் போய்விடும் நிலையை மனோகரன் நாடகத்தில் காண்கிறோம்.

ஓரங்க நாடகங்களில் இத்தகைய பாத்திரப் பிரிவுகள் தெளிவாக அறிய முடியாமல் இருக்கலாம். சமீப காலத்திலுள்ள பல குறுநாடகங்களில் முக்கியமானவர் என்றோ முக்கியமற்றவர் கள் என்றோ பாத்திரங்களைப் பிரித்துக் காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுஜாதாவின் 'ஒரு பிரயாணம் ஒரு கொலை' என்ற நாடகம் இவ்வாறு தான் அமைந்துள்ளது. முயன்று ஒரு தலைவனைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற நினைத்தால் பாலா என்ற தீயவனைத்தான் எடுக்க வேண்டும். முக்கியமில்லை என்று ஒதுக்க முடியாத நிலையில் சில பாத்திரங்களை ஒரே

நாடகத்தில் இணைத்து ஒரு நாடகத்துக்குத் தலைவன் தான் சிறந்த பாத்திரமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அகற்றியுள்ள நாடக ஆசிரியரும் உள்ளனர்.

கோரா, ஜயந்தன், நா. முத்துசாமி, அஸ்வகோஷ் போன்ற சிலரின் நாடகங்கள் தனித் தலைவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்குப் படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நாடகங்கள் கருத்துக்குச் சிறப்பு கொடுத்துப் படைக்கப் பட்டிருப்பதே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். சமநிலை உடைய பல பாத்திரங்கள் நாடகக் கருத்துக்கு பெருந்துணையாக அமைந்து மரபு முறைப் பாத்திரப் பிரிவு விதிகளை உதறித் தள்ளுகின்றன. நாடக வளர்ச்சி நிலையில் ஏற்பட்ட மாற்றமாக இதனைக் கருதலாம்.

தொடக்க கால நாடகங்களிலுள்ள முக்கியமான நல்ல-பாத்திரங்கள் வீரம், காதல் திண்மை, கொடைத் தன்மை போன்ற பல பண்புகளுடன் விளக்கப்பட்டிருக்கும். முரணன் கொடுந்தன்மைக்கு உறைவிடமாகத் தோன்றுவான். ஆனால் பிற்கால-நாடகப் பாத்திரங்கள் நாடகக் கருத்து விளக்கத்துக்குத் தேவையான அளவுக்குப் பண்புகளைப் புலப்படுத்தும்-போக்கில் படைத்துப்பட்டிருப்பர். முன்னதில் ஒரளவு முழுமைத் தன்மையும் பின்னதில் நயமும் தோன்றும். விளக்கமாக உரைக்கும் முறையிலிருந்து குறிப்பாக உணர்த்தும் முறைக்கு நாடகம் நகர்ந்துள்ளமை இதனால் விளங்கும்.

## நாடகச் சுவைகள்

எட்டுச் சுவைகள் அல்லது மெய்ப்பாடுகளை நாடக இலக்கணம் கூறும். மெய்யின் செயல்களையும் உரையாடல் முறைகளையும் கொண்டு நகை, அழுகை, வீரம், காதல், அச்சம், கோபம், இளிவரல், வியப்பு ஆகிய சுவைகளை நாடகப் பாத்திரங்கள் காட்டுவதைக் பார்க்கலாம். சுவைகள் மனித உணர்ச்சிகளின் புலப்பாடுகள் ஆகும். இவை இன்றி நாடகம் சிறக்காது.

தமிழ் நாடகங்களில் நகை, அவலம், வீரம், இன்பம் ஆகிய நான்கு சுவைகளும் மிகுதியாக இடம்பெற்று வருவதைக் காணலாம். நகைச்சுவை பலவிதமான வாயில் வழியாகப் புலப் படுத்தப்படும். ஒலிப்புமுறை, சொல் விளையாட்டு, கருத்து விளக்கம், செயல்பாடு ஆகியவற்றைக் கொண்டு நகைச்சுவை

ஊட்டப்படும். எள்ளல் நாடகங்கள் கருத்து மூலம் மிகுதியாக நகையினை எழுப்பும். சில நாடகங்கள் நகைச் சுவைக்காகவே பாத்திரங்களையும் காட்சிகளையும் படைத்துக் கொள்வதைக் காணலாம். ஆனால் அண்மைக் கால நாடகங்கள் அங்கதப் போக்கில் நகைச்சுவை பெருக்க விரும்புகின்றன.

ஒவ்வொரு சுவையும் தகுந்த அளவுக்கு இருந்தால்தான் நாடகம் சிறக்கும் என்ற கருத்தைக் கொண்டு தொடக்க கால நாடகங்கள் ஏதாவது வழியில் இந்தச் சுவைகளைக் காட்சிக்குள் நுழைத்துவிடும் போக்கை உணரலாம். அண்மை நாடகங்கள் கருத்துக்கு மிக உயர்ந்த இடம் கொடுத்து அதன் தேவைக்குத் தக்கவாறு சுவைகளை இணைத்துக் காட்டுகின்றன. இம்முறையில் மெய்ம்மைத் தன்மை மிகுதியாகத் தோன்றுகிறது.

## மொழிநடை

இலக்கியத்திற்கு மொழிநடை எவ்வாறு அமைந்து சிறப்பைக் கொடுக்கிறது என்பது நன்றாகச் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். எளிமையும் இனிமையும் உடைய மொழிநடையை மக்கள் பெரிதும் விரும்புவர். இலக்கிய வகைக்குத் தக்கவாறு நடை மாறி அமையும். தமிழ் உரைநடை நாடக ஆசிரியர்கள் எவ்வாறு தங்கள் படைப்பு நடையை அமைத்துள்ளனர் என்பதைக் காண முயலலாம்.

பரிதிமால் கலைஞர், இராஜு செட்டியார் போன்ற தமிழ்ப் பற்றாளர்கள் கடின நடையைப் பின்பற்றினர். அவர்களுடைய நாடகங்கள் இலக்கியச் சுவையுடன் விளங்கினாலும் நாடக நயத்தில் குன்றியே காணப்படுகின்றன. வரதராசன், ஞானமூர்த்தி போன்றோர், நடையில் எளிமையையும் தூய்மையையும் கடைப் பிடிக்க முயன்றுள்ளனர். அவற்றுள் பேச்சு வழக்கு மெய்ம்மை இல்லாமல் இருப்பதை உணரமுடிகிறது. வட்டார வழக்கு, பழமொழிகள், குழூஉக்குறி, கலப்புமொழி முதலியவற்றுடன் நடைமுறைப் பேச்சு வழக்கு இயல்புகளைப் புகுத்த சில நாடக ஆசிரியர் முயன்றுள்ளனர். சமுதாயத்தின் இருப்பது போன்று கொச்சை மொழியாகச் சில உரையாடல்கள் அமைந்து மெய்ம்மைப் போக்கைக் காட்டுவதையும் காணலாம்.

> 'கெட்டுப்போனவ கல்யாணம் செய்துட்டா அவ
> மனச்சாட்சி காலம் பூரா அவள உறுத்திக்கிட்
> டிருக்காதா'[22]

என்று 'அடாவடி அம்மாக் கண்ணு' நாடகத்தில் வருவது போன்று வரும்.

சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற முற்பகுதி நாடக ஆசிரியர்களுடைய நடையில் வடமொழிக் கலப்பு மிகுந்திருப்பதுடன் வேகவுணர்வுச் சொற்கள் அடுக்கப்பட்டுக் காணப்படும். சதி அநுசூயாவில் மாண்டவ்யர் மிகுந்த கோபத்தோடு அரசனைப் பார்த்துக் கூறும் உரை இவ்வாறு அமைந்ததாகும்.

> 'அடே துஷ்டா! பரம சண்டாளா! பதிதா! நிர்லச்சா!
> பாவி! துரோகி! மடையா! வெறியா! மதிமந்தா!
> நீ என்ன சொன்னபோதிலும் நான் உன்மீது கருணை
> சாபத்தைக் கொடுப்பேன். என் கண்ணில் காணாமல்
> ஓடிப் போடா!'[23]

திரும்பத் திரும்ப ஒரே மாதிரி வினாவை எழுப்பி நடைபெறும் நிகழ்ச்சிக்கு அழுத்தமும் உணர்ச்சிக்கு வேகமும் கொடுக்கும் முறை நாடக ஒட்டத்தில் சிறப்பிடம் பெறுகிறது. அன்புத் தாய் தன் ஒரே மகனை இறந்து போகுமாறு உறுதியாகக் கூறும் ஓரிடம் 'மனோகரன்' நாடகத்தில் வருகிறது.[24]

மனோகரன் : அம்மணி! என்னை இறக்கும் படியாச் சொல்கிறீர்கள்?

பத்மாவதி : ஆம்!

மனோகரன் : ஆம்! சரி! இனி என் உயிர் வாழ்வது நியாயமன்று.

இந்த உரையாடலைக் கேட்டதும் நாடகம் பார்போருக்கு ஏற்படும் உணர்வும் பாத்திரவுணர்வுடன் ஒன்றி ஓர் உச்சகட்டதை அடைவதை உணரலாம். அதுவே இம்முறை உரையாடல் நடையின் சிறப்பாகும்.

ஒரே தொடரைப் பலமுறை கூறிக் கருத்தழுத்தம் கொடுக்கும் முறையும் உள்ளது. கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் 'அந்தமான்

---

22. அடாவடி-அம்மாக்கண்ணு, மெரீனா, பூரம் பப்ளிகேஷன்ஸ், 6, ஜம்புலிங்க நாயக்கர் தெரு, சென்னை—34 (1982), கா. 20, ப. 104
23. சதி அநுசூயா, சங்கரதாஸ் சுவாமிகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—2, (1967), களம் 4, கா.1, ப. 87.
24. மனோகரன், பம்மல் சம்பந்த முதலியார், பீயர்லஸ்பிரஸ் சென்னை, (1934) 3. 4, ப. 93

கைதி' நாடகத்தில் ஒரு காட்சியில் முடிவு செய்யப்பட்ட திருமணத்தை திடீரென நாண்பூட்டு நேரத்தில் மறுத்துவிட்ட மகளின் செயலை அறிந்த தாயின் உணர்வை உடைத்துக் காட்டும் திறனைக் காணலாம்.[25]

காமாட்சி (லீலாவின் தாய்)

> இது என் தலைவிதி! தலைவிதி! தலைவிதி!
> இவ்வளவு ஏற்பாடும் ஆனபிறகுப் பெண்ணுக்கு
> இஷ்டமில்லையாம்! இந்த வயிற்றெரிச்சலை
> நான் யாரிடத்தில் சொல்லி அழுவது?

## நகைச்சுவைக்கு உதவும் நடை

சொற்களையும் பெயர்களையும் தவறாக உடைத்தோ அல்லது பிழைபடக் கூறியோ உரையாடலை அமைக்கும் போக்கை நாடக ஆசிரியர் கையாண்டுள்ளனர். இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் ஆகிய பெயர்கள் படும்பாட்டை ரத்னாவளி' நாடகத்தில் காணலாம்.[26]

> 'லாமர்—உம்! உம்! ராமர் ரட்சுமணர், அல்லவே!
> லாமர் ரட்சுமணர் சரதர்—உம்—பத்ருக்கனர்—உம்—
> சத்ருக்கனர் — பரதர்—லாமர்—உம்—பர்க்னர்—
> ஆ! ஹி! சத்ருக்—பர்க்னர்—லாமர்—லங்கர்:—'

பொருள் சிறப்புடன் சொல்லைப் பிரித்து பாரதிதாசன் விளையாடியுள்ள இடம் சிந்தனைக்கும் சீர்மைக்கும் உரியதாகக் 'கழைக் கூத்தியின் காதல்' என்ற நாடகத்தில் உள்ளது.

அரசன் : ஈயும் ஆமையும் என் அமைச்சரின் உடன்பிறப்பு

புலவர் : ஈயும் ஆமையும்! ஈயாமையா? ஓகோ! ஈயாமையும் கெடுதியில்லை. (கா. 6, ப. 38).

ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து அங்கத முறையில் நகை பெருக்குவதும் உண்டு. சபாபதியும் அவனுடைய மைத்துனன் கிருஷ்ணசாமியும் கலப்புமொழி உரையாடல் நிகழ்த்துகிறார்கள்.[27]

---

25. அந்தமான் கைதி, கு.சா. கிருஷ்ணமூர்த்தி, பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1, (மே, 1967), கா. 21, ப. 91.
26. ரத்னாவளி, பம்மல் சம்பந்த முதலியார், பியர்லஸ்பிரஸ், சென்னை, (193? ப. 1 '1,1,) 8.
27. ஒரு விருந்து அல்லது சபாபதி 4 பாகம், பம்மல் சம்பந்த முதலியார், சென்னை (19?8), கா.1, ப.1.

கிரு : என்ன அத்தான்! திடீரென்று இந்தப் பார்டி வச்சி கினைங்க? காலம இன்விடேஷன் வந்தபோதுதான் எனக்குத் தெரிஞ்சுது. உடனே வந்தேன்.

சபா : அது ஒரு ரகசியம் அப்பேன். என்னை கவர்மெண்டிலே லெஜிஸ்லேடிவ் கவுன்சில் மெம்பராய் நாமினேட் பண்ணாங்களே, அதுக்கு யாரும் எனக்குப் பார்டி கொடுக்கலே—பார்த்தேன் நானா ஒரு பார்டி ஏற்பாடு பண்ணிவிட்டேன்! இப்போ எல்லோரும் என்னே கன்கிராடியுலேட் பண்ராங்க பார்!

கிரு : அது ஒரு நல்ல யுக்திதான்!

நகைச்சுவைக்காகத் தவறாக மொழிபெயர்ப்புச் செய்து கூறும் இடமும் காணப்படுகிறது.

'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி
ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்ததுவும் போதும்
பராபரமே'

என்பது, 'Think ஆத thought எல்லாம் thinky thinky poor mind making itches quite sufficient' என்று ஒரு நாடகப் பாத்திரத் தால் மொழி பெயர்க்கப்படுகிறது.[28] இவ்வாறு நகைச்சுவைக் காகப் பல முறையான வழுநடைகள் வருவதை மக்கள் வழுவாகக் கருதாது சுவைத்து மகிழ்வதை நாடகத்தில் காணலாம்.

## உவமை

பொருள் விளக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு அணிகள் நாடக நடையை நயமுறச் செய்கின்றன. சிறப்பாக உவமை உருவகங்கள் மிகுதியாக இடம்பெறுகின்றன. பலதரப் பட்ட உவமைகளைக் காணலாம்.

1. 'நாயே அடிக்கறாப்புலே அடிக்கணுமா?'[29]
பேச்சு வழக்கு உவமையாக இது அமைகிறது.

2. உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக இருக்கிறது.[30]
இது பழமொழி உவமை.

---

28. மேற்படி, கா. 1, ப.12
29. மாணிக்கவாசகர், வடுவூர் கெ. துரைசாமி ஐயங்கார், சென்னை, (1919), ப. 48
30. ராஜா பர்த்ருஹரி டி.கே. முத்துசாமி, கரூர்,(1942)ப.136

3. பூஞ்செடிகளினிடையே மின்னற் கொடிபோல் மறைந்து மறைந்து தோன்றும் நங்கையர் யாவரோ?[31]

மரபுமுறை உவகையாக இது உள்ளது.

4. நதியில் வெள்ளம் பெருவதையும் கடல்நீர்
பொங்குவதையும் ஏனென்று கேட்க முடியுமா?
வசந்தம் வர மலர்வதையும் மழைபொழிய
மண் குளிர்வதையும் ஏனென்று கேட்கமுடியுமா?[32]

இது 'பருவம் வந்தால் காதலுணர்வு தோன்றும்' என்ற கருத்தை உய்த்துணர வேண்டிய இடமாகும். இவ்வாறு பொருளை உய்த்துரை வேண்டிய உவமைகளும் காணப்படுகின்றன. நாடகங்களில் பலவகையான உவமைகள் பல முறைகளில் அமைந்திருப்பது நடைச் சிறப்பைக் கூட்டுவதாகக் காணப்படுகிறது.

## உருவகம்

உருவகங்கள் தனிப் பாத்திர உரையிலும் தொடர்ந்து பல பாத்திரங்களின் உரையாடல்களிலும் வருவதைப் பார்க்கலாம்:

1. தனிப் பாத்திர உரையாடல் உருவகம்.

'அண்ணாவின் (பலராமன்) பிடிவாதமும் கோபமுமாகிய அலைகள் நிறைந்த பெருங்கடலைக் கடைந்து சுபத்திரையாகிய தேவாமிருதத்தைத் தேடியடைவது சுலபமான காரியமா?'[33]

இது ஒரே உரையில் இரண்டு உருவகங்கள் கதைக் குறிப்புடன் ஒரு தொடராக வந்ததாகும்.

2. பல பாத்திரங்களின் உரையாடலாக வரும் தொடர் உருவகம்

'சாணக்கிய சாம்ராஜ்யம்' என்ற நாடகத்தில் சந்திரகுப்தன், சுபந்து, தனானந்தன் ஆகிய மூவரும் உருவகத்தில் சொல்லாடுவதைக் காணலாம்.

---

31. சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாடகம், வீ. ஆறுமுகம் சேர்வை, வே. இராமசாமி வன்னியர், தஞ்சாவூர் (1936) ப. 7
32. இராஜராஜ சோழன், அரு. ராமநாதன், பிரேமா, பிரசுரம், சென்னை—24, (1955). கா.32, ப 123
33. சுபத்ரார்ஜுன விவாகம், வீ.கே. பார்த்தசாரதி ஐயங்கார் சென்னை, (1926) ப 82.

சுப: சந்திரகுப்தா! நாளை காலை கதிரவன் கீழ்த்திசையில் உதிக்கும்போது உன் வாழ்க்கைச் சூரியன் தூக்கு மேடையில் அஸ்தமித்துவிடும்.

சந்: அஸ்தமித்த சூரியன் மறுநாள் காலையில் உதிக்கின்றானாமே ..?

தனா: உதயமாகும் சூரியன் மீண்டும் மறைவானாமே!

சுப: அட சட்! அவனோடு என்ன விதண்டாவாதம்?[34]

இவ்வாறு எத்தனை எத்தனையோ அணிநயம் மிக்க உரையாடல்களை நாடகத்தில் காணலாம்.

## நிறைவுரை

தமிழில் உரைநடை நாடகம் 1876-ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை வளர்ந்துவருகிறது. பலவகையான இயக்க ஆதரவிலும் பலவிதமான சிந்தனை வளத்திலும் அது உயிரூட்டப்பட்டு உரமுடன் வளர்ந்து செழித்துள்ளது. வகை வகையான நாடகங்கள் அரங்கேறிக் கொண்டே வருகின்றன. விதவிதமான உத்தி முறைகள்—காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்றவாறு-பயன்படுத்தப் படுகின்றன. கட்டுக்கோப்பு, பாத்திரப் படைப்பு ஆகியவற்றில் புதுமையும் பொலிவும் புகுத்தப்படுகின்றன. சுவைகளில் சிறப்புப் பொருந்தி மனித மனத்தின் படப்பிடிப்புகளாகப் பல நாடகங்கள் விளங்குகின்றன. நடையில் பலவித தன்மைகள் காணப்படுகின்றன. கலைத் தன்மையிலும் இலக்கிய நயத்திலும் சிந்தனை முகிழ்ப்பிலும் சிறந்து விளங்கும் தமிழ் நாடகங்கள் உலக அரங்கில் நல்ல மதிப்பைப் பெறுவது திண்ணம்.

---

34. சாணக்கிய சாம்ராஜ்யம், தாமரைக் கண்ணன், அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ், மண்ணடி, சென்னை -1, (ஏப்ரல் 1964), கா. 18, ப. 55.

# 5

# ''பயண இலக்கியங்கள்''

**டாக்டர் கே. பகவதி**

மனித வாழ்வினின்றும் பிரியாத, பிரிக்கவியலாத ஒரு கூறாகத் திகழ்வது பயணம். உணவுக்காகவும், வாழ்வினை நிலையாக அமைத்துக் கொள்ளவும் முதல் மனிதன் பயணம் செய்தான். இன்று அறிவியலின் பல்வகைப்பட்ட வளர்ச்சி நிலைகள், பயணத்திலும் வளர்ச்சியையும் மாறுதலையும் உருவாக்கி விட்டிருக்கக் காண்கின்றோம். இதனை அன்று முதல் இன்று வரையிலும் காணப்படும் பயண வரலாறு சிறப்பாக எடுத்தியம்புகிறது.

வரலாற்றை அறிய உதவும் மூலங்கள் பல. தமிழரின் பண்டைய வரலாற்றை அறிய உதவும் மூலங்களுள் தனிச் சிறப்பானவை இலக்கியங்கள். வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழும் இவை, தமிழரின் பயண வரலாற்றை அறியவும் சிறப்பாக உதவுகின்றன. மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்து கிடக்கும் பயணம் பற்றிய பல எண்ணங்கள் இவற்றுள் மலிந்து கிடக்கின்றன.

இக்கட்டுரை பயண இலக்கியங்களின் இலக்கியக் கொள்கை பற்றி ஆராய முனைகின்ற போதிலும்; முதலில் அடிப்படையான பயணம் பற்றி, சுட்டிச் செல்வது பயன் உடையது என்ற நிலையில், அவற்றைப் பற்றிக் கூறி மேற்செல்லுகின்றது.

## பயணமும் தமிழரும்

பண்டைத் தமிழரின் தொடக்க கால வரலாற்றை நாம் அறிந்துகொள்ள, முதலிடத்திலிருந்து உதவும் தொல்காப்பி

யத்தில் தொல்காப்பியர் சில பயண நிலைகளைப் பற்றிப் பேசுகின்றார். இவண் சுட்டப்படும் அறம், பொருள், தூது, ஓதல், பகை என்ற பிரிவு நிலைகள் அன்றைய பயணத்தின் இயல்பைத் தெரிவிப்பன. சங்கப் பாடல்களில் பொருள் வயிற் பிரிந்த தலைவன், வரைவிடைப் பிரிந்த தலைவன், போர் செய்யச் சென்ற கணவன்—உடன்போக்கு நிலையில் செலவு மேற்கொண்ட மகளிர் போன்றோர் சுட்டப்படுகின்றனர். காப்பியங்களில் இப்பயணங்கள் விரித்துரைக்கப்படுகின்றன. சிலம்பில் பயணத் தொடர்பாக, பல எண்ணங்கள் அமைகின்றன. மாதவியைப் பிரிந்து, கோவலன் கண்ணகியுடன் மதுரை நோக்கிச் செல்கின்றான். வாழ்க்கை நோக்கமும், வணிக நோக்கமும் இணைந்த பயணம் அது. மாடல மறையோன் குமரியாடி வருவதாகக் காட்டப்படலும் மாங்காட்டு மறையோனின் குமரி யாத்திரையும் புண்ணிய யாத்திரை பற்றிய எண்ணத்தைத் தருகின்றன. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் செல்லல், பத்தினிக் கோட்டம் எடுக்கக் கல் எடுக்கச் சேறல் பயணத்தின் பல நோக்குகளைத் தெரிவிக்கின்றன. கவுந்தியடிகள் தம் மதத் தொண்டாற்ற ஊர் ஊராகப் பயணம் செல்லுதலையும் காணமுடிகிறது. மணிமேகலையிலும், இவ்வாறே பலவகைப் பட்ட பயண நிலைகள் உள. பெருங்கதை, சிந்தாமணியிலும், பல எண்ணப் பயணங்கள் சுட்டப்படுகின்றன. கம்பனும் தன் கவிதை நயம் பொலிய, காட்டும் பயணங்கள் பல. சிற்றிலக்கியங்களும் தனிப்பாடல்களும் இப்பயண வரலாற்றை அறிய நமக்குத் துணையாகின்றன. இத்தகைய அன்று முதல் இன்று வரையிலான இலக்கியங்களை நோக்க, தமிழர் பல நோக்கங்களிலும் பயணம் செய்த நிலையைத் தெரிவிக்க வல்லனவாக அவை அமையக் காணலாம்.

## பயண நிலை

தமிழரின் பயணநிலை மட்டுமல்லாது உலக நிலையில் பார்த்தாலும், அன்று பயணம் எளிமையானதாகக் காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. திரும்பி வருவதில் நம்பிக்கையில்லாமையே பல பயணங்களின் நிலை. தலைவி,

1. மார்க்கோபோலோ தன் நூலில் முதலில் தன் தந்தையுடன் தாயகத்திற்கு 23 வருடம் கழித்துச் சென்றபோது யாரும் நம்பவில்லை என்கின்றார். மாரிஸ்காலிஸ்—மார்க்கோபோலோ, இந்திய நேஷனல் புக் டிரஸ்ட், 1968, ப. 13.

தலைவன் வருகையை எதிர்பார்த்திருக்கும் நிலையைச் சித்திரிக்கும் பாடல்களில் வழித் துன்பத்தை மிகச் சிறப்பாக எடுத்தியம்பு கின்றனர் சங்கப் புலவர்கள். ஆறலைக் கள்வரால் ஏற்படும் துன்பம் பற்றிய எண்ணங்கள் பிற்காலம் வரை நீடித்த ஒன்று. இவ்வாறு பல நூற்றாண்டுகளாகப் பயணம் வருத்தம் தரும் ஒன்றாக இருந்த போதிலும், தேவை காரணமாகவும், கடமைகள் காரணமாகவும், ஆர்வம் காரணமாகவும் மக்கள் பலவகையான பயணங்களையும் மேற்கொண்டுள்ள நிலையினை உலக வரலாறு நமக்கு எடுத்தியம்பு கின்றது. இன்று வான்வெளிப் பயணமும் எண்ணக் கூடிய ஒன்று.

அருமையாக இருந்த நிலையிலேயே பயணம் செல்வாக்குப் பெற்றுத் திகழ இன்று அதன் வளர்ச்சியை எடுத்தியம்பத் தேவையேயில்லை. அறிவியலின் வளர்ச்சி, பயணத்தை மிக எளிதாக ஆக்க, ஊர்திகளின் விரைவும் மிகுதியும் காலத்தையும் மிச்சப்படுத்துகிறது. எனவே உலகம் முழுமையும் விரைந்து பயணம் செய்யும் நிலை, சிறந்த பாதுகாப்புடன் கூடிய பயணம் நாள்தோறும் பெருகிக் கொண்டிருக்கக் காண்கின்றோம். பிறருடன் இணைந்தும், தனியாகவும் மேற்கொள்ளப்படும் இப் பயணத்தில் மகளிர் நிலையும் சிறப்பாகச் சுட்டத்தக்கது.

பிரிவு பற்றிப் பேசும் தொல்காப்பியர் மகளிர் பற்றிய எண்ணமாக,

'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை'

(தொல். பொருள். 37)

என்பதை இயம்புகின்றார்.

அன்று ஆடவர்க்கே துன்பமாக இருந்த பயணம் மகளிர்க்கு எவ்வாறு இருந்திருக்கக் கூடும் என்பதை நாம் எண்ண இயலு கின்றது. எனினும், மகளிர் பயணம் பற்றிய சில கருத்துகளும் தெரியவருகின்றன. தொல்காப்பியரின் இக் கூற்றும், கடல் கடந்து செல்லுதலைச் சுட்டும் நிலையில், பிற பயணங்களை ஒத்துக் கொள்ளும் மனநிலையைத் தெரிவிக்கின்றது. மிகுதியாக பயணங் களை மேற்கொள்ளாவிடினும், சில இன்றியமையாமை கருதி ஆடவருடன் பயணம் மேற்கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது. சிலம்பில் கண்ணகி கோவலன் பயணம் இவண் சுட்டு தற்குரியது. கவுந்தியடிகளின் சமய நோக்கப் பயணத்தையும் எண்ணலாம். இன்று, பயணத்தின் எளிமையும், பெண்களின் முன் னேற்ற நிலைகளும் பயணம் செல்வதில் பெண்களும் ஆடவர்க்கு நிகராக வளர்ந்து வருமொரு வளர்ச்சி நிலையைக்காட்டுகின்றன.

## பயண முறை

முன்னரேயே தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டு பயணம் புறப்பட வேண்டும். அவைதாம் சிறப்பான பயணத்தையும், நோக்க நிறைவேற்றத்தையும் தரவல்லவை.

பிலோ இருதயநாத்தின்,' பயணம் ஒரு கலை. ஆனால்?' என்ற நூல் திட்டமிடாதப் பயணம் எத்தகைய துன்பங்களைத் தர வல்லது என்பதைச் சிறப்பாக விளக்குகிறது. பொருட்களை எடுத்துச் செல்லலிலும் அளவு, பயணச் சிறப்புக்குத் தேவையாகிறது.

## தமிழில் பயண இலக்கியங்கள் தோற்றம் - வளர்ச்சி

19-ஆம் நூற்றாண்டில், திரு. சேலம் பகதுல நரசிம்கல நாயுடு அவர்களால் எழுதப்பட்ட ஸ்ரீ ஆரிய திவ்ய தேச யாத்திரைச் சரித்திரமே பயண இலக்கிய வரிசையில் முதல் நூல் என்பது பயண இலக்கிய ஆய்வாளரின் பொதுக் கருத்து. கிடைக்கும் நூல்களில் எழுதப்பட்டதாகத் தெரியவரும் நிலையில் இக்கருத்து அமைகிறது எனினும் இப்பயண இலக்கியம் பற்றிய எண்ணம் பிறநாட்டார் போன்று, நம் நாட்டாரிடமும் முன்னரேயே இருந்திருக்கிறது என்பதற்குச் சில இலக்கியச் சான்றுகளை நாம் சுட்டலாம்.

பெரும்பாலான இலக்கிய வகைகளுக்கும் இலக்கணம் சுட்டிச் செல்லும் தொல்காப்பியத்தில், ஆற்றுப்படையின் இலக்கணத்தையும் காண்கின்றோம். 'பெற்றப் பெருவளத்தினைப் பெறா அர்க்கு அறிவுறுத்திச், சென்று பயனெதிர சொன்ன பக்கம்' (தொல். பொருள். புறத். 30) எனக் குறிப்பிடும் நிலை இவண் அமைகிறது. வழிகாட்டுதலும், தான் பெற்ற பெருவளத்தினைப் பெறாதவர்க்கு அறிவுறுத்தலும் பயண இலக்கியக் கொள்கையையே விளக்குகின்றன. பத்துப்பாட்டுகளில் சரிபாதியாக அமையும் ஆற்றுப்படை நூல்களில் இக்கொள்கைகள் விளக்கப் பெறுகின்றன.

இந்நிலையில் பயண இலக்கிய விதைகள் ஆற்றுப்படை நூல்களிலேயே போடப்பட்டுவிட்டன என்பதைத் திட்டமாக உரைக்கலாம். மறைந்துபோன தமிழ்நூல் வரிசையில் இடம்பெறும் தகடூர் யாத்திரை, செங்கோன் தரைச்செலவு போன்ற நூல் தலைப்புகளும் பயணம் பற்றிய எண்ணத்தைத் தருகின்றன.

தன்னுடைய பயண இலக்கிய மரபு கட்டுரையில் ஆசிரியர் நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் அமைந்த வழிநடைச் சிந்து, யாத்திரைக் கும்மி போன்ற நூல்களை இயம்புகின்றார்.[2] ஏ. கே. செட்டியார் தனது தமிழ்நாடு பயணக் கட்டுரைகள் நூல் தொகுதியில் பயண இலக்கிய அனுபவங்களை விளக்கும் கட்டுரைகள், தொகைகள், கவிதைகளைத் தொகுத்துத் தருகின்றார். குறிப்பிட்டதொரு தலவிளக்கம், பயணம் போகும் இடங்கள் ஊர்திகளின் வருணனை இவை இவற்றுள் தெளிவு பெறுகின்றன.

இத்தகைய நிலையினின்றும் பயண இலக்கிய உருவில், வெளிவந்ததே சேலம் பகதுல நரசிம்ம நாயுடு அவர்களால் எழுதப்பட்ட நூல். 1889-இல் எழுதப்பட்ட நூல் இது. கல்கத்தாவில் நடைபெற்ற இந்து சன சமூக மகாசபைத் தொடர்பான கோயம்புத்தூர் மாவட்டப் பிரதிநிதியாக நூலாசிரியர் சென்ற பயண அனுபவங்கள் இந்நூலின் அடிப்படையாக அமைகின்றன. இந்நூலைத் தொடர்ந்து வெளிவந்த நூல்கள் குறுகிய காலத்து அமைந்த மிகப்பெரிய வளர்ச்சியாக நிற்றலை இப்பயண இலக்கிய வரலாறு நமக்குக் காட்சி தருகின்றது.

இவ்விலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த துணைபுரிந்தன புரிவன இதழ்களாகும். பல பயண நூல்கள் முதலில் இதழ்களில் வெளிவந்து பின்னரே நூல் வடிவம் பெற்றதாகப் பல நூலின் முன்னுரைகளினின்றும் நாம் அறிய வருகின்றோம்.

தமிழில் எழுதப்பட்டதாக மட்டுமன்றி, ஆங்கிலத்தில் எழுதத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களையும் இவ்வரலாற்றில் நாம் காண இயலுகின்றது.

பயண இலக்கியங்களைப் பற்றி ஆய்வு செய்த சோமலெ, இரா. முத்துக்குமாரசாமி இருவரும் இத்துறையில் மிகச் சிறந்த ஆய்வு நிலை வழிகாட்டிகளாக ஏ. கே செட்டியார் போன்றோரை குறிப்பிடுகின்றனர். 'சோமலெ'யின் பங்கும் குறிப்பிடற்குரியது. இவர்களது கட்டுரைகள் இத்துறை பற்றிய அறிவினைப்பெற நமக்கு உதவுகின்றன.[3] டாக்டர் பட்டத்திற்கு இவ்விலக்கியத்தை ஆய்வு செய்துள்ளார் திருமதி ஞானபுட்பம்.

---

2. Travelogue, R. Muthukumaraswamy, Literary Heritage of the Tamils, p. 702.
3. Travel Literature in Tamil, Somaley: A paper read at the All India Oriental Conference, Jadavpur University, Calcutta, October 30, 1932.

இந்நிலையில் இலக்கியக் கூறுகளாகவும், துணுக்குகள், சிறு கட்டுரைகள், கவிதைகளாகவும் தொடர்ந்து வெளிவந்து இறுதியில் 19-ஆம் நூற்றாண்டின் தனித்தவொரு இலக்கியப் பொருளாக உயர்ந்து, இன்று பல்கிப் பெருகிய நிலையை இவ்வரலாற்றில் நாம் காண்கின்றோம்.

## பயண இலக்கிய வகைகள்

முழுமையாக இப்பயண இலக்கியங்களை நோக்க, பல நோக்கங்களில் எழுந்த பயணங்கள்; பலரால் மேற்கொள்ளப்பட்டப் பயணங்கள்; பல இடங்கட்கும் சென்ற பயணங்கள் போன்ற பல பயண நிலைகள் இவற்றுள் தெளிவுபடுகின்றன. இவற்றைக் கொண்டு இவ்விலக்கியங்களை மூன்று பகுதிகளாகப் பகுத்து நாம் காணலாம்.

1. நாடு

உள்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று தமது அனுபவத்தை வெளியிடுதலும், பிறநாடுகளுக்குப் பயணம் சென்று தனது அனுபவங்களைச் சுட்டுதலும் என இரு பிரிவுகளில் 'நாடு' என்ற பகுதியை ஆராயலாம்.

2. நோக்கம்

பலரும் பல நோக்கங்களிலும் பயணம் சென்று எழுதுகின்றனர். அவர்களின் பயண நோக்கங்களுக்கு ஏற்பப் பொருளும் மாறுபடும் நிலை இவற்றுள் அமைகின்றது. இவற்றைச் சமயம் முதல் பல பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம்.

பெரும்பாலான இலக்கியங்கள் கட்டுரைகளாக அமைகின்றன. ஒருசில கவிதைகளையும் காண்கின்றோம். கடித வடிவமும் உண்டு. கட்டுரையாக அமைவன சிலரால் உரையாடலாகவும் எழுதப் படுகின்றது.

பயண இலக்கியங்கள் பொதுநிலையில் மக்கள் அனைவரையும் நோக்கி எழுதப்படுவன. சமுதாயத்தின் பொதுநலனை உள்ளடக்கியது. ஆயின் இவற்றைக் குறிப்பாகக் குழந்தைகளுக்கு என்றும், மாணவ மாணவியருக்கு என்றும் சுட்டுதலையும் ஒரு சில இலக்கியங்களில் காண்கிறோம்.

1. நாடு

நம் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சுற்றிப் பார்த்து எழுதப்பட்ட பல இலக்கியங்களைக் காண்கின்றோம். இவை நம்

நாட்டாருக்கு மட்டுமன்றி, பிறநாட்டாருக்கும் நம்நாட்டில் உள்ள சிறப்பான இடங்கள், தலங்கள், கோயில்கள் போன்றவற்றை எடுத்தியம்ப வல்லனவாக அமைகின்றன. நம் நாட்டுப் பயண இலக்கியங்களைப் பெரும்பாலான கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. காட்சி காணல், 2. தலயாத்திரை. பிற நோக்கம் கருதிச்சென்று எழுதிய பயண இலக்கியங்களுக்கு ஒரு சில சான்றுகளே உள்ளன. பயண இலக்கிய முதல்நூலை இவண் சுட்டலாம். வாணிபம், கல்வி, பண்பாடு போன்ற பல நிலைகளில் நாட்டின் பிறபகுதிகளுக்குச் சென்றாலும், அவற்றை எழுத்தில் வடித்தல் பொதுவாகத் தமிழரிடம் காணப்படவில்லை. சாவியின் 'இங்கே போயிருக்கிறீர்களா?,' ஏ. கே. செட்டியாரின் 'குடகு,' செந்தில் துறவியின் 'கேரளம் கண்டேன்' (தொகுப்பு நூல், விக்கிரமனின் 'வாதாபி விஜயம்' போன்ற பல காட்சி காணல் நிலையில் அமைவன. சிட்டி, ஜானகிராமனின் 'நடந்தாய் வாழி காவேரி'. காவேரி செல்லுமிடங்களில் சென்று அக்காட்சிகளைச் சுட்டல் இவ்வரிசையில் புதுமையானது.

தமிழரின் ஆன்மீக உணர்வு அவர்களின் மிகுதியான தல யாத்திரைக்குரிய காரணமாகிறது. தென்னாட்டிலும், வடநாட்டிலும் உள்ள தலச் சிறப்புகள் இந்நூற்களில் தெரிய வருகின்றன. மகா கயிலாய யாத்திரை, புண்ணிய பூமியில் புனித யாத்திரை போன்ற நூற்கள் தலயாத்திரை அனுபவத்தைச் சுட்டுவன.

அண்டை நாடுகளுடன், வெகுதூரத்தில் உள்ள நாடுகளையும் நம்முடன் இணைப்பன அந்நாடுகள் பற்றிய பயண இலக்கியங்கள். அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, தாய்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், இலங்கை, சிங்கப்பூர், மலேயா, பெல்ஜியம், ஹாலந்து போன்ற பல நாடுகளுடன், பல தீவுகளும் அவற்றின் பல்வகைச் சிறப்புகளும் இவற்றின் மூலம் நமக்குத் தெளிவாகத் தெரிய வருகின்றன. பெயர்கூடத் தெரியாத நாடுகளைப் பற்றிய நல்லெண்ணங்களையும் இவை எடுத்தியம்புகின்றன. சான்றாக மணியன் பகாமாஸ் தீவுகள் பற்றிய பயணக் கட்டுரையினைக் குறிப்பிடலாம்.

இந்நிலையில், சுற்றுலா, பக்தி காரணமாக உந்தப்பட்டுப் பயண இலக்கியங்கள் பெரும்பாலும் அமையக் காண்கின்றோம்.

## 2. நோக்கம்

பக்தி, காட்சி காணல், கலாச்சாரத் தொடர்பு, விருந்து, உறவு, தொழில், அரசியல், பத்திரிகை, தூது, ஆய்வு, கல்வி,

அழைப்பு போன்ற பல நோக்கங்கள் பயணத்திற்குரிய காரணங் களாகின்றன. இவ்வாறு பல அடிப்படையில் எழுதப்படும் பயண இலக்கியங்கள், செல்பவர்க்கு ஏற்ப மாறுபடுதலையும் காண்கின் றோம். இப்பல நோக்கங்கள் வாயிலாக மலர்ந்த பயண இலக்கி யங்கள் சிலவற்றை இவண் நோக்கலாம்.

பக்தி

நம் நாட்டினுள் காணப்படும் தலம், இறை, தீர்த்தம் என்ற முப்பெரும் சக்திகள் காரணமாகச் சென்று வழிபடுதலுடன், பிற மதத்தார் பிற நாடுகளுக்குச் சென்று விடுதலையும் காண்கின் றோம். இவர்கள் கருத்துகளும் இச்சமய மார்க்கத்திலேயே செல்லு கின்றன. எனினும் சிலர் பிற பல வரலாறுகளையும் சிறப்பாக எடுத்தியம்புவது குறிப்பிடத்தக்கது.

கோயிற் சிறப்புடன் இறைச் சிறப்பும் சுட்டப்படுவது கேரள விஜயத்தில். பெயர்பெற்ற கோயில்கள் சாதாரண கோயில்கள் அனைத்தையும் இன்றைய அவற்றின் நிலையுடன் விளக்குவது திருத்தலப் பெருமையில் அமைகிறது. வேங்கடம் முதல் குமரி வரை என்ற நூலில் ஆசிரியர் தெ. மு. பாஸ்கரத் தொண்டைமான் இடைப்பட்ட இடங்களில் காணப்படும் கோயில்களில் உள்ள இறைச் சிறப்பை எடுத்தியம்புகின்றார். தேவிதரிசனம் என்ற நூலில், சக்தியின் தலங்கள் பலவற்றுக்கும் சென்று, சக்தியின் சக்தியை உலகிற்கு அறிவிக்கும் பாங்கு அமைகிறது. பிறரின் தன் அனுப வங்களையும் கடிதம் மூலமாகப் பெற்று, இப்பயண வரலாற்றில் இணைத்திருப்பது புதுமை-அல்லது வளர்ச்சியாகக் கருதத் தக்க ஒன்று. இறைப் பெருமை, தலச்சிறப்புடன் மேலும் பல வரலாறு களையும் சுட்டிச் செல்கின்றது திருத்தலப் பெருமை. ஹஜ் பயணம் பற்றிய அனுபவங்களை விளக்குகின்றார் 'ஹஜ் நிறை வேறுகிறது' நூலாசிரியர். தமிழ்நாட்டில் எட்டு நாட்கள் என்ற எஸ். என். சர்மாவின் நூலும் இத்தலப் பயண வரிசையில் இடம் பெறத் தக்கது.

சோ. சிவபாதசுந்தரம் இப்பயண இலக்கிய வளர்ச்சியில் 'அடிச்சுவட்டில்' என்ற புதியதொரு நிலையினைப் படைக்கின் றார். சேக்கிழார், மாணிக்கவாசகர், கௌதமபுத்தர் இவர்கள் பற்றிய வரலாறு கொண்டு அவர்கள் வாழ்வில் இடம் பெற்ற இடங்களைத் தாமும் சென்று கண்டு அவ்வனுபவ நிலையை

நமக்குத் தருகின்றார் இவர். பல வரலாறும் இவற்றின் வழித் தெரியவருகின்றன. சேக்கிழார் அடிச்சுவட்டில் நூலில் தெ.பொ.மீ. அவர்கள் 'தமிழ்நாட்டையும், கோயில்களையும் கொண்டு சென்று காட்டும் வழிகாட்டி; தொல்மணம் கமழும் பயண இலக்கியம்' என்று இதன் பெருமையுரைப்பார்.

அரசியல் தொடர்பாகச் செல்லும் அரசியல்வாதிகளின் நோக்கில் நாடும், நாட்டு மக்கள் மேன்மையும் ஓங்கி நிற்பதால், அதனோடு தொடர்பான எண்ணங்களையே பார்த்து அவர்கள் எழுதும் நிலை அமைகின்றது திரு. மாதவன் பயணம் இத்தன்மை யது. அண்மையில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட, காமன் வெல்த் பாராளுமன்றக் குழுவின் மாநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்களின் பயணநூல், 'அக்கரைச் சீமையில் ஆறு வாரங்கள்'. இதில் மாநாடுபற்றிய எண்ணங்களைவிட, அமைச்சர் என்ற முறையில் நம் நாட்டின் தாழ்வினையும், அயல்நாட்டுச் சிறப்பினையும் ஒப்பிட்டு நோக்கு கிறது அவரது மனம். எனவே நாட்டின் உயர்வு கருதிய எண்ணங் களை இவரது நூலில் பரவலாகக் காணமுடிகிறது.

தொழில் சிறப்பு கருதிச் செல்லும் தொழிலதிபர்கள் பயணம் அவர்களின் தொழில் தொடர்பான எண்ணங்களை உள்ளடக்கி யது. சந்தோஷம் தன் 'உலகம் சுற்றி வந்தோம்' பயண அனுபவங் களில் மிகுதியாக, தொழில் பற்றிய எண்ணங்களைத் தருகின்றார்.

கல்வித் துறையிலிருந்து சென்ற நெ.து. சுந்தரவடிவேலு, மு.வ. அவர்களின் பல உயர்ந்த எண்ணங்கள் அவர்களின் பயண இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. திறனாய்வுத் துறை அறி வினைப் பெற அமெரிக்கா சென்றவர் சு. பாலச்சந்திரன். 'அயல் நாடுகளில் என் அனுபவங்கள்' எனத் தமது அனுபவங்களைச் சொல்லும் இவர், 'தாய்ப்பறவை ஒன்று நீண்ட தூரம் சென்று இரைதேடிக்கொண்டு தன் குஞ்சுகளுக்கு ஊட்டக் கூடு திரும்புவது போல, தான் தாயகம் திரும்பிய நிலையைச் சுட்டும் தன்மை பயண இலக்கியக் கொள்கையைச் சிறப்பாகச் சுட்டிவிடுகின்றது,

ஒருதுறைப் பற்றிய அறிவினைப் பெறும் நிலையில் சென்று. அத்துறை பற்றிய எண்ணங்களைச் சிறப்பாக அறிந்து எழுதுதல் இன்னொரு வகையாக அமைகிறது. 'நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்' என்ற நூலை இவண் சுட்டலாம்.

அமெரிக்க நாட்டில் நூலகங்களின் வளர்ச்சி, பலவகையான நூலகங்கள் அதாவது குழந்தை நூலகங்கள், பள்ளி நூலகங்கள்,

கல்லூரி நூலகங்கள், பொது நூலகங்கள், கிளை நூலகங்கள் போன்ற பல நிலைகளிலும் பிரித்து அமைக்கப்பட்டு திறம்பட அவற்றை நடத்தும் தன்மையைச் சுட்டி, நாம் மேலும் இத்துறையில் எவ்வளவு தூரம் முன்னேறவேண்டியுள்ளது என்பதையும் திறம்பட விளக்குகின்றார் நூலாசிரியர்.

உறவின் பேரில் சென்று காட்சிகளைக் கண்டு எடுத்தியம்புதலும் ஒருவகை. ஒரு குடும்ப மாதின் குடும்பப்பாங்கான பயணமாகத் திரு. சாவி, 'சிங்கப்பூரில் இருந்து சங்க நதிவரை' என்ற நூலைக் குறிப்பிடுகின்றார். நூலாசிரியர் சரோஜா ஸ்ரீராம் சாதாரண ஒரு தமிழகப் பெண்மணி என்ற நிலையில் அந்நாட்டு மளிகைச் சாமான் நிலை, கலப்புத் திருமணம் போன்றவற்றைப் பற்றிய எண்ணங்களைச் சுட்டுகின்றார்.

சில பயண நூல்கள் ஒரு நாட்டைப்பற்றிய முழுமையானதொரு அறிவைப் பெற உதவுகின்றன. திரு. சோமலெ அவர்களின் 'அமெரிக்காவைப் பார்' தி.க. சொக்கலிங்கம் எழுதிய, 'ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்' இவ்வகையில் அமைவன.

இத்தகைய பயண நூல் வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மணியன். பயண இலக்கியம் எழுதி, பிற நாட்டைப் பற்றிய பல செய்திகளையும் பிறருக்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகச் சென்று எழுதியவர், எழுதுகிறவர் இவர். இன்றும் இவரது பயணக் கட்டுரைகளைத் தாங்கி இதயம் பேசுகிறது இதழ் வெளிவருகின்றது. 'இதயம் பேசுகிறது' என்ற தொடரே இவரது பயண நோக்கத்தில் பிறந்ததாகும். "என் இதயம் மட்டுமல்ல; நான் சந்தித்த அத்தனை பேரின் இதயங்களும் உங்களுடன் பேசுகிறது" எனத் தனது ஜப்பானியப் பயணக் கதையில் குறிப்பிடும் மணியன், அம்மக்களின் மனத்தை உணரக் கையாண்ட அணுகுமுறைகளையும் சிற்சில இடங்களில் குறிப்பிடுவது சுட்டத் தக்கது.

"நான் எப்போதும் டாக்ஸியின் முன் ஸீட்டில்தான் உட்காருவது. அதில் பல லாபங்கள் உண்டு. பொதுவாக டாக்ஸி டிரைவர்களிடம் பேச்சுக் கொடுத்தால் ஊர் விஷயங்கள் பலவற்றை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் பின் ஸீட்டில் உட்காரும்போது நான் ஏதோ பெரிய எஜமான் போலவும் டிரைவர் வேலைக்காரர் போலவும் தோன்ற இடம் ஏற்படுகின்றது. டிரைவருக்கும் எனக்கும் இடையே சகஜ நிலைமை

நிலவ, முன்ஸீட்டுப் பிரயாணம் மிகவும் பயன்படும். என்னுடைய சுற்றுப் பயணத்தில் இந்த முன் ஸீட்டுப் பிரயாணம் மூலம் நான் அறிந்துகொண்டவை ஏராளம். அவர்களை நெருங்க நெருங்க அவர்களுடைய இதயம் பேசுவதை நன்றாகக் கேட்க முடிகிறது. (பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான்—இதயம் பேசுகிறது, மணியன் ப. 8).

இவ்வாறு பல நோக்கங்களில், செல்வோர்க்கு ஏற்ப, அவரவர்களின் அனுபவங்களில் முக்கியத்துவம் பெற்ற செய்திகள் இடம் பெறுதல் பயண இலக்கியத்தின் முக்கியமானதொரு அமைப்பாகும்.

3. வடிவம்

பொதுவாகப் பயண நூற்கள் 'கட்டுரை' அமைப்பினையே கொண்டு அமைகின்றன. சில நூலாசிரியர்கள் கட்டுரை வடிவினின்றும் வேறுபட்ட சில வடிவங்களைக் கையாள்கின்றனர். உரையாடல் வடிவத்தைச் சிலர் கையாள்கின்றனர். டாக்டர் சோம. லஷ்மணனின், 'லண்டனில் லூசி' உரைநடை வடிவினைக் கொண்டது. 'பிரிட்டனில் கண்ட புதுமைகளில், அருண் கற்பனைப் பாத்திரங்களைப் படைத்து அவர்களுடன் உரையாடும் நிலையில்' தனது பயண அனுபவங்களைச் சுட்டுகின்றார்.

கடிதம் எழுதுவது போன்று எழுதுவது இன்னொரு வடிவாக அமைகிறது. கண்ணதாசன், ஏ. எம். பரமசிவானந்தம், சோமலெ, டாக்டர் மு.வ. ஆகியோரின் சில பயண இலக்கியங்களில் இம்முறையினைக் காண்கின்றோம். இவ்வடிவில் அமைந்த கி. பரமேசுவரம்பிள்ளையின் நூலினை, 'லண்டன் பாரீஸ் நகரங்களின் விநோத சரித்திரம்' எனத் தமிழாக்கம் செய்துள்ளார் ச. கங்காதரம்பிள்ளை அவர்கள்.

கவிதையாக அமைத்தலும் சிலரிடம் காணப்படும் ஒரு நிலை 'பயண காவியம்' என்றதொரு புதுமையைப் படைத்துள்ளார் வா. மு. சேதுராமன். 'மலைநாட்டின் மீதினிலே' என்ற இவரது பயண காவியம் இவருடைய பயண அனுபவத்தைச் சொல்கிறது. மலேசியா சிங்கப்பூர் நாட்டைக் கண்டுணர்ந்த இவரது எண்ணங்களைச் சொல்கின்றது. வடிவத்தைக் காவியமாகப் படைக்கும் நிலையில் கற்பனைப் பாத்திரங்களையும் படைத்து கதைபோன்று சொல்லிச் செல்கின்றார். புனைவிலி இலக்கிய வகையிலும் புனைதலை இணைக்க முடியும் என்பதற்கு இந்நூல் ஒரு சான்று நூலின் சிறப்பினைத் தெளிவாக முன்னுரையில் சிலம்பொலி

செல்லப்பன் விளக்குகிறார். நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் அமைந்த வழிநடைச் சிந்து, வழிநடைக் கும்மி, யாத்திரைக் கும்மி யாத்திரைச் சிந்து ஆகியனவும் இவ்வடிவுடையன.

## வெளியீட்டு முறை

வெளியீட்டு முறை பற்றிய ஆய்வு பயண இலக்கிய நிலையில் தனித்த ஆய்வுக்குரியது. இன்னார் எழுத வேண்டும் இன்னார் எழுதக் கூடாது என்ற வரன்முறையின்மை காரணமாக அவரவர்க்கு என்று தனித்தவொரு பாங்கு இருப்பதை இவ்விலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. நூலினை அமைத்துக் கொள்ளும் நிலை, கருத்துகளை விளக்கும் முறை, மொழிநடை போன்றன வேறுபட்ட நிலையில் காணப்படுகின்றன.

தாங்கள் செல்லும் நோக்கத்தை முதலில் குறிப்பிட்டுப் பயணத் தொடக்கம் முதல் இறுதிவரைச்சுட்டுதல் ஒரு வகையினர் தன்மை. சு. பாலச்சந்திரன் போன்ற பலர் நூல்கள் இத்தன்மையில் அமைகின்றன.

மணியன் தொடராக எழுதிச் செல்லும் தன்மை காரணமாக நோக்கம் பிறருக்குத் தெரியும் என்ற நிலையில் சென்ற இடத்திலிருந்து இப்போதைய பயணக் கட்டுரைகளைத் தொடரக் காண்கின்றோம். எனினும் சில முக்கியமான நோக்கத்தைத் குறிப்பிட்டும் எழுதுகின்றார். ஸ்ரீ ஆரிய திவ்ய தேச யாத்திரைச் சரித்திரத்தில் ஆசிரியர் தன் நோக்கம் புறப்பாடு போன்ற அனைத்தையும் தெளிவாக விளக்கி அமைகின்றார். பொதுவாக அனைத்துப் பயண இலக்கிய நூற்களிலும் இம்முறையினைக் காண்கின்றோம். ‘பிரிட்டனில் கண்ட புதுமைகள்’ நூலில் இறுதியில் ஆசிரியர் தன் நோக்கம், நூலினை அமைத்துள்ளமை இவற்றைச் சுட்டுகின்றார். ஆயின், பொதுவாக நோக்கம், புறப்பட்டுச் செல்லும் நிலை இவற்றை முதலிலேயே சொல்வது பயனுடையது.

நாடுகள், கருத்துகள் இவற்றைத் தனித்தனித் தலைப்புகள் இட்டு எழுதிச் செல்லும் நிலையும் சிறப்பாகப் பல நூற்களில் இடம் பெறுகின்றது.

கருத்துகளைக் கூறிச் செல்லும்போது, தங்கள் அனுபவங்களுடன் இணைத்துச் சுட்டுதல் சிறப்பாக அமைகிறது. தலம் தொடர்பான பயண நூற்களில், பல பண்டைய வரலாறுகள் சிறப்பாக இடம்பெறுகின்றன. மேலும் எண்ண விளக்கத்தின் போது ஒப்பீட்டு முறையில் நம் நாட்டைப் பற்றிச் சொல்லும்

நிலை சிலரிடம் இயல்பாக அமைகிறது. மணியன் சமுதாய நிலையிலும், அமைச்சர் திருநாவுக்கரசு அரசியல் நிலையிலும், நெ. து. சுந்தரவடிவேலு கல்வி போன்ற நிலையிலும், இவ்வொப்பீட்டு நிலையினை அமைக்கின்றனர்.

மொழிநடை இப்பயண இலக்கியங்களின் சிறப்பில் தனித்த முக்கியத்துவம் பெறத்தக்கது,

பயண இலக்கியப் பயன் பரந்துபட்டது. பலராலும் கற்கக் கூடிய நிலையுடையது இது. எனவே பண்டிதர் மட்டுமன்றிப் பாமரரும் புரிந்துகொள்ளத் தக்க நடை இவண் தேவைப்படுகின்றது. இந்நிலையில் எல்லா உரைநடை நூல்களிலும் சாதாரணத் தமிழனும் புரிந்துகொள்ளத் தக்க நடை இருப்பதை நாம் காண இயலுகின்றது. எனினும் சிலரின் நூல்கள் சில தனித் தன்மை பெறுவதையும் சுட்டலாம். முதல் பயண நூல் ஆசிரியர் உவமை போன்ற உத்திகளைக் கையாண்டு நடையைச் சுவைபடுத்துகிறார்.

மு.வ. வின் நடை அவரது பிற நூற்களில் போன்று எளிமையுடன் கருத்துகளைத் தெளிவாகச் சொல்லிச் செல்கின்றது. இலக்கிய ரசனை உடையவர்களின் நடையில் இலக்கியச்சுவை காணப்படுகிறது. ம. பொ. சி. யின் நூலில், இலக்கியச் சுவை பொதிந்த பகுதிகளை அவர் இடையிடையே எடுத்தாளும் விதம் இலக்கியவாதிகளுக்குச் சுவையூட்டவல்லது.

கல்கியின் நடையில் 'நகைச்சுவையுணர்வு' மிஞ்சி நிற்கிறது. ஏ. கே. செட்டியார் நடைபற்றிச் சோமலெயின் கருத்தும் சுட்டத் தக்கது.[4] எந்தப் பொருளாயினும் அதனை நகைச்சுவையுடன் சொல்லிச் செல்லும் நிலை, படிப்போர்க்கு மிக இன்பமான ஒன்று. புதுமையாக ஒரு பயண இலக்கியத்தைப் படைக்கின்ற நிலையில் சாவி, கேட்கும் குரல்களை அப்படியே எடுத்து எழுதி, நமக்கு, அந்த இடத்தில் இருப்பது போன்றதொரு உணர்வைத் தந்துவிடுகின்றார். இங்கே போயிருக்கிறீர்களா? என்ற தனது நூலில் நம்மையும் உடன் அழைத்துச் சென்று வேங்கடம் முதல் குமரி வரை, நம்முடன் பேசிக்கொண்டே செல்வது போன்றதொரு மொழிநடை

4. He gives the essentials in a witty style using a simple and effective language. He avoids cumbersome details, dull figures, and lifeless statistics.
—Travel Literatvre in Tamil, Somaley, Page 4,

யினைத்தருகிறது. போகலாம், பார்க்கலாம் என்று உட்படுத்திச் சொல்லும்தன்மை இங்கு அமைகிறது. பொதுவாக நாவல் ஆசிரியர்களின் நடை சிறப்பானதாக அமைகிறது. மணியன், சிவசங்கரி, லக்ஷ்மிபோன்றோரை இவண் குறிப்பிடலாம். சிறந்த கலையுணர்வு உடையோரின் பயணக் கட்டுரைகள், நமக்குச் சிறந்த விருந்தாக அமைவன. அவர்களின் ரசிக்கும் அல்லது அனுபவிக்கும் உணர்வு அவர்களின் எழுத்தில் பிரதிபலித்து, நம்மையும் அவ்வனுபவத்தில் பங்குகொள்ளச் செய்கின்றது. பரணீதரனின் புண்ணிய பாரதம் இந்நிலையில் எடுத்துக் காட்டத் தக்கதொரு சிறப்புடைய நூல். இமயமலைப் பயணத்தைச் சிறப்பாக விளக்குவதுடன், அங்குள்ள இயற்கை அழகுகளை இவர் சித்திரிக்கும் விதமும் நதிகளின் வருணனையும் நம் நெஞ்சைவிட்டு அகலாதக் காட்சிகளாக அமைகின்றன.[5]

எனினும், பொதுவாக, இவ் இலக்கியப் பொருள் காரணமாக இவ்விலக்கிய வரிசையில் வெளிவந்த அனைத்து நூல்களிலும் மொழிநடை சிறப்பாக அமைகிறது எனலாம்.

பொதுவாகப் பயணங்கள் அனைத்து மக்களுக்குமுரியதாக அமையினும், சில நூல்களைக் காணும்போது அவை குறிப்பிட்ட சிலர் கருதி எழுதப்பட்டதாக நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். குரும்பூர் குப்புசாமி, தனது 'கோவா செல்வோம்' நூலில் முதன் முதலில் குழந்தைகளுக்கு எழுதப்பட்ட நூல் என்கின்றார். ஆயின் இடம்பெறும் கருத்துகள் பொதுவாகக் கோவாவின் வரலாற்றை யாவரும் அறியும்படியாகச் சொல்கின்றது. 1980-இல் இந்நூல் வெளிவந்துள்ளது. ஆயின் 1967-இல் வெளிவந்த 'கொடைக்கானல் வழியிலே' மாணவ மாணவிகளை அழைத்துச் செல்லும் நிலையில் மட்டுமன்றி குழந்தைகள் ரசிக்கத்தக்க எண்ணங்களையே இயம்புகிறது. மேலும் 1948-இல் வெளிவந்த 'மலேயாநாடு' மாணவ மாணவிகளுக்காக எழுதப்பட்டது என்கின்றார் ஆசிரியர்.

---

5. சாதுவாக ஓடிக்கொண்டு இருக்கும் மந்தாகினியை வம்புக்கிழுப்பதுபோல், அலகநந்தா உக்கிரமாக வந்து உரசுகிறது. அந்த வலியைத் தாங்கமாட்டாமல். மந்தாகினியும் அலறித் துடிக்கிறது. அழவைத்து விட்டோம் பார் என்று அலகநந்தாவுக்கு ஆனந்தம் போல் இருக்கிறது. இளங்கன்றாகத் துள்ளுகிறது. சுழன்று ஆடுகிறது. அங்கே அலை பாய்கிறது. ஆவி பறக்கிறது. அலகநந்தா நுரைகக்கிக் கொண்டு வெண்ணிறமாக ஓடுகிறது. மந்தாகினி நீலப்பச்சை வண்ணமாகத் தோற்றமளிக்கிறது.
—புண்ணிய பாரதம், பரணீதரன். (ப.47)

இந்நிலையில் பயண இலக்கியங்களைக் கற்போரையும் மனதில் வைத்துக் கொண்டு எழுதிச் செல்லல் தேவையானது என்பது தெளிவுறுகின்றது. 'முன்னேறிய நாடுகளில் முப்பது நாட்கள்' நூலின் வாழ்த்துரைப் பகுதியில் அன்பழகன் கூறும் 'கூர்ந்து கவனித்தல், ஆர்வத்துடன் நினைவு கொள்ளுதல், வருணித்துக் காட்டல், சோர்வின்றி விளக்குதல் ஆகிய திறன் உடையோரே பயண நூல்களைப் பயனுள்ள வகையில் வழங்கிடலாகும்' என்ற கருத்து சுட்டத்தக்கது.

## பயண இலக்கியங்கள்

மக்கள் தொடர்புச் சாதனமாக இன்று நம்மிடம் காணப்படுவன பல. இவற்றுள் ஒன்று பயண இலக்கியம். இலக்கியங்களால் ஆக்கபூர்வமான பயனுண்டு என்பதற்கு இவ்வகை சிறந்த சான்று' வெகுதூரத்திலிருக்கும் நாட்டையும் நம்முடன் இணைத்து விடுவதில் சிறந்த சாதனைகளை இவை புரிகின்றன. இருந்த இடத்திலிருந்தே உலகின் பல பாகங்களைப் பற்றிய அறிவினையும் பெற இவை நமக்குத் துணைபுரிகின்றன. இந்நிலையில் இவ்விலக்கியப் பயனைச் சில நிலைகளில் பிரித்துக் காணலாம். தனி மனிதனால் பயணம் மேற்கொள்ளப்படினும் அவை இலக்கிய உருவில் வெளிப்படும்போது சமுதாய நலனை உள்ளடக்கித் திகழ்கின்றன. பலதுறைப்பட்ட அறிவு வெளிப்பாடு இதனுள் அமைகின்றது. பிளினி, பெரிப்புளூஸ், யுவான்சுவாங், மார்க்கோபோலோ முதலியோரின் பயணக் குறிப்புகளை நாம் காணும்போது அவை அன்றைய தமிழகத்தைப் புரிந்துகொள்ள உதவுவதைக் காண்கின்றோம். அதைப் போன்று இன்றைய பயண இலக்கியங்கள் இன்றே நாம் உணர்ந்துகொள்ளத் தக்க துறைகள் பலவற்றை விளக்கி நிற்கும் நிலையில் இன்றைய வரலாறு மூலமாகத் திகழக்காண்கின்றோம்.

பிற நாட்டார் வளர்ச்சி பொதுவாகப்பயண இலக்கியங்கள் வழி நாம் புரிந்துகொள்ள வரும் ஒன்று. முன்னேறிய ஒவ்வொரு நாடும் செல்வச் செழிப்பும் வசதியும் கொண்டு உயர்வான வாழ்க்கைத் தரத்தினில் இருக்கும் நிலை பரவலாக அனைவராலும் சுட்டப்படுகிறது. இதற்கு அடிப்படையாக அவர்களிடம் காணப்படுவது 'உழைப்பு,' மூலப்பொருட்களை அதிகமாகக் கொண்டுள்ள அமெரிக்கா மட்டுமல்ல; வெறும் கடற்கரையைக் கொண்டு சுற்றுலாத் துறையை மட்டுமே வளர்ச்சியடையச் செய்து முன்னேற்ற நிலையில் காணப்படும் பகாமாஸ் தீவுகள் வெறும் மண்

ணைக் கொண்டு மிகச்சிறந்த உலகப் புகழ்பெற்ற கண்ணாடிகளை உருவாக்கி முன்னேறிவரும் நாடான பெல்ஜியம் உழைப்பின் பெருமையைச் சாற்றுகின்றன.

இரண்டாவது உலகப்போரில் அழிவுற்ற ஜப்பான் பிற நாடுகளால் இனி தலையெடுக்க முடியாது என்று கருதப்பட்ட ஜப்பான் இன்று முன்னணி நாடாக எல்லாத் துறைகளிலும் மேம்பட்டு விளங்கும் நிலைக்கு அவர்களின் உழைப்பே அன்றி வேறு காரணமில்லை. அவர்களின் அறிவோடு இணைந்த உடல் உழைப்பே இத்தகைய முன்னேற்ற நிலைகளுக்குக் காரணமாக அமைகிறது. எனவே உழைப்பு மனிதனை நிச்சயமாக உயர்த்தவல்லது என்பதைப் பல பயண இலக்கியங்களிலும் சுட்டும்போது நிச்சயமாக இதனைப் படிப்போர் ஒரு புத்துணர்வினைப் பெறுதல் உறுதி.

பிற நாட்டில் காணப்படும் அறிவியலின் வளர்ச்சியும் பொது நிலையில் இந்நூற்களின் வழியாகத் தெரியவருகின்றது. மணியன் தனது அமெரிக்கப் பயண அனுபவத்தில் அமெரிக்காவில் உள்ள அறிவியலின் முன்னேற்றத்தைத் தெரிவிக்கும் ஸ்பேஸ் ரிசர்ச் செண்டர் (49) போன்றவற்றைப் பார்வையிட்டு, அவற்றை விளக்குவது புதுமையாக அமைவதுடன், விண்வெளி, கோணங்கள் பற்றிய அறிவையும் பெற வாய்ப்பினைத் தருகிறது.

கல்வி பற்றிய எண்ணங்கள் பல, அந்நாடுகளின் கல்வி மேம்பாட்டைத் தெரிவிக்கும் வாயிலாக அமைகின்றன. தானே ஒரு குழந்தையாக அமெரிக்காவில் பயிலமாட்டோமா என்று ஏங்கும் வண்ணம் அங்குள்ள கல்வியின் போக்கை சிறப்பைப் போற்றுகிறார் செல்வி எம். முத்தையா (நான் கண்ட அமெரிக்கா). கல்வியில் பின்தங்கிய மாணவர்கள் முன்னேற்றத் திட்டம்; வசதிக் குறைவினால் பள்ளி வராத குழந்தைகளுக்குத் தொலைக்காட்சி மூலம் பயிற்றுவிக்கும் முறை முதலியன இவண் சிறப்பாகச் சுட்டத் தக்கன. அவர்களின் கல்வித் திட்டமே, நாட்டின் வருங்காலம் மாணவர்களின் கையில் என்ற எண்ணத்துடன் திட்டப்பட்டுள்ளது. மேலும், தொழில் கல்விக்கு அவர்கள் கொடுத்துள்ள இடம் மகத்தானது. அறிவியலும், தொழிலும் அவர்கள் கல்வியில் தனிச் சிறப்பிடம் பெறும் தன்மை, மாணவர்களின் வளர்ச்சிக்கு அடிப்படை அமைக்கின்றது. 'அங்கும் இங்கும்' நூலில் சோவியத் நாட்டில் படித்துக்கொண்டே விவசாயத்தில் புதுமைகளைக்

கண்டுபிடிக்க முயலும் மாணவர் நிலையைத் தெரிவிக்கிறார் நெ. து. சுந்தரவடிவேலு (விஞ்ஞான விவசாயம், ப. 5)

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள், காட்சி சாலை போன்ற பல புகழ்பெற்ற இடங்களையும் பொருட்களையும் சொல்லும் நிலையில், வரலாற்றையும் காட்டிச் செல்கின்றனர். அதன்மூலம் அந்நாட்டுச் சிறப்புகளையும், அம்மக்கள் எதையெல்லாம் போற்றுகின்றனர் என்பதையும் உணரமுடிகின்றது.

பழக்க வழக்கங்கள் பற்றிய விளக்கங்கள், பலநாட்டுப் பண்பாட்டுக் கல்விக்குரிய அடிப்படையை நமக்கு அளிக்கின்றன.

இரவு விடுதிகளை வைத்து நடத்தி, சேளிக்கை நகரமாகத் திகழும் பாரிஸ் மட்டுமல்லாது எந்தவித இரவு விடுதிகளும் இல்லாத சோவியத் ரஷ்யாவையும் நாம் காண்கின்றோம் முன்னேற்றமடைந்த இரு நாடுகளின் பண்பாட்டு நிலை வேறுபாடு இவண் தெளிவாகின்றது.

வாழ்வின் வெற்றிக்கு முகமலர்ச்சி தேவை என்பதை உணர்ந்தவர்கள் அமெரிக்க மக்கள் என்கின்றார் சோமலெ.[6] இக்கருத்தினைப் பலநாடுகளும் உணர்ந்து செயல்படும் நிலையைக் காண்கின்றோம். பகாமாஸ் தீவு மக்கள், தங்கள் நாட்டுக்கு வரும் ஒவ்வொரு பயணிகளிடமும் மிகவும் அன்போடு பழகுவதைக் குறிப்பிடுகின்றார் மணியன். ஏனெனில், தம் நாடே பயணிகளை நம்பி உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்தவர்கள்.

மக்களின் விருந்தோம்பும் நிலையும், நம் நாட்டுக்கு எந்த நாடும் சளைத்ததல்ல என்ற எண்ணத்தைத் தருகிறது. அமெரிக்கரின் விருந்தோம்பும் பண்பினை, "நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்" என்ற நூல் சிறப்புற விளக்குகிறது. ஜப்பானில் தேனீர் விருந்து பற்றிய எண்ணத்தைச் சிறப்பாகச் சுட்டுகின்றார் 'ஜப்பானில் கண்டதும் கேட்டதும்' நூலாசிரியர் (ப. 13). ஆப்பிரிக்காவில் விருந்தோம்பலை இனிய பொழுது போக்காகக் கொள்கின்றனர் என்கிறார் லக்ஷ்மி (48).

பிறநாட்டாரின் பழக்கவழக்கங்களில் குறிப்பிடத் தக்கது அவர்களின் சுகாதார உணர்வு ஆகும். "சுகாதாரச் சட்டத்தின் கீழ் இங்கு நகர எல்லையிலே மாடுகள் இருக்கக் கூடாது; நாய் பூனை முதலிய மிருகங்களும் சுயேச்சையாகத் தெருக்களில் திரிய முடியாது.

---

6 அமெரிக்காவைப் பார், சோமலெ. ப. 27
7. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல ஆண்டுகள், லக்ஷ்மி, ப 76.

"தப்பித் தவறித்தரையில் விழுந்துவிட வேண்டாம். விழுந்தால் நம்மையும் கொண்டு போய்த் தொட்டியில் போட்டு விடப் போகிறார்கள் என்று எச்சரித்தேன்" போன்ற பல எண்ணங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. மணியன் நம் நாட்டுடன் இணைத்து எண்ணும் எண்ணமும் குறிப்பிடத் தக்கது.

மகளிர் நிலை, குடும்பவாழ்க்கை போன்றவைகளும் பலரால் சிறப்பாக எடுத்தியம்பப்படுகின்றன. ஆப்பிரிக்க நாட்டு மகளிர் நிலையினை லக்ஷ்மி, தன்னுடைய 'ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல ஆண்டுகள்' நூல்வழி இயம்புகின்றனர்.

செல்வம் கொழிக்கும் அமெரிக்கா, இங்கிலாந்தில் பெண்கள் விவாகரத்து இயல்பானதாக அமைய, ஜப்பானில், தமிழகப் பெண்கள் போன்று கணவனுக்கு அடங்கி நடக்கும் தன்மையே காணப்படுகிறது.[10] எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கும், பெண்களின் பண்பாட்டுக்கும் அதிக சம்பந்தம் இல்லை எனத் தோன்றுகிறது.

பிறநாட்டார் நம் நாட்டைப் பற்றிக் குறிப்பிடும் எண்ணங்கள் நம் நாட்டைப் பற்றி அவர்களின் மதிப்பினைத் தெரிவிக்கின்றன. தமிழராகிய எஸ். எஸ். சர்மா அவர்கள் சிங்கப்பூரில் இருந்து தமிழகத்தில் எட்டு நாட்கள் பயணம் செய்து நம் நாட்டின் பல சிறப்புகளையும் சுட்டுகின்றார். மேலும் மெக்ஸிகோ பயணக் கதையில் மணியன், 'இந்தியா எங்களுக்கு ஒரு கனவுலகம் மாதிரி மிஸ்டர் மணியன். பழம்பெருமை வாய்ந்த கலாச்சார பூமி அது. அங்கு இருந்து வந்தவர்களைப் பார்ப்பதே

---

8. இலங்கையில் ஒரு வாரம், கல்கி, ப. 59.
9. எனது வெளிநாட்டுப் பயணத்தின்போது என் மனத்தில் அடிக்கடி தோன்றிய எண்ணம் இதுதான். விஞ்ஞான வளர்ச்சியிலோ இயந்திரப் பெருக்கத்திலோ இந்த நாடுகளுடன் போட்டியிட்டு அவர்களுக்குச் சமமாக நாம் வளர, ஆண்டுகள் பல ஆகலாம். ஆனால் அவர்களுக்குள்ள சுகாதார மனப்பான்மையும், சுத்தமாக ஊரை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் ஏன் நமக்கு ஏற்படக் கூடாது. இதற்கு இயந்திர சாதனம் வேண்டாம். இம்போர்ட் லைசன்ஸ் வேண்டாம். அந்நியச் செலாவணி வேண்டாம். மக்களுக்கு மனம் வேண்டும்... - இதயம் பேசுகிறது, மணியன், அமெரிக்கா, இங்கிலாந்து ஜப்பான் பயணக் கதை, ப. 22
10. ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும், சு. ந. சொக்கலிங்கம், ப. 265

எனக்குப் பெருமையாக இருக்கிறது. (78) எனத் தாம் பேட்டி கண்ட ஒரு மாதின் கூற்றைச் சுட்டும் போது, இந்தியாவின் பெருமையையும், மற்றவர் உணர்ந்து இருக்கின்றனர் என்பதை நாம் உணர இயலுகின்றது.

இவ்வாறு பலவகையான பழக்கவழக்கங்களையும், பற்பல வரலாற்று அறிவுகளையும் மற்றும் பொது அறிவுக்குரிய எல்லா வித எண்ணங்களையும் வெளிப்படுத்தி அமையும் இப்பயண இலக்கியங்கள் மானுட இயல் அறிவு தரும் சுரங்கமாக மட்டுமன்றி நிலவியல் அறிவினையும் நமக்குத் தருகின்றன.

இமயமலையில் பத்ரிநாத் பயணம் பற்றிய தன் கட்டுரையில் அங்குள்ள வெந்நீர் ஊற்றுகளைப் பற்றி பனிக் கட்டிகள் உருகிய நிலையில், குளிர்ந்த நீராகக் காணப்படும் ஆறுகளின் அருகில் இவை காணப்படுவது பற்றி, இயற்கை விந்தையெனச் சுட்டு கின்றார் பரணீதரன். இவ்வெந்நீர் ஊற்றுகள் பல எரிமலை களைத் தன்னுள் கொண்டு, அவற்றின் ஆபத்தையும் பொருட் படுத்தாது முன்னேறி வரும் நாடான ஜப்பானிலும், எரிமலை கள் பல பக்கத்தில் காணப்படுவதையும், இதனையும் அவர்க்ள் பல பயன்பாட்டு நிலையில் பயன்படுத்துவதையும் ஜப்பான் பற்றிய வரலாறு தெரிவிக்கிறது.[11] மேலும், மு. வ. தனது இலங்கைப் பயணத்திலும் திருக்கோணமலையில் உள்ள வெந்நீர் ஊற்று பற்றி எழுதுகிறார் (ப. 105). நிலவியல் பற்றிய அறிவினைத் தருவன இத்தகைய எண்ணங்கள்.

தலத் தொடர்பான பல பயண நூற்களில் அந்தந்த இடத்தில் உள்ள இறைச்சிறப்புடன் தல வரலாறும் விளக்கம் பெறுகின்றது. மேலும், இவர்கள் ஊர்ப்பெயர் ஆய்விற்கும் சிறந்த வழிகாட்டி களாக இருந்து விளக்கும் நிலை போற்றற் குரியது. கோயில் வரலாறு, இன்றைய அவற்றின் நிலையைக் காண, வாழ்வும், வீழ்வும் மனிதர்க்கு மட்டுமன்றி கோயில்களுக்கும் உண்டு என்பதை உணர இயலுகின்றது. இறைவனுடைய அற்புதங்களை யும் விளக்கிச் செல்லும் நிலை சிறந்த சமயக் கல்விக்குத் துணை புரிகிறது.

நம் பயண இலக்கியங்கள் 19-ஆம் நூற்றாண்டு தொடக்கம் பெற்றன. இன்று வரை இவை தொடர்ந்து வளர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன. அவ்வக்கால மொழி நடையினை, இவ்

11. — „ — „ —„— „ ப.8.

விலக்கியத்தில் காண்கின்றோம், எனவே மொழியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்; அமைப்புகள் முதலியவற்றை ஆராய மொழி யியல் அறிஞர்க்கும் இவை உதவுகின்றன.

இவ்வாறு பிற நாடுகளுக்கு அல்லது பிற இடங்கட்குச் சென்று காண இயலாத நிலையில் பல எண்ணங்களைத் தந்து அறிவுத் தாகத்தைத் தீர்க்கும் நிலையில் அமையும் பயண இலக்கியங்கள், அந்தந்த இடங்கட்குச் செல்வோர்க்குச் சிறந்த வழிகாட்டிகளாக அமைகின்றன என்பது ஐயத்திற்கிடமில்லாத ஒன்று.

## பயண இலக்கியக் கொள்கைகள்

பயண இலக்கிய அடிப்படைக் கொள்கையாக, புறப்படுவது முதல் திரும்பி வருவது வரையிலான தனது பயண அனுபவங்களைப் பிறருக்குப் பயன்படும்படியாக, எடுத்தியம்பி, அதன்வழிப் பிறரை யும் பயணம் செய்யத் தூண்டுதலை - வழிகாட்டுதலைச் சுட்ட லாம்.

இக்கொள்கையினைச் சிறப்புற அமைக்க, மேலும் பல கொள்கைகளை நூல் அமைப்பிலும், எழுதிச் செல்லும் முறை யிலும், கருத்திலும் பயண இலக்கியம் எழுதுவோர் பின்பற்றல் தேவை. இக்கொள்கைகள் அனைத்தும் இருப்பின்தான் பயண இலக்கியம் தன் நோக்கத்தை நிறைவேற்ற இயலும் என்ற நிலை யில் அக்கொள்கைகளைக் காணலாம்.

### நூல் அமைப்பு

1. எந்த நோக்கம், எந்த நாடு, என்பதனை, ஆசிரியர் முன்னுரையில் கொடுக்க வேண்டும் செல்லும் இடத்தைப் பொறுத்துச் செல்லும் பருவத்தையும் குறிப்பிட வேண்டும்.

2. திட்டமிட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டும். திட்ட மிட்டப் பயணமே சிறந்த பயண இலக்கியம் உருவாகத் துணை நிற்கும்.

சென்று வந்த பின்னர் பயண இலக்கியம் எழுதுதல் ஒரு வகை; பயண இலக்கியம் எழுதவேண்டும் என்று திட்டமிட்டுச் செல்லு தல் ஒரு வகை. இருவகையிலும் எண்ணங்கள் அனுபவங்கள் வழி இயம்பப்படுகின்ற போதிலும், பின்னதே பல நிலைகளிலும் சிறப்பு தரவல்லது. இதனை அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களின் முன்னுரை சிறப்பாக இயம்புகிறது. மணியன் போன்றோர் வாசகர்

களுக்கு நல்ல பல செய்திகளையும், பிறநாட்டார் நிலையையும் சொல்லவேண்டுமென்று திட்டமிட்டுப் பயணம் செய்தலினால், அறியவேண்டிய பல சிறந்த செய்திகள் அங்கு இடம் பெறுகின்றன.

மணியன் கூறும், 'போகும்போதே அங்குள்ள வேண்டிய நபர்களைத் தெரிந்துகொண்டு செல்வதால் காலம் வீணாகாது, சிறந்த அறியவேண்டிய இடங்களைப் பார்த்துச் செல்லும் நிலையும் அமைகிறது' என்ற எண்ணம் இவண் சுட்டத்தக்கது.

3. மொழிநடையினைச் சுவையாக அமைத்துக் கொள்ள வேண்டும். பயணம் பற்றிய அனுபவங்கள் வரலாறு அன்று; இலக்கியமாகும். எனவே இவண் இலக்கியத்திற்குரிய சுவைகள் தேவை. நகைச்சுவை சிறப்பு தரும். நம் நாட்டுக்குறைகளை, முன்னேற்றமின்மையைக் குறிப்பிடும்போது நேரிடையாகச் சொல்லாது பிற நாட்டார் அதனால் அடைந்திருக்கும் மேன்மைகளைக் கூறி, நாமும் முன்னேற வேண்டும்என்ற அவாவைத் தூண்டும் நிலையில் எழுத வேண்டும். எப்பொருளையும் அல்லது எக் காட்சியையும் அனுபவித்துப் பார்க்கும் அல்லது கேட்கும் உணர்வு இருப்பின், பயணம் இனிமையாக இருக்கும். எழுதும் போது அவ்வுணர்வினை நாமும் பெறும்படியாக எழுதவேண்டும்,

4. சொல்லப்படும் கருத்துகள், அல்லது வரலாறுகளை மிகப் பெரிதாகக் கூறாது, சுருக்கமாகச் சொல்லல் தேவையானது. கண்ட எல்லாவற்றையும், அல்லது எல்லா அனுபவங்களையும் சொல்லாது முக்கியமானவற்றையும், பிறருக்குப் பயன்படும் எண்ணங்களையும் சொல்லல் தேவை.

சில பயண இலக்கியங்கள் குழந்தைகளுக்கு என்று சுட்டப்படுவதைக் கண்டோம். இவ்வாறு எழுதவேண்டும் என்று விரும்புவோர் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குரிய கல்வி வளர்ச்சி, பிறதுறை அறிவு முதலியவற்றில் ஆர்வம் செலுத்தத் தக்க எண்ணங்களைச் சொல்லுதல் தேவையானது.

5. மேலும், கிடைக்கும் உணவு வகைகள், தேவையான உணவுகள் கிடைக்கும் இடங்கள் குறிப்பிட்டும், பழகும் விதம் பேசும்நிலை குறிப்பிட்டும், பார்க்கப்பட வேண்டிய, முக்கிய இடங்களைக் குறிப்பிட்டும், அவற்றின் முக்கியத்துவம் உணர்த்தியும் பயண இலக்கியம் அமையவேண்டும்

இக்கொள்கைகள் அனைத்தும் இருப்பின் பயண இலக்கியம் தான் பிறந்த நோக்கத்தை நிறைவேற்றி, சமுதாயப் பயன்பாட்டு கருவியாக, மக்கள் தொடர்புச் சாதனமாக விளங்க இயலும்.

## பயண இலக்கியங்கள்


1. அக்கரைச் சமையில், சோமு, பாரி நிலையம், சென்னை, 1969.
2. அங்கும் இங்கும், நெ. து. சுந்தரவடிவேலு, நியூசெஞ்சுரி புக் உறவுஸ், சென்னை, 1982 (4)
3. அதிசய அமெரிக்கா, ஏ. எஸ். ஜார்ஜ், அசோகன் பதிப்பகம், சென்னை, 1977.
4. அதிசய நாடு அமெரிக்கா, எஸ். ஆர். சண்முகம், புதுமலர் நிலையம், கோயம்புத்தூர், 1955.
5. அம்புலிப் பயணம், ந. சுப்பு ரெட்டியார், கழக வெளியீடு, சென்னை, 197.
6. அமரநாதம், ஸ்ரீசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம், 1958.
7. அமெரிக்க நாட்டில், ஏ. கே. செட்டியார்.
8. அமெரிக்கப் பயண நினைவுகள், மேரி மாசிலாமணி, பாரி நிலையம், சென்னை, 1968.
9. அமெரிக்காவில் அண்ணா, எம். ஜி. ஆர். எம். எஸ். உதய மூர்த்தி, வித்வான் பதிப்பகம், சென்னை, 1675.
10. அமெரிக்காவில் பயண நூல், டாக்டர் கே. எம். ஜார்ஜ், தமிழாக்கம் சோபிநாத், கலைமகள் காரியாலயம், சென்னை, 1959.
11. அமெரிக்காவைப் பார், சோமலெ, இன்ப - நிலையம், 1968 (6)
12. அயல்நாடுகளில் என் அனுபவங்கள், சு. பாலச்சந்திரன், கோமதி நூலகம், சென்னை, 1978.
13. அருணகிரிநாதர் அடிச்சுவட்டில், சோ. சிவபாதசுந்தரம்.
14. அலைகடலில் ஆறு நாட்கள், (மலேசியா, சிங்கப்பூர்), மனசை ப. கீரன், வேணி வெளியீடு, சென்னை, 1976.
15. அலைகடலுக்கு அப்பால், சாரதா நம்பி ஆரூரன் கூடல் வெளியீடு, மதுரை, 1977.
16. அனுபவங்கள் தொடருகின்றன, சிவசங்கரி, வானதி பதிப்பகம், சென்னை, 1978.

17. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல ஆண்டுகள், லக்ஷ்மி நல்வாழ்வு பதிப்பகம், சென்னை, 1978.

18. ஆஸ்திரியா, அரு. சோமசுந்தன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1977.

19. ஆஸ்திரேலியா, சம்பந்தம், வானதி பதிப்பகம், சென்னை.

20. ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பாரிநிலையம், சென்னை, 1950.

21. இங்கே போயிருக்கிறீர்களா? சாவி, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.

22. இதயம் பேசுகிறது, மணியன், விகடன் பிரசுரம், சென்னை 1966.

23. இதயம் பேசுகிறது, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், மணியன், ஆனந்த விகடன், 1969 (3)

24. இதயம் பேசுகிறது, ஜப்பானியப் பயணக்கதை, மணியன், ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1972.

25. இதயம் பேசுகிறது, மணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை 1972.

26. இதயம் பேசுகிறது, ஆஸ்திரேலியா சிங்கப்பூர் மலேசியா-மணியன், ஒரு விகடன் பிரசுரம். சென்னை, 1973

27, இதயம் பேசுகிறது, ரஷ்யப் பயணக்கதை, மணியன், ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1973.

28. இதயம் பேசுகிறது, மெக்ஸிகோ பயணக் கதை, மணியன் ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1978.

29. இதயம் பேசுகிறது, இலங்கைப்பயணக் கதை, மணியன் பதிப்பகம், சென்னை, 1979.

30. இந்தியா-நேபாள சுற்றுப் பயணம், தொகுப்பு, வி. சித்தராஜன், அம்பிகா பிரஸ், சேலம், 1973-74.

31. இந்தியனது மேனாட்டு அனுபவம், எ. எல். பஞ்சாபகேச ஐயர், தமிழாக்கம், தி. அ. சாமிநாத ஐயர், ஜி. வி. கே. ஸ்வாமி அன்கோ, கும்பகோணம், 1941.

32. இந்திய ஸ்தல யாத்திரை, வி.எஸ். முத்துராம கிருஷ்ணன் புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, 1965.

33. இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம், முதற்பாகம், தாங்ராவ், பாரதி பிரஸ், மன்னார்குடி.

34. இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம், இரண்டாம்பாகம், கேசரி பிரிண்டிங் பிரஸ், மதராஸ், 1932.

35. இந்தியாவில் புனித யாத்திரை, (சுயசரிதையில் ஒரு பகுதி), ரால்ப் ரிச்சர்டு கெய்த்தான், தமிழாக்கம் அ. அலையன், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை, 1975.

36. இந்தியாவின் ஹவாய், ஆனந்த விகடன் ஆசிரியர் குழு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974.

37. இமயத்தில் நூறு மைல், எஸ். அருண், பழனியப்பா சென்னை, 1971 (2).

38. இமயம் முதல் குமரி வரை, சோமலெ, மணிவாசகர் நூலகம். சிதம்பரம், 1977.

39. இமயமலைப் பயணம், ப. ரா. சுப்பிரமணியன், சேகர் பதிப்பகம், சென்னை, 1981.

40. இராமேசுவர யாத்திரை, ச. தண்டபாணி தேசிகர், தருமையாதீனம், 1952.

41. இலங்கைக் காட்சிகள், கி. வா. ஜகந்நாதன் கலைமகள் காரியாலயம், சென்னை, 1956.

42. இலங்கைப் பயணம், அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி 1956.

43. இலங்கையில் ஒரு வாரம், கல்கி பாரதி பதிப்பகம், சென்னை 1954.

44. இலங்கையில் சில நாட்கள் ப. சண்முகம், முத்தமிழ் பதிப்பகம் கும்பகோணம், 1973.

45. இளைய ஜெர்மனியில் இருபது நாட்கள், எஸ். சங்கரன், மல்லிகைப் பதிப்பகம், சென்னை, 1969.

46. இனியவை இருபது, மு. கருணாநிதி, இன்ப நிலையம், சென்னை, 1973,

47. ஈழத்தில் இனிய நாட்கள், எஸ். சர்மா ஓனர் பிரிண்டர்ஸ் ரங்கூன் ரோடு, சிங்கப்பூர், 1982.

48. ஈழநாட்டுப் பிரயாணம், பகீரதன், பாரதி பதிப்பகம், சென்னை, 1950.

49. உதயசூரியன் நாட்டிலே ஒரு மாதம், பி. கோ. சேதுராம சாமி, பொள்ளாச்சி, 1961.

50. உலகப்பயணம், ஆசியா அமெரிக்கா, கே.பி.எஸ். மேனன் தமிழாக்கம் எஸ். சங்கரன், மல்லிகைப் பதிப்பகம், சென்னை 1966
51. உலகம் சுற்றிய தமிழன், ஏ. கே. செட்டியார் சென்னை 1940.
52. உலகம் சுற்றி வந்தோம், பன்னீர்தாஸ்-சந்தோஷம், வானதி பதிப்பகம், சென்னை, 1976.
53. உலகம் சுற்றினேன். சி. சுப்பிரமணியம், ஒரு விகடன் பிரசுரம், ஆனந்த விகடன் அச்சகம் சென்னை, 1964
54. ஊர்சுற்றிப் புராணம், ராகுல சாங்குருத்தியாயன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் சென்னை, 1982.
55. எங்கள் ஊர், தொகுப்பு நூல், வெள்ளிவிழா வெளியூடு, கி.வ. ஜகந்நாதன், கலைமகள் காரியாலயம், சென்னை, 1957.
56. எங்கள் பயணங்கள், சாலை இளந்திரையன், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1695.
57. எழுவர் நாங்கள், கோவை கிழார், கோவை நிலையப் பதிப்பகம் 1951.
58. என் பிரயாண நினைவுகள், சோமலெ, பாரிநிலையம், சென்னை, 1968. (6)
59. என் உலகச் சுற்றுப் பயணம், சவரிராயன் ஏசுதாசன், கிறித்து குல ஆசிரமம், திருப்பத்தூர், 1935.
60. ஐந்து நாடுகளில் அறுபது நாட்கள், தேவன்.
61. ஐரோப்பா வழியாக, ஏ. கே. செட்டியார், குமரிமலர், காரியாலயம், சென்னை, 1961.
62. ஐரோப்பாவில் ஐந்து நாடுகள், சுப. இராமன் (கலை அன்பன்) மீனாட்சி புத்தகம் நிலையம், மதுரை, 1962.
63. ஐயப்பனோடு ஐம்பது நாள், கோபு சாஸ்தா பதிப்பகம், திருச்செந்தூர், 1966.
64. ஒன்றே குலம், தனிநாயக அடிகள், பாரி நிலையம், சென்னை, 1966
65. கண்கொள்ளாக் காட்சிகள், கல்கி, பாரதி பதிப்பகம், சென்னை, 1957.
66. கண்டறியாதன கண்டேன் சின்ன அண்ணாமலை பாரதி பதிப்பகம், 1960.

67. கண்டறியாதன கண்டேன், கி. வா. ஜகநாதன், நண்பர்கள் அச்சகம், சென்னை, 1975.

68. கருங்கடலும் அலைக்கடலும், தி. ஜானகிராமன், வாசகர் வட்டம், சென்னை, 1974.

69. கலை கண்ட மலேசியா, அவ்வை தி. க. சண்முகம், புத்தனேரி சுப்பிரமணியம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 1673.

70. கனவு உலகம், சம்பத்குமார்,

71, காசியாத்திரை, பாகம்-1, பரணீதரன். ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1978.

72. காட்டில் என் பிரயாணம், பிலோ இருதயநாத், இளங்கோ பதிப்பகம், சென்னை, 1967.

73. கரிபியன் கடலும் கயானாவும், அ. க. செட்டியார், குமரி மலர்க்காரியாலயம், சென்னை, 1957.

74. கால்நடையில் 28000 மைல்கள், டி. கே. இராஜகோபால் யாத்ரீகர். ரத்னா சம்பந்தன், சிதம்பரம், 1954.

75. காஷ்மீர் அழைக்கிறது. எஸ். அமல்தாஸ், ராமு புத்தக நிலையம், சென்னை, 1978.

76. காஷ்மீரைக் காண்போம், சி. வேதாசலம், வானதி பதிப்பகம், சென்னை, 1969 (2).

77. கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது, சோலை. இருசன், புரட்சிப்பண்ணை, சேலம், 1979 (2).

78. கிழக்காப்பிரிக்காக் காட்சிகள், எ. எம். ஏ. அஸீஸ், பாரி நிலையம், சென்னை, 1997.

79. கிழக்கு செர்மனியில் சில நாட்கள், எச். ஆர். அய்யர், பாரிநிலையம், சென்னை, 1967.

80. கிழக்கே போன கிணற்றுத் தவளை, குரும்பூர் குப்புசாமி அருணோதயம், சென்னை, 1964.

81. குடகு, ஏ. கே. செட்டியார், குமரி மலர்க்காரியாலயம், சென்னை, 1967

82. கேரளம் கண்டேன், தொகுப்பு, செந்தில் துறவி, சாஸ்தா பதிப்பகம், திருச்செந்தூர், 1979.

83. கேரள விஜயம், பாகம்—1, பரணீதரன், ஒரு விகடன் பிரசுரம், ஆனந்தவிகடன் அச்சகம், சென்னை, 1977.

84. கைலாசம் கண்டேன், யோகிராஜ் ஸ்வாமி சச்சி தானந்தம், திவ்யஜீவன் சங்கம், கண்டி, 1960.

85. கொடைக்கானல் வழியிலே, வைத்தண்ணா, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1967.

86. கோவா செல்வோம், குரும்பூர் குப்புசாமி, அருணோதயம், சென்னை, 1980.

87. கௌதமபுத்தர் அடிச்சுவட்டில். சோ. சிவபாதசுந்தரம் அமுதநிலையம், பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960.

88. சிங்கப்பூர், அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைகுடி, 1980.

89. சிங்கப்பூரிலிருந்து சங்கநதிவரை, சரோஜினி ஸ்ரீராம், வண்ணத் தாமரை, சென்னை, 1974.

90. சில நாடுகளில் சில நாட்கள், செ. மாதவன், வானதி பதிப்பகம். சென்னை, 1976.

91. சுவிட்சர்லாந்து, அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1977.

92. செல்வம் கொழிக்கும் சீமை, கலை அன்பன் ராமன்.

93. சேக்கிழார் அடிச்சுவட்டில், சோ. சிவபாதசுந்தரம், வானதி பதிப்பகம், சென்னை, 1978.

94. ஷேத்ராடனம், ஸ்ரீசாயிமாதா சிவபிருந்தா தேவி, புதுக்கோட்டை, 1977.

95. சோழநாட்டுத் திருப்பதிகள், ந. சுப்புரெட்டியார், பாரி நிலையம், சென்னை, 1981.

96. சோவியத் நாட்டில் அகிலன், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1975.

97. சோவியத் நாட்டில் ஒரு தமிழ் மாணவி, வி. எஸ். கமலா மக்கள் வெளியீடு, சென்னை, 1975.

98. சோவியத்து நாட்டில் நான் கண்டதும் கேட்டதும், சு. ந. சொக்கலிங்கம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, 1973.

99. சோவியத் நூலகங்கள். விக்டர் இமானுவேல், காவேரி புத்தக நிலையம், சென்னை, 1966.

100. சோவியத் மக்களோடு. நெ. து. சுந்தரவடிவேலு, வானதி பதிப்பகம், சென்னை, 1973.

101. சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர், ஆர். வெங்கட் ராமன்.

102. டேவிட் லிவிங்ஸ்டன் கண்ட ஆப்பிரிக்கா, வ. தங்கையா கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1963 (3).

103, தமிழ்நாட்டில் எட்டு நாட்கள், எஸ். எஸ். சர்மா, ஹன்ட்ஸ்மன் ஆப்செட் பிரிண்டிங் லிமிடெட், சிங்கப்பூர். 1980.

104. தமிழ்நாடு பயணக் கட்டுரைகள், தொகுப்பு, ஏ. கே. செட்டியார், வடபழனி பிரஸ், சென்னை, 1968.

105. தமிழ் யாத்திரை, எ. எம். எ. அஸீஸ், தமிழாக்கம், ர. ச. துரை, அன்பு நூல் நிலையம், மதராஸ், 1968.

106. தமிழன்கண்ட மலேயா, ஏ. எம். பரமசிவானந்தம்.

107. தர்மலோக தரிசனம், தொகுப்பு செந்தில் துறவி, சாஸ்தா பதிப்பகம், திருச்செந்தூர், 1972.

108, தாய்லாந்தின் தலைநகரிலே, எஸ். எம். கமாலுத்தீன், பாரிநிலையம், சென்னை, 1968.

109. திருக்கேதார பத்ரிசாஸ்ரம யாத்திரை, தி. சு. அவிநாசி லிங்கம், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், கோயம் புத்தூர், 1951.

110. திருக் கைலாயகிரி யாத்திரை, ஸ்ரீசித்பவனாந்த சுவாமி கள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை, 1944.

111. தென் கிழக்கு ஆசியாவில், க. இராசாராம், பாரிநிலையம் சென்னை, 1967.

112. தேசயாத்திரை அல்லது பிரயாண அனுபவம், செக்டாரரி பழனியப்பா நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கம் இரங்கூன், 1920.

113. தேவிதரிசனம், பொன். பாஸ்கரமார்த்தாண்டன், அம்பாள் பதிப்பகம், சென்னை, 1981.

114. தொண்டை நாட்டுத் திருப்பதிகள், ந. சுப்புரெட்டியார், எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி, 1974.

115. நடந்தாய் வாழி காவேரி, தி. ஜானகிராமன், புக் வென் சர்ஸ், சென்னை, 1971.

116. நமது தலைநகரம், சோம.லெ. இலக்குமணச் செட்டியார், இன்ப நிலையம், சென்னை2.,

117. நவகாளி யாத்திரை, சாவி, மோனா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1978.

118. நள்ளிரவில் சூரியன் ஒளிரும் நாடு, தி. நாராயணன், கலைமகள் காரியாலயம், சென்னை. 1972.

119. நான் கண்ட அமெரிக்கா, செல்வி எம். முத்தையா.

120. நான் கண்ட அதிசயக் காட்சிகள், கன்னியப்ப நாயக்கர், சக்தி நூற் பதிப்பகம், கல்பட்டு, வட ஆற்காடு, 1961.

121. நான் கண்ட எகிப்து, கே. ஸ்ரீனிவாசன், கலைமகள் காரியாலயம், சென்னை, 1965.

122. நான் கண்ட சோவியத் ஒன்றியம், நெ. து. சுந்தர வடிவேலு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1971.

123. நான் கண்ட நாலு நாடுகள், சாவி, வானதி பதிப்பகம், சென்னை, 1975.

124. நான் கண்ட ரஷ்யா, அகிலன், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1980.

125. நான் கண்ட ரஷ்யா. யோகி சுத்தானந்த பாரதியார், காவேரிப்பதிப்பகம், சென்னை, 1955.

126. நான் கண்ட ஜப்பான், இராமசுவாமி நாயுடு, வெள்ளையல் பதிப்புக் கழகம், சென்னை, 1953 (2).

127. நான் கண்ட ஜெர்மணி, மேரி மாசிலாமணி, பாரி நிலையம், சென்னை, 1969.

128. நான் சென்ற சில நாடுகள், சி. சுப்பிரமணியம், ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1962,

129. நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள் (அமெரிக்க நூலக வரலாறு), திருமலை முத்துச்சாமி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1962 (7).

130. நேபாள நாட்டின் அனுபவங்கள், பரதபாண்டியன், சர்வோதய இலக்கியப் பண்ணை. மதுரை, 1973.

131. நேபாளம், அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1973.

132. நேபாளம், கே. ஸ்ரீனிவாசன், கலைமகள் வெளியீடு, சென்னை, 1969.

133. நேபாள யாத்திரை, கிருபானந்த வாரி, தில்லைத் திருப்புகழ்ச் சபை, சிதம்பரம், 1974.

134. பசுபதிநாத் (நேபாள யாத்திரை), ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம், 1958.

135. பத்ரி கேதார் யாத்திரை, நெ. சி. தெய்வசிகாமணி, பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1981.
136. பயணம் அன்றும் இன்றும், பெ. நா. அப்புஸ்வாமி, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1970.
137. பயணம் ஒரு கலை ஆனால், பிலோ இருதயநாத், பசும் பொன் பதிப்பகம், சென்னை, 1978.
138. பாரத யாத்திரை, புலவர் புரவலன், புரவலன் பதிப்பகம் சென்னை, 1968.
139. பாரத யாத்திரை, பு. கே. ஸ்ரீனிவாசன், பாரத யாத்ரிக சங்கம், மதராஸ், 1937.
140. பாலஸ்தீனப் பயணம், சுவாமி. ஆ. ஜோ. அடைக்கலம், வானதி பதிப்பகம், சென்னை, 1975.
141. பிரயாண அனுபவமும் வாழ்க்கைக் குறிப்புகளும், ஜி டி. நாயுடு, ஏ. எல். வேணு, முத்தமிழ் நிலையம், சென்னை, 1951,
142. பிரயாண இலக்கியம், தொகுப்பு நூல், வாசகர் வட்டம், சென்னை, 1966.
143. பிரயாண நினைவுகள், க. அருணாசலம், சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடு, மதுரை, 1970.
144. பிரயாணக் கட்டுரைகள், ஏ. கே. செட்டியார், குமரி மலர் காரியாலயம், சென்னை, 1957.
145. பிரயாண நினைவுகள், ஏ. கே. செட்டியார், சக்தி காரியா லயம், காரைக்குடி, 1942.
146. பிரான்சு—அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1977.
147. பிரிட்டன், அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1977.
148. பிரிட்டனில் கண்ட புதுமைகள், அருண், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1966.
149 புண்ணிய பாரதம், பாகம்-1, பரணீதரன், ஒரு விகடன் பிரசுரம் சென்னை, 1980 (2).
150. புண்ணிய பாரதம். பாகம்-2, பரணீதரன், ஒரு விகடன் பிரசுரம், சென்னை, 1675.
151. புண்ணிய பூமியில் புனித யாத்திரை, வி.என். சிதம்பரம், வாஜதி பதிப்பகல், சென்னை, 1980.

152. புதிய கீதம் இசைக்கின்றார், ராஜம் கிருஷ்ணன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் லிமிடெட், சென்னை, 1978.

153. புதிய ஜெர்மனி. எஸ். சங்கரன், மல்லிகைப் பதிப்பகம், சென்னை, 1967.

154. புதிய ஜெர்மனியில், நெ. து. சுந்தரவடிவேலு, வானதி பதிப்பகம், சென்னை, 1974.

155. புதிர் நிறைந்த பூமி, எலிசா, மருதமலைப் பதிப்பகம், சென்னை, 1981.

156. புன்னகை பூத்த நாடு, எம். ஆர். பாலகிருஷ்ணன் வாசகர் வட்டம், சென்னை, 1967,

157. புனிதப் பயணம். திருமதி குர்ஷித் பேகம் கான், சேகர் பதிப்பகம், சென்னை, 1975.

158. மகா சயிலாய யாத்திரை, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசிரிய சுவாமிகள், தருமையாதீனம், 1959.

159. மகா மேரு யாத்திரை, ஆர். அனந்த கிருஷ்ண சாஸ்திரி, ஹிந்தி பிரச்சார பிரஸ், மதராஸ், 1936.

160. மலாயா முதல் கனடா வரை, ஏ. கே. செட்டியார், 1955.

161. மலேசியாவில் ஒரு மாதம், ம. பொ, சிவஞானம், இன்ப நிலையம், சென்னை, 1965.

162. மலேயாவின் மாட்சியும் காஷ்மீர் அமர்நாத் காட்சியும், கிருபானந்தவாரி, திருப்புகழ் அமிர்தம், சென்னை, 1956.

163. மலேசியா, அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1980.

164. மலைநாட்டுத் திருப்பதிகள், ந. சுப்புரெட்டியார், எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 1971.

165. மலைநாட்டின் மீதினிலே, பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், கவியரசன் பதிப்பகம், சென்னை, 1979

166. மலையா நாடு, ஸ்ரீமதி டி. பதுமாவதி அம்மாள், லலிதா புத்தகசாலை, சென்னை, 1948.

167. மனம் கவர்ந்த மலேசியா, சிவசங்கரி, திருமகள் நிலையம், சென்னை, 1979.

168. மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், சோ. சிவபாதசுந்தரம்

169. மாஸ்கோ டயரி, கே. பி. எஸ். மேனன், தமிழாக்கம், சங்கரநாராயணன், வாசகர் வட்டம், சென்னை, 1966.

170. மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை, ம.பொ.சி. இன்ப நிலையம், சென்னை, 1972.

171. முதல் உலகத் தமிழ் மாநாடு, எ. எம். எ. அஸீஸ், தணிகைப் பதிப்பகம், சென்னை, 19 8.

172. முன்னேறிய நாடுகளில் முப்பது நாட்கள், சா. கணேசன், வானதி பதிப்பகம், சென்னை, 1973.

173 யான் கண்ட இலங்கை, மு வரதராசன், பாரி நிலையம், சென்னை, 1971.

174. லண்டன் பாரீஸ் நகரங்களின் விநோத சரித்திரம், இ. பரமேசுவரம் பிள்ளை, தமிழாக்கம்: ச. கங்காதரம் பிள்ளை, மெஸர்ஸ் கிரேவ்ஸ் கூக்ஸ் அண்டு கம்பெனி, சென்னை, 1899.

175. லண்டன் முதல் மாஸ்கோ வரை, வ. ச. ஈசுவரமூர்த்தி, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1963.

176. லண்டனில் லூசி, டாக்டர் சோம. இலட்சுமணன்.

177. வட இந்தியப் பயணம், அரு. சோமசுந்தரன் பொன்முடி பதிப்பகம் காரைக்குடி. 1972.

178. வட இந்திய யாத்திரை, பகீரதன், கலைஞன் பதிப்பகம், சென்னை, 1957.

179. வடநாட்டுத் தலங்கள் சி. முத்துப்பிள்ளை, பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1980.

180. வாட்டிகன், அரு. சோமசுந்தரன், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1977.

181. வாதாபி விஜயம், விக்கிரமன், திருமகள் நிலையம், சென்னை, 1979.

182. வாருங்கள் பார்க்கலாம், கி. வா. ஜகந்நாதன், அமுத நிலையம், சென்னை, 1969.

183. வால்காவிலிருந்து, சா. கணேசன், அழகிரி பதிப்பகம், சென்னை, 1958.

184. வேங்கடம் முதல் குமரி வரை.
காவிரிக்கரையிலே, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ், ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிகேஷன்ஸ், திருநெல்வேலி, 1961.

பாலாற்றின் மருங்கிலே, சுப்பிரமணிய பிள்ளை பப்ளி கேஷன்ஸ், திருநெல்வேலி, 1962.

பொருனைத் துறையிலே, சுப்பிரமணிய பிள்ளை பப்ளி கேஷன்ஸ், திருநெல்வேலி 1963.

பொன்னியின் மடியிலே, சுப்பிரமணிய பிள்ளை பப்ளி கேஷஸ், திருநெல்வேலி 1961.

185. வையத்தில் வைகுந்தம் தொகுப்பு, செந்தில் துறவி, சாஸ்தா பதிப்பகம், திருச்செந்தூர், 1969,

186, ரு ஆரிய திவ்ய தேச யாத்திரைச் சரித்திரம், சேலம் பகதுல நரசிம் கல நாயுடு. 1889.

187. ஸ்ரீகாசி வழித் துணை விளக்கம், சிவகளை சுப்பையா, பொம்மபுர ஆதீனம், மயிலம், 1965.

188. ஹஜ் நிறைவேறுகிறது, ஜமாலுத்தீன், கே. எம், அபூ பக்கர், நூற்பதிப்பகம், சென்னை 1977.

189. ஹஜ் வழிகாட்டி, தமிழ்நாடு ஹஜ் குழு, சென்னை, 1975.

190. ஜப்பான், அ. ராம. அ. கருப்பன் செட்டியார், ஆசிரியர், தலைவணிகன், இரங்கூன், 1936.

191. ஜப்பான், த மாணிக்கவாசகம்.

192. ஜப்பான், தி. ஜானகிராமன்.

193. ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும், சு. நா. சொக்க லிங்கம், ஹிக்கின் பாதம்ஸ் லிமிடெட், சென்னை, 1975.

# 6

# கடித இலக்கியம்

—டாக்டர். ந. கடிகாசலம்

## முன்னுரை

கடிதம் எழுதுதல் என்பது மனிதன் நாகரிகத்தில் வளர்ச்சி யடையத் தொடங்கிய காலத்தில் துவங்கப்பெற்ற ஒரு கலை யாகும். முற்காலத்தில் நம் நாட்டில் ஓலைகளில் எழுத்தாணியால் எழுதப்பெற்றதால் ஓலை எனக் கடிதம் வழங்கப்பெற்றது; இந் நாளில் கடிதத்தில் எழுதப்படுவதால் கடிதம் என வழங்கப்படு கிறது. ஆங்கிலம் போன்ற பிறநாட்டு மொழிகளைப் போலன்றித் தமிழில் கடித இலக்கியம் அருகியே காணப்படுகிறது. தமிழில் காணும் கடித இலக்கியம் உணர்த்தும் கொள்கைகளைக் காண முற்படுகிறது இக்கட்டுரை.

செஸ்டர்ஃபீல்டு குறிப்பிடுவது போல, கடிதம் எழுதுவது ஓர் அருங்கலைதான். தனி மனித உறவுக்கும் நினைவுக்கும் தொடர் பாக அமைவது கடிதம், இலக்கியக் கலைஞர் தம்மால் இது ஓர் இலக்கிய நிலைக்கு இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற் காலத்தில் தமிழில் வளர்ந்த இலக்கிய வகைகளில் கடித இலக்கி யமும் ஒன்று எனலாம்.

## கடிதம் சொல்

கடிதம் என்னும் பொருளைத் தருவனவாக முற்காலத்தில் திருமுகம், ஓலைத் தூக்கு, சீட்டுக்கவி, ஆகிய சொற்கள் இலக்கியப் பயிற்சி பெற்று வந்துள்ளன.

தொடக்கக் காலத்தில் சீட்டுக்கவி என்பதற்குத் திருமுகம் என்ற பெயரே வழங்கியது; பிற்காலத்தில்தான் சீட்டுக்கவி என்னும் பெயர் வழங்கலாயிற்று. இதனை, ஆலவாய்ப் பெருமானால் இயற்றப்பெற்ற திருமுகப்பாசுரம் என்பதன் பெயரமைதி கொண்டறியலாம். திருமுகம் என்பதே தொன்மைப் பெயராகக் காணக்கிடக்கிறது. ஓலைத் துண்டில் எழுதப்பெற்றதால் ஓலைத் தூக்கு எனவும், தீட்டுகின்ற கவிதை என்னும் பொருளில் தீட்டுக் கவி எனவும் சீட்டுக்கவி வழங்கியிருக்கிறது. 'சீட்டுக் கவி என்பது கடிதக் கவிதையாகும். பழங்காலத்துப் பாவாணர்கள் அரசர்களுக்கோ அல்லது தம்மை ஆதரித்த வள்ளல்களுக்கோ கடிதம் எழுதுங்கால் ஓலை நறுக்கில் பாடல் வடிவமாகவே எழுதி அனுப்புவது முறை. இடைக்காலத்துப்புலவர்கள் இத்தகைய சீட்டுக் கவிகள் பலவற்றை எழுதியுள்ளனர்[1]' என்னும் கூற்று நினைக்கத் தக்கது.

## இலக்கியங்களில் கடிதம்

தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றில் காணப்படும் தூது இலக்கியப் பொருண்மைக் கூறுகள் சீட்டுக்கவி இலக்கியப் பொருண்மையோடு தொடர்புடையன. இனி, இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரக் காப்பியத்தில் மாதவி விடுப்பதாக இரு கடிதங்கள் காணக்கிடக்கின்றன.

மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனி லிளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃது அறிந்தீமின்[2]

என்பது வயந்தமாலையிடம் மாதவி அனுப்பிய மலர்க் கடிதம். கடித இலக்கியத்தின் முன்னோடி இக் கடிதமே எனலாம்.

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 3
2. சிலப்பதிகாரம், வேனிற்காதை, 50-57

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி[3]

என்பது கோசிகமாமணி மூலம் மாதவி விடுத்த கடிதமாகும். இவ்விரு கடிதங்களும் பொருண்மை நிலையில் மாறுபட்டனவாக அமைகின்றன. காதற்பொருண்மையை உணர்த்தும் முதற் கடிதத்தைத் திருமுகம் என்னும் சொல்லாலும், கோசிகமாமணி கொணர்ந்த கடிதத்தை, ஓலை, முடங்கல் என்னும் தொடர்களாலும் இளங்கோவடிகள் குறித்துள்ளார். இதனையே அடியார்க்கு நல்லார் 'காமன் திருமுகம்' 'ஓலைமுகப் பாசுரம்' எனக் குறிப்பிட்டிருப்பதும் நினைக்கத் தக்கது.

இவை போன்றே, சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் சீவகனின் குணமாலை ஓவியக் கடிதமும், பெருங்கதையில் உதயணன் வாசவதத்தையின் நெற்றியில் எழுதிய முடங்கலும் காணக்கிடக்கின்றன. இவை காப்பியத்தின் உறுப்பாக அமைந்துள்ளன.

அதிர்கழல் உதியர் வேந்தற்
கருள்செய்த பெருமை யாலே
எதிரில்செல் வத்துக் கேற்ற
இருநிதி கொடுக்க வென்று
மதிமலி புரிசை என்னும்
வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத்
திருமுகம் தொடுத்தார் காண[4]

என்னும் பாடலில், மதுரை சொக்கநாதர் பாணபத்திரருக்கும்[5] பரிந்துரை செய்து சேர மன்னன் சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய கடிதம் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

---

3. சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதை 87-92
4. பெரியபுராணம், கழற்றறிவார் புராணம் 28
5. மேலும் காண்க, திருவிளையாடற்புராணம் திருமுகங் கொடுத்த படலம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். திருமுகங்கொடுத்த திருவிளையாடல்,

அந்தகக்கவிராயரின் 'ஏடாயிரம் கோடி' எனத் தொடங்கும் கடிதம், 'மன்னு மாளிகை' எனத் தொடங்கும் அழைப்புக் கடிதம், சரவணப் பெருமாள் கவிராயர் வள்ளல்கட்கு எழுதிய 'கல்விச் சமுத்திரம்' என்ற கடிதம், 'வீரப்ராத கவி' எனத் தொடங்கும் எச்சரிக்கைக் கடிதம்; அருணாசலக் கவிராயர் முத்துவீரப்ப னார்க்கு எழுதிய 'எத்திசையுமே பரவு' எனத் தொடங்கும் கடிதம், பாரதியார் எழுதிய 'மன்னவனே தமிழ் நாட்டில்' எனத் தொடங்கும் கடிதம் ஆகியவை புலவர் பெருமக்களால் எழுதப் பெற்ற கடிதங்களாகும்.

இவ்வாறு இலக்கியங்களில் காணப்படும் கடிதங்கள் பாடல் வடிவிலே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், பூண்டி அரங்கநாத முதலியாருக்கு எழுதிய கடிதம் பாடல் வடிவில் அமைந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.[6]

## கடித இலக்கியம்

இலக்கியங்களில் ஓர் உறுப்பாக இடம் பெற்றுவந்த கடிதம் இருபதாம் நூற்றாண்டில் ஓர் இலக்கிய வகையாக உருப்பெறத் தொடங்கியது கவிதை வடிவில் இடம் பெற்ற கடிதங்கள் உரை நடை வடிவத்தைக் கொண்ட நாவல் இலக்கியத்தில் ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படலாயின. 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்றே தம் நாவலுக்குப் பெயரிட்டார் மறைமலையடிகள் என்பது இங்குச் சுட்டத்தக்கது.

கடித இலக்கியம் என்பது, ஒரு மனிதனுடைய உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையும் எழுச்சி மிக்க உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தப்படும் ஒரு சாதனமாக விளங்குகிறது.

ஆங்கிலத்திலும் பிற மேனாட்டு மொழிகளிலும் கடித இலக் கியம் பெருவளர்ச்சியடைந்த துறையாக விளங்குகிறது. பல்வேறு அறிஞர்களின் கடித இலக்கியங்கள் இறவாப் புகழ் பெற்று விளங்கு வதையும் காண முடிகிறது. ஆங்கிலத்தில் ஹரேஸ் வால்போல், செஸ்டர்ஃபீல்டு, கிரே, கூப்பர்; ஜெர்மனியில் ஷில்லர்; பிரெஞ்சில் மதாமெ-தே-செவிஞ் ஆகியோர் இத் துறையில் குறிப்பிடத் தக்க வர்கள். கி. மு. முதல் நூற்றாண்டின் உரோமாபுரியில் வாழ்ந்த அரசியலறிஞர் ஸிஸரோவின் கடிதங்களைச் செஸ்டர்ஃபீல்டு

6. டாக்டர் உ. வே. சா. நல்லுரைக்கோவை (முதற்பாகம்) பக். 87

கடிதத் துறையில் உருவான உயர்ந்த இலக்கியமாகக் கருதலானார். பேரரசன் நீரோ மன்னனின் ஆசிரியரான செனாகா அறநெறிக் கடிதங்கள் என்னும் ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டார். ரிச்சர்ட்ஸன் என்பவர் பமெலா என்னும் நாவலைக் கடித வடிவிலேயே படைத்துள்ளார். மெக்காலேயின் கடிதங்கள் இலக்கியச் செழுமைக்குப் பெயர் பெற்றவை. கீட்ஸ், பர்க், டன், எமிலி டிக்கன்ஸன், டி. எச். லாரன்ஸ், அலெக்ஸாண்டர் போப், வால்மட் விட்மன் ஆகியோர் எழுதிய கடிதங்களும் இலக்கிய மேன்மைக்கு உரியனவாக விளங்குகின்றன.

## தமிழில் கடித இலக்கியம்

தூதுப் பொருண்மையை உள்ளடக்கியதாக விளங்கி, கவிதை வடிவில் கடிதமாகி இலக்கிய உத்தியாக விளங்கி, பின் அதுவே ஒரு இலக்கிய வடிவமாகத் தமிழிலும் மலர்ந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியில் கடித இலக்கியம் தவறாமல் இடம் பெறுவதாய் அமையக் காண்கின்றோம்.

இவ்வகை இலக்கியம் ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது போலத் தமிழ் மொழியிலும் சிறப்பான வளர்ச்சியை அடைந்துள்ளது என்று கூறிவிட முடியாது. கடித இலக்கிய வகையில் குறிப்பிடத்தக்க சில நூல்களே தமிழில் வெளிவந்துள்ளன.

'கோகிலாம்பாள் கடிதங்கள்' என மறைமலையடிகள் நாவலுக்குப் பெயரிட்டது இவ்வகையில் திருப்புமுனை எனலாம். சமுதாய அரசியல் விழிப்புணர்ச்சியை உருவாக்க அண்ணாதுரை இவ்விலக்கிய அமைப்பைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். 'தம்பி!' எனத் துவங்கி அவர் வரையும் கடிதங்கள் புகழ் பெற்றவை அவரைத் தொடர்ந்து மு. கருணாநிதி அவர்களும் தம் கட்சித் தொண்டர்களை உடன்பிறப்பே என விளித்துக் கடித வாயிலாகப் பல்வேறு கருத்துக்களையும், செய்தி விமர்சனங்களையும் அவர்களுக்குத் தெரிவித்து வருகிறார். மு. வரதராசன் அவர்கள் கற்பனைக் கடிதங்களை எழுதித் தமிழிலக்கியத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கடிதம் காந்தம் போல் கவர்ச்சி மிக்கது...எண்ண ஊர்தியான இதனை இலக்கிய வண்ண ஊர்தியாக்கியவர் சிலர். தமிழிலக்கி

யத்தில் கடித இலக்கியத்திற்குக் கால்கோள் செய்தவர் மு. வ. கட்டடம் எழுப்பியவர் அண்ணா; கைவண்ணம் காட்டுபவர் கலைஞர்"[7] என்னும் கூற்று இங்குச் சுட்டத்தக்கது.

## அமைப்பு முறை

தமிழில் காணும் கடித வடிவிலமைந்த நூல்கள் பெரும்பாலும் அமைப்பு முறையில் ஒன்று போல காணப்படுகின்றன. அன்புள்ள அம்மா என விளித்து, அன்புள்ள மகன் என முடிக்கப்படுகிறது. அன்புள்ள எழில் எனத் தொடங்கி உன் அன்புள்ள நம்பி என முடிக்கப்படுகிறது. தம்பி எனத் தொடங்கி அன்பன் அண்ணா துரை எனவும்; உடன்பிறப்பே எனத் தொடங்கிஅன்புள்ள மு. க. எனவும், முடிக்கப்படுகின்றன. அன்பு நிறைந்த வேங்கடவாண. னுக்கு எனத் தொடங்கி அன்பன் வேலப்பன் என முடிவதும் உண்டு.

எனவே, பொது நிலையில் யாருக்குக் கடிதம் எழுதப்படு கின்றதோ அவரை முன்னிலைப்படுத்தி விளித்துக் கடிதம் துவங்கப் படுகிறது. தொடர்ந்து, தான் கூற வந்த செய்திகளுக்கேற்ப கடிதம் உருப்பெருகிறது. இவ்வாறு, விளிப்பதில் சில சுவையாகவும் அமையக்கூடும். சுவையான காதல் கடிதங்கள் எனும் நூலில் கனிவு மொழியைச் செப்புகின்ற கனியன்பன், வீணைக் குரல் விமலா, பிரியமுள்ள பிரபாகர், மனம் கவர்ந்த மதன், மனசுக் கேத்த மங்கம்மா என அவரவர் தம் கல்வித் தகுதிக்கேற்பவும் அமைதல் காணப்படுகிறது.

## கடிதம்-ஓர் உத்தி

கடிதம் எழுதுதல் என்னும் துறையின் மூலம் பல்லாயிரக்கணக் கானவர்க்கும் தாம் கூற நினைப்பதைக் கூற முடியும். யாரோ ஒருவர்க்கு அது எழுதப்பட்டதாக இருப்பினும், படிக்கும் அனை வர்க்கும் அது பொதுவாக விளங்குதல் கூடும்.

"தமிழ் நாட்டின் செய்தித்தாள்பல, தமிழ் மொழிப் பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் இல்லாமல் நடைபெறுகின்றன என்று ஒரு புறம் வருந்துகிறாய்; மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இல்லாத செய்தித்தாள்களைத் தமிழர்கள் காசு கொடுத்து வாங்கிப் போற்றி வளர்க்கிறார்களே என்று மற்றொரு புறம் வருந்துகிறாய்.

7. மு. வ. கடித இலக்கியம்—கண்ணோட்டம், பக். viii

முன்னைய வகையில் வருந்திப் பயனில்லை; பின்னைய கையில் வருந்து, பிறரையும் வருந்தச் செய்; இதுவே நல்ல தொண்டு ஆகும்''[8] இப்பகுதியைப் படிக்கும் ஒவ்வொரு தமிழருக்கும் தம் நாட்டில் நடைபெறும் கேடு இன்னது என்று தெளிவாகப் புலப்படு கிறதல்லவா?

'வீரதீரம், அறிவாற்றல், அஞ்சா நெஞ்சம், திறமை எல்லாம் ததும்பி வழிகிறது.—அவர் ஆட்சியில் உள்ள நாட்டுக்கு,

தமிழ்நாடு என்ற பெயரும் இல்லை.
மைல் கற்களிலேயும் இந்தத் தொல்லை,
சேது சமுத்திரத் திட்டம் வரப் போவதில்லை,
அலுமினியத் தொழிலுக்கு அதிகாரி, இவரல்ல.
காகித ஆலை கட்டப்போவது, இவர் துரைத்தனம் அல்ல,

என்று அடுக்கிக் கொண்டே போகலாம் (அவ்) லட்சணத்தை. இந்த நிலையில் நாடு, இதற்கு வந்து வாய்ந்த அமைச்சர் வீரதீர மிக்கவர். அறிவாற்றல் நிரம்பியவர் என்று காட்டிப் பயன் என்ன? இந்த முழு உண்மை தெரியா முன்பு பாராட்டக்கூடத் தோன்றும். முழு உண்மை தெரிந்த பிறகு? நாட்டுப்பாடல் தான் நினைவிற்கு வருகிறது.

முள்ளு முனையிலே
வெட்டியது மூணு குளம்
இரண்டு குளம் பாழ்
ஒன்றில் தண்ணியே இல்லை'[9]

இப்பகுதியாலும் நாட்டு அரசியல் நிலையை உணர்த்த—அதைப் பலருக்கும் தெளிவாக்க—கடித உத்தி வகை பயன்படுகிறது.

## இலக்கிய ஈடுபாடு

கடிதங்களின் வாயிலாக வெறும் நலவிசாரிப்பு மட்டுமன்றி, அக்கடிதம் எழுதுவோரின் இலக்கிய ஈடுபாடும் வெளிப்பட வாய்ப் புண்டாகிறது.

''கண்ணே காதற்கனியே! இன்னும் ஓர் திங்களில் நான் வந்து சேருகிறேன். தென்றலும் திங்களும் தேன்மொழியாளே! உன்னைத்தான் வாட்டுகின்றன என்று எண்ணாதே! என்னை அவை இரண்டும் ஈட்டி எனக் குத்துகின்றன......பால் வண்ண

8. நண்பர்க்கு பக். 75
9. தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், (பகுதி 5) பக், 187

நிலவே! நான் உனக்குக் கொண்டுவர இருக்கும் அணிகளை அணிந்துகொண்டு அன்னமென நீ நடந்து செல்ல, ஆரணங்குகள் பலரும் உன்னைக் கண்டு, பெற்றாள் பெருமைக்குரிய மணாளனை! அதனால் அழகு மயிலாள் ஆனந்த வாழ்வு பெற்றாள் என்று புகழ்ந்துரைக்கக் கேட்டு..." பொருள் தேடச் சென்ற தலைவன், பிரிவாற்றாமைப் பெருந்துயரில் சிக்குண்ட தலைவிக்கு இதுபோலன்றோ மடல் எழுதுவான்![10] எனப் பிரிவுத் துயர் பற்றிய இலக்கியப் பாடல்களில் தோய்ந்த தன்மை புலப்படுகிறது.

இன்னொரு கடிதத்திலே அண்ணா குறிப்பிடுகிறார்.

தம்பி! நமது இலக்கியத்திலே மிகச் சிறந்த சுவை மிகு
பாக்களை நாடு பெற உதவிற்று, அறிவாய்!

நோம் என் நெஞ்சே நோம் என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறி இலை நெருஞ்சி
கட்கின் புதுமலர் முள்பயந்து ஆங்கு
இனிய செய்த நம் காதலர் இன்னா செய்தல்
நோம என் நெஞ்சே![11]

மு. வ. தம்முடைய கற்பனைக் கடித நூல்களில் சங்க இலக்கியம், திருக்குறள் ஆகிய இலக்கியங்களில் தாம் கொண்டிருந்த ஆழமான ஈடுபாடு புலப்படுமாறு பல்வேறிடங்களில் சங்க இலக்கியச் செய்திகளையும், திருக்குறள்பாக்களையும் மேற்கொள் காட்டி, தான் கூறவந்த கருத்தை மிகவும் தெளிவாகக் கூறுகிறார்.

இல்லற நெறி எனும் தம் நூலில், அதிகமாகக் குழந்தைகளை பெறும் ஏழைகள் அவதிப்பட நேரிடும் எனக் கூறும்போது, குசேலோபாக்கியானத்திலிருந்து இரு செய்யுட்களை எடுத்துக் காட்டுகிறார் ந. சுப்பு ரெட்டியார்.

ஒருமகவுக்கு அளித்திடும்போது ஒரு மகவு
கைநீட்டும்; உந்தி மேல்வீழ்ந்து
இருமகவும் கைநீட்டும்; மும்மகவும்
கைநீட்டும்; என்செய் வாளால்!
பொரும்ஒரு மகவழும்; கண் பிசைந்தழுதற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொரு மகவு எங்
ஙனம் சகிப்பாள் பெரிதும் பாவம்!

---

10. மேற்படி. பக். 32-33
11. ,, ,, 127

'அந்தோ; என் வயிற்றெழுந்த பசியடங்கிற்று
இல்லை!' என அழுமால் ஓர் சேய்;
'சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக் கன்
னாய்! எனப்பொய் செப்பும் ஓர்சேய்;
முந்தார்வந்து ஒரு சேய் சையப் புகும்போ
தினியோர் சேய் முடுகி ஈர்ப்ப,
நந்தாமற்று அச்சேயும் எதி ரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர் சேர்.[12]

இச்செய்யுட்களை எடுத்துக்காட்டி, குசேலர் நிலையில் உள்ள ஒருவருக்குப் பல குழந்தைகள் பிறந்தால் அன்றாட உணவுக்கே சொல்லொணாத் துயர் எய்த நேரிடும் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

## தோன்றிய காலச் சூழல்

கடிதங்கள் அவை எழுதப்பட்ட காலத்தில் நிலவிய பல்வேறு நிலைமைகளை நமக்குத் தெளிவாக்கி அமைகின்றன. அவ்வக் காலச் சூழல் கடிதங்களில் இடம் பெறுவது தவிர்க்க இயலாத தாகிறது.

'பியூனுக்குச் சம்பளம் 15 ரூபாய். பெரிய அதிகாரிக்குச் சம்பளம் சில ஆயிரம் ரூபாய். மடுவும் மலையுந்தான். இதை மாற்றுவது எளிய வேலையா? சம்பளம் இருக்கட்டும் பஞ்சமே வாழ்வாக இருக்கிற பியூனுக்குப் பஞ்சப்படி 18 ரூபாய்; ஆனால் பஞ்சமே தெரியாத கலெக்டருக்குப் பஞ்சப்படி 200 ரூபாய்க்கு மேல், இந்த நிலையை மாற்ற முடியுமா?...... சம்பளத் திட்டம் ஒழுங்குபட்டாலும் அவர்களை அட்டைகளாக உறிஞ்சுவதற்கு வியாபாரிகள் இருந்து கொண்டே இருப்பார்கள்[13] என்னும் டாக்டர் மு. வ. அவர்களின் கூற்றால் 1948-இல் நிலவிய சூழலைப் புரிந்து கொள்ள முடிகிறது. இன்றைக்கும் சம்பளம் வாங்கு வோரை உறிஞ்சும் அட்டைகளாகவே வியாபாரிகள் இருக்கிறார் கள் என்பது சுட்டத்தக்கது. 'விக்டோரியா நூலகத்திற்குச் சென்றேன். ஏராளமான புதிய நூல்களைப் பார்த்தேன். தமிழ் ஒரு மூலையில் ஒடுங்கிப் போயிருந்தது. எங்கே திரும்பி னாலும் ஆங்கிலமயம்... ஆங்கிலப் பேரகராதியைப் பார்க்கும்

12. இல்லறநெறி, பக். 458
13. அன்னைக்கு, பக். 52-53

போது தமிழில் இப்படி வராதா என்று என் உள்ளம் படபடக்கிறது.[14] என்கிறார் கவியோகி. 1932-இல் இருந்த நிலையை இக்கடிதம் நமக்கு உணர்த்துகிறது.

## நல்லதை விரும்பும் தன்மை

கடித இலக்கியங்களில் மு. வ. அவர்களின் நான்கு நூல்களும் கற்பனைக் கடிதங்களை உள்ளடக்கியவை எனினும் நல்லதை விரும்பும் தன்மை அவற்றில் பரவலாகக் காணப்படுகிறது. 'இவ்விலக்கியக் குடும்பத்தில் பங்கேற்றவர்கள் தாம் கற்பனை மாந்தரே தவிர, அவர்கள் அநுபவிக்கும் இன்ப துன்பங்களெல்லாம் நாம் அனுபவிப்பவை, நாம் உணர்ந்தவை எனவே, அவர்கள் உணர்த்தும் உண்மைகளும் வெறும் கற்பனைகளாக அமையாமல் நிகழ்கால வாழ்வின் நெளிவு சுளிவுகளை உணர்த்தும் அரிய உண்மைகளாகவே காணப்படுகின்றன.[15] என்பதும் உணரத்தக்கது.

நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் மு. வ. நல்ல வாழ்க்கை யாது என்பதையும் விளக்குகிறார்.

"புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் என்றும் சிறப்பு இல்லை, திறமை இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்து கொள்வார். புதிய, ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக் கொடுப்பார். புதிய வியாபாரி நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். இந்தப் புதுமையை எள்ளி நகையாடுவது போல ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்றாகத் தெரியும் 'புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்' என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும் கருத்து உடையதுதான். அதற்கு மாறாக, எவ்வளவு பழமை ஆன போதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை என்று சொல்வேன்.[16]

இத்தகைய வாழ்க்கையில் நெருக்கடிகள் நேர்வது இயற்கை. அத்தகைய நேரத்தில் அறிவும் திறனும் பயன்பட வேண்டும் என்பது மு. வ. வின் கருத்தாகும். ஓரிரு எடுத்துக்காட்டுகள் மூலம் இக்கருத்தை மிகத் தெளிவாக்குகிறார்.

14. கவியோகியின் கடிதங்கள், பக்.6
15. மு. வ. வின் இலக்கியங்கள், பக். 86-87
16. தங்கைக்கு, பக். 8

தேர்வுக்குப் படிக்கும் மாணவன், தேர்வு நெருக்கடியில் பாட நூல்கள் முதன்மையானவை என்று உணர்ந்து மற்றவற்றைக் கைவிடத் துணியாவிட்டால் என்ன பயன்? கலையில் ஈடுபட்ட இளைஞன் தன் கலைத்துறைக்கு உரியவற்றைப் போற்றுவதோடு, நெருக்கடியில் மற்றவற்றை மறக்காவிட்டால் பயன் என்ன?...' 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்று நாட்டுப்புறத்துப் பழமொழி ஒன்று உள்ளது. இதை நினைத்தும் அதை நினைத்தும் நெருக்கடி நேரத்தில் தயங்குவதால் பயன் இல்லை; கூழ்தான் முக்கியம். மீசையைப் பிறகு ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம் என்று அப்போதைக்கு ஒன்றை ஒதுக்கத் துணிய வேண்டும்''[17] என்பது மு. வ. வின் விளக்கம். அறிவுரை கூறும் போக்கிலமைந்த இவர் தம் சில கருத்துக்கள் உணரத்தக்கவை.

'எதன் பொருட்டும் உடல்நலம் கெடுவதற்கு இடம் தரக் கூடாது. உடல் நலம் இருந்தால் தையல் கடை வைத்தும் பிழைத்துக் கொள்ள முடியும் — ஆகவே உடல் நலமும் முதன்மையானது'.[18]

இன்றைய நிலையில் கல்விப் பட்டங்களைப் பெறுவதைக் காட்டிலும் பொருள் சேர்ப்பது மிக இன்றியமையாதது என்பது இவர்தம் அறிவுரையாகக் காண முடிகிறது.

'இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாத பொருள் சேர்த்துக் கொண்டு திரும்பு; அதை முதலாகக் கொண்டு வாழலாம். பிஎச்.டி பட்டத்தைவிட முப்பது நாற்பதாயிரம் பயன் மிகுந்தது'[19] இது மட்டுமல்ல, நல்லவனாக வாழ்ந்தால் மட்டும் போதாது; வல்லவனாகவும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் மு. வ. அறிவுறுத்துகிறார்.

## நாட்டுணர்வும் மொழியுணர்வும்

பொதுநிலையில், நாடு, மொழி, சமயம், தொடர்பான உணர்வுகளை இக்கடித இலக்கியங்களில் காண முடிகிறது.

'தமிழ்நாடு உயர வேண்டும் என்றால் இங்குள்ள மலையும் காடும்நிலமும், நீரும் உயர்தல் அல்ல; இங்கு வாழும் மக்கள் யாவரும் உயர்தல் என்று கருது'[20]

17. ,, ,, பக். 76
18. மு வ. வின் கடிதங்கள், பக். 43
19. மேற்படி, பக். 51
20. அன்னைக்கு, பக். 15

இந்த நாடு வறுமையில் உழல்வதற்கு இயல்பாகவே மக்கள் ஈடுபாடு கொண்டுள்ள கலை உணர்வுதான் காரணம் என்கிறார் மு. வ.

> 'தமிழ்நாடே! எப்போதும் உன்னுடைய கலையும் உணர்வும், அவற்றை அளவுபடுத்திக்கொண்டு அறிவியலைப் பெருக்கு, அறிவைப் பெருக்கு'[21]

என நாட்டுணர்வுடன் அறிவுறுத்துகிறார்.

தனி ஒரு மனிதன் உயர்வதில் பெருமையில்லை. நாடே உயர்ந்தால்தான் சிறப்பு.

> 'உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரிது என்று உணர். உன் உயர்வை விட நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர். உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும் போது உன் நலம் உயர்வு மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு'[22]

என்று மு. வ. உணர்த்துகிறார்.

மொழிப் பற்றில் தமிழர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர். இக் கடித இலக்கியங்கள் பலவற்றிலும் தமிழ் மொழிப் ற்று தெளிவாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழிக்குரிய இயல்பு எத்துணை அளவுக்குக் கெட்டழிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறார் அண்ணாதுரை. தம்பிக்குத் தான் எழுதிய ஒரு கடிதத்தில் அந்நிலைக்குரிய காரணத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

> 'ஆரிய மதக் கற்பனைகளுக்கு நிரம்ப இடமளித்து விட்டதால், தமிழ் மொழிக்குரிய இயல்பு எத்துணை கெட்டொழிந்தது என்பதனை அறிய, வேறெந்தத் துறையினையும் விட, 'உவமை' கூறுகிறோமே அந்தத் துறையினைப் பார்த்தால் மிக மிக விளக்கமாகத் தெரிந்துவிடும்.
>
> சனியனே! உயிரை வாங்காதே
> எமன் போல வந்து தொலைத்தான்.
> பெரிய அரிச்சந்திரன்தான், வாயை மூடடா
> துர்வாசர் போலச் சீறுகிறான்.
> போதும். போய்ப்படுத்துத் தூங்கடா, அனுமாரே!

---

21. அன்னைக்கு. பக். 69
22. தம்பிக்கு, பக், 55

துரோபதை போலக் கதறுகிறாள்.
ஆசாமி அர்ஜுனன் தான்!
அவள் ரம்பையே தான்!
அமிர்தம் போல இனிப்பான பானம்
குபேரபட்டினம் போலக் காட்சி அளித்தது

நிரம்பப் பேசுகிறோம். இதுபோல மேடைகளிலும், வீடுகளிலும், பழமை விரும்பிகள் மட்டுமல்ல, நாம்கூட.

கொல்லி மலைப் பாவை என்று கூற நமக்குத் தோன்றுவதில்லை; கூறிடின் புரிந்து கொள்வோரும் புலவர் அவையிலே மட்டுமே கிடைப்பர்; மக்கள் மன்றம் மறந்தே விட்டது.''[32]

'எனவே தான், தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும் 'ஓசை நயம்' போன்ற எந்த எழிலையும் இழந்துவிடக் கூடாது என்று கூறிவருகிறோம்' அதே போது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே 'இட்டுக் கட்டியும்' 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு ஏற்பட்டு விடும்படியும் செய்துவிடக் கூடாது என்கிறோம்.[24]

எனவும் அண்ணாதுரை குறிப்பிடுகிறார்.

'தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? ஆனால் அவர்களை விடத் தாய்மொழி பற்றுக்கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால், சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு சுரந்து கிடக்கிறது என்றே உணர வேண்டும்.'[25]

என ஆணித்தரமாகக் கூறுகிறார். மு.வ. இந்த நாட்டில் இன்று செய்யக்கூடிய முதல் கடமையையும் மு. வ. குறிப்பிடுகிறார்.

'புலியும் கரடியும் திரியலாம்; நாயும் நரியும் ஊளையிடலாம். பசு மட்டும் வாலாட்டக் கூடாதாம்; எது கடமை, தம்பி? ஏன் செய்யவில்லை, தம்பி?'[26]

---

23. தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், (பகுதி 2) பக். 194
24. மேற்படி பக். 195
25. தம்பிக்கு, பக். 23
26. தம்பிக்கு, பக். 24

தாய்மொழிப் பற்று கொண்டு, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் சிலரைத் தூற்றுபவர்க்குப் பதில் தருவதாக இக் கடிதம் அமைகிறது.

> சில மாறுதல்களைச் செய்யும்போது, சில பேர் ''செருப்புக்கு ஏற்றபடி காலை வெட்டுகிறார்கள், குல்லாவுக்கு ஏற்றபடித் தலையைச் சீவுகிறார்கள்'' என்று கூச்சல் போடுகிறார்கள். உண்மையில் எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் அப்படியான சீவுதல் வேலை எதையும் செய்யவில்லை, செருப்புப் போட முடியாதபடி நீண்டு வளர்ந்து கிடக்கும் சிலரின் கால் நகங்களைத்தான் சிறிதே வெட்டுகிறார்கள்; எந்தக் குல்லாவுக்கும் அடங்காமல் காலாகாலமாக வளர்ந்து சடைத்துக் கிடக்கும் சிலபேரின் பன்றி முடியைத்தான் கொஞ்சம் மழுக்குகிறார்கள்.[27]

பாரதியாரின் தாய் நாட்டுப்பற்றை வெளிக்காட்டும் நிலையில் அவர் பரலி சு. நெல்லையப்பருக்கு 1915-இல் எழுதிய கடிதம் அமைந்துள்ளது.

> தம்பி-தமிழ்நாடு வாழ்க என்றெழுது
> தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.
> தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப்பள்ளிக்
> கூடங்கள் மலிக என்றெழுது[28]

'சையன்ஸ், புத்தகத்திலே இருக்கிறது என்ற மூடபக்தி ஒழிந்தால் !ஒழிய நம்முடைய கல்வி முக்கியமாகத் தமிழ் உருப்படப் போவது கிடையாது. கல்யாணம் பண்ண விரும்புகிற ஒருவனுக்கு, பெண் பாடசாலை ஒன்றின் ஆஜர் அட்டவணையைக் கொடுத்துப் புரட்டிப்பார் என்று சொன்ன கணக்குதான். தமிழில் என்ன ஸார் இருக்கிறது என்று எளிதில் கேட்டுவிடுவார்கள். சையன்ஸ் இருக்கிறதா என்றும் கேட்பார்களாம் ஆனால் சையன்ஸ் இங்கிலீஷிலா இருக்கிறது? இல்லை; அஸ்ட்ரானமி வானத்தில் இருக்கிறது. ஜியாலஜி பூமிக்குள் இருக்கிறது; பாட்டனி காட்டில் இருக்கிறது; 'Physiology' நம் தேகத்தில் இருக்கிறது; ஸைக்காலஜி நம் உள்ளத்தில் இருக்கிறது. இங்லிஷ் பாஷையில் எப்படி இருக்கும் என்று அந்த படோடோபிகளைக் கேளுங்கள்,[29]

என மிகவும் ஆத்திரத்துடனும் ஆணித்தரமாகவும் தன் மொழிப் பற்றை வெளியிடுகிறார் டி. கே. சி - ஒரு கடிதத்தில், பல்வேறு

27. களத்திலே கடிதங்கள் பக். 23
28. பாரதியின் கடிதங்கள் பக். 59
29. ரசிகமணி கடிதங்கள், பக். 47

தலைவர்களுக்குக் கடிதம் எழுதும் பான்மையில் மொழிப் பிரச்சனையை அலசுகிறார் டாக்டர் வ. சுப. மாணிக்கம்.

"ஒரு நாடு என்பது முக்கியமா? ஒரு மொழி காண்பது முக்கியமா? உள்ளத்து முழுதும் சிந்தியுங்கள்.

இந்திய நாட்டோடு இந்தி மொழியை இரண்டற அத்து
விதமாக இணைக்காதீர்கள், இணைக்காதீர்கள் என்று
தொழுது வேண்டுகிறேன். இணைக்க முயல்வார்க்கு
இசையாதீர்கள், இசையாதீர்கள் என்று அழுத்தமாக
அறிவுறுத்துகின்றேன்"[30]

என்பது அவர்தம் வேண்டுகோள். 'தலைவர்களுக்கு' என்னும் தம் நூல் முழுவதும் இந்தி மொழித் திணிப்பினை எதிர்க்கிறார் ஆசிரியர்.

மறைமலையடிகளார் தம் கடிதங்கள் நல்ல தமிழ்நடையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்தம் குறிப்பே அவர் எழுதும் கடிதங்களின் தன்மையையும் பயனையும் தெரிவிக்கிறது.

"யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும்
சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக
உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப்
பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்."[31]

## வெளியீட்டு நிலை

தாம் உணர்ந்தவற்றை உணர்ந்தவாறும் அல்லது படிப்போர்க்கு உணர்த்துமாறும் எழுதப்பெற்ற கடித இலக்கியங்களில் வெளியீட்டு நிலையில் அக் கடித இலக்கியப் படைப்பாளிகள் சிறக்கின்றனர் எனலாம். வெறுமனே எழுதப்படும் கடிதங்களைக் காட்டிலும் உணர்ச்சியுடனும் நயத்துடனும் எழுதப் பெற்றதால் தான் அவை நிலைத்து நிற்கின்றன எனலாம். உரைநடையிலே இக் கடிதங்கள் அமைந்திருப்பினும் உவமைகளை அமைத்து, தம் கருத்தை – எண்ணத்தை—சிறப்பாகப் புலப்படுத்துகின்றனர் கடித இலக்கியப் படைப்பாளிகள்

ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் கடிதங்களில் இத்தகைய உவமைகள் பல இடம்பெற்று விளங்குகின்றன. எடுத்துக்காட்

30. தலைவர்களுக்கு, பக். 89
31. மறைமலையடிகள் கடிதங்கள், பக். 1

டாக, அவருக்கு உடல் நலமில்லாதபோது பிறர் உண்பதைத் தன்னால் உண்ண முடியவில்லையே என்பதைப் பின்வருமாறு தெரிவிக்கிறார் ஒரு கடிதத்தில்:

> "மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால் நமக்கு என்ன? சாம்பார், ரஸம், மோர்க்குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும். அது நம்மை பாதிப்பானேன்? எருமை கோரையை லவக்கு லவக்கு என்று தின்று குதக்கிறது. அதைப் பார்த்து. 'ஐயோ கோரையைத் தின்ன முடியவில்லையே' என்று ஒப்பாரி வைப்பார் உண்டோ?"

இன்னொரு கடிதத்தில், ஆண் பெண் ஆகியோர்க்கு உள்ள உறவு குறித்தும் டி. கே சி. பேசுவதாவது.

> 'கரும்பும் நாணலும் ஒன்றுதான். பாட்டனிபடி ஓர் இனந்தான். நாணலை என்ன பிழி பிழிஞ்சால் என்ன? சாறு வந்துவிடுமா? வந்தாலும் எவ்வளவுதான் வந்துவிடும்? காய்ச்சிச் சர்க்கரை எடுப்பதோ முடியவே முடியாது; ஆனால் கரும்பு என்றால் வேறு விஷயம். ஒரு கரும்பை ஆலையில் கொடுத்துவிட்டால் ஆலை பிழிந்து கொடுக்கிற சாறு ஓர் உழக்கு; அதாவது கால் பக்காப் படி.
>
> நாணலுக்கும் கரும்புக்கும் உள்ள சம்பந்தம்தான் ஆடவருக்கும் பெண்டிர்க்கும்—உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில்' [32]

இனி, உரிமைகளை நிறைவேற்றுவதில் சிறுபான்மை பெரும்பான்மை பார்த்து நிறைவேற்றக்கூடாது என்ற கருத்தை வெளியிடும்போது,

> "ஓர் உண்டிச் சாலையில் பத்துப்பேர் உண்ணுகின்றார்கள். ஒன்பது பேர் புலாலுண்ணிகள் என்பதற்காக உண்ணாத ஒருவன் இலையிலும் புலால் படைக்கலாமா? உண் என்று திணிக்கலாமா? அது பெரும்பான்மை பார்த்துக் கட்டாயப்படுத்துதற்கு உரிய காரியமா" [33]

என்று தெளிவாகக் கேட்கிறார் டாக்டர் வ. சுப. மாணிக்கம்.

---

32. ரசிகமணி கடிதங்கள், பக். 68
33. தலைவர்களுக்கு, பக். 19

இவ்வாறே, எல்லாக் கடித இலக்கியங்களிலும் வெளியீட்டு நிலை சிறந்து விளங்குகிறது எனலாம். தாம் கூற வேண்டிய வற்றின் அடிப்படையில் அவர்தம் வெளியீட்டு நிலை அமை கிறது. தன் காதலிக்கு எழுதும் காதல் கடிதங்களில் தன் எண்ணப் புலப்பாட்டினை ஆசிரியர் வெளிப்படுத்துவதைக் காண்போம்.

''பளிங்கு நதிகளில் படகு வீடுகளாக மிதந்து திரிகிற பவள மல்லிகைகளை உனக்காகவே நான் வாங்கி வருகிறேன்.[84]

''அன்று நீ கடலோர மணல் விரிப்பில் கால்பதிந்து நடந்த போது உன் கால் பதிந்த நிலவுத் தீவுகளில் நிறைந்து நின்றது கடல் நீரா இல்லை பெண்ணே! எனது கண்ணீரே நிறைந்து நின்றது''[85]

## கடித இலக்கிய வகைப்பாடு

தமிழில் இதுவரையிலும் வெளிவந்துள்ள கடித இலக்கியங் களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) சமூக வாழ்வியல் பற்றியவை
ஆ) அறிவியல் பற்றியவை
இ) சமயம் பற்றியவை
ஈ) காதல் பற்றியன
உ) பொதுப்பொருள் பற்றியன.

தூதுப் பொருண்மை உணர்த்தும் நிலையில் சீட்டுக் கவியாக விளங்கி, இருபதாம் நூற்றாண்டில் தமிழில் இலக்கியமாகத் திகழும் கடித இலக்கியம், கடிதத்தை எழுதுவோரின் மன உணர் வினையும், உணர்ந்த உணர்ச்சியினையும், படிப்போருக்குத் தெரி விக்கும் நிலையில் அமைகின்றது. கடிதம் எழுதப்பெற்ற கால கட்டத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளையும் மக்களின் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் போன்றவற்றையும் அறிய இக் கடித இலக்கியம் துணை புரிகிறது.

சிறையிலிருந்தபோது ஜவாஹர்லால் நேரு தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் இலக்கியப் படைப்புகளாகப் போற்றப்படுகின்றன. செஸ்டர்ஃபீல்டு தன் மகனுக்கு வழங்கிய அறிவுரைகள் பொதுவாக எல்லாப் பிள்ளைகளுக்கும் ஏற்புடையன வாகக் காணக்கிடக்கின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன்

---

84. காதல் கடிதங்கள் பக். 10
85. மேற்படி பக். 26

போன்ற மொழிகளில் கடித இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சி பிரமிப்பூட்டுகிறது. தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் அத்தகைய வளர்ச்சியைக் காண முடியவில்லை.

தமிழில் உரைநடை வளர்ச்சியுறத் தொடங்கிய பின்னரே, குறிப்பாக நாவல் வளம்பெறத் துவங்கிய காலகட்டத்தில் இக் கடித இலக்கியம் தமிழில் தலைகாட்டலாயிற்று. டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தம்முடைய நாவல்கள் சிலவற்றில் கடிதத்தைப் புகுத்தியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தமையில் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தம்முடைய கொள்கைகளை எடுத்துரைக்கும் போக்கில் கடித இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவரா கின்றனர். அண்ணாதுரை, மு. கருணாநிதி, கண்ணதாசன் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

## கடித இலக்கியங்கள்

1. மனிதப் பண்பாட்டினைப் புலப்படுத்துதல்
2. படைப்பாளியின் எண்ணங்களைக் காரண காரியங் களுடன் வெளிப்படுத்துதல்
3. கடிதம் எழுதப்பெற்ற காலச் சமுதாய, நாட்டு, மொழி நிலைகளை எடுத்துக்காட்டுதல்
4. கடிதம் எழும் காலத்தில் வாழும் மக்கள்தம் மொழி யுணர்வு, அரசியல்/சமூக விழிப்புணர்ச்சி, ஆட்சியாளர் தன்மை ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டுதல்.
5. சமுதாயத்தில் காணும் குற்றங் குறைகள், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் களையச் செய்தல்.
6. கடிதம் படைப்போர் தம் இலக்கிய ஈடுபாட்டினை வெளிக் காட்டுதல்
7. அறிவியல், சமயம் சார்ந்த சிறந்த கருத்துகளை எளிய முறையில் அனைவருக்கும் விளங்கும் நிலையில் படைத் தளித்தல்.
8. பயண அநுபவங்களைக் கடிதங்கள் வாயிலாக உணர்த் துதல்

ஆகியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிலங்குகின்றன,

## துணைநூற் பட்டியல்

1. இலக்கியக் கோவை— ந. வீ. செயராமன், இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.

2. கலைக்களஞ்சியம்— தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை,

3. கோகிலாம்பாள் கடிதங்கள்— மறைமலையடிகள், கழகம் சென்னை, 1982.

4. நல்லுரைக்கோவை— உ. வே. சாமிநாத ஐயர், சென்னை (ஏழாம் பதிப்பு) 1958

5. மு. வ. கடித இலக்கியம்— கண்ணோட்டம் முத்து சண்முகம், கலா வெளியீடு, சென்னை, 1979

6. மு. வ. வின் இலக்கியங்கள்— இரா. தண்டாயுதம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.

## பின்னிணைப்பு

**அச்சில் வெளியான கடித இலக்கியங்கள்**

1. அன்னைக்கு டாக்டர் மு. வரதராசன் தாயக வெளியீடு, சென்னை (1973)
2. அறிஞர் அறவாழி, க. த. திருநாவுக்கரசு, சென்னை, 1978.
3. இல்லற நெறி, ந. சுப்பு ரெட்டியார், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5
4. கருமுத்து தியாகராச செட்டியார் கடிதங்கள்
5. கவியோகியின் கடிதங்கள், சுத்தானந்த பாரதியார், சுத்தானந்த நூலகம், சென்னை (1972)
6. களத்திலே கடிதங்கள் சாலை—சாலினி, சாலை, பப்ளிகேஷன்ஸ், புது தில்லி (1979)
7. காதல் கடிதங்கள், வலம்புரி ஜான், கவிதா பானு வெளியீடு, சென்னை (இரண்டாம் பதிப்பு) 1982,
8. சுவையான காதல் கடிதங்கள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1981
9. செஸ்டர் ஃபீல்டின் கடிதங்கள் (மொழி)கா. அப்பாதுரைப் பிள்ளை,ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் சென்னை, (இரண்டாம் பதிப்பு) 1954.

10. டாக்டர் மு. வ. வின் கடிதங்கள் 1946-1974 (பதி) முத்துச் சண்முகன், இரா. மோகன், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை 1977

11. டால்ஸ்டாய் கடிதங்கள், (மொழி) மு. இராசமாணிக்கம், தொல்காப்பியர் நூலகம், சென்னை, 1961.

12. தங்கைக்கு மு. வரதராசன் தாயக வெளியீடு, சென்னை (எட்டாம் பதிப்பு) 19›6.

13. தம்பிக்கு டாக்டர் மு. வரதராசன், தாயக வெளியீடு, சென்னை-1972,

14. தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், சி. என். அண்ணா துரை (9 பகுதிகள்) பாரி நிலையம் சென்னை.

15. தமிழரிடையே அன்புப் போர், சி. ஆர். பழநியாண்டி, கே. வி. வீரராகவன், நியு இந்தியா புக் ஹவுஸ், இராமச் சந்திரபுரம் 1947.

16. தலைவர்களுக்கு, வ. சுப, மாணிக்கம், விற்பனை உரிமை, பாரி நிலையம். சென்னை-1965.

17. நண்பர்க்கு, மு. வரதராசன், தாயக வெளியீடு, சென்னை (ஏழாம் பதிப்பு) 1967.

18. நீங்காத நினைவு (முதல் தொகுதி)லியோ. இராமலிங்கம், கலையகம் வெளியீடு, தஞ்சாவூர் 1973.

19. பாரதியின் கடிதங்கள், ரா. அ. பத்மநாபன், வானதி பதிப்பகம், சென்னை 1982.

20. பிளேட்டோவின் கடிதங்கள், (மொழி) வெ. சாமிநாத சர்மா, பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை 1965.

21. மறைமலையடிகளார் கடிதங்கள், அன்பு பழம் நீ, நீலாம், பிகை நிலைய வெளியீடு, சென்னை, 1957.

22. முத்தி நெறி ந. சுப்பு ரெட்டியார், செல்வன் ஆர். வாசு தேவன் பப்ளிகேஷன்ஸ், சென்னை-40, 1982.

23. மு. வ. வின் கடிதங்கள் ஈ. ச. விசுவநாதன், இரவி பதிப் பகம், சென்னை (1976).

24. ரசிகமணி கடிதங்கள், எஸ். மகராஜன் டி. கே.சி. வட்டத் தொட்டி வெளியீடு, சென்னை-1979,

25. ரஸிகமணி டி. கே சி. யின் கடிதங்கள், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பொதிகைமலைப் பதிப்பு, தென்காசி, 1961,

26. வீரத் தமிழருக்கு சுத்தானந்த பாரதியார், நியூ இந்தியா புக் ஹவுஸ், இராமச்சந்திரபுரம், (இரண்டாம் பதிப்பு) 1963.

27. ஜவஹர்லாவ் நேருவின் கடிதங்கள், (மொழி) சி. ரா. வேங்கடராமன் கலைமகள் காரியாலயம், சென்னை-1941.

28. ஸ்ரீகாசி வழித்துணை விளக்கம், சிவகளை மு. சுப்பையா, பொம்மபுர ஆதீனம், மயிலம் 1965.

29. ஹோரேஸ் வால்போல் கடிதங்கள், (மொழி) கா. அப்பாத்துரைப்பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,சென்னை, 1949.

30. வரலாறு கண்ட கடிதங்கள், வெ. சாமிநாத சர்மா, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1949.

# 7

# சிறு கதை

—சோ. சிவபாத சுந்தரம்

இன்றைய தமிழ் இலக்கியத்தில் சிறுகதை ஒரு சிறப்பிடம் வகிக்கிறது. நூறு ஆண்டு நிறைவை நோக்கிச் செல்லும் தமிழ் நாவல் இலக்கியத்தைவிட, வயதில் மிகவும் குறைந்த சிறுகதை ஓர் இலக்கிய வடிவமாக வளர்ந்திருப்பதோடு, தமிழ் சஞ்சிகைத் துறைக்கு ஓர் இன்றியமையாத அங்கமாக விளங்குகிறது. தமிழில் சிறுகதை என்ற பொருளைப் பற்றிச் சிந்திக்கும்போது, வரலாற்று முறையில், பொதுவாக, மணிக்கொடி காலம் என்ற ஓர் இலக்கியப் பருவம் நினைவில் வரும். புதுமைப் பித்தன், கு. ப, ராஜ கோபாலன், பிச்சமூர்த்தி முதலிய சிறுகதைச் சிற்பிகள் பலர், "மணிக்கொடி குழு" என்று இனம் காணப்படும் படைப்பாளர் வரிசையில் அரிய சாதனைகள் நிகழ்த்தியிருப்பது இந்த நினைவுக்குக் காரணமாகும். ஆயினும், தமிழ்ச் சிறுகதை மணிக் கொடி காலத்தில்தான் தோற்றமெடுத்த தென்றோ, வடிவ நிறைவு பெற்றதென்றோ சொல்லிவிட முடியாது. ஆனால், மணிக்கொடி எழுத்தாளர்களில் பலர் படைத்துத்தந்த சிறு கதைகள், இன்றைய இலக்கிய ஆராய்ச்சிக்கு ஓர் ஆதாரமாக அமைந்து, சிறுகதைத் துறையின் இலக்கணத்தை முறையாக வரை யறை செய்ய உதவுகின்றன. அந்தக் காலக் கட்டத்தில் சிறுகதை செழிப்பாக வளர்ச்சியடைந்ததற்கு அடிக்கோலி வைத்தவர், அதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே சிறுகதை எழுதத் தொடங்கிய

தேசியவாதி, வ. வே. சு. ஐயா என்ற வரகனேரி வேங்கட சுப்பிர மணிய ஐயர். அவர் காலத்துக்கு முன்பும் தமிழிலே சிறுகதைகள் எழுதப்பட்டிருந்தன என்றாலும், மிகவும் வளர்ச்சியுற்றது ஒரு தனிமரபை ஏற்படுத்திக்கொண்ட மேனாட்டு இலக்கிய வடிவத்தின் பாணியிலேயே திட்டமிட்டு எழுதியவர் வ வே. சு. ஐயர் என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

1879ம் ஆண்டிலே முதல் தமிழ் நாவல் தோன்றிய பிறகு, அதைப் போன்ற நீண்ட உரைநடைக் கதைகளாகிய நாவல்களைப் படைப்பதிலேதான் இலக்கியப் பணி மேற்கொண்ட அந்நாளைய எழுத்தாளர்கள் கவனம் செலுத்தினார்கள். நாவலிலிருந்து வேறு பட்டதோர் இனம் என்று பிரித்தறிந்து கொள்ளக்கூடிய வடிவத்தைக் கொண்ட சிறுகதை எழுதும் முயற்சி இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் மேற்கொள்ளப்பட்டது. அந்த நாட்களில் வெளிவந்த விவேக சிந்தாமணி போன்ற இலக்கிய ஏடுகளில் சில சிறுகதைகளைக் காணமுடிகிறது. ஆயினும் இத் தகைய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றதாகத்தெரியவில்லை.

1840ம் ஆண்டையடுத்த காலப் பகுதியில் அமெரிக்காவில் Nathaniel Hawthorne வெளியிட்ட Twice Told Tales, அதாவது மீண்டும் சொல்லப்பட்ட கதைகள் என்ற தொகுப்பைத் திறனாய்வு செய்த, மற்றொரு சிறுகதை யாசிரியராகிய Edgar allan Poe சிறுகதையின் இலக்கணத்தை வரையறுக்க முயன்றார். அவரும் அவரைத் தொடர்ந்து Branda Mathews என்ற விமர்ச கரும், அன்றுவரை வளர்ச்சியடைந்திருந்த ஆங்கிலச் சிறுகதையின் இலக்கணத்தை விளக்க முயன்றார்கள். இத்திறனாய்வுகள் நமது நாட்டுக்கும் கிடைத்திருந்தபோதும், இவைகளைப் படித்துத்தான் வ. வே. சு. ஐயர் தமிழில் சிறுகதை படைத்தார் என்று சொல் வதற்கில்லை. நாவலைப்போல் சிறுகதையும் மேனாட்டு இலக்கிய மரபிலிருந்து தமிழிலும் எழுதப்பட்டது என்ற முறையில் இன்றைய தமிழ் சிறுகதைக்கு வ. வே. சு. ஐயர் உருப்படியான வடிவம் கொடுத்தார் என்றே கொள்ளவேண்டும்.

அமெரிக்காவில் பிறந்து, பிரான்சிலும் ரஷ்யாவிலும் படர்ந்து, அயர்லாந்தில் செழித்து வளர்ந்து, ஆங்கில மொழி இலக்கியத்தில் ஊடுருவி நிற்கும் சிறுகதை, தமிழில் இன்றும் அன்றும் படைப்பாளிகளுக்கு ஒரு கைவந்த கலையாக அமைந்ததில்

வியப்பில்லை. ஏனெனில், பல்லாயிரமாண்டு காலமாக வாய் மொழி மரபில் தமிழில் வழங்கி வந்தது கதை. கதை சொல்வதும் கதை கேட்பதும் அந்த நாட்டு மக்களுக்கும் எக்காலத்திலும் ஒரு நிரந்தரப் பொழுது போக்காக இருந்தது. தமிழ் மக்கள் தங்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே பாட்டிகளிடம் கதை கேட்டு வளர்ந்தவர்கள் நாட்டை ஆண்ட மன்னர்கள்கூட கதை சொல்வதற்கென்றே புலவர்களை நியமித்திருந்தார்கள். மிகப் பழைய காலத்து இந்த முறையைத் தொல்காப்பியரே எடுத்துச் சொல்லியிருப்பது., அவர் காலத்துக்கு முன்பே வழக்கிலிருந்த மர பாகக் காணலாம். தொல்காப்பியம் செய்யுளியலில் வரும் ''பாட்டிடை வைத்த குறிப்பினாலும்'' என்ற சூத்திரத்தில்,

''பொருண் மரபில்லாப் பொய்ம் மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்''

என்ற உரை வகைகள் இக்காலப் புனைகதைகளாகிய நாவல் சிறு கதைக்குப் பொருந்தும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். அன்றியும் இதற்கு 'அடுத்த சூத்திரத்தில், ''ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே'' என்று விளக்குவதால், ''பொருண்மரபில்லாப் பொய்ம் மொழியும், பொருளொடு புணர்ந்த நகை மொழியும்'' செவிலி அல்லது பாட்டி சொல்லும் புனைகதை மரபெனத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுவதே, அவருக்கு முன்னிருந்த மரபு தொடர்ந்து வந்ததென்பதை விளக்குகிறது. தமிழ்நாட்டில் அச்சுப்பொறி உபயோகத்துக்கு வந்ததும், கடந்த பத்தொன்பதாம் நூற் றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இவ்வகையான வாய்மொழிக் கதைகள் அச்சிடப்பட்டு, பலர் படிக்கவும் படிக்க மற்றவர்கள் கேட்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வகையில் முதன் முதலில் அச்சில் வெளியானது தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்த பஞ்ச தந்திரக் கதைகள் இந்தக் கதைகள் வேறு மொழியிலிருந்து பெயர்த் தெழுதப்பட்டிருந்த போதிலும், கதைகளிலே பிராணிகளே நடமாடியதால் நாட்டின் எந்தப் பகுதி மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் கதையம்சம் கொண்டனவாயிருந்தன. இதையடுத்து, தமிழ் மக்கள் இனம் கண்டுகொள்ளக்கூடிய இடப் பெயர்கள், மக்கட்பெயர்களடங்கிய பூலோக விநோதக் கதைகள், திராவிட பாவகாலக் கதைகள் போன்ற தொகுப்புகள், சென்ற நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்துவிட்டன. குறுகிய கால அளவுக்குள் படித்து முடிக்கக் கூடிய முழுக் கதைகளை அடக்கிய இத்தகைய தொகுப்பு நூல்கள் வெளிவந்தபோது தமிழிலக்

கியத்தில் புதிதாகக் கற்பனை செய்து கதை எழுதும் ஆர்வம் சில எழுத்தாளர்களுக்கு ஏற்படக் காரணமாகவும், உந்துதலாகவும் அன்று நடமாடிய விவேக சிந்தாமணி முதலிய இலக்கிய ஏடுகள் களம் அமைத்துக் கொடுத்தன.

சிறுகதைக் கலையைப் பற்றி இன்று எல்லா மொழிகளிலும் திறனாய்வு செய்யப்படுகின்றது. சஞ்சிகைகள் மலிந்த இன்றைய நாட்களில். சிறுகதையை ஒரு கலை வடிவமாகக் கருத வேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், ஆங்கில இலக்கிய வரலாற்றில் சிறுகதைக்கு தனி இடம் கொடுக்கப்படுவதில்லை. ஆங்கில மொழியின் இலக்கிய வரலாற்றை எழுதியவர்கள் நாடகம், கவிதை, நாவல் அல்லது புனைகதை என்ற பாகுபாட்டை மட்டுமே மேற்கொள்ளுகின்றனர். நாவல் வேறு சிறுகதை வேறு என்ற வகையில் வரலாற்றாசிரியர்கள் பிரித்துக் காட்டுவதில்லை. தவிர, சிறுகதையை ஒரு தனி இலக்கிய வடிவமாகக் கருதி அதற்குச் சிறப்பிடம் கொடுப்பதுமில்லை. அமெரிக்கா, பிரான்ஸ் ரஷ்யா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே இந்த இலக்கிய வடிவத்துக்கு சிறப்பிடம் கிடைக்கிறது. இதிலும், அமெரிக்காவிலே தான் சிறுகதை பற்றிய ஆராய்ச்சி அதிகமாக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அங்குள்ளவர்கள் தொடக்கிவித்த இலக்கியக் கொள்கையின் அடிப்படையிலேதான் மற்றவர்களும் காலத்துக்குக் காலம் கொள்கை வகுக்க முற்பட்டனர். நாவலைப் பற்றியும் கவிதை, நாடகம் போன்ற துறைகளைப் பற்றியும் ஆங்கில மொழியில் நூற்றுக்கணக்கான நூல்கள், ஒவ்வொன்றும் பல பாகங்கள் அடங்கியவை, வெளிவந்துள்ளன. ஆயினும், சிறுகதை தோன்றி இன்று வரையிலான ஒரு நூறு ஆண்டு காலத்தில் ஆங்கில மொழியில் அந்த இலக்கிய மரபைப் பற்றி வெளியான ஆராய்ச்சி நூல்கள் இருபதுகூட இல்லை. அமெரிக்காவில் மட்டும் பல சஞ்சிகைகளிலும், பல்கலைக் கழகக் கருத்தரங்குகளிலும் சிறுகதை பற்றிய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆங்கிலத்தில் சிறுகதையைப் பற்றி முதன் முதலில் கொள்கை வகுக்க முயன்றவர் Edgar allan Poe என்ற சிறுகதையாசிரியரே. சிறுகதையின் இலக்கணத்தைப்பற்றியோ கூறியிருப்பதை தமிழ்ச் சிறுகதையை ஆராய்ந்தவர்கள் எல்லோருமே மேற்கோள் காட்டு வதைக் கண்டிருக்கிறோம். ஒரே அச்சில் சொல்லப்படக்கூடிய அல்லது கேட்கக்கூடிய சுருக்கமான கதைதான் சிறுகதை என்பது எட்கர் அலன் போவின் சூத்திரம். கதை என்ற வகையில் நெருங்

கதையான நாவலுக்கும் சுருங்கிய வடிவம் கொண்ட சிறுகதைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கும்பொழுது அவர் சொல்லுகிறார்: 'சிறுகதையைப் படிக்கும் நேரத்தில், அதைப் படிக்கும் வாசகர் அக்கதையைப் படைத்த எழுத்தாளரின் ஆதிக்கத்துக் குள்ளாகி விடுகிறார் புறச் சூழ்நிலைகளோ அல்லது சலிப்போ அந்த ஆதிக்கத்தைத் தடுப்பதில்லை''.

"During the hour of perusal the reader is at the writer's control. There are no external or extrinsic influences resulting from weariness or interruption"

நாவலுக்கும் சிறுகதைக்குமுள்ள வேறுபாட்டை இவ்வாறு விளக்கினார். தம்மைப் போன்ற ஒரு சக சிறுகதை எழுத்தாளரின் சிறுகதைகளைப் பற்றித் திறனாய்வு செய்யும் போதுதான் எடகார் அலன் போ இந்தக் கருத்தை வெளியிட்டார் என்பது நோக்கத் தக்கது. போவின் விமர்சனத்துக்கு உட்பட்ட Nathaniel Hawthorne போன்ற பல சிறுகதை எழுத்தாளர்கள், பின்னர் அமெரிக்காவில் தோன்றி, இந்த இலக்கியத் துறைக்கு மேலும் வளம் கொடுத்தவர்கள். இதே பாணியில் போவின் சாதனைகளும் சிறப்புடையனவாகும். எட்கார் அலன் போ சிறுகதை பற்றிக் கருத்துத் தெரிவித்தபிறகு, 50 ஆண்டுகள் கழித்து ஒரு திறனாய்வாளர் சிறுகதை பற்றி ஆராய முற்பட்டார். "சிறுகதையின் தத்துவம்" The philosophy of the short story என்ற தலைப்பில் 1901-ஆம் ஆண்டு ஆராய்ந்த Branda Mathews என்ற ஆசிரியர் நாவலுக்கும் சிறுகதைக்குமுள்ள வேறுபாட்டைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது பின் வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்:

"A true short story differs from the noval. chiefly in ita essential unity of impression the short story is the single effect, complete and self contained whole. The Novel is of necessity broken into a series of episodes. Thus the short story has what the noval cannot have, the effect of totality, as poe called it, the unity of impression".

சிறுகதையென்பது ஒருமையானதும் முழுமையானதுமான மெய்ப்பாட்டைத் தருவது என்பது இந்த ஆசிரியரின் கொள்கை. நாவலில் பல சம்பவங்கள், பல மெய்ப்பாடுகள் கொண்ட, காவியம் இதிகாசம் போன்ற வகையிலமைய, சிறுகதை தனி நிலைச் செய்யுளாகிய ஒரு அகப்பாடல் போன்றதென்கிறார். சிறுகதையென்

பதைச் சிறிய கதையென்ற தொடரிலிருந்து வேறுபடுத்தி Branda Mathews ஆங்கிலத்தில் அதை Short Story என்று இணைச் சொல்லாக வகுத்துக் கொண்டார்.

மேலும் ஆறு ஆண்டுகள் கழித்து பிராண்டர் மத்தியூ எழுதிய மற்றொரு நூலில் (The Short Story, 1907) அதுவரை சிறுகதையில் தோன்றியிருந்த வளர்ச்சியை மதிப்பிட்டுக் கூறினார். "உண்மையான சிறு கதைக்கும் சுருக்கியெழுதப் பட்ட சாதாரண கதைக்குமுள்ள வேறுபாட்டைச் சென்ற சில ஆண்டுகளாகத்தான் நாம் அறிந்து வருகிறோம் இப்பொழுதும் இந்தப் புதிய வடிவத்துக்குப் பொருத்தமான பெயர் நமக்குக்கிடைக்கவில்லை ஆகவே சிறுகதை என்பதைச் சிறிய கதை என்ற பொருள் தொனிக்காத வகையில், இணைச் சொல்லாகப் பயன் படுத்துவது மூலம் இந்தப் புதிய வடிவத்தை இனம் கண்டு கொள்ளலாம்" என்று விளக்கினார். மேலும் அவர், சிறுகதை எழுதுபவருக்கு அதிவிவேகமும் சுய சிந்தனையும் (ingenuity and originality) இருக்க வேண்டும் என்று சொல்கிறார். அத்துடன் கற்பனைத் திறனும் இணைந்து விட்டால் சிறு கதை வடிவம் முழுமையடையும் என்கிறார் அவர்.

பிராண்டர் மத்தியூஸை அடுத்து சிறுகதையை ஆராய்ந்த James Cooper Lawrence (1917) என்பவர் சிறுகதை உணர்த்தும் இலக்கியக் கொள்கையை மேலும் தெளிவாக்க முயன்றார். ஒரே மூச்சில் படித்து முடிக்கக்கூடிய கதைதான் சிறுகதை என்று எட்கார் அலன் போ கூறியதை லாரன்ஸ் ஏற்றுக் கொள்ள வில்லை. அதை ஏற்றுக்கொண்டால் சிறுகதைக்கும் மற்றும் சாதாரண வெறும் கதைக்கும் பிராண்டர் மத்தியூஸ் காண முயன்ற வேறுபாட்டிற்கு அவசியமில்லாமல் போய்விடும். சிறுகதை என்ற வடிவத்தை ஒரு தனி வகையாக எடுத்துக் கொண்டு அதன் உட்பிரிவுகளாகப் பொருள் அடிப்படையில் இரண்டாகவும், அமைப்பு அடிப்படையில் மூன்றாகவும் இந்த ஆய்வாளர் பிரித்தார். நிகழ்ச்சிகள் பற்றிய கதைகள், கற்பனை அடிப்படையிலெழுந்த கதைகள் (Stories of fact and Stories of fancy) என்று இரு வகைகளிலும் வரலாற்று முறையில் சொல்லப்பட்டவை, நாடக முறையில் சொல்லப்பட்டவை, நீதிபோதனைக்காகச் சொல்லப்பட்டவை (Stories told historically, Dramatically and Didactically) என்ற மூன்று வகைகளாகவும் பாகுபாடு செய்தார். இந்தப் பாகுபாட்டை மனத்தில் கொண்டு ஆராய்ந்தால், சிறுகதை என்பது ஒரு தனி உணர்வை ஏற்படுத்துவது என்ற கொள்கை கதை முழுவதற்கும்

பொருந்தாமல் போய்விடும் என்கிறார். அன்றியும் சிறுகதையை ஒரு புதுமையான மரபு என்பதைவிட, மிகவும் பழமையானது என்றும், இந்த இலக்கிய வகையிலிருந்து தான் பெரும்பாலும் எல்லா இலக்கிய வடிவங்களும் கிளைத்தெழுந்தன என்றும் முடிவு கட்டுகிறார் James Cooper Lawrence.

ஆங்கில இலக்கியத்தில் சிறுகதை வடிவம் பெற்ற வளர்ச்சியை Poe, Mathews, Lawrence போன்ற விமர்சகர்கள் ஆராய்ந்து இனம்கண்டபோது நமது நாட்டிலே தமிழ் மொழியில் சிறுகதையின் வடிவம் தலைதூக்க முயன்றதைக் காணலாம். வாய்மொழி வழக்கில் வந்த கதைகள் பல நடமாடிக் கொண்டிருந்ததால், அந்த உபகதைகளின் பாணியிலோ, அல்லது அவைகளை ஒருவாறு செப்பனிட்டோ சிறுகதை எழுதும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். அச்சுப்பொறி ஏற்பட்டபின்னர்த் தோன்றிய சஞ்சிகைகள் சிறுகதைக்கு இடமளிக்கமுன்வந்தன. இவற்றில் எழுதியவர்கள் பழைய செவி வழிக் கதைகளைத் தான் அதிகமாக உபயோகப்படுத்தினர். அக்காலத்தில் நூல் வடிவாக வந்த கதைப் புத்தகங்கள் பெரும்பாலும் மக்களிடையே உலவி வந்த செவி வழிக் கதைகள் தாம். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வெளியான கதை சிந்தாமணி, விநோத ரசமஞ்சரி, திராவிடபூர்வ காலக் கதைகள், விவேக மஞ்சரி, பூலோக விநோதக் கதைகள் போன்ற நூல்களில் கற்பனை நிறைந்த, புராண இதிகாச அடிப்படையிலான கதைகள் தொகுக்கப்பட்டன. இன்றைய சிறுகதை உணர்வின் அடிப்படையில் அந்த கதைகள் அமையவில்லையென்றாலும், அக்கதைகளெல்லாம் பழைய செவிவழிப் பாரம்பரியம் மறைந்துவிடக் கூடாது என்ற கருத்துடன்தான் எழுதிவைக்கப்பட்டன என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். நாடக ரீதியிலான வெறும் கற்பனையை, சம்பவங்களிடையே வைத்து எழுதப்பட்ட கதைத் தொகுதிகளிலொன்றான. பூலோக விநோதக் கதைகள் (1897) என்ற நூலுக்கு அதன் ஆசிரியர் அன்று தாம் கொண்ட இலக்கிய கொள்கையை முன்னுரையில் பின்வருமாறு விளக்குகிறார்: "அனுபவத்துக்கு மிஞ்சிய ஞானமும் அதிலும் மேம்பாடான படிப்பினையும் வேறு எதுவுமில்லை. அனுபவமே குரு; அனுபவமே அரசன்; அனுபவமே சாஸ்திரம்; அனுபவமே சாட்சி; அனுபவமே உத்தம சிநேகிதன். இவ்வாறே மற்றை எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருப்பது அனுபவமே. அல்லாமலும் உலகமே அனுபவ திருஷ்டாந்தமாயிருக்கிறதுடன், அவ்வனுபவமே ஒவ்வொரு

வினோதமாகவும் காணப்படுகிறதால் இக்கிரந்தத்துக்குப் பூலோக வினோத கதைகள் என்று பெயர் கொடுத்திருக்கிறோம்'' என அவர் குறிப்பிட்டிருப்பது இன்றைய சிறுகதை ஆசிரியர்கள் தங்கள் அனுபவத்தின் உதவியைக் கொண்டு கதைகள் இயற்று வதை நினைவூட்டுகிறது. ஆகவே வெறும் கற்பனைக் கதைகள் இயற்றப்பட்ட அந்த நாட்களில்கூட அனுபவத்தின் சாயல் அவசிய மென்று உணரப்பட்டது, பின்னர்ச் சிறுகதைப் படைப்புக்கு முன் மாதிரியாக அமைந்தது என்றும் கொள்ளலாம்.

இந்த உண்மையை உணர்ந்ததினாலோ என்னவோ இவ் விருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் விவேக சிந்தாமணி போன்ற சஞ்சிகைகளில் பல புதிய அனுபவச் சிறுகதைகள் வெளி வரத் தொடங்கின. அந்த ஆண்டுகளில் கே. எஸ். வைத்திய நாதய்யர். டி. எஸ். வெங்கட்ராமையர் எம். எஸ். ராகவன், அம்மணி அம்மாள் போன்றவர்கள் சிறுகதைகள் எழுதினார்கள். இந்த நிலையில் சிறுகதையின் அன்றைய இலக்கிய வடிவத்தைப் பற்றி தமிழில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்று பார்க் கும்போது, மேல் நாட்டு விமர்சகர்கள் தமது மொழியில் படைக்கப் பட்ட சிறுகதைகளைப்பற்றி ஆராய்ந்து எழுதிய முறையில் விரிவாக தமிழில் ஒருவரும் எழுதவில்லை யென்றாலும், ஒரு விமர்சகர் மட்டும் இவ்விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத் தினர் என்று தெரிய வருகிறது. புதுச்சேரியிலிருந்து வெளிவந்த கலைமகள் என்ற சஞ்சிகையில் 1917ம் ஆண்டில் ரா. வாசுதேவன் என்பவர் நாவலைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில் காணும் சில கருத்துக்கள் கவனிக்கத் தக்கவை.

''கதையென்பது யாது? எப்பொழுது உண்டாகியது? எத்தகைத்து? பிறனது சுகத்தைக் கண்டு களிப்புறுவதும், அவனது இடுக்கண் ஓர்ந்து அனுதாபப் படுதலும் மாந்தரின் உடன்பிறந்த இயற்கைக் குணமாகும். ஆக, பண்டைக்காலம் முதற்கொண்டே கதையென கதையமைப்பும், கதை சொல்வோர் கதைகேட்போர் என இருவித பாகுபாடுமுண்டாயின. மனிதன் தான் பேசும். திறனை யறிந்து இன்ன பொருளை இன்ன சொல் குறிக்கும் என ஒழுங்குகளை ஓர்ந்து வணங்கி, நாவண்மையில் சிறிது மேம் பாடுற்ற காலத்தில் கதை உருவாகியது......கதை என்பது நம் இலக்கியத்திற் கண்டதா எனின், அதற்கு நம் இலக்கியத்திலுள்ள கதைப் போக்கும் திறனுமே போதிய சான்றாகும். கதைகளை ஒரு கோவையாகச் சேகரித்து வைத்தவரை நாம் காண்கிறோம், நாம்

கேள்வியுறும் சில கதைக் கொத்துகள் சில 100 ஆண்டுகள் முன் பிறந்தவை என்பதும், ஆரியம் முதலிய பல மொழிகளிலிருந்தும் மொழி பெயர்த்தவை என்பதும் தெரிகிறது. எனினும் நம் இலக்கியத்திற்கையாண்ட கதைகளின் அளவைக் காணின், கதைகள் கையிறகுக் கொண்டு காகிதத்தில் வரையப் பெற்றிரா வெனினும் ஏராளமாக இருந்ததெனக் கூற இடமிருக்கிறது.

"நிற்க அக்கதைகள் எவ்விஷயங்களைத் தழுவி நின்றன? சாதாரணமாக முதற் தோன்றிய மனிதர் தம்மைச் சுற்றிலும் சூழ்தர விருந்த இயற்கைப் பொருள்கள் யாவையும் கண்டு, குகைகளிலும் மரங்களிலும் பதிந்த தம் வலியினும் குன்றிய ஜீவன்களை அடக்கியும், தம் வலுவின் மிஞ்சிய பிராணிகளைப் புசித்தும் தம் கையில்படாத புட்கள் விலங்குகள் யாவற்றிற்கும் ஒவ்வோர் பெயர் கொடுத்து அவற்றினுள்ளும் தம் போன்றதும் தம்மினும் மேம்பட்டதோர் திறன் உளதெனக் கொண்டு, தெய்வமெனக் கருதி வழிபாடு செய்தும் வந்தனர். ஆக, இத்தகைய மாந்தரது இலக்கியத்தின் கண் நாம் நம்பத் தகாத, நம் நாகரிகம் கொண்டு நடந்திராது எனச் சொல்லக்கூடிய, கதைகளே தான் பரவியிருக்கக்கூடும். இரக்கந்தரும் அருவங்களும் தெய்வங்களுமே அவர்கள் கதைகளில் நிரம்பியிருக்கும். இக்கதைகளே பின்வந்த புராணக் கதைகளுக்குத்தக்க சாதனங்களாக இருந்தன எனச் சாற்றவும்கூடும்.........ஆக, அவை ஆதிகாலத்தே உண்டானவை என்பதும், அவை ஒரு ஒழுங்காக இலக்கணம் அமையாது மாந்தர்க்கு இன்பமளிக்கும் எல்லா விஷயங்களையும் தன் பாலணிந்து கவினுற விளங்கின என்பதும், நாள் முழுதும் உழைந்து ஓய்ந்த மாந்தரால் மாலையில் அல்லது முன்னிரவில் சிறிது காலப் போக்காகச் சாற்றப்பட்டவையாக அச்சிறு காலத்தே முடிய வேண்டியிருந்ததால்-உருவிற் சிறியவை என்பதுமே நாம் கூறலாகும். பின்னர் இலக்கணமுற்றும், பொலிவுற்றும் பரவியிருந்தது என்பதும் தெரிகிறது. இது 1917ம் ஆண்டில் புதுவைக் கலைமகள் பத்திரிகையில் ரா. வாசுதேவன் கொண்ட கருத்து.

இதற்கிடையில் புதுச்சேரியிலே தங்கியிருந்த வ. வே. சு. ஐயர் 1913ம் ஆண்டிலேயே தமது புதுவடிவக் கதையான குளத்தங்கரை அரசமரம் என்ற கற்பனைச் சித்திரத்தை எழுதினார். இந்தக் கதையை அவர் அப்போது வெளிவந்து கொண்டிருந்த "விவேக போதினி" என்ற சஞ்சிகையில், தமது சொந்தப் பெயரில் வெளியிடாமல், தமது மனைவி பாக்கியலெட்சுமி அம்மாள் பெயரில்

வெளியிட்டார். அதற்குக் காரணம் அவரது அரசியல் வாழ்க்கையின் அன்றைய நிலைமையாயிருக்கலாம். தீவிரதேசியவாதியான ஐயர் மேனாட்டிலிருந்து தலைமறைவாக வந்து புதுச்சேரியில் சரணடைந்திருந்தபோது தான் இந்தப் புதுக்கதை எழுதப்பட்டது. மேனாட்டில் வசித்த காலத்தில் அங்கு நிலவிய இலக்கியக் கொள்கையை ஓரளவு தெரிந்து கொண்ட ஐயர், புதுச்சேரியில் வாழ்ந்த சமயம் பிரெஞ்சு மொழி இலக்கியத் தாக்கம் ஏற்பட்டிருந்தது. முதலில் கம்பராமாயணத்தையும் திருக்குறளையுமே ஆராய்ந்து கொண்டிருந்த அவருக்குச் சிறுகதை எழுதவேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டபொழுது அவர் தமக்கு முன்னோடிகளாக மாப்பசான் போன்ற பிரெஞ்சு ஆசிரியர்களைக் கொண்டதாகத் தெரியவில்லை. ''வங்கப் படைப்பாளி ரவீந்திரநாத் தாகூரின் ஒரு சிறுகதை உத்தியை முன் மாதிரியாகக் கொண்டு சுயமான கதை'' எழுதினார். இந்தக் கதையுடன் பின்னர் எழுதிய ஏழு கதைகளையும் சேர்த்து ''மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்'' என்ற தலைப்பில் 1917ல் புதுச்சேரியில் கம்பநிலையம் என்ற முகவரியிலிருந்து வெளியிடப்பட்டதுதான் இன்றைய தமிழ்ச்சிறுகதையின் முதல் தொகுப்பு. பின்னர் 1927ல் இதே தொகுப்பு இரண்டாம் பதிப்பாகச் சென்னையில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முன்னுரையுடன் வெளியாயிற்று. 1917ல் பதிப்பு வெளியானதைப் பற்றி அறியாதபலர் 1924ல் வெளியான மாதவய்யாவின் குசிகர் குட்டிக் கதைகள் என்ற தொகுப்பே முதல் தமிழ்ச்சிறுகதைத் தொகுப்பு என்று குறிப்பிடுகிறார்கள். ஐயருடைய கதைகள் அதுவரை வழங்கிவந்த கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்து மாறுபட்டவை, புதுமுறையில் எழுதப்பட்டவை, இன்றைய சிறுகதையின் முன்னோடிகளாக அமையத் தகுந்தவை என்பதை அவருடைய முன்னுரை நிர்ணயித்துக் காட்டும் இலக்கியக் கொள்கையிலிருந்து ஒருவாறு அறியலாம்.

''மங்கையர்க்கரசியின் காதலும், காங்கேயனும் கயேலிக் மகாகவியான ஒஸ்லியனுடைய காவியங்களின் பந்தாவில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை தமிழ் நாட்டுப் பழைய வீரத்தன்மையை பழக்க வழக்கங்களையும் ஒருவாறு விளக்கிக் காட்டும். இவைகளின் தலைப்பில் எழுதியிருக்கும் சூசிகளைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தெரியும். ஆனால் ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமற் போனாலும் போகலாம். என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்.........கதை

கள் கவிதை நிரம்பியனவையாய், ரஸபாவோ பேதமாய் இருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இக்கதைகளை அவ்வாறே செய்ய முயற்சிக்கின்றேன்........''

ரீதி புதிது என்று ஐயர் எச்சரிக்கை செய்தது, அன்றுவரை பெரும்பாலான தமிழ் வாசகர்கள் தெரிந்திராத ஒரு புதிய முறையில் கதை சொல்லப் போவதை மனத்தில் கொண்டுதான். ''ஒரே ஒரு ஊரில் ஒரு மரம் இருந்தது; அந்த மரம் சொன்னதாவது'' எனறு ஆரம்பிக்காமல், எடுத்து எடுப்பிலேயே, ''பார்க்கப் போனால் நான் மரம்தான். ஆனால் என் மனதிலுள்ளதையெல்லாம் சொல்லுகிறதானால் இன்னைக்கெல்லாம் சொன்னாலும் தீராது'', என்று இப்படி ஒரு திடீர் அறிவிப்புடன் ஆரம்பித்து, குளத்தங்கரையிலுள்ள ஒரு அரச மரம் சொன்னதாக ஒரு கதையைச் சிருட்டித்தது தமிழ் உரைநடைக்குப் புதிய உத்தி. இதுமேல் நாட்டிலக்கிய மரபிலிருந்து வழிவந்த தென்பதை ஐயரின் சமகாலத்தவராகிய சுப்பிரமணிய பாரதி, தாம் எழுதிய சின்னச் சங்கரன் கதையின் முன்னுரையில் பின்வருமாறு சொல்கிறார்.

''நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடிதொடங்கிக் கதாநாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு, வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக்கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பியக் கதைகளிலே பெரும்பகுதி அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப்போலக்கதையை நட்டநடுவில் தொடங்குகிறார்கள். பிறகுப் போகப் போகக் கதாநாயகனுடைய பூர்வ விருத்தாந்தங்கள் தெரிந்துகொண்டே போகும். எங்கேனும் ஒரு காட்டில் ஒரு குளக்கரையில், ஒரு தனிமேடையில் இவன் தனது காதலியுடன் இருப்பான். இல்லாவிட்டால், யாரேனுமொருசினேகிதனுடன் இருப்பான். அப்போது கதையின் ஆரம்பங்களை எடுத்து விரிப்பான் இது அவர்களுடைய வழி. நான் இந்தக் கதையில் மேற்படி இரண்டு வழிகளையும் கலந்து வேலை, செய்யப்போகிறேன்'' இப்படிப் பீடிகை போட்டார் சுப்பிரமணிய பாரதி இவர் வழி அன்று சொன்ன உத்தியையே உ. வே. சா. ஐயர் என்று குறிப்பிட்டார். இது தமிழில் பிற்காலத்திலெழுந்த உரைநடை மரபுக்குப் புதியதானாலும், சங்க காலத்தில் சில புலவர்கள் சொன்ன வடிவமான வகைகளில் சிறப்பிடம் பெற்றிருந்ததைக் காணலாம். மருதக் கலியில் ஒருபாடல், ஒரு கூனியும் குறளனும் சந்தித்து ஒருவரையொருவர் பரிகாசக்குரலில் ஏசலையும், பின்னர் அவர்கள் சமாதானம் செய்து, கூடியதையும் நாடகப் பாணியில்,

என்னோற்றனை கொல்லோ
நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்
ஈங்குருச் சுருங்கி இயலுவாய்,
நின்னோடுசாவுவேன், நின்றீத்தை!

என்று ஆரம்பித்து நடைபோடுவதைப் பார்க்கலாம்.

வ. வே. சு. ஐயரின் சிறுகதைத் தொகுதி வெளிவந்தபின்னர் அவரைத் தொடர்ந்து சிறுகதை எழுதியவர் அ. மாதவய்யா, குசிகர் குட்டிக் கதைகள் என்ற தொகுப்பு, அவர் முன்பு ஆங்கிலத்தில் எழுதிய கதைகளின் மொழி பெயர்ப்பு. இக்கதைகளின் மாதவய்யா, சிறுகதை என்ற இலக்கிய மரபை மனத்தில் வைத்துக் கொண்டு எழுதவில்லை யாயினும், குட்டி கதைகள் மூலம் தனது சிந்தனையில் தோன்றிய சில சீர்திருத்தக் கருத்துக்களைக் கல்வி யறிவு குறைந்தவர்களுக்கு எடுத்துச் சொல்வது எளிது என்ற நோக்கத்தில்தான் எழுதினார்.

1930ஐ அடுத்த கால கட்டத்தில்தான் தமிழ்ச்சிறுகதை இலக்கியத்துக்கு ஒரு புதிய உந்துதலும் கவர்ச்சியும் ஏற்பட்டது. ஆங்கிலச் சிறுகதையின் முக்கிய சாதனங்களான Strand, Pearsons Magazine, Argosy போன்ற சஞ்சிகைகள் தமிழ்நாட்டுக்கு வந்து பரவிய காலத்தில் ஆனந்தவிகடன், பிரகண்டவிகடன், பிரஜானுகூலன் பத்திரிகைகளுக்கு வேண்டிய கதைக் கருக்களும், புதிய உத்திகள் சிலவும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. விமோசனம், நவசக்தி முதலிய பத்திரிகைகளில் சேவை செய்த இளம் எழுத்தாளர் ‘கல்கி’ என்ற ரா. கிருஷ்ணமூர்த்தி ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்த பின்னர், ஆங்கில சிறுகதைச் சஞ்சிகைகளின் உதவியை நாடி, அவ்வகையில் பல சிறுகதைகளைப் படைத்தார். ஆனால், வ.வே சு. ஐயரைப் போன்று ஐரோப்பிய இலக்கியங் பயிற்சிகளில் நேரடிப் பரிச்சயமில்லாத காரணத்தால் கல்கி அந்த நாட்டுக் கதைகளைக் கதைக்காக மாத்திரம் உபயோகித்தாரல்லாமல், “ரீதி புதிது” என்ற வகையில் சோதனை செய்யத் துணிவு கொள்ளவில்லை. இருந்தபோதிலும், தமது பத்திரிகை மூலம் சிறுகதை வளத்தைப் பெருக்கியதில் தமிழ்நாட்டில் கல்கி காட்டிய சாதனை முக்கியமானது. தாம் மாத்திரம் எழுதிய தல்லாமல் மற்றைய எழுத்தாளர்களையும் ஊக்குவிக்க அவர் ஆனந்தவிகடன் மூலம் 1933ல் நடத்திய ஒரு சிறுகதைப் போட்டி தமிழ் சிறுகதையின் புதிய மரபுக்கு ஒரு அறைகூவலாகக் கருதப்பட்டது இந்தப் போட்டி அறிவிக்கப்பட்ட சமயம் சென்னையில், ஆங்கில இலக்கியப்

பெற்ற இளம் பட்டதாரிகள் சிலர் தமிழில் எழுத வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருந்தார்கள். ஆங்கில மொழியில் வெளிவந்த பல புதுமைப்படைப்புக்களைப் பார்த்து அவற்றுடன் அன்றைய தமிழ் சஞ்சிகைகளில் வெளிவந்த உயிரற்ற சித்திரங்களை ஒப்பிட்டு வேதனைப்பட்டிருந்த இந்த இளம் இலக்கியக் குழு ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியின் முடிவைத் தெரிவித்த போது, அந்தப் போட்டிக்கு அனுப்பப்பட்ட ஒரு கதை, மிகமிகச் சிறந்த இலக்கிய நயம்கொண்ட கதையாயிருந்தும் அதற்குப்பரிசு கிடைக்காமல் வேறொருசாதாரண கதைக்குப்பரிசு கிடைத்ததைக் கண்டு ஆர்ப்பரித்தெழுந்த வேகத்தில் தோன்றியதுதான் இன்றைய வரலாற்றில் மணிக்கொடி குழு என்று நாம் இனம் காணும் புத்திலக்கியக்குழு. தமிழ் சிறுகதை வரலாற்றில் வ. வே. சு. ஐயர் தொடக்கிவைத்த மரபில், மேலும் பல சோதனைகள் செய்துபுதிய புதிய வடிவங்களில் புதிய புதிய கருப்பொருள்களையும், கதை மாந்தர்களையும் உருப்படுத்தியவர்கள் இவர்கள். பி. எஸ். ராமையா, புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன், மௌனி முதலியவர்கள்தான் தமிழ்ச்சிறுகதையில், ஆங்கில மரபில்புதியதோர் இலக்கியக் கொள்கையை நிறைவேற்றி வைத்தவர்கள்.

கதைப் பொருளிலும் கதைசொல்லும் வகையிலும் ராமையா சிறப்புக் காண்பித்தார். கதை சொல்லும் எளிய நடையில் தி. ஜ. ரங்கநாதன் சிறப்படைந்தார். சி. சு. சொல்லப்பா பெ. கோ. சுந்தரராஜன். இருவரும் கதையம்சத்தில் பல சோதனைகளைச் செய்தார்கள். கதை மாந்தரின் உரையாடல்மூலம் இயல்பான மனித உணர்ச்சிகளை மறைத்து, நற்பண்புகளைக் காண்பிக்கும், வகையில் நடந்து கொள்வதை இவர்கள் தமது கதைகளில் சித்திரித்தார்கள். சிதம்பர சுப்பிரமணியன், மனிதனின் அடிப்படை நாணயத்தை வெளிக்கொணரக் கதை எழுதினார். இவர்கள் யாவரும் சம்பவங்களைக் குறைத்துக் கடிமன உணர்வுகளை வெளிப்படுத்தி எழுதியதால், சிறுகதையின் உருவம் புதிய சிறப்புப் பெற்றது. பிச்சமூர்த்தியின் கதைகளில் அவர் கையாளும் முறையிலும், தொடுக்கும் வார்த்தைகளிலும் ஒரு மெய்ப்பொருள் அறிவு நிலை தோன்றும். நமது பண்பாட்டில் ஆழ்ந்த பற்றும் பாசமும் கொண்டிருந்த காரணத்தால் இறைபக்தி முதல் தத்துவஆராய்ச்சி வரை கதையம்சத்தோடு சேர்ந்த அனுபவ உணர்வாக அவர் சிறுகதை படைத்தார்.

கு. ப. ராஜகோபாலன் கதைகளில் ஒவ்வொரு செயலும் ஒரு கலையம்சமாக்கிக் கொடுத்தார். நிகழ்ச்சிகளைவிட உணர்வு களையே கதையின் முக்கிய வெளிப்பாடுகளாகக் காண்பித்தார். சிறிது வெளிச்சம், ஆற்றாமை என்ற கதைகளில் கையாளப்படும் உணர்ச்சி நிலைகளும், விடியுமா என்ற கதையில் வாசகரைத் தவிக்கவைக்கும் வேதனைச்செறிவும் கு. ப. ரா. வின் கதைகளில் காணும் உத்திச் சிறப்புகள் இவருடைய கதைகளில் கவிதைப் பண்பு அதிகம்.

சிறுகதை எழுதுவதில் சொல்லாட்சியிலும், கதைப்பொருளின் புதுமையிலும் புதிய புதிய சோதனைகள் இந்தக் காலத்தில் திட்ட மிட்டே செய்த எழுத்தாளர் புதுமைப்பித்தன். பிச்சமூர்த்தியும், கு.ப. ராஜகோபாலனும் தாம் படைப்பது புத்திலக்கியமாகிய சிறுகதை என்ற உணாவுடன் அதில் தம் அனுபவத்தில் உணர்ந்த சில உத்திகளைக் கையாண்டார்கள். அதில் ஒருநிறைவும் கண்டார் கள். ஆனால், இந்தப் புத்தியக்கக்குழுவில் சேர்ந்த புதுமைப் பித்தன் பற்பலச் சோதனைகளைச் செய்து, தமிழ்ச் சிறுகதைக்கு என்னென்ன இலக்கிய அலங்காரமோ-செய்துபார்த்தும், மன நிறைவு கண்டவராகத் தெரிவில்லை. ஒவ்வொரு கதையும் ஒவ் வொரு குதிப்பு; பாய்ச்சல், அமைதியற்றநிலை. மற்றவர்கள் கை யாளவில்லை என்ற காரணத்தால், வாழ்க்கையின் இருண்ட பகுதி களைக் கதைப்பொருளாக எடுத்துக்கொண்டு ஒருபரிகாச நோக்கில் மனிதனின் சிறுமைகளைப் பார்க்க முயல்கிறார். மற்றும் மனிதர் களின் செயல்களுக்கு காரணமாகப் பின்னால் மறைந்திருக்கும் உணர்வின் இயல்பை விளக்கும்போது ஆழ்ந்த தத்துவ விசாரணை யிலும் ஈடுபடுகிறார் பொன்னகரம், கவந்தனும் காமனும், கற்றரவு நினைவுப்பாதை போன்றகதைகளில இந்த இருவித நோக்குகளையும் காணலாம்.

சிறுகதைத் துறையில் மேல்நாட்டவர் கண்ட இலக்கியக் கொள்கைகளைப் படித்துணர்ந்து, அவர்கள் படைத்த சிறுகதை களையும் பார்த்து, புதியபல பரிசோதனைகளைச் செய்த புதுமைப் பித்தன், முடிவில் மன நிறைவு காணவில்லை என்ற எமது அபிப்பிராயத்துக்கு. அவர் 1942ம ஆண்டு ஓரிடத்தல் கூறிய கருத்தையும்-பின்னர், அவர் காலமாவதற்கு முந்திய ஆண்டாகிய 1947ல் சொல்லிய கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சான்று தெரியும்.

1945ல் எழுதினார்: "இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே. நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம்-இத்தியாதி நபர்களைத் தவறாமல் நான் பார்த்துக்கொண்டிருந்து விட்டு இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல் காதல் கத்தரிக் காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற-அனுபவத்து நேர் முரணான-விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவ காரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைக்சல் எதுவு மில்லை".

இதன்பின்னர், தமது கருத்தை 1947ல் தெரிவித்தபோது சொல்கிறார்:

"இக்கதைகள் (அதாவது, ஆண்மை என்ற தலைப்பிலுள்ள தொகுப்புக் கதைகள்) யாவும் நான் எழுத ஆரம்பித்து, சுமார் ஆறு மாதங்களுக்குள் அமைந்த மன நிலையைக் காட்டுவன வாகும். இவற்றில் பெரும்பான்மையாக எனது மன நிலையே சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் வரும் கதா பாத்திரங்கள் போல, நான் எனது கருத்துக்களுக்குப் பொருந்தியவையாகப் பிடித்து வைத்த களிமண் பொம்மைகள். அவற்றிற்கு இருக்கும் உயிரும் வேகமும் என் ஆத்திரத்தின் அறிகுறி......அவற்றில் கதைக்குரிய கதைப் பின்னல் கிடையா. அவற்றிற்கு ஆரம்பம் முடிவு என்ற நிலைகளும் பெரும்பாண்மையாகக் கிடையா. மன அவசத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக் கொள்வதானால் அவை கதைகளாகும். இம்மாதிரியான முறையை அனுஷ்டித்து மேல் நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அந்த முறையை முதல் முதலாகத் தமிழில் இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப்பின்மை என்னுடையதாகும்."

இவ்வாறு 1947லே புதுமைப்பித்தன் சொன்னது, அவர் அதற்குப்பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எழுதிய கதை களின் கொள்கை விளக்கமாகும். மன அவசத்தில் அல்லது ஆத்தி ரத்தில் வெடித்துப் பிறந்த கருத்துக்குக் கொடுத்த வடிவம்தான் தனது கதையென்று புதுமைப் பித்தன் சொல்வது Miss. Elizabeth Bower என்ற ஆய்வாளர் தரும் இன்றியமையாமைக் கொள்கைக்கும் பொருத்தமாயிருக்கிறது. அவர் சொல்கிறார்: "முதலிலே ஒரு சிறுகதைக்குத் தேவையானது அதன் இன்றியமை யாமை என்ற அம்சம்தான். அதாவது, ஒரு கதையானது மன

அவசத்தின் நெருக்கத்தில், அல்லது உள்ளுணர்வின் தாக்குதலில் உடைத்துப் பெருகி எழுத்தாளனை எழுத வைப்பதுதான்'' என்று அவர் விளக்க முயன்றார். புதுமைப்பித்தனே இதற்கு உதாரண புருஷர்.

ஆனந்த விகடனில் கல்கி கதைகள் புனைந்த காலத்திலேயே ராஜாஜியும் பல சிறுகதைகளை எழுதினார். அவரது கொள்கை முழுவதும் யாப்பு வகையைச் சாராது நூற்பயன் வகையைச் சார்ந்தது. கதையின் மூலமாக அவர் சமுதாயச் சீர்திருத்தங்களை வலியுறுத்தினார்.

புதுமைப் பித்தனுக்குப் பின்வந்தவர்களில் க. நா. சுப்பிரமணியம் எழுதிய கதைகளில் தமிழ்க் கதை என்று இனம் காண முடியாமல், மேனாட்டுப் புத்திலக்கியச் சாயலே காணப்படுகிறது. புதுமைப் பித்தனிடமிருந்த தமிழ் இலக்கிய அறிவு க. நா. சு. வுக்கு வாய்க்கப் பெறாததால் கொள்கை தெளிவடையவில்லை. அந்த நாட்களில் துணிந்து பரிசோதனை செய்தவர்களில் மௌனியையும் லா. ச. ராமாமிர்தத்தையும் குறிப்பிட வேண்டும். மௌனியின் கதைகளில் கதையம்சம் முக்கியமல்ல என்று தோன்றும் பிரபஞ்ச கானம், அழியாச்சுடர், பிரக்ஞை வெளியில் என்ற கதைகளில், கதையற்ற வெறுமையே சிறுகதை வடிவத்தைப் பெறுகிறது என்று சொல்லலாம். அதே சமயம் ராமாமிர்தத்தின் கதைகளில் வார்த்தைகளை வைத்து மயக்கும் சக்தியைக் காணலாம். கதைப் பொருளை விட்டு சொற்கோவை மூலம் புலன மயக்கம் செய்வதையே ராமாமிர்தத்தின் கொள்கை,

மணிக்கொடி கால சிறுகதை எழுத்தாளர்களுடைய இயக்கம் ஆரம்பித்து ஒரு பதினைந்து ஆண்டுக்காலத்தில் நிகழ்ந்த பல்வேறு முயற்சிகளையும் உருப்படியான செயல்களையும் பார்க்கும்போது, சிறுகதையின் இலக்கிய நோக்கில் திட்டவட்டமான கொள்கை பிடிப்பு ஏற்படவில்லை என்று காணலாம். சிறுகதை வடிவத்தைக் கையாண்ட எழுத்தாளர்களின் படைப்புத் திறன் அவரவர்களுடைய தனித்தன்மையின் அடிப்படையில் கண்டது. மேனாட்டுச் சிறுகதைக்கு இலக்கணம் வகுக்க முயன்ற பல விமர்சகர்கள்தானும் ஒரு இலக்கணத்தையும் வரையறுக்க முடியாமல் தவித்தார்கள்.

இந்தக் குழப்ப நிலைக்குப் பின்வந்த சில எழுத்தாளர்கள், தமக்குமுன் வழி காட்டியவர்களின் நிழலிலே நின்று சிறுகதை

களைப்படைக்க முயன்றதால், அமைதியும் ஆழமும் மெருகும் கொடுத்து இந்த இலக்கிய வடிவத்துச்கு ஒரு உன்னத நிலையைக் காண்பித்தார்கள். தி. ஜானகிராமன், அழகிரிசாமி, சுந்தரராமசாமி, ஜெயகாந்தன் ஆகியவர்களின் கையில், சிறுகதை ஒரு கலைப் பொருளாக, உருவெடுத்திருப்பதைக் காணலாம். ஜானகிராமன் எழுத்தில் அவருடைய கதாபாத்திரங்களின் பேச்சுகளிலேயே செயல்களும் நிகழ்ச்சிகளும் நடந்தேறிவிடுகின்றன. பாத்திர வார்ப்புத்தான் அவர் கதையின் கலைப்பண்புக்கு அடித்தளம். அழகிரிசாமி ஓரளவு புதுமைப்பித்தனின் வழி வந்தவரானாலும் அமைதி நிறைவு காணலாம். சுந்தர ராமசாமியின் ஆற்றலில் கதையாந்தரின் உணர்வின் ஆசிரியரும் ஈடுபடும் பண்பு காணப்படுவதால் வாசகரும் அவ்வாறு ஈடுபடச் செய்கிறது.

ஜெயகாந்தனின் சிறுகதை கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளில் ஒரு தனிப்பட்ட கொள்கையில் வளர்ந்து வந்திருக்கிறது. கதையின் பொருள்களில் எதிர்பாராத ஒரு கோணம், சொல்லாட்சியில் எதிர்பாராத வேகம்; கதையின் காட்சியில் அப்பட்டமான நிதர்சனம். கதையென்ற வகையில் கற்பனையம்சம் சிறிதும் தோற்றாத அமைப்பு. இந்த வகையில் சிறுகதை இவர் கையில் ஒரு புதிய வரைவிலக்கணத்துக்கு உதாரணத்துக்கு உதாரணமாயிருக்க இவரைப் பின்பற்றி எழுத முயன்றவர்கள் கடைத்தேறக் காணோம்.

சென்ற பத்து பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்ச்சிறுகதைத் துறையில் ஒரு வேகம் தோன்றியிருக்கிறது. இளம் எழுத்தாளர்கள் பலர் தோன்றி, இதுவரை சிறுகதை மரபில் இடம் பெறாத வாழ்க்கையின் பல அம்சங்களைப் பற்றிக்கதைகள் எழுதுவதைக் காண்கின்றோம். இன்றைய தலைமுறை எழுத்தாளர்கள் தங்கள் கதைப் பொருளாகத் தம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைக்கும் அப்பால் வெகுதூரம் சென்று உணர்ச்சியின் அடிப்படை இயல்பையும் அறிவின் எல்லைக்கோட்டில் காணும் தெளிவையும் தமது கதைக்குப் பொருளாகக் கொள்கின்றனர். மரபின் கட்டுப்பாடுகளை உதறித் தள்ளி, புதிய விடுதலையுணர்வை இலக்கிய நோக்கில் எடுத்துக்காட்ட முயலும் எழுத்தாளர்கள் சிறுகதை படைக்கும்பொழுது உருவம், உத்திபோன்ற அம்சங்களில் ஒரு விதக் கட்டுப்பாடுமின்றித் தெளிவான அமைப்பு உணர்வுமின்றி எழுதுவதையும் பார்க்கிறோம். ஆயினும் இத்தகைய கதைகள் நாம் புறக்கணிக்கவும் முடியாது. சுமார் 40 ஆண்டுகளுக்கு

முன்னுள்ள நிலைபோன்று இதுவும் ஒரு புதிய பரிசோதனைக் காலம். இந்திரா பார்த்தசாரதி, சார்வாகன், நீல பத்மநாபன், அசோக மித்திரன் முத்துசாமி போன்றவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விரக்தி, சோர்வு போன்ற உணர்ச்சிகளைத்தாங்கள் படைக்கும் கதைகளில் ஒரு பரிகாச நோக்குடன் விளக்குகிறார்கள். அனுபவத்தின் இருண்ட பகுதிகளைப் படம் பிடித்துக் காட்டும் முயற்சியில் இன்னும் சில இளம் எழுத்தாளர்கள் முனைந்திருக்கிறார்கள். பல நிலைகளில், மனிதன் பிறருக்கு விளங்காத, தனக்கு மட்டுமே புரியும் ஒரு காரணத்துக்காக, சூழ்நிலையுடன் பகைமை பூண்டு, சமுதாயத்தை எதிர்த்துப் போராடும் நிலையை இவர்கள் கதைகளில் காணலாம். அனுபவபூர்வமாக வாழ்க்கையின் ரகசியத்தையோ, உண்மையையோ தேடுவதில் ஒரு மனிதனின் செயல்களைச் சார்ந்த மனப் பான்மையை விளக்கும் தத்துவத்தை மேல்நாட்டில் இன்று காணப் படும் Existentialism என்ற தத்துவ நோக்குடன் இணைத்துத் தங்களுடைய கதைகளில் இந்தப் புதியவர்கள் ஒரு புதிய மரபு தேட முயல்கிறார்கள். பாலகுமாரன், வண்ணதாசன் போன்ற புதிய எழுத்தாளரின் கதைத் தொகுப்பான ''ஒரு தலைமுறையின் பதினொன்று சிறுகதைகள்'' என்ற நூல் இதற்குச்சான்றாகும்.

அன்பு தயை போன்ற மனிதப் பண்புகளைக் கருப்பொருளாக வைத்துச் சிறுகதை எழுதுவதில் கி. ராஜநாராயணனிடம் தனிச் சிறப்புத் தெரிகிறது. இவரைப் பின்பற்றியும் பல இளைஞர்கள் இப்பொழுது மன நிறைவு தரும் கதைகள் எழுதுகிறார்கள் இவர்கள் இன்றைய வாழ்க்கையில் காணப்படும் தலைமுறை வேறுபாடுகள் போன்ற முரண்பாடுகளை, கதையின் போக்கிலும் கதைமாந்தர் செயல்கள் மூலமும் எடுத்துக்காட்ட முயல்வதைக் காண்கிறோம். புதிய முளைகள் என்ற சிறுகதைத் தொகுதி இந்தப்போக்கை விளக்குகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் வெளி யான கோணல்கள் என்ற தொகுப்பில் வெளியான கதைகளை எழுதிய கந்தசாமி, கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் இந்தப்புதிய திசைக்கு வழிகாட்டிகள். புதிய தலைமுறை எழுத்தாளர்கள் புதிய சோதனைகளுக்காகக் கட்டுப்பாடுகளை மீறிச்சிறுகதைகளின் வடிவத்தையே சிதைத்து விடுகிறார்கள் என்றாலும் இவர் களுடைய முயற்சிகள் ஒரு புதிய இலக்கியத் திறனுக்கு வழி செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சிறுகதைக்கு இலக்கியத்தரமான சஞ்சிகைகள், மணிக்கொடி, சூறாவளி, சந்திரோதயம், கலாமோகினி, தேனி முதலியவை வளர்ப்புப் பண்ணையாக இடமளித்து ஆதரித்து வந்தன. அத்தகைய சஞ்சிகைகள் இன்று அப்பணியைத் தொடரச் சாதகமான சூழ்நிலை இல்லையென்பதைக் காண்கிறோம். இலக்கியப்பயிற்சியையே முக்கிய நோக்கமாகக் கொண்ட நடை, கசடதபற பிரக்ஞை வாசகன் போன்ற சஞ்சிகைகள், ஜனரஞ்சகமான வார மாத ஏடுகள் எழுப்பும் பேரொலிக்கிடையே மென்மையான சிறுகுரல் எழுப்பி விரைவில் மறைந்து விடுகின்றன. இந்த நிலையிலும் ஜனரஞ்சகமான ஏடுகளிலும் எதிர்பாராத வகையில் சில சிறந்த சிறுகதை வெளியாகக்காண்கிறோம். இதற்குக் காரணமும் உந்துதலும் இலக்கியச் சிந்தனை என்ற நிறுவனத்தார், மாதம் மாதம் சிறந்த சிறுகதைக்கென்று பரிசு வழங்கிவருவதும், அந்தச் சிறுகதையை தெரிந்தெடுக்கும் வகையில் மற்றும் பல கதைகளுடன் தக்கவரைக் கொண்டு மதிப்பீடு செய்து வருவதும்தான். மாதத்துக்கு ஒரு சிறந்த கதை என்றும் அவற்றுள்ளும் ஆண்டுக்கு ஒரு சிறந்த கதையென்றும் கடந்த ஏழு ஆண்டுகளில் தெரிந்தெடுக்கப்பட்ட கதைகளில் தமிழ் சிறுகதை வளர்ச்சியையும் போக்கையும் ஓரளவு காணலாம்.

மேனாட்டில் சிறுகதை இலக்கியம் வளர்ந்ததுபோலவே தமிழ்ச்சிறுகதையும் தனது வளர்ச்சியில் பல பருவங்களைத்தாண்டி வந்திருக்கிறது. நாடக வழக்கில் உதயமாகி ஒரு குறுகிய காலத் தேவையை நிறைவு செய்யும் கருவியாக வளர்ந்த சிறுகதையில் ஆரம்பத்தில் கதையம்சமே முக்கியமாகக் காணப்பட்டது. பின்னர் மனித உணர்வின் பல்வேறு சாயல்களும் ஒரு கண நேரத்திலேயே எவ்வாறு ஒருமித்து வெளிப்பட்டு அனுபவத்துக்கு நிறைவு தருகின்றன என்பதை இலக்கணமாகக் காண்பித்தது. நாளடைவில் கதையம்சம் குறைந்து மனக்குமுறல்களும் ஏக்கங்களும் குறியீடுகள் மூலம் தோன்றுவதை ஒரு புதிய மரபாக வளர்த்தது. இன்றைய நிலையில் சிறுகதைக்குக்கதையே தேவையில்லை. ஓர் உளவியல் ஆய்வுக்கண்ணோட்டம் மாத்திரம் இருந்தால் போதும் என்ற கருத்தும் நிலவுகிறது. இலக்கிய ரீதியில், சிந்தனை மூலம் அனுபவித்து ரசிக்கத்தது ஒரு உத்தியென்று ஒப்புக் கொண்டாலும், கதை என்ற கரு இல்லையென்றால் சிறுகதை தன்னுடை இலக்கணத்தை இழந்துவிடும்.

முடிவாக, சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தைப் பற்றி மேரி ரோர் பேர்ஜர் (Mary Rohrberger) என்ற ஒல்லாந்து

தேசத்து இலக்கிய ஆய்வாளர் இன்றைய இலக்கியக் கொள்கையை வகுத்துக் கொடுப்பதை ஒரு சிறந்த இலக்கணமாக எடுத்துக் காட்டி இவ்வுரையை முடிப்போம்.

சிறுகதையின் தத்துவத்தை இவர் பிரத்தியட்சம் அனுமானம் அதாவது காண்டல் கருதல் என்ற இருவித அளவைகளைக் கொண்டு கணிக்கிறார். இந்தக் காண்டல் கருதல் அடிப்படையில் சிறுகதையும் பிரத்தியட்சமாகக் காணும் காட்சியனுபவத்தைவிட, அதற்கு அப்பால் கருதும் கருப் பொருளாகிய மெய்ப்பொருள் உண்மைதான் சிறுகதையின் இலக்கியக் கொள்கை என்று இந்தஅம்மையார் நம்புகிறார். மேலாழ்ந்த வாரியாக உலகத்தில் நம் கண்ணுக்குப் புலப்படும் காட்சியைவிட அதற்கு அப்பாலேதான் உண்மையின் வடிவமான மெய்ப்பொருள் கரந்திருக்கிறதைப் போல, சிறுகதையிலும் அதன் பொருள் கதையின் கட்டுக் கோப்புக்குள் மறைந்து நிற்கவேண்டும் என்று சொல்கிறார். நமது தமிழ் இலக்கிய மரபில் இந்தத் தத்துவத்தை வள்ளுவரே மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

> ''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு''

## இவ்வுரைக்குத் துணை நின்ற நூல்கள்


இருபதில் சிறுகதைகள் (1900-1973)—தா. எ. பியூலா மெர்சி, 1974

கதையின் கதை, கலைமகள் வெளியீடு 1957.

புதுமைப்பித்தன் கட்டுரைகள், 1954.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் — டாக்டர் மா. இராமலிங்கம், 1973.

தமிழ்ச்சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் — டாக்டர் கா. சிவத்தம்பி, 1967.

வளரும் தமிழ் இலக்கியம்—நண்பர் வட்டம், 1970.

தமிழ்ச்சிறுகதை பிறக்கிறது —சி. சு. செல்லப்பா, 1974.

கதைக் கலை— அகிலன், 1972.

சிறுகதை—மீ. ப. சோமசுந்தரம், 1974.

இலக்கியச் சிந்தனை வெளியிட்ட கதைத்தொகுதிகள், 1970-1976.

படித்திருக்கிறீர்களா—க. நா. சுப்பிரமணியம்.

புதுமைப்பித்தன் கதைகள், 1940.

புதுமைப்பித்தன் சிறுகதைக் கலை — டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், 1976.

தமிழில் சிறுகதை—சாலை இளந்திரையன், 1966.
தமிழ்ச் சிறுகதைகள், ஒரு மதிப்பீடு—செந்தில்நாதன், 1967.
தீபம், எழுத்து முதலிய சில ஏடுகள்.

Bates, H. E., The Modern Short Story: A Critical Survey, 1972.

Bowen, Eiizabeth—The Faber Book of Modern Short Stories, 1936.

Gullason, Thomas A.—The Short Srory: An underrated Art, 1964.

Lawrence, James Cooper--A Theory of the Short Story, 1917.

Mathews, Branda—The Philosophy of the Short Story, 1901.

O'Connor, Frank—The Lonely Voice, 1963.

Poe, Edgar Allan—Review of Twice Told Tales, Grahams Magazine, 1842.

Rohrberger, Marry—The Short Story, A Pronosed Definition: 1966.

Sundararajan, P.G.—Indian Writing Today 1966.

Welty, Eudora—The Reading & Writing of Short Stories, Atlantic Monthly, 1949.

8

# "இதழ்கள்"

**—மு.இ. அகமது மரைக்காயர்**

வாழ்வியலுக்கு வளஞ்சேர்க்கும் இருபெரும் துறைகள் நூலும் இதழுமாகும். நூல் காலத்தால் முந்தியது. இதழோ இன்றியமை யாமை கருதி இடையில் தோன்றியது. நூல் எவ்வாறு வாழ்வில் எல்லாத் துறைகளையும் தழுவி நிற்கின்றதோ அவ்வாறே இதழும் எல்லாத் துறைகளோடும் இணைந்து இயங்குகின்றது. இதழோடு தொடர்பில்லாத் துறைகள் இல்லையென்னும்படியாக இன்று இதழ் அனைத்துத் துறைகளிலும் விரிந்து பரந்து விளங்குகின்றது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய செய்திகளோடு, புதுப்புது கருத்துக் களோடு, புதுமைமிகு ஆக்கங்களோடு தொடர்ச்சி, வளர்ச்சியுடை யதாய் மக்கள் தேவையறிந்து வேண்டியன வழங்கும் இயல்புடைய தாய் இதழ்கள் இயங்குகின்றன. இன்றைய செய்தித் தொடர்புக் கருவிகளாக விளங்குகின்ற இதழ், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்—இவற்றுள் முன்னதே முதன்மை பெற்று மிகப் பெரும்பாலோர்க்குப் பயன் நல்கிக் கொண்டிருக்கின்றது. அரசியல் அறிவியல், ஆன்மீகம், சமுதாய முன்னேற்றம், கல்வி, கலை, முதலான அனைத்தையும் அணைத்து நின்று ஓரளவே கல்வி பெற்றோர் முதல் மிகக் கற்ற அறிஞர்கள் வரை எல்லோரும் படிக்கும் ஏற்றமுடையதாய் இதழ்கள் விளங்குகின்றன. இவ்வாறு மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கும் இதழ் களின் நோக்கு, போக்கு, பண்பு, பயன்பாடு, உள்ளடக்கம், மொழி

யமைப்பு முதலான பல கூறுகளையும் ஆராய்ந்து அவற்றின் கொள்கைகளைக் காண முயல்கின்றது இக்கட்டுரை.

## இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தொடக்க கால மக்கள், குரலெழுப்பல், சீழ்க்கை ஒலித்தல், சங்கு கொம்பு ஊதல் முதலியவற்றைச் செய்தி உணர்த்தும் வாயில் களாகக் கொண்டிருந்தனர். காலவோட்டத்தில் மொழி தோன்றி எழுத்து வடிவம் ஏற்பட்டதும் செய்திகள் ஓலைகளில், துணிகளில் எழுதப்பட்டுப் புறாக்கள் மூலமும், குதிரை வீரர்களின் மூலமும் இன்னும் பல வழிகளிலும் உரியவர்க்கு அனுப்பட்டன. இவை யெல்லாம் தனிப்பட்டோரின் செய்தித் தொடர்புக்கே பயன் பட்டன. நாட்டில் மன்னராட்சி நடந்தபோது அரசர் அறிவிக் கின்ற செய்திகள் முரசறைவதன் மூலம் மக்களுக்குத் தெரிவிக்கப் பட்டன. நம் நாட்டிலும் பறையறைவதன் மூலம் மக்களுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டதைப் பழந்தமிழ் நூல்கள் பகர்கின்றன.

"பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையன்" (குறிஞ்சிக்கலி 20:32-33)

என வரும் கலித்தொகை அடிகளையும்,

"யானை யெருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்" (மங்கல வாழ்த்துப் பாடல் 43 44)

எனவரும் சிலப்பதிகார அடிகளையும் சான்றாகக் காட்டலாம்.

இந்தியச் செய்திப்பத்திரிகை மொகலாயர் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக ஔரங்கசீப்பின் காலத்திலேயே தோன்றியதாகக் கூறப் படுகிறது.[1] "மொகலாயர் ஆட்சிக் காலத்தில் பல செய்தியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனுப்பும் செய்திகள் தாள் களில் எழுதப்பட்டு அரசர், அமைச்சர், அரசு ஊழியர்களுக்குப் படியெடுத்து அளிக்கப்பட்டன. இச்செய்தித் தாள்கள் (Manus -cript Newspapers)—தங்கள் நாட்டின் எல்லையைக் கடந்து பிற நாடுகளுக்கும் அனுப்பும் நிலையை அடைந்தன. ஔரங்கசீப் காலத்தில் பத்திரிகைத் தொழில் மேலும் வளர்ச்சி அடைந்தது... ஔரங்கசீப் பத்திரிகை உலகிற்கு அதிகச் சுதந்திரம் அளித்தார்"[2]

---

1. பழனி அரங்கசாமி, செய்திஉலகம், முத்தமிழ் நிலையம், மதுரை, 1975, ப. 39
2. Natarajan, J., History of Indian Journalism, New India Delhi, 1955, p. 2.,

என்ற செய்தியிலிருந்து மொகலாயர் காலத்தில் பொது மக்களுக்கும் பயன்படும் வகையில் செய்தித்தாள்கள் இருந்தன என்பதை அறியமுடிகின்றது.

அறிவியலின் அரிய கண்டுபிடிப்பாக அச்சுப் பொறி ஜெர்மனியில் ஜான்கூட்டன்பர்க்கு (கி. பி. 1390-1468) என்னும் அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டது. அச்சுப்பொறி கண்டுபிடிப்பால் நூல்கள் அச்சில் வெளிவந்தன. ''ஜெர்மனியில் முதன்முதலில் துண்டுப் பிரசுரம் வெளியாயிற்று. கி. பி. 1609-ஆம் ஆண்டில் ஜெர்மனியில் ஸ்ட்ராஸ்பர்க் என்னும் நகரத்திலிருந்து வெளிவந்த 'ரிலேசன்' என்ற பத்திரிகைதான் முதலாவது ஆகும்''[3]

அச்சுக்கலை பிற நாடுகளில் பரவியது போலவே இந்தியாவிலும் பரவியது. கிறித்தவ மத குருக்களின் மூலம் வந்த அச்சுப் பொறிகளில் தமிழ், பிறமொழிகளில் கிறித்தவ சமயப் பிரசாரத் துண்டு வெளியீடுகள் அச்சடிக்கப்பட்டுப் பரப்பப்பட்டன. கி. பி 1780-ஆம் ஆண்டு, சனவரி 29-ஆம் நாளில் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் 'பெங்கால் கெஜட்' என்ற இதழை வெளியிட்டார். இதுவே இந்தியாவில் அச்சில் வெளிவந்த முதல் இதழாகும்.[4]

1830 ஆம் ஆண்டு வரையிலும் தமிழில் இதழ்கள் எதுவும் தோன்றவில்லை. சென்னையிலிருந்த கிறித்தவ சமயப் பிரசாரக் கழகம் 1831-இல் 'தமிழ்ப் பத்திரிகை' (Tamil Magazine) என்ற செய்தி இதழை முழுதும் தமிழிலேயே வெளியிட்டது. இதுதான் தமிழில் வெளிவந்த முதல் செய்தி இதழாகும்.[5] இவ்விதழ் முழுக்க முழுக்கக் கிறித்தவ சமயப் பிரசார ஏடாகவே இருந்தது. சமயச் செய்திகளும் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன. அதனைத் தொடர்ந்து வெளிவந்த மிஸ்ஸனரி கிளேனஸ் (1840), ஃபிரெண்ட்லி இன்ஸ்ட்ரக்டர் (1840), நற்போதகம் (1848) முதலிய பல இதழ்கள் கிறித்தவ சமயப் பரப்பிதழாகவே இருந்தன. பால தீபிகை (1840) சிறுபிள்ளையின் தேசத்தோழன் (1849) போன்ற இதழ்கள் சிறுவர்களுக்காகத் தொடங்கப்பட்டன. அமிழ்தவசனி

3. கலைக்களஞ்சியம், தொகுதி-6, ப. 701.
4. Chalapathi Ram, M., The Press, National Book Trust New Delhi, 1974, p. 12.,
குளத்தூரான், க., மு. கு. நா., ப. 7.
5. சம்பந்தன், மா. சு., 'தமிழ்ப் பத்திரிகைகள்', தில்லித் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர், 1971, ப. 231.

(1860), சுகுண போதினி (1883) போன்றவை பெண்கள் செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்தன. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வெளிவந்த இதழ்களில் பெர்சிவல் பாதிரியரால் நடத்தப் பட்ட தினவர்த்தமானி (1852) தமிழ்மக்களிடம் நிறைந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. இது, செய்திகளோடு அறிவியல், இலக்கியக் கட்டுரைகளையும் வெளியிட்டது. பெர்சிவல் பாதிரியார்க்குப் பிறகு சி. வை. தாமோதரம் பிள்ளை இவ்விதழின் ஆசிரியராகச் சில காலம் பணியாற்றியுள்ளார்.''[6] கி.பி. 1900 ஆண்டுக்குள் வெளிவந்த தமிழ் இதழ்களில் கிறித்தவ இதழ்களோடு இந்து, இசுலாமியச் சமய இதழ்களும் பெருகிவிட்டன. 1882-ஆம் ஆண்டில் கிழமை இதழாக வெளிவந்த சுதேசமித்திரன் 1887-இல் கிழமை மும்முறை இதழாக வெளிவந்து 1889 - ஆம் ஆண்டில் நாளிதழாக வளர்ந்தது. தொடக்க காலத்தில் பட்டும் படாமலும் ஆங்கில அரசை எதிர்த்து வந்த இவ்விதழ் பாரதியார் துணையாசிரியர் பொறுப்பேற்றதும் (1904) தீவிரமாகத் தாக்கி எழுதத் தொடங்கியது. தமிழ் இதழ்களில் 'சுதேசமித்திர'னிலேயே முதன்முதலாக அரசியல் குரல் ஒலித்ததாகத் தெரிகிறது. பாரதியாரால் தொடங்கப்பட்ட இந்தியா (1907) 'விஜயா' போன்ற இதழ்களும் திரு. வி. க. ஆசிரியராயிருந்த 'தேசபக்தன்' (1917) நவசக்தி (1920) இதழ்களும், தமிழ்நாடு (1922), சங்கு (1930), தினமணி (1934), தினசரி (1944) போன்ற இதழ்களும் விடுதலை உணர்வைத் தூண்டி எழுதின.

சான்றோர்குல விவேக போதினி (1909) வன்னிய குல சத்திரிய தீபம் (1912), செங்குந்தன் (1921), பிராம்மணன் (1925) யாதவ மித்திரன் (1929) போன்ற பல இதழ்கள் தனிப்பட்ட சமூகத்தினர் முன்னேற்றத்திற்காகத் தோன்றின.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்' (1902), மறைமலையடிகளாரின் 'அறிவுக் கடல்' (1902), சைவசமய நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டுவரும் 'செந்தமிழ்ச் செல்வி' (1923), கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'தமிழ்ப் பொழில்' முதலியன இலக்கியத்தை வளர்ப்பதற்காக எழுந்தன.

---

6. முத்துக்குமாரசுவாமி, இரா., சில பழைய இதழ்கள் பற்றிய விவரங்கள் (குறிப்பு), சோமலெ. தமிழ் இதழ்கள் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1975, பிற்சேர்க்கை XIII, ப. ixxiii

திராவிடன் (1917), குடியரசு (1925), ஜனசக்தி (1937) போன்றன இயக்கச் சார்பிதழ்களாக உருவாயின,

ஆனந்த விகடன் (1926), கல்கி (1941), குமுதம் போன்றன பொழுதுபோக்கு இதழ்களாக அமைந்தன.

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளில் தமிழ் இதழ்களின் பொருண்மைநிலை வளர்ச்சியை நோக்கும்போது அவை சமயம், நாட்டுணர்வு, தனிப்பட்ட சமூக முன்னேற்றம், இலக்கிய வளர்ச்சி, இயக்கச் சார்பு. சமுதாய நலன், செய்தி வெளியீடு, தொழில் மேம்பாடு, அறிவியல் அறிவு, அரசியல் விழிப்புணர்வு போன்ற பல அடிப்படைகளில் இயங்கி வருவதைக் காணமுடிகின்றது. இவ்வகையில் இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட இதழ்கள் தமிழில் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

## இதழை குறிக்கும் சொற்கள்

இதழ், ஏடு, பத்திரிகை, சஞ்சிகை, தாளிகை முதலியன இதழைக் குறித்து வழங்குகின்ற சொற்களாகும். இவற்றுள் பத்திரிகை, சஞ்சிகை என்பன வடசொற்கள். ஏனையவை தமிழ்ச் சொற்கள்.

பத்திரிகை என்ற சொல்லுக்கு—இலை, ஓற்றை, ஓலையுறுதி, திருமுகம் போன்ற பொருள்கள் உண்டு.

சஞ்சிகை என்ற சொல் 'சஞ்சரித்தல்' என்னும் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம். 'சஞ்சரித்தல்' என்னும் சொல்லுக்குப் பேசுதல், திரிதல், வாழ்தல் ஆகிய பொருள்கள் உண்டு.

இதழ் என்ற சொல், இலை, உதடு, கண்ணிமை, பனையேடு பாளை, பூவிதழ் ஆகிய பொருள்களைக் குறிக்கின்றது.

ஏடு என்ற சொல், கண்ணிமை, பனையேடு, பாலாடை, பூவிதழ் ஆகிய பொருள்களைச் சுட்டுகின்றது.

இதழ், ஏடு ஆகிய சொற்களுக்கு பனையேடு என்னும் பொருள் இருப்பதைக் காண்கின்றோம். முற்காலத்தில் ஓலைகளையே எழுதுவதற்குப் பயன்படுத்தினர். எழுதப்படாத ஓலையையும் எழுதப்பட்ட ஓலையையும் 'ஓலை' என்ற ஒரே சொல்லாலேயே குறித்தனர் சுவடி என்ற சொல் எவ்வாறு சுவடியில் (பனையேட்டில்) எழுதப்பட்ட நூலையும் குறிக்கின்றதோ அவ்வாறே பனை ஓலை என்ற பொருளைக் குறிக்கின்ற இதழ், ஏடு ஆகிய

சொற்கள் செய்திகள் எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட ஓலையை அல்லது தாளைகுறிக்கும் வகையில் இன்று பயன்படுத்தப் படுகின்றது.

செய்திகளைச் சொல்லுதல் என்ற பொருளில் சஞ்சிகை என்னும் சொல் இதழைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இச்சொல் இன்று வழக்கொழிந்த நிலையில் உள்ளது.

ஏடு என்ற சொல் ஒரு சிலரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதழ் என்ற சொல் நல்ல தமிழ்ச் சொல்லாக இருப்பினும் அது ஓர் இதழின் வெளியீட்டு எண்ணையும் (மலர்:1, இதழ் 3) குறிக்கப் பயன்படுத்தப்படுவதால் இதழைக் குறிக்கத் தாளிகை என்ற தனித் தமிழ்ச் சொல்லைப் பாவாணர் உருவாக்கினார். தனித்தமிழ் இயக்க இதழ்கள், 'தாளிகை' என்ற சொல்லைப் பயன்படுத்தின. 'அறிவு' (1970) என்னும் இதழ் தன்னைத் 'தனித் தமிழ்த் தாளிகை' என்று அறிமுகப்படுத்திக் கொண்டது.

"தாளிகை—தாள்+இகை எனப் பிரியும். 'தாள்' என்ற சொல் இலை, ஓலை, இதழ், ஏடு என்ற பொருள்களைக் குறிப்ப தோடு எழுத, அச்சடிக்கப் பயன்படும் தாளை (காகிதத்தை)யும் குறிக்கும். 'இகை' என்பது கொடுத்தல், நடத்தல் என்ற பொருளு டையது அதனால் 'தாளிகை' என்ற சொல் 'தாள்வழி செய்தி முதலியவற்றைக் கொடுத்தல்' என்னும் திரட்சிப் பொருளை உடையதால் அதுவே இதழைக் குறிப்பதற்கு ஏற்ற சொல்லாகும்'' என்று தனித்தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த ஓரறிஞர் கூறுகின்றார்.[7]

பத்திரிகை, சஞ்சிகை, இதழ், ஏடு ஆகிய சொற்களை விடவும் தாளிகை என்ற சொல்லில் சிறந்த பொருள் பொதிந்திருப்பினும் அச்சொல் பெருவழக்காய் இன்னும் ஆகவில்லை. சில தனித்தமிழ் இதழ்கள்கூட இதழ்' என்ற சொல்லையே பயன்படுத்துகின்றன. 'தென்மொழி,' தன்னைத் 'தனித்தமிழ் இலக்கியத் திங்கள் இதழ் என்றுதான் குறிக்கின்றது.

இதழ் என்ற சொல்லே தற்போது மிகப் பெரும்பாலோரால் பயன்படுத்தப்படுகின்றது சில ஆய்வாளர்களுக்கும் 'இதழ்' என்ற

7. இறையடியான்— கானரை, 'தனித்தமிழ்த் தாளிகைகளின் இலக்கியக் கோட்பாடு' (அச்சேறாக்கட்டுரை).

சொல்லையே கையாண்டுள்ளனர் (தமிழ் இதழ்கள்—சோமலெ, முற்காலத் தமிழ் இதழ்கள் ஓர் அறிமுகம்-மா.ரா. இளங்கோவன்).

'சித்தாந்த சங்கிரகம்' (1877) என்னும் இதழில் 'இதழ்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.[8] இதனால் 1877 ஆம் ஆண்டி லேயே அல்லது அதற்கு முன்பிருந்தே 'இதழ்' என்ற சொல் பத்திரி கையைக் குறிக்கப் பயன் பட்டமையை அறிய முடிகின்றது.

## இதழ் வகைகள்

இதழ்களைச் சிறப்பாக ஐந்து முறைகளில் வகைப்படுத்தலாம்.

1. கால இடைவெளி அடிப்படையில் நாளிதழ்கள், கிழமை இரு முறை இதழ்கள், கிழமை மும்முறை இதழ்கள், கிழமை இதழ் கள், திங்களிருமுறை இதழ்கள், திங்களிதழ்கள், இரு திங் கட்கொரு முறைஇதழ்கள், காலாண்டிதழ்கள், அரையாண்டி தழ்கள். ஆண்டிதழ்கள் என்று வகைப்படுத்தல்.

2. விற்பனை அடிப்படையில் பேரிதழ்கள் (வெகுஜனப் பத்திரிகை கள், சிற்றிதழ்கள், சிறுபத்திரிகைகள்) என்று இரு பெரும் பிரி வாக வகைப்படுத்தல்.

3. உள்ளடக்கத்தின் அடிப்படையில் செய்தி இதழ்கள், அரசியல் இதழ்கள், சமய இதழ்கள், இயக்க இதழ்கள். இலக்கிய இதழ் கள், தனிப்பட்ட சமூகத்தினர் முன்னேற்ற இதழ்கள், அறி வியல் இதழ்கள், கலை இதழ்கள், பொழுது போக்கிதழ்கள் என்பன போன்று வகைப்படுத்தல்.

4. யாருக்காக நடத்தப்படுகிறது என்ற அடிப்படையில் பெண் களுக்கான இதழ்கள், சிறுவர்க்கான இதழ்கள் பெரியவர்க் கான இதழ்கள், இலக்கியவாதிகளுக்கான இதழ்கள், குறிப் பிட்ட அரசியல் கட்சியினர்க்கான இதழ்கள் என்பன போன்று வகைப்படுத்தல்.

---

8. ''இவ்விதழ்கள் கல்கத்தா, சென்னைப் பட்டணம், பம்பாய், அல்லஹாபாத் அல்லது பிரயாகை இந்நான்கு ஹைகோர்ட்டாருடையவும் பிரிவி கவுன்சில். என்ற மகாராணியவர்களுடைய நியாய சபையாருடையவும் சித்தாந்தங்களடங்கிய லாரிப்போர்ட்டாகும்'' என்னும் இப்பகுதி இவ்விதழின் உள்ளது.
—இளங்கோவன், மா. ரா., முற்காலத் தமிழ் இதழ்கள்—ஓர் அறிமுகம், சேகர் பதிப்பகம், சென்னை-33, மு. ப. 1979, ப. 30.

5. வடிவத்தின் அடிப்படையில் உரைநடை இதழ்கள், கவிதை இதழ்கள், இரண்டும் கலந்த இதழ்கள் என்றுவகைப்படுத்தல்.

இக்கட்டுரை இதழ்களின் கொள்கைகளைக் காண்பதை நோக்கமாய்க் கொண்டிருப்பதால் அதற்கு மூன்றாவது வகைப் பாடே ஏற்ற நிலையில் அமைந்திருப்பதால் அவ்வகைப் பாட்டின் படியே ஆய்வு அமைகிறது.

## செய்தி இதழ்கள்

நாளிதழ்களே செய்தி இதழ்களாக விளங்குகின்றன. உலகின் நடைமுறை நிகழ்ச்சிகள் வழக்கத்திற்கு மாறாக அமையும்போது செய்திகள் பிறக்கின்றன. ஒரு நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியாகாது. ஆனால் ஒரு மனிதன் நாயைக் கடித்தால் அது செய்தியாகும்'' என்று டானா என்னும் இதழாசிரியர் கூறியுள்ளார்.[9]

வோல்ஸ்லீ என்ற அறிஞர், ''மிகுந்த எண்ணிக்கையுடைய வாசகர்கள் விரும்புகின்ற முற்றிலும் உண்மையான நிகழ்ச்சிகளை அல்லது கருத்துக்களைச் செய்திகள்'' எனலாம் என்கிறார்.[10]

தமிழ் செய்தித் தாள்களில் விழா, விளையாட்டு, திரைச் செய்திகள், அரசியல் தலைவர்களின் அறிக்கைகள்,பரிசுச் சீட்டு முடிவுகள், இராசி பலன்போன்ற வழமையான செய்திகளோடு (Routine News) விபத்து கலவரம், சாவு, கொலை, கொள்ளை போன்ற எதிர்பாராச் செய்திகளும் (Umexpeeted Nenrs) இடம் பெறுகின்றன.

செய்தித்தாள்களில் இடம் பெறுகின்ற செய்திகளைக் கொண்டு அத்தாள்களின் சார்புத் தன்மையையும் சார்பிலாத் தன்மையையும் அவற்றின் கொள்கையையும் அறியமுடிகின்றது. 24-5-83 அன்று வெளிவந்த சில நாளிதழ்களின் தலைப்புச் செய்திகள் வருமாறு.

தினந்தந்தி: பிரதமர் இந்திரா நாளை சென்னை வருகிறார்.

---

9. H. F. Harrington, மே. கோ. குளத்தூரன், க., மு.கு நூ. ப. 35.
10. News may be defined as an accurate fact or idea that will interest a large number of readers—Roland E. Wolsley,
—மே. கோ. கோதண்டபாணி, இரா., இதழியல், கற்பக நூலகம், மதுரை-2, 1980, ப. 30.

தினமணி: அமைதியாகத் தேர்தல் நடத்தக் காஷ்மீர் அரசு உறுதி.

தினமலர்: கிருஷ்ணா நீரைப் பயன்படுத்தத் தமிழக எல்லைக்குள் புதிய அணைகள்.

விடுதலை: சீக்கியத் தலைவர்களைத் தீர்த்துக் கட்ட பஞ்சாப் அரசு சதித் திட்டம்.

மக்கள் குரல்: சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் திட்டப் பணிகள் தொடக்கம். சென்னை நகரமே விழாக்கோலம்.

நவ இந்தியா: பிரதமர் நாளை சென்னை வருகிறார்.

முரசொலி: கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தம் பற்றி விவாதிக்க சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டும்.

எதிரொலி: முதல்வர் குழப்புகிறார். வியாபாரிகள் சங்கம் கண்டனம்.

தினத்தந்தி, நவ இந்தியா போன்ற நாளிதழ்கள் பிரதமர் வருகையையே தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளன. இவ்விதழ்கள் கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்த விழா பற்றி இல்லாமல் (உட்பகுதியில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது) அவ்விழாவில் பங்கேற்கவிருக்கும் பிரதமரின் வருகைச் செய்திக்கே முதன்மை கொடுத்திருப்பதால் இவ்வகை இதழ்கள் ஓரளவு படித்தோர், பெரும்பாலோர் விரும்பும் செய்திகளையே அளிக்கின்றன என்பது புலனாகின்றது.

'தினமணி'யோ மேற்சொன்ன இரு செய்திகளையும் விடுத்து காஷ்மீர் அரசு எடுத்த உறுதிச் செய்தியினை தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருப்பது நாளை நடக்கப் போகும் நிகழ்ச்சியினை விடவும் இன்றைய செய்திகளே முதன்மை வாய்ந்தவை, உள் மாநிலச் செய்திகளைவிடவும் பிற மாநில, உலகளாவிய செய்திகளையே மக்களுக்குத் தரவேண்டும் என்ற அதனுடைய கொள்கையையும் அரசுச் சார்பையோ, எதிர்ப்பையோ காட்டிக் கொள்ளாத தன்மையையும் வெளிப்படுத்துகின்றது,

தினமலர், மக்கள் குரல் இரண்டும் கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்த செய்திகளை வெளியிட்டிருப்பது உள்நாட்டுச் செய்திகளுக்கு முதன்மை கொடுப்பதையும், அரசின் செய்திகளை மறைமுகமாக அல்லது நேரடியாகப் பாராட்டும் பண்பினையும் காட்டுகின்றது.

முரசொலி, எதிரொலி, விடுதலை ஆகிய இதழ்களின் தலைப்புச் செய்திகள் அரசின் செயல்களை எதிர்க்கும் அவற்றின் பண்பினை வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறாகச் செய்தித்தாள்களின் நோக்கிற்கும் கொள்கைக்கும் ஏற்ப அவை வெளியிடும் செய்திகள் அமைகின்ற தன்மையினைக் காணமுடிகின்றது.

ஒவ்வொரு நாளும் நடைபெறும் அரசியல், சமூக நிகழ்ச்சிகள் பரபரப்பூட்டும் செய்திகள், சாதனைகள் போன்ற புதிய செய்திகளை அளிப்பதே நாளிதழ்களின் நோக்கமாக இருக்கின்றது. நடந்த நிகழ்ச்சிகளே செய்திகளாகின்றன. கற்பனைச் செய்திகளுக்கு நாளிதழ்களில் இடமில்லையெனினும் சில இதழ்கள் நாள்தோறும் படக்கதை, நகைச்சுவைத் துணுக்குகள், அவ்வப்போது கதை, கவிதை போன்ற கற்பனைப் புனைவுகளையும் வெளியிடுகின்றன.

## அரசியல் இதழ்கள்

இன்றைய இதழ்களில் குறிப்பிடத்தக்க அளவின அரசியல் கட்சிகளுடையனவாகவோ அல்லது ஆதரவுடையனவாகவோ அமைந்துள்ளன. இவ்விதழ்கள் தற்சார்புச் செய்திகளைப் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. மறுப்பதற்காக அல்லது குறை சொல்வதற்காகவே பிற கட்சிச் செய்திகளை வெளியிடுகின்றன.

தமிழில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அரசியல் விமரிசன இதழாகத் திகழ்வது 'துக்ளக்' (1970) ஆகும். அரசியல் விமரிசனத்திற்காகத் தொடங்கப்பட்ட இதழ்களில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது இது ஒன்றே. சொல்லும் கருத்துக்களைத் தீவிரமாகச் சொல்லாமல் அங்கத முறையில் எடுத்துரைப்பதால் பல்வேறு கட்சியினரும் இவ்விதழைப் படிக்கின்றனர். 'விசிட்டர்' (1973) என்ற அரசியல் விமரிசன இதழ் தொடங்கப்பட்ட சில திங்கள்களிலேயே நின்றுவிட்டது.

பொதுவாக அரசியல் இதழ்கள் தம் கட்சிச் செய்திகளை தலைவரது அறிக்கைகளை வெளியிடுவதையும் பிற கட்சியினரைக் குறை கூறுவதையும் தம் நோக்கமாகக் கொண்டுள்ளன. பக்தி, சமயச் செய்திகளை இவ்விதழ்களில் காணமுடியாது. இன்றைய அரசியல் கட்சிகள் புதிது புதிதாகத் தோன்றும் போதும் ஒன்று பிரிந்து பலவாகும்போதும் இதழ்களும் புதிது புதிதாக உருவெடுக்கின்றன. சில அரசியல் இதழ்கள் நாகரிகமற்ற முறையில் பிற கட்சியினரைத் தாக்கி எழுதுகின்றன. இந்நிலை தவிர்க்கப்பட

வேண்டும். 'தமிழக அரசியல் இதழ்கள் மஞ்சள் பத்திரிகைகளின் மறுவடிவமெடுத்து உலவி வருகின்றன'[11] என்ற கூற்று சிந்திக்கத் தக்கது.

## சமய இதழ்கள்

தமிழ் இதழ்களின் தொடக்க காலமே சமயத்தைச் சார்ந்து இருப்பதும், இன்று சமயச் சார்பு இதழ்கள் நிறையத் தோன்றியிருப்பதும் சமய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்த்துகின்றது. இன்று இந்து மதம், இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயங்களின் சார்பாக நூற்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பெரும்பாலான சமய இதழ்களின் நோக்கம் தம் சமயக் கருத்துக்களைத் தம்மவர் உணர்ந்து அதன் வழிச் செயல்பட வேண்டும் என்பதே. பிற சமயங்களைக் குறை கூறும் போக்கைப் பல சமய இதழ்களில் காண முடியவில்லை. இப்போக்கு பாராட்டிற்குரியது. எனினும் ஹிந்துமித்திரன், மெய்வழி போன்ற ஒரு சில இதழ்கள் அவரவர் சமயக் கருத்துக்களைக் கூறுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் பிற சமயத்தவரைக் குறை கூறும் நோக்குடன், மத வெறியைத் தூண்டும் வகையில் எழுதிவருவது மிகவும் வருந்தற்குரியது. சமய இதழ்களில் சில சமயக் கருத்துக்களை மட்டும் கூறாது ஒரு தனிப்பட்ட மனிதரது கருத்துக்களுக்கும் செய்திகளுக்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. ('சனாதன சாரதி' என்னும் இதழ் திரு. சாயிபாபாவின் கருத்துக்களையும் செயல்களையும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றது). தன்னைச் சார்ந்தவர் படிப்பதையே முதல் நோக்கமாகக் கொண்டிருப்பதால் பிற சமயத்தவர் எளிதில் படித்துப் புரிந்துகொள்ள முடியாத அளவில் பெரும்பாலான சமய இதழ்கள் உள்ளன (சில விதிவிலக்காக உள்ளன).

அனைத்துச் சமயக் கருத்துக்களையும் எடுத்துக் கூறும் நோக்கில் 'ஆன்மீக இன்பம்' என்னும் இதழ் ஒரு புது முயற்சியாகத் தொடங்கப்பட்டது. நவம்பர் 1982 இதழில் 'கீதை காட்டும் இன்பம்' 'அல்லாமா இக்பாலின் பிரார்த்தனை' 'பைபிள் கூறும் ஆன்மிகப் பண்புகள்' போன்ற பல சமயக் கருத்துக்களும்

11. கோதண்டபாணி, இரா., மு. கு. நூ. ப. 30.

இடம் பெற்றுள்ளது. 'சர்வ சமய ஆன்மிக மாத இதழ்' என்ற முத்திரையுடன் வெளிவந்த இவ்விதழ் தற்போது வருவதாகத் தெரியவில்லை.

சமய இதழ்களில் அரசியல், திரைப்படம், நகைச்சுவைத் துணுக்குகளைக் காண முடிவதில்லை (விதி விலக்கு; 'சமரசம்'— அரசியல் செய்தி; 'முஸ்லீம் முரசு'—நகைச்சுவைத் துணுக்குகள்; நம் வாழ்வு—திரைச் செய்தி.)

## இயக்க இதழ்கள்

தமிழகத்தில் தோன்றிய இயக்கங்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன பெரியாரின் பகுத்தறிவு இயக்கமும் பாவாணரின் தனித் தமிழ் இயக்கமுமாகும். முன்னது சமுதாயத்திலும் பின்னது மொழியிலும் கவனம் செலுத்துகின்றன. இவ்விரு இயக்கங்களின் சார்பில் இதழ்கள் வெளிவருகின்றன.

## பகுத்தறிவு இதழ்கள்

குடியரசு (1925), விடுதலை (1935), பகுத்தறிவு (1951 பெரியார் குரல் (1954), திராவிடன் குரல் (1955), பெரியாரிசம், (1960), உண்மை (1970) போன்றன பகுத்தறிவு இதழ்களாகும்.

கடவுள் மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, மேல்மட்டத்தினர் கீழ் மட்டத்தினர்க்கு இழைக்கும் கொடுமைகளைக்களைதல், பெண் கல்வியை வலியுறுத்தல், மூடப்பழக்கங்களைக் கண்டித்தல், புராண இதிகாசங்களில் காணப்படும் ஆபாசக் கதைகளைவெளிப்படுத்தல், பிராமண ஆதிக்க எதிர்ப்பு, திராவிடர் முன்னேற்றம் இவையே இவ்விதழ்களின் கொள்கைகளாக இருக்கின்றன. இவற்றின் அடிப் படையிலேயே இவ்விதழ்களின் கட்டுரைகளும் கவிதை, கதைகளும் அமைந்துள்ளன.

மூடநம்பிக்கை ஒழிப்பிலும் நாத்திக எண்ண வளப்பிலும் இவை முதலிடம் வகிக்கின்றன.

## தனித்தமிழ் இதழ்கள்

உலக மொழிகட்கெல்லாம் முதன்மொழி தமிழே என்ற உண்மையை வலியுறுத்தி நிலைநிறுத்தவும் தமிழ்மொழியில் கலந்துவிட்ட வேற்றுமொழிச் சொற்களைக் களையவும் அறிவியல் கலை அனைத்திலும் தனித் தமிழையே பயன்படுத்தவும் தனித்

தமிழ் இயக்கம் தோன்றியது. மறைமலையடிகள் காலத்தில் வித்திடப்பட்ட தனித்தமிழ் எண்ணம் படிப்படியாக வளர்ந்து பாவாணர் காலத்தில் இயக்கமாக வளர்ச்சியடைந்தது. தமிழ் மொழி தமிழ்மக்கள், தமிழ்நாடு இவற்றின் முன்னேற்றமும் வளர்ச்சியுமே இவ்வியக்கத்தின் முதன்மையான கொள்கையாகும்.

பெருஞ்சித்திரனாரால் தொடங்கப்பட்ட தென்மொழி (1962) என்ற இதழே இவ்வியக்கச் சார்பில் வெளிவந்த முதல் இதழாகும். இதனையடுத்துப் பூஞ்சோலை (1966), முதன்மொழி (1970), வலம்புரி (1972), தமிழம் (1972), அறிவு (1970) போன்ற பல இதழ்கள் தனித்தமிழ் இயக்கத்தினரால் நடத்தப்பட்டன. தற்பொழுது தென்மொழி, தமிழ் நிலம் இரண்டு மட்டுமே வெளிவருவதாகத் தெரிகிறது.

தனித்தமிழ் இதழ்களின் மூலம் பல தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கிற்கு வந்தன. புதிய கலைச்சொற்கள் காணப்பட்டன, 'பூஞ்சோலை' திரைச் செய்திகளைக்கூடத் தனித் தமிழில் வெளியிட்டது. 1960-க்குப் பிறகு தமிழ் நாட்டில் மொழியுணர்வு ஓரளவேனும் தோன்றியதற்கு இவ்விதழ்களும் காரணமாய் அமைந்தன எனலாம்.

## பொதுவுடைமைக் கொள்கை இதழ்கள்

சிகரம், செம்மலர், தாமரை போன்றன பொதுவுடைமைக் கொள்கையை வலியுறுத்துகின்ற இதழ்களாகும். இவை சுரண்டல் ஊழல், வலியவர் எளியவரை நசுக்கும் கொடுமைகள், வறுமை முதலிய சமுதாயப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்தமைந்த ஆக்கங்களைத் தம் இதழ்களில் வெளியிடுகின்றன. எல்லாப் படைப்புக்களும் மார்க்சியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டமைந்த படைப்புக்களே இடம்பெறுகின்றன. இன்று இளைஞர்களால் நடத்தப்படும் பல சிற்றிதழ்கள் பொதுவுடைமைக் கொள்கை உடையனவாக அமைந்துள்ளமை இதழியலில் இக்கொள்கை வலுப்பெற்று வருவதைக் காட்டுகிறது.

## இலக்கிய இதழ்கள்

1902-இல் தொடங்கப்பட்ட 'செந்தமிழ்' இதழிலிருந்து இலக்கிய இதழ்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. இலக்கிய, இலக்கணக் கட்டுரைகளை வெளியிடும் நோக்கில் முற்கால இலக்கிய இதழ்கள் வெளிவந்தன. செந்தமிழ் (1902) செந்தமிழ்ச்

செல்வி (1923) தமிழ்ப் பொழில் (1925) போன்ற இதழ்களை இவ் வகையில் சொல்லலாம். அதன் பிறகு தோன்றிய இதழ்களுள் 'மணிக்கொடி' (1933) காலத்தை இலக்கிய 'இதழ்களின் எழுச்சிக் காலம்' என்று சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம். முந்தைய இதழ்களின் போக்கிலிருந்து இவை மாறிச் சிறுகதை, புதினம், இலக்கியத் திறனாய்வு, நூலாய்வு ஆகிய புதிய துறைகளை இலக்கிய இதழுக்குரியனவாக ஆக்கின. எழுத்து, தாமரை, சூறாவளி போன்ற இதழ்கள் மரபில்லாக் கவிதையை அறிமுகப் படுத்தி அத்துறையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டன. நாளடைவில் அதுவே 'புதுக்கவிதை' என்னும் புதிய துறையானது.

இலக்கிய இதழ்களைப் பழமையைப் போற்றுவன, புதுமையைப் புகுத்துவன என்ற இரு வகைகளாகப் பிரிக்கலாம். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில்போன்றவற்றைமுதல் வகையிலும் கணையாழி,தீபம் போன்றவற்றைஇரண்டாம்வகையிலும்கூறலாம்

பொதுவாக, இலக்கிய இதழ்களின் நோக்கம் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சி, திறனாய்வு, தரமுடைய சிறுகதை, தொடர் கதை, நாடகங்களை வெளியிடல் முதலியனவாக உள்ளன.

படைப்பிலக்கிய வளர்ச்சியில் கவிதையைக் கருத்தில் கொண்டு முழுக்க முழுக்கக் கவிதையாலேயே ஆன இதழ்களும் வெளி வந்தன. விடுதலைப் போராட்டக் காலத்திலும் அதற்குப் பின்பும் கவிதை இதழ்கள் தோன்றியுள்ளன. 'ஸ்ரீசுப்பிரமண்ய பாரதி கவிதா மண்டலம்' (1935) என்ற இதழ்முதல் கவிதை இதழாகத் தெரிகிறது. பாரதிதாசனின் குயில் (1940) கவிதை இதழ்களில் பெரும் வரவேற்பைப் பெற்றது. கவிதை (1964), சுரதா (1966), முல்லைச்சரம் (1966) போன்றன குயிலைத் தொடர்ந்து வெளி வந்த சில கவிதை இதழ்களாகும். கவிதை எழுதும் ஆற்றலை மக்களிடையே பெருக்குவதைக் கவிதை இதழ்கள் தம் நோக்க மாகக் கொண்டுள்ளன.

"இடுப்பிலோர் கையும் செவ்வாய்
இதழிலோர் விரலும் வைத்து
நடிப்பவள் தோற்கும் எண்ணம்
நடிப்பவர்க் கமைச்சர் வேலை
கொடுப்பதே தவறு நாட்டில்
குறைபல குறைய வேண்டின்
அடிக்கடி கட்சி மாறும்
ஆட்களை நீக்க வேண்டும்"

என்று தலையங்கத்தைக் கூடக் கவிதையில் எழுதும் மரபை காண்கின்றோம்.[12] மொழி, சமுதாய உணர்வுகளை வெளியிட இவ்விதழ்கள் கவிதையைக் கைக்கொண்டன. கவிதைப் போட்டிகள் கவிதை எழுதுப் ஆற்றலை வளர்த்தன.

புதுக்கவிதைக்கு மக்களிடையே வரவேற்புக் கிடைக்கத் தொடங்கியதும் புதுக்கவிதை இதழ்களும் தொடங்கப்பட்டன. நோக்கு (1964), கவிஞன் (1965), வானம்பாடி (1972) போன்றன குறிப்பிடத்தக்க இதழ்கள். வானம்பாடி பிறமொழிக் கவிதைகளையும் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. புதுக்கவிதைகள் பெரும்பாலும் மார்க்சியப் பொருள்பற்றியே அமைந்தன.

கவிதை, கவியுகம், கவிப்புனல் போன்ற இதழ்கள் முழுக்க முழுக்க மரபுக் கவிதைகளால் அலங்கரிக்கப்பட்டு வெளிவருகின்றன. புதுக்கவிதைகளை மட்டும் தாங்கி 'செம்பரிதி' போன்ற இதழ்கள் வந்துகொண்டிருக்கின்றன.

## சாதி இதழ்கள்

தொடக்க காலத்தில் சமய இதழ்களை அடுத்து வேகமாக வளரத்தொடங்கியவை சாதி இதழ்களாகும். தமிழகத்தில் பல்வேறு சாதிப்பிரிவுகள் உள்ளன. "ஆங்கிலேயர் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஒரு கூறாகத் தமிழகத்தில் சில சாதிகளைச் சேர்ந்தவர்க்குச் சலுகைகள் செய்தனர். இதனால் ஒவ்வொரு சாதியினரும் தத்தம் சமூகமே பிறவற்றை விட உயர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டப் பலவகை ஆதாரங்களைத் திரட்டிச் சொல்ல முற்பட்டனர். அவற்றுக்கு இதழ்களே ஏற்றகருவிகளாகத் தோன்றின. எனவே புதிய புதிய சமூக இதழ்கள் தோற்றுவிக்கப்பட்டன"[13] என்ற கூற்றிலிருந்து, அயலாராட்சியில் அதிகச் சலுகைகள் பெற வேண்டும் என்ற நோக்கிலேயே முற்காலத்தில் தனிப்பட்டோர் இன இதழ்கள் தோன்றியமையை அறிய முடிகின்றது.

அவ்வகையில் வெளிவந்த இதழ்களுள் சான்றோர் குல விவேக போதினி (1909), வன்னிய குல சத்திரிய தீபம்(1912), விஸ்வகர்மன் (1913), குல வேளாளர் (1922), பிராம்மணன் (1925), யாதவ மித்திரன் (1929) போன்றன குறிப்பிடத் தக்கன.

---

12. சுரதா, 1-6-68.
13. சம்பந்தன், மா. சு., மு. கு. க.

இன்றுங்கூடப் பல சாதி இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன முன்னேற்றம், இன ஒற்றுமை, தம் சமூகச் சிறப்புக்களை உணர்த்தல் ஆகியன இவ்வகை இதழ்களின் அடிப்படைக் கொள்கைகளாக இருக்கின்றன.

"நமது சமுதாயத்தில் சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்கள், புரிந்து கொண்டிருப்பவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள் என்பதை உலகுக்குக் காட்டவேண்டும் என்பதே 'சாலியர் குரலி'ன் ஆசையாகும்.[14]

"நம்மின மக்களின் ஆற்றலை உலகுக்கு எடுத்துக் காட்டி ஏற்றம் பெற வைப்பதே 'யாதவ'த்தின் தலையாய கொள்கையாகும்"[15] என்பன போன்ற கூற்றுக்கள் தம்சாதியிலுள்ள ஆற்றலுடையவரை அறிமுகப்படுத்தும் நோக்கத்தையும் சில இதழ்கள் கொள்கையாகக் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன.

## மகளிர் இதழ்கள்

பெண்கள் முன்னேற்றம் தமிழகத்தின் பழமையான சிந்தனைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. 1860-ஆம் ஆண்டிலேயே அமிழ்தவசனி என்ற இதழ் பெண்கள் நலம் நாடும் இதழாக வெளிவந்துள்ளது. அதைத் தொடர்ந்து சுகுணபோதினி (1883), பெண்கல்வி (1912), மாதர் மறுமணம் (1939), புதுமைப்பெண் (1947) போன்ற இதழ்கள் பெண்களுக்காக வெளிவந்தன. இன்றைய மகளிர் இதழ்களில் மங்கை, மங்கையர் மலர், நர்கிஸ் போன்றன குறிப்பிட்டுச் சொல்லத் தக்கனவாகும்.

இவ்விதழ்களில் சமையல் குறிப்பு, கோலம் போடுவது, அழகுக் குறிப்புகள், மருத்துவப் பகுதி, குழந்தை வளர்ப்பு, தையற்கலை விளக்கம் என்பன போன்று பெண்களோடு தொடர்புடைய செய்திகளே இடம்பெற்றுள்ளன. அரசியல், சினிமா செய்திகள் இல்லை. நர்கிஸ் என்ற இதழ் 'ஆடவர் பக்கம்' என்ற ஒரு பக்கம் ஒதுக்கியிருப்பது ஆண்களும் அவ்விதழைப் படிக்கவேண்டும் என்னும் அதன் எண்ணத்தைக் காட்டுகின்றது. பொதுவாக மகளிர் இதழ்கள் பெண்களுக்குத் தேவையான செய்திகளைத் தருவதையும் பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

14. சாலியர் குரல், தி. இ. தலையங்கம், மே. 83
15. நமது யாதவம், தி., ஆசிரியர் பக்கம், ஏப்., மே. 83

## சிறுவர் இதழ்கள்

1840-இல் வெளிவந்த பாலதீபிகை என்னும் இதழே முதல் சிறுவர் இதழாகத் தெரிகிறது. தற்போது அம்புலிமாமா (1941) பாலமித்ரா (1978), ரத்னபாலா (1978), கோகுலம் (1983) போன்றவை சிறுவர்க்காக வெளிவரும் இதழ்களாகும்.

குழந்தைகள் கதை கேட்கும் ஆர்வமுடையவர்களாதலால் சிறுவர் இதழ்களில் சிறுகதைகள் நிறைந்திருக்கின்றன. இச்சிறு கதைகள் குழந்தை உள்ளத்தை அச்சுறுத்தும் பேய்க்கதைகளாகவும் மந்திரவாதிக் கதைகளாகவும் இருக்கின்றன. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கோகுலம் இவ்வகைக் கதைகளை வெளியிடுவதில்லை. இதில் வரும் சிறுகதைகள் அன்பு, உண்மை, நேர்மை, கடமை, வீரம் போன்ற சிறுவர் உள்ளங்களில் பதிய வேண்டியநற்பண்புகளை மையக் கருவாகக் கொண்டுள்ளன. சிறுவர் இதழ்களில் வெளி வரும் கதைகள் கவிதைகள் கட்டுரைகள் முதலிய அனைத்தும் மிக எளிய நடையில் குழந்தைகள் புரிந்துகொள்ளும் வகையில் அமைந் துள்ளன.

சிறுவர்க்கு நல்ல கருத்துக்களைப் படைப்புக்கள் மூலம் கொடுத்தலும், அறிவியல், புராணச் செய்திகளை தெரிவித்தலும், அவர்களுக்குத் தன்னம்பிக்கை, ஒழுக்க உணர்வை ஊட்டுதலும், சிறுவர் இதழ்களின் நோக்கமாக இருக்கின்றன.

## பொழுதுபோக்கிதழ்கள்

விற்பனை நோக்க அடிப்படையில் வெளிவருபவை பொழுது போக்கிதழ்களாகும். இன்று பெருமளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் இதழ்களனைத்தும் பொழுதுபோக்கிதழ்களே. இவற்றில் கலை, இலக்கியம், அரசியல், சமயம் என்று அனைத்துச் செய்திகளும் இருப்பதால் இவற்றைப் பெரும்பாலோர் படிக்கின் றனர். இதனால் இவ்விதழ்களை 'வெகு ஜனப் பத்திரிகைகள்' என்றும் சொல்வர். கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு என்பன போன்று இதழ்களுக்குப் பொதுவான உட்கூறுகளனைத்தும் இவ் விதழ்களில் இடம்பெறுகின்றன. குமுதம் குங்குமம், கல்கி ஆனந்த விகடன், ராணி, தேவி, சாவி, தாய் போன்று பல பொழுது போக் கிதழ்கள் தற்போது வெளிவருகின்றன. விற்பனை அதிகரிப்பிற்கு இவ்விதழ்கள் அவ்வப்போது புதிய புதிய உத்திகளைக் கைக்கொள்

கின்றன. நிலைத்த உக்தியாக இனக்கவர்ச்சியையும் திரைச்செய்தியையும் வெளியிடுகின்றன. கதைகளும் ஓவியங்களும் பாலுணர்வைத் தூண்டும் வகையில் எழுதப்படுகின்றன.

பெருபாலோரின் பொழுதுபோக்கிற்கு இவ்விதழ்கள் பயன்படுகின்றன. சிறுகதை, புதினம், கவிதைத்துறை வளர்ச்சியில் இவ்விதழ்களுக்குப் பெரும்பங்கு உண்டு.

திங்கள் தோறும் ஒரு புதினத்தை வெளியிடுகின்ற பல இதழ்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. ராணிமுத்து, கதைக்கதிர், குங்குமச்சிமிழ், மோனா, மாலைமதி போன்றவை புதின இதழ்களே. குங்குமச் சிமிழ், திரைக்கதிர் போன்ற இதழ்களில் திரைச் செய்திகளும் இடம் பெறுகின்றன. ராணிமுத்துவிலும் கதைக்கதிரிலும் புதின ஆசிரியர் அறிமுகம் இடம் பெறுகின்றது. இவ்விதழ்கள் புதின வளர்ச்சிக்கு இவை உறுதுணை புரிகின்றன.

## கலையிதழ்கள்

மக்களால் விரும்பி வரவேற்கப்படும் ஒரு கலையாக விளங்குவது திரைப்படம். திரைச் செய்தி எல்லாப் பொழுது போக்கிதழ்களினும் இடம் பெறுகிறது. முழுக்க முழுக்கத்திரைச் செய்திகளுக்காகத் தொடங்கப்பட்ட முதல் திரை இதழ் பேசும்படம் (1941), அதைத் தொடர்ந்து, சினிமாகதிர் (1952). தமிழ்சினிமா (1953), மதிஒளி (1955), குண்டூசி (1956) போன்றவை வெளி வந்தன தற்போது பேசும்படம், பொம்மை, ஜெமினி சினிமா, வண்ணத்திரை போன்ற திரை இதழ்கள் வெளிவருகின்றன.

இவ்விதழ்கள் ஒவ்வொரு வெளியீட்டிலும் நடிகைகளின் கவர்ச்சிப் படங்களை வெளியிடுகின்றன. இவையும் பொழுதுபோக்கிற்காகப் படிக்கப்படுகின்றன எனினும் பொழுதுபோக்கு இதழ்களில் காணப்படும் பல கூறுகள் (சிறுகதை, தொடர்கதை, கவிதை, அரசியல், சமூகக்கட்டுரைகள் போன்றன) இவற்றில் இல்லை. திரைப்பட விமரிசனங்கள், திரைக்கலைஞர்களின் பேட்டிகள், திரை தொடர்பான கேள்வி பதில்கள், திரைப்பட வசனங்கள் என்று திரைப்படத்தோடு தொடர்புடைய பகுதிகளே இவ்விதழ்களில் இடம் பெறுகின்றன.

வண்ணத்திரை என்னும் இதழ் மேற்சொன்ன பகுதிகளோடு ஒவ்வொரு வெளியீட்டிலும் ஒரு நடிகையைப் பற்றிய விவரங்களை

(உயரம், எடை, மார்பளவு, இடையளவு, பிறந்தநாள், பிறந்த ஊர் போன்றன) வெளியிடுவதை வழக்கமாய்க் கொண்டுள்ளது. 'ஜெமினி சினிமா' ஒவ்வொரு கிழமையும் ஒரு போட்டி (பாடல், வசனம், ஒளிப்படம் போன்றவற்றில்) நடத்தித் திரைக் கலைஞர்கள் உருவாகத் துணை செய்கின்றது.

பொதுவாகத் திரை இதழ்கள் திரைப்படக் காட்சிகளைத் தருதல், வெளிவரவிருக்கும் திரைப்படங்கள் பற்றிய விவரங்களை அளித்தல், திரைக்கலைஞர்கள் பற்றிய செய்திகளை வெளியிடல் என்ற நிலையில் அமைந்துள்ளன.

நாடகக்கலைத் தொடர்பான செய்திகளை அளிக்கும் நோக்கத்தில் 'சபாநாயகன்' என்னும் இதழ் வெளிவருகின்றது. இவ்விதழில் நாடகக் கலைஞர்களின் பேட்டிகள், நாடக விமரிசனம் நாடக மன்றச் செய்திகள், நாடகங்கள் ஆகியன வெளிவருகின்றன

சோதிடக்கலை இதழ்களும் இன்று பெருகிவிட்டன. உங்கள் நல்லகாலம், உங்கள் எதிர்காலம், பாலஜோதிடம், எண்கள் போன்றன இவ்வகையின. இராசிபலன் சொல்வதே இவ்விதழ் களின் நோக்கம்.

## அறிவியல் இதழ்கள்

அறிவியல் செய்திகளை வெளியிட வேண்டும் என்ற நோக்கில் வெளிவந்த முதல் இதழாகத் 'தமிழர்நேசன்' (1917) விளங்கு கிறது. இவ்விதழ் 12 ஆண்டுகள் வரை நடந்ததாகத் தெரிகிறது. இன்று தமிழில் அறிவியல் இதழ்கள் மிகமிகக் குறைவு. குறிப் பிட்டுச் சொல்லத் தக்க வகையில் கடந்த முப்பத்தைந்து ஆண்டு களாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இதழ் 'கலைக் கதிர்' ஆகும். அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுதல், புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய செய்தியினைத் தருதல் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் இலக்கிய வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு கலைக்கதிர் செயல்பட்டு வருகின்றது. தொடக்க காலத்தில் பழந்தமிழ் இலக்கியக் காட்சிகளைப் படமாக வரைந்து வெளியிட்டதோடு இலக்கியக் கட்டுரைகளையும் வெளியிட்டது தற்போது புதுக்கவிதைகளை வெளியிடுகின்றது. கலைக்கதிர் போன்றே விஞ்ஞானச் சுடர் என்ற இதழும் பத்தாண்டுகளாக வெளிவருகின்ற அறிவியல் இதழாகும். இவ்விரு இதழ்களுமே

வேற்றுமொழிக் கலைச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கண்டு அவற்றையே பயன்படுத்துகின்றன.[16]

மருத்துவம், உளவியல், வேளாண்மை, தொழில்நுட்பம் கட்டுரைகளை இவ்விதழ்கள் வெளியிடுகின்றன. அவ்வப்போது பொருளாதாரக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அறிவியல் செய்திகளை அளித்தல், தமிழில் கலைச் சொற்களைப் படைத்தல்- இவையே தமிழில் வெளிவருகின்ற அறிவியல் இதழ்களின் கொள்கைகளாகும் என்றறியலாம்.

## விளையாட்டிதழ்கள்

அறிவியலை இதழ்களைப் போன்றே விளையாட்டிதழ்களும் தமிழில் மிகக் குறைவு. 'தமிழர் விளையாட்டு மடல்' 'விளையாட்டுக் களஞ்சியம்' என்ற இரு இதழ்களே வெளிவந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்விதழ்களில் உலக, உள்நாட்டு புகழ் பெற்ற விளையாட்டு வீரர்களைப் பற்றிய செய்திகள், ஆங்காங்கே நடந்த விளையாட்டுப் போட்டி முடிவுகள், விளையாட்டு விதிகள், விளையாட்டுக் கழகச் செய்திகள் முதலியன இடம்பெறுகின்றன.

தமிழகத்தில் விளையாட்டுத்துறை வேகமாக வளரவேண்டும் என்பதே விளையாட்டிதழ்களின் நோக்கமாகத் திகழ்கின்றது.

## ஆய்விதழ்கள்

இவை, பிற இதழ்களைப் போலல்லாமல் எதையும் ஆழ்ந்து ஆய்ந்து அளிப்பதைப் பண்பாகக் கொண்டிருக்கின்றன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'தமிழியல்' சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் 'தமிழாய்வு', அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியாகும் 'மொழியியல்', மதுரையிலிருந்து வரும் செந்தமிழ் போன்ற சிறந்த பல ஆய்விதழ்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம் இவற்றில் ஆய்வுக் கட்டுரைகளை அளிப்பதையே இவ்விதழ்கள் நோக்கமாகக் கொண்டிருக்

16. கலைக்கதிர் மே, 83, இதழில் வெளிவந்த சில புதிய தமிழ்ச் சொல்லாக்க வடிவங்கள்.

| | |
|---|---|
| Turbulence | — கலங்கலோட்டம் |
| Superfluidity | — மிகை நெகிழ்ச்சி |
| Computor | — அதிவிரைவு இமை கணிகைகள் |
| Electronics | — மின்துகளியல் |

கின்றன. 'கல்வெட்டு' என்னும் இதழ் கல்வெட்டாராய்ச்சிக் கட்டுரைகளையும், இலங்கையிலிருந்து வெளிவரும் 'இசுலாமிய சிந்தனை' இசுலாமிய ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிடுகின்றன.

"நாள், கிழமை இதழ்கள் முதலியன உடனுக்குடன் அழிந்துவிடும். புது இதழ் படைப்பதே அவற்றின் கடமை. ஆராய்ச்சி ஏடுகளிலேயே காலத்தால் அழியாதஇலக் கியத்தைக் காணலாம்" என்று ஆய்விதழ்களின் சிறப்புத் தன்மையை ஒரு நூலாசிரியர் கூறுகின்றார்.[17]

## செய்தித் துணுக்கிதழ்கள்

"நீண்ட கட்டுரைகளைப் படிக்கும் வழக்கத்தை மக்கள் கைவிட்டுச் சிறு செய்தியைப் படிக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். இதனால்தான் கல்கண்டு சிறு செய்திகளைப் பெருமளவில் கொடுக்கிறது" என்று கல்கண்டின் ஆசிரியராய் இருந்த திரு. தமிழ்வாணன் செய்தித் துணுக்குகளை வெளியிடுவதன் காரணத்தைக் கூறியுள்ளார்.[18]

ஆங்கிலத்தில் வெளிவருகின்ற 'டிட்பிட்ஸ்' போன்று தமிழில் 'கல்கண்டு'ம் முத்தாரமு'ம் சிறந்த பல செய்திகளைத் தந்து கொண்டிருக்கின்றன.

பொது அறிவுக் கட்டுரைகளும் தொடர்கதைகளும் இவ்விதழ்களில் வெளிவருகின்றன.

உலகச் செய்திகளைத் துணுக்கு வடிவில் மிகச் சுருக்கமாகச் சொல்வதே இவற்றின் நோக்கமாக இருக்கின்றது.

## பாலுணர்வு இதழ்கள்

பாலியற்கல்வி, திரைச்செய்தி என்று இதழ்ப்பதிப்பு செய்து கொண்டு சில இதழ்கள் கொச்சையான சொற்களைக் கொண்டு பாலுணர்வைத் தூண்டும் வண்ணம் எழுதுகின்றன. இவற்றை 'மஞ்சள் பத்திரிகைகள்' என்றும் சொல்வர். செக்ஸ் லைஃப், விருந்து, மோகினி என்பன போன்று பல இதழ்கள் இவ்வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

---

17. சோமலெ., மு. கு. நூ. ப. 70.
18. தமிழ்வாணன், அளித்த பேட்டி, இதோ தமிழ் இதழ்கள், வீரமாமுனிவர் தமிழ் ஆய்வுக் கழகம், இலயோலா கல்லூரி, சென்னை-34, 1972, ப 9.

இளைஞர்களிடம் பாலுணர்வு இச்சையைத் தூண்டிவிட்டுப் பணம் பண்ணும் இவ்வகை இதழ்கள் இதழுலகின் அவமானச் சின்னங்கள். தடை செய்யப்பட வேண்டியவை.

## மருத்துவ இதழ்கள்

சித்த மருத்துவம், அலோபதி, ஹோமியோபதி, யுனானி ஆகிய மருத்துவ முறைகள் தமிழ்நாட்டில் நிலவினும் தமிழில் சித்த மருத்துவ இதழ்களே தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. சித்த மருத்துவம், மூலிகைமணி போன்ற இதழ்களை இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பல்வகை நோய்களைப் பற்றிய கட்டுரைகள், அந்நோய்களைத் தீர்க்கும் மருந்து விவரங்கள், சித்தர்கள் பற்றிய செய்திகள் ஆகியன இவ்விதழ்களில் இடம் பெறுகின்றன. அலோபதி மருத்துவம் பற்றி வெளிவந்து கொண்டிருந்த சிறந்த இதழான நல்வழி இப்போது வருவதாகத் தெரியவில்லை.

## தகவல் இதழ்கள்

அரசுப் பணிகள் பற்றிய செய்திகள் இவ்வகை இதழ்களில் இடம்பெறுகின்றன. 'தமிழரசு' தமிழக அரசால் நடத்தப்படுகிறது இவ்விதழில் தமிழக அரசின் சாதனைகள், அரசு விழாக்கள், முதல்வர் உரை ஆகியவை வெளிவருகின்றன. புதுவை அரசின் செய்திகளைத் தரும் வகையில் 'புதுவைச் செய்திகள்' வெளிவருகின்றது. நடுவணரசின் ஒரு பக்கச் செய்தி இதழாகத் 'தாய் நாடு' வெளிவருகின்றது. இது அஞ்சலகங்கள், நூலகங்கள், இரயில் நிலையங்கள், வங்கிகள் போன்ற இடங்களில் ஒட்டப்படும் சுவரொட்டி இதழாகும். இதில் செய்திகள் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிடப் படுகின்றன.

சோவியத் பலகணி, சோவியத் சிறப்புக் கட்டுரைகள், சோவியத் யூனியன் செய்திகளும் கருத்துக்களும் போன்ற இதழ்களையும் இவ்வகையில் சொல்லலாம். இவை சோவியத் நாட்டுத் தகவல்களைத் தருவதோடு அந்நாட்டவர் எழுதிய அறிவியல், அரசியல். பொருளாதாரக் கட்டுரைகளையும் வெளியிடுகின்றன.

ஐக்கிய நாடுகள் அவையின் சார்பில் 'யுனெஸ்கோ கூரியர்' வெளிவருகிறது. இவ்விதழ் மூலம் உலக நாகரிகம், பண்பாடு, அறிவியல், கல்வி, கலை போன்ற பல்துறைத் தகவல்களையும் அறிய முடிகிறது.

## தொழிற்துறை இதழ்கள்

தொழிற்சாலைகளும், தொழிற்சங்கங்களும் இதழ்கள் நடத்துகின்றன. லாரி, ஹோட்டல் தொழிலாளி, மின்தொழிலாளி தொழிலாளர் முரசு, சக்தி சர்க்கரை ஆலை செய்தி மடல் போன்றவற்றை இவ்வகையில் கூறலாம். இவ்விதழ்களில் தொழிற்சாலைச் செய்திகள், புதிய எந்திரங்கள், உற்பத்தித் திறன், ஊக்க ஊதிய விவரம், தொழிற்சங்கத் தீர்மானங்கள், தொழிலாளர் நலச்செய்திகள் ஆகியன இடம் பெறுகின்றன.

## இதழ்களின் உட்கூறுகள்

தலையங்கம், படைப்பிலக்கியம் (சிறுகதை), தொடர்கதை, நாடகம், கவிதை, கட்டுரை, துணுக்குகள், கருத்துப்படம், பேட்டி, படக்கதை, கேள்வி பதில், வாசகர் எண்ணம், போன்றவை பொதுவாக இதழ்களின் முக்கிய உட்கூறுகளாக விளங்குகின்றன.

## தலையங்கம்

ஓர் இதழில் இடம்பெற வேண்டிய இன்றியமையா உறுப்பு தலையங்கம் ஆகும். தலையங்கம் இடம்பெறா இதழானது முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும் மறை திரை இல்லா வீட்டினையும் ஒக்கும் என்று கய்ல் வால்ட்ராப் என்பவர் தலையங்கத்தின் சிறப்பினைச் சுட்டுகின்றார்.[19]

அரசு நிகழ்வுகள், வறுமை, வேலைவாய்ப்பின்மை, கலவரங்கள் போன்ற சமுதாயப் பிரச்சினைகள், அரசியல் கட்சி, சமயத் தலைவர்களின் பேச்சு, அறிவியல், கலை வளர்ச்சி போன்றவை தலையங்கம் கருவாக உள்ளன. இவற்றை விமரிசிக்கும், வரவேற்கும், பிரச்சினைகளின் தீர்வுக்கு வழிகூறும் வகையில் தலையங்கம் அமைகின்றது. தலையங்க முடிவு ஓர் இதழின் சார்புத்தன்மை, பொதுநிலை, விருப்பு, வெறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்றன.

பெரும்பாலான இதழ்கள் தலையங்கம் எழுதுகின்றன. சிலவற்றில் தலையங்கப் பகுதி இல்லை. முதற்பக்கத்தில் ஏதாவதொரு அறக் கருத்து அல்லது பாடற்பொருள் விளக்கம் இவற்

19. Gayle Waldrop, A , "Editor and Editorial" p. 29
மே. கோ. மணியன், தங்க; பத்திரிகைத் தமிழ், மாணிக்கப் பதிப்பகம், திருச்சி, 1978, ப. 75.

றோடு நிறுத்திக் கொள்கின்றன (முக்குடை). சில இதழ்களின் தலையங்கங்கள் தொடர்ந்து ஒரே நோக்கத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன.[20]

## படைப்பிலக்கியம்

படைப்பிலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு சிறப்பாக உள்ளது. சிறுகதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் பெரும்பாலான எல்லா இதழ்களும் வெளியிடுகின்றன. குமுதம், கல்கி, போன்ற இதழ்கள் அவ்வப்போது சிறு சிறு நாடகங்களையும் ஆனந்தவிகடன், சபாநாயகன் போன்றவை தொடர் நாடகங்களையும் வெளியிடுகின்றன. இதழ்களில் தொடர்கதைகளை வெளியிடுதல் விற்பனையைத் தக்கவைத்துக் கொள்ளும் உத்திகளில் ஒன்றாகும். பெரும்பாலான பேரிதழ்கள் (வெகு ஜன பத்திரிகைகள்) புகழ்பெற்ற எழுத்தாளர் (சுஜாதா, சாண்டில்யன், சிவசங்கரி, இந்துமதி, லக்ஷ்மி, கோவி. மணிசேகரன், ராஜேந்திர குமார், புஷ்பா தங்கதுரை போன்றவர்) களைக் கொண்டு தொடர்கதைகளை வெளியிடுகின்றன. கட்டுரைகளே சமயஇதழ்களில் முக்கியத்துவம் பெறினும் சில தொடர்கதைகளையும் வெளியிடுகின்றன (முஸ்லிம் முரசு, நம் வாழ்வு). பொதுவுடைமைக் கொள்கை இதழ்கள் பெரும்பாலும் சிறுகதைகளுக்கே சிறப்பிடம் அளிக்கின்றன. கலைமகள், அமுதசுரபி போன்றன அடிக்கடிக் குறுநாவல்களை வெளியிடுகின்றன. கவிதைகள் குறிப்பாகப் புதுக் கவிதைகள்/எல்லா இதழ்களிலும் இடம்பெற்று விளங்குகின்றன.

## துணுக்குகள்

செய்திகளைச் சுவையாகவும் செறிவாகவும் மிகச்சில வரிகளில் சொல்லிவிடும் ஆற்றல் துணுக்குகளுக்கு உண்டு.[21]

வேகமாக இயங்கிக்கொண்டு வரும் இன்றைய உலகில் நீண்ட நேரத்தை எடுத்துக் கொள்ளும், கதை, கட்டுரைகளைப் படிப்பவரைவிடத் துணுக்குகளைப் படிப்பவரே அதிகரித்து வருகின்

20. 'தாயத்தில் மறுவாழ்வு' என்ற இதழின் அனைத்துத் தலையங்கப் பொருளும் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பிய தமிழர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் பற்றியே அமைந்துள்ளது.
21. சாயபு மரைக்காயர், மு., (தொ. ஆ), நீங்களும் சிரிக்கலாமே, பாத்திமா பதிப்பகம், காரைக்கால், 1981, ப. 3.

றனர். அதனால் எல்லா இதழ்களுமே துணுக்குச் செய்திகளை அதிக அளவில் வெளியிட்டு வருகின்றன. துணுக்குகளைச் செய்தித் துணுக்குகள், நகைச்சுவைத் துணுக்குகள் என்ற இரு பிரிவுகளில் அடக்கலாம். செய்தித் துணுக்குகள் எல்லாவகை இதழ்களிலும் இடம்பெறுகின்றன. நகைச்சுவைத் துணுக்குகளோ பெரும்பாலும் பொழுதுபோக்கிதழ்களிலேயே நிறைந்துள்ளன. நகைச்சுவைத் துணுக்குகள்,

> ''ஏன் ஆபீசுக்கு வந்ததும் வராததுமாய் வீட்டுக்குப் போன் பண்ணுகிறீர்?''
>
> ''வரும்போது ஒரு டம்ளர் தண்ணீரை ஜன்னலுக்கு நேரே வைத்துவிட்டு வந்துவிட்டேன். அதை உடனே உள்ளே எடுத்து வைக்கச் சொல்லித்தான் போன் செய்கிறேன்''[22]

என்பது போன்று அன்றையப்பிரச்சினைகளைமையமாக வைத்தும்

> ''ஒரு பாடலுக்கும் இன்னொரு பாடலுக்கும் இடைவெளி யில்லாமல் அச்சிட்டிருக்கிறீர்களே?''
>
> ''பிற்காலத்தில் இடைச்செருகல் வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான்''[23]

என்பது போன்று பொதுவானவையாயும் அமைந்துள்ளன. செய்தித் துணுக்குகளும், நகைச்சுவைத் துணுக்குகளும் இன்றைய இதழ்களில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளன.

## கேள்வி, பதில் வாசகர் எண்ணம்

படிப்போரது பெயர் பெரும்பாலும் இடம்பெறக்கூடிய இரு பகுதிகளாகக் 'கேள்வி பதிலு'ம் 'வாசகர் எண்ணமு'ம் இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா இதழ்களும் இப்பகுதிகளைக் கொண்டுள்ளன.

அரசியல், அறிவியல், பொருளாதாரம், இலக்கியம், திரைப்படம் போன்ற எல்லாத் துறைகளையும் பற்றி நிற்கும் பகுதியாகக் கேள்வி பதில் பகுதி விளங்குகின்றது.[24]

---

22. குமுதம், 2-6-83, ப. 92.
23. கல்கி, 29-5-83, ப. 38
24. ஒரு கேள்விக்கு ஒரு பதில் என்றில்லாமல் 100, 200 கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போக்கைப் 'பூவாளி', 'சுஜாதா' போன்ற இதழ்களில் காண முடிகின்றது. குமுதத்தின் 'அரசு பதில்கள்', கல்கியின், நீங்கள் கேட்டவை— தராசு' துக்ளக்கின் கேள்வி பதில்கள் போன்றவை பலரால் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

முன் இதழில் வெளிவந்த தலையங்கம், கட்டுரை, சிறுகதை, தொடர்கதை இவற்றைப் பற்றிய விமரிசனமாகவும், இதழில் வெளியான தவறான செய்தியைச் சுட்டிக் காட்டுவனவாகவும், செய்திக்கு மேலும் விளக்கமாகவும், ஒருவரைப் பற்றி வெளியான செய்தியை அவரோ அல்லது பிறரோ மறுக்கும் வகையில் அல்லது நன்றிகூறும் வகையில் அமைந்த மடலாகவும், இதழ் வளர்ச்சிக்கு அறிவுரை கூறும் முகமாகவும் வாழ்த்தாகவும், (இந்நிலையைப் புதிதாகத் தொடங்கப்பட்ட இதழ்களில் காணலாம்). வாசகர் எண்ணம் பகுதி அமைகின்றது. வாசகரின் திட்டுதலை வாசகர் எண்ணம் பகுதியில் வெளியிட்டு வசையைக்கூட வணிகமாக்கும் போக்கினைக் குமுதம் போன்ற இதழ்களில் காண முடிகின்றது.

## பிற பகுதிகள்

நூல் திறனாய்வினைச் சில பொழுதுபோக்கிதழ்களும் பல இலக்கிய இதழ்களும் கொண்டுள்ளன. கோண்மொழிகள் (தலையங்கம் அல்லது ஆசிரியர் பகுதிக்கு மேல் இருப்பது) சில இதழ்களில் காணப்படுகின்றன. இவை இதழ்களின் கொள்கையை அறியத் துணை செய்கின்றன.[25] சில இதழ்கள் புகழ்பெற்ற தலைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களின் பேட்டிகளை வெளியிடுகின்றன. எழுத்தாளர், கலைஞர்க்குத் தனிப்பக்கம் ஒதுக்கப்படுவதையும் இன்றைய இதழ்களில் காண்கிறோம்.[26] பெண்கள் பகுதி, குழந்தைகள் பகுதி, பக்தி, சோதிடம், சமையல் குறிப்பு, திரைப்பட விமரிசனம், திரைச்செய்தி, படக்கதைகள், மருத்துவப்பகுதி முதலிய பகுதிகளும் தமிழ் இதழ்களில் இடம் பெறுகின்றன. துக்ளக்கில் வெளிவரும் 'புகார் பகுதி' பிற இதழ்களில் இல்லாத ஒரு புதிய பகுதியாகும். அதே போல் குமுதத்தின் 'ஆறு வித்தியாசங்கள்' பகுதியும் சாவியில் வரும் 'சொல்லுங்கள் பத்து' பகுதியும் பிற இதழ்களில் இல்லாதனவாகும். இவ்வாறு இதழ்கள் பல புதிய பகுதிகளையும் அவ்வப்போது அறிமுகப்படுத்துகின்றன.

25. "அடிமை அறியாமை உட்பகைமை ஆழ்ந்த
மடிமை பொசுக்கி மணித்தமிழும் நாடும்
குடியும் உயர்த்தலெம் கோள்"
—தீச்சுடர்.
26. ஜெயகாந்தன்—தேவி
மேத்தா—ஜூனியர் விகடன்
கலைஞர்—குங்குமம்
கிருபானந்த வாரியார்—இதயம் பேசுகிறது

## இதழ்களில் புதுமை

புதுமைகள் எல்லோராலும் வரவேற்கப்படுவன. இதழ்களும் தம் வளர்ச்சி நிலையில் பல புதுமை உத்திகளைக் கையாள்கின்றன.

ஒரே தொடர்கதையை இருவேறு எழுத்தாளர் எழுதுதல், வாசகர் தரும் தலைப்புக்கு ஏற்றார்போல் எழுத்தாளர்களைக் கதை எழுத வைத்தல், எடை காட்டும் கருவியில் உள்ள சூழ்க் குறிப்பிற்கேற்பக் கதை எழுதல், வெளியீட்டிற்கு ஏற்கப்படாத கதைகளிலிருந்து சுவையான பகுதியை வெளியிடுதல், வெவ்வேறு அச்சுப் புள்ளிகளில் (Type points) சிறுகதைகளை வெளியிடல் முதலிய பல புதுமைகளைக் குமுதம் செய்து வருகின்றது. படக் கதையில் ஒரு கட்டத்தில் படத்தோடு வசனங்கள் ஒரு கட்டத்தில் வெறும் வசனங்கள் மட்டும் படமின்றி இருத்தல் (சாவி), இரு வேறு எழுத்தாளர்களை ஒரே பொருள் பற்றி இரு வேறு அணுகு முறையில் எழுதவைத்தல் (ஆனந்தவிகடன்) போன்று பல புதுமை களைத் தமிழ் இதழ்கள் செய்து வருகின்றன. இப்புதுமைகளைப் பொழுதுபோக்கு இதழ்களிலேயே காணமுடிகின்றது.

## போட்டிகள்

போட்டிகளின் மூலம் திறமை மிக்க எழுத்தாளர்களை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தும் சிறந்த பணியையும் இதழ்கள் செய்து வருகின்றன. கல்கி, கலைமகள் போன்றவை ஆண்டுதோறும் சிறு கதைப் போட்டிகளை நடத்துகின்றன. குமுதம் அவ்வப்போது போட்டிகளை நடத்துகின்றது. ராணிமுத்து, மதிநா போன்ற இதழ்கள் பொது அறிவுப் போட்டிகளை நடத்துகின்றன. ராணி, தேவி போன்றன ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு போட்டி வைத்து வாசகரை ஊக்குவிக்கின்றன. கவிதை இதழ்கள் 'வெண்பாப் போட்டி' முதலிய போட்டிகளை நடத்திக் கவிதை புனைவாற்றலை வளர்க்கின்றன.

## இதழ்களில் மொழிநிலை

காலமாற்றத்திற்கு ஏற்ப மொழியும் மாறுவருகின்றது. தொடக்ககாலத் தமிழ் இதழ்கள் மொழியைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் வேற்று மொழிச்சொற்களை இணைப்பதற்காக மட்டுமே தமிழைப் பயன்படுத்திக் கொண்டிருந்த காலத்தில் திரு. வி. க. தேசபக்தன்-நவசக்தி நாளிதழ்களின் மூலம் நல்ல தமிழ் நடையை ஏற்படுத்தினார். ஓரளவு படித்தவர்கள் கூடப் புரிந்து

கொள்ளும் அளவுக்குத் திரு. வி. க. எழுதினார். தேசபக்தனுக் காகத் தனி நடை கொண்டதையும் எளிமையான முறையில் கருத்துக்கள் விளங்கும் முறையில் சிறுசிறு தொடர்களை அமைத்துக் கொண்டதையும் திரு. வி. க. தன் வாழ்க்கைக் குறிப்பில் கூறியுள்ளார்.[27]

இலக்கிய இதழ்களும், தி. க., தி. மு. க. இதழ்களும் நல்ல தமிழைப் பயன்படுத்தின. தனித்தமிழ் இயக்க வளர்ச்சியில் தமிழ் மொழி சிறந்த வளர்ச்சி பெற்றது.

இன்றைய நாளிதழ்கள் பேச்சு மொழியையே செய்தியறி விப்பிற்குப் பயன்படுத்துகின்றன. பொழுதுபோக்கிதழ்களின் படைப்புகளில் வடசொற்களும் ஆங்கிலச் சொற்களும் மிக அதிக மாக நெருடுகின்றன. சமய இதழ்களிலும் மொழியுணர்வு அறவே இல்லாத் தன்மையைக் காண்கின்றோம் இலக்கிய இதழ்கள் என்ற முத்திரை பெற்றுள்ள தீபம், கலைமகள் போன்ற இதழ்கள் சிறு கதை, புதினம், திறனாய்வு, கவிதை போன்ற துறைகளை வளர்க் கும் நோக்கில் வருகின்றனவேயொழிய இவையும் மொழித் தூய்மை பற்றி அக்கறை-காட்டுவதில்லை. தனித்தமிழ் இயக்கச் சார்ப்பிதழ்களே நல்ல நடையையும் தூய மொழியையும் கொண்டு வெளிவருகின்றன.

## இதழ்களின் பயன்கள்

இதழ்கள் ஓரளவு படித்தவர்களும் உலகச் செய்திகளை அறிந்து கொள்ள உதவுகின்றன; சிறந்த-செய்தித் தொடர்புக் கருவியாக இயங்குகின்றன; அரசையும், மக்களையும், ஒரு மாநிலத்தையும், இன்னொரு மாநிலத்தையும், ஒரு நாட்டையும் இன்னொரு நாட்டையும் இணைக்கும் பாலமாக விளங்குகின்றன. கதை, கவிதை, கட்டுரை வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றுகின்றன. புதிய எழுத்தாளர்களை உருவாக்குகின்றன. அனைத்துத் துறைச் செய்திகளையும் அறியச் செய்கின்றன.

சிறந்த பொழுது போக்குக் களமாக விளங்குகின்றன. பொது அறிவுக் களஞ்சியமாகப் பொலிகின்றன. மக்களின் சிந்தனை உணர்வைத் தூண்டுகின்றன; நாட்டு நடப்புச் செய்திகளை அறிவித்து அதற்கேற்ப மக்களை நடக்க செய்கின்றன; உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது; பேச்சு மொழியையும்

---

27. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப. 267

எழுத்து மொழியையும் நெருங்கச் செய்கின்றன. இது போன்ற இன்னும் எவ்வளவோ பயன்களை இதழ்கள் நல்கிக் கொண்டிருக்கின்றன.

## இதழ்கள் உணர்த்தும் கொள்கைகள்

இதழ்களது வகைகளின் அடிப்படையில் கொள்கைகளாக அறியப்படுவன:

### 1. செய்தி இதழ்கள்

செய்தி இதழ்கள் நாளிதழ்களாக உள்ளன. நாள்தோறும் நடைபெறும் அரசியல், சமூக நிகழ்ச்சிகளை, பரப்பரப்பூட்டும் செய்திகளை அளித்தலே இவ்விதழ்களின் கொள்கையாக-இருக்கின்றன. பேச்சு மொழியையே இவ்விதழ்கள் செய்தி வெளியீட்டிற்குப் பயன்படுத்துகின்றன.

### 2. அரசியல் இதழ்கள்

இவை தற்சார்புச் செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. தம் கட்சிச் செய்திகள், கட்சித் தலைவர்களது அறிக்கைகள், நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களைத் தருதல், பிற கட்சியினரைத் தாக்கி எழுதல் போன்றனவற்றைத் தம் கொள்கைகளாகக் கொண்டுள்ளன.

### 3. சமய இதழ்கள்

சமய இதழ்களின் நோக்கம் தம் சமயக் கருத்துக்களைத் தம்மவர் உணர்ந்து அதன்வழிச் செயல்பட வேண்டும் என்பதே. இவை தத்தம் சமயங்களின் சிறப்புக்களைக் கூறுவதில் போட்டியிடுகின்றனவேயன்றிப் பிற சமயங்களைக் குறைகூறும் நிலையைப் பல சமய இதழ்களில் காண முடியவில்லை. பக்தியை வளர்த்தல், ஒழுக்க உணர்வுகளை நிலைநிறுத்துதல் போன்றனவும் சமய இதழ்களின் நோக்கமாக உள்ளது. சமய இதழ்களில் அரசியல், திரைப்படச் செய்திகள், நகைச்சுவைத்துணுக்குகள் ஆகியன இடம் பெறுவதில்லை.

### 4. பகுத்தறிவு இதழ்கள்

கடவுள் மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, மேல்மட்டத்தினர் கீழ் மட்டத்தினர்க்கு இழைக்கும் கொடுமைகளைக் களைதல், கண் மூடித்தனமான மூடப்பழக்கங்களைக் கண்டித்தல், புராண இதிகாச திராவிடர் முன்னேற்றம் இவையே இவ்விதழ்களின் கொள்

கைகளாக அமைந்துள்ளன. சீர்திருத்த எழுத்து முறையைப் பின் பற்றுவதும் இவற்றின் கொள்கைகளுள் ஒன்றாக இருக்கின்றது.

5. தனித் தமிழ் இதழ்கள்

தமிழ்மொழி, தமிழ்மக்கள், தமிழ்நாடு, இவற்றின் முன்னேற்றமும் வளர்ச்சியுமே இவ்விதழ்களின் தலையாய நோக்க மாக உள்ளது. படைப்புக்களில் பிறமொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழையே கையாளுதலைத் தனித்தமிழ் இதழ்கள் கடமை யாகக் கொண்டுள்ளன. ஒவ்வோர் இதழிலும் உள்ள 'கோட்பாடு' இவற்றின் கொள்கைகளை உணர்த்துகின்றது.

6. இலக்கிய இதழ்கள்

இலக்கிய இலக்கண ஆராய்ச்சி, திறனாய்வு, தகுதியுடைய கவிதை, கதைகளை வெளியிடல் ஆகியன இலக்கிய இதழ்களின் கொள்கைகளாக அமைந்துள்ளன.

கவித்துறை வளர்ச்சி நோக்கில் கவிதை இதழ்கள் வெளி வருகின்றன.

7. தனிப்பட்ட சமூக இதழ்கள்

சமூக முன்னேற்றம், இன ஒற்றுமை, தம் சமூகச் சிறப்புக்களை உணர்த்தல் ஆகிய இவ்வகை இதழ்களின் அடிப்படைக் கொள்கை களான உள்ளன. தம் சமூகத்திலுள்ள ஆற்றலுடையவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்துவதையும் இவ்வகை இதழ்களில் சில கொள்கையாகக் கொண்டுள்ளன.

8. மகளிர் இதழ்கள்

சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, குழந்தை வளர்ப்பு போன்ற பெண்களுக்குத் தேவையான செய்திகளைத் தருதல் பெண்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்—இவையே மகளிர் இதழ்களின் தலையாய நோக்கமாக அமைந்துள்ளன.

9. சிறுவர் இதழ்கள்

சிறுவர்க்கு நல்ல கருத்துக்களைப் படைப்புக்கள் மூலம் கொடுத்தல், அறிவியல், பக்திச் செய்திகளை அளித்தல் ஆகிய வற்றைச் சிறுவர் இதழ்கள் கொள்கையாகக் கொண்டுள்ளன. எளிய நடை இவற்றின் தன்மையாகும்.

10. பொழுது போக்கிதழ்கள்

படிப்போர் தம் பொழுதுபோக்கிற்குப் பயன்படுதலே இவ் விதழ்களின் முதல் நோக்கமாகும். பொதுவாக இதழ்களுக்குரிய

அனைத்துக் கூறுகளையும் இவ்விதழ்கள் கொண்டிருக்கின்றன. இனக் கவர்ச்சியும் திரைச் செய்தியும் இவற்றில் சிறப்பிடம் பெறு கின்றன. புதிய உத்திகளைப் புகுத்தலை இதழ் வளர்ச்சிக்குரிய தொரு வழியாக இவ்விதழ்கள் கைக்கொள்கின்றன.

11 பொதுவுடைமை கொள்கை

சுரண்டல், ஊழல், வறுமை போன்ற சமுதாயப் பிரச்சினை களை அடிப்படையாகக் கொண்டமைந்த ஆக்கங்களை வெளியிடு வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மார்க்சியக் கொள்கை படைப்புக்களில் இழைந்துள்ளது.

12. கலையிதழ்கள்

கலைச் செய்திகளையும் கலைஞர்கள் பற்றிய செய்திகளையும் வெளியிடுவதை இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. கவர்ச்சிப் படங்களை வெளியிடல் திரை இதழ்களின் ஒரு கூறாக அமைந் துள்ளது.

13. அறிவியல் இதழ்கள்

அறிவியற் கட்டுரைகளை அளித்தல், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற விவரங்களைத் தருதல், தமிழில் கலைச் சொற்களைப் படைத்தல் போன்றன அறிவியல் இதழ்களின் கொள்கையாக அமைந்துள்ளன.

14. விளையாட்டிதழ்கள்

தமிழகத்தில் விளையாட்டுத்துறை வேகமாக வளரவேண்டும் என்பதே விளையாட்டிதழ்களின் நோக்கமாகத் திகழ்கின்றது. அதற்கேற்ப விளையாட்டுத் தொடர்பான செய்திகளை மட்டுமே வெளியிடுவதை இவை கொள்கையாகக் கொண்டிருக்கின்றன.

15. ஆய்விதழ்கள்

துறைசார்ந்த கட்டுரைகளை ஆய்வு முறைப்படி அளிப்பதே இவற்றின் கொள்கையாகும். அரசியல், திரைச் செய்திகள். நகைச் சுவைத் துணுக்குகள் போன்றவை இவ்விதழ்களில் இடம் பெறுவ தில்லை,

16. துணுக்கு இதழ்கள்

அரசியல், கலை, இலக்கியம். சமயம் போன்ற அனைத்துத் துறைச்செய்திகளையும் மிகச் சுருங்கிய வடிவில் அளிப்பதே இவற்றின் பண்பாக அமைந்துள்ளது.

17. பாலுணர்வு இதழ்கள்

பாலுணர்வைத் தூண்டும் படைப்புகளைக் கொச்சை மொழியில் வெளியிடுதல்.

18. மருத்துவ இதழ்கள்

உடல் நலம் பேணுதல், நோய் விவரங்கள், எளிய மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளைச் சொல்லும் நோக்கில் வெளிவருகின்றன.

19. தகவல் இதழ்கள்

அரசு நிகழ்வுகள், சாதனைகள், முதலிய செய்திகளை வெளியிடும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

20. தொழிற்துறை இதழ்கள்

தொழிற்துறை முன்னேற்றம் தொழிலாளர் நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளன.

மேற்கண்ட கொள்கைகள் வகை நிலையில் அறிந்தவை பொது நிலையில்,

1. ஏதாவது ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே இதழ்கள் இயங்குகின்றன.
2. நோக்கத்தைச் சார்ந்தே உள்ளடக்கம் அமைகின்றது.
3. தலையங்கம், கேள்வி பதில், வாசகர் எண்ணம் போன்ற பகுதிகள் இதழ்களின் பொது உட்கூறுகளாக இருக்கின்றன.
4. செய்தி தருதல் இதழ்களின் பொதுப் பண்பாகும்.
5. உரைநடை வடிவமே (கவிதை இதழ்கள் தவிர்த்த) இதழ்களுக்கு உரிய வடிவமாக அமைந்துள்ளது.

## இதழ்கள் இயங்கவேண்டிய முறை

மனித வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்கும் சிறப்பை இதழ்கள் பெற்று விளங்கின்றன. நாளுக்கு நாள் புதிய புதிய இதழ்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவ் இதழ்கள் ஒழுக்கத்தையும் உயர்ந்த எண்ணத்தையும் உருவாக்கும் கருவிகளாக விளங்கவேண்டும். இன்றைய இதழ்களை ஆட்கொண்டிருக்கும் இனக்கவர்ச்சியை இதழாளர்கள் நீக்க முன்வரவேண்டும். அதே போன்று திரைச் செய்திகளுக்கும் அதிக

முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. மனித குலத்தை வாட்டிக் கொண்டிருக்கும் எத்தனையோ பிரச்சினைகளை விட்டுவிட்டுத் திரைச் செய்திகளையும் பாலுணர்வுக் கதைகளையும் வெளியிடும் இதழ்களின் போக்கு வருந்தற்குரிய ஒன்றாகும்.

''பொதுமக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்துவதே இதழ்களின் நோக்கமாக இருக்க வேண்டும்; சிறந்த உணர்வுகளை மக்களிடையே எழுப்பவேண்டும்; குறைகளை அச்சமின்றி எடுத்துரைக்கவேண்டும்'' என்று இதழ்கள் செயல்பட வேண்டிய மூன்று நெறிகளைக் காந்தியடிகள் கூறுகிறார்.

தமிழ் இதழ்கள் தமிழ்மொழித் தூய்மையையும் கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் முடிந்த அளவில் பிற மொழிக் கலப்பில்லாமல் எழுதவேண்டும்.

ஒழுக்க உணர்வுகளை ஊட்டுவனவாக, தூய எண்ணங்களைத் தோற்றுவிப்பனவாக, சமுதாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழி கூறுவனவாக, நாட்டு நலன், மக்கள் நலன், மொழி நலன்— இவற்றில் அக்கறை கொண்டனவாக இயங்குகின்ற இதழ்களே சிறந்தனவாகும்.

## முடிவுரை

இக்கட்டுரை 'இதழ்கள்' என்ற பொதுத் தலைப்பில் அமைந்த தால் பல்வகைப்பட்ட இதழ்களின் தனித்தனிக் கொள்கைகளைப் பொதுநிலையில் கண்டு உரைத்துள்ளது. தனிநிலையில் ஒவ்வொரு வகையைப் பற்றியும் ஒவ்வொரு இதழைப் பற்றியும் விரிவான ஆழமான ஆய்வுகள் ஏற்படும்போது மேலும் பல கொள்கைகளை அறிய முடியும்.

## பயன்பட்ட நூற்கள்

1. ஆதித்தனார், சி. பா., நாள்—தாள் கையேடு, தினத்தந்தி வெளியீடு, சென்னை-7, 1971.
2. இளங்கோவன், மா. ரா., இதழியல் நோக்கு, சேகர் பதிப்பகம், 1981.
3. இளங்கோவன், மா. ரா., முற்காலத் தமிழ் இதழ்கள், சேகர் பதிப்பகம், 1979.
4. குளத்தூரான், க., தமிழ்ப் பத்திரிகைகள், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், 1975.

5. கோதண்டபாணி, இரா., இதழியல், கற்பக நூலகம், மதுரை-2, 1980.

6. சோமலெ, தமிழ் இதழ்கள், சென்னைப்பல்கலைக்கழகம், 1975

7. பட்டாபிராமன், தமிழ்ப் பத்திரிகைகள், அருணோதயம், சென்னை-14, 1968.

8. —, இதோ தமிழ்இதழ்கள், வீரமாமுனிவர் தமிழ் ஆய்வுக் கழகம், இலயோலா கல்லூரி, சென்னை-34, 1972.

9. Press in India, Ministry of Information and Broadcasting, Government of India, New Delhi, 1980.

10. வெளிவந்துள்ள சில தமிழ் இதழ்கள்.

## பின்னிணைப்பு

இந்திய அரசு செய்தித்துறையில் தற்போது பதிவு செய்யப் பட்டுள்ள இதழ்கள்

நாளிதழ்கள்
அண்ணா
அரும்பு மலர்
அலைஓசை
இந்தியா
இமயம்
இனமணி
உதயமுரசு
எதிரொலி
எரியீட்டி
எழில்
கலைநிலா
காலிங்கா
சமநீதி
சினிமா
செங்கொடி நாள்
செய்திச்சுருள்
தமிழ்நாடு டெமாக்ரேட்
தங்கமடல்
தமிழ்மணி
தமிழ் முரசு
திலகம்
தினகரன்
தினத்தந்தி
தினமணி
தினமலர்
தீக்கதிர்
தென்னகம்
தேசபக்தன்
நவஇந்தியா
நவசக்தி
நாத்திகம்
நீதியின் குரல்
நீரோட்டம்
பகல்நிலா
பஞ்சாமிருதன்
பிரம்படி
பொன்திரை
மக்கள் அரசு
மக்கள் குரல்
மக்கள் செய்தி
மக்கள் மலர்
மணிமுடி
மதுரை மணி
மலர்ந்த ரோஜா
மாள்விகா
மாலை மலர்
மாலைமுரசு
முயல்
முரசொலி

வணிக ஒற்றுமை
விடிவெள்ளி
விடுதலை
ஜவஹரிஸம்
ஜனதா குரல்
ஜான்சிராணி
ஜூலியட்
ஸ்டுடியோ நியூஸ்

கிழமை இருமுறை
சோவியத் பலகணி
கிழமை மும்முறை
சோவியத் சிறப்புக் கட்டுரைகள்
சோவியத் யூனியன் செய்திகளும் கருத்துக்களும்

கிழமை இதழ்கள்
அண்ணா கதிர்
அந்தமான் முரசு
அறமுரசு
ஆனந்தவிகடன்
இடைக்காடர் ஜோதிடம்
இதயம்
இதயம் பேசுகிறது
இந்திய முரசு
இந்திர உலகம்
இந்தியா
இலட்டு
இன்றைய உலகம்
இளங்கதிர்
இளமுரசு
உங்கள் எதிர்காலம்
உங்கள் எதிர்கால விளக்கம்
உங்கள் நல்லகாலம்
உங்கள் ராசி
உங்கள் விதி
உரிமை விளக்கு
உழவன் முரசு
எம்ப்லாய்மெண்ட் ஈவெண்ட்ஸ்
எழுச்சி
ஏருழவன்
ஒலிம்பிக்
கயஸ்
கருமாரி கலாசாரம்
கல்கண்டு
கல்கி
கலை ஓசை
கலைநீதி
கலைப்பூங்கா
கற்பூரம்
கன்னியா குமரி
காண்டீபம்
கிராம ராஜ்யம்
குங்குமம்
குணம்
குமரிக்கடல்
குமுதம்
கூட்டணி ஆசிரியர்
சஞ்சய்சக்தி
சமுதாயப் புரட்சி
சமுதாயம்
சர்பிரசாத தூதன்
சர்வவியாபி
சவால்
சாவி
சிகப்புநாடா
சிட்டி நியூஸ்
சித்ரா ராசி பலன்
சித்திராலயா
சிந்தனையாளன்
சின்ஃபேன்
சினிமாலயா
சுதேசிகதிர்
சுனிதா
சுஜாதா
செங்கோல்
செம்மணி
சென்ஸார்
சொந்தம்
சோவியத்
தமிழ் நிலம்
தமிழ் மடல்
தலைவன் குரல்
தாயின்குரல்
திசைகள்
தீப்பு
தியாகபூமி
திரிகாலம்
திருச்சி குரல்
திரைமடல்
திரைவானம்
தினமணி கதிர்
தென்குரல்
தென்னரசு
தேசஊழியன்

தேவி
தேன்கிண்ணம்
தேன்குரல்
தொழிலாளி
டெய்லர்ஸ்வாய்ஸ்
நம்நாடு
நம் வாழ்வு
நவக்கிரகம்
நான்கு பக்கம்
நீதியின் குரல்
நேருமாமா
பகலவன்
பகுத்தறிவு
பஞ்சாயத்து செய்தி
பரணி
பல்லவன் குரல்
பாடலி
பாமா
பாரதபூமி
பாரதம்
பிளாசா
புதிய அலை
புயல்
புரட்சி வேந்தன்
பூவாளி
பொள்ளாச்சி வாசி
பொன்மகள்
போர்வாள்
போல்ஸ்டார்
மக்கட்செல்வம்
மக்கள் தலையெழுத்து
மகாத்மா நாடு
மகாஜனம்
மதி ஒலி
மதுரைச் சுடர்
மதுரைச் செய்தி
மதுரை மடல்
மயன்
மறுமலர்ச்சி
மன்றம்
முத்துகாமிக்ஸ்
முருகு
முழக்கம்
முஸ்லிம் குரல்
மூக்குத்தி
யாதவசுடர்
ராசி பலன்
வண்ணத்திரை
வணிகச் செய்தி
வம்பு
வல்லாள பறை
வள்ளுவன் விளக்கு
வாராந்திர ராணி
விசிறி
விதி காட்டும் வழி
விடிவானம்
விதிவிளக்கம்
வியாபார முரசு
விஜய பாரதம்
வேந்தன் வழி
ஜனசக்தி
ஜஹவர்படிவம்
ஜனதா கட்சி
ஜனதா பீரங்கி
ஜீவாதாரம்
ஜூனியர் விகடன்
ஜெய்வேல் ஸ்போர்டிங் நியூஸ்
ஜோதிட காவியம்
ஹோட்டல் தொழிலாளி
ஹரிஜன முழக்கம்

திங்கள் இருமுறை இதழ்கள்

| | |
|---|---|
| அண்ணா தி. மு க. | 1975 |
| அதிசய உலகம் | 1977 |
| அல்அமீன் | |
| அறிவு | 1970 |
| அறிவுச்சுடர் | 1976 |
| அறிவு மடல் | 1974 |
| அன்னை நிலம் | 1969 |
| ஆசிரியர் குரல் | 1975 |
| ஆசிரியர் துணைவன் | 1974 |
| ஆசிரியன் கூட்டணி | 1976 |
| இந்து மறுமலர்ச்சி | 1977 |
| இயலிசை | |
| இமயம் | 1977 |
| இளந்தென்றல் | 1978 |
| இளம் விஞ்ஞானி | 1964 |
| உதயசினிமா | 1976 |
| உதயநிலா | 1974 |
| உழவுச் செல்வம் | 1968 |
| உள்ளம் | 1973 |
| ஊராட்சி ஓவியன் | 1977 |
| ஊர் நலம் | 1977 |
| ஊழியன் | 1966 |
| எழிலோவியம் | 1976 |
| கலையடி | 1975 |

| | |
|---|---|
| கண்ணாம்பூச்சி | 1975 |
| கதிரொளி | 1972 |
| கலைச்சுரங்கம் | 1978 |
| கலைப்பூங்கா | 1962 |
| கலைரசிகன் | 1973 |
| கவரிமான் | 1976 |
| கற்பூரம் | 1975 |
| காதம்பரி | 1965 |
| காதலிக்கு சேவை | 1941 |
| காமகோடி | |
| கிண்டான் | |
| கிளாமர்சினிநியூஸ் | |
| குஞ்சு | |
| குட்டி ராஜகுமாரி | 1978 |
| குணம் | 1971 |
| குண்டூசி | 1972 |
| குமரிக்கோட்டம் | 1976 |
| கொக்கு | 1977 |
| கோகுலம் | 1972 |
| கோமகள் | 1969 |
| கோவைமணி | 1974 |
| சங்கொலி | 1968 |
| சஞ்சய் காந்தி | |
| சத்திய கங்கை | 1965 |
| சத்திய புதல்வன் | 1974 |
| சபதம் | 1975 |
| சமரசம் | |
| சாணக்கியன் | 1965 |
| சாந்தி | 1961 |
| சினிமாமுரசு | 1969 |
| சினிமா ஸ்டார் | 1955 |
| சூரியகாந்தி | 1971 |
| செங்குந்தர் | 1975 |
| செந்நீர் | |
| சேவை | 1976 |
| சோவியத்நாடு | 1954 |
| சௌராஷ்டிரா நேசன் | 1914 |
| சௌராஷ்டிரமணி | 1952 |
| சௌராஷ்டிரா ஜோதி | 1973 |
| டார்ஜான் பறக்கும் படை | |
| தஞ்சைமணி | 1950 |
| தமிழரசு | 1970 |
| தமிழ்சினிமா | 1978 |
| தமிழ்ச்சுடர் | 1968 |
| தமிழ் பிரேம் பிரசாரம் | 1933 |
| தமிழ் மாலை | 1973 |
| தன்மானம் | 1975 |
| தன்னாட்சி | 1971 |
| தாயகத்தில் மறுவாழ்வு | |
| தாய்நாடு | 1977 |
| தாருல் குர்ஆன் | |
| திட்டம் | 1973 |
| திரைஉலகம் | 1962 |
| திரைக்கதிர் | 1971 |
| திரைச் செய்தி | 1962 |
| திரைப்பறவை | 1978 |
| திரைப்பித்தன் | 1979 |
| திருவசனம் | 1973 |
| திலகம் | 1976 |
| தீ | 1978 |
| தீச்சோலை | |
| தையல் ஓசை | 1978 |
| துக்ளக் | 1970 |
| தென்கடல் | 1974 |
| தேம்பாவணி தீபம் | 1976 |
| தொண்டன் | 1973 |
| தொண்டு | 1925 |
| தொழிலரசு | 1952 |
| தொழிலாளர் முரசு | 1967 |
| நகரச்செய்தி | 1973 |
| நடிகன் | |
| நூருல் இஸ்லாம் | 1939 |
| நெல்லைத் தோழன் | 1978 |
| நெற்றிக்கண் | |
| பஞ்சசீலம் | |
| பட்டதாரி ஆசிரியர் | 1976 |
| பட்டாம் பூச்சி | 1973 |
| படித்தேன் கவிவானம் | 1975 |
| பத்மஜோதி | 1957 |
| பராசக்தி | 1965 |
| பாகன் விவசாயி | 1978 |
| பாலஜோதிடம் | |
| பாவை விளக்கு | 1976 |
| பிலிம்நியூஸ் | |
| பிலிம் ரெவியூ | 1972 |
| பிலிம்ரோல் | |
| புதிய தமிழகம் | 1966 |
| புதுவாழ்வு | 1970 |
| புரட்சி கீதம் | 1976 |
| புரட்சி குயில் | 1976 |
| புரட்சி பாதை | 1976 |
| புரட்சிவேந்தன | 1974 |
| புஷ்யம் | |
| பொன்னி | 1976 |
| மகிழ்ச்சி | 1977 |

மகுடம் 1978
மக்கள் கோர்ட் 1973
மக்கள் சிந்தனை 1980
மக்கள் முழக்கம்
மக்கள்ரதம்
மங்கை
மணிமுடி
மறுவாழ்வு
மாயக்கண்ணாடி
மாலைமதி
மானிட இன்பம்
மின்மினி
மீனவர் ஓசை
முபாரக் 1976
முயல் 1975
முழக்கம் 1976
முன்னேறும் தொழிலாளி 1972
மூவர்ண முரசு 1976
மூவிடைம்ஸ் 1967
மைனா 1976
யுகப்புரட்சி 1960
யோக காலம் 1975
ராமாஜி 1979
ராஜ ராஜசோழன் 1976
ரோஜாவின் ராஜா 1968
லட்சியம் 1979
வண்ணமயில்
வரிஆலோசனை 1975
வன்னியர் முழக்கம் 1979
வாண்டுமாமா 1979
வாய்ஸ் ஆப்முனிஸிபல் எம்ளாயீஸ்
வானவீதி 1979
வானொலி 1931
விகடநாசன் 1968
விக்டரி 1975
விசிட்டர் 1979
விண்மலர் 1971
விண்ணரசு 1978
விமானம் 19.9
வியாபாரம் 1969
வியாபாரகுரல் 1954
வெள்ளைக் கொக்கு 1978
வெற்றிப் பேரிகை 1979
வேலூர்வர்த்தக கழக செய்தி
ஜீவவிதைகள் 1970
ஸ்டாலின் 1978
ஸ்டுடியோ நியூஸ்

ஜயமணி
ஜன்னல்பார்வை
ஜாலன்
ஜேப்பியார்
ஜோதிகடல்
ஹிந்துமறுமலர்ச்சி
ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி
திங்கள் மும்முறை இதழ்கள்
சோலை

நறுமணம்
முஸ்லிம் நேசன்
திங்களிதழ்கள்

அக்(ஃ)
அச்சகத் தொழிலாளி
அஞ்சுகம்
அணுவிரதம்
அம்புலிமாமா
அம்பேத்கரிஸ்ட்ஸ்
அமரபாரதி
அமுதசுரபி
அரசி
அரசியல் குத்தூசி
அரிவை மலர்
அருட்குரல்
அருணோதயம்
அரும்பு
அருள்சக்தி ஞான உதயம்
அருள்சுடர்
அருளோசை
அல்இஸ்லாம்
அல்ஹிதாயா
அறவிளக்கு
அறிவுக் கூர்வாள்
அறிவுவழி
அறைகூவல்
அன்னம் விடுதூது
அன்னை பூமி
அனுவரதம்
ஆக்கம்
ஆசிரியர்
ஆத்ம அமைதி
ஆத்மீக ஆகாரம்
ஆதவன்
ஆயிர வைசியன்
ஆர்னிகா
ஆரம்பக்கல்வி
ஆலய ஊழியன்
இங்கும் அங்கும்

இணைப்பு
இதயசுடர்
இதயம்
இந்தியன் மித்திரன்
இந்தியன் முஸ்லிம் ஹெரால்டு
இந்தியன் ஸ்பதேஷ் பிராய்னரி சாங்க தீபிகை
இயேசு அழைக்கிறார்
இரட்சிப்பின் வழி
இருளுக்குள்ளிருந்து
இலக்கிய புரவலன்
இளங்கோ
இளந்தமிழன்
இளையகரங்கள்
இறைவன்
இன்ப இல்லம்
இனிமை
இஸ்கஸ்
இஸ்மி
இஸ்லாமிய உலகம்
உண்மை
உணர்வுகள்
உதய தாரகை
உதயம்
உயிர்மெய்
உரிமை
உல்லாச ஊர்வசி
உலகஏடு
உழவர் உலகம்
உழவர் துணைவன்
உழைக்கும் சக்தி
உழைப்பவர் உலகம்
உறவுமுறை
ஊராட்சி வரலாறு
ஊற்று
எழுச்சி
என். ஜி. ஓ. குரல்
ஏர்முனை
ஏவுகணை
ஓயில்
ஒலிக்கிதார்
கடல் கவிதை முத்துக்கள்
கடவுள்
கடவுளின் பிரதிநிதி
கடுகு
கடைசிக் காலம்
கண்டுபிடி
கண்ணீர்க்குரல்
கண்மலையில் நீரோட்டம்
கதம்பம்
கரங்கள்
கருவை தென்னவன்
கல்பனா
கல்வாரியின் அழைப்பு
கல்வி உலகம்
கலாமேகம்
கலாவல்லி
கலைக்கதிர்
கலைச்சந்திரன்
கலைப்படம்
கலைமகள்
கவிதை
கவிப்புனல்
கழககுரல்
களத்து மேடு
கறுப்பு மலர்
காகவி கூட்டுறவு
காதல்
காயிதேமில்லத்
காவற் கோபுரம்
காவியப் பாவை
காவியமுத்து
காவிரிமலர்
காளை
கிராம இயக்கம்
கிருபை
கிருஸ்து ராஜதூதர்
கீதா
கீதா சார்யண்
கீதாசிரியன்
குடிசை
குடும்ப நலச் செய்திக் கதிர்
குமரி மலர்
குமுறல்
குமுறும் நெஞ்சம்
குர்ஆனின் குரல்
குரல்
குயில்
குருசடியின் முரசொலி
குலமகள்
குலமணி
குறளியம்
கூட்டுறவு
கூட்டுறவுச் செய்தி இதழ்
கேள்விகள்
கைகாட்டி

கைவிளக்கு
கைத்தறி
கொங்கு
கோ
கோகுல மித்திரன்
கோட்டை
சக்தி திங்கள்
சக்தி சர்க்கரைஆலை செய்தி மடல்
சங்கு
சத்துணவு
சத்திய ஞானம்
சத்தியம்
சதங்காது
சந்தனசாரதி
சபாநாயகன்
சமரன்
சமாதானவழி
சமூகத் தொண்டன்
சமூக நிழல்
சர்வசங்கம்
சர்வோதயம்
சரம்
சரவண ஜோதிடம்
சலேஷியன் செய்தி மலர்
சாரணர்
சாவியர்குரல்
சான்றோர்முரசு
சாஸ்வதம்
சிகரம்
சிட்முரசு
சித்த மருத்துவம்
சித்தர் செயல்
சித்தஜீவ மலர்
சித்தாந்தம்
சிம்செய்தி மடல்
சிராஜ்
சிராஜுல் மில்லத்
சிறகு
சிறந்த பாதை
சிறுவீரன்
சின்னக் கண்மணி
சினிமா குண்டூசி
சினிமா தீபம்
சினிமா மஞ்சரி
சினிமா மெயில்
சினிரமா
சினிமா லைஃப்
சீனியர் குரல்
சுக நம்பிக்கை
சுகவழி
சுத்த சன்மார்க்கம் ·
சுத்தி
சுபம்
சுபயோகம்
சுரங்கம்
சுவிசேஷ நண்பன்
சுவிசேஷ புத்தொளி
சுழல்
செக்ஸ் எஜுகேஷன்
செக்ஸ் மிர்ரர்
செக்ஸ் லைஃப்
செந்தமிழ்ச் செல்வி
செந்நீர்
செம்மலர்
செய்திக் கதிர்
சேசுநாத உதயம்
சேலம் கூட்டுறவு
சோலைவனம்
சைவநெறி
ஞானகுரு
ஞான சம்பந்தன்
ஞானச்சுடர்
ஞானவேல்
டாப்ஸ்டார்
டிங்டாங்
டி. வி. எஸ்
டீம்
தமிழ் உறவு
தமிழ் சர்ச்தீபிகா
தமிழ் சினிமா வழிகாட்டி
தமிழ்ச்சுடர்
தமிழ்ச்செல்வன்
தமிழ்த் தென்றல்
தமிழ் நாடு பப்ளிக் சர்வண்ட்
தமிழ்ப்பணி
தமிழ்ப்பல்கலைக்கழகச் செய்தி மடல்
தமிழ்ப் பொழில்
தமிழகம்
தர்மசக்கரம்
தலிக்குரல்
தவ்ஹீத்
தனசீலன்
தாமரை
தாராமதி

தியாகபாரதி
திராவிடயூனியன்
திருக்கயிலை
திருக்கோயில்
திருச்சபையில் புதுமலர்ச்சி
திருப்புமுனை
திருவள்ளுவர் உள்ளம்
திரைக்கலைஞர்
திரைக்காவியம்
தினவார்த்தை
தீச்சுடர்
தீபம்
தீர்ப்பு
துந்துபி
துப்பறியும் கலை
துளிகள்
துறைமுகத் தொழிலாளி
தூது
தூரிகை
தூவல் முன்கை
தென்மொழி
தென்னாட்டுப்புத்தன்
தேசோபகாரி
தேமா
தேவசுகம்
தேவர் முரசு
தேவிகலா
தேன் ஒலி
தேன் துளி
தேன் மழை
தேன் முல்லை
தேனலைகள்
தொழில் இந்தியா
தொழிற் சங்கச் செய்தி
தோகை
தோட்டத் தொழிலாளி
தோழன்
நட்சத்திர ஜோதிடம்
நந்தா விளக்கு
நந்தி
நந்தி வாக்கு
நம் ராஜ்யசேவை
நர்கிஸ்
நர்மதா
நல்ல மாணவம்
நல்ல மேய்ப்பன்
நல்லறம்
நவகிரக நாயகன்
நவரத்தினம்
நவீனம்
நற்கருணைவீரன்
நற்பண்பு
நற்சிந்தனை
நாகதீபம்
நாடார் கிறித்தவர்
நாஞ்சில் முரசு
நாம்
நாமும் நம் ராசியும்
நாவல் மகுடம்
நிருபர்
நித்திலக் குவியல்
நிரும்பம்
நிலவாழ்
நிழல்கள்
நிறைமதி
நிஜங்கள்
நீலக்கொடி
நீலகிரி கூட்டுறவு
நீலவேணி
நூதன விடியல்
நூலகம்
நெஞ்சம்
நெய்தல்
நெல்லைக் கூட்டுறவு
நெல்லைமலர்
நோக்கி
முஸ்லீம் லீக்
பட்சிராஜா
பண்ணைத்தொழில்
பண்டி
பணிமலர்
பத்மா
பப்ளிசிட்டி
பரிசுத்த ஜீவபாதை
பரிசுத்த அக்னி
பரிபூரண ஜீவன்
பருவமங்கை
பாட்டாளித் தோழன்
பாடும் பறவை
பாத்திமா
பாப்பாமலர்
பார்கலன் தூது
பார்வைகள்
பாலம்
பாலமித்ரா
பிரக்ஞை

பிரஸ் ஷோ
பிரேம ரத்னம்
பிலிம் ரோல்
பிலிமாலயா
பிறை
பிறைசூடி
புத்துயிர்
புதிய உலகம்
புதியநம்பிக்கை
புதிய பறவை
புயல்
புரட்சி மின்னல்
புலம்பல்
புலவர்
புள்ளி
புனர் வாழ்வு
புனித இருதயம்
பூக்கூடை
பூங்கா
பூஞ்சோலை
பூஜாமணி
பெண் விடுதலை
பெந்த காஸ்தேன் பேரொலி
பெரியார் நாடு
பேசும் சினிமா
பேசும்படம்
பொதுமறை
பொதுமை
பொம்மை
பொம்மை வீடு
பொம்மன்
பொய்யாமொழி
பொய்யாவிளக்கு
பொறியியல் தொழிலாளி
பொன்னகரம்
போக்குவரத்துத் தொழிலாளி
போர்சத்தம்
மக்கள் நோக்கு
மக்கள் மறுவாழ்வு
மகிழ்ச்சி
மங்கை
மங்கையர்மலர்
மஞ்சரி
மஞ்சள் முகம்
மணியன்
மணிவிளக்கு
மதிநா
மதுரைக் கூட்டுறவு
மயக்கம்
மயில்
மர்மம்
மர்மவீணை
மருதமலர்
மலைமலர்
மழலைச் செல்வம்
மழைச்சாரல்
மறுமொழி
மன்னாதிமன்னன்
மன ஓசை
மனம்
மனவழி
மனைமலர்
மாதஜோதிடம்
மாதுளை
மாணவம்
மாணவர் மஞ்சரி
மாணாக்கன்
மாற்றம்
மாலா
மாலை நினைவுகள்
மிக்சர்
மின்கதிர்
மீட்பின் தூதன்
மீட்போலை
முக்குலமுரசு
முகில்
முத்தரையர் முழக்கம்
முத்துராஜா முத்தரையர் சங்க நாதம்
முதல் சித்தன்
முதன்மொழி
முபல்லிஃக்
மும்தாஜ்
முல்லைச்சரம்
முழக்கம்
முன்னோடி
முஸ்லிம் குரல்
முஸ்லிம் சுடர்
முஸ்லிம் முரசு
மூலிகை மணி
மூவிடோன்
மூவிமேக்கர்ஸ்
மூன்
மெட்டி
மெய்வழி

பேமம்மாலம்
மேய்ப்பனின் குரல்
மோட்டார்
மோட்டார் தொழில்
மோதிரெத்து
மோனா
யங்ஏஜ்
யாதவர் மணி
யுனெஸ்கோ கூரியர்
ரஹ்மத்
ராக்கி கார்டூன்
ராணிமுத்து
ரத்னபாலா
ராமநாதபுரம் கூட்டுறவு சுடர்
ராஜா
லாரி
வக்கீல்
வணிக இதழ்
வணிக ஒற்றுமை
வயல்
வர்த்தக மலர்
வரிச்செய்தி
வரிவிகடன்
வருகையின் தூதன்
வலம்புரி
வாய்மை
வாராவரு
வால்
வாலிபம்
வாலை குரு
வான்சுடர்
விசுவாசத்தின் பார்வை
விசைத்தறி
விஞ்ஞானச்சுடர்
விஞ்ஞான விவசாயம்
வித்யாதனம்
விடிவு
விண்மணி
வியாபாரமித்திரன்
விழிகள்
விஸ்வபிரம்மா
விஸ்வமலர்
விஸ்வரூபம்
விஜி
விவேக மணிகண்டன்
விளையாட்டுக் களஞ்சியம்
வெளுப்பு
வேட்டுவர்குரல்
வேலூரார் கூட்டுறவு
வேளாண்மை ஊழியன்
வேளாளர் துணை
வைரமாலை
ஸ்தானாபதி
ஸ்வரம்
ஸ்வீட்
ஜூபிடரின் மருத்துவ மஞ்சரி
ஜெய கிறிஸ்து
ஹிஜ்ஜன்

ஹோமியோ ரிப்போர்டர்
ஹோமியோ டாக்டர்
ஹோமியோ பதி
ஹிந்து சமயச் செய்தி
ஜன்மத்
ஸ்ரீசக்ரவாணி

காலாண்டிதழ்கள்

உரமும் பயிரும்
உலக இதய ஒலி
உழவன்
கல்வெட்டு
கலைச்சொல்
செந்தமிழ்
டெக்ஸ்டூல் செய்தி
தமிழ்ப்பொழில்
தமிழகக் கல்வி
தமிழியல்
தேனோலை
மானுடம்
முனைவன்
மொழியியல்
யாத்ரா
வேளாண்மை வேழம்
வைகறை
ஸ்ரீசிவ சக்தி
ஸ்ரீதேவி கருமாரியம்மன் விஜயம்
ஸ்ரீபாம்பன் ஜோதிடமலர்
ஸ்ரீமார்க்கண்டேயன்
ஷெல்லி
ஆண்டுமும்முறை இதழ்
ஸ்பிக் பண்ணைச் செய்தி
அரையாண்டிதழ்
லீடர்

பிறமாநிலத்தமிழ் இதழ்கள்
புதுவை மாநிலம்

அயரேறு
அர்ச்சனா
அருள்மணி
அலர்
அன்புமலர்
ஆத்ம சக்தி
இந்திய யூனியன்
இந்தியா
உத்தியோகஸ்தர் முன்னேற்றம்
எதிரொலி
ஏவுகணை
ஏழைத்தொழிலாளி
கலைஞர்
கலைமகள்
கலைவாழ்வு
கற்பகம்
கஸ்தூரிபாய்
காங்கிரஸ்
காரைக்கால் மெயில்
காரை ஞானபானு
காரைமுரசு
காரைமெயில்
காவலன்
குடியரசு
கும்கும்
குயில்
குலநேசன்
கொக்கரிகோ
சங்கு
சத்தியாபிமானி
சந்திரா
சமுதாயம்
சமூகமித்திரன்
சரஸ்வதி
சர்வ வியாபி
சன்மார்க்க சங்கு
சன்மார்க்க போதினி
சாந்திவிகடன்
சிலம்பு
சினிமா
சீலம்
சுதந்திர சூரியன்
சுதந்திர நாடு
சுதந்திரம்
சுதேச வர்த்தமானி
சுப்ரமணிய பாரதியாரின்
கவிதா மண்டலம்
சூரியோதயம்
சூரியன்
சூறாவளி
ஞானபோதினி
தமிழ்ச் செல்வி
தமிழ்மகவு
தமிழ் மகன்
தமிழ் முரசு
தமிழணங்கு
தமிழொளி
தக்ஷிணா
தாமரை
தாய்நாடு
தேச சேவகன்
தேசபந்து
தேசியம்
தொண்டன்
தொழிலாளர் மித்திரன்
நடிகன்
நவஜோதி
நாடார் குலம்
நாயகன்
நியாயபிமானி
பர்வத குலமித்திரன்
பராசக்தி
பரோபகாரி
பாரதசக்தி
பாரத மாதா
பாரதம்
பாரதி
பாவதக்ஷிணா
பால்யன்
பிரெஞ்சு நேசன்
புதுயுகம்
புது உலகம்
புதுவைக்குரல்
புதுவை சிந்தாமணி
புதுவைச் செய்திகள்
புதுவை தொழிலாளர்
கத்தோலிக்கன்
புதுவைநேசன்
புதுவைமணி
புதுவைமுரசு
பூஞ்சோலை
பொதுஜன ஊழியன்
பொன்மலர்
மராமத்து விமர்சனம்
மாநிலம்
முஹமது சமதானி

நசீன்
லீக்முஸல்மான்
வானொலி
வானம்பாடி
விகடபிரதாபம்
வித்தகம்
வித்யா பிவிர்த்தினி
விதூஷகன்
விமோசனம்
விஜயா
வெண்ணிலா
வைகறை
ஜனாத்
ஜனநாயகம்
ஜவ்ஹருல் இஸ்லாம்
ஜோதி
ஸ்ரீசக்தி
ஸ்ரீசத்ஜன ரஞ்சனி
ஸ்ரீ புனிதா

**கர்நாடகம்**
இந்தியன் கார்
உயிரொலி
ஊற்று
எழுத்தறிவு
கர்நாடக களஞ்சியம்
கர்நாடக குரல்
கன்னட திலகம்
கன்னடமணி
கிராம ஊழியன்
குறளமுதம்
திருப்பம்
சத்திய சுடர்
செம்பரிதி
தினசுடர்
தொடுவானம்
ஹிந்துநேசன்
கேரளம்
ஏலக்காய்
வஞ்சிநாடு
புதுதில்லி
சம்பக்
சரசி
செனிக் சமாச்சார்

# 9

# கைலாசபதி

**ந. தெய்வசுந்தரம்**

இலக்கிய ஆக்கம், அதன் பண்பு, பயன் ஆகியன குறித்து கைலாசபதி தனது ஆய்வுகளில் கூறியுள்ளவற்றைத் தொகுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. அவரது திறனாய்வு முறைகளையோ அல்லது சில குறிப்பிட்ட இலக்கியங்கள் பற்றிய அவரது திறனாய்வின் முடிவுகளையோ ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

கைலாசபதியின் தத்துவப் பின்னணியைத் தெரிந்துகொள்ளாமல், அவரது இலக்கியம் பற்றிய கருத்துகளைப் புரிந்து கொள்வது என்பது இயலாததாகும்.

கைலாசபதி மார்க்சியத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்; அதனைச் சிறப்பாகக் கற்றவர்; அத் தத்துவத்தின் அடிப்படையிலே இலக்கிய ஆய்வை மேற்கொண்டவர்.

மார்க்சியத் தத்துவத்தின் மிக அடிப்படையான கருத்து, மனிதனால் தான் வாழ்கின்ற உலகத்தைப் புரிந்துகொண்டு, அதனைத் தனது தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்க முடியும் என்பதாகும். மனிதன் தனது தேவைகளைத் தான் வாழ்கின்ற இயற்கையிலிருந்து படைத்துக் கொள்கிறான். இந்தப் படைப்புத் தன்மையே—உற்பத்தித் தன்மையே—அவனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இயற்கையை அவன் எந்த அளவு புரிந்து கொண்டுள்ளான் என்பதையும், தேவைகளைப்

பூர்த்தி செய்து கொள்வதற்காக எந்த அளவு அவன் இயற்கைக்கு எதிரானப் போராட்டத்தில் தன்னை ஆயத்தம் செய்து கொண்டுள்ளான் என்பதையும் பொறுத்தே அவனுடைய உற்பத்தி அமைகிறது. அதாவது இயற்கை பற்றிய அவனது அறிவையும், இயற்கையைக் கட்டுப்படுத்தி மாற்றியமைப்பதற்கான அவனது சக்திகளையும் பொறுத்தே அவனது உற்பத்தித் திறன் அமைகிறது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் மேற்கூறிய உற்பத்தித் திறனைப் பொறுத்தே அச் சமுதாயத்தின் .அமைப்பு அமைகிறது. உற்பத்தித் திறன் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய, சமுதாய அமைப்பும் மாறுதலடையும்.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நிலவுகிற சமுதாய அமைப்பின் தன்மையைப் பொறுத்தே, அச் சமுதாயத்தில் நிலவுகிற சிந்தனைகள், பண்பாடுகள் போன்றவைகளும் அவற்றை வெளிப்படுத்தக்கூடிய கலை, இலக்கியம், மதம், அரசு போன்ற நிறுவனங்களும் அமையும். சமூக அமைப்பு மாற மாற, சிந்தனைகளும், பண்பாடுகளும், கலை, இலக்கியங்களும், பிற நிறுவனங்களும் மாறுதலடையும்.

எனவே ஒரு சமுதாயத்தின் உற்பத்தித் திறன், சமுதாய அமைப்பு, சிந்தனை, பண்பாடு, கலை, இலக்கியங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை: ஒன்றையொன்று பாதிக்கக் கூடியவை.

ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தை ஆராயும்போது அந்த இலக்கியம் தோன்றிய கால கட்டத்தில் நிலவிய சிந்தனை, பண்பாடு, ஆகியவற்றையும், அவற்றிற்கு அடிப்படையான சமூக அமைப்பையும் கவனத்தில் கொள்ளாமல் ஆராய்ந்தால், அந்த இலக்கியத்தை உண்மையில் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது.

கைலாசபதி மேற்கூறிய உண்மைகளை ஏற்றுக் கொண்டவர் ஆகையால், அவரால் தமிழ் இலக்கியங்களை அறிவியல்பூர்வமாக ஆராய முடிந்தது. அவை பற்றிய பல சரியான கருத்துகளை அவரால் முன் வைக்க முடிந்தது.

இனி, இலக்கியக் கொள்கை பற்றிய கைலாசபதியின் கருத்துகளைக் காணலாம்.

இலக்கியம் தோன்றிய கால முதற்கொண்டே இலக்கியக் கொள்கைகளும் இருந்து வருகின்றன என்பது கைலாசபதியின்

கருத்து. எந்த ஒரு செய்கைக்கும் பின்னாற் ஒரு கொள்கை இருக்கும்; அக்கொள்கை சிலசமயம் வெளிப்படையாகத் தோன்றாமல் இருக்கலாம்; கூர்ந்து கவனித்தால் அதன் செல்வாக்குப் புலப்படும். இது இலக்கியத்திற்கும் பொருந்தும்.

இலக்கிய ஆக்கம், அதன் பண்பு பயன் ஆகியன குறித்து வெவ்வேறு காலங்களில் வேறுபட்ட கொள்கைகள் நிலவி வந்திருக்கின்றன. பல்வேறு இலக்கிய வகைகளுக்கும் இத்தகைய கொள்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

சமீப காலத்தில்தான் இலக்கியக் கொள்கை அறிவியல்சார்ந்த ஒரு துறையாகச் சுய உணர்வுடன் பயிலப்பட்டும் ஆராயப்பட்டும் வரத் தொடங்கியது. மேலை நாடுகளிலே கடந்த இரு நூற்றாண்டுகளாக இயற்கை விஞ்ஞான ஆய்வுகளின் தாக்கம் பல்வேறு கலைத் துறைகளுக்கும் பரவியதன் விளைவாக இலக்கியக் கொள்கைகள் தெளிந்த வடிவம் பெற்றன எனலாம்.

இலக்கியக் கொள்கை என்றால் என்ன? இலக்கியத்தைப் படைப்போன், பயன்படுத்துவோர் ஆகிய இரு சாராருக்கும் படைக்கும் செயற்பாங்கு (Creative process) படைக்கப்பட்ட பொருள் என்பன குறித்துப் பொதுவாக விளங்கும் கருத்துக் கூறுகளே இலக்கியக் கொள்கைகளாகும்.

மேற்கூறிய கருத்துக் கூறுகள் படைப்போன், பயன்படுத்துவோன் ஆகிய இரு சாராருக்கும் எப்பொழுதும் சம அளவினதாய் இருக்கும் என்பதற்கில்லை. ஒரு சாராரின் ஏற்புடைமை அதிகம் வேறுபடுமாகில் இலக்கியக் கொள்கையில் மாற்றம் ஏற்படுகிறது.

இரு சாராருக்கும் பொதுவாக அமையும் இலக்கியக் கொள்கையே குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் குறிப்பிட்ட வகை இலக்கியம் குறிப்பிட்ட தன்மைகளுடன் தோன்றுவதற்குக் காரணமாயுள்ளது.

ஒரு காலத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கியக் கொள்கைகள் நிலவுவதற்கு வாய்ப்பு உண்டு. இருப்பினும் பெரும்பாலும் ஒரு கொள்கையே மேலோங்கி நிற்கும். இக் கொள்கைகள் ஒவ்வொரு காலத்திலுள்ள—பொருளாதார—சமூக அரசியற் சூழ் நிலைகளால் பெருமளவில் உருவாக்கப்படுகின்றன என்பதை மனதில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இலக்கியத்தின் தோற்றம், இயல்பு, பண்பு, பயன் ஆகியன பற்றிக் கருத்து விளக்க வடிவத்தில் அமைந்ததே இலக்கியக் கொள்கை என்றாலும், இலக்கியக் கொள்கைகள் அனைத்திலும் இவை அனைத்தும் தனித்தனியாகக் கூறப்படுவதில்லை; பெரும்பாலான கொள்கைகளில் இவற்றில் ஒன்றுபற்றியே அழுத்தமாகவும் விரிவாகவும் கூறப்படும். ஏனையவை உய்த்துணரப்படும்.

நிலவுகிற இலக்கியக் கொள்கையின் செல்வாக்கினால் ஒவ்வொரு காலப் பகுதியில் எழுகின்ற இலக்கியங்களின் தன்மைகளைத் தொகுத்தே இலக்கிய வரலாற்றாசிரியர்கள் ஒவ்வொரு காலத்துக்குரிய இலக்கியப் பண்புகளை விவரிக்கின்றனர். எனவே, தனிப்பட்ட ஓர் இலக்கிய ஆக்கத்தை ஆராயும்போதும், அல்லது அதனை வரலாற்றடிப்படையில் விளக்கும்போதும் இலக்கியக் கொள்கை தோன்றாத் துணையாய் நிற்கிறது. எனவே இலக்கியம் கற்பிப்போருக்கும், கற்கின்றவர்களுக்கும் இலக்கியக் கொள்கை பற்றிய எண்ணம் இருப்பது மிக அவசியமானதாகும்.

இக்கால இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் முக்கியமான இலக்கியக் கொள்கைகள் யாவற்றையும் பின்வரும் ஐந்தனுள் அடக்குவர் என்று கைலாசபதி கூறுகிறார்.

1. அவயவிக் கொள்கை
2. அறவியற் கொள்கை
3. உணர்ச்சிக் கொள்கை
4. அழகியற் கொள்கை
5. சமுதாயக் கொள்கை

மேலே காணப்படும் ஐந்து இலக்கியக் கொள்கைகளுக்கும் தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆதாரமாகக் கொண்டு, ஐந்து காலப் பிரிவுகளைக் காட்டலாம்; அவ்வாறு காட்டுவது சிறப்பு நோக்கியும் பெரும்பான்மை நோக்கியுமே என்று கைலாசபதி கூறுகிறார்.

## அவயவிக் கொள்கை

சங்ககாலம் என வழங்கப்படும் சான்றோர் இலக்கிய காலத்திலே கவிதைகள் இக் கொள்கையின் அடிப்படையிலேயே எழுந்தன. இதற்குத் தொல்காப்பியமே சான்று எனக் கைலாசபதி கூறுகிறார்.

இக் கொள்கையிலே பொருள், வடிவம் என்ற பாகுபாடு இல்லை. இரண்டும் கூறுகளாக—உறுப்புகளாக—இசைவுபட்டே உயிருள்ள கவிதை பிறக்கிறது. இக் கொள்கையின் சிறப்பியல்பு, பாடுவோர்—கேட்போர், பொருள்—வடிவம், அறிவு—உணர்ச்சி, அழகு—பயன்பாடு, இலட்சியம்—நடைமுறை, உண்மை—கற்பனை முதலியவற்றுக்கிடையே முரண்பாடு இல்லாதிருப்பதேயாகும். ஏனைய இலக்கியக் கொள்கைகள் ஏதோவொரு விதத்தில் இவ்விருமைகளில் ஒவ்வொன்றை முதன்மைப்படுத்துவன. அது சமுதாயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகும். அவயவிக் கொள்கையின் உயிரான உறுப்பினை ஒருமை நமக்கு பலப் படிப் பினைகளைக் கொண்டுள்ளது எனக் கைலாசபதி கூறுகிறார்.

தொல்காப்பியரின் செய்யுளியலின் முதற் சூத்திரம் அவயவிக் கொள்கையை முன் வைக்கிறது. மாத்திரை முதல் அளவியல் ஈறாகச் சொல்லப்படும் பன்னிரு உறுப்புகள் யாப்புச் சம்பந்தமானவை; திணை தொடக்கம் வண்ணம் வரை கூறப்படும் பதினான்கு உறுப்புகள் பெரும்பான்மை பொருள் சம்பந்தமானவை. இவ்விருபத்தாறு உறுப்பும் இன்றியமையாதவை என்பது தொல்காப்பியர் கருத்து என்று கைலாசபதி கூறுகிறார்.

## அறவியற் கொள்கை

சான்றோர் இலக்கிய யுகத்தை அடுத்துத் தோன்றிய 'சங்க மருவிய காலத்தில்' தோன்றிய பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்த நூல்கள் இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை.

அறம், ஒழுக்கம் ஆகியனபற்றி அத்தியந்த அக்கறை கொண்டுள்ளது இக் கொள்கை இக் கொள்கையில் பொருளே (போதனை) முதன்மை பெறுகிறது.

இதன் தர்க்கரீதியான விளைவாக இலக்கியத்தின் தோற்றம், இயல்பு, பண்பு, பயன் என்பவற்றிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. நாம் முன்பு கண்ட அவயவிக் கொள்கையின்படி, பயிற்சியுடையோர்—பாட்டுக் கட்டும் திறனைப் பெறும் எவரும் இலக்கியம் படைக்கலாம். ஆனால் அறவியல் கொள்கை இலக்கியத்தில் பொருளையே—போதனையையே—நோக்கமாகக் கொள்வதால், நிரம்பிய கல்வியறிவும் புலமையும் ஒழுக்க சீலமும் உடையவர்களே இலக்கியம் படைக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

அறவியற் கொள்கையை அவயவிக் கொள்கையின் மறுதலை என்று கூறலாம். பொருளும் வடிவமும் இணைந்து பெறும் ஒருமைபோய், பொருளே முக்கியத்துவம் பெறுகிறது. இதன் கிளைத் தேற்றமாக இன்ன இன்ன விஷயங்கள் இலக்கியத்தில் இடம் பெறத் தக்கவை என்ற கோட்பாடும் செல்வாக்கும் பெற்றது.

அவயவிக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்களில் உவகையும் பயனாயிருந்தது. ஆனால் அறவியற் கொள்கை ஆனந்தத்தை இலக்கிய உலகத்திலிருந்து அகற்றியது என்று கைலாசபதி கூறுகிறார். ''துன்பமே இயற்கை'' என்னும் நம்பிக்கையை இது வளர்த்தது; அழகுணர்ச்சி தடைபட்டது.

ஆயினும் இறுதிக் காரணக் கோட்பாட்டின் விளைவாகப் பெறப்படும் குறிக்கோள் வற்புறுத்தப்படுவதால், சமுதாய அக்கறை வாய்ந்த ஒன்றாக இது அமைந்துள்ளது. இதுவே இக் கொள்கையின் பலமும் பலவீனமும் என்று கைலாசபதி கூறுகிறார் பல்லவர் காலம் முதல் பல்வேறு காரணங்களினால் இக்கொள்கை செல்வாக்கை இழக்கத் தொடங்கினும், இன்றுவரை அதன் பிடிப்பு நீடிக்கிறது என அவர் கூறுகிறார்.

## உணர்ச்சிக் கொள்கை

இறை பக்தி என்ற பேருணர்ச்சிப் பிரவகித்துப் பரவிய பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் இக் கொள்கை இலக்கிய ஆக்கத்துக்கு ஆதாரமாயிருந்தது என்று கைலாசபதி கூறுகிறார்.

இக்கொள்கை அறிவியற்கொள்கைக்கு எதிர்விளைவாகத் தோன்றியது. இக்கொள்கையின்படி பொருளிலும் பார்க்கப் பொருள் பற்றிய உணர்ச்சியே இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

முன்பு கண்ட அறவியற் கொள்கை அடிப்படையில் அறிவுச் சார்ச்சி உடையது. இலக்கியம் இலக்கணம் மட்டுமன்றி, தருக்கம், தத்துவம், சாத்திரம், மருத்துவம் முதலியவற்றைக் கற்றவரே புலவர் என்ற நிலை இருந்தது. ஆனால் உணர்ச்சிக் கொள்கையின்படி 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரும்' ஆண்டவனைப் பற்றி உணர்ச்சி வசப்படலாம்; உருகலாம்.

பாடுபவனுக்கும் பாட்டைக் கேட்பவனுக்கும் உண்டாகும் கிளர்ச்சி—மெய்ப்பாடு ஆகியவற்றைச் சான்றாகக் கொண்டே இக் கொள்கை பெயர்பெற்றது எனக் கைலாசபதி கூறுகிறார். கவிஞனுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சியை அதே வேகத்துடன் பிறர்க்குப் புலப்படுத்துவதும் இக்கொள்கையில் அடங்கும். அதாவது உணர்ச்சித் துடிப்பை, ஆவேசத்தைத் தக்கமுறையில் வெளிப் படுத்தி விளங்கவைப்பதை இது குறிக்கும். ஆகையால் இக்கொள் கைக்கு, வியஞ்சகக் கொள்கை (Expression Theory) என்ற மறு பெயரும் உண்டு என்று கைலாசபதி கூறுகிறார். கவிஞனைப் பொறுத்த வரையில் உணர்ச்சி மேலீட்டினால் உண்டாகும் மன ஆவேசத்தையும் அவதியையும் சொற்களில் வடித்து ஆறுதலடை கின்றான் என்பது இக் கொள்கையின் வரைவிலக்கணமாகும்.

தமிழில் பக்திப் பாடல்களுக்கு அடிப்படையாக அமைந்த இக் கொள்கை இடைக்காலத்தில் செயலடங்கியிருந்தபின் 20-ஆம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையுலகில் குறிப்பிடத் தக்க அளவு செல்வாக்குடன் விளங்குகிறது என்றும் பாரதி யுகத்தில் இயற்றப் பெறும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் இக்கொள்கைக்கு விளக்கஞ் செய்வனவாய் உள்ளன என்றும் கைலாசபதி குறிப்பிடுகிறார்.

## அழகியற் கொள்கை

இருபதாம் நூற்றாண்டிலேயே இக்கொள்கை இலக்கியக் கர்த் தாக்களால் பிரக்ஞைப் பூர்வமாகக் கையாளப்பட்டிருப்பினும், காவியங்கள் எழத் தொடங்கிய காலத்திலிருந்து இது வெவ்வேறு வகையிலும் அளவிலும் செயற்பட்டு வந்துள்ளது என்று கைலாசபதி கூறுகிறார். முழுமையான இலக்கியக் கொள்கை என்ற அளவில் மிகச் சமீப காலத்திலேயே இது தமிழில் இடம் பெற்றது என அவர் கூறுகிறார்.

இக்கொள்கையின் அடிப்படை, ஒருவர் ஒரு பொருளைப் பற்றி உணர்ச்சிவசப்படலாம். ஆனால் அவ்வுணர்ச்சியில் 'தூய்மை', 'ஒழுங்கு', 'இசைவு', 'இன்பம்' ஆகியன இருக்கும் என்பதற்கு உறுதியில்லை. அவையே அழகு சம்பந்தமானவை. அது மட்டு மல்ல; ஒரு பொருளிலே கற்பிதமான அருமைகளையும் காணலாம். பாவனை வளமே அழகுக் காட்சிக்கு உகந்தது உணர்ச்சிப் பிரவாகம் அல்ல; ஒழுங்கான தன்மை நோக்கமே அழகுக் காட்சி யின் சிறப்பியல்பு என்பது இதன் கொள்கை. ஒழுங்கு இசையிலே அமைந்திருப்பதுபோல கவிதையிலும் அமைதல் வேண்டும் என்பது இக்கொள்கையின் கருத்து.

உணர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் எழுந்த இலக்கியங்கள் பல, பாடுபவனையும் கேட்போரையும் இணைப்பனவாயுள்ளன; இக்கொள்கை பெருமளவுக்குப் பொதுமக்கள் தொடர்புடையதாய் 'ஜனநாயகப்' பண்புடையதாய் இருந்தது. ஆனால், 'திருந்திய உணர்ச்சி' பற்றிப் பேசிய அழகியற் கொள்கை, பாவனை வளம் வாய்க்கக் 'கலைத் தீட்சை' பெற்றவராய்க் கருதியது ஆவேசத்தில் கவிதை எழுகின்றது என்னும் எண்ணத்தை அலட்சியத்துடனும் அருவருப்புடனும் நோக்கினர் அழகியல்வாதிகள் என்று கைலாசபதி கூறுகிறார்.

அழகியல்வாதிகள் பெறுமதி (Value) என்ற கருத்தை மையமாகக் கொண்டனர். அதனை அகப் பெறுமதி, புறப் பெறுமதி என இரண்டாகப் பிரித்தனர். அகப் பெறுமதி இலக்கியத்தின் உள்ளார்ந்த இயல்பு சம்பந்தமானது. அதன் முதலும் முடிவும், தன்னிறைவும் மனநிறைவும் ஆம். புறப் பெறுமதி இலக்கியத்தின் பயன்பாடு, விளைவு, நோக்கம், சம்பந்தமானது. பிரசாரத் தொடர்புடையது. புகழ், பணம், மன ஆறுதல். போதனை, நல் நோக்கம் ஆகிய புறப் பெறுமதிகளுடைய கவிதையைத்தாம் மதிப்பதில்லை என்பர் தூய அழகியல் வாதிகள் என்று கைலாசபதி கூறுகிறார்.

அறவியற் கொள்கை ஆழமாகப் பற்றிக் கொண்ட தமிழிலக்கிய மரபில் கடு முனைப்பான அழகியற் கொள்கை எதிர்பார்க்கக் கூடிய அளவு மதிப்புப் பெறவில்லை எனக் கைலாசபதி கூறுகிறார்.

சோழர்காலப் புலவர்கள் ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், தற்காலத்தில் தேசிக விநாயகம்பிள்ளை, ச. து. சு. யோகியார். புதுக் கவிதையில் மேல்நாட்டுப் படிமக் கவிஞரை அடியொற்றி, எழுதும் ந. பிச்சமூர்த்தி குழுவினர் ஆகியோர் அழகியல் கொள்கைக்கு ஆட்பட்டவர்கள் என்று அவர் கூறுகிறார்.

## சமுதாயக் கொள்கை

இருபதாம் நூற்றாண்டிலே செல்வாக்குப் பெற்று வரும் கொள்கை இது.

அவயவிக் கொள்கையின் வீழ்ச்சிக்குப் பின் இலக்கியத்தில் சமுதாயம் சமுதாய உணர்வும் உருச் சிதைவுற்றே இடம் பெற்றுள்ளன என்று கைலாசபதி கூறுகிறார். இது அழகியற் கொள்கையில் உச்ச நிலையை அடைந்தது என அவர் கூறுகிறார். கலைஞன்

இலக்கியகர்த்தா-வெகு ஜனங்களினின்றும் வேறுபட்டவன், தனிப் பிறவி என்றெல்லாம் கருதப்படவும், சமுதாயம், அதாவது மெய்ம்மையான புறவுலகம் இலக்கியத்துக்குப் புறம்பானதாயிற்று. உண்மையிலும் கற்பனை இலக்கியத்துக்கு உயர்ச்சியளிப்பதாகப் போற்றப்பட்டது. இந்நிலையில் சமுதாயத்தை மீண்டும் இலக்கியப் பொருளாக்கி, இழந்த மெய்ம்மையைத் திரும்பவும் அடைவதே சமுதாயக் கொள்கையின் குறிக்கோள் எனக் கைலாசபதி கூறுகிறார்.

மேலும் அவயவிக் கொள்கைக்குப் பின்வந்த இலக்கியக் கொள்கைகள், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதனவற்றுள் ஒன்றை விதந்து எடுத்து அதனை முழுமையாக்கின என்பது கைலாசபதியின் கருத்து. அறவியல். மெய்யியல், உணர்ச்சி, அறிவு, அழகியல் என்பன மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தி வளப் படுத்துகின்றன என்ற போதிலும், அக்கொள்கைகள் எழுந்த விதத்திலும் அமைந்த வகையிலும் உணர்ச்சி-அறிவு, வாழ்வியல்-அறவியல் முதலியன ஒன்றுக்கொன்று முரணாகவும் ஒன்றையொன்று விலக்கி வைப்பனவாகவும் இருந்தன எனக் கைலாசபதி கருதுகிறார். இது மனித வாழ்வையும் சமுதாயப் பார்வையையும் கூறு படுத்தியது. சமுதாயம் முழுமை கெட்ட பொருளாய் இலக்கியத்தில் இடம்பெற்றது. இக்குறையை நிவர்த்தி செய்வதே சமுதாயக் கொள்கை என்று அவர் கூறுகிறார்

சமுதாயக் கொள்கையின்படி இதக்கிய கர்த்தா சுவானுபவம் பெற்ற தனிப் பிறவி அல்ல. இக்காலத்தில் எழுந்த சகல அறிவுத் துறைகளும் இயக்கங்களும் அவனைப் பாதிக்கின்றன. அவன் தன்னைப் பெரும்பான்மை மக்களிடமிருந்து பிரித்துக்கொள்ள இயலாது. அவ்வாறு வேண்டுமென்றே தன்னை ஓர் எழுத்தாளன் சமுதாயத்தின் இயக்கங்களிலிருந்து துண்டித்துக் கொண்டால் அவன் மெய்ம்மையைப் புறக்கணிக்கிறான் என்று கூறுகிறார் கைலாசபதி.

சமுதாயக் கொள்கை கலை, இலக்கியத்தில் வெளிப்படும் போது யதார்த்தவாதம் என வழங்கப்படும் என அவர் கூறுகிறார். மார்க்ஸ், எங்கல்ஸ் இருவரும் இயற்கை விஞ்ஞானத் துறைகளுக்கும் ஏற்படுத்திய பிணைப்பு சமுதாயத்தையும் உலகையும், பிரபஞ்சத்தையும் மனிதர் நோக்கும் முறையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. புற உலகமும், அக உலகமும் இயக்

கவியல் அடிப்படையில் தொடர்புடையனவாய்க் காணப்பட்டன. சமூக வாழ்வும் இயற்கையும் சில நியதிகளுக்கிணங்கி செயற்படுவது வற்புறுத்தப்படலாயிற்று. இதன் அடிப்படையிலேயே, சமூகத்தின் இயக்கப்பாட்டை அறிந்து அதன் ஒளியில் இலக்கியம் படைத்தல் யதார்த்தத்தின் முதல் நிலை ஆயிற்று. ஆகையால் தான், யதார்த்தவாதத்திற்கும், பொருள் முதல் வாதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனித வாழ்க்கையை முழுமையாகச் சித்தரிக்க யாதார்த்தவாதம் வகை செய்கிறது. அறவியல், உணர்ச்சியூட்டும் பொருள், அழகுக் காட்சி என்றெல்லாம் மனித அனுபவத்தைக் கூறுபடுத்தாமல், மனிதனுக்குரிய எதனையுமே புறம்பானதாய்க் கருதாது, 'மாநிலம் பயனுற வாழ்வதற்கு' ஏற்ற இலக்கியத்தை மெய்ம்மை பிறழாத வகையில் படைப்பதே இக் கொள்கையின் பிரதான இலட்சியமாகும்.

இலக்கியக் கொள்கைகள் வளர்ச்சி பற்றிக் கைலாசபதி இயங்குவியல் அடிப்படையில் தெளிவாகக் கூறுகிறார். "இலக்கியக் கொள்கைகள் வரலாற்று அடிப்படையிலே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுவனவாயினும், ஒன்று தோன்றியபின் முந்தியவை மறைந்துபோவதில்லை. புதியனவாகத் தோன்றும் கொள்கைகளிலே பழையனவற்றின் அம்சங்கள் மறைமுகமாகவேனும் கலக்கின்றன. ஆயினும் பொதுவாகக் கூறுமிடத்து ஒவ்வொரு காலப் பகுதியில் ஒவ்வொரு கொள்கையே பெரு வழக்காறுடையதாய் விஞ்ச நிற்கக் காணலாம். அவ்வாறு ஓங்கி நிற்கும் கொள்கைக்கோ அல்லது அதன் கூறுகள் சிலவற்றுக்கோ எதிர் விளைவாய்ப் புதியதொரு கொள்கை தோன்றுகிறது.

இதுவரை இலக்கியக் கொள்கைகள் பற்றிய கைலாசபதியின் தெளிவான கருத்துகளைக் கண்டோம். இனி அதன் பல கூறுகளைப் பற்றி ஆங்காங்கே அவர் கூறியுள்ள கருத்துகளைக் காணலாம்.

## இலக்கியத்தின் தோற்றம்

ஒரு நூல் குறிப்பிட்ட காலப் பகுதியில் தோன்றுவதற்கு ஏதுக்கள் இருத்தல்வேண்டும். உலகம் உய்யவேண்டும் என்பதற்காகத் 'திருவுளங்கொண்ட' பெரியார் திடீரென 'அருளிச் செய்வது' அல்ல இலக்கியம். காரண காரிய நியதிக்கு உட்பட்டே இலக்கியம் தோன்றுகிறது. குறிப்பிட்ட நூல்களின் தோற்றத் திற்குப் பொருளாதார, சமூக, அரசியல் நிலைமைகள் காரணி

களாக அமைகின்றன. வீரயுக காலத்திலே சான்றோர் செய்யுட்கள் தோன்றின. அதனையடுத்த காலகட்டத்திலே அறவியல் நூல்கள் தோன்றுகின்றன. எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நிலவுகிற சமுதாய அமைப்பே குறிப்பிட்ட வகை இலக்கியம் தோன்றக் காரணமாக அமைகின்றது.

ஒரே தன்மையான சூழ்நிலைகள் ஒரே மாதிரியான இலக்கிய வகையையே தோற்றுவிக்கும். இக்கருத்தைக் கைலாசபதி சான்றோர் செய்யுட்களைப் பற்றிய தனது ஆய்வின்மூலம் தெளிவாக நிறுவியுள்ளார்.

## இலக்கிய காலம் கடந்ததல்ல

இலக்கியம் காலங்கடந்தது, நித்தியமானது, தன்னிறைவானது என்ற கருத்தைக் கைலாசபதி மறுக்கிறார். ஏனைய மனித ஆக்கங்களைப் போலவே இலக்கியமும் காலதேச வர்த்தமானத்துக்குக் கட்டுப்படுவதொன்றே என்று அவர் கூறுகிறார். 'இலக்கியம் சித்தரிக்கும் உணர்வுகளும் இலட்சியங்களும் எல்லோருக்கும் எல்லாக் காலத்தவருக்கும் ஏற்றவை' என்பதையும், 'பசி, தாகம், இன்ப துன்பம் ஆகியன மனுக்குலத்துக்குப் பொதுவானவை என்பதையும் அவர் மறுக்கிறார்,

## சுத்த இலக்கியவாதம்

அரசியல், பொருளியல், விஞ்ஞானம் ஆகியவற்றோடு இலக்கியத்தைத தொடர்புபடுத்தக் கூடாது என்று கூறுகிற 'சுத்த இலக்கியவாதிகளை'க் கைலாசபதி அம்பலப்படுத்துகிறார். அவர்கள் கூறுகிற, 'அரசியல்', 'பொருளாதாரம்' என்பதெல்லாம் அவர்கள் தமக்குப் பிடிக்காத அரசியல் கொள்கைகளையும். பொருளியல் தத்துவங்களையும் பற்றி மட்டுமேயாகும் என்று அவர் கூறுகிறார். உண்மையில் 'அவர்கள் அரசியலையும் பொருளியலையும் மறுப்பவர்கள் அல்லர். அவ்வாறு மறுத்தால், நன்றாகப் பணஞ்சம்பாதிக்க வழிதெரிந்த பத்திரிகை எழுத்தாளனாக அவர்கள் வாழவியலாது' என்று அவர் கூறுகிறார்

## இலக்கியம் எதற்காக

இக்கேள்விக்குக் கருத்து ரீதியாக விடை கூறுவதைவிட இலக்கிய கர்த்தாக்களின் நோக்கையும் போக்கையும் விவரிப்பதனால் விளக்கம் தேட முடியுமெனக் கைலாசபதி கருதுகிறார். தனிப்பட்ட ஓர் எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய

நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான் என்றாலும், எழுத்தாளரைப் பொதுவாக நோக்குமிடத்து மூன்று நிலைப்பாடுகளைக் காணலாம் என அவர் கூறுகிறார்.

''எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. சமுதாயத்தில் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வர்க்க வேறுபாட்டினால் இவை எழுகின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். இந்நிலையில் மூன்று நிலைபாடுகளைப் பொதுவாக எழுத்தாளரிடையே காணக்கூடியதாய் உள்ளது'' என அவர் கூறுகிறார்.

(1) ஒரு பிரிவினர், பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் துன்ப துயரங்களையும் எதிர்நோக்காதவராய், அவற்றுடன் சம்பந்தப்படாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு, அதற்கியையக் கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்கள். இவர்கள் சமூகப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்காமல் மானசீக உலகில் இருந்துகொண்டு எழுதுவோர் ஆவர்.

(2) இன்னொரு பிரிவினர் சமுதாயப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் ஓரளவுக்கு நோக்கி, அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பவர்கள், சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்ப துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அனுதாபத்துடன் இவர்கள் பார்க்கிறார்கள். எனினும், சமுதாய நிலைமைகளைப் பிரதிப்பலித்தாலே போதும் என்ற எண்ணம் உடையவர்கள். இவர்கள் சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் தமது கடமை, அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்தரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு உண்டு.

(3) சமுதாயத்திற் காணப்படும் முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியாகத் தனி மனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு

காட்டாமல், அவற்றை வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடாகக் காண்பவர்கள். இவர்கள் சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, அதனை மாற்றியமைக்கும் பணியில் பங்கு பெறுவதுடன், அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றையத் தேவையாகும் என்று வற்புறுத்துகின்றனர்.

மேற்கூறிய மூன்றாவது பிரிவினரின் குரல் 'வரலாற்று அடிப் படையில் நோக்கும் போது, தொழிலாளர், விவசாயிகள் வர்க்கத் திலிருந்து தோன்றும் கலையிலக்கியக் கோட்பாட்டின் காத்திர மான குரல் இது என்பது வெளிப்படை. எதிர்காலத்தை மாற்றிய மைக்கும் பெரும் பணிக்கு அவர்கள் தலைமை தாங்குபவர்கள் ஆதலின் அக்குரல் வலிமையுடையது என்பதில் ஐயமில்லை எனக் கைலாசபதி கூறுவதிலிருந்து, இலக்கியம் எதற்காக என்றக் கேள்விக்கு அவரது விடை தெளிவாகத் தெரிகின்றது.

## இலக்கியப் படைப்பின் வெற்றி

எழுத்தாளன் (தனது சுய விருப்பு வெறுப்பு எவ்வாறிருப் பினும்) தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. காலந்தோறும் சமுதாயத்தில் முரண்பாடுகளும் போராட் டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கிறான். இவற்றுக்கு அவன் முகங்கொடுக்கும் விதத்திலும் முரண்பாடுகளை யும் பிரச்சினைகளையும் அவன் புரிந்துகொள்ளும் விதத்திலும் அவற்றுக்கான தீர்வு முடிவுகளைத் தெரிந்துகொள்ளும் தகைமை யிலுமே அவனது இலக்கியப் படைப்பின் வெற்றி தோல்வி தங்கி யிருக்கிறது.

மேலும் எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் இயக்கத்தில் ஏதோ ஒருவகையிற் பங்கு கொண்டாலன்றி, இன்றைய கால கட்டத்தில் புறநிலைக்குப் பிசகாத நாவலைப் படைக்க இயலும் என்று தான் நம்பவில்லை என்று அவர் கூறுவதிலிருந்து, ஒரு இலக்கியப் படைப்பின் வெற்றி எதைச் சார்ந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

## கலைத்துவம்

'கலைத்துவம்' என்ற பெயரால் முற்போக்கு இலக்கியங் களைச் சாடுகின்ற சிலருக்குப் பதிலளிக்கும் வகையில், கைலாசபதி

கலைத்துவம் பற்றித் தெளிவாக விவாதிக்கிறார். 'கலைத்துவம், கலைநயம் கலையழகு முதலியன இலக்கியத்திற்கு இன்றியமை யாதன என்று ஒருவர் கூறியதும் அது யாவரும் ஏற்றுக் கொள்ளக் வேண்டிய வெளிப்படையான நியதி—உண்மை என்ற எண்ணமே முதலில் தோன்றும். ஆனால் சிறிது நுனித்து நோக்கும் போது தான் முற்போக்கு இலக்கியத்தைக் குறைகூறி, அதற்கு மாசு கற்பிக்கும் கலைவாதிகள் முணுமுணுக்கும் 'கலைத்துவம்,' 'கலை நுணுக்கம்', 'கலை நயம்' இவையெல்லாம் உண்மையில் எதைக் குறிக்கின்றன என்பது தெரியவரும். அதாவது இச்சொற்றொடர் களுக்கு முடிந்த முடிவான பொருள் கிடையாது என்பது புலனாகும். 'கலைத்துவம்' என்னும் கோட்பாடும் அதனைப் பயன்படுத்துவோருடைய வர்க்கநலன், அக்கறை. பிரமை முதலிய வற்றுக்கு இயைய வெவ்வேறு பொருள் குறிப்பதாய் அமையும்.

முற்போக்கு இலக்கியத்திற்கு அழகியல் பிரச்சினைகள் இல்லை என்பது நமது கருத்தல்ல. மாறாக அது எதிர்நோக்க வேண்டிய அழகியல் பிரச்சனைகள் அநேகம் உண்டு. ஆனால், அவற்றை முற்போக்கு உள்ளடக்கம் மக்களது இரசனை, இயக்கங்களின் வளர்ச்சி அனுபவம் இவற்றின் அடிப்படையிலே எதிர் நோக்கித் தீர்க்கமுடியும். கலைவாதிகள் நிலைபேறடைந்துள்ள அளவுகோல் களைக் கொண்டு முற்போக்கு இலக்கியத்தை அளக்க முற்படு கிறார்கள். ஆனால் முற்போக்கு இலக்கியமோ புதியதோர் உலகத்தை உருவாக்க விழைவது போலவே அதற்கு உதவ வேண்டிய இலக்கியத்தினடியாகப் புதிய அழகியல் அளவுகோல் களையும் உருவாக்கி அளிக்க வேண்டிய கடமையை எதிர்நோக்கு கிறது. முற்போக்கு இலக்கியக் கர்த்தாக்களே அதனையும் செய் வதற்குரியவர்கள். அவர்களுக்கும் ஒரு பாரம்பரியம் உண்டு என்று கைலாசபதி குறிப்பிடுகிறார்.

## புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றம்

'ஓர் இலக்கிய வடிவம் புதிதாகத் தோன்றுகின்றதென்றால், அதற்கோர் இன்றியமையாமை இருக்கிறது என்பது பொருள். புதிய இலக்கிய வடிவம் பெருவழக்குப் பெறும் காலத்தில் அதற்கு முன்னிருந்த வடிவங்கள் திடீரென வழக்கிறந்து போகின்றன என்பது பொருளன்று. அவை தொடர்ந்து நிலவி வருவன. எனினும் அவற்றின் முக்கியத்துவம் குறைந்து போகிறது.'

என்ற அடிப்படையை முன்வைத்து, கைலாசபதி தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்துள்ளார். குறிப்பாகச் சான்றோர்

பாடல், காவியம், உலா, நாவல், தன்னுணர்ச்சிப் பாடல் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றி அறிவியல் பூர்வமான ஆய்வுகளை அவர் நடத்தியுள்ளார்.

சமூக அமைப்பு மாற மாற, சமூகத்தைப் பற்றியச் சிந்தனைகளும் மாறுகிறது! அதன் விளைவாய்க்கலை இலக்கியங்களின் உள்ளடக்கங்களும் மாறுகின்றன. உள்ளடக்கம் மாறுகின்ற காரணத்தினாலும், வாசகர்களின் நிலையில் மாற்றம், தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற காரணத்தினாலும் இலக்கியங்களின் உருவம், வடிவம் மாற்றமடைகிறது என்று கைலாசபதி கூறுகிறார்.

இலக்கியங்களின் உள்ளடக்கம், உருவம் ஆகியவற்றின் மாற்றம் இலக்கிய உத்திகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்று கைலாசபதி கூறுகிறார். பாத்திர வார்ப்பு, உரையாடல், வர்ணனை போன்றவற்றில் வரலாற்று ரீதியாக இலக்கியங்களில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவாகப் பல இடங்களில் அவர் விளக்கியுள்ளார்.

காவியம், கதைப்பாடல் போன்ற நாட்டுப்பாடல்கள், தன்னுணர்ச்சிப் பாடல்கள், புதுக்கவிதை, நாவல், சிறுகதை ஆகியவற்றின் உள்ளடக்கம், உருவம் உத்தி ஆகியவற்றைப் பற்றி அவர் மேற்கண்ட அடிப்படையில் ஆராய்ந்துள்ளார். இலக்கிய வரலாற்றை உற்றுநோக்கிடும் போது பல்வேறு காலங்களின் சமுதாயத் தேவைகளையும் உந்தல்களையும் ஒட்டி புதிய பொருள் பழைய வடிவங்களிலும், பழைய பொருள் புதிய வடிவங்களிலும் அமைந்துவிடுதலைப் பார்க்க முடிகிறது என்று கூறி, உலாவின் தோற்றத்தை உதாரணங்கள் காட்டுகிறார் கைலாசபதி. அற நூல்களினால் அமுக்கப்பட்டிருந்த அகப்பொருள் உலாவில் மீண்டும் வெளிப்படுறது என்று அவர் கூறுகிறார்.

## இலக்கிய நடை

நடை ஆளுமையின் பிரதிபலிப்பு என்ற கருத்து தற்கால இலக்கியங்களுக்கே—தனி மனிதவாதம் செல்வாக்குப் பெற்று விளங்கும் தற்கால இலக்கியங்களுக்கே—பொருந்தும் எனக் கைலாசபதி கூறுகிறார். வரலாற்று ரீதியாகப் பார்க்குமிடத்து, எல்லாக் காலத்து இலக்கியங்களுக்கும் இது பொருந்துவதாயில்லை என்று அவர் கூறுகிறார். சங்கச் சான்றோர் செய்யுள்களிலே நடைவேறுபாடுகளே இல்லையென்று கூறிவிடலாம்

என்றும் அச்செய்யுளுக்குப் பொதுவான மொழிநடை ஒன்றுள்ளது என்றும் அவர் கருதுகிறார். அதனைப் பயன்படுத்தும் வகையில் புலவர்களுக்கு இடையிலே ஏற்றத் தாழ்வு காணலாமே அன்றி, அவர்களது செய்யுள்களின் தனிப்பட்ட நடைச் சிறப்பைக் காண முற்படுவது பொருத்தமற்ற செயலாகும் என்று அவர் கூறுகிறார்.

தனிமனிதவாதம் செல்வாக்குப் பெற்று விளங்கும் நமது காலப்பகுதியில் ஒரு கவிஞன் மற்றொரு கவிஞனிலிருந்து வேறுபடு வதையேச் சிறப்பாகக் கருதுகிறான். ஆனால் வாய்மொழிப் பாடல்கள் உருப்பெற்றச் சான்றோர் காலப் பகுதியில் பொதுப் பண்புகளைச் சரிவரப் பெற்றிருத்தலே இசைவதாகக் கொள்ளப் பட்டது. அப்பண்புகளின் மூலமாகவே அவன் இனங்கண்டு கொள்ளப்பட்டான். கூட்டு வாழ்க்கையின் எதிரொலியை அதிலே நாம் கேட்கிறோம். ஆகவே வாய்மொழி இலக்கியத்தைப் பொறுத்தவரையில் 'தனிமனித ஆளுமையே நடை' என்ற கூற்று ஒவ்வாதது என்று அவர் கூறுகிறார்.

கவிதைகளின் நடைபற்றிக் கூறவருகின்ற கைலாசபதி பின் வரும் கருத்தை முன்வைக்கிறார். நடை என்ற அளவில் மிகப் பொதுவான சில பண்புகள் இருக்கின்றனவாயினும், வெவ்வேறு வகையானச் சந்தர்ப்பங்களுக்கும், பொருளுக்கும், வெளிப் பாட்டுச் சாதனங்களுக்கும் ஏற்ப நடையின் பண்பும் பயனும் வேறுபடுகின்றன. வெவ்வேறு வகையான செய்யுள்களுக்கு வெவ்வேறு தனிச் சிறப்பியல்புகள் இருப்பதைப் போல ஒவ்வொரு வகையான 'நடைக்கும்' பல காரணிகள் உள்ளன.

## எழுத்தாளனும் இலக்கியப் பொருளும்

ஓர் எழுத்தாளன் தனது இலக்கியத்திற்குப் பொருளைத் தேர்ந்தெடுத்தல் என்பது ''பிரக்ஞைபூர்வமான காரியம்'' என்று கைலாசபதி கூறுகிறார். ஓர் எழுத்தாளனது வர்க்கநிலை, வாழ்க்கை அனுபவம், உலக நோக்கு, குறிக்கோள் முதலியன அவன் தேர்ந்தெடுக்கும் விஷயத்தை இலக்கியப் பொருளைப் பல வழிகளில் நிர்ணயிக்கின்றன. விஷயம் நிர்ணயிக்கப்படுகின்ற வேளையிலே அது வெளிப்படும் தன்மையும் பெருமளவுக்கு நிர்ண யிக்கப்படுகின்றன என்று அவர் கூறுகிறார்.

## கலை இலக்கிய ஆக்கத்தின் இரகசியம்

மனித உணர்வு புறஉலகை அப்படியே பிரதிபலிப்பதோடு அமைந்துவிடுவதில்லை. அது தானும் உலகைப் படைக்கிறது. மனிதன் புறநிலையிலிருக்கும் யதார்த்தத்தைத் திட்டவட்டமாய் பிரதிபலிக்கின்ற அதே செயற்பாங்கில், அவன் அந்தப் புறநிலை யதார்த்தம் பற்றிய சாதக பாதகங்களை தனது கண்ணோட்டத்திற்கு ஏற்ப வெளிப்படுத்துகிறான். புறநிலை யதார்த்தத்தை அப்படியே பிரதிபலித்தால், அது கலைப்படைப்பு ஆகாது. அதன் சாரத்தை 'உட்புகுந்து' ஆய்ந்து தெளிந்து தெரிவிப்பதே படைப்பு ஆகும் என்று கைலாசபதி கூறுகிறார். பிரதிபலிக்கப்படும் யதார்த்தத்தின் மதிப்புத் தேர்வையும்—மனக்காட்சியையும்—மனிதன் வெளிக் கொணர்வதினாலேயே படைக்கப்படும் பொருள் காலத்துக்குக் கட்டுப்பட்டும், காலத்தைக் கடந்து வாழும் பண்பினைப் பெற்றுவிடுகிறது என அவர் கருதுகிறார். இதுதான் "கலை இலக்கிய ஆக்கத்தின் இரகசியம்—இரஸவாதம்"—என அவர் கூறுகிறார்.

## எழுத்தாளனின் பிரச்சனை

தனி மனித வாதத்தையே நாவலில் முடிந்த முடிவாகக் கொள்ளும் படைப்பாளி தனிப் போக்குடைய விசித்திரப் பிறவிகளையே உருவாக்கிவிடுகிறான். இது இறுதியில் யதார்த்தத்திற்குப் புறம்பாகிவிடுகிறது. பிரச்சனைகளையும் சமூக நிகழ்ச்சிகளையும் அதி முக்கியமாகக் கொள்ளும் ஆசிரியன் வெறும் நிகழ்ச்சிப் பதிவாளனாக அமைந்துவிடும் ஆபத்தும் உண்டு. ஆயினும் இவை இரண்டும் தனித்துச் சென்றால் முழு வளர்ச்சியடைவதும் இயலாது. இன்று எமது தமிழ் நாவல் உலகிற் காணப்படும் பிரச்சனைகள் அனைத்துக்கும் இதுவே அடிப்படை என்று எண்ணுவதாகக் கைலாசபதி கூறுவதிலிருந்து, அவர் இலக்கியத்தின் உள்ளடக்கம், உருவம் இரண்டுக்கும் இலக்கிய உலகில் இருக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். இவற்றில் ஒன்றைப் புறக்கணித்தாலும் இலக்கியம் இலக்கியமாகாது என்று அவர் கருதுகிறார். இவ்விரண்டையும் உயிருள்ள வகையில் இணைப்பது எழுத்தாளனுக்கும் பிரச்சனையாக இருப்பது என்பது உண்மை. எனினும், இப்பிரச்சனையைத் தீர்ப்பதிலேயே அவனின் வெற்றி அமைகிறது என்று அவர் கருதுகிறார்.

இதுவரை நாம் ஆய்ந்ததிலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கைலாசபதியின் சிறப்புகளாகக் கருத முடியும்.

1. மார்க்சியத் தத்துவத்தைத் தெளிவாக அறிந்து, அதனை தமிழ் இலக்கியங்களுக்கு முறையாகப் பயன்படுத்தி ஆய்வு செய்தவர்களின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

2. இலக்கியங்களுக்கும் சமூகத்திற்கும் இடையில் உள்ள உறவுகளைத் தெளிவாக விளக்கியவர்.

3. இலக்கியக் கொள்கைகளை வரலாற்றடிப்படையில் ஆய்ந்து தெளிவுபடுத்தியவர்.

4. இலக்கியத் தோற்றம், இயல்பு, பண்பு, பயன் ஆகியவற்றை அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து, விளக்கியவர்.

5. இலக்கிய உலகில் நீடிக்கின்ற "சுத்த இலக்கியவாதம்," "கலைத்துவம்" போன்றவற்றைப் பற்றிய போலித்தனமான கொள்கைகளை அம்பலப்படுத்தியவர்.

6. முற்போக்கு இலக்கியங்களின் தன்மைகளை ஆய்ந்துகாட்டி போலி முற்போக்கு இலக்கியவாதிகளை இனங்கண்டு காட்டியவர்.

7. மொத்தத்தில் மார்க்சியத் தத்துவத்தின் உதவியுடன்தான் கலை இலக்கியங்களைப் பூற்றி ஆய்வை அறிவியல்பூர்வமாக மேற்கொள்ள முடியும் என்பதை நிரூபித்திக் காட்டி, இன்று பெரும்பான்மையான ஆய்வாளர்கள் மார்க்சிய - ஆய்வு முறையை நோக்கிச் செல்லும் ஒரு புதிய வளர்ச்சியைத் தமிழ் ஆய்வுலகில் ஏற்படுத்தியவர் என்பதில் ஐயமில்லை.

## கைலாசபதியின் நூல்கள்


1. இரு மகா கவிகள், 1974, (இரண்டாம் பதிப்பு) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
2. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், 1978 (இரண்டாம் பதிப்பு), மக்கள் வெளியீடு, சென்னை.
3. தமிழ் நாவல் இலக்கியம், ஜனவரி 1968 (முதல் பதிப்பு), ஜூலை 1977 (இரண்டாம் பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
4. ஒப்பியல் இலக்கியம், மார்ச் 1969 (முதல் பதிப்பு), ஜனவரி 1978, (இரண்டாம் பதிப்பு), பாட்டாளிகள் வெளியீடு, சென்னை.
5. அடியும் முடியும், 1970, பாரிநிலையம், சென்னை.

6. Tamil Heroic Poetry, 1968, Oxford.

7. கவிதைநயம் (இணையாசிரியர்) மார்ச் 1970, (முதற் பதிப்பு), சென்னை, ஆகஸ்ட், 1976 (இரண்டாம் பதிப்பு), பாட்டாளி கள் வெளியீடு, சென்னை.

8. இலக்கியமும் திறனாய்வும், ஏப்ரல், 1972 (முதற் பதிப்பு), இலங்கை, மார்ச் 1981 (மூன்றாம் பதிப்பு), சென்னை புக் ஹவுஸ், சென்னை,

9. பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், ஜனவரி 1974 (முதற்பதிப்பு), ஏப்ரல் 1980 (இரண்டாம் பதிப்பு), இலக்கியச் சிந்தனை, சென்னை.

10. சமூகவியலும் இலக்கியமும், செப்டம்பர், 1979, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

11. திறனாய்வு பிரச்சனைகள், பிப்ரவரி 1980, சென்னை புக் ஹவுஸ், சென்னை.

12. நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், நவம்பர், 1980, மக்கள் வெளியீடு, சென்னை.

13. இலக்கியச் சிந்தனைகள், ஜனவரி, 1983, கொழும்பு.

# 10

# மொழிபெயர்ப்பு இலக்கியம்

சு. சண்முகவேலாயுதம்

## முன்னுரை

உலகின் எல்லா நாடுகளிலும், எல்லா மொழிகளிலும் படைப்பிலக்கியங்கள் பல்கிப் பெருகுவதுடன் மொழிபெயர்ப்புகளும் மலர்ந்து மணம் பரப்புகின்றன. இலக்கியங்களில் மட்டுமின்றி அறிவியல் போன்ற பிற துறைகளிலும் அமைகின்றது. ஒருவரையொருவர் அறிந்துகொள்ள விழைதல்; ஒருவர் பெற்றுள்ள சிறப்பினை, முன்னேற்றத்தினைத் தமதாக்கிக்கொண்டுத் தாமும் முன்னேற முயற்சித்தல் போன்ற அடிப்படைக் காரணங்களால் மிகுந்த செல்வாக்குப் பெற்று வருகின்றது மொழிபெயர்ப்பியல். தமிழ் மொழியிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. பொது நிலையில், ஒவ்வொன்றிற்கும் குறிப்பிடத்தக்க சில தனிப் பண்புகள் இருப்பது போன்று மொழிபெயர்ப்புத் துறைக்கும் உண்டு. அவற்றை இனங்காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

மொழி, பெயர்ப்பு எனும் இரு சொற்களின் இணைவில் தோன்றியுள்ள மொழிபெயர்ப்பிற்குப் பலரும் தங்கள் விளக்கங்களை நல்கியுள்ளனர். மொழிபெயர்ப்பாளர் தங்களுக்கெனத் தனித்த கண்ணோட்டத்துடன் மொழி பெயர்ப்பு செய்வது

போன்று அதற்குரிய விளக்கமும் சில முரண்பாடுகளுடன் காணப் படுகிறது. எனினும் ஒரு மொழியில் உள்ள கருத்தினை மற்றொரு மொழிக்கு மாற்றுதல் என்னும் அடிப்படை உணர்வில் ஒன்றுபடு கின்றனர்.

"மொழி பெயர்ப்பு எனப்படுவது, ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொல்லுச் சொல்லாகப் பெயர்த்து அடுக்கி வைப்பது அன்று. வாக்கியங்களிலுள்ள சொற்களுக்கு மற்ற மொழியிலிருந்து நேரான சொற்களைப் பெய்து வாக்கியங் களாக்கி அமைத்து விடுவதுமன்று. உண்மையில் பெயர்த்து எழுதப்பட வேண்டியது பொருளேயாகும். எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமும் தோன்ற ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும், சுருக்கியும் விரித்தும் பெயர்த்து அமைப்பதே மொழிபெயர்ப்பாகும்" என்பது ஒரு சாரார் கருத்தாய் இருக்க[1], அதனை மறுத்து சுருக்கி அல்லது விரித்துரைப்பதனை ஏற்காது அவ்வாறே தருதலையே உண்மை மொழிபெயர்ப்பாக மற்றொரு சாரார் கொள்வர்[2]. இவ்விரண்டாம் நிலையினை மேனாட்டறிஞ ரும் ஏற்றுக் கொள்கின்றனர்[3]. 'ஒரு மொழின் கண்ணுள்ள

1. மு. கணபதிப்பிள்ளை, மொழிபெயர்ப்பும் சொல்லாக்க மும்; சென்னை. மு. ப 1967 அருள் நிலையம்; ப. 11.
2. "மொழி பெயர்ப்பே ஒரு முறையில் கடினமான இலக்கிய வேலை அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது. சீமை ஓட்டைப் பிரித்து விட்டுக் கீற்று வைக்கும் வேலை போன்றது. ஒரு கட்டுக் கோப்பைக் கலைத்து மற்றொரு கட்டுக் கோப்பை ஏற்றுவதில் எப்பொழுதுமே பூரண வெற்றி கொள்ள முடியாது. அடிக்கு அடி நிர்பந்தம். எல்லைக் கோட்டைத் தாண்டினால் மொழிபெயர்ப்பாவதில்லை. வியாக்கியானம் தூண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை. நடையும் சரள மாவதில்லை இவைகளின் நடுவில் நீந்திக்கொண்டு போய்க் கரையேற வேண்டும்" என்பார் திரு.கு.ப. இராச கோபாலன் அவர்கள். —மு. கோவிந்தராசன்; மொழித் திறன்களும் சில சிக்கல்களும்; சென்னை: தேன்மொழி பதிப்பகம்; மு. ப. டிச. 1980; ப. 215
3. Normally, it is universally accepted that any translation worthy of the name must reproduce the full sense of the original, omitting nothing and adding nothing. If it does either of these things, then it is no longer a translation but moves into the spheres of the summary, precis, adaptation, version, abstract or arrangement.—I an F. Finaly; Translating, Teach yourself Books: London, Ied 1971, p. 4.

செய்தியை வேறொரு மொழியில் பொருள் மாறுபாடின்றி சுவையும் தன்மையுங் குன்றாமல் அப்படியே மாற்றுவதற்கே மொழி பெயர்ப்பு எனப் பெயரிடுகின்றோம்'' என்பதே[4] பொருத்தமாகத் தோன்றுகின்றது.

## மொழிபெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

கி. மு. 250இல் லத்தீன் மொழிபெயர்ப்பு தோன்றியுள்ள போதிலும் கி. பி, ஏழாம் நூற்றாண்டிலிருந்து பிறமொழியினரிடம் மொழி பெயர்ப்பிருந்தமையை அறிய இயலுகிறது.[5] ஆயின் தமிழரும் கிறித்து பிறப்பதற்கு முன்பே மொழிபெயர்ப்பில் அக்கறை கொண்டிருந்தனர் என்பதனைத் தமிழரின் தொன்மையை பறைசாற்றும் ஒல்காப்புகழ் தொல்காப்பியத்தின் வழி அறியலாம் மரபியலில் நூலைப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியர் வழி நூலின் வகையாக மொழிபெயர்ப்பினை,

தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே (1597)

எனச் சுட்டியுள்ளார், பெயர்ப்பு எனாது 'மொழி பெயர்த்து அதர்ப் பட யாத்தல்' என்று கூறுவதால், சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்கும் நிலை கருதப்படாது, கருத்தை மனத்தகத்து வாங்கித் தமிழ் நெறிப்படத் தழுவியளிக்கும் நிலையே கருதப்படுகின்றது எனலாம். எனினும் பிறமொழியறிஞரின் கருத்துகளை நம் மொழியில் ஏற்றுக்கொண்டனர் என்பதில் ஐயமில்லை. 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல்வேண்டும் என்ற பாரதியின் விருப்பம் 'அன்றே நமது முன்னோர்களால் போற்றப்பட்டமை, மொழி வளர்ச்சியின் பால் அவர்கள் கொண்ட பற்றினை உணர்த்துகின்றது.

தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றில் மொழி பெயர்ப்புகளைப் பொறுத்தமட்டில் முற்காலத்தன தழுவல்களாக அமைந்தமையும் இதனுடன் ஒருங்கே எண்ணத்தக்கது. சங்க இலக்கியம்,

4. மு. கோவிந்தராசன்; முன் சுட்டியது ப. 213
5. Two movements in translating developed from Greece. The first of these was concerned with translations made from Greek into Latin by Livius Andronicus, having been made about 250 B.C. Fragments of this early example of the translator's art still survive.—Ian F. Finlay; op. cit., p. 18

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் முதலானவற்றில் ஆங்காங்கே வடசொற்களைக் கண்டாலும், தழுவல் நிலையினை பெருங்கதை முதலான காப்பியங்களிலிருந்து அறிய முடிகிறது. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" எனும் பாண்டியரின் செப்பேட்டுக்குறிப்பும் தொடரும், சங்க நூல்களில் காணும் இராமாயணம், மகாபாரதம் முதலான இதிகாசங்களின் கதைகளும், (புறம் 378 : 18.21 கலி 25: 1-4) அன்றே பிறமொழி நூல்கள் நம்மொழிக்கு வந்தமையை அறிவுறுத்துகின்றன. எனவே தழுவல்களாகவோ அன்றி மொழிபெயர்ப்புகளாகவோ வடமொழி நூல்கள் தமிழ் மொழியில் இருந்து அவை மறைந்திருக்கலாம் என ஊகிக்க வாய்ப்பேற்படுகிறது.

சமய இயக்கம் காரணமாக வடமொழி நூல்கள் தமிழ்மொழியில் மாற்றம் பெற்றமை 18-ஆம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு காரணங்களால், பல மொழி நூல்களும் தமிழ் மாற்றம் கொள்ளுதல் எனலாயிற்று. வணிகம் காரணமாகவும், பிற அரசுத் தொடர்பு காரணமாகவும், புது சமயத்தாக்கம் காரணமாகவும், ஒரு மொழியினர் வாழ்ந்த பகுதிகளில் பிறமொழிக் குடியிருப்புகள் ஏற்பட்டு, இருமொழியினர் நெருங்கி வாழும் நிலை தோன்றிய பொழுது, கருத்துப்பரிமாற்ற அடிப்படையில் மொழி பெயர்ப்பு வளரலாயிற்று என்பர். இன்று அது ஒரு கலையாகப் பலராலும் போற்றப்பட்டு மிக விரைவாக வளர்ந்து வருகின்றது [6]

## மொழிபெயர்ப்பியல்பு

அன்று இலக்கியங்களில் மட்டும் காணப்பட்ட நிலை இன்று அறிவியல், சட்டம், பொருளாதாரம், வரலாறு, கலைகள் எனப் பல்வேறு துறைகளிலும் காண படுகிறது. இப்பல்வேறு துறைகளி

6. "ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் சீன தேசத்தில் மொழி பெயர்ப்புச் சங்கம் நடத்திய ஹயவக்தீஸவ என்ற பண்டிதரிடம் ஜப்பானிலிருந்து பல குருக்கள் வந்து ஸமஸ்கிருதம் படித்ததாகச் சரித்திர ஆதாரத்தினால் தெரிகிறது ...805-ஆம் வருஷத்தில் ரெய்லோன் என்ற ஜப்பானிய குரு சீனத்துக்குப் போய் அங்கே பௌத்த மொழிபெயர்ப்புச் சங்கத்தின் தலைமையை நடத்தினர். ஆங்கில உரைநடையை வளர்த்த பெருமைக்குரிய ஆல்பிரட் (849—901) இலத்தின் மொழியில் பீடு (Bede) எழுதிய சமய வரலாறு (Ecclesiastical History) என்பதையும், போத்தியஸ் எழுதிய ஆறுதல் (Consolation of Boethius) என்பதையும் மொழிபெயர்த்திருக்கிறார்." — மு. கோவிந்தராசன் முன்சுட்டிய நூல் ப. 213.

லும் காணப்படும் மொழிபெயர்ப்புகளை பொது நிலையில் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. இலக்கியம்
2. அறிவியல் துறைகள்
3. சமயம்
4. கலைகள்
5. உரைநடை

என ஐந்தாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு கூறின் இயல்பிற்கேற்ப மொழிபெயர்த்தல் இன்றியமையாதது ஆதலின் இவை அனைத் திற்கும் ஒரே அளவு கோலினைப் பயன்படுத்துதல் பொருந்தா. மொழிபெயர்ப்பின் சில அடிப்படைக் கூறுகளால் இவையனைத் தும் ஒன்றுபடுகின்றன. ஏனையவற்றில் தமக்கெனச் சில சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளன. இவ்விரண்டினையுமே நாம் மொழி பெயர்ப்புக் கொள்கைகளாக ஏற்கமுடியும். முதற்கண் அனைத்தின் பொதுக்கூறாக அமைவனவற்றைக் காணலாம்.

## மொழிபெயர்ப்புக் கொள்கை

1. முரண்பாடு தவிர்த்தல்: ஒரு மொழியின் கருத்துகளை மற்றொரு மொழிக்கு மாற்றுதல் என்ற நிலையில், மூல நூலின் கருத்துகளில் சிறிதும் மாறுபாடு ஏற்படாது இருத்தல் மிக்கதேவை யாகும். அவற்றுள் முரண்பாடு தோன்றின், மொழிபெயர்ப்பின் நோக்கம் தடைப்படும். எனவேதான் மொழிபெயர்ப்பாளர் மூல நூலினை நன்கு புரிந்துகொண்டு அதன்பின் மொழிபெயர்ப்பில் இறங்கவேண்டும். ''மொழிபெயர்ப்பென்பது எளிதான வேலை யல்ல. மூலப்பாடம் எழுதவல்ல ஆற்றலுடையவர்களே மொழி பெயர்க்க இறங்கமுடியும். மூலப்பாடம் எழுதுபவர்க்காயினும் ஒரு மொழிப்பயிற்சிப் போதுமானது. மொழி பெயர்ப்பாளர்க்கோ இரு மொழிகளிலும் தேர்ந்த கல்வி ஞானம் இருக்க வேண்டு வது இன்றியமையாதது. சொல்லுக்குச் சொல் பெயர்த் தடுக்குவது மொழிபெயர்ப்பாகாது. பெயர்க்கப்பட வேண்டியது பொருளே. அங்ஙனம் பெயர்க்கும்போது அவ்வவ் நாட்டு வழக்கு களையும் மரபுகளையும் நன்கு தெரிந்திருத்தல் இன்றியமையா தது'' எனும் கவிமணியின் கூற்றைஇணைத்து நோக்கும் பொழுது கருத்து முரண் தோன்றாவகையில் நூலை மொழிபெயர்ப்பதற்கு மொழி பெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டிய திறன் புலப்படும். முரண்பாடுகள் இருப்பின் அவை தவறான கருத்துகளை மாற்று மொழியினருக்கு அறிமுகப்படுத்துவதோடு, மொழி பெயர்ப்பி

னின்றும் மாறி தழுவலாகிவிடும். அறிவியல், மருத்துவம், சட்டம், வரலாறு போன்றவற்றில் முரண்பாடுகள் நிகழ்ந்தால் அதன் விளைவுகளும் குறையுடையதாக அமையக் கூடும். ஆகவே இது மிக முக்கியமானதொன்றாக வேண்டப்படுகிறது.

2. எளிமை: ஒரு மொழிக்கருத்தினை மற்றொரு மொழியின ருக்கு அறிமுகப்படுத்துதல் என்ற நிலையில் இது மிகுதியாக வேண்டப்படுகிறது. "ஒரு மொழி பெயர்ப்பு அறிஞர்களுக்கு மட்டுமல்ல சாதாரண ஜனங்களுக்கும் புரியக்கூடியதாக இருக்க வேண்டும்" என்ற பெஞ்சமின் ஜோவெட் கருத்தும்[7] இதனை உணர்த்தும். மூலநூலின் அழகு சிதையா வண்ணம், கற்பாருக்கு இயல்பான நடையில், இது மொழி பெயர்ப்பு எனத் தோற்ற மளித்துவிடாதபடி எளிய, இனிய சொற்களால் மொழி பெயர்க் கும்போது இவ் எளிமை அமைந்துவிடுகிறது.

3. தெளிவு: மொழிபெயர்ப்பினைக் கற்கும் பொழுது அது மிகத் தெளிவாக அமைந்திருந்தால்தான் எழுந்ததன் நோக்கம் நிறைவேறும். கருத்துகள் தெளிவின்றி உரைப்பின் அதனால் பயனில்லை. கருத்துத் தெளிவிற்காக, மூலநூலின் மிக நீண்ட தொடர்களை ஆங்காங்கே எளிய தொடர்களாக்கியும் மொழி பெயர்க்கலாம். மூலநூலார் பயன்படுத்தியிருக்கும் கடினமான பதங்களையோ அன்றி மொழிபெயர்ப்பினைப் படிப்பார் அறியாத சில பொருள்களையோ மொழிபெயர்க்க வேண்டிவரின் அவற்றைக் கற்பார் அறிந்த வழக்கு மொழிகளில் தருவதால் தவறில்லை.

4. விளக்கங்கள்: ஒவ்வொரு மொழிக்கும் என்று தனித்த சிறப்புக் கூறுகள் உண்டு. ஒன்றன் சிறப்பு மற்றொன்றில் உறுதி யாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை. அவ்வவ் மொழியினரின் மரபுகளும், பழக்க வழக்கங்களும், சூழல்களும் இச்சிறப்பினைத் தோற்றுவிக்கின்றன. இது போன்ற நிலைகளில் அச்சொற்களை எப்படி மொழிபெயர்ப்பது என்ற சிக்கல் எழுகிறது. அச்சொற் களை அவ்வாறே தந்துவிட்டு அவற்றிற்குத் தேவையான விளக்கங் களை அடிக்குறிப்பில் தந்துவிடலாம். அதனால் கற்பார் மூலத் தின் சிறப்பினை அறிந்து கொள்வதோடு அவற்றின் பெருமை யினையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலும். எஸ், இராம கிருஷ்ணன் தமது லியோ டால்ஸ்டாயின் 'சக்கரவர்த்தி பீட்டர்' எனும் மொழிபெயர்ப்பில், "பாயர்கள் ருஷிய நாட்டு நில பிரபுக் களில் ஒரு வகையினர், உச்ச வட்டத்துப் பிரபுக்கள், மகாப்பிரபுக்

7. வெ. சாமிநாத சர்மா; பிளேட்டோவின் அரசியல்; 1949

கள் என்று அழைக்கப்பட்டனர். அடுத்த தட்டிலிருந்தவர்கள் பாயர்கள் என்று குறிக்கப் பெற்றனர்'' என்று விளக்கியிருப் பதனைக் காட்டலாம். நூல் முழுமையும் இவ்வாறு பல விளக்கங் களை இவர் அளித்துள்ளமை எல்லா மொழிபெயர்ப்பாளரிடையே யும் வரவேற்கத்தக்கதாம்.

''மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும் மொழிபெயர்ப்பாள ருடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காக அமைந்துவிடக் கூடாது சில சமயங்களில், மூலத்திலுள்ள சில சொற்களை மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டால் அதனால் மொழிபெயர்ப்பு ஒன்றும் கெட்டுப் போய்விடாது. உண்மையில், மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாக மொழி பெயர்ப்பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்கவேண்டியிருக்கும்' என்ற கூற்றினையும் இதனுடன் ஒப்பு நோக்கலாம்.[8]

5. தன் வயமாக்கல் : பிறமொழியின் பெயர்ச்சொற்கள் அதாவது பாத்திரத்தின் பெயர், இடப்பெயர் போன்றனவும், நம்மிடையே இல்லாத பொருட்களின் பெயர்களும் மூலத்தில் வருங்கால் அவற்றைத் தன்வயமாக்கி ஏற்றுக் கொள்ளுதல் சால்புடைத்து,

6. மூலநூலார், மூல நூலறிமுகம் : மொழிபெயர்ப்பாளர் தம் மொழி பெயர்ப்பின் முகவுரையில் மூலநூலினைப் பற்றியும், மூல நூலாசிரியர் பற்றியும் ஒரு சிறிய அறிமுகம் தரல் கற்பாருக்குப் பேருதவியாக இருக்கும். கற்கும் நூலின் மூலம் எது, ஆசிரியர் யார் எனும் செய்திகளை அறியவும், சிறப்புகள் யாவை என்பதனை உணரவும் கற்பார் விழைதல் இயல்பு. எனவே இவற்றை நிறைவு செய்தலும் தேவை. ''இராஜா பீர்பால் அவர்களின் நகைச் சுவைப் பண்பால் அக்பர் உட்பட குடிமக்கள் பலரும் நன்மை பெற்றனர். புகழ் பெற்ற அவருடைய நகைச்சுவைப் பேச்சுக்களும் செயல்களும் இன்றும், இத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் ரசித்துச் சுவைக்கக் கூடியதாகும். அவையனைத்தும் இன்று ஓர் இலக்கியமாகவே திகழ்கின்றன. உலக மொழிகள் பலவற்றில் பீர்பால் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன'' என்று அசரியா

---

8. எஸ். மகாராஜன். மொழிபெயர்ப்பது எப்படி? Studies in Arts and Sciences (A felicitation volume to Arunkalaikkon Prof. Subbu Reddiar, Ph.D. in commemoration of his sixty-first Birth day) Madras, Ram Brothers, 1978 pp. 95-96.

செல்வராஜின், 'பீர்பால் கதைகள்' மொழிபெயர்ப்பின் பதிப்புரை சுட்டுவது போன்று பல நூல்கள் கொண்டுள்ளமை சான்றாகிறது.

இவை மொழிபெயர்ப்பு நூல்களில் பொதுவான வேண்டப் படுதலாக அமைகின்றன. இவற்றுடன் நூலின் இயல்பிற்கேற்ப சில தனித்த நெறிமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினை இனிக்காணலாம்.

## இலக்கியம்

மிக அதிகமாக மொழிபெயர்ப்புகள் காணப்படும் ஒரு துறை இலக்கியமாகும். அறிஞர்கள், புலவர்கள் எல்லா மொழியி னரிடையேயும் தோன்றுகின்றனர். அவர்களின் சிறப்பு நோக்கி உலகம் அவர்களைப் புகழ்கிறது. உலகம் அவர்களின் சிறப்புகளை அறிந்துகொள்ள உதவுவன மொழிபெயர்ப்புகளே ஆம். கீதாஞ்சலி யின் ஆங்கில மொழி பெயர்ப்பு இந்தியக்கவி ரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசினைப் பெற்றுத் தந்தமை இதற்கு மிகச் சிறந்த சான்றாகும். 1974இல் ரஷ்ய மொழியில், திருக்குறளின் கவிதை வடிவ முதல் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. அதன் மொழிபெயர்ப்பாளர் அலெவ் இப்ராகிமோவ் ''நிரந்தர உண்மைகளையும் விவேகமிக்க லௌகீக நடைமுறைத் தன்மையை யும் மதிப்பதோடு, மக்களின் ஞான போதத்தையும் கிரகித்துக் கொண்ட திருவள்ளுவரின் இந்த அமரப்படைப்பு'' என்று போற்றி யிருப்பது[9] தமிழ் இலக்கியச் சிறப்பினை ரஷ்யர்கள் புரிந்து கொண்டமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பிறதுறைகளினின்றும் மிகுந்த அளவில் மாறுபட்டமைவது இலக்கியமாகும். மொழிபெயர்ப்பதில் தன் இயல்பால் மிகுந்த இடர்ப்பாடுடையது இலக்கியமாகும். ''மொழி பெயர்ப்பில் தொலைந்து விடுவது கதை'' எனும் ராபர்ட் ஃபிராஸ்ட் கூற்று இவ்வுண்மையை அறிவுறுத்தும். மூலத்தின் நடையினையும் (Style) சூழலையும் தெளிவாகத் தருவது இலக்கிய மொழி பெயர்ப்பில் இன்றியமையாததாகின்றது. இதுவே கடினமான பணியாகவும் இம்மொழி பெயர்ப்பில் அமைகிறது. ஆயினும் ஒரே நூல் ஒரே மொழியில் பலரால் மொழி பெயர்க்கப்படும் சிறப்பு, இலக்கியத் திற்கே உரித்தாகிறது.

மூல நூலாசிரியர் பயன்படுத்தியிருக்கிற சொல்லைக் காட்டி லும், அச்சொல்லைப் புலவர் எந்தப் பொருளின் அடிப்படையில்

9. சோவியத் நாடு. ஜூலை 1983; இதழ் 14: ப. 37.

அமைத்திருக்கிறார் என்றறிந்து அதற்கேற்ப மொழி பெயர்ப்பது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. மூல நூலாரின் பொருளை நன்குபுரிந்து கொள்ளாவிடில் மொழி பெயர்ப்பில் தவறுகள் நிகழ்கின்றன. இதனை ஒரு குறளுக்குரிய மொழி பெயர்ப்பின் வழி விளக்கலாம்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34) என்பது குறள். இதற்கு

1. Spotless be thou in mind, this only merits virius'
All else were pomp of idle sound no real
worth can claim
-G. U. Pope

2. Let him who does Virtuous deeds be of
spotless mind to that extenl is virtue
all else is Vain show
W. H. Drew + John. Lazarus

3. Virtue is nothing but becoming pure in
mind, The rest is nothing but empty and pompouse noise
—S.R V. Arasu

4. Be pure in mind, its virtues claim
All else is only vain acclaim.
—Kasturi Sreenivasan

என நால்வரின் கூற்றுகளை எடுத்துக் கொள்ளலாம்.

இங்கு, மூன்றாவது, நான்காவது மொழி பெயர்ப்புகள் உண்மை மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளன. வேறுபட்ட சொற்களைத் தம்முள் பயன்படுத்தியுள்ள போதிலும் மூலத்தின் கருத்து சிதையாமல் தரப்பட்டுள்ளது. முதல் மொழிபெயர்ப்பு 'ஆகுல நீரபிற' என்பதனைச் சற்று விளக்கமாகக்கொடுத்துள்ளது. இதனை நாம் குற்றமாகக் கருத முடியாவிட்டாலும் மூலத்தினை விரித்துள்ளது எனலாம்.

இரண்டாவதில் அறத்தைச் செய்வதில் குற்றமில்லாத மன தினை உடையவனாக இருத்தல் அறம் என்று மொழி பெயர்த்து மூலத்தினின்று மாறுகொள்கிறது. குற்றமற்ற மனதினை உடைய தாயிருப்பதுவே அறமாக மூலம் உணர்த்த இங்குப் பொருள் வேறு பாடு எழுகிறது. இது மொழி பெயர்ப்பாளர் கொண்டுள்ள

கருத்து மாற்றத்தின் விளைவு. இதனால் கற்பாரிடையே மூல நூலாசிரியர் காட்சிப்படுத்தப் படுவதில்லை. மொழி பெயர்ப் பாளரே முன் நிற்கிறார்.

எனவே மூலநூலின் பொருள் துணிவின் சிறப்புப் புலப்படும். இவ்வாறு பலர் மாறிமாறிக் கூறியிருக்குங்கால் மூலமொழி அறி யாத போது எதனை உண்மை உருவாகக் கொள்வது என்ற கேள்வி பிறத்தல் இயல்பு. பெரும்பான்மையோரின் கூற்றினை ஏற்புடைத்தாகக் கொள்ளலாம். சில நேரங்களில் அவற்றிலும் தவறு நிகழ வாய்ப்புண்டு.

இலக்கிய நயம் நோக்கிப் பலபொருள் உள்ள ஒரு சொல் மூலத்தில் பயன்படுத்தப்பட்டிருத்தல் இயல்பு. அதனை மொழி பெயர்க்குங்கால் அச்சொல் அந்த இடத்தில் எந்தப் பொருளைக் கொண்டுள்ளது, எப்பொருள் மிகுந்த ஏற்புடைத்தாய் இருக்கிறது என்பதனை நோக்கி, அதற்கேற்ற இணையான சொற்களையே பயன்படுத்த வேண்டும். இலக்கிய மொழிபெயர்ப்பில் சொற் களின் பெயர்ப்புகள் கொண்டு காட்டுவர்.[10]

இரவலர் புரவலை நீயும் அல்லை
புலவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண், இனி; இரவலர்க்கு
ஈவோன் உண்மையும் காண், இனி; நின்வார்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்
கடுமான் தோன்றல், செல்வல் யானே. (புறம். 162)

Thou'rt no protector of the Suppliant poor
yet to the suppliant Kindly friends are ever found.
See here the state of worthy suppliants!
See here the worth of kindly friends!
Behold I tether'neath the Shadow of the fort
This elephant, another's gift; and so, farewell,
Thou chieftain of the swiftly runniug steed!

10. ந. கடிகாசலம்; மொழிபெயர்ப்பு-ஒரு கண்ணோட்டம்; வாரக்கருத்தரங்கு (3-10-1980) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் (தட்டச்சுப் பிரதி)

2. You a Patron? Oh No!

Oh No! You are no patron of suppliant bards;
Yet bards do not lack for patrons at all;
Look around! you'bl see suppliants a plenty still,
And patrons enough to succour them all
Look at this tall and stately elephant of traine,
Which I have fethered to your sacrosanct tree in violable
Which stands in this city as the symbol
Of your kindly power, see how it frets that tree!
It is my gift to you, O Lond of curshing steedf!
I how bid you farewell, and go hence on my way.

முதல் மொழிபெயர்ப்பினை உற்று நோக்கினால் சில குறைபாடுகள் வெளிப்படக் காணலாம். புலவர்களை ஏழைகள் என்னும் பொருள்படக் குறிப்பிட்டுள்ளார். அதைவிட புலவர் என்று குறித்து இருந்தால் மூலக் கவிதைக்குத் தீங்கு செய்யாமல் இருந்து இருக்கக்கூடும், இரண்டாவது வரியில் 'Friends' என்று இருப்பதைக் காட்டிலும் Patrons' என்று இருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும். நான்காவது வரியிலும் அப்படியே இம்மொழி பெயர்பாளர் 'கடிமரம்' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆதலால் கடிமரம் என்பதை 'Fort' என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் 'Another's gift' என்பதில் தெளிவு இல்லை. வேறு ஒருவரின் பரிசு அல்லது வேறு ஒருவர் தந்த பரிசு எனவும் இதற்கு விளக்கம் கூற முடியும். ஆனால் 'எம்பரிசில்' என்னும் புலவரின் பெருமிதக் கூற்று இங்கு மாறி ஒலிக்கின்றது.

இரண்டாவது மொழிபெயர்ப்பில் முதிர்ச்சி வெளிப்படுகிறது. இத்தமிழ்ப் பாடலை முழுமையாகவும் தெளிவாகவும் உணர்ந்து கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள திறமை வெளிப்படுகிறது. புறநானூற்றுப் புலவரின் பாடலுக்குத் 'துரோகம்' இழைக்காமல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "இரவலர்க்குப் பரிசில் வழங்கக் கூடியவன் நீ ஒருவன் மட்டிலும் அல்ல. இன்னும் பலர் இருக்கிறார்கள், என்ற உண்மையை நீ உணர்வாயாக. நின் கடிமரம் வருந்தப் பிணித்த யானை உனக்கு நான் தரும் பரிசில்' என்னும் பெருஞ்சித்திரனாரின் பெருமிதம் மொழிபெயர்ப்பில் ஒளிப்பதை உணர முடிகிறது, எனவே கவிதை மொழிபெயர்க்கும்போது அதன் உள்ளார்ந்த உயிரோட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஊறு நேராமல் மொழிபெயர்த்தால் அது சிறப்

பாக விளங்கக் கூடும் எனத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். சாதாரண சொல்லாயினும் கூட, அதனுடன் சரியான தொடர்புடைய பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தும் பொழுதுதான் மூல நூலாசிரியர் எண்ணம், திறமை அவ்வாறே வெளிப்படும். ஒரு சொல்லுக்குப் பொருந்தாத சொல்லைப் பயன்படுத்தினால் மூலத்தின் அழகே கெடுவதுண்டு என்பதனை இப்பகுதயினால் உணரலாம்.

உள்ளுறை, குறியீடு, உருவகம், சிலேடை போன்றவற்றை அவ்வாறே மற்றொரு மொழிக்கு மாற்றுதல் மிக்கக் கடினமான பணியாகும். இவற்றைச் சரியாக அமைக்க இயலாதபோது மொழி பெயர்ப்பாளர் தகுந்த விளக்கங்களைப் பின்னால் அளிப்பதால் ஓரளவிற்கு நிறைவு செய்யலாம். "மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை. அந்தக் கலையில் வசனத்தை மொழிபெயர்ப்பது ஓரளவுக்கு எளிதானது; கவிதையை மொழிபெயர்ப்பதோ மிகவும் சிரமம். கவிதையை மொழி பெயர்ப்பதற்கு ஒருவன் கவிஞனாகவும் இருக்க வேண்டும் என்பதோடு, மொழிபெயர்க்கும் கவிதையின் கருத்தும் உணர்வும் உருக்குலையாத வண்ணம், மொழி பெயர்ப்புக்கு வடிவும் வலுவும் கொடுக்கும் பொறுப்பும் திறமையும் அவனுக்கிருந்தாக வேண்டும். மேலும் எதுகையும் மோனையும் தாளக்கட்டும் சமயங்களில் மூலக் கவிதையை நீட்டவோ, குறுக்கவோ தூண்டும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும். இவற்றுக்கு தலை வணங்காது, எடுத்துக்கொண்ட கன வடிவத்துக்குள்ளேயே மூலக் கவிதையின் கருத்தையும் உணர்ச்சியையும் இழுத்து மடக்கி கொண்டு வந்து நிலை நிறுத்துவதே மொழி பெயர்ப்பவரின் கடமையாகும்" எனும் கூற்றும் செய்யுள் இலக்கிய மொழிபெயர்ப்பின் அருமையை உணர்த்தும்[11]. செய்யுள் இலக்கியங்கள் உரைநடை வடிவினை மொழிபெயர்ப்பில் கொள்ளுவதற்கு இதுவே முதற் காரணமாகும் எனலாம்.

மூலத்தின் புலமையையும், கருத்தினையும் மொழிபெயர்ப்பில் கொணரக் கருத்துட் கொள்ளும் அதே வேளையில் அதன் சுவை குன்றாதவாறும் பார்த்துக்கொள்ளுதல் வேண்டற்பாற்று. சுவை கெடாதிருப்பின் தான் கற்பார் அதில் ஈடுபடுவர். அல்லது கற்பாரின்றி மொழிபெயர்ப்பாளரின் பணி வீணாதற்கு வாய்ப்புண்டு. சான்றாகக் கவிமணி, தம் ஆசிய ஜோதியினை,

11. ரகுநாதன்; சோவியத் நாட்டுக்கவிதைகள்; சென்னை; ஸ்டார் பிரசுரம்; 1965.

வாய் முத்தம் தாராமல்
மழலை யுரை யாடாமல்
சேய் கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தனை தடுமாறுதையா!
நீடும் மதியினைப் போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடி நிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா
பின்னி முடிச்சிடம்மா!
பிச்சிப்பூ சூட்டிடம்மா!
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா
சித்திரத் தேரும்
சிறுபறையும் கூடியெனைப்
பித்திலும் பித்தி
பெரும்பித்தி யாக்குதையா!

என்பது போன்று பழகு தமிழில் அமைத்திருப்பதனைக் காட்டலாம். இதனைக் கற்போர் இதனை ஒரு மொழிபெயர்ப்பு என ஏற்றுக்கொள்ளுதல் அருமை. கவிமணியின் உமர்கய்யாம் பாடல்கள் நல்ல தழுவல் படைப்புகள் (transcreations)

பழமொழிகளும் மரபுத் தொடர்களும் மூலத்தில் இடம் பெறும் பொழுது அவற்றை மொழிபெயர்க்கப்படும் மொழியில் உள்ள இணையானவற்றிற்கு மாற்றித் தருதலே பொருத்தமாகும். அவற்றை மொழிமாற்றம் செய்வதனை விட இணையானவற்றை தரும்பொழுது நூலின் கருத்துச் சிதைவு ஏற்படாததுடன் முழு நிலையில் மூலத்தினைப் புரிந்து கொள்ளவும் முடியும். சான்றாக 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' எனும் தமிழ்ப் பழமொழிக்கு இணையாக' A blythe heart makes a blooming vissage' என்றிருப்பதனைக் காட்டலாம்.

மொழிபெயர்ப்பின் போது மூலத்தின் தலைப்பும் மொழி பெயர்ப்பின் தலைப்பும் சில விடங்களில் வேறுபடுகின்றன. தலைப்புகளைத் தம் விருப்பம் போல் மாற்றிக் கொள்ளும் உரிமையை

மொழி பெயர்ப்பாளர்கள் பெறுகின்றனர்[12]. ஜெயகாந்தனின் இது என்ன பெரிய விஷயம்' என்பது கா. திரவியம் மொழி பெயர்ப்பில் 'A busy business man' என மாற்றம் பெற்றுள்ளது. மொழி பெயர்ப்பாசிரியரின் கண்ணோட்டத்திற்கேற்ப இத்தகு மாற்றங்கள் நிகழும்பொழுது அவற்றைச் சுட்டிச் செல்லுதல் தேவையாகும்.

இலக்கியங்களில் கதாபாத்திரங்கள், கதை நிகழுமிடங்கள் இவற்றை மட்டும் மொழி பெயர்க்கப்படும் மொழியில் மாற்றிக் கொண்டு கருத்துகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை அவ்வாறே மாற்றாமல் தரும் பாங்கும் ஓரளவு காணப்படுகிறது. சேக்ஸ்பிய ரின் ஜூலியஸ் சீசர், அ. கு. ஆதித்தரால் வீரசிம்ஹனாக மாற்றம் பெற்றிருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். கற்பாரி டையே இது பிறமொழி இலக்கியத்தின் மொழி பெயர்ப்பு எனும் உணர்வினைக் குறைத்து, மேலும் எளிமைப்படுத்திதரும் நோக் கத்துடன் இத்தகு மாற்றங்கள் நிகழ்கின்றன எனலாம். சமீப காலத்தில் இம்மாற்றம் இல்லை என்று கூறுமளவிற்கு அருகியே காணப்படுகிறது. பெயர் மாற்றங்களைத் தவிர்த்தலே இதனை விடச் சிறப்பு எனக் கொள்ளலாம்.

பொதுவாக இலக்கிய மொழிபெயர்ப்புகள், இலக்கிய நயம் குன்றாது, எளிமை, தெளிவு என்ற நோக்கில் அதிகமாக வழக்குச் சொற்களைக் கலந்து விடாது, அதே வேளையில் பொருள் புலப் பாட்டிலும் ஐயமோ, இடரோ எழாது கவினுற அமைய வேண்டும். மொழி பெயர்ப்பைக் கற்பார் மூலநூலைப் படித்த நிறைவினைப் பெறின் அது மொழி பெயர்ப்பாளர் பெறும் வெற்றியாகும்.

பொது நிலையில் இலக்கிய மொழி பெயர்ப்புகளைக் கீழ்க் கண்டவாறு பகுக்கலாம்.

1. உண்மை மொழி பெயர்ப்பு
2. உரைநடை வடிவம்

---

12. "A further piece of good advice is not to translate that the title of an article or book until you have completed the whole translatation. This is because titles, particularly of books are often difficult or impossible to translate literally, and by the tim you have translated the whole work. You may well have thought of a much more suitable translated titlethan you could have before making the translation"— Ian F. Finlay; op.cit., p. 94.

3. சுருக்கம் (கவிதை உரைநடை வடிவம்)
4. தழுவல்
5. எழுத்துப் பெயர்ப்பு

## உண்மை மொழி பெயர்ப்பு

மூல நூலாசிரியரின் கருத்துக்குச் சற்றும் முரண்படாது, அவர் கருத்தினைக் கூட்டியோ, குறைத்தோ அமைக்காது உள்ளது உள்ளவாறே தருதல் இதன் பாற்படும். கவிதை, நாடகம், உரை நடை என அவர் மேற்கொண்டுள்ள வடிவினிலேயே தருதலும் இதில் வேண்டப்படுவதாகும். வெளியீட்டு எளிமை குறித்து கவிதை வடிவினை உரைநடையிலும், நாடக வடிவினைக் கதை வடிவிலும் தரல் மிகுதியாகக் காணப்படுகிறது.[13] பிறமொழி யினரின் பெருமை வாய்ந்த படைப்புகளைத் தமது மொழியில் கொணர வேண்டும் என்ற உள்ளார்ந்த நோக்கம் இதன் காரணம் எனலாம்.

## உரைநடை

கவிதை நடையைப் பின்பற்ற முடியாதோர்க்கு இஃது உதவி புரிகின்றது. இதனால் கவிதைகளின் உண்மை மொழிபெயர்ப்பில் தோன்றும் இடர்பாடுகள் சில எழுவதில்லை. இதிலும் மூல நூலின் சிறப்பினை ஆக்கியோனின் புலமையை உள்ளவாறே ஓரளவு காட்ட முடியும்.

வெறுமனே கதையை அல்லது கருத்தை மட்டும் கூறிச்செல் லின் முழுமையாகப் புலமையைக் காணமுடியாது. ஆங்காங்கே மிகச் சிறந்த பகுதிகளை விளக்கி, முடிந்தால் கவிதை உருவிலும் தரலாம். உதாரணமாகச் சிலப்பதிகாரத்தின் மொழிபெயர்ப்பான 'The Anklet Story'யில், மொழி பெயர்ப்பாளர் க. நா. சுப்ரமணி யம்,

'காதற் கணவனைக் காண்பனே ஈதொன்று
காதற் கணவனைக் கண்டால் அவன்வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே ஈதொன்று
தீதறு நல்லுரை கேளாது ஒழிவனேல்
நோதக்க செய்தாள் என்றெள்ளல் இது வொன்றென்று'

எனும் அதன் 'ஊர்சூழ் வரி'ப் பகுதியினை (10—14)

---

13. வால்மீகி ராமாயண வசனம் (சுந்தர காண்டம்) த. கனக சுந்தரம்; செப், 1911, சென்னை; வெ. கலியாணராம ஐயர் அண்டுகோ.

'If I do not hear again his fauttless words
If my eyes behold him not again as he used to be
If I do not embrace him into life for a few words
Style me a sinner, call me a woman who caused only pain'

என்று சுவைபட மொழிபெயர்த்துள்ளமையைக் காட்டலாம். இதனால் மொழிபெயர்ப்பாசிரியன் காட்டும் சுவையை, வாசகர் தாமே உணரவும் வாய்ப்பாகிறது.

## சுருக்கம்

இது கவிதை வடிவிலேயே சுருக்கமாக அல்லது உரைநடை வடிவில் சுருக்கமாக அல்லது இரண்டும் இணைந்தும் அமைவது உண்டு[14]. இச்சுருக்கங்கள் செய்யுள் இலக்கியங்களில் மட்டுமின்றி நீண்ட புதினங்கள், நாடகங்கள், வாழ்க்கை வரலாறுகள் போன்ற வற்றிலும் காணப்படுகின்றன. இவற்றினால் மூலத்தின் முழுமை இன்பத்தினைப் பெற முடியாது. இவற்றை ஓர் அறிமுகமாக மட்டுமே கொள்ளலாம். இத்தகு சுருக்கங்களைப் படிக்கும் பொழுது மூலத்தைப் படிக்க வேண்டும், முழுமையாகப் படிக்க வேண்டும் எனும் உணர்வினைத் தூண்ட வல்லதாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவை சிறப்புறும். எனவே மூலத் தின் சிறந்த பகுதிகள், தேவையான பகுதிகள், அனைத்தினையும் விடுபடாதவாறு பார்த்துக் கொள்ளுதல் மொழிபெயர்ப்பாளரின் கடமையாகிறது.

## தழுவல்

இங்கு மூல நூலாசிரியனைவிட மொழி பெயர்ப்பாளரின் புல மையே மிகுதியும் கணிக்கப்படலாலும், மூலத்தைத் தேவைக் கேற்ப, விருப்பத்திற்கேற்ப மாற்றக் கூடிய வசதிகள் உள்ளமை யாலும் மொழி பெயர்ப்பாளரே முன் நிற்கின்றார். மூல நூலின் கருவினை மட்டும் அதனின்றும் பெற்றுக் கொண்டு ஏனைய நிகழ்வுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்றன வற்றைத் தம் எண்ணப்படி மாற்றிக்கொள்ளுதல் இதனுள் அடங் குகின்றன. எனவே இவற்றை மொழிபெயர்ப்பின் ஒரு நிலையாகக் கொள்ளல் பொருந்துமா என்றகேள்வி எழுகிறது.

---

14. ஏழு நாடகக் கதைகள்; எஸ். என். ஸ்ரீராமதேசிகன்; 1961 சென்னை; விஞ்ஞான ஸாஹித்ய வெளியீடு.

## எழுத்துப் பெயர்ப்புகள்

பக்தி நூல்கள் பல பாராயணம் செய்வதற்காக மூலத்தி னின்றும் அதன் ஒலிக்குறிப்பை அவ்வாறே வரிவடிவில் மட்டும் மாற்றம் கொண்டு அமைப்பது இவ்வகையாகும். இதனால் மூலத்தின் பொருள் விளக்கத்தினையோ, சிறப்பினையோ பெற இயலாது ஆதலின் இத்தகையனவற்றை மொழி பெயர்ப்பாகக் கொள்ளல் தேவையன்று. இத்தகு நிலை ஒன்றும் மொழி மாற்றம் செய்வதில் உள்ளது என்பதனைச் சுட்டமட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## பிற துறைகள்

இலக்கிய மொழி பெயர்ப்பே பிற துறைகளினின்றும் பெரிதும் வேறுபட்டு அமைகின்றது. அறிவியல் துறைகள், கலைகள், மதம், உரைநடை எனும் பிற பிரிவுகள் ஓரளவே தம்முள் வேறுபட்டமை கின்றன. இலக்கியக்கொள்கை காணல் கட்டுரையின் முதல் நோக்கமாதலின் இங்கே இவை பற்றிய சிறப்பான கொள்கைகள் மட்டுமே சுட்டிச் சொல்லப்படுகின்றன.

மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற துறைகளையும் அறிவியல் துறைகளுடன் இணைக்கலாம். ஓவியம், நாட்டியம், இசை போன்ற துறைகள் கலைகளில் இடம்பெறுகின்றன. சமயம் பற்றிய நூல்களும் சமயம் சார்ந்தனவும் சமயம் எனும் பிரிவில் அடங்குகின்றன. வரலாறு, பொருளாதாரம், புவியியல், அரசியல் எனும் ஏனைய துறைகள் உரைநடையாகின்றன. இரு மொழிகளும் பற்றிய பரந்த, ஆழ்ந்த அறிவுடன், மொழி பெயர்ப் பாளருக்கு அவ்வவ் துறைகளிலும் சிறப்பான அறிவு தேவைப்படு கிறது. அப்பொழுதுதான் மூலத்தின் கருத்துகளை நன்கு புரிந்து கொண்டு தவறு நிகழாதபடி மொழிபெயர்க்க இயலும்.

இலக்கியத்தில், படைப்பாளனின் கருத்தினை அப்படியே, அவன் நோக்கில் தருதல் எவ்வளவு கடினமோ அதனைப் போன்று இங்கே அவ்வவ் துறையில் வழங்கும் கலைச் சொற்களை மொழி பெயர்த்தல் சிக்கலுக்குரியதாகிறது. கலைச் சொற்களை அவ்வாறே அதே ஒலிக்குறிப்பில் வரி வடிவில் மட்டும் மாற்றித் தருதல் சிறப்பா அன்றி மொழி பெயர்த்துத் தரல் சிறப்பா என்பது இங்கு வினாவாக அமைகிறது. மொழியின் வளர்ச்சி என்பதனை முதன்மைப் படுத்தின் புதிய சொல்லாக்கங்களாக மொழி பெயர்த்துத்தரலே ஏற்புடைத்தாகிறது ஆயின் அறிவியல் துறை

களைப் பொறுத்த மட்டில் உலகளவில் பொதுக்குறியீடுகளாக அவை அமைந்திருக்கையில், அவற்றை மொழி பெயர்த்துத் தரல் பொருந்துமா? இதனால் மேற்கல்விக்கும், அவர்களுடன் இணைந்து முன்னேறிச் செல்வதற்கும் இத்தனிக்குறிப்பு ஒரு தடையாக அமைதற்கு இடமுண்டு. ''பல அறிவு வளர்ச்சிக் கருத்துக்களும் அவ்வப்போது கட்டுரைகளாக ஆராய்ச்சி இதழ்களில் உலக மொழிகளில் வெளி வருகின்றன. எந்த நாடும் முற்போக்கில் இருக்க வேண்டுமானால் இவற்றைக் கற்றுத்தான் தீர வேண்டும் உலகத்தில் முன்னேறியுள்ள ஆங்கில மொழி பேசுகின்றவர்களும்கூட பிரெஞ்சு, ருஷ்யன், ஜெர்மன் என்ற மொழிகளில் வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிவதற்காக அம்மொழிகளில் சிலவற்றை அறிந்தே முன்னேறுகிறார்கள்''[15] என்பதனை நோக்குங்கால் இவ்வுண்மை புலப்படும். இவ்விரண்டினையும் எண்ணிப் பார்க்கும் பொழுது அறிவியல் தவிர ஏனையவற்றில் மொழி பெயர்ப்பினையும், அறிவியலில் எழுத்துப் பெயர்ப்பினையும் மேற்கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது.

''தமிழால் அறிவியலைக் கூறவே முடியாது என்கின்றனர். சிலர் தூய்மையான தமிழிலேதான் கூற வேண்டும் என்கின்றனர். வேற்றுமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். சிலர் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கிக்கொள்ளலாம் என்கின்றனர். சிறிதும் பிறழாமல் ஒலி பெயர்ப்புச் செய்து கொள்ளலாம் என்று சிலர் கருதுகின்றனர். அவரவர் நிலையில் நின்று பார்த்தால் அவரவர் கூற்றுச் சரியாக இருக்கலாம்'' எனும் மொழியும்[16] இங்கு எண்ணத்தக்கது.

கருத்துகளை விளக்குதல், தெளிவாக்குதல் என்பதே இவற்றில் முதன்மையாதலின் மொழி அலங்காரத்திற்கு இங்கே வேலையில்லை. பொருள் மயக்கம் தரக்கூடிய சொற்களை விலக்கி, நேரிடையாகத் தெளிந்த பொருள்தரும் சொற்களையே பயன்படுத்துதல் நன்றாம்.

தேவையான இடங்களில் பொருள் தெளிவிற்காக மொழி பெயர்ப்பாளர் கூடுதல் விளக்கங்களை அளித்தல் இங்கு வேண்டப்

---

15. மு. கோவிந்தராசன்; முன்சுட்டிய நூல்; ப. 220
16. ஜி. ஆர். தாமோதரன்; அறிவியல் தமிழாக்கம்-ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு—கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரை, மதுரை சன. 1981. ப. 450

படுகிறது.[17] இதனால் மொழி பெயர்ப்பாளர் மூலத்திற்குத் துரோகம் செய்வதாகக் கருதப்படுவதில்லை. சிறந்த மொழி பெயர்ப்பாசிரியராக விளங்கும் வி. எஸ். வி இராகவன் தனது மெகஸ்தனிஸ் நூலில், வரும் வரலாற்றுத் தொடர்பான பகுதிகளுக்கு வரலாற்றில் புகழ்மிக்கப் பலருடைய நூல்களி லிருந்து ஆங்காங்கே மேற்கொள்கள் காட்டப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களிலிருந்தும் ஆங்காங்கே பொருத்தமான ஒப்புமைப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன' என்று கூறியிருப்பதனைச் சான் றாக்கலாம்.

## மொழிபெயர்ப்பின் நோக்கம்

கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளுதல், அறிமுகங் கொள்ளுதல் எனும் இவையே மொழிபெயர்ப்பின் பொதுவான நோக்கங்களாக அமைகின்றன. கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்பன அறிவியல், பொருளா தாரம், வரலாறு போன்ற மொழி பெயர்ப்புகளில் முதன்மையா கின்றன. ஒருவரையொருவர் அறிமுகம் கொள்வதனையும், புரிந்துகொள்வதனையும் இலக்கியம் மற்றும் கலை மொழி பெயர்ப்புகள் அடிப்படையாகக் கொள்கின்றன என்பர்.

பிறமொழி இலக்கிய அறிவு, பொழுது போக்கு, உரத்த சிந்தனை இவற்றை மொழிபெயர்ப்பின் நோக்கங்களாக ஆரார் தமது 'காண்டர்பரிக் கதைகள்' மொழிபெயர்ப்பின் முன்னுரையில் மொழிகிறார். குறிப்பிட்ட ஒரு நூலின் பாலுள்ள பற்றும், மொழி பெயர்க்கத் தூண்டுவதனை, ராஜாராம் தனது 'பிறகொரு இந்திரஜித்' நாடகத்தின் முன்னுரையில், அந்த நாடகத்தை 'ஹௌவனிக்' 'குழுவின் தயாரிப்பின் கீழ் முத்தாங்கள் அரங்கில் பார்த்தவுடனேயே இதைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது' என்பதினின்றும் பெறலாம்.

"மூல எழுத்துப்போல, நூலில், கவிதை, நாடகம், விமரிசனம் போன்ற துறைகள் போல இலக்கியத்தில் மொழிபெயர்ப்பும் ஓர் அவசியமான துறை. மொழிபெயர்ப்பு வேகம் அதிகமாக இருக்கும் கால கட்டத்தில்தான் இலக்கிய வேகமும் ஒரு மொழியில் சுத்தமாக இருக்கும் என்பதற்கு உதாரணமாக உலக

---

17. Proceedings of the fifth International Conference Seminar of Tamil Studies-Vol. 2

இலக்கியச் சரித்திரத்தில் பல பகுதிகளைச் சொல்லலாம். 1945இல் தமிழ் இலக்கியம் ஓரளவுக்குத் தேக்கம் பெற்றது. அதன் விளைவாக 1950 முதல் சுமார் 1965 வரையில் மொழிபெயர்ப்பும் தேக்க முற்றது'' எனும் கருத்தும்[18] இலக்கிய வளர்ச்சியில் மொழி பெயர்ப்பின் தேவையை உணர்த்தி நிற்கின்றது.

## மொழிபெயர்ப்பின் பயன்

உலக அறிவு பெற இன்றியமையாதது மொழி பெயர்ப்பு. அறிவியல் வளர்ச்சி உலக நாடுகளிடையே நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியது போல் மொழி பெயர்ப்புத் துறையின் வளர்ச்சி பல மொழி மக்களிடையே நெருக்கத்தை உண்டு பண்ணுகிறது. புலவரின் புலமை மட்டுமன்றி ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு போன்றவற்றை ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது. சிறப்பானவை ஏற்றுக் கொள்ளப்படுவதால் பண்பாட்டுக் கலப்பு மிக எளிதாக நடைபெறுகிறது. உலகம் முழுவதும் ஓர் இனம் என்ற உணர்வு பெற மொழி பெயர்ப்பு வழி கோலுகிறது. ஒவ்வொரு மொழியினரின் உயர்ந்த கொள்கைகளும் எண்ணங்களும் பிறரால் அறிந்து கொள்ளவும், பின்பற்றப்படற்கும் ஏதுவாகிறது. எந்த மொழியினைச் சேர்ந்தவராயினும் சிறந்த கருத்துகளும், புலமை வளமுடைய புலவரும் உலகத்தாரனைவராலும் போற்றப்படும் பெருமை பெற இன்றியமையாதது மொழிபெயர்ப்பே.

மொழியின் வளர்ச்சியும் மூன்று நிலைகளில் ஏற்படுகிறது. புதிய, புதிய சொல்லாக்கங்கள் மொழியில் தோன்றுதல் ஒன்று. எண்ணற்ற புதிய நூல்கள் தோன்றுதல் மற்றொன்றாம். ஒரு மொழியில் தோன்றிய நூல் மற்றொரு மொழியினருக்கு அதுபோன்ற ஒன்றை மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ அமையாது புதிதாக ஒன்றைப் படைப்பதற்குத் தூண்டுதலாக நிற்றல் மூன்றாவதாம். 'சேக்சுபியர் நாடகங்களில் ஒன்றான 'ஆஸ் யூ லைக் இட்' (As you like it) என்ற நாடகத்தை யான் பல ஆண்டுகளுக்கு முன்பு படித்த போது அந்நாடகத்தின் மூத்த மன்னர் (Duke Senior) என்ற பாத்திரத்தின் பண்பு புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் குமண வள்ளல் பண்போடு ஓரளவு ஒத்திருத்தலை உணர்ந்தேன். புறநானூற்றுப் பாடல்களில்

18. க. நா. சுப்ரமணியம்; சுதந்திரத்திற்குப் பிறகு மொழி பெயர்ப்புகள்; சுடர் 1972; பக். 41—46.

குமணனைப் பற்றிக் காணும் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, 'ஆஸ் யூ லைக் இட்' நாடகக் கதையைத் தழுவி என் கற்பனையையும் கலந்து ஒரு நாடகம் படைக்க வேண்டும் என்ற விருப்பம் என்னுள் எழுந்தது. ஆனால் எப்படியோ நாடகம் உருவாவதற்குப் பதிலாக, 'முதிரைமலைச் செல்வி' என்ற இப் புதினம் உருவாயிற்று' என்று நவின்றிருப்பது[19] இதனை எடுத்துக் காட்டும்.

## தமிழில் மொழிபெயர்ப்புகள்

சிறுகதை, புதினம், கட்டுரை, உரைநடை என்னும் துறைகள் ஏற்படவும், மறுமலர்ச்சியடையவும் பிற மொழியிலிருந்து வந்து புகுந்த பல நூல்கள் துணையாயின என்பதனை மறுக்க இயலாது. தமிழிலிருந்தும் சுமார் 30 மொழிகளில் 700க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடற்பாலது. திருக்குறள் மட்டும் 25 மொழிகளில் சுமார் 122 மொழிபெயர்ப்பு களைக் கொண்டுதன் பெருமையை உலக அரங்கில் நிலை நாட்டி யுள்ளது.

தமிழின் முதல் மொழிபெயர்ப்பு நூல் எது என்பது தெளி வாகத் தெரியவில்லை. பல்லாண்டு காலமாகத் தமிழுடன் தொடர்பு கொண்டிருந்த வடமொழியிலிருந்தே முதல் முதல் தழுவலாகவும் மொழி பெயர்ப்பாகவும் தமிழ்மொழி நூல்களைப் பெற்றிருக்க வேண்டும். பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்த வற்றுள் ஆங்கிலம், வடமொழி, வங்காளம், ரஷியன் ஆகிய மொழி நூல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றுள் ஆங்கிலம் பரவலாக எல்லாத் துறைகளிலும் மொழி மாற்றம் அடைந்துள்ள சிறப்பினைப் பெறுகின்றது. வடமொழி, சமய, பக்தி இலக்கியங்களிலும், வங்காளம் புதினம், சிறுகதை போன்ற வற்றிலும், ரஷ்ய மொழி புதினம், சிறுகதை, அரசியல் ஆகியவற்றி லும் மிகுதியாக மொழிமாற்றம் பெற்றுள்ளன. பொது நிலையில் இலக்கியம் தவிரப் பிறதுறைகளில் அறிவியல், அரசியல், வரலாறு ஆகியன மிகுதியாக மாற்றம் பெற்றுள்ளன. தமிழில் இதுவரை சுமார் 45 மொழிகளின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மையை அறிய முடிகிறது.

---

19. தா. ஏ. ஞானமூர்த்தி, முதிரமலைச் செல்வி. மு. ப. 1975 முன்னுரை

ஒரு மொழியில் தம்மைக் கவர்ந்த ஆசிரியர் என்ற நிலையில் அவர் நூலை மொழி பெயர்த்தல், ஒரு மொழியில் மிகுந்த செல்வாக்கு பெற்ற நூல் என்பதால் மொழிபெயர்த்தல் எனும் இரு நிலைகளை உணர முடிகிறது. முன்னதற்குச் சான்றாக த. நா. சேனாபதி தாகூர் நூல்களை மொழி பெயர்த்தலையும் பின்னதற்குச் சான்றாக மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' புதினத்தையும் காட்டலாம்.

இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள் தனிப்பட்ட நூலாக அல்லது ஒன்றுக்கொன்று மேற்பட்ட நூல்களின் இணைவாகவும் அமைகின்றன. இவ் விணைவுகள், ஒரே மொழி, ஒரே ஆசிரியர், ஒரே இலக்கிய வகை எனும் மூன்று நிலைகளில் அமைதலையும் உணர முடிகிறது. ஒரே நூலில் ஒன்றுக்கு மேற்பட்டோரும் இணைந்து மொழி பெயர்த்தல் சிறிதளவு காணப்படுகிறது. இலக்கியத்தை விட பிறவற்றிலேயே இந்நிலை அதிகமாக உள்ளது. நீண்ட இலக்கியங்களில் குறிப்பிட்ட பகுதி மட்டும் தரப்படுதலும் உண்டு. நாடகப் பாத்திரங்கள் பற்றிய முன் அறிமுகத்தினை நாடக நூல்களில் சில தருகின்றன. இவை குறிப்பிட்ட நாடகம் பற்றிய முன்னறிவுக்கும், நாடகக் கதையினைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றன.

மொழிபெயர்ப்பு நேரிடையாக மூலமொழியிலிருந்து அமையாமல் ஊடு மொழியாக ஆங்கிலம் போன்றவற்றின் மூலம் தோன்றுதல் பல நூல்களில் காணப்படுகிறது பெரும்பாலும் ரஷிய மொழி நூல்களில் இதனைக் காண முடிகிறது. தாய் மொழி மூலம் கல்வி கற்பித்தல் என்ற திட்டத்தின் காரணத்தால் பல துறைகளிலிருந்தும் பாட நூல்கள் மொழிபெயர்க்கப்படத் தமிழக அரசின் தமிழ்ப் பாட நூல் நிறுவனம் ஆற்றி வரும் பணி இங்குச் சுட்டத் தக்கது.

## வளர்ச்சி நிலை

ஆரம்பகாலத்தில் இலக்கியங்களில் மட்டுமே கருத்தினைச் செலுத்திய நிலை இன்றுப் பரவலாக எல்லாத் துறைகளிலும் பரவியிருப்பது வரவேற்கத் தக்கது. இந்நூல் ஒரு 'மொழி பெயர்ப் பு என்று கூறும்படி மொழிநடையில் அமைந்திருந்த நிலையும் மாறி மூல நூல்களைப் படிப்பது போன்ற இன்பத்தை மொழிபெயர்ப்பு நூல்களைப் படிக்கும்போது பெறுவதில்லை என்ற குறை

இப்போது இல்லை என்று கூறுமளவுக்கு மொழிபெயர்ப்பு மிகவும் சிறந்த முறையில் வளர்ந்துள்ளது'', எனப் போற்றும்[20] அளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளது. அன்று ஒரு சிலரால் மட்டுமே செய்யப்பட்டுவந்த மொழி பெயர்ப்புகள் இன்று பலரின் பார்வையில் பட்டு பல முழுநேர மொழி பெயர்ப்பாளர்களை உருவாக்கியுள்ளமையும் சுட்டத்தக்கது.

## முடிவுரை

தமிழில் மொழிபெயர்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. இன்றும் வளர்ந்துகொண்டு வருகிறது; பிற துறைகளினின்றும் இலக்கியத்துறை மொழி பெயர்ப்புகள் பெருமளவு கொள்கையடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன. பிறமொழிச் சொற்களை எந்த அளவிற்கு மொழி பெயர்ப்பியல் பயன்படுத்திக் கொள்வது என்பது இன்னும் தீராத சிக்கலாக இருந்த போதிலும் மிகத் தேவையான இடங்களில் அதன் சிறப்பு, பயன்பாடு குறித்து ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்பதே பெரும்பாலோர் முடிபாக அமைகிறது; மொழிபெயர்க்கப்படும் மொழியின் மரபினை முழுமையாகப் பின்பற்றலும் மிக்க தேவையான தொன்றாகக் கருதப்படுகிறது. ஊடு மொழி ஒன்றின் வழியாக மொழி பெயர்க்கப்படும் மரபு காணப்படினும் அதனைவிட அவ்வம் மொழியிலிருந்தே நேரிடையாக மொழி பெயர்த்தல் சிறப்பானதாகவும், குறைபாடுகளைக் குறைவாகக் கொண்டும் அமைந்திருக்கும் எனலாம்.

முழுமையாக நூல் உணர்த்தும் கருத்தினைப் பெற்று அதனின்றும் மாறுபடாமல் தெளிந்த, எளிய நடையில், பிறமொழிச் சொற்களை இயன்ற வரையில் தவிர்த்து, மூலத்தின் சிறப்புக் குறைவு படாவகையில், தேவையான விளக்கங்களை அளித்து மொழி பெயர்த்தல் சிறப்பாகும்.

---

20. ந, கடிகாசலம், மொழிபெயர்ப்பு நூல்கள்; எண்பதில் தமிழ்; 1982, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். ப. 732

# இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகள்

## இலக்கியம்

| எண் | கட்டுரை | கட்டுரையாளர் | தொகுதி எண் | பக் |
|---|---|---|---|---|
| 1 | இலக்கியக்கல்வி | ச.வே. சுப்பிரமணியன் | 8 | 1 |
| 2 | சங்க இலக்கியம் | அ.அ. மணவாளன் | 1 | 23 |
| 3 | பதினெண் கீழ்க்கணக்கு | க.த. திருநாவுக்கரசு | 1 | 65 |
| 4 | காப்பியப் பாகுபாடு | ஆர். விஜயலட்சுமி | 6 | 1 |
| 5 | முதற்காப்பியங்கள் | மு. அருணாசலம் | 1 | 91 |
| 6 | சிலப்பதிகாரம் | இரா. தமிழரசி | 6 | 27 |
| 7 | தேவாரம் | சு. பாலச்சந்திரன் | 1 | 137 |
| 8 | நாலாயிர திவ்வியப் பிரபந்தம் | இ. சுந்தரமூர்த்தி | 1 | 161 |
| 9 | திருவாசகம் திருக் கோவையார் | ஏ. என். பெருமாள் | 1 | 191 |
| 10 | சீவக சிந்தாமணி | தா. வே. வீராசாமி | 2 | 1 |
| 11 | நீலகேசி | தா. வே. வீராசாமி | 5 | 27 |
| 12 | சூளாமணி | தா. வே. வீராசாமி | 4 | 3 |
| 13 | யசோதர காவியம் | தா. வே. வீராசாமி | 7 | 284 |
| 14 | 9, 10, 11ஆம் திருமுறைகள் | கே. எம். வேங்கட ராமையா | 1 | 261 |
| 15 | கம்பராமாயணம் | தா. வே. வீராசாமி | 1 | 223 |
| 16 | கல்லாடம் | க.த. திருநாவுக்கரசு | 3 | 27 |
| 17 | பெரியபுராணம் | பெ. திருஞான சம்பந்தன் | 1 | 293 |
| 18 | ஒட்டக்கூத்தர் | ச. சிவகாமி | 5 | 183 |
| 19 | ஔவையார் | தி. லீலாவதி | 5 | 211 |
| 20 | சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் | ஆ.சிவலிங்கனார் | 5 | 243 |
| 21 | அதிவீரராம பாண்டியர் | கலா தாக்கர் | 4 | 81 |
| 22 | வில்லிபாரதம் | தா.வே. வீராசாமி | 3 | 87 |
| 23 | கந்த புராணம் | க. த. திருநாவுக்கரசு | 3 | 27 |
| 24 | காஞ்சிப்புராணம் | கா. சி. தனக்கோடி | 4 | 33 |
| 25 | தணிகைப்புராணம் | ச. ரா. கச்சபேசுவரன் | 4 | 351 |
| 26 | பட்டினத்தார் | ச. வே. சுப்பிரமணியன் | 6 | 203 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | சித்தர் பாடல்கள் | இரா. மாணிக்கவாசகம் | 2 | 185 |
| 28 | தனிப்பாடல் திரட்டு | தா. மு சுப்பிரமணியன் | 2 | 237 |
| 29 | அருணகிரிநாதர் | ச. வே. சுப்பிரமணியன் | 2 | 275 |
| 30 | அஷ்ட பிரபந்தம் | ந. கடிகாசலம் | 4 | 187 |
| 31 | குமரகுருபரர் | சி. பாலசுப்பிரமணியன் | 2 | 295 |
| 32 | சிவப்பிரகாசர் | ச. வே. சுப்பிரமணியன் | 4 | 225 |
| 33 | திருவிளையாடற்புராணம் | ஏ. என். பெருமாள் | 4 | 123 |
| 34 | தாயுமானவர் | இரா. முத்துக்குமார சாமி | 2 | 321 |
| 35 | திரிகூடராசப்பக்கவிராயர் | கே. சி. கமலையா | 2 | 359 |
| 36 | தேம்பாவணி | ஜி. ஜான்சாமுவேல் | 4 | 267 |
| 37 | சீறாப்புராணம் | அப்துல் ரகுமான் | 4 | 159 |
| 38 | இராமலிங்கர் | அவ்வை நடராசன் | 2 | 449 |
| 39 | திரிசிரபுரம் மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை | ஆ. கந்தசாமி | 3 | 153 |
| 40 | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | ச. சிவகாமி | 6 | 152 |
| 41 | வேதநாயகம்சாஸ்திரியார் | ஜி. ஜான் சாமுவேல் | 3 | 395 |
| 42 | கவியரசர்கிருஷ்ணபிள்ளை | கிரேசு செல்வராஜ் | 3 | 249 |
| 43 | அண்ணாமலைரெட்டியார் | க. சி. கமலையா | 6 | 307 |
| 44 | பாரதியார் கவிதைகள் | த. அ. சுந்தரராசன் | 4 | 377 |
| 45 | பாரதிதாசன் | சு. செல்லப்பன் | 3 | 313 |
| 46 | கவிமணி | ஆ. கந்தசாமி | 5 | 307 |
| 47 | நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை | சு. செல்லப்பன் | 5 | 341 |
| 48 | பட்டுக் கோட்டைக் கல்யாண சுந்தரம் | தா.மு. சுப்பிரமணியன் | 5 | 367 |
| 49 | கவியோகி சுத்தானந்த பாரதியார் | ச.ரா. கச்சபேசுவரன் | 6 | 375 |
| 50 | புதுக்கவிதைகள் | கோ. கண்ணன் | 3 | 339 |
| 51 | கவிதை நாடகங்கள் | ஏ. என். பெருமாள் | 3 | 285 |
| 52 | திரு. வி. க. | அ. நாகலிங்கம் | 6 | 339 |
| 53 | கைலாசபதி | ந. தெய்வசுந்தரம் | 9 | 274 |
| 54 | உரைநடை இலக்கியம் | ச. வே. சுப்பிரமணியன் | 9 | 1 |
| 55 | பயண இலக்கியம் | கு. பகவதி | 9 | 154 |
| 56 | வாழ்க்கை வரலாற்றிலக் கியம் | ச. சிவகாமி | 9 | 37 |
| 57 | கடித இலக்கியம் | ந. கடிகாசலம் | 9 | 187 |

| | | | | |
|---|---|---|---|---|
| 58 | நாவல் | தா. வே. வீராசாமி | 9 | 92 |
| 59 | சிறுகதை | சோ. சிவபாத சுந்தரம் | 9 | 208 |
| 60 | உரைநடை நாடகங்கள் | ஏ. என். பெருமாள் | 9 | 120 |
| 61 | இதழ்கள் | மு. இ. அகமது மரைக்காயர் | 9 | 229 |
| 62 | மொழிபெயர்ப்புஇலக்கியம் | சு.சண்முகவேலாயுதம் | 9 | 293 |

பிரபந்தம்

| | | | | |
|---|---|---|---|---|
| 63 | சிறு பிரபந்தங்கள் | மு. சண்முகம் பிள்ளை | 2 | 65 |
| 64 | இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் | சாயுபு மரைக்காயர் | 8 | 271 |
| 65 | அந்தாதி | க. காந்தி | 7 | 58 |
| 66 | கலம்பக இலக்கியங்கள் | பூ. சுப்பிரமணியன் | 8 | 85 |
| 67 | காதல் இலக்கியங்கள் | த. அழகப்பராசு | 8 | 117 |
| 68 | கீர்த்தனைகள் | கோ. கண்ணன் | 4 | 313 |
| 69 | குறவஞ்சி | இரா. குமரவேலன் | 6 | 112 |
| 70 | சித்திரக்கவிகள் | வி. ஆர். மாதவன் | 8 | 149 |
| 71 | சிலேடை | இரா. தமிழரசி | 7 | 129 |
| 72 | தூது | இ. சுந்தர மூர்த்தி | 7 | 307 |
| 73 | பள்ளு | ஏ. என். பெருமாள் | 6 | 85 |
| 74 | பாட்டு இலக்கியங்கள் | ஆ. தனஞ்செயன் | 8 | 327 |
| 75 | மடல் | ந. கடிகாசலம் | 7 | 155 |
| 76 | மெய்க்கீர்த்தி | பூ. சுப்பிரமணியன் | 7 | 259 |
| 77 | விருத்தப்பா இலக்கியங்கள் | நாரா. நாச்சியப்பன் | 8 | 61 |
| 78 | விலாசம் | கரு. நாகராசன் | 7 | 224 |
| 79 | வெண்பா நூல்கள் | இராம. குருநாதன் | 8 | 23 |

நாட்டார் இலக்கியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 80 | நாட்டுப்புற இலக்கியம் | சு. சண்முக சுந்தரம் | 3 | 193 |
| 81 | ஊசல் | வே. சீதாலட்சுமி | 7 | 98 |
| 82 | கதைப்பாடல்கள் | ஏ. என். பெருமாள் | 8 | 349 |
| 83 | கும்மிப்பாடல்கள் | ஏ. என். பெருமாள் | 7 | 180 |
| 84 | சிந்து | பழ. முத்தப்பன் | 6 | 159 |
| 85 | நாட்டார் நாடகங்கள் | ஏ. என். பெருமாள் | 5 | 287 |
| 86 | நொண்டி நாடகங்கள் | ம. இராசேந்திரன் | 8 | 247 |
| 87 | பழமொழிகள் | கா. சி. தனக்கோடி | 8 | 397 |
| 88 | வில்லுப்பாட்டு | தி. சி. கோமதி நாயகம் | 3 | 125 |

## இலக்கணம்


| | | | | |
|---|---|---|---|---|
| 89 | இலக்கணங்கள் | மா. நன்னன் | 2 | 33 |
| 90 | தொல்காப்பியம் | ச. வே. சுப்பிரமணியன் | 1 | 1 |
| 91 | பொருளிலக்கணம் | ச. வே. சுப்பிரமணியன் | 3 | 1 |
| 92 | யாப்பு-பாட்டியல் | அன்னி மிருதுல குமாரி தாமசு | 2 | 139 |
| 93 | யாப்பருங்கல விருத்தி | அன்னி மிருதுல குமாரி தாமசு | 5 | 55 |
| 94 | அணி இலக்கணம் | ச. வே. சுப்பிரமணியன் | 5 | 1 |
| 95 | நிகண்டுகள் | ச. வே. சுப்பிரமணியன் | 7 | 1 |


## உரையாசிரியர்


| | | | | |
|---|---|---|---|---|
| 96 | இலக்கியஉரையாசிரியர்கள் | இரா. குமரவேலன் | 1 | 341 |
| 97 | இலக்கண உரையாசிரியர்கள் | க. ப. அறவாணன் | 1 | 319 |
| 98 | இளம்பூரணர் | கரு. நாகராசன் | 5 | 91 |
| 99 | அடியார்க்கு நல்லார் | இரா. காசிராசன் | 6 | 59 |
| 100 | பேராசிரியர் | கு. பகவதி அம்மாள் | 5 | 117 |
| 101 | வைணவ உரையாசிரியர்கள் | தெ. ஞானசுந்தரம் | 1 | 379 |
| 102 | நச்சினார்க்கினியர் | இ. சுந்தரமூர்த்தி | 5 | 137 |

# சொல்லடைவு

அக்கரைச் சீமையில் ஆறுவாரங்கள் 162
அக்கினி சாட்சி 130
அசப்பாடல் 212
அகிலன் 53, 103, 106, 141
அங்கதம் 29, 139, 140, 235
அங்கும் இங்கும் 169
அசரியா செல்வராஜ் 299
அசோக மித்திரன் 225
அடாவடி அம்மாக்கண்ணு 129, 149
அடியார்க்கு நல்லார் 142, 189
அடுக்குத்தொடர் 31
அண்ணாத்துரை 19,23,55, 101, 105, 127, 191, 194, 198 199, 204
அண்ணாவின் கடைசி நாட்கள் 83
அணிகள் உத்தி 29
அதிகைமான் 137
அந்தகக் கவிராயர் 190
அந்தமான் கைதி 149
அந்தோணி, சர், 92
அப்பாசு நாடகம் 132
அப்பூதியடிகள் 131
அபிமன்யு 125
அம்புலிமாமா 245
அம்புஜம்மாள் எஸ். 54, 56
அம்மணி அம்மாள் 215
அமரர் சத்தியமூர்த்தி 54
அமிர்தலிங்கம், த. 83
அமிழ்தவசனி 231, 244
அமுதசுரபி 252
அமெரிக்காவைப் பார் 163
அய்யாமுத்து, கோவை. அ. 59
அயல்நாடுகளின் என் அனுபவங்கள் 162
அரங்கநாத முதலியார் பூண்டி, 190
அரசவாகை 46
அரசியல் அங்கதம் 139
அரசியல் இதழ்கள் 238, 257
அரிஸ்டோபர்னஸ் 135
அருண் 164
அருணாசலக் கவிராயர் 190
அருள் எப் வி. 79, 81
அருள்சாமி 129
அலிபாதுஷா நாடகம் 132
அலெக்ஸாண்டர் போப் 191
அலெவ் இப்ராகிமோவ் 300
அலையோசை 106
அவயவிக் கொள்கை 277, 278, 281, 282
அவன் ஆனது 110
அவனும் அவளும் 104
அழகப்பன், ஆறு 80 ,129, 130, 141
அழகிய அம்பலவாணர், மதுரை 109
அழகியல் வாதிகள் 278
அழகியற் கொள்கை 277, 281
அழகிரி சாமி 224
அழியாச்சுடர் 223
அளவை உரைநடை 14
அறநூல் 288
அறநெறிக்கடிதங்கள் 191
அறவியல் நூல்கள் 284
அறவியற் கொள்கை 277, 278, 281
அறவிலக்கியம் 37, 41, 42
அறிவியல் அறிஞர் 65
அறிவியல் இதழ்கள் 247, 259
அறிவு 234
அறிவுக்கடல் 232
அன்பழகன் 168
அனந்தாச்சாரி ஆக்கூர் 55
அஸ்வகோஷ் 133, 147
ஆகுபெயர் 29
ஆங்கில அரசாட்சி 127
ஆங்கிலப் பேரகராதி 196
ஆசியஜோதி 304

ஆசைத்தம்பி 101. 127
ஆடும்மாடும் 101
ஆண்டாள் திருமணம் 131, 143
ஆத்மாவின் ராகங்கள் 106
ஆதாம் ஏவாள் விலாசம் 132
ஆதித்தர் அ கு 136, 306
ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல
ஆண்டுகள் 171
ஆபிரகாம் தவப்பாண்டியன் 56
ஆபுத்திரன் 137
ஆய்விதழ்கள் 248, 259
ஆர். வி. 130
ஆரார் 311
ஆலத்தூர் கிழார் 52
ஆழ்வார் 46
ஆற்றாமை 221
ஆற்றுப்படை 157
ஆன்மநேய ஒருமைப்பாடு 132
ஆன்மீக இன்பம் 239
ஆனந்தரங்கம் பிள்ளை 6, 27, 48, 49
ஆனந்தவிகடன் 84, 219, 223, 233 245, 252
ஆஸ்யூலைக்கிட் 312, 313
இங்கே போயிருக்கிறீர்களா? 160
இசுலாமிய சிந்தனை 249
இசுலாமிய நாடகங்கள் 132
இணை ஒப்பு 29
இதயம் பேசுகிறது 163
இதழ்கள் இயங்கவேண்டிய
முறை 200
இதழ்களில் புதுமை 255
இதழ்களின் உட்கூறுகள் 251
இதழ்களின் தோற்றமும்
வளர்ச்சியும் 230
இதழ்களின் பயன்கள் 256
இதழ்களின் போக்கு 261
இதழ் வகைகள் 235
இதழைக் குறிக்கும் சொற்கள் 233
இதிகாசம் 122
இதோ நமக்கு ஒருவர் 132
இந்திய இலக்கியச் சிற்பிகள் 65
இந்தியா 232
இந்திரா காந்தி 203
இந்திரா பார்த்த சாரதி 108, 110, 133, 225
இப்சன் 135
இமயத்தில் நாம் 137
இயக்க இதழ்கள் 240
இயங்குவியல் அடிப்படை 283
இயன்மொழி 46
இரங்கற்பா 40, 76,
இரட்டுற மொழிதல் 29
இரட்டைக் கிளவி 31
இரவி வர்மா 59, 70, 76, 78
இராகவன் வி. எஸ். வி. 311
இராகவையங்கார், ரா. 136
இராதா மணாளன் 101
இராம கிருஷ்ணன், எஸ். 298
இராமநாதன், அரு. 130, 141
இராமாமிர்த அம்மையார் 100
இராமாயணம் 296
இராமானுசன், தி. 55
இராமையா, பி. எஸ் 141
இராஜராஜ சோழன் 141
இராஜ ராஜன் நாடகம் 146
இராஜலட்சுமி டி., பி. 100
இராஜவேலு கு. 106
இராஜு செட்டியார் 148
இராஜேந்திரன் பிள்ளை 132
இருப்புநிலைக் கொள்கை 110
இல்லறமும் துறவறமும் 132
இலக்கிய இதழ்கள் 241, 254, 256, 258
இலக்கிய உத்திகள் 44, 190, 288
இலக்கிய ஏடுகள் 211
இலக்கியக் கலை 5
இலக்கியச் சிந்தனை 226
இலக்கியத்தின் தோற்றம் 283
இலக்கிய நடை 288
இலக்கியப் படைப்பின் வெற்றி 286
இலக்கியப் பண்பு 277
இலக்கியம் எதற்காக 284
இலக்கியம் காலம் கடந்த தல்ல 284
இலங்கைப் பயணம் 172
இளங்கோவடிகள் 188, 189
இளங்கோவின் துறவு 137
இறையனார் களவிய லுரை 4
இன்பமணம் 141
இன்னாசி 126

இன்ஸ்பெக்டர் 140
ஈஸ்கைலஸ் 135
உங்கள் எதிர்காலம் 247
உங்கள் நல்ல காலம் 247
உடற்கூறு வண்ணம் 71
உடோபியா 108
உண்மை 240
உண்மைக் கதைகள் 83
உண்மை மொழிபெயர்ப்பு 294, 305, 307
உணர்ச்சிக் கொள்கை 277, 281
உணர்ச்சி வேக நாடகங்கள் 141
உணர்வெழுப்பும் உரைநடை 11, 12
உதயமூர்த்தி எம். எஸ். 54
உபகதை 214
உமர்கய்யாம் 305
உமா மகேசுவரனார், த. வே. 52
உருவகம் 11, 152, 222, 304
உரைக் கொள்கை 2
உரைநடை இலக்கியக் கொள்கை 2
உரைநடை இலக்கிய வகை 8
உரைநடைக் காப்பியம் 97
உரைநடைக் கொள்கை 2
உரைநடைப் புனைகதை 5
உரைநடை வடிவம் 306, 307
உரைப்பாட்டு 4
உரைப்பொழிவு 10
உரையாசிரியர் 4
உரைவகை நடை 5
உமைவாசகம் 3
உல்ப் 109
உலகக்குத்துச் சண்டை வீரர்கள் 61
உலகநாதன், தணிகை 134
உலகநாதன் மு. 64
உலகம் சுற்றி வந்தோம் 162
உலா 288
உவமத்தொகை 11
உவின்பிரெட் ஐயர் 49
உ. வே சா. 18, 40, 43, 56, 61, 66, 81, 82, 84, 86, 190, 2 8
உள்ளுறை 29, 304
உளவியல் நாடகங்கள் 140, 141
உளவியல் நாவல் 109
ஊடுமொழி 314, 315
ஊதாரிய பிள்ளை விலாசம் 132
ஊர்ப் பெயர் ஆய்வு 172
எங்கலஸ் 282
எங்கே போகிறோம் 105
எட்கர் அலன்போ 211, 212, 213
எடுத்துரை உரைநடை 13
எண்கள் 247
எண்பெருந்தலைவரின் இளமை வரலாறுகள் 65
எதிரொலி 237
எதையும் தாங்கும் இதயம் 127
எமிலி 191
எயினும் நாகனும் அல்லது இளந்தமிழ்க் காதலர் 109
என் கதை 53
என் சரித்திரம் 66, 81, 84
என் தந்தையார் 56
எனது சுய சரிதம் 58
எனது போராட்டம் 67
எழுத்தாளர் ம. பொ. சி. 66
எழுத்தாளரின் பிரச்சனை 290
எழுத்தாளனும் இலக்கியப் பொருளும் 289
எழுத்து 242
எழுத்துப் பெயர்ப்பு 307, 309
எழுத்தும் வாழ்க்கையும் 53
எழுத்துரை 10
எள்ளல் நாடகங்கள் 143
எஸ். வி. வி. 110
ஏட்டிலக்கியம் 6
ஏடு 2 3
ஒட்டக் கூத்தர் 281
ஒரு தலைமுறையின் பதினொன்று சிறுகதைகள் 225
ஒரு பிரயாணம் ஒரு கொலை 146
ஒருபோலிஸ்காரரின்டைரி 79, 81
ஒருமுக வரலாறு 65
ஒன்பது கரங்களின் கதை 102
ஓ. பி. ஆர் 60
ஓரங்க நாடகம் 18, 121, 130, 146
ஓலை 187, 189, 230
ஓலைத் தூக்கு 187
ஓலை முகப் பாசுரம் 189
ஓவியக் கடிதம் 189
ஔரங்க சீப் 230
ஔவையார் 67

கங்காதரம் பிள்ளை ச. 164
கசடதபற 2?6
கஞ்சிக்கலையம் 129
கட்டபொம்மன் ?41
கட்டுரை 7, 12, 13, 18—21, 32
313
கடல் வீரன் கொலம்பஸ் 55
கடவுள் சித்தம் ?1
கடிதம் 7, 12, 14, 15, 18, 19, 20, 23, 29, 60, 72, 105, 143, 164,
கடிதம் ஓர் உத்தி 197
கண்ணதாசன் 52, 58, 79, 164
204
கணபதி, ரா. 66, 81, 87,
கணேசன், பி. சி. 101
கணையாழி 242
கதரின் வெற்றி 125
கதிர்வேலுப்பிள்ளை, 49
கதிரைவேற்பிள்ளை, நா 3
கதே 135
கதை 7, 17, 21
கதைக்கதிர் 246
கதைப் பாடல் 112, 288
கந்தசாமி 110, 225
கபோதி புரக்காதல் 101
கம்பராமாயணம் 98, 217
கம்பன் 155
கமலாம்பாள் சரித்திரம் 97, 98, 102
கய்ல் வால்ட்ராப் 251
கயிற்றரவு 221
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 232
கரிசல் 107
கருணாநிதி மு. 101, 127, 191, 204
கருணானந்தம் பிள்ளையின் சரித்திரம் 102
கருணைத்தேவன் காந்திமகான் 66
கரையாளர், எல். எஸ். 65
கல்கண்டு 249
கல்கி 55, 62, 100, 103, 106, 111
166, 219, 223, 23?, 245, 255
கல்வெட்டு 60, 249
கலந்துரையாடல் 7, 91
கலப்பு மொழி 148
கலா மோகினி 226
கலித்தொகை 230
கலை இலக்கிய ஆக்கத்தின் ரகசியம் 290
கலைக்கதிர் 247
கலைச் சொற்கள் 309
கலைத்துவம் 286, 287, 291
கலைநயம் 287
கலைநுணுக்கம் 287
கலைமகள் 84, 252, 255, 256
கலையாக்க உத்திகள் 120
கலையிதழ்கள் 246, 259
கலைவாதிகள் 287
கவந்தனும் காமனும் 221
கவர்னர்ஸ்கப் 125
கவிச்சக்கரவர்த்தி கம்பன் 68
கவிஞன் 243
கவிதை 242, 243
கவிதை இதழ்கள் 255
கவிப்புனல் 243
கவிமணி 297, 304, 305
கவியரங்கம் 29
கவியின் கனவு 126
கவியுகம் 243
கவிராஜன் கதை 81
கழைக் கூத்தியின் காதல் 150
கள்வர் தலைவன் 138, 144
கள்ளத் தோணி 138
கள்ளோ காவியமோ 105
கற்பலங்காரி சரித்திரம் 102
கறிவேப்பிலை 129
கனகலிங்கம் ரா. 55
கஸ்தூரி திலகம் 66, 83
காகிதத்தில் இயன்றவை 7
காகிதப்பூ 127
காண்டர்பரிக் கதைகள் 311
காதல் தூங்குகிறது 109
காதல் ஜோதி 127
காதற் பெருமையும் கருங்குடிச் சிறுமையும் 162
காந்தி 55, 199, 261
காந்தியம் 107
காந்தியும் விவேகானந்தரும் ஒரு பரிசீலனை 68
காப்பிய உறுப்பு 189
காப்பியம் 12, 13, 112, 280, 288
காமராஜ் சரித்திரம் 57
காமராஜைச் சந்தித்தேன் 67
காமன் திருமுகம் 189

காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற்றுப் பேழை 72, 80
காரைக்காலம்மையார் 131
கால்கட்டு 129
கால்பந்து மன்னன்பிலே 55
காவிரி நாடன் 130
காளிதாசன் 135
காற்றோடு கலந்தவை 6
கி. பி. 2000, 108
கிரிஜா தேவி 100
கிருத்திகா 110
கிருஷ்ணசாமிப்பாவலர் 125
கிருஷ்ணபிள்ளை 49
கிருஷ்ணமூர்த்தி 225
கிருஷ்ணமூர்த்தி, கு. ச. 149
கிரே 190
கிரேக்க நாடகம் 112, 135
கி. வா. ஜ. 27, 40
கிள்ளிவிளவன் 52
கிளியோ பாத்ரா 135
கிளைவ் சரித்திரம் 49
கீட்ஸ் 191
கீதாஞ்சலி 300
குங்குமச்சிமிழ் 246
குங்குமம் 245
குசிகர் குட்டிக்கதைகள் 217, 219
குசேலோபாக்கியானம் 194
குடகு 160
குடியரசு 233, 240
குண்டூசி 246
குணங்குடிதாசன் 56
குணங்குடிமஸ்தான் வரலாறு 56
குணசேகரன் 134
குணபூஷனி சரித்திரம் 102
குப்புசாமி, கே 144
குப்புசாமி முதலியார் ஆரணி 102
குப்புஸ்வாமி, அ. 65
குமரிக் கோட்டம் 101
குமஸ்தாவின் பெண் 101
குமுதம் 233, 245, 252, 254, 255
குமரி முதல் காஷ்மீர் வரை 126
குயில் 242
குருசாமிசர்மா 99, 104
குருதிப்புனல் 108
குருபரதத்துவம் நூல் 49, 50
குரும்பூர் குப்புசாமி 167
குலவேளாளர் 243
குளத்தங்கரை அரசமரம் 216
குறிஞ்சிமலர் 109
குறிப்புமுரண் 29
குறியீடு 304
குறுநாடகம் 121, 146
குறுநாவல் 252
கூத்தபிரான் 134
கூத்துப்பட்டறை 133
கூப்பர் 190
கூற்றுமுறை உத்தி 29
கேரளம் கண்டேன் 160
கேரள விஜயம் 161
கோரிக்கை 140
கோரிக்கை நாடகம் 140
கொச்சை மொழி நடை 27
கொடுந்தமிழ் நடை 32
கொடைக் கானல் வழியிலே 167
கொல்லிமலைப் பாவை 199
கொலம்பசு சரித்திரம் 49
கொலை 140
கோகிலாம்பாள் கடிதங்கள் 100 108, 190, 191
கோகுலம் 245
கௌதம புத்தர் அடிச்சுவட்டில் 82
கோண் மொழிகள் 254
கோணல்கள் 245
கோதண்ட ராமன் 40
கோதைத்தீவு 108
கோபாலகிருஷ்ண பாரதியார் 43
கோபாலாச்சார் 121
கோமல் சுவாமிநாதன் 130
கோரா 139, 147
கோவா செல்வோம் 167
கோவை 109
கௌசிகன் 66
சக்கரவர்த்தி பீட்டர் 298
சக்து சர்க்கரை ஆலை செய்தி மடல் 251
சக்திதாசன் சுப்பிரமணியன் 55
சங்க இலக்கியம் 137, 188, 194 295
சங்கப்பாடல் 4, 46, 155

சங்கர்லால் கதைகள் 102
சங்கரதாஸ் சுவாமிகள் 56, 122, 123, 132, 149
சங்கரராம் 98
சங்கீதப் பைத்தியம் 140
சங்கு 232
சஞ்சிகை 233
சண்முக சுந்தரம், ஆர் 98, 99, 103
சண்முகம், டி. கே. 56
சதாசிவம் பிள்ளை, அ. 54
சதி அநுசூயா 149
சதிசக்தி 140
சதுரங்கம் 140
சந்திரகரி 140
சந்திரகாந்தா 100
சந்திரிகையின் கதை 100
சந்திரோதயம் 127, 226
சந்தோஷம் 162
சபாநாயகன் 247, 252
சம்பந்த முதலியார் 122, 123, 129, 132, 138, 139—141, 144
சமய இதழ்கள் 239
சமய விளக்க நாடகங்கள் 131
சமரசக்கீர்த்தனம் 94
சமரச சன்மார்க்க நெறி 132
சமுதாயக் கொள்கை 277, 282
சமுதாய சிந்தனை நாடகங்கள் 129
சமூக நாடகங்கள் 139
சர்மா எஸ். எஸ். 161, 171
சரசாங்கி 122
சரவணப் பெருமாள் கவிராயர் 190
சரவணமுத்துப்பிள்ளை 111
சரோஜாஸ்ரீராம் 163
சலசலோசன ரெட்டியார் 122
சாகித்திய அக்காதெமி 65, 84
சாகுந்தலம் 135
சாணக்கிய சாம்ராஜ்யம் 141
சாதி இதழ்கள் 263
சாமிநாத சர்மா, வெ. 68, 125,
சாமிநாத சாஸ்திரி, என். 136
சாமியாரின் மாமியார் 129
சார்வாகன் 225
சாலி ஜே. எம். 55, 61
சாலியர் குரல் 244
சாவர்கர் 73
சாவி 110, 160, 163, 166, 245 254
சான்றோர் இலக்கியம் 277, 284 288
சான்றோர்குல விவேகபோதினி 232, 243
சிகரம் 241
சிட்டி 160
சித்த மருத்துவம் 250
சித்தர்கள் 250
சித்தாந்த சங்கிரகம் 235
சித்திரப்பாவை 106
சிதம்பர சுப்பிரமணியம் 98, 103 106. 220
சிதம்பரப் பாட்டியல் 48
சிந்தனை உரைநடை 14
சிந்தாமணி 155
சிம்பலின் 135
சிலம்பு 4, 46, 137, 155, 156, 188, 230, 307
சிலம்பொலி செல்லப்பன் 164
சிலேடை 29,304
சிவகாமியின் சபதம் 111
சிவசங்கரி 167
சிவஞானபாடியம் 6
சிவஞான போதம் 105
சிவஞான முனிவர் 6
சிவபாத சுந்தரம், சோ 161
சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம் 43
சிற்றரசு, சி. பி. 64, 127
சிற்றிலக்கியம் 155
சிறிது வெளிச்சம் 221
சிறுகதை 7, 10, 12, 18, 50, 288, 313
சிறுகதையின் தத்துவம் 212
சிறுத்தொண்டர் 131
சிறுபிள்ளையின் நேசத்தோழன் 231
சிறுவர் இதழ்கள் 245, 258
சிறுவர் நாடகங்கள் 134
சின்னச் சங்கரன் கதை 218
சின்னப் பாரதி 107
சினிமா கதிர் 246
சினேகிதி 103
சீட்டுக்கவி 187, 188, 203
சீதாலட்சுமி குமாரசாமி 56
சீவகசிந்தாமணி 189

சீனிவாசன், டி. கே. 101
சுக்ரநீதி 32
சுகுண சுந்தரி 99
சுகுண போதினி 232, 244
சுத்த இலக்கிய வாதம் 284, 291
சுத்தானந்த பாரதி 55, 80, 132
196
சுதேச மித்திரன் 232
சுந்தர காண்டம் 98
சுந்தரம், எஸ். டி. 126
சுந்தரம் பிள்ளை 123
சுந்தரமூர்த்தி சுவாமிகள் 131
சுந்தரர் 47
சுந்தரராமசாமி 103,224
சுந்தரராஜன் பெ.கோ. 220
சுந்தர வடிவேலு, நெ.து. 162,
166,170
சுந்தா 62,66,80,64
சுந்தரி 100
சுப்பராஜ், பி.கே. 141
சுப்பிரமணியன் க.நா. 98,103,
223,307
சுப்புரெட்டியார், ந. 194
சுரதா 242
சுருளிமலை 101
சுவடி 233
சுவையான காதல் கடிதங்கள்
192
சுஜாதா 102,110,146
சூடாமணி, ஆர் 109
சூறாவளி 242,226
செகோ 135
செங்குந்தன் 232
செங்கோன் தரைச் செலவு 157
செட்டியார், ஏகே. 158,160,166
செந்தமிழ் 232,241,248
செந்தமிழ்ச் செல்வி 232,242
செந்தாமரை 105
செந்தில்துறவி 160
செம்பரிதி 243
செம்மலர் 241
செய்தி இதழ்கள் 236,257
செய்தித்துணுக்குகள் 249,253
செய்யுரை நடை 13
செய்யுள் இலக்கியங்கள் 304
செல்லப்பா, சி.சு. 129,220
செல்லம்மா பாரதி 55,56
செல்வராஜ் 207,126
செவியறிவுறூ 246
செவிவழிக்கதை 214
செனாகா 191
செஸ்டர்ஃபீல்டு 187,190,203
சேக்கிழார் 47
சேக்கிழார் அடிச்சுவட்டில் 162
சேக்ஸ்பியர் 121,135,304,312
சேதுப்பிள்ளை ரா.பி 20,27,
சேதுராமன் வா.மு. 164
சேரமான் பெருமாள் நாயனார்
189
சேரிப்பெண் 129
சேனாபதி, த.நா. 314
சைவ சமய நூற்பதிப்புக்கழகம்
232
சைவ விளக்க நாடகங்கள் 131
சொக்கலிங்கம் தி.க. 163
சொர்க்கத்தீவு 110
சொற்பெருக்கு 10
சொற்பொழிவு 13,14,20,21,
29,30,33,61
சொற்பொழிவுநடை 29
சோ 67 110,159
சோதனை நாடகங்கள் 133,142
சோதிடக்கலை 247
சோபோகிளிஸ் 135
சோமசுந்தர பாரதி 3,27,55
சோமலெ 27,57,60,66,158,160,
164,166,170
சோவியத் பலகணி 250
சோழர் கால அரசியல் தலை
வர்கள் 60
சோழர் காலம் 279
ஞான இராஜசேகரன் 133,144
ஞான சௌந்தரி 132
ஞானபுட்பம், திருமதி 158
ஞானமணி, சி. 66
ஞானமூர்த்தி, தா.ஏ. 130,148
ஞான ரதம் 108
டன் 191
டாக்டர் ரங்காசாரி வரலாறு
54
டாக்டர் ராஜாசர் முத்தைய
செட்டியார் 80
டானா 236
டானியல், கே. 114
டிக்கன்ஸன் 191
டி.கே.சி. 27,200,202

டிட்பிட்ஸ் 249
டெக்கமரான் 92
டெய்சி இராசையா 80
தகடூர்யாத்திரை 157
தகவல் இதழ்கள் 250,260
தங்கராசு, திருவாரூர் 121
தங்க விளக்கு 127
தண்டபாணி சுவாமிகள் 58,82
தண்ணீர் 130
தணிகை மணி, டாக்டர் வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் வரலாறு 75
தமிழ் சினிமா 246
தமிழ் நாட்டில் எட்டு நாட்கள் 161
தமிழ் நாட்டின் தவப்புதல்வர்கள்
தமிழ் நாட்டு விஞ்ஞானிகள் 54
தமிழ் நாடகத் தலைமையாசிரியர் 56
தமிழ் நாடு 232
தமிழ் நாவலர் சரிதை 47,49
தமிழ்ப்பத்திரிகை 231
தமிழ்ப் பொழில் 232,242
தமிழ் மொழியகராதி 3
தமிழ்லெக்சிகன் 3
தமிழ்வாணன் 102,249
தமிழக அமைச்சர்கள் 61
தமிழம் 241
தமிழர் நேசன் 247
தமிழர் விளையாட்டு மடல் 248
தமிழரசு 250
தமிழாய்வு 248
தமிழிசைச் செல்வம் தந்த தமிழன்பன் ஆபிரகாம் 56
தமிழியல் 248
தர்மக்ஷேத்ரே 110
தலையங்கம் 243,251,254
தவத்திரு ஞானியர் அடிகள் 54
தழுவல் 307,308
தழுவல் நாடகங்கள் 137
தற்கால இலக்கியம் 288
தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி 3
தன்வயமாக்கல் 299
தன்னுணர்ச்சிப் பாடல்கள் 280,288
தனிக்குடித்தனம் 129
தனித்தமிழ் இதழ்கள் 240,258
தனித்தமிழ் இயக்கம் 240,256
தனித்தமிழ் நடை 32
தனிப்பட்ட சமூக இதழ்கள் 258
தனிப்பாடல் 22,66,155
தனிமனித ஆளுமையே நடை 289
தனுஷ்கோடி, முருக 56
தனிமனித வாதம் 288,289,290
தாகூர் 135,199,314
தாண்டவராய முதலியார் 210
தாமரை 241,242
தாமரைக் கண்ணன் 141
தாமஸ்மூர் 108
தாமோதரம் பிள்ளை, சி.வை. 78,232
தாய் 245,314
தாய் நாடு 250
தாளிகை 233,234
தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்
தி.க,தி.மு.க இதழ்கள் 256
தியாக பூமி 100
திரவியம், கா. 306
திராவிட இயக்க நாடகங்கள் 127
திராவிடபூர்வ காலக் கதைகள் 210,214
திராவிடன் 233
திராவிடன் குரல் 240
திருக்குறள் 194,217,300,301, 313
திருச்சி ஜெயில் 65
திருஞான சம்பந்த முதலியார், மணி
திருஞான சம்பந்தர் 131
திருத்தலப் பெருமை 161
திருத்தொண்டர் திருவந்தாதி 47
திருத்தொண்டத் தொகை 47
திருநாவுக்கரசு 162,166,173
திருநாவுக்கரசு, மறை. 56,65
திருமங்கை யாழ்வார் 131
திருமலை நாயக்கர் 141
திருமுகப்பாசுரம் 188

திருமுகம் 187,189
திருவருள் பிரகாச வள்ளலார் 145
திரு.வி.க. 19,27,67,232,255,256
திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் 67
தினசரி 232
தினத்தந்தி 236,237
தினமணி 232,236,
தினமலர் 237
தினவர்த்தமானி 232
தி.ஜ.ர. 55,220
தீட்டுக்கவி 188
தீபம் 242,256
தீனதயாளு 98
துக்ளக் 238,254
துணுக்கு இதழ்கள் 259
துணுக்குகள் 252
துப்பறியும் நாடகங்கள் 140
துன்பியல் நாடகம் 138
தூக்கு மேடை 127
தூது 203
தூரன், பெ. 140
தெ.பொ.மீ 162
தெருக்கூத்து 122,124
தெருக்கூத்து நாடகம் 132
தென் மொழி 234,241
தென்னரசு 101
தென்னிந்திய மஹாமஹோபாத்யாயர்கள் வரலாறு 65
தேசத்தியாகி 126
தேசபக்தன் 255,256
தேசபக்தன் கந்தன் 103,106
தேசிக விநாயகம் பிள்ளை 281
தேசிய உணர்வு நாடகங்கள் 124
தேசியக் கொடி 125
தேசீயப் புத்தக நிறுவனம் 84
தேசீய வாழ்க்கை வரலாற்று அகராதி 77
தேம்ஸ் காவிரி நடை 105
தேவன் 110
தேவி 245,254
தேவி தரிசனம் 161
தேனீ 226
தையார் சுல்தான் நாடகம் 132
தொடர் உருவகம் 152
தொடர்கதை 252,254,255
தொண்டரடிப் பொடி ஆழ்வார் 131
தொல்காப்பியம் 2,4,5,39,45,49,154-157,188,210,277,278,295
தொல் பழங்காலப் பாவனை நாடகங்கள் 112
தொழில் மேதை ஜி.டி.நாயுடுவின் கதை 55
தொழிலாளர் முரசு 251
தொழிற்துறை இதழ்கள் 251,260
தோரதி ரிகார்ட்சன் 109
நகுலன் 103,110
நகைச்சுவை துணுக்கு 7
நச்சுக்கோப்பை 127
நடந்தாய் வாழி காவேரி 160
நடராஜன், அ.லெ 62,66
நடுகல் 45
நடேசசாஸ்திரியார் 95,98,102
நடை 226
நடைக் கொள்கை 2,
நடையியல்வகை 2
நடையியல் வகை 26,27
நபிகள் வரலாறு 39
நம்பியாண்டார் நம்பி 47
நர்கிஸ் 244
நரவாணதத்தன் 137
நல்ல சாமரித்தன் உரிமை 132
நல்ல தம்பி 127
நல்வழி 250
நவ இந்தியா 2?7
நவசக்தி 219, 255
நற்போதகம் 231
நனவோடையுத்தி 10,16,109
நாகை தருமன் 83
நாச்சியப்பன், நாரா. 55
நாட்குறிப்பு 6,7,10,12,14,15,17,27,40,48,75,105
நாட்டுக்குஉழைத்த நல்லவர் 65
நாட்டுப் புறப்பாடல் 165,288
நாடக உரைநடை 14
நாடகக் கட்டுக்கோப்பு 142
நாடகக் கலை 247
நாடகச் சிலம்பு 137
நாடகச் சுவைகள் 147
நாடகத் தனிமொழி 21
நாடக தையாண்டி 140

நாடகம் 5, 7, 14, 15, 18
நாடக வகைகள் 138
நாடக வழக்கு 226
நாடோடிப் பாடல்கள் 61
நா. பா. 53, 103, 106, 109
நாமக்கல் கவிஞர் 53, 104
நாயன்மார் 46
நார்வே நாடகங்கள் 135
நாரண துரைக்கண்ணன் 100, 126, 132, 145
நாராயணசாமி டி. வி. 127
நாவல் 7, 286, 288
நாற்காலிக்காரர் 133
நான்கண்ட பாரதம் 54
நிலைத்தஉத்தி 246
நிழல்கள் 103, 110
நினைவுப்பாதை 221
நிஜம் 133
நீதிதேவனின் மயக்கம் 127
நீதிநூல் 94
நீலகண்டன் ப. 130
நூலகநாட்டில் நூற்றிருபது நாட்கள் 162, 170
நெஞ்சில் ஒரு முள் 104
நெடுங்கதை 92
நெப்போலியன் 66, 73, 77
நெல்லிக்கனி 1-0
நெல்லையப்பர், பரலி சு. 250
நேதாஜீ சுபாஷ் சந்திர போஸ் 73
நோக்கு 242
பக்கீர் மொஹிதீன் 39
பக்தவத்சலம், கி. மா. 134
பக்திப்பாடல் 280
பகதுல நரசிம்ம நாயுடு 157, 158
பகுத்தறிவு 240
பகுத்தறிவு இதழ்கள் 257
பகுத்தறிவு இயக்கம் 240
பங்கிம் சந்திரர் வாழ்க்கை வரலாறு 40
பச்சையப்பர் 141
பஞ்ச தந்திரக் கதை 102, 210
பஞ்சமர் 114
பஞ்சும் பசியும் 107
பட்டிமன்றம் 7, 14, 15, 19, 20
படிமக் கவிஞர் 281
பண்டித மணி 18, 32, 57, 66
பத்திரிகை 233
பத்துப்பாட்டு 157
பத்மநாபன் நீல, 103, 225
பத்மநாபன் ரா. அ. 55
பத்மாவதி சரித்திரம் 97, 98, 102
பதிபக்தி 125
பதிற்றுப் பத்து 4
பதினெண் கீழ்க்கணக்கு 278, 290
பம்பாய் மெயில் 125
பமெலா 191
பயண இலக்கியம் 7, 12, 15, 14 17, 21
பயண இலக்கிய வகைகள் 159
பயணகாவியம் 164
பயணம் ஒரு கலை ஆனால் 157
பர்க் 191
பரணீதரன் 66, 83, 167, 172
பரம சிவானந்தம் ஏ. எம். 164
பரமார்த்த குருகதை 6, 16, 27
பரமேசுவரம் பிள்ளை, இ. 164
பரிக்ஷா 133
பரிதி மாற்கலைஞர் 27, 75, 104 123, 145, 148
பல்லவர்காலம் 279
பவானந்தம் பிள்ளை க. 3
பழங்கதை 97
பழந்தமிழ் நூல்கள் 230
பழந்தமிழ் இலக்கியம் 247
பழநிச்சாமி, இரா 68
பழமொழி 27, 123, 148, 151, 196, 197, 305
பழனியப்பா பிரதர்ஸ் 65, 84
பள்ளிகொண்டபுரம் 103, 109
பறம்பைச் செல்வன் 133
பன்னிரு பாட்டியல் 47
பாக்னர் 109
பாகூர் சு. குப்புசாமி முதலியாரின் வரலாற்றுக் களஞ்சியம் 76
பாட்டியல் 48
பாண்டுரங்கன் 101
பாணபுரத்துவீரன் 125
பாணன் 61
பாதல் சர்க்கார் 134
பார்சி நாடக உத்திகள் 124
பார்த்தசாரதி டி. 54

பார்த்திபன் கனவு 111
பாரதி 18, 21, 33, 55, 72, 100, 102, 108, 190, 200, 218, 232, 295
பாரதிதாசன் 150, 262
பாரதியுகம் 280
பாலகுமாரன் 225
பாலச்சந்திரன் சு. 162, 165
பாலசுப்பிரமணிய பிள்ளை 104
பாலதீபிகை 231, 245
பாலமித்ரா 245
பாலஜோதிடம் 247
பாலுணர்வு இதழ்கள் 249, 260
பாவாணர் 234, 240, 241
பாளையங்கோட்டை எச். ஏ கிருஷ்ணபிள்ளை கிறிஸ்துவ ளான வரலாறு 49
பாவலர் சரித்திர தீபகம்
பாஸ்கரத் தொண்டைமான், தொ. மு. 161
பிச்சமூர்த்தி 208, 220, 221, 281
பிசிராந்தையார் 137
பிதோவான் 113
பிரக்ஞை 223, 226
பிரசண்டவிகடன் 219
பிரெஞ்சு நாடகங்கள் 121, 135
பிரதாப சந்திர விலாசம் 145
பிரதாப முதலியார் சரித்திரம் 94. 97, 98, 102
பிரபஞ்சகானம் 223
பிரபஞ்சன் 133
பிரபந்த தீபம் 48
பிரபந்த தீபிகை 48
பிரபந்தம் 22, 46
பிரபந்த மரபியல் 48
பிரஜானுகூலன் 219
பிராண்டர் மத்தியூ 213
பிராம்மணன் 232, 243
பிரிட்டனில் கண்ட புதுமைகள் 164, 165
பிரெஞ்சு நாடகங்கள் 135
பிரேம கலாவத்யம் 99
பிலோ இருதயநாத் 157
பிளினி 168
பிளேட்டோ 93
பிறகொரு இந்திரஜித் 311
ஃபிரெண்ட்லி இன்ஸ்ட்ரக்டர் 231
பீர்பால் கதைகள் 299, 300
பீலிவளை 137
பீற்றர் ஐயர் பி. எஸ் 132
புண்ணியகோடி செட்டி சரித்திரம் 102
புண்ணிய பாரதம் 167
புண்ணிய பூமியில் புனித யாத்திரை 160
புத்த அவதாரம் 141
புத்ர 109
புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றம் 287
புதியமுறைகள் 225
புதினஇதழ் 246
புதினம் 10, 11, 18, 43, 50, 313
புதுக்கவிதை 16, 242, 247, 252, 281, 288
புதுக்கவிதை இதழ்கள் 243
புதுமைப் பித்தன் 58, 208, 220, 224
புதுமைப்பித்தன் வரலாறு 57
புதுமைப்பெண் 244
புதுவைக் கலைமகள் 215, 216
புதுவைச் செய்திகள் 250
புதையல் 101
புரவலன் 65
புராண இதிகாச நாடகங்கள் 122
புராண நாடகம் 125, 131, 143
புராணம் 122, 145, 245
புல்லுருவிகள் 133
புலவர் புராணம் 58, 82
புறநானூறு 303, 312
புறப்பாடல் 46
புனைகதை 97
புனைவியுரைநடை 7, 17
பூஞ்சோலை 241
பூலோக விநோதக் கதைகள் 210, 214
பூவண்ணன் 134
பூவிலங்கு 126
பூவை அமுதன் 65
பூவை ஆறுமுகம் 129
பெங்கால் கெஜட் 231
பெஞ்சமின் ஜோவெட் 298
பெண்கல்வி 241
பெண்மதிமாலை 94
பெர்சிவல் 232

பெரிப்புளூஸ் 168
பெரியபுராணம் 49
பெரியார் 100, 240
பெரியார்குரல் 240
பெரியாரிசம் 240
பெருங்கதை 137, 155, 189, 296
பெருஞ்சித்திரனார் 241, 303
பேகன் 137
பேச்சுமொழி 256
பேசும் படம் 246
பேட்டிகள் 61
பேய்க்கதை 245
பேராற்றல் பெற்ற பெண்கள் 65
பேரிதழ்கள் 2›2
பொக்காசியோ 92
பொதுவுடைமைக் கொள்கை இதழ்கள் 241, 252
பொம்மை 240
பொருள் நூல் 32
பொருள் முதல் வாதம் 283
பொழுது போக்கிதழ்கள் 245, 254, 256, 258
பொன் பரமகுரு 130
பொன் மலர் 130
பொன் ரத்னம் எஸ் 132
பொன் விலங்கு 109, 129
பொன்னகரம் 221
பொன்னாரம் 77
பொன்னியின் செல்வன் 111
பொன்னியின் புதல்வர் 62, 66, 80, 84
பொன்னீலன் 107
பொன்னுசாமி பிள்ளை 102, 105
போக்கிரிகள் நாவல் 102
போர்வாள் 127
போர்வை போர்த்திய உடல்கள் 133
போலி 130
போலீஸ்காரன் மகள் 141
போன்மையின் போன்மை 93
மக்கள் குரல் 237
மக்பத் 135
மகரிஷி 109
மகளிர் இதழ்கள் 244, 258
மகா கயிலாய யாத்திரை 160
மகாபாரதம் 296
மங்கல வழக்கு 29
மங்கை 244
மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் 217
மங்கையர் மலர் 244
மஞ்சள் பத்திரிகைகள் 249
மண்குடிசை 108
மண்ணில் தெரியுது வானம் 106
மணமகள் வந்தாள் 130
மணவினை நாடகங்கள் 141
மணிக்கொடி 226, 242
மணிக்கொடி காலம் 208, 223
மணிக்கொடி குழு
மணிமேகலை 137, 155
மணிமொழி 66
மணியன் 160, 163, 166, 167, 171, 173, 174
மதாமெ—தே—செவிஞ் 190
மதி 127
மதிஒளி .246
மதிநா 255
மதுரைத் தமிழ்ச் சங்கம் 232
மந்திரவாதிக்கதை 245
ம. பொ. சி 67, 166
ம பொ. சி. ஆற்றுப்படை 83
மரபில்லாக் கவிதை 242
மரபுவழிக்கதைகள் 145
மரியதாசன் 132
மருத்துவ இதழ்கள் 250, 260
மருதக் கலி 218
மலர்விழி 105
மலரும் சருகும் 107
மலேயா நாடு 167
மலை நாட்டின் மீதினிலே 164
மறைமலையடிகள் 27, 100, 104, 105, 108, 190, 191, 201, 222, 241
மறைமலையடிகள் வரலாறு 65
மறைவியற் கொள்கை 110
மனக்குகை 140
மனுமுறைகண்ட வாசகம் 16
மனோகரன் 149
மாக்ஸிம் கார்க்கி 314
மாணிக்கம் வ.சுப.140, 201, 202,
மாதர் மறுமணம் 244
மாதவன் 162
மாதவையா, அ. 98, 100, 103, 105, 217, 219

மாப்பசான் 217
மாபெரும் வீரர்கள் 64
மார்க்கியத் தத்துவம் 291
மார்க்சியத் தத்துவம் 274
மார்க்சீய எழுத்தாளர் 115
மார்சீயக் கொள்கை 107
மார்க்கோ போலோ 168
மார்க்ஸ் 282
மாலபிராப், திருமதி 92
மாலைமதி 246
மானீகை 137
மின் தொழிலாளி 251
மிஸ்ஸனரி கிளேன்ஸ் 231
மீண்டும் சொல்லப்பட்ட கதைகள் 209
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 56
முகமதின் வாழ்க்கைச் சுருக்கம் 39
முட்டை 133
முடங்கல் '89
முத்தாரம் 249
முத்துக் குமாரசாமி, இரா. 158
முத்துச்சிப்பி 130
முத்துசாமி 225
முத்துசாமி, நா. 133, 147
முத்துமீனாட்சி 100, 105
முத்துலட்சுமி ரெட்டி 100
முத்து வீரப்பனார் 190
முத்து வீரியம் 48
முத்தையா, கண, 53
முத்தையா, செல்வி எம். 169
முதன்மொழி 241
முதிரைமலைச் செல்வி 313
முரசொலி 237
முரண்பாடு தவிர்த்தல் 297
முருகன் ஓர் உழவன் 106
முல்லைச் சரம் 242
மு. வ. 19, 27, 96, 103, 105, 108, 141, 162, 164, 166, 172 191, 192, 194—199, 204
முழுமை வரலாறு 66
முள்ளும் மலர்ந்தது 107
முற்போக்கு இலக்கியம் 286, 287, 291
முறைப்பெண் 129
முன்னேறிய நாடுகளில் முப்பது நாட்கள் 168
மூலிகைமணி 250
மெக்காலே 191
மெக்ஸிகோ பயணக்கதை 171
மெய்க் கீர்த்தி 47, 49
மெய் வழி 239
மெர்ச்செண்ட் ஆப் வெனிஸ் 121, 135
மெர்வின் 64
மெரீனா 129
மென்தழுவல் 123, 137
மேடைப் பேச்சு 7, 20, 29
மேதைகள் வாழ்விலே 64
மேரிரோர் பேர்ஜர் 226
மொழிபெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும் 294
மொழிபெயர்ப்பியல்பு 296
மொழி பெயர்ப்பு 2
மொழி பெயர்ப்பின் பயன் 312
மொழி பெயர்ப்புக் கொள்கை 297
மொழி பெயர்ப்பு நாடகம் 121 134
மொழி பெயர்ப்பு நோக்கம் 297 311
மொழி பெயர்ப்பு விளக்கம் 293
மொழியியல் 248
மோகனாங்கி 111
மோலியர் 135
மோனா 246
மோனியர் உல்லியம்ஸ் 123
மௌனி 220, 223
யதார்த்தவாதம் 282, 283
யாத்திரைக்கும்மி 158, 165
யாத்திரைச் சிந்து 165
யாதவமித்திரன் 232, 243
யுகசங்கமம் 126
யுவான்சுவாங் 168
யுனெஸ்கோ கூரியர் 250
யூரிபிடீஸ் 135
யோகியார் ச. து. சு. 281
ரகுநாதன் 57, 107
ரங்கராஜு 95, 100
ரங்கோன் ராதா 101
ரத்னபாலா 245
ரவீந்திரநாத் தாகூர் 217
ரஷியநாடகங்கள் 135
ராகவன் எம். எஸ். 215
ராணி 245, 255
ராணிமுத்து 246, 255

ராதா எம். ஆர். 127
ராபர்ட்ஃபிராஸ்ட் 300
ராமகிருஷ்ணா 81
ராமசாமி கே. ஆர். 127
ராமசாமி செட்டியார் ராம 2, 75
ராமையா பி. எஸ். 126. 220
ராவணமஹிமா அல்லது மாத்ரு பக்தி 144
ராஜகோபாலன் கு. ப. 208, 220, 221
ராஜ நாராயணன் கி. 225
ராஜம்ஐயர் 104, 105
ராஜம் கிருஷ்ணன் 54, 106-108
ராஜரத்னம்பிள்ளை, தி. ஏ. 43
ராஜவேலு 109
ராஜாராம் 311
ராஜாஜி 66, 79, 131, 217
ராஜேந்திரன் 110
ராஜேந்திரன் கி. 62
ராஜேந்திரன் பி. எல் 77
ரிச்சர்ட் ஸன் 191
ரூபாவதி 145
ரொத்துரு 135
ரொப்பேட் தேசிகர் 71
ல. ச. ரா 33, 109, 223
லண்டன் பாரீஸ் நகரங்களின் விநோத சரித்திரம் 164
லண்டனில் லூசி 164
லக்ஷ்மி 167, 170, 171
லாரன்ஸ் டி. எச் 191, 213,
லாரி 251
லால் ஹௌகர் நாடகம் 132
லியோடால்ஸ்டாய் 298
வ. உ. சி. 27
வங்காள நாடகங்கள் 135
வசனநடை 3
வஞ்சி வரலாறு 48
வட்டங்கள் 133
வட்டார மொழிநடை 27
வட்டார வழக்கு 148
வடசொல் 296
வடமொழி நாடகங்கள் 123
வடுவூரார் 96
வண்ணத்திரை 246
வண்ணதாசன் 225
வயிறு 133, 143
வரதராசன் 148
வரலாற்று ஆய்வு நிறுவனம் 77
வரலாற்று நாடகங்கள் 141
வரலாற்று நாவல் 111
வரலாற்றுப் புனைவு 18, 111
வரலாற்று வஞ்சி 48
வரலாறு 97
வ. ரா. 55, 100, 108
வருணனை இலக்கியம் 12
வருணனை உரைநடை 11, 30
வலம்புரி 241
வ. வே. சு. ஐயர் 209, 216. 219, 220
வழக்காடு மன்றம் 7, 14, 19, 20
வழித்துணைவன் 141
வழிநடைக்கும்மி 165
வழிநடைச் சிந்து 158, 165
வழுநடைகள் 151
வள்ளல் பாரி 137
வள்ளலார் 16, 132
வள்ளியப்பா, அழ. 134, 245
வள்ளுவம் 105
வள்ளுவர் 96, 97, 105, 141
வளைகரம் 108
வன்னியகுல சத்திரிய தீபம் 232, 243
வனவாசம் 52, 58
வாசகநடை 3
வாசகன் 226
வாசுதேவன், ரா. 215, 216
வாதாபி விஜயம் 160
வாய்மொழி இலக்கியம் 6, 61, 289
வாய்மொழிக் கதைகள் 210
வாய்மொழிப் பாடல்கள் 289
வாரியார் வாழ்க்கை வரலாறு 78
வால்மட்விட்மன் 191
வாழ்க்கை அறிமுகம் 64
வாழ்க்கை ஆய்வுகள் 67
வாழ்க்கை ஒப்பாய்வுகள் 68
வாழ்க்கை குறிப்புகள் 65
வாழ்க்கைத் துணுக்குகள் 63
வாழ்க்கை புனைவுகள் 68
வாழ்க்கைவரலாற்றாசிரியர் 56
வாழ்க்கை வரலாற்றிலக்கிய வகைகள் 62
வாழ்க்கை வரலாற்றுத் தலைப்புகள் 69

வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் 54
வாழ்க்கை வரலாற்று நாடகம் 141
வாழ்க்கை வரலாற்று நோக்கம் 51
வாழ்க்கை வரலாற்று மூலங்கள் 59- 62
வாழ்க்கை வரலாறு 7, 14, 15, 17, 21, 97
வானதி பதிப்பகம் 84
வானம்பாடி 243
வானவில் 130
வாஷிங்டனில் திருமணம் 110
விக்கிரமன் 111, 160
விக்கிரமாதித்தன் கதை 102
விசாகதத்தன் 135
விசிட்டர் 238
விஞ்ஞானச்சுடர் 247
விடியுமா 221
விடுதலை 237, 246
விண்ணும் மண்ணும் 110
வித்தகன் 59, 79
வித்துவான் மணி திருநாவுக்கரசு முதலியார் சரித்திரச் சுருக்கம் 56
விநோத ரச மஞ்சரி 18, 21, 214
விமர்சனம் 254
விமோசனம் 219
வியஞ்சகக் கொள்கை 280
விரியுவமை 11
வில்சன் 123
விவிலியம 6, 32
விவேகசிந்தாமணி 209, 211, 215
விவேக போதினி 216
விவேக மஞ்சரி 214
விவேக ரசவீரன் கதை 104
விவேகானந்தர் 55, 66, 77, 81. 85
விளக்க உரைநடை 11
விளையாட்டிதழ்கள் 248, 259
விளையாட்டுக் கழகம் 248
விளையாட்டுக் களஞ்சியம் 248
வின்ஸ்லோ தமிழ்—ஆங்கில அகராதி 3
வினைவிதைத்தவர் 130
விஸ்வகர்மன் 243
விஜயரங்கம் 129, 144
விஜயா 232
வீதி 133
வீரசிஹேஹன் 306
வீரசுதந்திரம் 126
வீரமாமுனிவர் 6, 16, 27
வீரயுககாலம் 284
வெகுஜனப் பத்திரிகைகள் 245
வெங்கட்ராமையர், டி. எஸ். 215
வெர்ஜினியா 109
வெல்ஸ், எச். ஜி 110
வெள்ளிக்கிழமை 101, 127
வெள்ளையாம்பட்டு சுந்தரம் 53
வெளியில் 223
வெற்றிக்குப்பலி 137
வெனிஸ் வணிகன் 121
வேங்கடம் முதல் குமரி வரை 161
வேங்கடரமணி, கா. சி. 103, 106
வேங்கடராமையா கா. ம. 60
வேதநாயகம் பிள்ளை 94—97, 99, 104, 105
வேலைக்காரி 127
வைகுண்ட வைத்தியர் 140
வைணவ நாடகங்கள் 131
வைத்திய நாதையர் 215
வைரமுத்து 81
வோல்ஸ்லீ 236
ஸ்ரீ ஆரிய திவ்ய தேசயாத்திரைச் சரித்திரம் 157, 165
ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதி கவிதா மண்டலம் 242
ஸ்ரீநிவாசபிள்ளை 102
ஸ்ரீ மணிய சிவனார் சரித்திரம் 75, 78
ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா 75
ஸ்ரீ ரமண விஜயம் 80
ஸ்ரீ ராமானுஜர் 107
ஸ்ரீனிவாச ஐயங்கார், டி. சே 127
ஸ்காட் 111
ஸ்கைலாப் சம்பந்தி 129
ஸ்திரி ராஜ்யம் 140
ஸிஸரோ 190
ஷில்லர் 190

ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் 163, 170
ஜயந்தன் 147
ஜவாஹர்லால் நேரு 203
ஜனசக்தி 233
ஜான்சன் 95
ஜான்ரஸ்கின் 94
ஜானகிராமன் 160, 224
ஜி. டி. நாயுடு 64
ஜூல்வெர்ன் 110
ஜூலியஸ்சீசர் 135, 306
ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி 231
ஜெமினிசினிமா 246, 247
ஜெயகாந்தன் 103, 107, 224, 306
ஜெயங்கொண்டார் 281
ஜெயஜெய சங்கர 107
ஜெர்மன் நாடகம் 135
ஜேம்ஸ் 109
ஹர்ஷன் 135
ஹரேஸ் வால்போல் 190
ஹஜ் நிறைவேறுகிறது 161
ஹிந்து மித்திரன் 239
ஹெகல் 113
ஹோட்டல் தொழிலாளி 251